

3

# தமிழ்வழிக்கல்வி

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

# தமிழ் வழிக்கல்வி

## [மூன்றாம் பகுதி]

முனைவர்

**மு. தமிழ்க்குடிமகன்,** எம்.ஏ., பிஎச்.டி.,

(தமிழ் ஆட்சிமொழி - தமிழ்ப் பண்பாட்டுத் துறை

மேனாள் அமைச்சர்)

**பாவாணர் ஏடகம்**

புதுஎண்-142சி, பழையஎண்-56,

மேடவாக்கம் முதன்மைச் சாலை, சுரேந்தர் நகர்,

சென்னை - 600 088

# நூற் குறிப்பு


| | |
|---|---|
| நூற் பெயர் | **தமிழ் வழிக் கல்வி**<br>[மூன்றாம் பகுதி] |
| ஆசிரியர் | முனைவர் மு. தமிழ்க்குடிமகன் |
| அட்டை வடிவமைப்பு | ஆர்.டி. வினோத் குமார் |
| பதிப்பாண்டு | 2007<br>திருவள்ளுவர் ஆண்டு, 2038 |
| மொழி | தமிழ் |
| பக்கங்கள் | iv+380=384 |
| நூல் அளவு | தெம்மி |
| தாளின் தன்மை | வெள்ளைத்தாள் |
| பொருள் | பயிற்று மொழி வரலாற்று ஆய்வு |
| அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| படிகள் | 1000 |
| விலை | **உருபா.150.00** |
| கணிப்பொறி அச்சு | தேவ் டிசைனிங்க் & பிரிண்டிங்க்<br>வேளச்சேரி, சென்னை - 600 042<br>பேசி : 22591924 |
| அச்சிட்டோர் | மாசறு<br>திருவல்லிக்கேணி<br>சென்னை - 600 005 |

*நூல் கிடைக்குமிடம் :*

*புதிய கதவு எண்.26, குறுக்குத்தெரு,*
*சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்,*
*சென்னை - 600 088-பேசி:22530954*

# பதிப்புரை

தமிழுலகம் போற்றி வரவேற்கின்ற மதிப்பு மிக்க அறிஞர்களில் தமிழ்க்குடிமகனார் முதல்வரிசையைச் சேர்ந்தவர். 'சாத்தையா' தமிழாக மாறித் தமிழருக்குச் செய்த பணிகள் அளவற்றவை. அதற்கு அடையாளங்கள் பல. அவற்றுள் இன்று வெளிவரும் **தமிழ்வழிக்கல்வி** என்னும் இந்நூலின் மூன்று பகுதிகளும் என்றும் நின்று நிலவும் சான்றாகும். **இது மூன்றாம் பகுதி.**

மேடைகளிலே அவருடைய கம்பீர முழக்கம், ஏடுகளில் அவர் எடுத்து வைத்த அசைக்க முடியாத வாதங்கள், தகர்க்க முடியாத சான்றுகள், எவரும் தடைப்படுத்த இயலாத தடந்தோள்கள், தமிழுக்கு வருகின்ற தடைக்கற்களைத் தூக்கி எறிவதில் தளராத வீரம், தறுகண்மை என்ற சொல்லுக்கே பொருளாக விளங்கிய பெருமிதம், அத்தனைக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் தலைநிமிர்ந்து உலவுகின்ற தமிழாக வாழ்ந்த நிகழ்ச்சிகள், ஈழத்திற்கு ஆதரவாக அவர் எழுப்பிய இடிமுழக்கம், திரட்டிக்காட்டிய வீர அணிவகுப்பு. . . இன்னும் இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். அத்தனையும் மறக்கவே முடியாதவை. நினைத்தால் நெஞ்சம் நெகிழும். அந்த மாமனிதரை எண்ணி உள்ளம் உருகும்.

ஆறாவது உலகத் தமிழ் மாநாடு மலேசிய மண்ணில் நடந்தபோது அன்றைய அரசு தமிழகத்திலிருந்து தமிழறிஞர்கள் போகக்கூடாது என்று தடை விதித்திருந்தது. அந்தத் தடையை மீறிச் சென்றவர் தமிழ்க்குடிமகனார். அவரோடு சென்றவருள் **என் தந்தையார் முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களும் ஒருவர்.**

அந்த மாநாட்டிலே அவர் தலைமையிலே கவியரங்கம். **"அன்று அவருடைய முழக்கம் இன்னொரு பாரதிதாசனை நினைவூட்டியது"** என்று அந்தக் கவியரங்கில் அவர் தலைமையில் கவிதை பாடிய என் தந்தையார் அடிக்கடி சொல்லி மகிழ்வார்.

என் தந்தையாரின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடுகொண்ட அவர் தம்முடைய முனைவர்பட்ட ஆய்வேடான **பத்தாண்டுத் தமிழ்க்**

கவிதைகள் என்னும் ஆய்வு நூலில் என் தந்தையாரின் கவிதைச் சிறப்பினைப் பதினான்கு பக்கங்களில் எடுத்துக்காட்டியிருந்தார். அவர் மதுரையில் யாதவர் கல்லூரி முதல்வராக இருந்தபோது கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்கு என் தந்தையாரை அழைத்துப் பாராட்டினார். தம் மாணவரை என் தந்தையாரின் கவிதைகளைப் பற்றி எம்.ஃபில் பட்டத்திற்காக ஆய்வு செய்ய வழிகாட்டினார். அவரால் வளர்ந்த மாணவர்கள் எண்ணற்றவர்

மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டின் போது, அவரும் என் தந்தையாரும் ஒரே அறையில் தங்கியிருந்தனர். அப்போது பினாங்கில் நடைபெறும் கூட்டத்திற்கு அழைப்பு வந்தமையால் உடனே செல்ல வேண்டியவரானார். அந்த நேரத்தில் என் தந்தையார் உறங்கிக் கொண்டிருந்தார். உறங்குபவரை எழுப்பக்கூடாது என்று பக்கத்து அறையில் இருப்பவரிடம் சொல்லி, எழுந்ததும் தெரிவிக்குமாறு செய்த அவர் பண்பினை என் தந்தையார் அடிக்கடி பலரிடம் சொல்வார். எனக்கு அவர் தலைமையில் திருமணம் செய்துவைத்தார். அவர் அமைச்சராக இருந்தபோது அவரே ஒருநாள் தொலைப்பேசியில் விரும்பி அழைத்து அவருடைய நம்பிக்கைக்கு உரிய நேர்முக உதவியாளராக என்னைப் பணியமர்த்தினார். முதல்வர் கலைஞரின் பவளவிழா மலர் தொகுப்புப் பணிகளிலும் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பு முயற்சிகளிலும் 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலுக்காக, முதல்வருடன் மேற்கொண்ட தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணங்களிலும் நாடு முழுவதும் அவர் தலைமையில் நடைபெற்ற ஆலய குடமுழுக்குத் திருப்பணிகளிலும் அவர் உடன் இருந்து அவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. எனக்கு அவர் சிறந்த ஆசானாகத் திகழ்ந்ததை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்நூலினை வெளியிட வாய்ப்பளித்த மதிப்பிற்குரிய அம்மா திருமதி வெற்றிச்செல்வி தமிழ்க்குடிமகன் அவர்கள், அவருடைய மூத்த புதல்வர் மதிப்புமிகு த. மெய்ம்மொழி அவர்கள் மற்றும் திரு த. பாரி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. அவர் மறைவுக்குப் பிறகு இந்நூலை உருவாக்குவதில் உழைத்த அறிஞர் மதிப்புமிகு முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கு என்றும் நன்றி உடையேன்.

மோ. பாட்டழகன்

## மேனாள் அமைச்சர்
## மாண்புமிகு **தமிழ்க்குடிமகனார்** அவர்களின்
## திருமகனார் மதிப்புமிகு **த.மெய்ம்மொழி** அவர்கள்
## வழங்கிய **வாழ்த்துரை**

பொதுவாகத் தமிழர் பெருந்தன்மையால் பலவற்றை விட்டுக் கொடுத்துவிட்டு, இளித்தவாயர் / ஏமாளிகள் என்றே பெயர் பெற்றனர். அதே நேரம், உணர்வூட்டப்படும்பொழுது பொங்கி எழுந்து தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்வதும், பின்னர் ஆக்கப் பணிகளுக்கான தொடர்முயற்சிகளின்றித் தூங்கி விடுவதும் அல்லது தூங்க வைக்கப்படுவதும் வரலாறு காட்டும் பாடம்.

நினைவில் வாழும் முனைவர் தமிழ்க்குடிமகனார் வேறுபட்டு வாழ்ந்தவர். இருக்கின்ற வீட்டை இடித்துக் கட்டுவோம் என்று நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனையில் மிதந்தவரல்லர். மேலும் வெளிப்பூச்சு மற்றும் விளக்கு / தோரண அலங்கரிப்பிலேயே காலத்தை ஓட்டி, வீடு தாமாகவே தரைமட்டமாகட்டும் என்று விட்டுவிட விரும்பியவருமல்லர். அடித்தளத்தை வலுப்படுத்தி, கட்டடத்தைச் சீர்படுத்தி, உறுதியும் உண்மை அழகும் கொண்ட வீடாக அமைத்து அங்கே அன்பு, அமைதி, ஒழுங்கு, மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்ற நோக்கில் தன் பங்கை ஆற்றிச் சென்றவர்.

அறிவியல், உழவியல், பொருளியல், கலை, கல்வி, பண்பாடு என்று எல்லாத் துறைகளிலும் ஒருங்கிணைந்த மேம்பாடு அடைவதே தமிழினத்தின் உண்மையான முன்னேற்றம் என உறுதியாக எண்ணியவர். அதனால்தான் சிங்கப்பூர் தமிழ் இணைய மாநாட்டில் பங்கேற்றதன் தொடர்விளைவாகத் தமிழக அரசு தமிழ்க் கணினி விசைப்பலகைத் தரப்படுத்துதலை நிறைவேற்ற மூலமாய் இருந்தவர். இதன்மூலம் தமிழ் மென்பொருள் வணிகம் பல்லாயிரம்

கோடி ரூபாய் அளவு பல்கிப் பெருகிடக் காரணமாய் விளங்கினார். அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் தமிழ்க் கணினிக் கலைச் சொற்களை நூலாக வெளியிடவும் செய்தார்.

கவிதை, நாடகம், உரைநடை, எளிய தமிழில் தெளிவான மற்றும் சுவையான பேச்சு என்று முத்தமிழும் கலந்த மொத்த உருவமாகத் திகழ்ந்தவர். சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாத வாழ்வு வாழ்ந்தவர். மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் கருத்துப் பரிமாற்றத்தால் மனமாற்றம் பெறச் செய்தவர். ஒத்த கருத்துடையோரை அகந்தையுடன் புறக்கணிக்கும் செயலில் ஈடுபடாமல் அரவணைத்துச் சென்றவர். கொள்கை உறுதி, சுயமரியாதை, சோர்வில்லா உழைப்பு இவற்றுடன் தமிழ்ப்பணியையும் மக்கள் பணியையும் இரு கண்களாகப் போற்றி இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர்.

முடியும் என்று உணர்த்தினாலும் உணர மறுத்த விதண்டாவாதம் பேசுவோர் தூங்குவது போல் நடிப்பவர். ஆர்வம் இருந்தும் கல்வியோ, முயற்சியோ, வழிகாட்டுதலோ இன்றி வாழ்வோர் பலர். உணர மறுப்பவன் கரிக்கட்டை என்றால் உணர்வின்றி இருப்பவன் மரக்கட்டை. இவ்விரு வகையினரையும் புறந்தள்ளாமல் வெறுத்து ஒதுக்காமல் விரக்தியில் ஒதுங்காமல் நாடிச் சென்றவர்.

இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருந்தாலும், தேவைதானா என்போர் தெளிவு பெறவும் தேவைதான் என்போர் பின்பற்றவும் துணையாக உதவும் வண்ணம் அவரது மூன்று படைப்புகள் அமைந்தன. அவை:-

1. தமிழில் வழிபாடு தடையென்ன நமக்கு - 1 தொகுதி

உனது கடவுளிடம் உன் குறையை உள்ளம் உருகச் சொல்ல உனது மொழி வழியே வழிபடு. உள்ள அமைதியும் நீ விரும்பும் ஒழுங்கான வாழ்வும் கிட்டும். அது சமுதாயத்துக்கும் நன்மைதரும் என்பதை உணர்த்தும் நூல்.

### 2. தமிழ் ஆட்சிமொழிச்செயலாக்கம் - 2 தொகுதிகள்

உனது அரசு உனக்கு என்னென்ன திட்டங்கள் மூலம் உதவிக்கு வரும், உனது அரசு உனக்காக. எப்படிச் செயல்படுகிறது என்பதை ஒவ்வொரு தமிழ்க்குடிமகனும் தெரிந்து, பயன்படுத்தி முன்னேற உன் மொழி ஆட்சிமொழியாக எப்படிச் செயல்படவேண்டும் என்று வழிகாட்டும் நூல்.

### 3. தமிழ்வழிக் கல்வி - 3 தொகுதிகள்

உலகெங்கும் அறிவியல் ஆய்வுப்படித் தாய்மொழிக் கல்விக்குப் பெருகி வரும் ஆதரவு, தமிழகத்தில் அதன் நிலை, தமிழ்வழிக் கல்வி உண்மையாகச் செயல்படுத்தப்பட்டால் அனைவரும் கற்றுத் தேர்ந்து உலகப் போட்டியையும் சந்திக்கலாம் - சாதிக்கலாம் என்பதை உணர்த்தும் நூல்.

'புலவன் வாக்குப் பொய்க்காது' என்பது உண்மையெனில் எல்லாத் துறைகளிலும் தமிழினத்தை முன்னேற்ற உண்மையாக நினைக்கும் எந்த இயக்கமும் எவரும் இந்த மூன்று நூல்களை வழிகாட்டிகளாகக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படும்.

ஏன், இந்திய அளவில் தவிர்க்க முடியாத முதன்மைச் சக்தியாகத் தமிழகத்தில் இருந்து எந்த இயக்கமும் அல்லது தலைவரும் விளங்கும் காலம் வந்தால், இந்த நூல்களின் அடிப்படையில் எல்லா மாநில மக்களின் உண்மையான முன்னேற்றத்துக்கும் அதன்மூலம் ஒட்டுமொத்த இந்தியா உயர்நிலை எய்துவதற்கும் பாடுபடவேண்டிய நிலை ஏற்படும்.

முனைவர் தமிழ்க்குடிமகனார் மறைவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் தமிழ்வழிக்கல்வி நூலை எழுதி முடித்தார். கணினிப் பரலையும் ஏராளமான குறிப்புகள், சான்றுகள் முதலியவற்றையும் ஒப்பிட்டு, அவரது நடையும் போக்கும் மாறாமல் முழுமையாக உடல் நலிவுற்ற நிலையிலும் உள்ளன்போடு பாடுபட்ட பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கும், பாவாணர் ஏடகத்தின் வாயிலாகத் தமிழர் தம் கரங்களில் தவழவிட்டுள்ள தகுதி வாய்ந்த தமிழ்த் தம்பி முனைவர் மோ.பாட்டழகன்

அவர்களுக்கும் என் நன்றிகள் பல. உண்மையைச் சொல்வதில் ஒளிவு மறைவு தயவு தாட்சண்யம் காட்டவேண்டியதில்லை என்ற தமிழ்க்குடிமகனாரின் நிலைப்பாட்டை ஒட்டி, காலமாகி விட்டாரே என்று கருணை காட்டாமல் ஆக்கப் பூர்வமான அலசலையும் அறிவுரையையும் வழங்கிடத் தமிழ் அன்பர்களை வேண்டுகிறேன்.

'இப்படியும் ஒருவன் இருந்தான்' என்ற தலைப்பை எழுதி ஒரு கோப்பினை இந்த நூல் எழுதி முடித்தவுடன் தொடங்கி வைத்தார். புலவன் வாக்கு - 'இருந்தான்' என்று இறந்த காலத்தில் இட்ட தலைப்பு சில நாள்களில் உண்மையானது. தன் வரலாறாக அவர எழுத நினைத்ததை 'மகன் தந்தைக்காற்றும் உதவி' என்னும் குறளுக்கேற்ப என்னை மேலும் தகுதிப்படுத்திக் கொண்டபிறகு தமிழினத்தின் வரலாற்றில் தமிழ்க்குடிமகனின் வரலாறு தோய்ந்ததைப் படம்பிடித்து வழங்குவேன் என்று நம்புகிறேன்.

வாழ்த்துகள் - நன்றி

அன்பன்

சா. தமிழ்க்குடிமகன் மெய்ம்மொழி

தமிழகம்
20,இராமன் தெரு
காந்திநகர், ஆவடி
சென்னை - 600 054
செல்லிடப் பேசி : 9840084277

**இந்நூலைப் பெறத் தொடர்புக்கொள்ளும் முகவரியிலேயே பிற நூல்களையும் பெறலாம்**

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 29. | இதழ்களின் சார்புக் கருத்துகள் | | |
| | (ஈ) 1999 | - | 7 |
| | (உ) 2000 | | 88 |
| 30. | இதழ்களின் குழப்பவாதங்கள் | | 140 |
| 31. | தாய்த்தமிழ்ப்பள்ளிகள் | - | 182 |
| 32. | தமிழ்வழிக்கல்வி - அரசின் நிலை | | 194 |
| 33. | 37-அ விதி - கட்டாயம் கடைப்பிடித்திருந்தால். . . ! | - | 282 |
| 34. | கல்வி அமைச்சரின் . . . . ? | | 289 |
| 35. | இன்றைய முதலமைச்சரின் அன்றைய கருத்துகள் | - | 306 |
| 36. | கரட்டு வாதங்கள் | - | 312 |
| 37. | வேலை வாய்ப்பு | - | 316 |
| 38. | பிற்கால நிலைமை | - | 331 |
| 39. | என்னுரை | - | 355 |
| | முடிவுரை | - | 374 |
| | கருவி நூற்பட்டியல் | - | 375 |

# இயல் இருபத்தொன்பது - ஈ

## சார்புக் கருத்துகள் 1999

தமிழக அரசு அறிவிப்பு 19.11.98 அன்று வெளியான பின் பல இதழ்கள் போட்டி போட்டுக் கொண்டு கருத்துத் தெரிவித்தன. 1999 சனவரி மாதக் 'குங்குமம்' இதழ் தரும் ஆசிரியவுரை இது:

1. "தமிழ் என்னும் தாய்ப்பால்

எதையும் துல்லியமாக எடை போட்டுச் சொல்லும் தராசு அது. ஒரு சிறிய நூலிழையைக்கூட மிகச் சரியாக எடை போட்டுச் சொல்லிவிடும் ஆற்றல் கொண்டது அது.

அதன் ஒரு தட்டில் தாய்ப்பால். அதற்கு ஈடு கட்டுவதற்கு இன்னொரு தட்டில் முதலில் புட்டிப்பாலை வைத்தார்கள். என்றாலும் தாய்ப்பாலின் தட்டு த்ாழ்ந்தே இருந்தது. எதிர்த்தட்டில் புட்டிப்பாலோடு, வேறு சில ஊட்டப் பொருட்களை வைத்தார்கள். ம்ஹூம். பிரயோசனமில்லை. இனிப்புப் பொருட்களை வைத்தார்கள். ஈடாகவில்லை. எதையெதையோ வைத்துப் பார்த்து இறுதியில் தாய்ப்பாலுக்கு எதுவுமே ஈடாகாது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

தாய்ப்பாலைப் போன்றதுதான் தாய்மொழியும். அதைப்போல் மனிதர்களுக்குச் செழுமையும் வலிமையும் சேர்ப்பது எதுவுமே இல்லை. ஆங்கிலக் கல்வியினுடைய தீமைகளை எத்தனையோ அறிஞர்கள் எத்தனை முறையோ பட்டியலிட்டுவிட்டனர். "செலவு தந்தைக்கு ஓர் ஆயிரம் சென்றது. தீது எனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன. நலம் ஓர் எட்டுணையும் கண்டிலேன். இதை நாற்பதாயிரம் கோவிலில் சொல்லுவேன்" என்று சத்தியம் செய்தார், பல மொழிகள் அறிந்த பாரதி.

தமிழ் அன்பர்கள் நெஞ்சம் மகிழும் விருந்தாக, எதிர்காலத் தமிழ் இளைஞர்களுக்கு நலம் பயக்கும் மருந்தாக, அடுத்த கல்வி ஆண்டு முதல் (1999-2000) புவி இயல், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் பாடங்களைத்

தமிழில்தான் கற்பிக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அது மட்டுமல்ல; மழலையர் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

நோபல் பரிசு பெற்ற சி.வி. ராமன், சந்திரசேகரிலிருந்து, இன்றைய அப்துல் கலாம் வரை, பல விஞ்ஞானிகள், பாரதியார், பாரதிதாசன் போன்ற கவி வேந்தர்கள், அண்ணா போன்ற அறிஞர் பெருமக்கள் பலர் தமிழ் வழிக் கல்வி பயின்றவர்கள்தான். எனவே, தமிழ் வழிக் கல்வி எதிர்காலத்தைச் சிதைத்துவிடுமோ என்று இளைஞர்கள் அஞ்ச வேண்டாம். சற்று ஆழ்ந்து யோசித்தால் மனவளம் மிகுந்த எதிர்காலத் தமிழகத்திற்கு இன்று ஒரு விதை ஊன்றப்படுகிறது என்பது புரியும்"

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கல்வியை வைத்தே காசு பண்ணும் படித்த தன்னலவாதிகட்கு இதெல்லாம் காதில் ஏறுமா? அதுமட்டுமின்றி 'குங்குமம்' இது குறித்த பிறர் கருத்துகளையும் வாங்கிப் போட்டிருக்கிறது. அவர்கள் கருத்துதான் என்ன?

## இனி தைரியமாக தமிழ் பேசலாம்

வரும் கல்வியாண்டு முதல் அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் கட்டாயத் தமிழ்!'

முதல்வரின் இந்த முடிவு குறித்து சிலரிடம் கருத்து கேட்டோம்.

வி.சி. குழந்தைசாமி (முன்னாள் துணைவேந்தர்)

பொதுவாக எல்லா மட்டத்திலேயும் கல்வி தாய்மொழி மூலமாகத்தான் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது உலகளவில் கல்வியாளர்கள் ஒப்புக்கொண்ட ஒன்று!. இந்தியத் துணைக் கண்டத்திலும், தமிழகத்திலும் இந்தக் கருத்தை, கல்வித்துறையைச் சார்ந்த அறிஞர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் நமது குழந்தைகள் மூன்றாவது வயதிலிருந்தே ஆங்கில வழியாகக் கல்வி கற்பது என்பது இயற்கைக்கு முரணானது. உலகளவில் ஒப்புக்கொண்ட கல்வித் தத்துவத்திற்கு எதிரானதும் ஆகும்! ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை! அதை ஒரு பாடமாகக் கற்பதை யாரும் குறை கூறமாட்டார்கள். ஆனால் மழலையர் நிலையில் இருந்தே ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்துவது குழந்தைகளின் மனவளர்ச்சிக்கும், கல்வி பெறுவதற்கும் ஏற்றது அல்ல! முதல்வரின் ஆணை பெற்றோரும், மற்றோரும் வரவேற்கக்கூடிய முடிவு!

இல. கணேசன் (தலைவர், தமிழக பா.ஜ.க.)

தமிழ்நாட்டில், ‘தமிழே தெரியாது. எனக்குத் தமிழ் படிக்க வராது’ என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கின்ற தலைமுறையே உருவாகிவிட்டது. தமிழை ஒரு பாடமாகக்கூடப் படிக்காமல் ஒருவர் முதுநிலைப் பட்டம் பெற முடியும் என்ற நிலை இன்று உள்ளது! தமிழ் மொழி மூலம் பயிற்றுவிக்கும் பள்ளிக் கூடங்களில் சேர்க்காமல், ஆங்கிலப்பள்ளிகளில் தமது குழந்தைகளைச் சேர்ப்பவர்களே இப்போது அதிகம்! இந்த நிலையில் தமிழ் மீது அக்கறை கொண்டு, ‘மழலையர் பள்ளிகளிலும் கூட கட்டாயம் தமிழிலே சொல்லித் தரவேண்டும்’ என்ற ஆணை வரவேற்கத்தக்கது!

கண்மணி (குடும்பத் தலைவி)

ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களும் தமிழிலேயே இருக்கவேண்டும். முதல்வரின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது! ஆனால் அதற்குமேல் ஆங்கில வழிக் கல்வி அவசியம் என்பது என் கருத்து. நம் நாட்டில் ஜனத் தொகை தினமும் அதிகரித்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. அது மட்டும் இல்லாமல், நாம் வளர்ந்து வருகின்ற நாட்டினர். இந்த நிலையில் நமக்கு உலகம் முழுவதும் பேசும் ஒரு மொழி அவசியம் என்பதால், ஒரு குறிப்பிட்ட நிலைக்குப்பின் ஆங்கிலத்தில் பாடங்களைப் பயிலலாம். அதே சமயத்தில் பல பாடங்களைத் தமிழில் கற்பதால் தமிழுக்கும் பிரச்சனையில்லை!

அன்பரசி (பள்ளி மாணவி)

ஆங்கில அறிவு அவசியம்தான். அதுக்காக தமிழை ஓரங்கட்டி விடக்கூடாது! தமிழுக்கும், ஆங்கிலத்துக்கும் சம மதிப்பைக் கொடுக்கணும். ஆங்கிலத்தைப் பொறுத்தவரைக்கும், அது ஒரு உலகமொழின்னு ஆயிடுச்சி. அதனால ஆங்கில அறிவு இருந்தா உலகத்தோட எந்த மூலைக்குப் போனாலும் பொளச்சுக்கலாம். ஆனா ஆங்கிலம் தெரியும்கிறதுக்காக, அதையே பேசிட்டு, நம்ம தாய்மொழியைச் சாகடிச்சுடக்கூடாது. அதே மாதிரி ஆங்கிலம் அந்தந்த நாடுகளுக்குத் தகுந்த மாதிரி வளைஞ்சு, நெளிஞ்சு கொடுக்கிறதாலதான் உலகமொழி ஆயிருக்கு. நம்ம தமிழ்லேயும் அதேமாதிரியான சில ‘விட்டுக்கொடுப்புகள்’ இருந்தா நல்லாயிருக்கும்! மற்றபடி இப்போ முதல்வர் எடுத்திருக்கிற முடிவு என்னைப் பொறுத்தவரைக்கும் ரொம்ப நல்ல முடிவு. இதனால இனி கான்வென்ட்ல கூட தைரியமா தமிழ்ல பேசலாம்!

பல தரப்பினருடைய கருத்துகளும் இதில் அடங்கியுள்ளன என்பதைக் கவனிக்கவேண்டும்.

தேனமுதம் இதழ் (1.1.99) தன் ஆசிரியவுரையில் அளந்து எழுதுகிறது.

**இன்னும் தயக்கம் ஏன்?**

"தமிழ் வழிப் பயிற்றும் கல்வி முறைக்குத் தமிழக அரசு அண்மையில் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அதன்படி எட்டாம் வகுப்பு வரை எல்லாப் பாடங்களும் தமிழ் வழியிலேயே கற்பிக்கப்படவேண்டும் என்றுஅந்த அறிக்கை கூறியது. அதைக் கண்ட உண்மைத் தமிழர்கள் உள்ளம் குளிர்ந்தார்கள். தமிழுக்கு நல்ல வருங்காலம் வருவது கண்டு நிறைவு கொண்டார்கள். ஆனால்,

கணக்கு, நிலநூல், வரலாறு போன்ற பாடங்கள் மட்டும் தமிழ் வழிதான் என்று குறிப்புக் கொடுத்துவிட்டு அறிவியல் பற்றி எதுவும் அறிவிக்காமல் விட்டு விட்டார்கள். அதனால் அந்தப் பாடம் மட்டும் ஆங்கில வழியில் நடத்தப்படும் என்பதாக மற்றவர் கருதும் வண்ணம் அது அமைந்துள்ளது. இது எமக்கும் வியப்பைத்தான் தருகிறது. எல்லாரும் இப்படித்தான் கருதுகிறார்கள். இப்படிச் சொல்லும் தேவை தமிழக அரசுக்கு ஏன் ஏற்பட்டது? அரசு ஆணைகளில் எங்காவது சிறு சந்து கிடைத்தால் கூட அதில் நுழைந்து தப்பிக்க முயலும் திறமை கொண்டவர்கள் ஆங்கில வணிகர்!

அரசுப் பள்ளிகளிலும் அது போன்ற பிற தனியார் பள்ளிகளிலும் ஏற்கனவே பன்னிரெண்டாம் வகுப்பு வரை தமிழில் தான் அறிவியல் கற்பிக்கப் படுகிறது. மாணவர்கள் விருப்போடு கல்லூரிக் கல்வியில் கூட இப்படி நடக்கின்ற இடங்களும் உண்டு. இந்தச் சூழ்நிலையில் ஆங்கிலத்திற்கு வழிவிட்டுத் தமிழக அரசு ஒதுங்கி நிற்பது போல் உணரமுடிகிறது. சிலபேர் அதுதான் உண்மை என்றும் கூறுகிறார்கள். தமிழ் வழியில் அறிவியலைக் கற்பிக்க முடியாதென்று அரசு கருதுகிறதா? சப்பான், சீனா, சோவியத், ஃபிரான்சு போன்ற நாடுகள் அறிவியலைத் தம் தாய்மொழியில் கற்பித்து ஆக்கம் தேடிக் குவித்துள்ளன. இது அரசுக்கு தெரியாதா? எல்லாம் தெரிந்திருந்தும் ஏன் இப்படி நடந்துகொண்டது? சிறுகுழந்தைக்கு மிட்டாய் காட்டி ஏமாற்றுவது போல் தமிழர்களைத் தடம் மாற்ற அரசு கருதுகிறதா? இந்த அறிவிப்பு ஆணையாக வந்தாலும் ஆங்கிலவழி வணிகர்கள் அஞ்சப் போவதில்லை. ஆங்கிலவழி மோகம் மக்கள் நெஞ்சை விட்டு அகலப் போவதும் இல்லை.

சிலர் கருதுவதுபோல், மூன்றாம் வகுப்பு வரையிலாவது, எல்லாக் கல்விக் கூடங்களிலும் தமிழ்தான் பயிற்றுமொழி என்ற நிலைகூட இந்த

அறிக்கையின் பின்புலத்தில் தெரியவில்லை. கல்வியில் சிறப்பான ஓர் இடத்தைக் கலைஞர் ஆட்சிகூட தமிழுக்குத் தரவில்லையானால் வேறு எவராலும் தரமுடியாது. இவ்வளவுக்குப் பின்னும் தமிழை முழுமையாகக் கல்வியில் கொண்டு வர தயக்கம் ஏன்? தயக்கத்தை விளைவிக்கும் நேயர்கள் யார்? அதன் அடித்தளத்தைக் கண்டுணர்ந்து உறுதியாக, துணிவாகக் கல்வி தமிழ் வழியில்தான் என்று அரசு அறிவிக்க வேண்டும். இனிமேலும் தயங்குவதில் பொருளில்லை!''

அமைச்சரவையில் அனைத்துப் பாடங்களும் தமிழ் வழியில் வந்தாக வேண்டும் என என் போன்றவர்கள் வலியுறுத்தியபோது, ‘படிப்படியாகப் போவோம்; முதலில் கலைப்பாடங்கள் யாவும் தமிழில் வரட்டும்‘ என்று குரல் கொடுத்தார்கள் சில அமைச்சர்கள். ஏற்கெனவே பி.எசி. வரை அனைத்த அறிவியல் பாடங்களும் தமிழ்வழியில்தான் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதிலும் அரசினர் கலைக்கல்லூரிகள் அனைத்திலும் இதுதான் நிலை என்று நான் வலியுறுத்தினேன். ஆனால் பிறருடைய குரலோடு கல்வி அமைச்சரும் சேர்ந்து பாடியதால் முதல்வர் அறிவியல் பாடம் தவிரப் பிற பாடங்கள் தமிழில் முதலில் வரட்டும் என்று சொல்லிவிட்டார். அதன்படி அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது. அந்தக் குழப்பத்தைத்தான் இந்த ஆசிரியவுரை பிய்த்து உதறிக் காட்டியுள்ளது.

இதனைத் திறனாய்வு செய்கிறார் தமிழண்ணல் (தினமணி 4.1.1999)

“கணக்கு உட்பட நான்கு கலைப் பாடங்களைத் தமிழ் வழியில், தொடக்கம் முதல் கற்பிக்க வேண்டும்; தமிழை எல்லா நிலையிலும் ஒரு கட்டாய மொழிப் பாடமாக்க வேண்டும்; சிறுபான்மையினர் இவற்றுடன் தத்தம் தாய் மொழியையும் ஒரு மொழிப் பாடமாகக் கற்பிக்க அவ்வப் பகுதிகளில் வகை செய்யலாம். தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்குப் பலவிதச் சலுகைகள் வழங்கி ஊக்கப்படுத்தலாம் என கடந்த நவம்பர் முதல் நாளன்று நடந்த தமிழ் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அமைச்சர் தமிழ்க்குடிமகன் இதை முதல்வரிடமும் கல்வி அமைச்சரிடமும் கூறி, நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தார். அன்படியே முதல்வரும் அறிவித்துவிட்டார். அரசு ஆணை பிறப்பிக்க வேண்டியதுதான் மீதமுள்ளது.

இங்குள்ள ஆங்கில நர்சரிப் பள்ளிகள் இதை எதிர்த்து, முணு முணுப்பது, வருமானம் போய்விடும் என்பதாலேயாம். தன்னலத்திற்காகத் தமிழர்களே தமிழுக்கு மாறாகவுள்ளனர்! இந்நிலையில், தமிழமைப்புகள் அனைத்தும் முதலில் ஒருங்கிணைதல் வேண்டும்.

அரசியல் கட்சிகளில் பலவாறு இணைந்து செயற்படும் திட்டம் ஒன்று வகுக்க வேண்டும். கட்சித் தொண்டர்களுக்குத் தமிழறிவை, தமிழ் இலக்கிய வரலாற்றை, தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பை, தமிழ் இலக்கியம் - இலக்கணம் - புதிய படைப்பு வளர்ச்சி ஆகியவற்றை வகுப்பு நடத்தியும். கருத்தரங்கு, மாநாடு கூட்டியும் உதவுவதாக அறிவிக்கவேண்டும். அவ்வாறு செய்வது ஏழை எளிய மக்களான தொண்டர்களிடமெல்லாம் தமிழை - தமிழினப் பெருமையைக் கொண்டு செல்ல வாய்ப்பாகும்.

தமிழமைப்புகள் ஒருங்கிணைந்து, தமிழ் ஒளி இயக்கம் தொடங்குவது, சிறந்த பயனுள்ள தமிழ்ப் பணியாகும்'' என்கிறார்.

தமிழ் வளர்ச்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கல்வி அமைச்சர், முதல்வர் வாயிலாக நான் எப்படிச் செயலுக்குக் கொண்டுவந்தேன் என்பதனைத் தமிழண்ணல் தெளிவு படுத்திவிட்டார்.

'இளந்தமிழன்' இதழில் தி.வ. மெய்கண்டார் எழுதுகிறார் (பிப்.1999)

''தொடக்கக் கல்வியில் தமிழ் மொழியையும் தமிழ் வழிக்கல்வியையும் கட்டாயமாக்கித் தமிழக அரசு அறிவித்திருப்பதை பெரும்பாலான கல்வியாளர்களும் அரசியல் கட்சியாளர்களும் வழக்கம்போல வரவேற்றுள்ளனர்.

பயிற்சிமொழி தாய் மொழியாகத்தான் அமையவேண்டும் என்பதனைச் சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசத்தந்தை மகாத்மா காந்தி தெளிவுபடக் கூறியதோடு அக் கொள்கையில் உறுதியாக இருந்தார்.

ஆனால் நாடு சுதந்திரமடைந்த பிறகு இக்கொள்கை தளர்ச்சி அடைந்து விட்டது. தமிழ் நாட்டில் இக்கொள்கை செயலிழந்து விட்டது என்றே சொல்லலாம்.

1969-ல் இன்றைய முதல்வர் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தாய்மொழி வழிக்கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவர ஆர்வத்துடன் முயற்சி செய்தபோது தாய்த் தமிழகத்தில் பெரும் ஒரு எதிர்ப்பு ஏற்பட்டு அதன் காரணமாக அம்முயற்சிக்கக் குந்தகம் ஏற்பட்டுவிட்டது.

மீண்டும் 1996-ல் பொறுப்பேற்ற தமிழக முதல்வர் அவர்கள் பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளைத் தமிழில் கற்பிக்கப்போவதாக அறிவித்தார். பின்னர் மத்திய அரசு அனுமதி தரவில்லை என்ற செய்தி வந்தது.

- அதற்குப் பிறகு பேச்சு மூச்சில்லாமல் இப்பிரச்சினை இருந்து வருகிறது.

இப்பொழுது அறிவிக்கும் இந்த அறிவிப்பும் அந்த மாதிரி ஆகிவிடக் கூடாது என்பதே நமது கவலை.

அப்போது தோல்வி பெற்ற பின்னர், சற்றேறக்குறைய 30 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டுவரும் இம்முயற்சி, எக்காரணம் பற்றியோ தோல்வி அடையுமானால், எதிர்காலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் எவரும், "அந்த ஆட்சியே நடைமுறைப்படுத்தவில்லை. இப்பிரச்சனை தோல்வி அடைந்துவிட்டது" என்று கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பார்கள்.

அத்தகைய வாய்ப்பை வருங்காலச் சந்ததியினருக்கு ஏற்படுத்தித் தராமல் தாய்மொழியைப் பயிற்சி மொழியாக்கும் பிரச்சினையில் தமிழக அரசு எவ்வித ஊசலாட்டமுமின்றி உறுதியாக இருந்து தியாக உணர்வுடன் செயல்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்."

நடந்ததை உணர்ந்தும், நடக்கப்போவதை மனத்திற்கொண்டும் அருமையாக எழுதியுள்ளார். "தமிழக அரசு எவ்வித ஊசலாட்டமும் இன்றி உறுதியாக இருந்து" செயற்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். யார் ஊசலாடியது. யார் உறுதியாக இருந்தது என்பனவெல்லாம் நூலை முழுமையாகப் படித்தபின் நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரு மடல் உண்மை விளக்கம்.

பாரதீய ஜனதா கட்சியின் மாநில விவசாய அணிப் பொதுச்செயலாளர் மலையம் வி. சம்பத் (எம்.ஏ;பிஎல்; பி.எட்.) எழுதிய மடலில் உள்ள செய்திகளைக் கவனியுங்கள் (15.2.99)

"கடந்த நவம்பர் மாதம் தமிழகத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெறாத மழலையர் பள்ளிகளை நடத்த அனுமதியில்லை என்று தாங்கள் அறிவித்திருப்பது எங்களை போன்றவர்களை மனதளவில் கடுமையாக பாதித்துள்ளது. தமிழக அரசு அங்கீகாரம் பெறக்கூடாது என்பது எங்கள் நோக்கம் அல்ல. அரசின் அங்கீகாரம் பெறுவதற்கு குறைந்தபட்ச நிபந்தனைகளைகூட நிறைவேற்ற முடியாமல் கடுமையான நிதி பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதே உண்மை."

குறைந்தபட்ச நிபந்தனைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் கடுமையான நிதிப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளோம் என்கிறார். இதுபோல 20000 பள்ளிகள்.

ஓர் அரசு விதிக்கும் குறைந்த பட்ச நிபந்தகைளைக் கூட நிறைவேற்றாமல் ஒரு பள்ளியை நடத்தலாமா! இது தவறு என்று தெரியவில்லையா!

மாணவ மாணவியரிடம் 'காசு' தண்டித்தானே பள்ளியை நடத்துகிறார்கள். இதுவே அரசியல் சட்டத்துக்கு முரணானது இல்லையா! ஏற்கெனவே 36000 பள்ளிகளை அரசே நடத்துகிறது. இலவசக்கல்வி, இலவசப் பாடநூல்கள் எல்லாம் தரப்பட்டபின் அந்த ஊரிலேயே இரண்டு மூன்று மழலையர் பள்ளிகள் ஏன்? அரசியல் சட்டத்தின் 45 ஆம் பிரிவு இலவச, கட்டாயக் கல்வியைத் தானே வலியுறுத்துகிறது.

நாட்டை ஆளும் பா.ஜ.க. வில் பொறுப்பில் உள்ள ஒருவர் 'காசு' தண்டும் பள்ளியை நடத்துவது, அரசுக் கொள்கைக்கே எதிரானது அல்லவா?

அப்படி நடத்திக் கொண்டு, அரசால் ஏற்புப் பெறும் தகுதிகளைப் பெற முடியவில்லை என்றால் என்ன பொருள்? போதுமான வருமானம் இல்லை! அதுதானே!

"மழலையர் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதன் நோக்கமே பண வசூல் செய்வது, கொள்ளையடிப்பது என்கின்ற தவறான ஒரு பிரச்சாரம் ஒரு குறிப்பிட்ட பிரிவினரால் செய்யப்பட்டுள்ளதாலும், ஒரு சிலரின் தவறான தகவல்களை அரசிற்கு கொடுத்துள்ளதாலும், அரசு இந்த நடவடிக்கையை அறிவித்திருக்கிறது என்று எண்ணுகிறேன்" என்கிறார்.

இது தவறான பிரச்சாரம் இல்லையே! உண்மையே அதுதானே!

"உண்மையிலேயே தமிழகத்தில் உள்ள சுமார் இருபதாயிரம் மழலையர் நர்சரி பள்ளிகளில் சுமார் பத்தாயிரம் நர்சரி பள்ளிகள் கிராமப் புறங்களிலேயே இயங்கி வருகின்றன. பெரும்பாலான நர்சரி பள்ளிகள் வாடகை கட்டிடத்திலேயே இயங்கி வருகின்றன. கடந்த மூன்று வருடங்களாக விவசாய விளைப்பொருட்கள் விலை வீழ்ச்சியினாலும், வெள்ளம், புயல் சீற்றத்தினாலும் விவசாயக் கூலித் தொழிலாளர்களாலும், மாதக் கட்டணத்தைக் கூட மழலையர் பள்ளிக் கூடத்திற்கு கட்ட இயலாத நிலையில் வறுமையில் உழல்கின்றனர்"என்கிறார்.

'பெரும்பாலான நர்சரி பள்ளிகள் வாடகைக் கட்டிடத்திலேயே இயங்கி வருகின்றன' என்கிறார். ஒரு கிராமத்தில் உள்ள வாடகைக் கட்டிடத்தில் கழிப்பறை வசதி இருக்குமா? விளையாட்டுத் திடல் இருக்குமா? இவர்கள் ஒரு 5000 செலவிட்டு 100 நூல்களையாவது நூலகத்தில் வாங்கி வைத்திருப்பார்களா? இல்லையே!

இப்படி 20000 பள்ளிகள். எந்த வசதியும் இல்லாமல்! அதனால் அரசு ஏற்பு அளிக்கவில்லை.

அதோடு '37அ'வைப் பயன்படுத்தியிருந்தால் இவர்கள் நிலைஎன்ன? ஊரிலேயே ஒன்றியத் தொடக்கப்பள்ளி இருக்கும்போது, வறுமையில் உழலும் மக்கள் எதற்காக இந்த மழலையர் பள்ளிகளில் சேர்க்கிறார்கள்?

"மேற்படி பத்தாயிரம் நர்சரி பள்ளிகளும் நட்டத்திலேயே இயங்கி வருகின்றன."

ஆயிரத்தில் ஒரு 'வார்த்தை' சரியாகச் சொல்கிறார்.

"கிராமப்புறங்களில் உள்ள நர்சரி பள்ளிகளில் S.S.L.C., +2 மற்றும் பட்டப்படிப்பு பயின்ற பெண் ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக ரூ.300/- முதல் ரூ.500/- வரை சம்பளத்தில் வேலை கொடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். கம்பெனிகளுக்கோ, தினக் கூலிக்கோ இன்று நகரங்களுக்கு சென்றால்கூட தினக்கூலியாக குறைந்தபட்சம் ரூ.50/- கிடைக்கின்றது. சுமார் ஒரு லட்சம் படித்த பெண்கள் மழலையர் கல்வி பணியில் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு அதிகமான சம்பளத்தில் வேறு வேலை கிடைக்கின்றபொழுது இதை விட்டு விடுகின்றனர். புதிதாக படித்து வரும் பெண்களுக்கு மழலையர் பள்ளிக் கூடங்கள் வேலை வாய்ப்பை தருவதாகவும், சேவை மனப்பான்மையை ஊக்குவிப்பதாகவும் கல்விப் பணியில் அவர்களுக்கு அனுபவத்தை தருவதாகவுமே உள்ளது."

நன்றாகக் கவனியுங்கள். S.S.L.C. +2 படித்தவர்களுக்கும் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கும் வேலை தந்திருக்கிறார்கள். இவர்கள் யாரும் ஆசிரியர் பணிக்கு வரவேண்டுமெனும் விருப்பம் உடையவர்கள் என்று சொல்லமுடியாது. இருந்திருந்திருந்தால் இவர்களில் சிலராவது ஆசிரியப் பயிற்சியில் சேர்ந்திருப்பார்கள். எனவே விருப்பம் இல்லாத, முறையான ஆசிரியப் பயிற்சி பெறாத ஒரு இலட்சம் பெண்களுக்கு இவர்கள் வேலை கொடுத்திருக்கிறார்களாம். ரூ.300/-ம். 500ம் சம்பளம் கொடுத்து வேலை கொடுத்திருக்கிறார்களாம். காலையில் 9 மணிக்கு வந்து மாலை 5 மணிக்கு வீட்டுக்குச் செல்லும் +2 படித்த பெண்ணுக்கு 10ரூ சம்பளம். இது உழைப்புச் சுரண்டல் இல்லையா? இந்தச் சம்பளமும் பள்ளி நிர்வாகிகள் கையிலிருந்தா கொடுக்கிறார்கள்? மாணவர்களிடமும் பெற்றோர்களிடமிருந்தும் கறந்தது தான்! பிறகு வசூலுக்காக நாங்கள் பள்ளி நடத்தவில்லை என்கிறார்களே அது எப்படி?

அடுத்த வரிதான் நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது.

சேவை மனப்பான்மையை ஊக்குவிக்கிறார்களாம் இவர்கள். அடடா! அண்ணாமலை அரசரும், வள்ளல் பச்சையப்பரும், வள்ளல் அழகப்பரும், ஹாஜி கருத்த ராவுத்தர் போன்றவர்களும் இறந்து போய் விட்டார்களே என்று கவலைப் பட்டோம்! அவர்கள் இடத்தை நிரப்புவதற்கு இதோ 20000பேர் கிளம்பி விட்டார்கள். அதிலும் மழலையர் பள்ளியைத் தொடங்கி நடத்தும் 20000 பேர் கல்வி வள்ளல்களாக நம்முன் காட்சியளிக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாமா?

முதலீடு இல்லாமல் நடத்த வாய்ப்புள்ளது இப்போது கல்விக்கடை மட்டும் தான்; கள்ளுக்கடை நடத்த வேண்டுமென்றால் கட்டாயம் முதலீடு தேவை. எனவே Easy trade. இது மேலும் மலிவு விலையில் - குறைந்த பட்சக் கூலியில் - +2 மற்றும் பட்டம் படித்தவர்கள்; பெரும்பாலும் பெண்கள். The Cheapest Commodity in the educational market. ‘சேவை மனப்பான்மை’ என்றதும் என்னால் தாங்க முடியவில்லை!

“கோடி கொடுத்த கொடைஞன் - குடியிருந்த
வீடும் கொடுத்த விழுச்செல்வம்“ என்று வள்ளல் அழகப்பரைக் குறித்து வ.சுப. மாணிக்கம் எழுதினார். இவரை நினைக்கிறேன்.

இந்த 20000 பேரையும் நினைக்கிறேன்!

கல்வி எங்கே போய்விட்டது! இதற்கு யார் பொறுப்பு? கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்யத் தெரியாத கல்வித் துறைதான் பொறுப்பு.

“கிராமப்புறங்களில் மழலையர் பள்ளிக் கூடங்களில் தங்கள் குழந்தைகளை சேர்ப்பது ஆங்கில மோகத்தினால் அல்ல. தரமான கல்வியை எதிர்பார்த்து ஏழைகள் கூட தங்கள் குழந்தைகளை மழலையர் பள்ளிக் கூடங்களில் சேர்ப்பதற்கு காரணம் அரசு பள்ளிக் கூடங்களில் கல்வியின் தரம் தாழ்ந்துவிட்டதே இதற்கு காரணம். உரிமைகளுக்காக. சம்பள உயர்வுக்காக. சலுகைகளுக்காக மாதந்தோறும், வருடந்தோறும் சங்கங்கள் அமைத்துக் கொண்டு பொதுநல அமைப்புகள் போல, அரசியல் கட்சிகளைப் போல கொடி பிடித்துக் கொண்டு அரசியல் பின்னணியுடன் எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் அந்த ஆட்சியினரிடம் பேசுவது கூட இல்லாமல் போராட்ட களத்திலேயே அவர்கள் சிந்தனை சென்றதால் அரசு ஆசிரியர்களிடையே சேவை மனப்பான்மை குறைந்து விட்டது.”

அரசுப் பள்ளிக் கூடங்களில் கல்வியின் தரம் தாழ்ந்த விட்டது என்கிறார். எத்தனையோ அரசுப் பள்ளிகளில் எத்தனையோ ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு உழைக்கிறார்கள் என்பதனை நான் மறுக்கவில்லை. அவர்கட்கெல்லாம் என் தலை தாழ்ந்த வணக்கங்கள்!

ஆனால் அன்பர் சொல்வதில் உண்மையில்லாமல் இல்லையே! அரசு தரும் விடுப்பு வாய்ப்பு; ஒருவர் மருத்துவ விடுப்புப் போட்டுவிட்டு 3 மாதம் பள்ளிக்கு வராமலேயே இருக்கலாம்; இந்த இடைவேளையில் - விடுப்பில் - ஒரு வீடே கட்டி முடிக்கலாம். மாணவர்கள் எப்படிப்போனால் என்ன? பல பள்ளிகளின் அடிப்படை வசதிகள் இல்லை; அதைவிட முக்கியம் வகுப்பறைகள் இல்லை; ஒரு சில வகுப்பறைகளில் மேலே உள்ள ஓடுகளும், கைகளும் எப்போதும் விழுமோ எனும் நிலை. மரத்தடியில் நடக்கும் வகுப்புகள் எத்தனை?

இந்த நிலையில் நான்கைந்து வகுப்புகளுக்கும் ஆசிரியர்களே இல்லை என்றால் நிலைஎன்ன? ஒரே ஆசிரியர் ஒரே வாரத்தில் அருகருகே உள்ள இரண்டு பள்ளிகளில் பாடம் எடுக்கிறார். ஆளுக்கு 2½ நாள். மீதிநாளில் மாணவர்களின் கல்வி? மேலும் கொடிபிடிக்கும் ஆசிரியர் போராட்டங்கள்.

(நல்லவேளை புரட்சித்தலைவி ஆட்சியின் பயனாக இனிமேல் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் போராட்டம் நடத்த மாட்டார்கள் என்று நம்பலாம்!)

எனவே அன்பர் நமது அரசுப் பள்ளிகளின் அவல நிலை குறித்துச் சொன்னது பெரும்பாலும் உண்மையே! ஆனால் அரசுப் பள்ளிகளில் தரம் தாழ்ந்து விட்டது என்பதற்காக மட்டுமே, பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மழலையர் பள்ளிகளில் சேர்க்கிறார்களா!

சில ஊர்களில் ஒன்றிய, அரசு தொடக்கப்பள்ளிகளை அங்குள்ள ஆசிரியர்கள் நன்கு உழைத்துச் சிறப்பாக நடத்தி, சிறந்த பெயரை ஈட்டியுள்ளார்கள். அண்மையில் மாவட்டத்திலேயே இரண்டாவது இடம் பெற்றுள்ள அரசு மேல்நிலைப்பள்ளி, ஊரார் ஒத்துழைப்புடனும், அரசு நிதியுதவியுடனும் 27 வகுப்பறைக் கட்டிடங்களைப் புதிதாகக் கட்டிச் சாதனை புரிந்திருக்கிறார்களே! இந்தப் பள்ளி ஆசிரியர்கள் மீது பெற்றோர்க்கு நம்பிக்கை உண்டா இல்லையா! அப்படியானால் அதே ஊரில் மழலையர் பள்ளி எதற்கு? ஆங்கில மோகத்தால் அல்லாடும் ஏமாளிப் பெற்றோருக்கு வலைவிரிப்பதற்காகத் தானே? இதை இல்லையென மறுக்க முடியுமா?

அரசு ஊழியர்கள் பற்றி அவர் சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். "நாட்டின் இறையாண்மைக்கே ஜனநாயக கட்டமைப்பையே சீர்குலைக்கக்

கூடிய அளவிற்கு அரசு ஊழியர் மனோ நிலை வக்கர கதியில் ஒரே பாதையில் சென்று கொண்டிருக்கிறது'' என்கிறார். அதனை நாம் அனைவரும் நேரில் கண்டோம். அது ஓர் உச்சகட்டம் வரை போய் - உச்சநீதிமன்றம் வரை போய் இப்போது அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

'முடிந்ததற்கு இல்லை முடிவு'. இது ஒரு தமிழ்த்தொடர். இனியாவது, 'வக்கர கதி' யைத் துறந்து அக்கறை காட்டி அனைவரும் உழைப்பார்கள் என்று எதிர்பார்ப்போம்.

கடைசியாக அவரது வேண்டுகோள் இதுதான். ''படித்த ஒரு இலட்சம் பெண்களின் வேலை வாய்ப்பை அழித்துவிட வேண்டாம்'' என்கிறார்.

என் கேள்வி இதுதான்:

ஏன் இன்னும் ஒரு இலட்சம் பெண்கள் வேலை வாய்ப்புப் பெறுமாறு மேலும் ஓர் 20000 பள்ளிகளைத் தொடங்கலாமே! ஒருவேளை இப்படிப் பார்க்கலாம்.

இப்போது உங்கள் பள்ளிகளில் உள்ள 'ஆங்கிலப் பயிற்றுமொழி' வகுப்பை அகற்றிவிட்டு, தமிழ் வழியில் கல்வி சொல்லிக் கொடுத்தாலும் இந்த ஒரு இலட்சம் பேரின் வேலைவாய்ப்பு தொடருமா? தொடராதா?

அதேபள்ளி; அதே மாணவர்கள்; அதே ஆசிரியர்கள்! முன்பு தனக்கே முழுமையாகத் தெரியாத ஆங்கிலத்தில், இப்பொழுது ஆசிரியர்களும் தங்கள் 'தாய்மொழி'யில் சொல்லிக் கொடுக்கப்போகிறார்கள். பின் எப்படி வேலை வாய்ப்புக் குறையும் அல்லது கரையும்; அல்லது மறையும்?

இதற்கு நண்பரும், இதைப் படிப்பவர்களும் விடை சொல்லி விட்டால் நாம் ஒரு முடிவுக்கு வந்துவிடலாம்.

எங்கள் ஆணையை வரவேற்று 'செந்தமிழ்ச் செல்வி' (பிப்ரவரி 1999) ஓர் ஆசிரியவுரை எழுதியது.

## தமிழ் வழிக் கல்வி : இடைக்காலத் தீர்வு

''தமிழ்நாட்டில் தமிழ் பாடமொழியாக எல்லாப் பள்ளிகளிலும் இடம் பெற வேண்டும். தமிழ் படிக்காது எந்தத் தமிழ் மாணவனும் பட்டம் பெறக்கூடாது என்று தமிழறிஞர்கள் கடந்த பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள் குறைந்த மதிப்பெண்ணே வழங்குகிறார்கள். அதற்கு மாறாக சமஸ்கிருதம் அல்லது

பிரெஞ்சு மொழி எடுத்துப் படித்தால் அந்த மொழி ஆசிரியர்கள் நிறைய மதிப்பெண்களை வாரி வழங்குகிறார்கள். அதனால் மொத்த மதிப்பெண் கூடுகிறது. மேல்படிப்புக்கு இது உதவி செய்கிறது என்று பல மாணவர்கள் மேற்குறிப்பிட்ட மொழிகளைப் பாடமாகப் பயிலும் பழக்கம் பல்லாண்டு காலமாகத் தமிழகத்தில் உள்ளது.

அந்த மொழி ஆசிரியர்கள் மட்டும் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? எல்லாம் வயிற்றுக்கில்லாத கொடுமைதான். அவர்களும் தமிழாசிரியர்கள் போல் மதிப்பெண்களை இறுக்கமாக வழங்கினால் மாணவர்கள் அவர்களிடம் படிக்க வரமாட்டார்கள். அவர்கள் வேலை போய்விடும். பட்டினி கிடக்க வேண்டும். அதனால் யாருக்கு என்ன போயிற்று என்று மதிப்பெண்களை வாரி வழங்கித் தங்கள் வேலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

சில இந்தி மற்றும் வடமொழி ஆசிரியர்கள் வினாத்தாளில் உள்ள வினாக்களை அப்படியே விடைத்தாளில் எழுதினால் போதும். வினாக்களின் கடைசியில் உள்ள வினாக்குறிகளை மட்டும் எடுத்து விடவேண்டும். அதுபோதும் வேண்டிய அளவு மதிப்பெண்களை வழங்கி விடுவார்கள். மொழி தெரியாத மற்றவர்கள் பார்த்தால் கூட ஏதோ விடை யெழுதியிருக்கிறது என்று எண்ணுவார்களே தவிர வினாக்கள் அப்படியே எழுதப்பட்டுள்ளன என்பதைக் கவனிக்க மாட்டார்கள்.

இது ஒரு வகைக் கொடுமையாக இருக்க, நாடெங்கும் காட்டுச் செடிகளாக முளைத்துள்ள மழலையர் பள்ளிகள் தமிழை முற்றும் புறக்கணித்து விட்டன. பேசுவது கூட ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறுகின்றனர். இவற்றைக் கண்ட தமிழுணர்வு கொண்டவர்கள் விழித்தெழுந்து எதிர்த்தனர். அரசு தலையிட்டு அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒரு பாடமாகக் கட்டாயம் இருக்க வேண்டும். அத்துடன் பிற பாடங்களும் தமிழ்வழி கற்பிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினர்.

பல்வேறு போராட்டங்கள், ஊர்வலங்கள், கிளர்ச்சிகள், உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. அண்டை மாநிலங்களிலும் இந்தியாவின் அயல் மாநிலங்களிலும் வாழ்கின்ற மக்கள் ‘இதென்ன? தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்காகப் போராடு கிறார்களே? அவர்கள் இருப்பது தமிழ் நாடல்லாத வேறு நாட்டிலா? அல்லது தமிழ் நாடு வேற்று மொழி நாடாகி விட்டதா? என்று எள்ளி நகையாடுகின்றனர்/ இலங்கைத் தமிழர்கள் ‘நாங்கள் பல்லாண்டுகளாகத் தமிழிலேய பட்டப் படிப்பு வரை பயிற்றுவிக்கிறோமே; எங்கள் மக்கள் உலக முழுவதும் பரவி உயர் பதவிகளிலும் பொறுப்புகளிலும்

உள்ளனரே தமிழில் பயின்றது அவர்களுக்கு எந்தவிதத் தடையுமில்லையே' என்று ஏளனமாகத் தமிழ் நாட்டுத் தமிழரைப் பார்க்கின்றனர்.

இத்தனைக்கும் பிறகு அண்மையில் தமிழ்நாடு அரசு ஆணை, தமிழ் வழிக் கல்வி பற்றியது, தமிழர்கட்குக் கொஞ்சம் தெம்பூட்டுவது போல் இடைக்கால தீர்வாக வெளிவந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் கல்வி அமைச்சர் இனமானக் காவலர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் தமிழ்க்குடிமகனார் அவர்களும் பெருமுயற்சியெடுத்து இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளனர்.

அரசு ஆணை (நிலை) எண்421, பள்ளிக் கல்வி நாள் 27.11.98இல் வெளியிடப்பட்ட ஆணைகளின் தொடர்ச்சியாக 13.1.1999இல் அரசு கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆணைகள் வெளியிடுகிறது.

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக நடத்துவதோடு பிற பாடங்களை ஆங்கில மொழியில் நடத்துவதை மாற்றி, குறைந்தது மூன்றில் இரண்டு பாடங்களையாவது அதாவது சமூகவியல் (பூகோளம், வரலாறு உள்ளடங்கியது) கணிதம், அறிவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழ் வழியில் அடுத்த கல்வி ஆண்டு முதல், அதாவது 1999-2000 கல்வி ஆண்டு முதல் கற்பிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது.

ஏற்கனவே கல்வித் துறையினுடைய ஏற்பு பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளானாலும் வருகின்ற கல்வி ஆண்டில் அதாவது 1999-2000 ஆண்டில் மேற்குறிப்பிட்டுள்ள மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழில் பயிற்றுவிக்க முன் வருகின்ற பள்ளிகளுக்குத்தான் தொடர்ந்து ஏற்பு வழங்கப்படும்.

தமிழ் மொழி வழியில் இயங்குகின்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு ஏற்புக் கட்டணம் மேலே 2இல் குறிப்பிட்டுள்ள அரசு ஆணைப்படி பாதியாகக் குறைக்கப்படுவதோடு இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் பாடநூல்கள் அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படும்.

இத்தகைய தமிழ் மொழிக்கு ஆதரவு நல்கும் ஆணையை வெளியிட்டமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் உளங்கனிந்த பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாணை மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்பது போல் காணப்படுகிறது. தமிழ் நாட்டுக் கல்வியை மழலையர் பள்ளிகள் எவ்வளவு கெடுக்கின்றனவோ அவ்வளவு 'மெட்ரிகுலேசன்' பள்ளிகளும் கெடுக்கின்றன. வாழ்க்கையில் வசதி படைத்தவர்களும், தமிழை ஏமாற்றும் வசதி படைத்தவர்களும், இத்தகைய 'மெட்ரிகுலேசன்'களில்தான் பயில்கின்றனர்.

இந்த ஆணை இத்தகைய பள்ளிகளுக்கும் பொருந்துமாறு செய்த பள்ளியிறுதித் தேர்வு வரை தமிழ்கட்டாயப் பாடமாகவும் இரு பாடங்கள் தமிழ் வழியாகவும் கற்பிக்க ஏற்பாடுசெய்யவேண்டும். அதன்பின் பட்டப்படிப்பு, தொழிற் கல்வி, பல்கலைக்கழக 'டாக்டர்' பட்ட ஆய்வு என எத்தனையோ படிநிலைகள் உள்ளன. 21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க உள்ளோம்.

இப்போதே 2000 முதல் அனைத்துப் பள்ளிகளிலும் அனைத்துப் பாடங்களிலும் தமிழ் என்றும் 2002 முதல் பட்டப்படிப்பிலும் தமிழ் என்றும் 2005 முதல் எல்லாக் கல்வியும் தமிழ் வழியில்தான் என்றும் அரசு இப்போதே அறிவித்து அதற்கேற்றவாறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

செர்மன் மொழியிலே கற்ற செருமானியர்களும் சப்பானிய மொழியிலேயே கற்ற சப்பானியர்களும் தொழில் துறையிலும் அறிவியல் துறையிலும் மற்ற நாட்டினரைவிட முன்னேறியுள்ளனர் என்றால் அதற்குக் காரணம் அம் மக்கள் தாய்மொழிவழி பெற்ற கல்வியே என்பதைத் தமிழ் மக்கள் முழுவதும் உணர வேண்டும். உணர்ந்தால் அச்சம் அகன்று விடும். அடிமை எண்ணம் தகர்ந்து விடும். இந்நிலை வருமென எதிர்பார்ப்போமாக."

நாங்கள் எங்கள் அரசாணையை வெளியிட்டதும் இவையெல்லாம் தனியார் தொடக்கப்பள்ளிகளுக்கும்; ஏற்புப்பெற்ற மழலையர் மற்றும் ஏற்புப் பெறாத மழலையர் பள்ளிகட்கு மட்டும் பொருந்துவது போல் உள்ளதே! முற்றிலும் ஆங்கிலவழியில் நடைபெறும் மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு இந்த ஆணை உண்மை இல்லையா என்ற வினா இங்கு எழுப்பப்பட்டுள்ளது. சரியான வினாதான்! அமைச்சரவையிலும் இதுபேசப்பட்டது. முதலில் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளின் ஒழுங்கு வரட்டும்; அது செயற்படத் தொடங்கியபின் மெட்ரிகுலேசன் பள்ளிகள் பற்றி ஆய்வோம் என்று வீராசாமி, துரைமுருகன், ஆலடி அருணா போன்றவர்கள் வலியுறுத்தினர். பேராசிரியரும் 'பினனர் பார்க்கலாம்' என்றார். எனவேதான் அந்த முடிவு. அந்த அறிவிப்பு வந்ததும், தமிழன்பர்கள் இந்த வினாவைத் தொடுக்கத் தொடங்கினர். மேலே சொன்ன இதழின் கருத்தும் அதுதான்.

''தலித் முரசு'' எனும் இதழ் (ஏப்ரல் 1999) எழுதுகிறது:

''தமிழர்களை அண்மையில் மூன்று குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் பாதிப்புக்குள்ளாக்கின. 1. தமிழ் வழிக்கல்வி கட்டாயமாக்கப்படும் வரை - நூறு தமிழர்கள் முதற்கட்டமாக பட்டினிச் சாவு போராட்ட அறிவிப்பு. 2. ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு. 3. இந்தியாவில்தான் கருநாடகம் இருக்கின்றதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு, அங்கு 19 தமிழர்களுக்கு அரசுப் பணியில் வேலை மறுப்பு.

இம்மூன்று பிரச்சினைகளையும் மய்யப்படுத்தி, தமிழகத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் தமிழுணர்வு இயக்கங்கள் குரல் கொடுத்துப் போராடி வருகின்றன. இது, மிகவும் போற்றி வரவேற்கத் தகுந்த ஒன்றாகும்.

தலித் இயக்கங்களும் இது போன்ற பொதுப் பிரச்சினைகளில் தங்களின் கவனத்தைச் செலுத்த வேண்டியது, ஆதரவளிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். தலித் இயக்கங்கள் தனிமைப்பட்டுப் போகாமல் இருப்பதற்கு - இது பெரிதும் உதவும்.

தமிழ் மொழி நம் தொன்மையான மொழி. அதைப் பாதுகாப்பதில் நமக்கு இயல்பாகவே கடமை உண்டு. அதுபோலவே, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டமும். ஒரே இனம், மொழி, பண்பாடு என்ற அடிப்படையில் - இந்த இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த - நாம் குரல் எழுப்ப வேண்டும். ஈழத் தமிழர்களுக்குத் தாய் மண் தமிழ்நாடு. தொல் தமிழர்களாகிய நமக்கல்லவா - இனப்பற்றும் கடமையுணர்வும் பீறிட்டு எழ வேண்டும்? நாம் இங்கு எந்த அளவிற்கு பெரும்பான்மை சமூக மக்களால் - சாதி வெறிக்கு இரையாகின்றோமா, அதே வகையில்தான் அங்குள்ள நம்மின மக்களும் - சிங்களப் பெரும்பான்மை மக்களின் கொடூரப் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

ஆனால், இதுநாள்வரை தலித் இயக்கங்கள் - இதுபோன்ற பொதுப் பிரச்சினைகளின் பால் ஈர்க்கப்படாதது ஏன் என்ற வினாவுக்கு விடைதேடுவது இன்றியமையாததாகும்'' என்கிறது இதழ். இனிமேலும் யாரும் ஒதுங்கி நிற்காமல், ஒன்றி நிற்க வேண்டுமென்று அறைகூவி அழைக்கிறது இந்த இதழ். தமிழ் வழிக்கல்வியை வரவேற்று முழங்கியுள்ளது.

தமிழறிஞர்கள் 100 பேர் உண்ணாநோன்பு இருந்தது குறித்து வேறுபகுதியில் விளக்கப்பட்டிருப்பதால் இங்கு இதழ்களின் ஆதரவு என்ற ஒரு கோணத்தில் மட்டும் செய்திகள் அலசப்படுகின்றன.

'தினமணி' இதழ் தொடர்ந்து பல ஆசிரியவுரைகளை எழுதி தமிழ் வழிக் கல்விக்கு ஊக்கமளித்து வந்தது. இதோ அதன் ஆசிரியவுரை. (தினமணி 5.5.1999)

'காலத்துக்கேற்ற மொழிக்கொள்கை'

தமிழகப் பள்ளிகளில் தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேராசிரியர் தமிழண்ணல் தலைமையில் 100 தமிழ்ச் சான்றோர்கள் சாகும்வரை பட்டினிப் போராட்டம் மேற்கொண்டதைத் தொடர்ந்து, அனைத்துத் தொடக்கப்பள்ளிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக்குவது குறித்து ஆய்வு செய்ய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மோகன் தலைமையில் ஒரு நிபுணர் குழுவைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

'பெற்றோர்கள், மாணவர்கள் விருப்பத்துக்கு மாறாகப் பயிற்று மொழியைக் கட்டாயப்படுத்த இயலுமா? தமிழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும் வாழ்கின்ற நிலையில் தமிழைப் பயிற்று மொழியாக்கி உத்தரவிட இயலுமா? சிறுபான்மையினர் நடத்தும் கல்விக் கூடங்களில் தமிழை மட்டும் பயிற்று மொழியாக ஏற்றுக் கொள்ள இயலுமா?' என்பன போன்றவை இக்குழுவின் முன் உள்ள கேள்விகள். தமிழ் வழிக் கல்விக்கு முதலிடம் அளிக்கும் அதே நேரத்தில், ஆங்கில மொழியைக் கற்பதன் அவசியத்தைப் புறக்கணித்துவிடாது பார்த்துக் கொள்வதும் முக்கியம். ஏற்கெனவே, அரசுப் பள்ளிகளில் ஹிந்தி மொழியைப் படிப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் செய்து விட்டதைப் போன்ற நிலை உருவாகி விடக்கூடாது. கேரளம், ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் பள்ளிகளில் மாநில மொழி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆங்கிலம் மற்றும் வேறொரு விருப்ப மொழியை (மொழிச் சிறுபான்மையினருக்குத் தாய்மொழி) கற்கவும் ஏற்பாடுகள் உள்ளன. இதுபோன்ற முறையைத் தமிழகத்திலும் செயல்படுத்த முடியுமா என்பதையும் இக்குழு பரிசீலனை செய்யலாம்.

தற்போது தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ள பெரும்பான்மை அரசுப் பள்ளிகளின் தரம் அனைவருக்கும் தெரிந்ததுதான். அப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் நல்ல கல்வி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் தரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த வகையில், பள்ளிக் கல்வியில் நீண்ட அனுபவம் பெற்றவர்களையும் தமிழ்வழிக் கல்வியை வெற்றிகரமாக நடத்தி வரும் தமிழ்

ஆர்வலர்களையும் இக்குழுவில் இடம் பெறச் செய்திருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும். கணினி யுகத்தில் இருக்கும் நாம், தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தும் அதே நேரத்தில், விரும்பிய மொழிகளைப் படிப்பதற்கேற்ற வகையில் மொழிக் கொள்கையை உருவாக்க வேண்டும். இதுகுறித்து தமிழறிஞர்கள், கல்வியாளர்கள், பொதுமக்களின் கருத்தறிந்து அரசு செயல்பட வேண்டும்.''

இதழின் கருத்துப்படி பார்த்தால் தமிழ் - ஆங்கிலம் - சிறுபான்மையர் தாய்மொழி அல்லது ஏதேனும் ஓர் இந்திய மொழி எனும் கோணத்தில் அரசு கொள்கை வகுக்கவேண்டும் என்று கருதுகிறார் ஆசிரியர். இப்போது தொடக்கப் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியை எப்படிக் கொண்டு வருவது என்பது குறித்து மட்டுமே முடிவு செய்யப்பட வேண்டும் எனும் சூழ்நிலை. இந்நிலையில் அண்ணாவின் இருமொழிக் கொள்கையைக் கைவிட்டு மும்மொழிக் கொள்கைக்குச் செல்லலாமா என்று சிந்திப்பது நம் முக்கிய குறிக்கோளை வேறு திசை நோக்கித் திருப்பி விட்டு விடும் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வேளையில் தமிழன்பர் ஒருவர் 'தமிழ்ப்பாவை' இதழில் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அதற்கு ஆசிரியர் கருணையுடன் அருமையான விடை சொல்லியிருக்கிறார். எங்கள் மீது வைத்த நம்பிக்கை இதில் தெரிகிறது. வினா - விடை இதுதான்.

''தமிழ்த்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் நல்ல தமிழ்ப்பற்றாளர்! கலைஞர், பேராசிரியர் இருவரின் தமிழ் நெஞ்சங்களையும் நாம் நன்கு அறிவோம். ஆனால் எதிர்பார்த்தது போல் தமிழ் வழிக்கல்விக்கு விரைவு காட்டவில்லையே! (அறவாழி சென்னை)

யார் சொன்னது தோசைக்கல் சூடேறிவிட்டதா என்று பார்த்த பின்பு தான் மாவைக் கல்லில் ஊற்றுவார்கள். அவசரப் படாதீர்கள் இப்போது அண்ணா பல்கலைக் கழகத்தின் மூலம் பொறியியற் கல்வியை மின்னணுவியல், மின்னியல் - தமிழ் வழிக் கல்வியாக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தமிழ்ப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கச் சட்டம் கொண்டு வர இருக்கிறார்கள். கேரளா, கருநாடகம் போன்று அய்ந்தாம் வகுப்பு வரை தமிழ் கட்டாயமாகக் கற்பிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். எனவே வரும் ஆண்டுகளில் தமிழ் வழிக்கல்வி முழுமை பெறும். பெறவேண்டும். ஆங்கிலம் 2வது மொழியாகக் கற்கலாம். ஆசிரியரின் தாய் மொழி வழிக் கல்வி கட்டுரையைப் படியுங்கள்.''

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி சார்பில் தமிழ் வழிக் கல்வி மாநாடு நடைபெற்றது. வா. அண்ணாமலை தலைமை. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் பேராசிரியர் உரையையும் தினமணி (5.5.99) வெளியிட்டது.

''தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பாடமொழியாக்குவது குறித்து ஆய்வு செய்ய நீதிபதி மோகன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் தொடக்க, நடுநிலை, உயர் நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும்.

பிளஸ் டூ வரை அனைத்துப் பாடங்களும் தமிழ் வழியிலேயே நடத்த உரிய ஆணைப் பிறப்பிக்க வேண்டும். தமிழ் பயின்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

நீதிமன்றங்களில் வாதங்களும் தீர்ப்புகளும் தமிழிலேயே அமைந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அன்பழகன் பேச்சு

நீதிமன்றம் தடை விதிக்காவிட்டால் 2 ஆண்டுகளில் தமிழ் வழிக் கல்வியை அரசு அறிமுகப்படுத்தும் என்று கல்வி அமைச்சர் அன்பழகன் தெரிவித்தார்.

மாநாட்டில் நிறைவுரையாற்றிய அன்பழகன் பேசியதாவது:

தாய் மொழியில் குழந்தைகள் பயில்வதை அனைவரும் வரவேற்கிறார்கள். மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி அவர்களின் தரத்தினை உயர்த்தும் வகையில் இருக்க வேண்டும். இதை ஆசிரியர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

தமிழை வளர்க்க தனக்கும் பங்கு இருக்கிறது என்று நோக்கத்துடன் மாணவர்களும் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டால் தமிழ் வாழும் என்றார் அன்பழகன்'' என்கிறது செய்தி.

சிறுபான்மையினர் உரிமைகள் குறித்துச் சிற்பி எழுதிய கட்டுரையைத் தினமணி (21.5.99) வெளியிட்டுள்ளது. அவரது கருத்துகள் சில.

1. தமிழகத்தில் இயங்கிவரும் சிறுபான்மை மொழி, இனம் அல்லது சமயம் சார்ந்தோரின் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் 50 விழுக்காடு அளவுக்கு அம்மொழி, இனம், சமயம் சார் மாணவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள 1999 ஏப்ரல் 26-ம் நாளிட்ட அரசாணை வகை செய்கிறது. அந்த

50 விழுக்காட்டில் நிறைவு செய்ய முடியாமல் காலியாகும் இடங்களை அக்கல்லூரிகள் ஒற்றைச் சாளர முறையில் மாணவரைச் சேர்க்கும் பொதுமுறைக்கு விட்டுத் தந்துவிட வேண்டுமெனவும் அரசாணை தெளிவுபடுத்துகின்றது.

2. சமூக நீதிக்குக் குந்தகமில்லாத இந்த அரசாணைக்கு எதிராகச் சிறுபான்மை நிறுவனங்கள் அணிவகுத்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தன. தங்கள் புனித உரிமைகளில் அரசு தலையிட்டு விட்டதாகக் கூக்குரல் எழுப்பின. இந்த மனுக்களைத் தள்ளுபடி செய்து அரசாணையின் நியாயத்தை உயர்த்திப் பிடித்து நல்ல தீர்ப்பு வழங்கி நாட்டு மக்களின் நன்றிக்கும் நம்பிக்கைக்கும் சின்னமாக மாறி இருக்கின்றது.

3. இன்றையச் சூழலில் இந்த அருமையான தீர்ப்பு இந்தியச் சமுதாயத்துக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது. குறிப்பாகத் தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப்படுத்த அறிஞர் குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள்ள சூழலில் இந்தத் தீர்ப்பு பொருள் பொதிந்ததாக இருப்பதைச் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

4. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியாக - அனைத்துப் பள்ளிகளிலும் இடம்பெற வேண்டும் என்ற பொதுக் கருத்துக்கு எதிராகச் 'சட்டச் சிக்கல்' என்ற பூச்சாண்டி கட்டவிழ்த்து விடப்படுகிறது. இந்தப் பூச்சாண்டியின் பொய் மாய வேடத்தைக் கலைத்துக் குப்பைத் தொட்டியில் குப்புறத் தூக்கி எறிகிறது இந்தத் தீர்ப்பு.

5. '29, 30 ஆகிய விதிகள் கலை, கல்விக்கான உரிமைகளைப் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளன.

"29 (1) - இந்திய எல்லைக்குள் வாழ்கின்ற தமக்கெனத் தனி மொழி, வரி வடிவம் அல்லது பண்பாடு உள்ள குடிமக்களுக்கு அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கான உரிமை இருக்கிறது.

(2) சமயம், சாதி, இனம், மொழி அல்லது இன்ன பிற வேறுபாட்டின் காரணமாக எந்தக் குடிமகனும் அரசால், அல்லது அரசு உதவித்தொகையால் நடத்தப்படும் கல்விச் சாலைகளில் அனுமதி அளிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கக்கூடாது.

30 (1) மதச் சார்பு அல்லது மொழியின் காரணமாகச் சிறுபான்மையினர் என்று கருதப்பட்டுள்ள வகுப்பினருக்கு, தமக்கெனக் கல்விச் சாலைகளை நிறுவுவதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் உரிமை இருக்கிறது.

(2) மொழி அல்லது மதத்தின் காரணமாகச் சிறுபான்மையினராக உள்ளவர்களின் நிர்வாகத்தின் கீழ் ஒரு கல்விச்சாலை இருக்கிறது என்று காரணம் காட்டி அதற்கு உதவித்தொகை அளிப்பதில் எத்தகைய பாகுபாட்டையும் அரசு காட்டக்கூடாது''.

(இந்திய அரசியல் சாசனம் - வழக்கறிஞர் அ.ச. நடராஜன் மொழி பெயர்ப்பு - 5-ம் பதிப்பு 1997)

6. ஒன்று முதல் ஐந்து வரை தாய்மொழியில் - மாநில மொழியில் கற்றுத்தர வேண்டும் என்று சட்டம் இயற்றுகிற அரசின் உரிமையை இந்திய அரசியலமைப்புச் சட்டம் எவ்வகையிலும் தடை செய்யவில்லை. தமிழே ஆட்சி மொழியாக இருக்கிற இந்த மாநிலத்தில் சிறுபான்மை மொழியினருக்கு இருக்கும் ஒரே உரிமை தங்கள் தாய் மொழியில் கற்றுக் கொள்ளுவது மட்டும் தான். அவர்கள் தாய்மொழியில் கற்க மாணவர்கள் விரும்பினால் அந்த மொழியில் கற்பித்துக் கொள்ளட்டும். ஆனால் ஆங்கிலத்தில் - இந்த நாட்டில் தொண்ணூற்றி ஒன்பது விழுக்காட்டினருக்குத் தாய்மொழி அல்லாத ஆங்கிலத்தில் கற்றுக் கொடுப்பதைச் 'சிறுபான்மையினர் உரிமை' என்று சொல்ல நம் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் அணுவளவும் இல்லை. அப்படிக் கோருவது அப்பட்டமான அநீதியாகும்.

மாநில மொழியைக் கல்வி மொழியாக்குவதில் சட்டச் சிக்கல் இருப்பதாகப் பாவனை செய்வதும் யோசனை செய்வதும் மகாத்மாவை மறுமுறை சுடுவதற்குச் சமமாகும்.

7. சமயக் கல்வி, சமயம் சார் மொழி அல்லது தாய்மொழிக் கல்வி என்கிற உரிமையை மட்டுமே சிறுபான்மையினர் கோர முடியும். ஒரு மாநிலத்தின் மொழிக் கொள்கை மேற்குறித்த உண்மையை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ள முடியும். இதனால் அரசியலமைப்புச் சட்டம் மிகமிக விழிப்போடு 'தமக்கெனத் தனிமொழி, வரிவடிவம், பண்பாடு', பேணிப் பாதுகாக்கும் உரிமை உண்டு என்றும் குறிப்பிடுகிறது. இங்கே 'தமக்கென' என்ற சொல் சிறுபான்மையினரின் மொழி, கலை, பண்பாடு காக்கும் உரிமையைத் தான் குறிக்கிறதே தவிர ஆங்கில மொழியில் கற்பிக்கும் உரிமையை அல்ல.

8. இந்தப் பேருண்மையை மொழி, மத, இனச் சிறுபான்மையினர் மட்டுமல்ல, கல்வி வியாபாரத்துக்குக் கடை விரித்திருக்கும் பெரும்பான்மையினரும் உணர்ந்து கொள்வது காலத்தின் கட்டாயம்; வரலாற்றின் விதி.

அதே இந்தியன் எக்சுபிரசு இதழில் (21.5.99) ஒரு கட்டுரைக் குறிப்பு. எவ்வளவு கவலைப்படுகிறார் பாருங்கள்.

"He also wondered if such imposition of a uni-lingual formula is Constitutionally valid.

It will only affect uniform standards of education, a subject under the concurrent list, according to him" 'concurrent' பட்டியலில் இருப்பதால், இந்தியாவின் எல்லா மாநிலங்களும் (uniform standards of education) ஒரே மாதிரியான கல்வித்திட்டத்தைத்தான் பயன்படுத்துகிறார்களா! இல்லையே! இது மாதிரி விவரம் கெட்டவர்களெல்லாம் எழுதும் போதுதான் நாங்களும் கொஞ்சம் கடுமையாகவே மறுத்துச் சொல்ல வேண்டியுள்ளது.

தமிழ்மக்கள் - அதிலும் ஆர்வமும், விவரமும் உள்ள தமிழன்பர்களின் கருத்தோட்டம் எப்படியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். 'அன்புள்ள ஆசிரியருக்கு' பகுதியில் (தினமணி 28.5.99) வந்துள்ள சில செய்திகள் இவை.

1. தமிழில் உயர் கல்வி

அவினாசிலிங்கம், காமராசர் போன்றோர் காலங்களில் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்வழி இருந்த காரணத்தால், கல்வி பெறாத முதல் தலைமுறையைச் சேர்ந்த ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மாணவர்களால் படித்து மேனிலைக்கு வரமுடிந்தது. அத்தகையவர்கள் இன்றும் ஆங்கிலம். தமிழ் இரண்டிலும் சிறந்து விளங்குகின்றர்.

தற்போது உயர்கல்வி தமிழில் வருமானால் ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களது பிள்ளைகள் உயர்கல்வியான மருத்துவம், பொறியியல், வேளாண்மை போன்றவற்றைத் தாய்மொழியில் சிறந்து பெற்று விளங்குவர் என்பதை உறுதியாகக் கூறலாம். அத்தகையவர்க்குத் தமிழ்நாட்டில் வேலை உறுதி என்பது உறுதி செய்யப்பட வேண்டும். - பூவை. செந்தமிழன், சென்னை- 56.

2. கர்நாடகத் தமிழ்

கர்நாடகத்தில் பெல்காம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் 40 ஆண்டுகளாக 4 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மதுரை மாவட்டம் உசிலம்பட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பிழைப்புக்காக அங்கு சென்ற இவர்களுக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது. அங்கேயே பிறப்புச் சான்றிதழ் பெற்ற பலர் அரசுப் பணியிலும் உள்ளனர். அனைத்து நிலைகளிலும் கன்னடம் படித்துத்

தேறியுள்ளனர். இங்கு தமிழகத்தில் நிலை என்ன? மொழிச் சிறுபான்மையோர் என்ற பூச்சாண்டி காட்டித் தமிழ் கற்க மறுக்கின்றனர். பிற மாநிலங்களில் தமிழ்க்கல்வி இல்லாதபோது இங்கு மட்டும் பிற மொழிக் கல்வி தேவையில்லை. - க.மா. வீரணன். மணல்மேடுகுடில்.

3. தமிழைக் கற்க இயலாத சூழல்

ஆங்கில வழிக் கல்வி கற்றால் உடனே வேலை கிடைத்து, எதிர்காலம் சிறப்பானதாக அமையும் என்ற மாயை நம்மில் பலரிடமும் பரவியுள்ளது. தற்போது இந்திய ஆட்சிப்பணித் (ஐ.ஏ.எஸ்.) தேர்வையே தமிழ்மொழியில் எழுதித் தேர்ச்சி பெற முடியும். நாம் தமிழ் மொழியை உணவாகவும், ஆங்கில மொழியை ஊறுகாயாகவும் பயன்படுத்த முடியும். அவ்வாறு பயன்படுத்தித் தாய்மொழியான தமிழ் வழியிலேயே கற்க நாம் முன் வர வேண்டும். அதற்குத் தேவையான அனைத்தையும் அரசு செய்ய வேண்டும். ஆங்கில வழிக் கல்விப் பள்ளிகள் பெருகி, தமிழ் வழிக் கல்விப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தால் ஒரு காலத்தில் தமிழ்மொழியை, தமிழனே, தமிழகத்தில் கற்க இயலாத சூழ்நிலை ஏற்படலாம். இதைத் தடு:கதும் பொறுப்பு நமக்கு உண்டு. பி. பிரகாஷ், மதுரை-16.

4. நடைமுறைக் கல்வி

பெரும்பாலான அரசுக் கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, கிராமப் புறங்களில் ஆங்கில வழி, தமிழ் வழி ஆகிய இரண்டிலும் கல்வி பயிலும் மாணவர்கள், தங்கள் கல்வியறிவைத் தமிழ் வழியிலேயே பெறுகின்றனர். ஆங்கில வழியில் பயிலும் மாணவர்கள், தங்கள் தேர்வுகளைத் தமிழ் மொழியிலேயே எழுதலாம் எனப் பல்கலைக் கழகங்கள் உரிமை அளித்துள்ளதால், அவர்கள் தமிழிலேயே தேர்வுகளை எழுதுகின்றனர்.

தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது. ஆனால், 1998-99 கல்வியாண்டில், கிராமப் புறங்களிலுள்ள அரசுக் கல்லூரிகளில், தமிழ் மொழி தெரியாத ஆசிரியர்கள் பணியில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் தமிழ் மொழிக் கல்வி பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. இத்தகைய தவறுகள் இனி நேரா வண்ணம் அரசு கவனம் செலுத்த வேண்டும். - ராஜலக்ஷ்மி, வழுதூர்.

5. விழிப்புணர்வு இயக்கம்

எழுத்திலும் பேச்சிலும் "தமிழே என் மூச்சு" என்று முழங்கியவர்கள், ஆயிரக்கணக்கான ஆங்கில வழிக் கல்விக் கூடங்களைத் திறக்க அனுமதியும்

அங்கீகாரமும் தந்தனர். அத்துடன் தம் வாரிசுகளை அப்பள்ளியிலேயே பயிலச் செய்தனர். ஆங்கில வழிப் பள்ளிகளில் ஆங்கிலமே முதல்மொழி, பயிற்றுமொழி, இந்தியும் கட்டாயம் உண்டு. தமிழ்தான் இல்லை. அரசுப் பள்ளிகளில் இனி தமிழ் வழிக் கல்வி தொடரும் அதே நேரத்தில், ஆங்கிலக் கல்வியும் செம்மையாகக் கற்பிக்க வேண்டும். தாய்மொழி வழிக் கல்வியில் இல்லாத சிறப்புகளே இல்லை என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு இயக்கத்தை அரசு நடத்த வேண்டும். - மு. முரளீதரன், சயனாவரம்.

## நீதியரசர் மோகன் குழு விசாரணை

நீதியரசர் மோகன் குழு பல தரப்பினரிடமிருந்தும் விசாரணை நடத்தி அவரவர் கருத்துகளைக் கேட்டறிந்தது. அனால் சில பேர் திட்டமிட்டே மிகைப்படுத்திய செய்திகளை வெளியிட்டு மகிழ்ந்தனர். இந்தியன் எக்சுபிரசு (25.5.99) தன் செய்தியாளர் மூலமாக வெளியிட்ட செய்தி இது:

"The reference was to the effect that the State Government showed a bias towards Tamil in the constitution of the panel itself. Yet another occasion, a DMK functionary who spoke in favour of English medium was jeered at by those who said, "If you want English, go to England or America. Why do you wear a veshti, you can wear pants instead".

ஒரே நாளில் 3.15 மணி நேரத்தில் 250 பேர் வரை விசாரிக்கப் பட்டனர். அதையொட்டித்தான் இதழ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. தமிழ்ச் சான்றோர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் எனும் முறையில் தமிழண்ணலும், நேர்மையும் அறிவாழமும் மிக்க தமிழறிஞர் எனும் முறையில் புலவர் இரா. இளங்குமரனும் இக்குழுவில் இடம் பெற்றனர். இதில் என்ன தவறு இருக்க முடியும்? இவர்களுக்கு மேல் இரு துணைவேந்தர்கள் - அவர்களுக்குமேல் நீதியரசர் மோகன். எனவே இதில் 'bias' என்று சொல்வதற்கு இடமேதுமில்லை.

'ஆசிரியர்க்கு' பகுதியில் தினமணியில் வந்துள்ள (14.6.99) மற்றோர் மடல் குறிப்பிடத்தக்கது.

மதுரை, இராம. விசுவநாதன் எழுதுகிறார்.

3. தமிழர் ஏற்கவேண்டிய உறுதி

ஐந்தாம் வகுப்பு முடிய தாய்மொழி வழிக் கல்வி புகட்டிட, சான்றோர் பேரவையின் உண்ணாநோன்பு தொடர்பாக, தமிழக அரசு அறிஞர் குழு

அமைத்து அறிக்கை பெற இருக்கின்றது. தமிழகத்தில் இந்தக் கல்வி ஆண்டு முதல் தாய்மொழி வழி இளம் பிஞ்சகள் கல்வி கற்று நெஞ்சுக்கு நீதி பெறுவார்கள். இது உறுதி.

இதற்கு முன்னோடியாகத் தமிழ் அறிஞர் வ.சுப. மாணிக்கனார் தமிழ்வழிக் கல்வியியக்கம் கண்டு, ஊர்வலம் பொதுக்கூட்டங்கள் நடத்தி வந்தார். அதற்கு இப்போது பயன்கிடைக்கவிருக்கிறது.

அரசாட்சி ஆங்கிலேயர் கையிலிருந்து இந்தியர் கைக்கு மாறி 50 ஆண்டுகளுக்கு மேலாகியும் கல்வியாட்சி இந்திய மொழிகளுக்கு மாற்றப்பட்வில்லை. நம் மொழிகளை அடிமைப்படுத்தி வைத்திருப்பவர்கள் நம்மவர்களே. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் தீண்டா மொழிகளாக நம் மொழிகளை 'உயர் மேதைகள்' ஒதுக்கி வைத்திருக்கின்றனர். அரிஜன மக்கட்குத் தெய்வக் கோயில் திறந்துவிடப்பட்டதுபோல, நம் மொழிகட்குப் பள்ளிக் கோயில்கள் என்று திறக்கப்படுமோ?

ஆங்கிலத்தையே தடவித் தழுவி என்ன உலக மதிப்புப் பெற்றுவிட்டோம்? அடிமைக் காலத்தில் ஒரு முறை அறிவியலுக்கு நோபல் பரிசு நமக்குக் கிடைத்தது. 50 ஆண்டு உரிமைக் காலத்து அறிவியலுக்கு இப்பரிசு கிடைத்ததுண்டா? பிற மொழியால் மூல அறிவும், மூலச் சிந்தனையும் பிறக்குமா?

ஆங்கிலவழிப் பள்ளிகளும் ஆங்கில மோகமும், நம் குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்தில் நாட்டுப் பற்றைக் குறைக்கின்றன. வெளிநாடுதான் சிறந்தது, அங்குச் சென்று பெரும் பொருள் ஈட்டலாம் என்ற ஆசைகளை விதைக்கின்றன. வெளிநாட்டு ஆசையோடுதான் பல பெற்றோர்கள் தம் குழந்தைகளை ஆங்கிலத்தில் படிக்க வைக்கின்றனர். மொழியூற்றுக் கண்கள் பள்ளிகளில் அடைக்கப்பட்டால், தேசவுணர்வும் பாழ்பட்டுப் போகுமன்றோ?

போபால், செர்நோபில் நச்சுவளி போல், ஆங்கில மோகக் காற்று நாடெங்கும் வீசுகின்றது. ஆங்கில மோகமும் கூலி மனப்பான்மையும் மிக்கவர்கள் இக்காலத் தமிழர்கள். மக்களின் ஆங்கில மோகத்தை வணிகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வீதியெல்லாம் ஆங்கிலவழிப் பள்ளிக்கடைகள் காளான் போல 'மே'மாதங்களில் தோன்றுகின்றன. தங்கள் பள்ளி உயர்தரம் என்று காட்டுவதற்காக, சிறு வகுப்புக்கே 20 நூல்கள், 20 குறிப்பேடுகள், காற்றுப்புகாத காலணி, கழுத்தணி, சீருடைகள் விதிக்கின்றனர். பள்ளிப் பொதிக் கன்றுகளாகக் குழந்தை எலும்புகள் கூனாகின்றன.

ஆங்கிலம் படிக்கக்கூடாது என்பதோ, பிற மொழிகள் படிக்கக் கூடாது என்பதோ தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் கருத்தில்லை. எத்தனை அயல் மொழிகளையும் துணை மொழிகளாகக் கற்கலாம், கற்கவும் வேண்டும். எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? தமிழுக்குக் கல்வித்துறையில் முதன்மை வேண்டும்; மழலை வகுப்பு முதல் கல்லூரி, பல்கலைக்கழகம் வரை எல்லாத் துறையும் தமிழ் வழியாகக் கற்பிக்கப்பட வேண்டும். தமிழுக்கு முன்னிடம், ஏனை மொழிகட்குப் பின்னிடம்.

நாட்டுப் பற்று, புரிந்த மொழித்திறம், சிந்தனையூற்று, கல்வி மிகுதி, எளிய செலவு, பண்பாடு, குடும்ப நல்லுறவு, தாழ்வுமனப்பான்மையில்லாமை, பிற மொழி நாட்டம், நல்ல மனநிலை இவையெல்லாம் தமிழ்வழிக் கல்வியால் இயல்பாக வளரும். வளர்ந்த நாடுகள் தம்மொழி வழியாகவே எல்லாத் துறைகளையும் கற்றுக் கொடுக்கின்றன. சென்றது பற்றி இரங்காது, இனியேனும் நாமும், நம் குழந்தைகளும் தமிழ்வழிக் கல்வி பெற உறுதி கொள்வோம். - இராம. விசுவநாதன், மதுரை-20.

நல்ல தெளிவு தரும் மடல் இது. பெற்றோர் இதனை உணர வேண்டும்

தினமணியில் வந்த செய்தியைத் ‘தமிழ் மாருதம்’ இதழ் (சூலை99) வெளியிட்டுச் சிறப்புச் சேர்க்கிறது.

மழலையர் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி!

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் இரண்டு பாடங்களைத் தமிழில்தான் கற்பிக்கவேண்டும் என்று தமிழக அரசு வெளியிட்ட ஆணை, ஏற்றுக் கொள்ளக் கூடியதே எனச் சென்னை உயர்நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது!

ஆனால், தமிழ் தவிர மற்ற மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மாணவர்களுக்கு இந்த ஆணை பொருந்தாது என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது!

தொடக்கப்பள்ளிகளில் தமிழைப் பயிற்றுமொழியாக அறிவிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது. அரசியல் சட்டத்தின் 350 ஆவது பிரிவு, இதற்கான அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு வழங்கியுள்ளது.

இதுதவிர, 1892ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ள கல்வித்துறையின் விதிமுறைகளும், மாநில மொழியில்தான் பயிற்றுமொழி இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. பயிற்றுமொழி குறித்துத் தமிழக அரசு எடுத்துள்ள கொள்கை முடிவு தவறு என்று கூறமுடியாது.

ஏனெனில், மாணவர்களின் அறிவுத் திறமையைத் தாய்மொழி மூலமாகத்தான் வெளிக்கொண்டுவர முடியும். குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் பயிற்றுமொழி முக்கியப் பங்காற்றுகிறது. எனவேதான் தாய்மொழியே பயிற்றுமொழியாக இருக்கவேண்டும் என்று கல்வித் துறையின் விதிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பல்வேறு உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்திலும் இதுகுறித்துத் தீர்ப்பு வெளியாகியுள்ளது. இந்நிலையில் தமிழக அரசின் உத்தரவு, சட்ட விரோதம் என்று கூறமுடியாது. நீதிபதி பெருமைமிகு பி. சண்முகம் அளித்த தீர்ப்பு இது!

நந்தன் (சூன் 1999) இதழில் இரா. இளவரசு சில குறிப்புகளை - ஐயம் கலந்த குறிப்புகளைத் தருகிறார்:

தாகூர் தமிழ்நாட்டிற்கு வந்தபோது நம் ஆட்கள் ஆங்கிலத்தில் வரவேற்றார்கள். பின்னர் தாகூர் 'தமிழ் மொழி தொன்மையான சிறப்பான மொழி என்றார்கள். அதைவிட்டு ஏன் ஆங்கிலத்தில் வரவேற்றீர்கள் தமிழிலேயே கூறுங்கள்' என்றாராம். நாம் அப்போதிலிருந்தே இப்படித்தான் இருந்திருக்கிறோம்.

- என்று மேலும் சில தகவல்களைக் கூறிய பேராசிரியர் இளவரசு தீர்ப்பு குறித்து தம் கருத்தைக் கூறினார்.

இந்தத் தீர்ப்பு வரவேற்கத்தக்கப் பல கூறுகளைக் கொண்டுள்ளது. தமிழ் அமைப்புகள் மழலையர் பள்ளிகள்; தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்று வலியுறுத்திய போதெல்லாம், தமிழக அரசு, 'ஆங்கில வழிப் பள்ளியினர் நீதி மன்றத்திற்குச் செல்வார்கள், தடை வாங்கி விடுவார்கள்' என்று பூச்சாண்டி காட்டியும் அரசியலமைப்புச் சட்டத்தில் இதற்கு இடமில்லை என்று பொய் கூறியும் வந்தது.

இந்தத் தீர்ப்பு தெளிவாக மாநில அரசு மாநில மொழியில் தொடக்கக் கல்வியைத் தருவதற்கான சட்டமியற்ற அரசியலமைப்புச்சட்டத்தில் இடமுள்ளது என்று குறிப்பிட்டு, அதற்கான விதிகளையும் (பிரிவு 162 - 350 ஏ) சுட்டிக்காட்டியுள்ளது. அதற்கு மேலும், 1892 முதல் இருந்துவரும் கல்வித் துறையின் விதிமுறைகளும் தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றுச் சட்டமும் பல்வேறு உயர் நீதிமன்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளும் இத்தீர்ப்பில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இனிமேலும் தமிழக அரசு தயக்கம் காட்டாமல் தொடக்கக் கல்வியை முழுமையாகத் தமிழில் தருவதற்கு இத்தீர்ப்பு துணை செய்யும்.

பிற மொழி மாணவர்களுக்குப் பயிற்றுமொழி மாநில மொழியாய் இருக்கத் தேவையில்லை என்று அளிக்கப்பட்டுள்ள இந்த விதி விலக்கு,

அவர்கள் தங்கள் தாய் மொழியில் கல்வி பெறும் உரிமையை வழங்குகிறதா? ஆங்கில வழிக் கல்வி பெறும் நடைமுறையைப் பாதுகாக்கிறதா, மாநில மொழியைத் தவிர வேறெந்த மொழியிலும் கல்வி பயிலலாம் என்று சலுகை காட்டுகிறதா என்பதும் தெளிவாகவில்லை.

மொழிச் சிறுபான்மையினர் தங்கள் தாய்மொழி வழிக் கல்வி பெற, இப்போதும் வாய்ப்புகள் உள்ளன. சிறுபான்மையோர் பெயரில் நடத்தப்படும் கல்வியகங்கள் பலவற்றில் சிறுபான்மைச் சமூகத்தினர் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையிலும் மற்றவர்கள் அதிக எண்ணிக்கையிலும் பயின்று வருகின்றனர். மொழிச் சிறுபான்மையோர்க்கு அளிக்கப்படும் இச்சலுகையைப் பயன்படுத்தி, ஆங்கில வழிக் கல்வியை மறைமுகமாகநிலை நிறுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுவிடக் கூடாது. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் என்னும் பெயரில் நடைபெற்று வரும் பள்ளிகளில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மிகக் குறைவாகப் பயில்வதும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அதிகமாகப் பயில்வதும் நடைமுறை உண்மையாகும். அங்கு பயிலும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கில வழியிலேயே கல்வி பெறுவதற்கு தீர்ப்பில் காணும் விதிவிலக்கு பயன்பட்டுவிடக் கூடாது.

வழக்கு தொடுத்த ஆங்கில வழிப் பள்ளியினர், தங்களைப் போலவே ஆங்கில வழியில் பயிற்றுவிக்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை அரசு இந்த விதிமுறைக்குள் கொண்டு வரவில்லை; எனவே அரசின் நடைமுறை ஒருதலைச் சார்பானது என்று முறையிட்டுள்ளனர்.

அரசு தரப்பில், அந்தப் பள்ளிகளிலும் படிப்படியாக இந்த ஆணை நடைமுறைப் படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய முறையீடுகளுக்கு இடமில்லாத வகையில் மெட்ரிகுலேஷன் உள்ளிட்ட அனைத்துவகைப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்பு வரை உடனடியாக தமிழைப் பயிற்று மொழியாக்கும் ஆணையை அரசு வெளியிட வேண்டும். மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழில் கற்பிக்க வேண்டும் என்னும் ஆணையை மாற்றியமைத்து அனைத்துப் பாடங்களுமே தமிழ் வழியில் கற்பிக்கப்படவேண்டும் என்னும் புதிய ஆணையை வெளியிட வேண்டும். ஆணை வெளியிடப் பட்டால் மட்டும் போதாது; அது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை உன்னிப்பாகக் கண்காணித்து வர வேண்டும்.

சிறுபான்மையோர் உரிமை என்று பேசிப் பேசியே பெரும்பான்மையோர் மொழியும் நலனும் புறக்கணிக்கப்படும் போக்கிற்கு

முற்றுப்புள்ளி வைக்க இந்தத் தீர்ப்பைத் தமிழக அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

என்று பேராசிரியர் இளவரசு கூறினார். அரசு இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுமா?

இளவரசு தந்த செய்திகள் நமது கவனத்துக்கு உரியவை. அரசு அந்த நிலையில் தெளிவாக நடைபோட்டதா? என்பதுதான் கேள்வி. அதற்கு விடைதானே இந்த நூல்.

5.6.99 'தமிழன் எக்ஸ்பிரஸ்' இதழில் ஒரு வினா விடை :

தமிழைப் பயிற்சி மொழியாக்கிய பெருமை கலைஞருக்குத்தானே?

அறிவொளி, நாகை.

பாராட்டைப் பத்திரமாக வைத்திருங்கள்.

''தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், எல்லாக் கல்லூரிகளிலும் பாட மொழியாகவும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது.''

.... முப்பது வருடங்களுக்கு முன் இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானம் இப்படிச் சொல்கிறது.

காரியம் கைகூடிய பிறகு, பாராட்டைப் பயன்படுத்தலாம்.

ஏற்கெனவே தமிழ்வழிக் கல்விக்கு எதிராகக் கருத்துகளைத் தெரிவித்திருந்த அதே இராசாராம் மெஹ்ரோத்ரா தொடக்கநிலையிலேயே ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கி எப்படி நாம் 'காலனி அடிமைகள்' ஆகிவருகிறோம் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

''There is now a strong tendency among a segment of our population to teach English to a child even before he can read or write his own language."

"These instances obviously reflect the colonialism of mind which is considered to be the worst type of bondage."

"This can best be illustrated by a scrutiny of the nursery rhymes being taught to our tiny tots. Is it not funny that our children are made to

sing of total strangers like Jack and Jill or Humpty- Dumpty whom they never see around nor are likely to meet in the years to come? Why not make them sing of Chunnu - Munnu? Another nursery rhyme tells them about a pussy can who goes to london to visit the Queen, even before they have heard of Chennai or Chandigarh. perhaps the most popular nursery rhyme with parents and teachers is "Baa, baa, black sheep." It has been objected that the Indian sheep does not say baa, but mhehehehe. By teaching these nursery rhymes, we are imposing an alien ethos on our young ones and obstructing the natural growth of their personality"

இவை இங்கே கருதிப் பார்க்கத்தக்கன என்பதற்காகவே இவற்றை எடுத்துக்காட்டினேன்.

இரண்டு பாடங்களைத் தமிழில் கற்பிக்க வேண்டும் எனும் அரசின் ஆணை செல்லும் என்பது தீர்ப்பு. ''தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக அறிவிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது'' என்கிறது நீதிமன்றத் தீர்ப்பு.

இப்படித் தீர்ப்பு வழங்கியவர் நீதியரசர் பி. சண்முகம் ஆவார். இவற்றை நண்பர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் ஓரிடத்தில் இது குறித்து விரிவாக ஆராயப்போகிறோம்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் (31.7.99) ஆசிரியர்க்கு வரைந்த மடலில் ஆல்பர்ட் தேவசகாயம் நல்ல கருத்தினைக் கூறியுள்ளார் அதனை அப்படியே தருகின்றேன்.

1. Tamil medium no handicap

Sir, As expected and quite sensibly the committee headed by former Supreme Court judge S Mohan has recommended Tamil or mother - tongue as the compulsory medium of education till Class V and that English could be taught as a language from the third standard (NIE, July 16).

Spelling out other suggestions for the progressive use of Tamil, the committee has also stipulated that while phasing out English medium sections from sixth standard in government schools, the quality of English language teaching in schools should be improved by appointing well-qualified teachers and changing the syllabus.

The present-day leaders in every field of intellectual activity including education and research are mostly the ones who did their schooling in Tamil medium and this factor has not handicapped them in any way in achieving what they have later done in their chosen fields.

That the mother tongue is the convenient and ideal medium of instruction can never be gainsaid.

In the context of the two-language formula pre-vailing in Tamil Nadu, it is only lamentable that the use of Tamil is not in vogue among the educated as it was two or three decades ago, despite our Tamil ethusiasts. We have experimented with all kinds of reforms and restructuring in English teaching in schools and colleges. With progressive withdrawal of English medium it is necessary to upgrade the English syllabus and the quality of teaching English as a language.

தமிழ்வழிக் கல்விக் கழகத்தின் 'செய்தி மடல்' எனும் இதழில் (நவம்பர் 1999) சில கருத்துரைகள் வரையப்பட்டுள்ளன.

அவை இவைதாம்:

முன் எப்போதும் இல்லாத அளவில் தமிழகத்தில் இன்று தமிழ்வழிக்கல்வி தொடர்பான விவாதம் சூடுபிடித்திருக்கிறது. தமிழக அரசின் ஆணை நமக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தாலும் ஆணையில் சில குளறுபடிகள் இருப்பதையும் மறுப்பதற்கில்லை.

அரசாணையை எதிர்த்து ஆங்கில வழிப்பள்ளியினர் போராட்டத்தில் குதித்துள்ளது மட்டுமன்றி வழக்கு மன்றங்களை நோக்கியும் படையெடுத்துள்ளனர். அரசாணை சட்டவடிவமாகாத வரை நல்லது, வழக்கு மன்றங்களில் பார்த்துக் கொள்ளலாம் என்று ஆங்கில வழிப் பள்ளியினர் நம்பியுள்ளது போல் தோன்றுகிறது. அதனால்தான் பல கோணங்களிலிருந்தும் வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர். அது மட்டுமன்றி பள்ளியில் படிக்கும் மாணவர்களிடமும் அவர்களது பெற்றோர்களிடமும் அரசாணையை எதிர்த்து கையெழுத்துக்கள் வாங்கியும் அனுப்பிக் கொண்டுள்ளனர்.

நாமோ, அரசாணையை நம்பியும் அரசாணை வழக்கு மன்றங்களில் வீழ்த்தப்பட்டால் மீண்டும் போராட்டத்தில் குதிக்கலாம் என்றும் எண்ணிக்கொண்டு இருக்கிறோம்.

ஆங்கில வழிக்கல்விக்கான போராட்டத்தில் 'தமிழ்ப்' பள்ளிகளையும் இணைந்திருப்பதுபோல் போலிமையாக 'தமிழ் மற்றும் ஆங்கில வழிப்பள்ளிகளின் கூட்டமைப்பு' என்று பதிவு செய்து கொள்வதும், தாய்மொழி வழியில் படிப்பது எவ்வளவு சரியானது, பிறமொழி வழியில் படிப்பது எவ்வளவு கேடானது என்பதை அறியாத பெற்றோர்களை ஏமாற்றி, அரவணைத்து ஆங்கில வழிப்பள்ளி நிர்வாகத்தினர் தங்களுக்கு ஆதரவாக மாற்றிக் கொள்ளும் சூழ்ச்சி ஆகியவற்றை நாம் சரியாகப் புரிந்துகொண்டு அதற்கேற்ப நம்முடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டியது உடனடித் தேவையாக இருக்கிறது.

அதன்படி நாம் செய்ய வேண்டிய உடனடி பணிகள்:

தமிழ் வழிப்பள்ளிகள் என்றால் நம்மைச் சார்ந்த பள்ளிகள் என்று மட்டும் எண்ணியிராமல், அரசுப் பள்ளிகளையும், அரசுப்பள்ளி மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் அணுகி தமிழ் வழிக் கல்வியின் சிறப்புகளை விளக்கி, ஆங்கிலவழிப் பள்ளிகளின் சூழ்ச்சியினை அம்பலப்படுத்தி தமிழ் வழிக்கல்விக்கு ஆதரவாக அவர்களை இணைப்பது.

இப்பணிகளை நாம் மட்டும் தனித்து நின்று செய்யாமல் ஆங்காங்கே இருக்கும் தமிழ் மன்றங்கள், இயக்கங்கள், கழகங்கள் ஆகியவற்றோடு இணைந்து நின்று வெகு மக்களிடம் கருத்துக்களை எடுத்துச் செல்வதற்கு வழிவகை செய்வது.

தமிழ்வழிக் கல்விக்கான போராட்டங்கள், இயக்கங்கள், கழகங்கள் இடையே மட்டும் நின்றுவிடாமல் வெகுமக்கள் போராட்டங்களாக மாற்றம் பெறுவதற்கும், தமிழகத்தில் 'இந்தி எதிர்ப்புப் புரட்சிபோல்' தமிழ் வழிக்கல்விக்கான போராட்டங்களும் எழுச்சிகொள்ள நாம் அனைத்து வழிகளிலும் இயங்க வேண்டும். இதுவே, நமது உடனடி வேலை என்பதை உணர்வோம்.''

தெளிவு இருக்கிறது எழுத்தில். ஆனால் அமைப்புகள் எல்லாம் சேர்ந்து போராடினவா?

இந்த நேரத்தில் 'தினமணி' இதழ் (30.11.99) ஓர் ஆசிரியவுரை வரைந்தது. 'தமிழ்வழிக் கல்வி' எனும் தலைப்பிலான அவரது கருத்து:

“தமிழ்நாட்டில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பள்ளிக் கல்வி பெரும்பாலும் தாய்மொழி வாயிலாகவே அளிக்கப்பட்ட வந்தது. தாய்மொழி வழிக் கல்வியைக் கல்லூரிகளுக்கும் விரிவு படுத்தவேண்டும் என்ற கோரிக்கை

எழுந்து வந்த சூழலில், பள்ளிகளில் தாய்மொழி வழிக் கல்வி என்ற நிலையில் சரிவு ஏற்படத் தொடங்கியது. ஆங்கில வழிக் கல்வியை வழங்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் எண்ணிக்கை பெருமளவில் பெருகியது. பெற்றோர்களிடம் உள்ள ஆங்கில மோகம் இதற்கு ஒரு காரணம் என்றாலும், தமிழ்வழிக் கல்வியை அளித்து வந்த பல அரசுப் பள்ளிகளில் கல்வித் தரம் குறைந்ததும் மற்றொரு முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது.

இந்நிலையில், மூன்றாண்டுகளுக்குள் அனைத்து மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசுப் பாட முறையைப் பின்பற்றும் பள்ளிகளில் 1முதல் 5 வகுப்புகளில் தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று தமிழக அரசு இப்போது ஆணை பிறப்பித்துள்ளது. இப்பள்ளிகளில் தமிழ் அல்லது தாய்மொழியே முதல் மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என அந்த ஆணையில் கூறப்பட்டுள்ளது. தமிழ்ச் சான்றோர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட நீதிபதி மோகன் குழுவின் பரிந்துரையை ஏற்று இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் தாய்மொழி வழிக்கல்வி ஏற்கெனவே இருந்து வருகிறது. ஆனால், தமிழ்நாட்டில் தமிழைப் பயிற்று மொழியாக வைப்பதற்கு நர்சரி, பிரைமரி, மெட்ரிக்குலேஷன், மேல்நிலைப் பள்ளி நிர்வாகிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் முன்னேற்றத்தைத் தேடிக் கொள்வதற்கு ஆங்கிலக் கல்வி தேவை; அதற்குத் தற்போதுள்ள முறையே தொடர வேண்டும் என்று அது வலியுறுத்தியுள்ளது. ஆனால் ஆங்கிலம் படிப்பதை வேண்டாம் என்று அரசு ஆணை கூறவில்லை. தமிழ் வழியில் படித்து, பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்துள்ள, பதித்து வரும் அறிஞர்கள் பலர் உள்ளனர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்குத் தாய்மொழியில் நல்ல அடித்தளம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது உலகம் முழுவதும் இன்றளவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை, தமிழ்நாட்டில் பிறந்து விட்டு, தமிழ் மொழிக் கல்வியே வேண்டாம் என்று கூறுவதில் எந்த நியாயமும் இருக்க முடியாது. எனினும், தமிழ் வழியில் நடக்கும் பள்ளிகளின் தரத்தை உயர்த்த வேண்டிய பெரும் பணி அரசுக்கு உள்ளது. அதன் மூலம் தான் தமிழ் வழிக் கல்வி படித்தவர்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதை மெய்ப்பிக்க முடியும். தற்போது யாரும் சொல்லாமலேயே மெட்ரிகுலேஷன் பள்ளிகளைத் தேடிச் செல்பவர்கள், தமிழ் வழிக் கல்வியைக் கற்றுத் தரும் பள்ளிகளுக்கும் வருவார்கள் என்பது உறுதி. அத்துடன் மாநிலத்திலேயே பல்வேறு வகையான கல்வி முறையை

மாற்றி, ஒரே மாதிரிக் கல்வி முறையை ஏற்படுத்துவது பற்றியும் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.''

தமிழ்வழிக் கல்வியை அளித்து வந்த பல அரசுப் பள்ளிகளில் கல்வித்தரம் குறைந்ததும் மற்றொரு முக்கிய காரணம் என்றும் ''தமிழ் வழியில் நடக்கும் பள்ளிகளின் தரத்தை உயர்த்த வேண்டிய பெரும் பணி அரசுக்கு உள்ளது'' என்றும் அழுத்தமாகக் கூறியுள்ளது. இவற்றைச் செயற்படுத்தவேண்டிய கல்வி அமைச்சர்தான் கவனிக்க வேண்டும்.

'தென்மொழி' (திசம்பர் 1999) இதழில் ஓர் ஆசிரியவுரை:

''தமிழ்வழிக் கல்வித் தொடர்பாகத் தமிழ்நாட்டரசு அண்மையில் ஓர் ஆணையை வெளியிட்டுள்ளது. அவ்வாணையின் முகப்பில், மழலையர் பள்ளி உட்பட உயர்கல்வி வரை தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகச் செயற்படுத்தக் கோரித் தமிழ்ச் சான்றோர்கள் அரசின்முன் கோரிக்கை வைத்ததை யடுத்து நடுவர் எசு. மோகன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டதாகவும், அக்குழு தமிழ் அறிஞர்கள். பொதுமக்கள் ஆகியவர்களுடன் கலந்து பேசி அரசுக்குப் பரிந்துரை அளித்ததாகவும் அப் பரிந்துரைகள் மீது தகுதிநிலைப் (Matriculation) பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவற்று வாரியங்களின் கருத்துகள் பெறப்பட்டதாகவும், அனைத்தையும் ஆய்வு செய்தபின் இவ்வாணை வெளியிடப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

அரசு ஆணையில் மழலையர் பள்ளிகள் பற்றியோ, உயர்கல்வித்துறைகள் பற்றியோ எவ்வகைக் குறிப்பும் இல்லை. தமிழ்வழிக் கற்றார்க்கு வேலை வாய்ப்புக் குறித்தும் அரசு கண்டுகொள்ளவில்லை.

தமிழ்ச் சான்றோர்களின் பட்டினிப் போராட்டத்தின்போது

*''ஒன்று முதல் ஐந்து வகுப்புக்குரிய தொடக்கப் பள்ளிகள், நாடு முழுதும் பரவியுள்ள மழலையர் பள்ளிகள் தொடங்கித் தகுதிநிலைப் (Matriculation) பள்ளிகள் வரையில் உள்ள அனைத்துப் பள்ளிகளும் 'தமிழ் ஒன்றே' மொழிப் பாடமாகவும் பயிற்று மொழியாகவும் இருக்கவேண்டுமென்ற கொள்கையில் தமிழ் அறிஞர்களுக்கும் தமிழக அரசுக்கும் எந்தவொரு கருத்து வேறுபாடும் கிடையாது இக் கொள்கையை* ***நிறைவேற்றும்*** *வகையில் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு ஏப்பிரல்* ***30****க்குள் ஒரு குழு அமைக்கப்படும். மே* ***31****க்குள் குழுவினரிடமிருந்து பரிந்துரை அறிக்கை பெற்று வரும்*

*கல்வியாண்டிலேயே அதனை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகளை அனைத்தையும் அரசு செய்யும்''*

என்று அரசு அளித்த உறுதிமொழியின்படியே, குழு அமர்த்தப்பட்டது.

நடுவர் மோகன் தலைமையில் அக்குழு அமைந்தது. அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒன்றே மொழிப் பாடமாகவும் பயிற்றுமொழியாகவும் இருக்கவேண்டும் என்ற கொள்கையை நிறைவேற்றுதற்கான வழிவகைகளைக் கூற வேண்டிய அக்குழு, தமிழ்வழிக் கல்வி குறித்துப் பொதுமக்களிடம் கருத்தறிய முற்பட்டது. குழுவின் தலைவர் அதன் உறுப்பினர்களோடுகூட இதுபற்றிக் கலந்துகொள்ளாமல் ஒரு நாளைக் குறிப்பிட்டுப் பொதுமக்கள் கருத்தறிவிக்கலாம் என்று அறிவித்தார். குழு உறுப்பினர்கள் உடன்படாமையால் நாள் மாற்றப்பட்டது.

இவ்வாறு பொது மக்கள் கருத்தறியும் நிலை பற்றி அக்குழு உறுப்பினர்களிடம் உசாவியபோது, அப்படிப் பொதுமக்கள் கருத்தறிவது சட்டப் பாதுகாப்புக்காகவே என்று தலைவர் கூறியதாகவும் அதுவும் ஒருவகையில் நல்லதே என்றும் கூறினர். இம்முயற்சியில் ஈடுபட்டதாலேயே குழு அரசுக்கு அறிக்கை தருவதில் சுணக்கம் ஏற்பட்டது; அரசு அறிவித்தபடி நடப்புக் கல்வியாண்டில் தமிழ்வழிக் கல்வியைச் செயற்படுத்தாமல் தவிர்க்கவும் வாய்ப்பாய் அமைந்தது.

இனி, 'அரசின் பயிற்றுமொழிக் கொள்கை குறித்து வெளியிடப்பட்ட அரசாணைகள் செல்லும் என்று வழக்குமன்றங்களால் முடிவுசெய்யப்பட்டுள்ளதால் மொழிக் கொள்கைக்குச் சட்டமுறைப் படியான ஏற்பிசைவு அளிக்கப்பட வேண்டிய கட்டாயமில்லை' என அரசு கருதுவதாக அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்விநிலையைப் பொறுத்து அரசின் மொழிக் கொள்கை இன்னதென இதுகாறும் முறையாக வரையறுக்கப்படாமையால் வரையறையான சட்டமாக்கப்படுவது மிகவும் இன்றியமையாதது. ஓரிரு வழக்குகளில் நடுவர்கள் அளித்த தீர்ப்புகள் முன்னிகழ்ச்சியாகவும், மேற்கோளாகவும் சுட்டப்படலாமே யல்லாமல் அவையே சட்டத் தன்மை பெற்றவையாகிவிட மாட்டா. அரசு சட்டமாக்கத் தயங்குவது ஏனென்று தெரியவில்லை.

''2000-2001 ஆண்டுமுதல், முதல்வகுப்பில் தாய்மொழி அல்லது தமிழே பயிற்றுமொழியாக இருக்கவேண்டும். படிப்படியாக மேல் வகுப்பு கட்கும் பயிற்றுமொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்' என்றால் மூன்றாண்டுக்

காலத்தில் மூன்றாம் வகுப்பு வரையில் தானே செயற்படுத்த முடியும்? ஆனால் "மூன்றாண்டுக் காலத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்புகளில் தாய்மொழி அல்லது தமிழ் பயிற்றுமொழியாக மாற்றியமைக்கப்படவேண்டும் என்று அரசாணையில் கூறப்பட்டிருப்பது முரணாக உள்ளது; அரசின் நோக்கம் குறித்து வேறுவகையான ஐயங்கள் எழ வாய்ப்பு அளிப்பதாகவும் உள்ளது.

''ஆறாம் வகுப்பில் மாணவர்கள் சேர்க்கை குறித்து இப்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். ஏற்பு (அங்கீகாரம்) அளிக்கப்படாத பள்ளிகளில் படித்தவர்களுக்கும் தனியே பயின்றவர்களுக்கும் தொடர்புடைய (சம்பந்தப்பட்ட) பள்ளிகள் அளவிலேயே நுழைவுத் தேர்வு நடத்தித் திறமை தகுதி கண்டு மாணவர்கள் சேர்க்கப்படவேண்டும்'' என்று அரசாணையில் கூறப்பட்டிருப்பது நமக்கு வியப்பும் திகைப்பும் அளிப்பதாக உள்ளது.

ஒருமாணவன் ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் தமிழ்வழியில் அல்லது அவனது தாய்மொழியில் பயின்றானா இல்லையா என்பதைவிட, ஆறாம் வகுப்பில் பிற மொழி வாயிற் கல்விக்கும் வாய்ப்பு இருப்பதால் அவ் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளத் தகுதியுடையவனா என்பதை முதன்மையாகக் கொண்டே நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படும். அத் தேர்வுகளையும் அப் பள்ளி அளவிலே நடத்திக் கொள்ளலாம் என்றால், தமிழ்வழிக் கல்விக்கு மாறாகச் செயற்படும் பள்ளிக்காரர்களுக்கு இதைவிட வேறென்ன நல்வாய்ப்பு இருக்க முடியும்?

ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களையும் ஒரு மாணவன் தமிழ் அல்லது தாய்மொழிவழிப் பயின்றிருக்கிறான் என்பதற்கு, மாவட்ட அளவிலேனும் அரசு பொதுத் தேர்வு நடத்திச் சான்றளிக்கும் நிலை இல்லாமல் அவ்வப் பள்ளிகளே தம்மளவில் நடத்திக்கொள்ளலாம் என்றால் இக் கல்வித் தொடர்பான முயற்சிகள் அனைத்தையும் சீர்குலைக்கவும் செயலிழக்கச் செய்யவும் இது ஒன்றே போதுமானது.

மேலும் தமிழ்நாட்டில் தமிழ் பயிலாமலே ஒருவர் தொடக்கம் முதல் உயர்கல்வித்துறைகள் வரை பயிலலாம் என்னும் நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கலைஞர் தலைமையிலான தி.மு.கழக அரசு தமிழுணர்வுடைய அரசு என்னும் நம்பிக்கை இன்னும் முழுமையாகப் பட்டுப் போய்விடவில்லை. ஆயினும் மேற்கண்டவற்றையெல்லாம் நோக்கும்போது அரசு தமிழ்வழிக்

கல்வித் தொடர்பான முயற்சிகளை நீர்த்துப் போகச் செய்வதிலேயே குறியாக இருக்கிறதோ என்னும் ஐயம் தமிழுணர்வாளர்களிடையே வலுப்பெறுவது உறுதி!

இவர்கள் எழுப்பியுள்ள இரு வினாக்களும் கவனத்துக்குரியவை. அரசாணை பிறப்பிப்பதைவிட ஒரு சட்டமாகவே கொண்டுவந்திருக்கலாமே என்ற கருத்து சரியானதே. இது குறித்து விரிவாகப் பேசப்பட்டாலும், ஆணை பிறப்பிக்க வேண்டிய கல்வி அமைச்சர் ''சட்டம் தேவையில்லை; ஆணையே போதும்'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்: ஒருவேளை நீதியரசன் சண்முகம் தந்த தீர்ப்பு வாசகமும் இதற்குக் காரணம் எனலாம். ''தமிழக அரசுக்கு .. உரிமையுண்டு'' என்பதைக் கல்வி அமைச்சர் நம்பிவிட்டார் என்றே கொள்ளலாம்.

மற்றொன்று தொடர்ந்து விதிவிலக்குத்தரும் '7அ' எனும் விதி. இது குறித்து நானும் இயக்குநரிடமும் கல்வி அமைச்சரிடமும் எடுத்துச் சொன்னேன். சரி என்கிறார்கள். விளம்பரம் போடுகிறார்கள். (எ.டு.) முரசொலி விளம்பரம்) சூன் மாதம் வரும்போது விதிவிலக்கைக் கொடுத்துவிடுகிறார்கள். இது பல ஆண்டுகளாகவே நடந்து வருகிறது. அதில் உறுதியாக இருந்து எதிர் விளைவுகளைச் சந்திக்க அரசு அணியமாகி இருந்தால் நிறுவனம் சரியாகியிருக்கும். ஆனால் நடக்கவில்லையே!

சூடு, சுரணையற்ற தமிழர்க்கு ஒரு பளீர்ச் சாட்டையடி. திறம்பட எழுதப்பட்ட கருத்துகள் இவை.

1. 'செந்தமிழ்ச் செல்வி' இதழ் (திசம்பர் 1999) ஓர் எரிமலை வெடித்தாற்போன்ற குமுறலுடன் ஓர் ஆசிரியவுரை எழுதியது. எல்லாச் செய்திகளுமே தமிழுக்கு ஏற்றம் தருபவை என்பதால் அதனை அப்படியே தருகிறேன்.

"அன்னைத்தமிழுக்கு அணிசேர்க்கும் அரசாணை

தமிழ் நாட்டில் தமிழ்ப் பிள்ளைகள் பயிலும் பள்ளிகளில் தமிழ் தானில்லை என்று சொல்லும் இழிநிலையை மாற்றித் தமிழன்னைக்கு உரிய இடத்தைப் பெற்றுத் தரும் அரசாணையைப் பிறப்பித்த தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்கட்கும், இனமானப் பேராசிரியருக்கும், தமிழ் வளர்ச்சித் துறை முனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்ப் பிள்ளைகள் தமிழே பயிலாமல் பட்டம் பெற முடியும் என்ற தாழ்நிலையை உண்டாக்கிய மறநிலை வணிகர்கள் ஒன்றுமே நடவாதது போல்

தமிழ் மக்களின் ஆங்கிலம் மற்றும் பிற மொழி மோகங்களைப் பயன்படுத்திக் கொண்டு தமிழைப் பள்ளிகளிலிருந்து அறவே ஒதுக்கி விட்டனர். பிழைப்புக்காக ஆங்கிலத்தைப் படித்தார்கள் என்பதை வாதத்துக்காக ஒத்துக் கொண்டால்கூட போக முடியாத பிரான்சு, ஜெர்மனி நாடுகளின் பிரெஞ்சையும் ஜெர்மனையும் ஏன் படித்தார்கள்? இவற்றுக்காவது நாடுகள் உள்ளன. தனக்கென்று ஒரு நாடே இல்லாத சமஸ்கிருதத்தைக் கூட படித்தார்களே எதற்காக? யாரை ஏமாற்ற? எதை வேண்டுமானாலும் படிப்போம் தமிழைத் தவிர என்று கங்கணம் கட்டிக் கொண்டு படித்தார்களே, ஏன்?

மூன்று விழுக்காட்டினர் அன்று தமிழை 'அடுப்பங்கரை மொழி' என்றனர். இன்று மறநிலை வணிகர்களோ வீட்டை விட்டு வெளியில் தள்ளி புழக்கடை மொழியாக்கி விட்டார்களே எந்தத் துணிச்சலில்.

ஆங்கிலம் படித்துவிட்டால் அத்தனை பேரும் அமெரிக்காவில் குடிபோய் விடலாம் என்ற குருட்டுத் துணிச்சலை உண்டாக்கியது யார்? இந்த மறநிலை வணிகர்கள்தானே! பிறர்தோள் மேல் ஏறித் திருவிழா பார்த்த மூன்று விழுக்காட்டினர்தானே இன்று அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். அவர்களுக்கு ஆங்கிலமா கை கொடுத்தது? வெறும் மாயை. அம்மானும் அக்காளும் அம்மான் சேய்களுமல்லவா ஒருவரையொருவர் தூக்கிவிட்டு மேலே சென்று விட்டனர். அவர்களுக்கு 'எஸ்பரேன்டோ' மொழியைக் கற்பித்தால்கூட முன்னேறி விடுவார்கள். அவர்களின் இன உணர்வு அவர்களைக் காப்பாற்றுகிறது? தமிழன் தன் இனத்தையே கை தூக்கிவிடமாட்டானே. அப்படியே உதவினாலும் உதவி செய்தவனையே காலை வாரிவிட நேரம் பார்த்துக் கொண்டிருப்பானே? இவன் இனம் என்றும் முன்னேறாது?

தமிழின் நிலை கண்டு வருந்திய தமிழறிஞர்கள் தமிழ் பயிலாமல் எந்த மாணவனும் பட்டம் பெறக்கூடாது என்று போராடினர். பெற்றோர்களின் உணர்வுகளை மதித்து, தொடக்கநிலைக் கல்வியாவது தமிழ் வழியாகத்தான் இருக்க வேண்டுமென்று வாதாடினர். இதற்குத்தான் எத்தனை தடைகள். எத்தனை கால்வாருதல்கள். தமிழே மூச்சு என்ற முத்தமிழ்க் காவலர் மூச்சை விடும் முன் ஆங்கிலம் பயின்றால் பரவாயில்லை என்றார். சிலம்பொலிக்கத் தமிழ் வளர்த்தவர் போராட்டத்தின் உச்ச நிலையில் ஒதுங்கி நின்றார். தனித்தமிழ் இயக்கம் கண்டோரின் 'வாரிசு' தமிழனுக்குத் தமிழ் நாட்டிற்குத் தமிழும் வடநாட்டிற்கு இந்தியும் வெளிநாட்டிற்கு ஆங்கிலமும் தேவையென்று 'பொட்டில்' அடித்தால் போல் சொல்கிறது.

இவ்வளவையும் கடந்து சான்றோர்கள் போராடினர். முனைவர்கள் வ.சு.ப. மாணிக்கனார், தமிழண்ணலார் போன்றோர் தலைமையில் போராடி வெற்றி பெற்றுள்ளனர்.

புதிய அரசாணையின்படி அனைத்துப் பள்ளிகளிலும் தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே முதல் மொழியாகும்.

5ஆம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

மூன்று ஆண்டுகளில் இது படிப்படியாக வர வேண்டும்.

2000 - 2001 இல் முதல் வகுப்பில் தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்கும். அதிலிருந்து படிப்படியாகத் தமிழ் பயிற்று மொழியாகும்.

ஆறாம் வகுப்பிலிருந்து தமிழோ அல்லது ஆங்கிலமோ பயிற்று மொழியாக இருக்கலாம் என்பது போல்தான் அரசாணை உள்ளது. இப்போதைக்கு அதைப்பற்றி ஒன்றும் குறிப்பில்லை. இது ஒன்றே மறநிலை வணிகர்களுக்குப் போதும். விருப்பமிருந்தால் 5ஆம் வகுப்பு வரை தமிழில் நடத்தலாம். அல்லது அடிக்கிற கொள்ளையை 6 இலிருந்து அடிக்கலாம் என்று தொடக்க நிலை வகுப்புகளைத் தங்கள் பள்ளிகளிலிருந்து எடுத்து விடலாம்.

ஆனால் அவர்கள் எதற்கும் ஆயத்தமாக இல்லை. மீண்டும் பழைய நிலையே வேண்டுமாம். அதனால் கடையடைப்புப் போராட்டம் 8 திசம்பரில் நடைபெறவுள்ளது. இது நாடு தழுவிய போராட்டமாம். ஒரு நாள் மட்டும் கடையை அடைக்காதீர்கள். நிரந்தரமாக மூடிவிடுங்கள். 20000 மழலைப் பள்ளிகள் மூடப்படுமாம். 2 இலட்சம் ஆசிரியர்கள் பணியிழப்பார்களாம். தமிழ் நாட்டுப் பள்ளிகளில் தமிழ் வந்தால் இந்த நிலையாம். அச்சுறுத்துகிறார்கள்.

ஏன் தமிழ் பயிற்று மொழியானால் தமிழ் மாணவர்கள் எல்லோரும் அண்டை மாநிலங்களுக்கும் அயல்நாட்டுக்கும் ஓடிவிடுவார்களா? அல்லது ஆங்கில வழி கற்பிப்பதற்கென்றே அவதாரமெடுத்த ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குப் பறந்து விடுவார்களா? யாரை அச்சுறுத்துகிறார்கள்.

முதல்நாள் அவர்கள் ‘கடையை’ அடைத்தால் மறுநாள் தமிழுணர்வாளர்கள் அக் ‘கடை’ மீண்டும் திறக்காமல் இருக்கப் போராடுவார்கள். மீண்டும் 1936 உருவாகும்.

தமிழ் வேண்டுமா ஆங்கிலம் வேண்டுமா என்று பெற்றோர்களிடம் கேட்க வேண்டுமாம். ஏனெனில் அவர்கள் அனைவரும் மலேசிய ரப்பர்

தோட்டத்திலும் பீஜி கரும்புத் தோட்டத்திலும் ஆப்பிரிக்கச் சுரங்கங்களிலும் பணிபுரிபவர்களின் வாரிசுகள் அல்லவா? அடிமை வாழ்வு வாழ ஆங்கிலம்தான் வேண்டும் என்கிறார்களாம்.

குழந்தையைக் கேட்டுக் கொண்டா தாய்ப் பால் கொடுக்கிறோம். உலகத் தாய்ப் பால் தினம் கொண்டாடுகிறோமே எதற்காக. புட்டிப்பாலை விட தாய்ப் பால் சிறந்தது என்பதால்தான்.

பக்கத்து மாநிலப் பேருந்துகளிலும் மைல் (கிலோ) கல்களிலும் யாரைக் கேட்டுக் கொண்டு தாய்மொழியை மட்டுமே பயன்படுத்துகின்றனர். வடமாநிலத்தவர்கள் இதற்குச் சளைத்தவர்களா? தலைநகர் தில்லி அனைத்து இந்தியர்களுக்கும் சொந்தமானதுதானே. எங்கும் எதிலும் இந்திதானே காணப்படுகிறது. மும்மொழித் திட்டத்தைப் பிற மாநிலங்கள் மீது சுமத்தி விட்டு இந்தி ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு ஐ.ஏ.எஸ் தேறி, டாக்டர் பட்டங்கள் பெற்று சுகமாக வாழ்கிறார்களே எப்படி? மும்மொழி வேண்டுமென்று கூறும் அரை வேக்காடுகளுக்கு இது புரியவில்லை! நீ பேசுகின்ற ஆங்கிலம் அவனுக்கு அன்னிய மொழி. 'அங்கிரேசி' அவனுக்கு ஆகாத ஒன்று. கடந்த ஐம்பது ஆண்டுகளில் உன்னை மும்மொழிகளில் படிக்கச் சொல்லிவிட்டு அவன் இந்தி மட்டுமே படித்துப் பட்டம் பெற்று அரசுப் பணியும் பெறுகிறானே எப்படி? ஆங்கிலம் தெரிந்திருந்தும் உன்னிடம் ஆங்கிலத்தில் பேச மறுக்கிறானே ஏன்? ஏனெனில் நீ உன் காதலியுடன் பேசுவதற்குக் கூட பிற மொழியாக வக்கீலை வைத்துக் கொள்பவன் என்று நன்கு உணர்ந்து வைத்திருப்பதால்தான். தமிழனே தமிழனாக வாழு. தமிழனைத் தமிழனாக வாழவிடு".

உண்மையான கொதிப்பு இது. அடங்குமா! அடங்கியதா!

2. 'நந்தன்' இதழ் (திசம்பர் 1-15) எழுதிய ஆசிரியவுரை மிகுந்த கவனத்துக்குரியது. மொழிக் கொள்கையில் சமரசம் வேண்டாம்

தமிழ் வழிக் கல்வி குறித்த அரசின் அறிவிப்பு வெறிளிவந்து விட்டது. மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுத் தொடக்கம் முதல் படிப்படியாக அமலுக்கு வந்து மூன்றாண்டுகளில் முழுவதுமாகத் தமிழ் வழிக்கு மாறி விட வேண்டும் என்றும் அரசின் அறிவிப்பு தெரிவிக்கிறது.

தமிழ் வழிக் கல்வி வேண்டி தமிழ்ச் சான்றோர் பேரவை எடுத்த 100 தமிழர்களின் பட்டினிப் போரைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட மோகன்

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்த அரசின் அறிவிப்பை அமைச்சர் தமிழ்க்குடிமகன் வெளியிட்டுள்ளார் என்பது நாம் அறிந்தது தான்.

முழுவதுமாக விடியவில்லை. வைகறைப்பொழுது தான் வந்திருக்கிறது என்பதைத் தான் அரசின் அறிவிப்பிலிருந்து நம்மால் உணர முடிகிறது.

அரசின் பயிற்று மொழிக் கொள்கை குறித்து ஏற்கனவே வெளியிட்ட அரசாணைகள் செல்லும் என நீதிமன்றங்களால் முடிவு செய்யப்பட்டுள்ளதால் மொழிக் கொள்கைக்குச் சட்ட பூர்வமான அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்போது முன் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ள நீதிமன்ற ஆணை நாளையே மற்றொரு நீதிபதியால் மாற்றத்திற்கு உள்ளாகலாம் அல்லவா? ஒரு வரையறுக்கப்பட்டச் சட்டம் இயற்ற வேண்டும் என்ற மோகன் குழுவின் பரிந்துரையை நிறைவேற்றினால் மட்டுமே தமிழுக்கு நிரந்தரப் பாதுகாப்பு கிடைக்கும். அரசு அவ்வாறு செய்யாமல் நீதிமன்றங்களை மேற்கோள் காட்டி ஒரு பாதுகாப்பற்ற சூழலையே இப்போது உருவாக்கியுள்ளது.

தமிழ் வளர்ச்சி குறித்த பல்வேறு அரசாணைகள் எந்த வித அசைவுமின்றி செயலற்றுக் கிடக்கின்ற வேளையில் மீண்டும் மீண்டும் அதே நிலையை நீட்டிக்க விடலாமா?. சட்டங்கள் செய்வதன் மூலம்தானே சாதிக்க முடியும் என்று நீண்ட அரசாட்சி அனுபவமுள்ள ஆட்சியாளர்களுக்கு நாம் புதிதாகச் சொல்ல வேண்டுமா என்ன?

தமிழ் பயிற்று மொழியாகவுள்ள பள்ளிகளில் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப் படலாம் என்பது குழுவின் பரிந்துரை. ஆனால் ஆங்கிலப் பாடம் பிஞ்சுக் குழந்தைகள், மழலையர் கல்வி முதலே வேண்டுமா? இதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதென்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

கர்நாடக அரசு, நான்காம் வகுப்பிற்கு முன்பு ஆங்கிலம் எந்த வகையிலும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப் படக்கூடாது என்ற அரசாணையின் முதற்பிரிவிலேயே தெளிவுபடுத்தியுள்ளது. மேற்கு வங்கத்தில் கடந்த 20 ஆண்டுகளாக ஆறாம் வகுப்பு முதல் தான் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகக் கற்பிக்கப் பட்டு வருகிறது.

இப்படி தெளிவான முன் உதாரணங்கள் இருந்தும், அரசு மீண்டும் சிந்திக்க அவகாசம் எடுத்துக் கொண்டிருப்பது ஏனென்று தெரியவில்லை.

மழலைகள் வாயில் ஆங்கிலம் வேண்டாம் என்பதே உறுதியான முடிவாக இருக்க வேண்டும்.

சி.பி.எஸ்.இ., ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கு இந்த உத்தரவு பொருந்தாது என்கிறது அரசு. எந்த வித புதுவிதிகளும் இல்லாமல் அந்தப் பள்ளிகளுக்கு தமிழ் மொழிக் கல்வியிலிருந்து விலக்களித்திருப்பது வேறுவகையான விளைவுகளை உண்டாக்கி விடக் கூடுமல்லவா? ஒரே ஒரு கடிதத்தில் இன்றைய மாநிலப் பாடத்திட்டத்தில் இருக்கும் மெட்ரிக் பள்ளிகள் மத்தியப் பாடத்திட்டத்திற்கு மாறி தன் வியாபாரத்தை தொடரக்கூடிய வாய்ப்புள்ளதை நாம் உணர வேண்டும்.

மொழிக் கொள்கையில் எந்தச் சமரசமும் இன்றி காரண காரியங்களைச் சொல்லி நாள் கடத்தாமல் ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என்ற அரசின் முழக்கத்தை முன்னெடுக்கும் பேரவையின் போர்க் குரலை முழு அளவில் எல்லா நிலைகளிலும் வலுவாக செயல் படுத்த வேண்டும். அல்லாமல் போனால் அவ்வப்போது ஆபத்துகள் சூழத்தான் செய்யும்! மீண்டும் மீண்டும் மொழிப் போர்க்களங்கள் வந்து கொண்டு தான் இருக்கும்.

இவர்களும் சட்டமாக்கியிருக்கலாமே என்பதைத் தெரிந்திருக்கிறார்கள்.

“இப்போது முன் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ள நீதிமன்ற ஆணை நாளையே ஒரு நீதிபதியால் மாற்றத்தக்கு உள்ளாகலாம் இல்லையா?“

எவ்வளவு உண்மையான கேள்வி. கடைசியில் அதுதானே நடந்தது!

அடிப்படையே தவறு

இந்து இதழில் (28.11.99) அதன் சிறப்புச் செய்தியாளர் எழுதுகிறார். தலைப்பே இதுதான்:

Decision on Tamil Medium ‘arbitrary’ “Imposing Tamil medium would threaten the employment of over 65,000 teachers, mostly women, and the existence of over 6,000 matriculation and 20,000 nursery schools, where the medium of instruction was English” என்கிறார் செய்தியாளர்.

1996 வரை தமிழ்நாட்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை 1427. 96 முதல் 99 வரை 1200 பள்ளிகட்குக் கல்வி அமைச்சர் மிகுந்த ‘கனிவோடு’ அனுமதி வழங்கியுள்ளார். அப்படியே பார்த்தாலும் மேலே உள்ள செய்தி வெளியான நாளில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் 2621 தான். ஆனால் தவறான யூகம்- மிகப் பெரிய வலிமையுள்ள மெட்ரிகுலேசன் - என்று

காட்டுவதற்காகவே இவர் 6000 பள்ளிகள் என்று 'புருடா' விடுகிறார். ஏன் இன்று கூட (1.8.2004) தமிழ்நாட்டில் உள்ள மெட்ரிகுலேசன் பள்ளிகள் 3244 தான்.

எனவே பொய்யான தகவலை வைத்து எப்படிப் புழுகுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். அதிலும் 'இந்து' சிறப்புச் செய்தியாளரா இதைச் செய்கிறார்? வியப்புத்தான்.

6000 மெட்ரிகுலேசன் பள்ளிகள் என்று 'புளுகும்' இந்தச் சிறப்புச் செய்தியாளரின் சிறப்பு என்ன தெரியுமா? தலையில் மூளையே இல்லை என்பதுதான்!

அரசின் ஆணைக்குப்பின் 'தினகரன்' (1.12.99) பலரிடமும் கருத்துக்கேட்டு ஒரு தொகுப்புரை வழங்கியிருந்தது. பல தரப்பினரும் என்ன கருதுகிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள ஓர் அருமையான தொகுப்பு இது. இதோ:

**5-ம் வகுப்பு வரை அனைத்து பள்ளிகளிலும் தமிழ் பயிற்று மொழியாக்கி அரசு உத்தரவு:**

**மாணவ, மாணவிகள் - ஆசிரியை - அரசு ஊழியர் - வியாபாரி கருத்து**

சேலம், டிசம்பர்1- தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இயங்கி வருகிறது. ஆனால் அரசு பள்ளிகளை விட தனியார் பள்ளிகள்தான் அதிகமாக உள்ளது. இந்த பள்ளிகளில் தமிழுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. ஆங்கிலத்துக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இது தவிர மெட்ரிகுலேசன் பள்ளிகள் மற்றும் நர்சரி பள்ளிகளில் தொடக்க கல்வி ஆங்கிலத்தில்தான் பயிற்றுவிக்கப்படுகிறது. இதனால் பல குழந்தைகள் தமிழ் எழுதப் படிக்க தெரியாமல் தடுமாறுகிறது. வீட்டில் அம்மா என்று கொஞ்சும் தமிழில் பேசுவதை விட்டுவிட்டு மம்மி,டாடி என்று அழைத்து வருகிறார்கள். இதனால் தமிழ் மொழி இரண்டாந்தர மொழியாக ஆகி விடக்கூடாது என்று அரசு உணர்ந்துதான் தமிழ் பயிற்று மொழியாக அறிவித்து இருக்கிறது.

**பயிற்று மொழி**

இதனால் வரும் ஆண்டில் இருந்து 5-ம் வகுப்பு வரை அனைத்து பள்ளிகளிலும் தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து உள்ளது.

பேட்டி

அரசின் இந்த நடவடிக்கையை பலர் வரவேற்றுள்ளனர். இது குறித்து சேலத்தில் ஆசிரியர், பொது மக்கள், மாணவிகளிடம் கருத்து கேட்கப்பட்டது.

அதன் விபரம் வருமாறு:-

சேலம் அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் பிளஸ்-டூ படித்து வரும் மாணவி அம்சவேணி கூறியதாவது:-

நான் 1-ம் வகுப்பு முதல் தமிழில்தான் படித்து வருகிறேன். இப்போது பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-டூ படித்து வருகிறேன். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அது போல் தமிழகத்திலும் தாய்மொழி தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இங்கு தனியார்கள் நடத்தும் ஆரம்ப பள்ளிகளில் தமிழைவிட ஆங்கிலம்தான் ஆக்கிரமித்துள்ளது. இதனால் குழந்தைகள் தமிழை மறந்து விடுகிறார்கள். 5-ம் வகுப்புவரை தமிழில் படித்துவிட்டு பிறகு 6-ம் வகுப்பு முதல் ஆங்கிலம் படிக்கலாம். தமிழக அரசு இந்த அரசாணையை அவசியம் நிறைவேற்ற வேண்டும். இது வரவேற்கத்தக்கது. வரும் கல்வி ஆண்டில் தமிழ் பயிற்று மொழி ஆக்க நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி.

அரசு ஊழியர் சிவசங்கரன் கூறியதாவது:-

தமிழ்நாட்டில் தமிழ் மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். இங்கு மற்ற மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது குறிப்பாக பள்ளிகளில் தொடக்க கல்வி தமிழில்தான் இருக்கவேண்டும். அப்போது தான் குழந்தைகளுக்கு தாய்மொழியின் முக்கியத்துவம் தெரியும் இப்போது அனைத்து தனியார் பள்ளிகளிலும் ஆங்கிலம் கற்று கொடுப்பதால் குழந்தைகள் தமிழை மறந்துவிட்டது. தங்களது பெயரை கூட எழுத தடுமாறுகிறது. ஆனால் ஆங்கிலத்தில் பெயர்களை எழுதி விடுகிறார்கள். இந்த போக்கு நீடித்தால் நாளடைவில் தமிழை மறந்து விடுவார்கள். காலம் கடந்து அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டு இருந்தாலும் இது நல்ல தருணம். அரசின் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அரசின் இந்த முடிவை தனியார் பள்ளிகள் நடைமுறைப்படுத்தவில்லை என்றால் அந்த பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் அரசின் இந்த ஆணையை முழுமையாக நிறைவேற்ற முடியும்.

சேலம் பொன்னம்மா பேட்டை மாநகராட்சி பள்ளி ஆசிரியை எஸ்.ஜி. சுசிலா கூறியதாவது:-

உடலுக்கு உயிர் தேவை என்பது போல் ஆங்கிலமும், தமிழும் தேவை. இரண்டும் இரண்டு கண்கள் போல் ஆகும். தமிழ் தாய்பால் என்றாலும், தேவை அதிகரிக்கும் போது புட்டி பால் தேவைப்படுகிறது. புட்டி பால் தேவைபோல் ஆங்கிலமும் தேவை.

இருப்பினும் பல சுவை விரும்பும் நாம் தமிழின் சுவையை மட்டும் சுவைத்தால் போதுமா? அது தித்திக்கும் திகட்டும். அதே சமயத்தில் ஆங்கிலமும் தேவை. திரைகடல்ஓடியும் திரவியம் தேடு என்ற பாரதியின் பொன்மொழிக்கு ஏற்ப வெளிநாடு சென்று கல்வி பயிலுவதற்கும், பணிபுரிய ஆங்கிலம் தேவைதான்.

அந்த தேவையை பரிபூரணமாக செய்து முடிக்க பொருள் உணர்ந்து கற்றிட வேண்டும். அதற்கு தாய்பால் ஆன தமிழ் மொழி கற்க வேண்டும். பொருள் உணர்ந்து கற்றிட கற்க சிறக்க நம் தாய்மொழி தமிழ் அடிப்படையில் தேவை என்பதை வலியுறுத்துகிறேன். எனவே தமிழக அரசு இப்போது அரசாணை வெளியிட்டு இருப்பதற்கு வரவேற்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

சேலம் மேட்டு மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த மாணவன் சண்முகம் கூறியதாவது:-

1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை அனைத்து பள்ளிகளிலும் தமிழ் பயிற்று மொழியாக்கப்படுவது நல்லது. அரசின் இந்த முடிவை அனைத்து தரப்பினரும் பாராட்டுவார்கள். காரணம் ஆரம்ப பள்ளிகளில் தனியார் கல்வி நிறுவனங்களில் ஆங்கில மொழியை விட வேறு மொழி உலகில் இல்லை என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். இங்கு தமிழ் ஒரு மொழி என்றே நினைப்பதில்லை. குழந்தைகளுக்கு சிறு வயதில் தமிழையும் சொல்லிக் கொடுத்தால்தான் எழுதப்படிக்க முடியும். இதனை விட்டுவிட்டு ஆங்கில மோகத்தில் தனியார் பள்ளிகள் செயல்படுவது கண்டிக்கத்தக்கது. அரசு இப்போது 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியாக அறிவித்து இருப்பது வரவேற்கத்தக்கது. இவ்வாறு அவர் கூறினார்.

வியாபாரி ஸ்ரீ பாலாஜி கூறியதாவது:-

மெட்ரிகுலேசன் பள்ளிகள் மற்றும் நர்சரி பள்ளிகளில் தமிழை ஒரு தீண்டத்தகாத மொழியாக நினைக்கிறார்கள். அதனால்தான் இங்கு

ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழை இரண்டாந்தர மொழியாக கருதுகிறார்கள். இதனால் சிறு குழந்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக தமிழை மறந்து வருகிறார்கள். வீட்டில் அம்மா என்று சொல்வதை கூட மறந்துவிட்டார்கள். இந்த நிலைமை நீடித்தால் தமிழகத்தில் தமிழை விரட்டி விடுவார்கள். இதனால் தான் அரசு விழிப்படைந்து இருக்கிறது. அரசு வெளியிட்டு இருக்கும் இந்த ஆணையை வரவேற்கிறேன். இனி தமிழ் வாழும். இவ்வாறு அவர் கூறினார்.

சேலத்தில் உள்ள ஒரு தனியார் ஆங்கில பள்ளியில் 2-ம் வகுப்பு படிக்கும் சிறுமி கனிமொழியிடம் பாடங்களை தமிழில் மட்டும் படித்தால் எப்படி இருக்கும் என்று கேட்டபோது கூறியதாவது:-

நான் ஆங்கிலத்தில்தான் படித்து வருகிறேன். எனக்கு இப்போது தமிழில் சரியாக எழுத படிக்கத் தெரியவில்லை. ஆங்கிலமும் பேச தெரியவில்லை. 1-ம் வகுப்பில் இருந்து தமிழில் படித்துவந்திருந்தால் தமிழ் எழுதபடிக்கத் தெரிந்திருக்கும். ஆனால் இப்போது தமிழ் முழுமையாக எழுத தெரியவில்லை என்றாள்."

'தராசு நாள் இதழ் (9.12.99) தமிழ்வழிக் கல்வியை வரவேற்று ஓர் ஆசிரியவுரை வரைந்திருந்தது.

"தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்!

யாமறிந்த மொழிகளிலே.... என்று எது மகாகவியைப் பாட வைத்ததோ, கனியிடை ஏறிய சுளையையும், பனிமலர் ஏறிய தேனையும் விட எது புரட்சிக் கவிஞருக்கு சுவை மிக்கதாகப் பட்டதோ,

அந்தத் தாய்த் தமிழ் சிலருக்கு வேம்பாகக் கசக்கிறது என்ற எண்ணும்போது, 'விதியே, தமிழச் சாதியை எவ்வகை விதித்தாய்?' என்று உறுமத் தோன்றுகிறது.

மழலையர் பள்ளியில் தமிழ்த் திணிப்பு என்ற ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து, சென்னையில் உள்ள மழலையர் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் உரிமையாளர்கள் ஊர்வலம் நடத்தியிருப்பதைப் பாரதி உயிரோடு பார்த்திருந்தால், அக்னி விழியால் சுட்டெரித்திருப்பான்.

இன்றைய தமிழக முதல்வர் நம் தாய்த் தமிழின் தலைசிறந்த சேவகர். மட்டுமல்லாமல், அவர் நம் மொழியின் காவலரும் கூட.

'அப்பா', 'அம்மா' வைக்கூட, 'டாடி', 'மம்மி' என்று சொல்ல வைத்து, கல்வித் தொண்டு புரிவதற்கு மாறாக, வணிக நிறுவனங்களாக

செயல்பட்டு வரும் மழலையர் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் உரிமையாளர்கள் தமிழக முதல்வர் மீது இத்தகைய குற்றச்சாட்டைச் சுமத்தியிருப்பது கண்டிக்கத்தக்கது.

பள்ளி வளாகத்துக்குள் தமிழில் பேசினால், தண்டனையாம்! 'சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும்; நம் சாம்பலெல்லாம் தமிழ் மணந்து வேகவேண்டும்,' என்று நினைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இன்று இருந்தால், மேற்கண்ட பள்ளி உரிமையாளர்களை என்ன செய்திருப்பார்?

மழலையர் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்விக்காக நீதியரசர் மோகன் தலைமையில் ஒரு குழு அமைத்தார், தமிழக முதல்வர். அதன் பரிந்துரைகளின்படி, அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும் கேட்ட பின்னரே முடிவெடுக்கப்பட்டது.

நம் கருத்து என்னவென்றால், ஆறுகோடி தமிழர்கள் வாழும் தமிழகத்தில், யாருடைய கருத்தையும் கேட்காமலேயே, தமிழ் வழிக் கல்விக்கு ஆணையிட தமிழக முதல்வருக்கு அதிகாரம் மட்டுமல்ல, உரிமையே உண்டு!

ஆனாலும், அரசு தன்னிச்சையாகச் செயல்படக்கூடாது என்கிற மக்களாட்சித் தத்துவத்தில் நம்பிக்கை உள்ள காரணத்தால், தமிழக முதல்வர் கருணாநிதி, ஒரு குழுவை அமைத்துக் கருத்துக் கேட்டு ஆணை பிறப்பித்திருக்கிறார்.

தமிழகத்தில் கல்வி வியாபாரம் செய்து கொண்டு தமிழில் பயிற்றுவிக்க மாட்டோம் என்று பிடிவாதம் பிடிப்பவர்களைத் தமிழன்னையே மன்னிக்க மாட்டாள்.

இப்பிரச்னையில், தமிழர்கள் அனைவரும் உணர்வு ரீதியாகத் தமிழக முதல்வர் கருணாநிதியின் பின் அணிவகுத்து நிற்கவேண்டும். 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!'

சில மெட்ரிகுலேஷன் பள்ளிகளில், 'தமிழ் அல்லது பிரஞ்சு அல்லது ஜெர்மனி அல்லது இந்தி,' என்று விருப்பப் பாடங்களை அமைத்துள்ளனர். தமிழுக்கு இரக்கப்பட்டு, பிச்சை இட்டா, இடமளிக்கிறார்கள் இவர்கள்?

இந்தி எதிர்ப்பால் தமிழகம் பின்னடைந்து விட்டதாக, மழலையர் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளியினர் குற்றம் சாட்டியுள்ளனர். பீகாரிலும், உத்தரப்பிரதேசத்திலும், இந்தியாவிலேயே எல்லாம் படித்துவிட்டு, வேலை இல்லாமல் இருப்பவர்கள் எத்தனைபேர்? ஜெர்மனியிலும், பிரஞ்சிலும்

படித்துவிட்டு எத்தனை பேர் அந்தந்த நாடுகளுக்கு வேலைக்குச் செல்லப் போகிறார்கள்?

தமிழக அரசு, தமிழ் வழிக் கொள்கையை செயல்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை.'' சரியாக உணர்த்தப்பட்டுள்ள உரை இது.

'தினமணி' 'ஆசிரியர்க்குப்' பகுதியில் (10.12.99) பொள்ளாச்சி நசன் எழுதிய மடல்வந்துள்ளது. உணர்வுடன் வந்த மடல் அது.

தமிழ்ப் பள்ளிகளின் உடனடிப் பணி

''தமிழக அரசின் அரசாணை கண்டு இன்று மகிழ்கிறோம். இது ஒரு நல்ல தொடக்கம். இந்தச் சூழலில், இதுவரை தமிழை முதன்மைப்படுத்தி நடந்து கொண்டிருந்த தாய்த்தமிழ் தொடக்கப்பள்ளிகள், சென்னை பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளிகள், தஞ்சை வள்ளலார் தமிழ்வழிப் பள்ளி, புதுவை, திண்டுக்கல், மதுரை, சூலூர் தமிழ்ப் பள்ளிகள் என இயங்கிய இப் பள்ளிகள் இனிச் செய்ய வேண்டியது என்ன?

அ. முதலில் இப் பள்ளிகள் தங்களுக்குள் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆ. இதுவரை மாணவர்களின் மொழி மற்றும் பல்திறன் வளர்ச்சிக்கு நாம் என்ன செய்தோம் என்பதை வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இது நமது நடைமுறையைச் சுயசோதனை செய்வதற்கும், சிறப்பானதைப் பலருக்கும் அறிவித்து பயனடையச் செய்வதற்கும்தான். நடைமுறையை நுணுக்கமாக - பொதுவான செயற்பாடு எனவும் ஒவ்வொரு மாதத்திற்குமான நடைமுறைச் செயற்பாடு எனவும் வரிசைப்படுத்துவோம்.

ஒவ்வொரு வகுப்பாக இப்பதிவை நாம் செய்வோம். முதலில் மழலையர் களுக்கான இரு வகுப்புகளுக்கும் (அரும்பு, மலர்) பிறகு முதல் வகுப்பிற்கும் பதிவு செய்வோம்.

இம் மண்ணிலிருந்து கண்டறிகிற, இங்கே நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுள்ள, இதனை வரிசைப்படுத்தி - பல பகுதிகளிலும் நெகிழ்வுத்தன்மையோட நல்லனவற்றை உள்வாங்குகிற தன்மையோடு நடைமுறைப்படுத்தி, அதை மேலும் செறிவாக்கி, வளமாக்கி, முறைப்படுத்தவேண்டும். அதுவே இத் தமிழ்ச்சமுதாயம் மலர, இந்நாற்றுகள் தமிழ்ச் சான்றோராக, செயலாற்றல் மிக்கவராக, பகுத்துணருபவராக மாற வகைசெய்யும்.

இன்றையச் சூழலில் இதை நாம்தான் இணைந்து திட்டமிட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனெனில் தமிழைப் பயிற்று மொழியாக ஏற்றுக் கொண்ட அரசுப் பள்ளிகளுக்கு முன்மாதிரியாக, முழு மாதிரியாக வளர்ந்த காட்ட வேண்டியது நமது பள்ளிகள்தானே! தமிழை முதன்மைப்படுத்தி நடத்தப்படுகிற 'தமிழ்ப் பணிகளில்' பல பள்ளிகள் சிறந்த நுணுக்கங்களைப் பயன்படுத்தி வெற்றியும் பெற்று, பலரால் பாராட்டவும் பெற்றுள்ளன. இது குறித்து இணைந்து சிந்திப்போம். இது நம் தமிழ்ச் சமூக உயர்விற்கான இன்றியமையாத இணைவு ஆகும்."

'தினமலர்' இதழில் துரை. கதிரேசன் எழுதிய மடல் வெளியிடப்பட்டுள்ளது. சிறப்பாக உணர்த்தியிருக்கிறார்.

'ஐந்தாம் வகுப்பு வரை தமிழே பயிற்று மொழி' என்ற அரசு உத்தரவை எதிர்த்து, தமிழ்நாடு நர்சரி, தொடக்க, மெட்ரிகுலேஷன், மேல்நிலைப்பள்ளிகளின் நிர்வாக சங்கம் சார்பில் ஒருபுறம் ஐகோர்ட்டில் மனுவும், மறுபுறம் அடையாள வேலை நிறுத்தமும் நிகழ்ந்துள்ளது. இவ்விரண்டு நிகழ்ச்சிகளுமே தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்துள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் தலைகுனிவான செயலாகும்.

ஆனால், இன்றைக்கு தமிழுக்காக வரிந்துக் கட்டி, வக்காலத்து வாங்கும் அரசே இதற்கு முழுமுதற் காரணம். என் வயது 48. நான் எஸ்.எஸ்.எல்.சி., வரை அனைத்து பாடங்களையும் தமிழில்தான் படித்தேன்.

என் வயதொத்தவர்களின் காலகட்டத்தில், அரசு உயர்நிலைப்பள்ளிகளும், அரசு நிதி உதவி பெற்ற பள்ளிகளும் தவிர, டான் பாஸ்கோக்களும், பிரசன்டேஷன் கான்வென்டுகளும்தான் இருந்தன. தெருவுக்கு ஒரு நர்சரி, வீதிக்கு வீதி மெட்ரிகுலேஷன் பள்ளி என்ற விவகாரங்களே கிடையாது. அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், அரசு நிதி உதவி பெற்ற பள்ளிகளிலும், ஆறாம் வகுப்பு முதல் ஆங்கில மீடியம் இருந்தது.

இந்த நர்சரி ஸ்கூல்களும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் 1970க்கு பிறகே புற்றீசல்களாய் நாட்டில் பரவி, பிசினெஸை ஆரம்பித்தன. குறிப்பிடும் 1970களில் தமிழ்நாட்டை கோலோச்சிக் கொண்டிருந்தது. திராவிடக் கட்சிகளே; குறிப்பாக தி.மு.கழகமே! தும்பை விட்டு வாலை பிடிப்பது மாதிரி, ஆரம்பத்திலேயே இந்த ஆங்கிலக் கல்வி வியாபாரத்தை முடக்கிப் போடாமல், முற்ற விட்டதே கழக அரசுகள்தான்.

இன்றைக்கு அவை அரசு உத்தரவையே எதிர்த்து கோர்ட்டுக்கு 'கோ'கின்றன.

பதினோராம் வகுப்பு வரை தமிழிலேயே பாடம் படித்து நானும், என் வயதொத்தவர்களும், ஒன்றும் வேலை கிடைக்காமல் ‘சோரம்’ போய்விடவில்லை; நன்றாகத்தான் இருக்கிறோம்

ஐந்தாம் வகுப்பு வரை தமிழே பயிற்று மொழி என்பதையே மாற்றி, 1970க்கு முன் இருந்த நிலைக்கு, அதாவது, இப்போதுள்ள ப்ளஸ்டு வரையிலும், எல்லாப் பாடங்களையுமே தமிழில்தான் பயிற்றுவிக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட வேண்டும்.

கோர்ட்டுகளும் இதுபோன்ற குழப்ப மனுக்களை விசாரித்து, நேரத்தை விரயமாக்கிக் கொண்டிராமல், ஆரம்ப நிலையிலேயே இவற்றை ‘தள்ளுபடி’ செய்து, காலந்தாழ்த்தி எடுத்தாலும், அரசு எடுத்துள்ள ஒரு நல்ல முடிவுக்கு உறுதுணையாய் இருக்க வேண்டும் என்பதே என் போன்றோரின் ஏகோபித்த முடிவு" என்கிறார். இது நூற்றுக்கு நூறு உண்மை என்றே நான் உரைக்க முடியும். இதுகுறித்து நாம் மற்றோர் இடத்தில் பேசுவோம்.

(10.12.99) தினமணி இதழில் வெளிவந்த ஆசிரியர்க்கான மடல்களில் அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே தந்துள்ளேன்.

‘தமிழ்வழிக் கல்விக்கு விடிவெள்ளி - தமிழண்ணல் எழுதிய கட்டுரை (27.11.99) படித்தேன். முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழையே தாய்மொழியாகக் கொண்ட பாடம் நடத்தப்பெறவேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இருக்காது, அதோடமையாது மழலையர் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள் எவ்வாறெல்லாம் நடத்தப்படுகின்றன? அங்கு பணிபுரியும் ஆசிரியர்களின் பணி நேரம், சம்பளம். பள்ளிச்சூழல் ஆகியவை பற்றி தமிழமைப்புகள் கண்காணித்தல் வேண்டும். - பூராடன், சீர்காழி-10.

இந்தியாவிலேயே அனைத்து மொழிகளையும் விட வளமும் பெருமையும் வாய்ந்த ஒரே மொழி தமிழ். ஆயினும் தமிழர்கள் மற்ற இந்தியர்களைவிட துணிவும் தன்மானமும் குறைந்தவர்கள். கன்னட குஜராத். மராத்திய, வங்காளிய, கேரள அரசுகள் தம் தாய்மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததைப் பார்த்த பிறகுதான் தமிழக அரசுக்கும் இப்படி ஓர் ஆணை பிறப்பிக்கத் துணிவு வந்திருக்கிறது. தமிழக அரசுக்கே துணிவு வர இவ்வளவு காலமானது என்றால் தமிழர்களுக்கு (தாய்மொழியிலேயே) கல்வி கற்க உடனே துணிவு வந்துவிடுமா? எனவே இதற்கு நிறைய எதிர்ப்புகள் எழத்தான் செய்யும். அவற்றைத் தமிழக அரசு எதிர்கொள்ளத் தமிழறிஞர்கள்தான் ஒத்துழைப்புத் தரவேண்டும் - சி.த. வைரவன், சென்னை-14.

இனி, தமிழ் மக்கள்தான் ஆங்கில மோகத்தை விடுத்து, தமிழுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல், தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப் பயிற்றுமொழிப்

பள்ளிகட்கு அனுப்பவேண்டும். தமிழ்ப் பயிற்றுமொழி பற்றிய ஆணையை நன்கு நடைமுறைப்படுத்த அனைத்துக் கட்சியினரும் துணை நிற்க வேண்டும். குற்றங்குறை கண்டவுடன் கண்டன அறிக்கைவிடும் அரசியல் கட்சிகள் நல்லன நடக்கும்போது ஆதரித்தும் அறிக்கைவிட வேண்டும் - நா. திருமலை, மதுரை-16.

தற்போதைய ஆணைக்கு நிரந்தர சட்டப் பாதுகாப்பு தேவை. ஏனெனில் ஆணைகள் எனும்போது அடுத்துவரும் அரசுகளால் அலட்சியப்படுத்த நேரிடலாம்.

தமிழ் மக்களின் கருத்துகளை உணர்ந்து செயல்படுவதற்கு தமிழ் வழி படித்தோர்க்கே தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பில் முதலிடம் தரப்படல் வேண்டும். அரசின் செயல்பாடுகளில் நல்லவற்றைப் போற்றுவதும், செய்யவேண்டுவனவற்றை வலியுறுத்துவதுமே அறிஞர் தம் கடமையாக இருத்தல் வேண்டும். அரசின் துதிபாடிகளாக மக்களை ஒருபோதும் மாற்றக்கூடாது. - ம. சுடரவன், பழைய செயங்கொண்டம்.

தனிச் சேர்க்கைக்கான (பிரைவேட் அட்மிஷன்) தகுதிகள் அண்டை மாநிலமான கர்நாடகத்தில் உள்ளதுபோல் அமைய வேண்டும். வெளி மாநிலத்தில் இருந்து வருபவர்கள், அங்கீகாரம் உள்ள ஆரம்பப்பள்ளிகள் இல்லாத ஊர்களில் வசித்தவர்கள் இவர்கட்கு மட்டும் 6-ம்வகுப்பில் அதுவும் பொதுத்தேர்வுகள் மூலம் சேர்க்கை அனுமதிக்கப்படவேண்டும். மற்றவர்களுக்கு வேண்டுமானால் 6-ம் வகுப்பிற்குப் பதிலாக 3-ம் வகுப்பில் பிரைவேட் அட்மிஷன் அனுமதிக்கப்படலாம். அதற்கு மேல் அனுமதித்தால் இந்த உத்தரவுகளால் எந்தப் பயனும் இல்லை. மேலும் மத்திய அரசு பாடத்திட்டம், மாநில அரசு பாடத்திட்டம் இரண்டு மட்டும் போதுமே! சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளாகியும் ஏன் இந்த மெட்ரிக் பாடத்திட்டத்தை மாற்றாமல் உள்ளார்கள்? இதனால் என்ன பயன்? - எச். ஜெயராமன், நன்னிலம்.

மைய அரசு (CBSE), ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கு இவ்வரசாணை பொருந்தாது. இதன் தரத்துக்கு இணையாக அரசு தொடக்கப் பள்ளி மாணவர்கள் தகுதியுடையவர்கள் ஆக வேண்டும். வங்காளத்தைப் போல் ஆறாம் வகுப்பிலிருந்தோ உத்தரப்பிரதேசத்தைப் போல் எட்டாம் வகுப்பிலிருந்தோ ஆங்கிலம் இங்கு கற்பிக்கலாகாது. - மு. முரளீதரன், சயனாவரம்.

'தேவி' இதழில் (15.12.99) 'செந்தில் குமரன்' எழுதிய கட்டுரை இது. இந்தநேரத்துக்குப் பொருத்தமாக எழுதப்பட்டுள்ளது.

''தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் முதல் 5 வகுப்புகளில் தமிழ்மொழியை பயிற்று மொழியாக அமைக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியுள்ளது தமிழக அரசு.

தமிழ்நாட்டில் உள்ள 41,000 அரசுப் பள்ளிகள் மற்ற நர்சரிப் பள்ளிகள், மெட்ரிகுலேசன் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் என்று மொத்தம் உள்ள சுமார் 56,000 பள்ளிக்கூடங்களிலும் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை கட்டாய தமிழ் மொழி அல்லது தாய்மொழியை கட்டாயப் பாடமாக்க உத்தரவு போடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் ஒன்றாம் வகுப்பு முழுக்க தமிழில்தான். அப்படியே அடுத்தடுத்த வருடங்களில் ஐந்தாம் வகுப்பு வரை உயரும்.

இது தவிர தமிழ்நாட்டில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிப் பள்ளிகள் 1008 உள்ளன. இவற்றிலும் மீதமுள்ள 187 சி.பி.எஸ்.இ. பள்ளிகளிலும் கூட தமிழை ஒரு பாடமாக வைக்க முயற்சி நடக்கிறது.

தமிழ்நாடுதானே... இது. இங்கு தமிழை தாராளமாக எதிர்க்கலாம் அல்லவா? அதனால்தானோ என்னவோ உடனே இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பும் எழுந்துள்ளது. ஆங்கிலம் இல்லாவிட்டால் வாழ முடியாது என்கிறார்கள்.

தமிழ் இல்லாவிட்டால் செத்துவிடலாம். இன்றைக்கு மாடு கூட பல சமயங்களில் 'அம்மா' என்று முழுமையான உச்சரிப்புடன் அழைக்கிறது. ஆனால் நமது பிள்ளைகள் மம்மி, டாடி என்று கும்மியடிக்கின்றன. இன்னும் கொஞ்ச நாளில் தமிழ்நாட்டில் தமிழே அழிந்துவிடுமோ என்ற நிலை.

அறிவு வளர ஆங்கிலம் அவசியம் வேண்டுமாம். இந்தப் பம்மாத்து எல்லாம் வேண்டாம். தாய்மொழியில் தொழிற் கல்விப் புரட்சி செய்த ஜப்பானியர்களின் பொருட்கள்தான் இன்று உலகை ஆள்கின்றன. ஆங்கிலத்தை இன்னும் செருப்புக்கு சமானமமாக நினைக்கும் பிரான்சில்தான் கலைகள் செழித்து ஓங்குகின்றன. இவர்கள் எல்லாம் ஆங்கிலம் இல்லாமல் உலகப் புகழ் பெறவில்லையா?

இவர்கள் ஜெயிக்கக் காரணம்... எதையும் தாய்மொழியில் படித்தார்கள். அதனால் உணர்ந்து படித்தார்கள். மூளைக்கு வேலை கொடுத்தார்கள். அதனால்தான் ஜெயித்தார்கள்.

ஒன்று ஒத்துக் கொள்ளலாம். ஆங்கிலம் இன்று உலகத் தொடர்பு மொழி. அது கற்பதில் தவறில்லை. ஆனால் தமிழில் அறிவு பெற்ற பின்னர்

தமிழர்களுக்கு ஆங்கில அறிவு வரட்டும். தமிழே கற்காத ஆங்கில அறிவு மட்டும் உள்ள மக்கள் என் தமிழ்நாட்டுக்குத் தேவை இல்லை.

பெற்ற தாய் கிழிந்த துணியோடு நிர்வாணத்தை மறைத்தபடி தெருவில் கூனிக் குறுகி அமர்ந்திருக்க, ஒரு வெள்ளைக்காரச்சிக்கு விதவிதமான கவுன் தைத்துப் போடும் கேடு கெட்டதனம் தமிழனுக்கு வேண்டாம். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் முதல்வர் கலைஞரும் அமைச்சர் தமிழ்க்குடிமகனும் இதில் இருந்து பின்வாங்கக் கூடாது. கூடவே கூடாது.''

எவ்வளவு வேகமாகவும், உணர்ச்சியோடும் எழுதியிருக்கிறார் அவர்! ''கலைஞரும் அமைச்சர் தமிழ்க்குடிமகனும் இதில் இருந்து பின் வாங்கக் கூடாது; கூடவே கூடாது'' என்ற அடித்துச் சொல்கிறார் அவர்.

முதல்வர் உறுதியாகத்தான் இருந்தார். தமிழ்க்குடிமகன் ஒருநாளும் பின்வாங்கியதில்லை. இடையில் முக்கியமான ஒருவர் இருக்கிறாரே? அவர்தாம் கல்வி அமைச்சர்! அவரை ஏன் விட்டுவிட்டார் செந்தில்குமரன்? உண்மைகளை உணர்ந்துதான் அப்படி விட்டாரா?

என்ன காரணமோ தெரியவில்லை; நரம்பியல் வல்லுநர் மரு. பி. இராமமூர்த்தி மட்டும் தமிழ்வழிக் கல்விக்கு எதிராகவே பேசி வருகிறார். 'தினமணி'யில் மடலும் எழுதினார். அதனை எதிர்த்து, சென்னை வானொலியின் முன்னாள் இயக்குநர் 'தமிழ்ச்சொல் அறிவோம்' எனும் நிகழ்ச்சியை வானொலியில் அறிமுகப்படுத்திப் பல்வேறு தமிழ்ச்சொற்களை உலகுக்கு உணர்த்திய விசயதிருவேங்கடம் எழுதுகிறார் பாருங்கள்.

தமிழன் அறிந்ததைத் தமிழ் அறிய வேண்டும்

"நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி எழுதிய பெட்டிக் கடிதத்தைப் (16.12.99) படித்தேன்.

தாய்மொழிவழிக் கல்வி என்பது தமிழுக்கு மட்டுமன்று. உலகத்து மொழிகள் அனைத்துக்கும் பொருந்தும் ஓர் உண்மை. இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் தாய்மொழிக் கல்வி, தமிழகம் அளவுக்குப் புறக்கணிக்கப்பட்டுள்ளதா என்பதை மருத்துவ நிபுணர் ஆராயவேண்டும். உலகில் ஆங்கிலம் அல்லாத மொழி வழங்கும் நாடுகளில் எந்த மொழியில் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது என்பதையும் ஆராயவேண்டும்.

நான் இந்தியாவின் ஆறு மாநிலங்களில் பணியாற்றியவன். மொழி சார்ந்த பணிகளைக் கூர்ந்து கவனித்தவன். தமிழகத்தில் உள்ளதுபோல் தாய்மொழிவழிக் கல்வி பற்றியும் அறிவியல் போன்ற துறைகளுக்கான கலைச்

சொல்லாக்கம் பற்றியும் பூதாகாரமான கருத்து வேறுபாடுகள் அங்கெல்லாம் இல்லை. மேலும் நிபுணர்கள் கண்ட கலைச்சொற்கள் சில நாட்களில் பெருவழக்காகிவிடுகின்றன.

நரம்பியல் மருத்துவ நிபுணர் வலியுறுத்தியுள்ள மற்றொரு செய்தி 'தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழ முடியும்' என்பது. இதை யார் மறுத்தனர்; மறுப்பர்? ஆனால் வேதனைக்குரிய செய்தி என்னவென்றால், அறிஞர் வா.செ. குழந்தைசாமி அடிக்கடி குறிப்பிடுவதைப்போல, தமிழன் அறிந்ததைத்தமிழ் அறியவில்லை என்பதே. ஆம். இன்று உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் தமிழர்கள் கணினி மென்பொருள் முதல் கடற்கலம் கட்டுதல், விண்கலம் ஏவுதல் வரை பல துறைகளில் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார்கள். இவர்கள் தமிழுக்குத் தந்தது என்ன? ஒரு கலைச்சொல்லாவது உண்டா? வா.செ.கு., சுஜாதா போன்றோர் செய்து வரும் பணிகள் ஏராளம். பிற துறைகளிலும் தமிழகத்தில் உள்ள சில வல்லுநர்களே இப் பணி ஆற்றி வருகின்றனர்.

எனவே தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழ முடியும் என்று கூறுவதோடு தமிழர் அனைவரும் தம்மால் இயன்ற அளவுக்குத் தாய்த்தமிழுக்கத் தொண்டாற்ற முன்வந்தாலன்றி தமிழ் வாழாது என்பதை உணர வேண்டும். இதற்கான ஒரு முன் முயற்சிதான் தாய்மொழிவழிக் கல்வி.
- விஜய திருவேங்கடம், சென்னை-73."

அக்காள் வாசந்தியின் கருத்துகளையும் பார்ப்போம் (இந்தியா டுடே 15.12.99)

''தாய்மொழியில் பயிற்றுக் கல்வி சாலச் சிறந்தது என்பதைப் பற்றிய விவாதம் அநாவசியமானது. ஆனால் தமிழ் காணாமல் போனது எப்படி என்கிற ஆய்வு அவசியம். யார் வேண்டுமானாலும் மழலையர் பள்ளியைத் துவங்கலாம், தமிழ் ஒரு பாடமாக இருக்க வேண்டியது அவசியமில்லை, ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கலாம் (இந்திதான் எங்கள் எதிரி) என்கிற கட்டுப்பாடற்ற கொள்கையல்லவா அதற்குக் காரணம்? தமிழ் வழி பயிற்றுக் கல்வி கொண்ட அரசினர் பள்ளிகள் எல்லாம் படுமோசமாக இயங்கியதால் அல்லவா கிராமப் பெற்றோர்களும் தங்களுக்குப் புரியாத ஆங்கில வழிப் பள்ளிகளுக்கு அனுப்ப ஆரம்பித்தார்கள்.''

''இதற்கெல்லாம் பழக்கப்பட்டுவிட்ட மத்திய, உயர் வர்க்கத்துக் குழந்தைகளும் பெற்றோர்களும், பஞ்சாங்கம் போன்ற கற்பனையற்ற, அழகுணர்ச்சி அற்ற தமிழ் பாடப் புத்தகங்களை ஏறெடுத்துப் பார்ப்பார்களா என்பது பெரிய கேள்வி. அவர்களை அதற்கு திடீரென்று நிர்ப்பந்தப்படுத்துவதும் அவர்களது தேர்வு செய்யும் உரிமையைப் பறிப்பதும்

எந்த வகையில் நியாயம்? எல்லாரும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்குப் படையெடுக்கப் போகிறார்கள், தமிழை அம்போ என்று விட்டுவிட்டு'' என்கிறார்.

'கட்டுப்பாடற்ற கொள்கையல்லவா காரணம்' என்கிறார். இது முற்றிலும் உண்மை. 13.5.96இல் கல்வி அமைச்சர் அன்பழகனே ஒரு கட்டுப் பாட்டைக் கொண்டு வரத் தவறிவிட்டார் என்பதுதான் என் குற்றச்சாட்டும்.

'அரசினர் பள்ளிகள் எல்லாம் படுமோசமாக இயங்கியதால்' என்கிறார். இதுவும் உண்மை. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அரசினர் பள்ளிகளில் அமைத்துத் தந்திடப் பேரார்வம் காட்டிவிடவில்லை முந்தைய கல்வி அமைச்சர்கள். அவர் கூறுவதில் தவறில்லை. 'பஞ்சாங்கம் போன்ற கற்பனையற்ற, அழகுணர்ச்சியற்ற தமிழ்ப்பாடப்புத்தகங்கள்' என்று சொல்வதை ஏற்கமுடியாது. சிறந்த வல்லுநர்கள் பாடநூற் குழுவில் இடம்பெற்றபின் பலரும் பாடுபட்டுத் தேடித்தான் பாடங்களை ஒருங்கிணைக்கிறார்கள். 'பஞ்சாங்கம் புத்தியுள்ள' வாசந்தியைப் பாடநூல் குழுத் தலைவராகப் போட்டால், அழகுணர்ச்சி உள்ள தமிழ்ப் பாட நூலைக் கொண்டு வந்துவிடுவாரா? சிலபேர் அள்ளிவிடுவார்கள், அப்படிச் செய்யலாம் இப்படிச் செய்யலாம் என்று. ஆனால் அவர்களையே அந்தப் பொறுப்பில் போட்டுவிட்டால் செயலாற்ற முடியாமல் திணறுவார்கள் (2003இல்) இதை நான் எழுதுகிறபோது இயலிசை நாடகமன்றத்தலைவராக இருந்து மாற்றப்பட்ட டி.எம்.சௌந்தரராசன் நினைவுக்கு வருகிறார். அவர்மிகச் சிறந்த பாடகர். தன் குரல் வளத்தால் எம்.ஜி.ஆர்., சிவாஜி ஆகிய இருபெரும் இயக்கங்களுக்கும் பெருமை சேர்த்தவர். ஆனால் அவரே ஓர் அமைப்பின் தலைவராக இருந்து செயற்பட முடியவில்லையே.

வாசந்தி இதையெல்லாம் உணர்வார் என்று கருதுகிறேன்.

கடைசியாக அவரது எச்சரிக்கை:

'எல்லாரும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்குப் படை எடுக்கப்போகிறார்கள், தமிழை அம்போ என்று விட்டுவிட்டு' (இதற்கானவிடை சொல்லி விட்டோம்)

ஆசிரியர்க்கு மடல்கள்

16.12.99 'இந்து' இதழில் ஒரு மடல்: திருச்சி கே. சுதர்சன் எழுதியது. அதனை அப்படியே தருகிறேன்.

"Sir, - The new millennium will be commanded by computers. Will the students of Tamil Nadu, without much proficiency in English, be

able to survive in this field or has the Government adequate funds to invent all computer languages in Tamil? Higher education in science and technological field has to be taught only in English, the reason for which is lack of books. Does the Government have adequate funds to translate and publish thousands of such books, journals, etc., in Tamil every year?

The Government should be ready to accept the harsh reality that English has become the world language in this century. No one can imagine a world controlled by computers without English in the next millennium. The Government should avoid such short-sighted decisions."

நாங்கள் ஏதோ ஆங்கிலத்தையே தமிழ்நாட்டிலிருந்து அறவே ஒழித்துவிடப் போவதுபோலவும், ஆங்கிலத்தின் தேவையை, இன்றியமையாமையை நாங்கள் உணராதது போலவும் நினைத்துக் கொண்டு புலம்புகிறார் இந்தப் புண்ணியவான். இந்த மரமண்டைகட்கு நாங்கள் என்ன சொன்னாலும் ஏறுவதில்லை.

வரும் நூற்றாண்டு கணினிகளால் ஆளப்படுமாம் சரி. 'போதுமான ஆங்கிலத் திறமையல்லாமல் தமிழக மாணவர்கள் இந்தத் துறையில் தாக்குப்பிடிக்க முடியுமா? அல்லது கணினியில் எல்லாவற்றையுமே தமிழில் கொண்டு வந்துவிட அரசு போதுமான நிதி ஒதுக்குமா?'' என்று கேட்கிறார். ஆறாம் வகுப்பு முதல் ஆங்கில வழியில் படிப்பவர்க்கட்கு, ஆங்கிலத் திறமையல்லாமல் போகுமா? இவர் எழுதுவது 1999இல் - ஆனால் 2004இல் 'என் நூல் என் வீட்டில் உள்ள கணினியில் தமிழில் அச்சாகி இன்று வெளிவந்து விட்டது' எனும் அளவுக்கு முன்னேற்றம். எனவே அவரது வாதம் சொத்தையானது; பத்தாம்பசலித் தனமானது.

அறிவியல், தொழில் நுட்பச் செய்திகள் எல்லாம் உயர்கல்வியில் ஆங்கிலத்தின் மூலமாக மட்டுமே சொல்லித் தரப்பட வேண்டிய நிலை என்றும், காரணம் தமிழில் நூல் பற்றாக் குறை என்றும் கூறுகிறார். பொறியியலின் எல்லாப் பாடங்களுக்கும், தகவல் தொழில் நுட்பம் முறையிலும் பல நூல்கள் தமிழில் வந்துவிட்டன. தோழர் ஒருமுறை சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் வந்து பார்க்கட்டும். பிற நாடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கட்டும். எதையும் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியும் என்பது விளங்கிவிடும். ஒவ்வோராண்டும் ஆயிரக் கணக்கான ஆங்கில நூல்களையும், இதழ்களையும் தமிழில் மொழிபெயர்க்க அரசு நிதி ஒதுக்குமா? என்று கேட்கிறார்?

அரசும் நிதி ஒதுக்குகிறது. போட்டிபோட்டுக் கொண்டு பல தனியார்களும் தமிழில் தொழில் நுட்ப நூல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தோழர்க்குத் தெரியுமா?

"No one can imagine a world controlled by computers without English in the next millennium. The Government should avoid such short-sighted decisions." என்கிறார்.

கணினியில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் உலகம் இனித் தவிர்க்க முடியாதது என்கிறார். 5ஆம் வகுப்பு வரை தமிழில் படித்துவிட்டு, அதற்குமேல் எல்லாப் பாடங்களையுமோ அல்லது ஒரு பாடமாகவோ ஆங்கிலத்தில் பயின்றால் கணினியில் ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியாமல் போய்விடுமா? என்ன முட்டாள்தனமான விவாதம் இது?

'தினமலரில்' மு. செங்குட்டுவன் எழுதிய மடல் கருதத்தக்கது.

தமிழ் இனி மெல்லச் சாகும்....?

'தமிழ் இனி மெல்லச் சாகும்' என்று ஐம்பது ஆண்டுக்கு முன்பே ஒரு கவிஞன் சொன்னது இன்று நிரூபணமாகி வருகிறது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளால் நமது தாய்மொழிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ? என்ற அச்சம் தமிழ் மீது பற்றுள்ள அனைவரிடமும் உள்ளது.

ஒருவன் கல்வி அறிவு பெறுவதற்கு தாய்மொழி மூலம் கற்பதுதான் பயன்தரும் என்று கூறுவது சரியல்ல. தாய்மொழி கல்வியை முதல் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை கட்டாயமாக்குவது எல்லா வகையிலும் சரியானதே. தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் முதல் மொழிப்பாடமாக ஆங்கிலம் உள்ளது. இரண்டவாது மொழிப்பாடம் மாணவர்களின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது மொழிப்பாடத்தில் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், பிரஞ்சு, ஜெர்மன் மற்றும் உருது போன்ற மொழிகளில் ஏதாவது ஒன்று கற்பிக்கப்படுகிறது. தமிழைத் தவிர மற்ற மொழிகளில் மதிப்பெண் அதிகம் கிடைப்பதால் எல்லாரும் பிற மொழியை பாடமாக தேர்ந்தெடுக்கின்றனர். இந்த நிலையை மாற்ற இரண்டாவது மொழிப் பாடமாக தமிழைக் கட்டாயப்படுத்திவிட்டு கூடுதலாக மொழிபடிக்க விரும்பும் மாணவர்களுக்கு மூன்றாவது மொழிப்பாடமாக மற்ற மொழிகளை கற்றுத் தரலாம்.

தற்போது பிளஸ்2 தேர்வில் உயிரியல், பவுதிகம். ரசாயனம் ஆகிய பாடங்களில் பெற்ற மதிப்பெண் சராசரி அடிப்படையில் மருத்துவ படிப்பிற்கு தேர்வு செய்கிறார்கள். அதேபோல் கணிதம், பவுதிகம், ரசாயனம் ஆகிய பாடங்களில் பெற்ற மதிப்பெண் சராசரி அடிப்படையில் இன்ஜினியரிங் படிப்பிற்கு தேர்வு செய்கிறார்கள். அதற்கு பதிலாக இந்த பாடங்களுடன் தமிழில் வாங்கும் மதிப்பெண்களை சேர்த்து சராசரி நிர்ணயித்தால் மாணவர்கள் பிளஸ்2 நிலையில் தமிழிலும் அக்கறை செலுத்தி படிக்க வாய்ப்பு ஏற்படும்.

எனவே தமிழை போதனா மொழியாக கொண்டுவர வேண்டும் என்று கூறும் அரசியல்வாதிகள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் எந்த போதனா மொழிபள்ளியில் படிக்கிறார்கள் என்பதை சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எந்த ஒரு முடிவையும் எடுப்பதற்கு முன்பு தற்போதுள்ள நிலையை மாற்றாமல் தேவையான திருத்தத்தை மட்டும் செய்தால் அந்த முடிவு அனைவரும் எதிர்பார்க்கும் நல்ல பலனை கொடுக்கும்.''

இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் வெளிவந்த துணைஆசிரியவுரை (20.12.99) மிகவும் கருதத்தக்கது. அதனை அப்படியே தருகிறேன்.

"Much ado about Tamil

Mothertongue is the best medium of instruction Ever since the Justice Mohan Commission's recommendations on the medium of instruction in schools were reported, there has been much hue and cry over the qustion in Tamil Nadu. With the recent announcement of the state government's decision to implement the rcommendations, it seemed for some time at least that hell had broken loose. The decision was roundly denounced as chauvinistic and as one that endangerd the students' future and encriached on the parental prerogative. The hard words were soon followed by action. Managements of about 1,500 schools went on a day's strike earler this month to protest what was pictured as an evil portent for education in the state and employment for its youth. The allegations, coming as they did from articulate sections of opinion, have gone uncontested and indeed earned wide endorsement. Seldom was so much fuss made by so many about so little. A moment's dispassionate look at the broad details of the recommendations and the decision should have sufficed to show how uncalled-for really the controversy as well as the agitation was.

The disinformation about the decision quates it with the Angrezi hatao (Remove English) order of Mulayam Singh Yadav as Chief Minister of Uttar Pradesh. This, in turn, prompts anxious queries from well-wishers on whether the lesson of Est Bengal, where the government has been forced by an agitation to reintroduce English in early schooling, has not been lost on the Southern state. III- infotmed critics of the decision are also claiming that the Maharashtra government's introduction of English in primary schools under its control clinches their case. The point is that English has not been, and is not being banished from schools in Tamil Nadu. It is just that Tamil is being made the medium of instruction up to Class V in government-run and government-aided schools. Tamil is not being 'imposed' inside Tamil Nadu. The schools affiliated to the Central Board of Secondary Education (CBSE) and those for students with the other Southern languages of Malayalam, Telugu, and Kannada have been explicitly excluded from the purview of the decision. Is there any state where the local language, if developed enough for this minimal purpose, is not the medium of instruction up to the primary level in government run and aided schools? if not, what makes such a practice so dreadfully chauvinisti only in the DMK-ruled state?

It is opposition to such legitimate steps that can provide grist to the mills of 'Dravidian' chauvinism. Which has found more objectionable evidence in earlier measures like the government's order prescribing the prominent use of Tamil in the signboards of shops. It is difficult to avoid the conclusion that the main worry of the agitating school managements is not related to the merits of English as a medium of instruction at this level, but that middle class parents may not send their children to Tamil-medium primary schools. The proliferation of English-medium 'teaching shops' of such priorities has, actually, been accompanied by a decline in the standard of English in the state. What is needed is better teaching of English in schools.

இதில் சில வரிகள் உண்மையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

''The decision was roundly denounced as chauvinistic and as one that endangered the students; future and encroached on the parental prerogative"

தமிழில் ஒரு முயற்சி மேற்கொண்டால் ஒரு கூட்டம் எப்படி அதற்குச் சாயம் பூசிக் காட்டிவிடும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

மற்றோர் இடம் அருமை: ஆங்கிலம் இதற்கு முன்போ இப்போதோ பள்ளிகளில் இருந்து ஒதுக்கப்படவில்லை. தமிழ் ஏற்கெனவே ஐந்தாம் வகுப்பு வரை பயிற்று மொழியாக உள்ளது. தமிழ் ஒன்றும் தமிழ்நாட்டில் திணிக்கப்படவில்லை. (இப்படிச் சிலர் புலம்பத் தொடங்கி விடுவதும் உண்டு) அதைத்தான் தெளிவுபடுத்துகிறார்) சிபிஎஸ்இ (CBSE) பள்ளிகளோ பிற தென்னகமொழிகளாகப் பயிற்று மொழிகளாய் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளோ விலக்களிக்கப்பட்டுள்ளன.

வேறு எந்த மாநித்திலாவது இத்தகைய தேவையற்ற எதிர்ப்பு உண்டா என்றும் கேட்கிறார்.

புலம்பிகளே! இவை உங்கள் காதில் விழுகிறதா?

(18.12.99 The Hindu) கிறிஸ்டோபர் இராய் என்பவர் எழுதுகிறார்:

"Now in Tamil Nadu we have another ugly spectre of a needless controversy over the use of Tamil as the medium of instruction in primary schools, snowballing into a contentious issue, because of the views of a handful of politicians. Where is the need for this sudden declaration of love and loyalty to one's mother tongue in this manner? Who are these people to decide the fate of our children?"

'ugly spectre' என்கிற்ார் தோழர். இந்த அளவுக்குக் கருத்துச் சுதந்திரம் இருக்கிறது தமிழ்நாட்டில் என்று எடுத்துக் கொள்ளவேண்டும். கர்நாடகத்தில் இப்படி ஒருவர் எழுதி விடுவாரா? குசராத்தில் எல்லாமட்டத்திலும் குசராத்தி மொழிதானே! அங்கே கேட்பாரா இந்தத் தோழர். எங்கள் குழந்தைகளின் தலைவிதியை நிர்ணயிக்க இவர்கள் யார்? என்று மாயா சரஸ்வதி எழுதுகிறார்.

சப்பானில்தான் ஆக்ஸ்போர்டு அகராதி அதிக அளவில் விற்பனையாகிறது என்கிறார்.

ஆக்ஸ்போர்டு அகராதியை வாங்குவதாலேயே சப்பானில் LKG முதல் 5ஆம் வகுப்பு வரை அனைவரும் ஆங்கிலவழியில்தான் படிக்கிறார்களா? இல்லையே. சீனாவில் என்ன நிலையென்று மாயா அறியார். நான் அறிவேன். 'சீன நாடும் சின்ன நாடும்' எனும் என் நூலில் முழு விளக்கமும் உள்ளது.

'English language is helpful' என்று கருதுவதுவேறு. 'It is indispensable' என்று கருதுவது வேறு. மாயாவுக்கு இந்த வேறுபாடு விளங்குமா?

அவரது இரு கேள்விகள் இவை.

"Let it solemnly swear that children of all Ministers and legislators and other leaders and workers of the ruling party will, without exception, adopt Tamil medium exclusively - and all jobs in the Government will be exlusively reserved only for those who have studied in Tamil medium right up to the university level." இரண்டுமே சரியானவைதான். ஆனால் இவற்றுக்கு ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறார்.

ஆனால் விருதுநகர் கே. இராசு சரியாக எழுதுகிறார்.

"It is beyond one's imagination how using one's mother tonue as the medium of instruction can be called imposition. If the Government had started offering Tamil medium in all Government schools and colleges from the primary level to higher education and cared to maintain a good standard and if it had passed an order giving those students priority in Government employment, this situation would not have arisen. Even now, the Government can think of reserving one section in each class for English medium and having all other sections in Tamil medium." இவரது கருத்து ஆழ்ந்து எண்ணிப் பார்ப்பதற்கு உரியது.

தினமலரில் (21.12.99) தெய்வ மணிகண்டன் எழுதிய மடலில் அருமையான தெளிவு இருக்கிறது:

'தமிழ் பயிற்று மொழி பாடத்திட்டம்' என்பது இப்போது தமிழ்நாடு முழுவதும் பெரிய சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது. சர்ச்சைக்கு காரணகர்த்தாக்களான தமிழக அரசும், ஆங்கில வழிக்கல்விப் பள்ளிகளும் தங்கள் வழிமுறைகள் இதமாக்கிக்கொண்டால், இதில் பிரச்னை என்பதே இல்லை.

அந்நாளில், எல்.கே.ஜி., யு.கே.ஜி., செல்லாமல் திண்ணை பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தமிழை மட்டும் பயின்று, பின் முதலாவது பாரம் என்று சொல்லப்படும் ஆறாம் வகுப்பில்தான் ஆங்கிலமே மொழிப்பாடமாக சொல்லிக் கொடுக்கப்பட்டது. மற்ற பாடங்கள் பள்ளியிறுதி வகுப்பு வரை தமிழில்தான் பயிற்றுவிக்கப்பட்டன.

அந்த முறையில்தான், எங்கள் ஊரான வத்திராயிருப்பில் பிறந்து, திண்ணைப் பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்று, பின் முறையே 20 கி.மீ., 40கி.மீ., தொலைவிலுள்ள திருவில்லிபுத்தூர், சிவகாசி நகரங்களுக்குச் சென்று உயர்நிலைப் பள்ளியில் படித்து, பின்னாளில் மிகப்பெரிய இந்திய விஞ்ஞானி எனப் பெயர் பெற்றார் டாக்டர் கிருஷ்ணன். இந்திய தேசிய பவுதீக ஆராய்ச்சிக் கழகத் தலைவரான டாக்டர் கே.எஸ். கிருஷ்ணன் அவர்களும், கோவை விவசாய பல்கலைக்காக துணைவேந்தராக பணியாற்றி, தற்போது டாக்டர் சுவாமிநாதன் பவுண்டேஷனில் பணிபுரியும் டாக்டர் சோலை ஜெயராஜ் அவர்களும் ஆங்கில நர்சரியை நாடியவர்கள் அல்லவே.

வியாபார நோக்குடன், ஆங்கிலத்தில் பேசும் திறனற்ற, பாடமுறை அறியாத ஆசிரியர்களைக் கொண்டு செயல்படுவதால், குழந்தைகளுக்கு புத்தகச் சுமைதான் ஏறுமே தவிர கல்வியறிவு ஏறவில்லை.

இந்தக் கல்வியாண்டில் ஆரம்பத்தில், தமிழில் பயிற்றுவிக்கும் பள்ளிகளுக்குத்தான் அரசு அங்கீகாரம் என அறிவித்து, அங்கீகாரம் பெறாத பள்ளிகளை கண்டிப்புடன் மூடியிருந்தால் பாராட்டலாம். ஆனால், அரையாண்டுத் தேர்வு நடைபெறும் வேளையில் அறைகூவல் விடுவது கேலிக் கூத்தாகிறது.

நடந்தவை நடந்தவையாகக் கருதி, இனி நடப்பவை நல்லவையாக நடக்க அடுத்த கல்வியாண்டிலிருந்து இந்த சட்டத்தை அரசு அமல்படுத்தினால் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் நாட்டு மக்களுக்கும் நல்லது."

தமிழ்வழிக் கல்விக் கழகத்தின் செய்தி மடல் ஒரு தெளிவான கட்டுரையைத் தருகின்றது.

தமிழ் வழிக் கல்வி

அறிவு உலகத்தை வளமைப்படுத்துகிறது. கல்வி அறிவு பெறும் வழி. கற்பித்தல் என்பது செய்திகளை சொல்லித் தருதலோ விளக்குவதோ அல்ல.

கல்வி என்பது மாணவர்களின் உள்மனச் சிந்தனை அறிவைத் தூண்டி செம்மையுறச் செய்து மேலும் வளர்த்தெடுப்பது.

அக்கல்வி தாய்மொழியில் அமையாது ஆங்கிலத்திலோ வேறு மொழியிலோ அமைந்தால் புரிந்து கற்றலுக்கு உதவாத மனப்பாடக் கல்வியாக, பெரும் சுமையாக அமையும். பிற மொழிக் கல்வி - மொழியைப் புரிதல், பாடத்தைப் புரிதல் என இரட்டைச் சுமையுடையது. அத்தோடு அது குமுகாய

அக்கறையோ, மாந்த நேயமோ இல்லாத அறிவு எந்திரங்களை உருவாக்கிக் குமுக சீரழிவிற்கு வழிவகுக்கிறது.

கல்வி தாய்மொழியில் அமையும்போதே தக்க பயன் தரும். உலகில் முன்னேறிய நாடுகளின் முன்னேற்றம் அவர்களின் தாய்மொழி வழிக்கல்வியிலேயே செயல்வடிவம் கண்டிருக்கிறது.

தமிழ் நம் தாய்மொழி. தமிழ்மொழி நம்முடைய பண்பாட்டு தேசிய இன அடையாளம் கொண்டது. எனவே தமிழ்நாட்டில் தமிழே கல்வி மொழியாக, பயிற்று மொழியாக அமைதல் வேண்டும். தமிழில் படிக்கும் சூழலில் நம் மாணவர்கள் கற்பதைத் தெளிவாகப் புரிந்து சிந்தனை வழிப்படி கற்கமுடியும். புதியன சிந்தித்துப் படைக்க முடியும். பலதுறை அறிஞர்களாக முடியும். எனவே தமிழ்வழிக் கல்வி என்பது நம் அடிப்படையான உடனடித் தேவையாகின்றது.''

இந்தியா டுடே (22.12.99) இருதரப்பிடமிருந்தும் கருத்துகளைப் பெற்றுச் செய்திகளை வெளியிட்டுள்ளது. அவற்றைப் பார்ப்போம்.

''இனி தமிழில்தான் பாடம்

ஆரம்பப் பள்ளிகளில் தமிழ் அல்லது தாய்மொழியில் மட்டுமே கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்கிற தமிழக அரசின் ஆணை தமிழக கல்வியாளர்களை, பெற்றோர் மத்தியில் பலத்த சர்ச்சையை உருவாக்கி இருக்கிறது.

''*எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமானால் நான் இன்றே நம் மாணவர்கள் அந்நிய மொழி மூலம் கல்வி கற்பதை நிறுத்திவிடுவேன். எல்லா ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் உடனே தாய்மொழி மூலம் கற்பிக்கும்படி கட்டளையிடுவேன். எதிர்ப்பவர்களை வேலையிலிருந்து விலக்கிவிடுவேன். பாடப்புத்தகங்கள் தயாராகும் வரையில் காத்திருக்கமாட்டேன்'' - மகாத்மா காந்தி,* 22-6-1947. அரிஜன் பத்திரிகை.

தாய்மொழிக் கல்வியின் அவசியத்தையும் அதன் நடைமுறைசிக்கல்களையும் இதைவிட அழகாக யாராலும் சொல்ல முடியாது. காந்தி இதை சொல்லி 50 வருடங்களாகின்றன. ஆனால் இன்று வரை இதில் பெரிய மாற்றமில்லை என்பது தற்போது தமிழ்நாட்டில் நிரூபணமாகிவருகிறது. அடுத்த வருடத்திலிருந்து (2000-2001) தமிழக ஆரம்பப் பள்ளிகள் அனைத்திலும் (சி.பி.எஸ்.ஈ., ஆங்கிலோ இந்திய பள்ளிகள் தவிர) ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழியிலேயே பாடங்கள் நடத்தப்படவேண்டும் என்கிற தமிழக அரசின் கடந்த மாத அரசாணையை ஆதரித்தும் எதிர்த்தும் தீவிர விவாதங்கள் வெடித்திருக்கின்றன.

ஆதரிப்பவர்கள் தமிழ் வளர்ச்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாக வர்ணிக்கிறார்கள். எதிர்ப்பவர்கள் தமிழ அரசு சர்வாதிகார பாணியில் "தமிழைத் திணிப்பதாக" சொல்கிறார்கள். "திணிப்பு என்ற வார்த்தைப் பிரயோகமே தப்பு'' என்று சீறுகிறார் தமிழ் ஆட்சி மொழி மற்றும் கலாச்சார அமைச்சர் மு. தமிழ்க்குடிமகன். "தமிழ்நாட்டில் தமிழ்க் குழந்தைகளிடம் வணிக நோக்கத்துக்காக ஆங்கிலத்தைத் திணிப்பவர்கள்தான் எங்களைப் பார்த்து தமிழைத் திணிப்பதாக சொல்கிறார்கள்"என்றார்.

ஆனால் அமைச்சரின் விளக்கம் தமிழகத்திலுள்ள சுமார் 15 ஆயிரம் ஆங்கிலவழிப் பள்ளிகளின் நிர்வாகிகளைத் திருப்திப்படுத்தவில்லை. தமிழகத்திலுள்ள மெட்ரிகுலேஷன், நர்ஸரி பள்ளிகள் அனைத்தும் அரசை கண்டித்து டிசம்பர் 8ஆம் தேதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தன. அரசு ஆணையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏற்கனவே இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. "அரசு ஆணை சர்வாதிகாரமானது. இதை எதிர்த்து இறுதிவரை போராடுவோம்" என்கிறார். தென்னிந்திய நர்ஸரி, ஆரம்ப, மெட்ரிக் உயர்நிலை பள்ளிகள் சங்க நிறுவனர் டி. குணசேகரன், "தன் குழந்தை எந்த மொழியில் படிக்கணும்கிறதை முடிவு செய்ய வேண்டியது பெற்றோரே தவிர, அரசாங்கமல்ல. அதிலும் அரசாங்கத்திடம் எந்த உதவியும் கேட்காத பள்ளிகள், தங்கள் மாணவர்களுக்கு எந்த மொழியில் பாடம் நடத்தணும்னு சொல்றதுக்கு அரசாங்கம் யார்?" என்கிறார் அவர். தமிழக அரசின் அரசாணை அடிப்படை உரிமையை மீறிய செயல் என்கிறார் பிரபல வழக்கறிஞர் கே.எம். விஜயன். "இந்திய அரசியல் சட்டப்படி கருத்து சுதந்திரம் என்பது ஒவ்வொரு இந்தியனுக்கும் அடிப்படை உரிமை. கருத்து சுதந்திரம் என்பது தகவல் பெறும் உரிமையை உள்ளடக்கியது. கல்வி என்பது அடிப்படையில் தகவல் பெறும் உரிமை என்பதால் எந்த மொழியில் கல்வி கற்கவேண்டும் என்பதை அரசாங்கம் நிர்ணயிக்க முடியாது. அது தனிமனித அடிப்படை உரிமையில் தலையிட்டதாக ஆகிவிடும்" என்கிறார். இவர் மெட்ரிகுலேஷன் சங்கங்களின் சார்பில் விரைவில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்போகிறார். "ஒரு வழக்குன்னு வந்தா தமிழக அரசாணை நிக்காது."

சட்டப் பிரச்னைகளுக்குப் போவதற்கு முன் தமிழ்வழிக் கல்வி பற்றிய தமிழக அரசாணையின் அடிப்படைகளைத் தெரிந்து கொள்வது அவசியம். 19.11.99 தேதியிட்ட தமிழக அரசாணையின் படி தமிழகத்திலுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்பு வரை இனிமேல் தமிழ் அல்லது தாய்மொழியிலேயே அனைத்துப் பாடங்களும் நடத்தப்படும். 5ஆம் வகுப்பு முடிந்து 6ஆவது வகுப்புக்கு செல்லும் போது தமிழ் அல்லது ஆங்கில வழிக்

கல்விக்கு மாணவர்கள் மாறிக் கொள்ளலாம். இந்தக் கல்வியாண்டு முதல் (2000-2001) அறிமுகப்படுத்தப்படும் இந்தத் திட்டம் படிப்படியாக 2003க்குள் முழுமையாக அமலாக்கப்படவேண்டும். மத்திய அரசு பாட திட்டப்படி தமிழ்நாட்டில் நடத்தப்படும் 187 சி.பி.எஸ்.ஈ பள்ளிகளுக்கும் (ஆங்கிலோ இந்தியர்களின் தாய்மொழி ஆங்கிலம் என்பதால்) இதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி 40,000 அரசு பள்ளிகள், 2,037 பதிவு செய்யப்பட்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகள், 2,500 பதிவு செய்யப்பட்ட நர்ஸரி பள்ளிகள், சுமார் 10,000 பதிவு செய்யப்படாத நர்ஸரி பள்ளிகள் அனைத்துக்கும் இது பொருந்தும்.

ஒரு பக்கம் இந்த அரசாணை அவசரக் கோலத்தில் கொண்டுவரப்பட்ட "கிறுக்குத்தனமான உத்தரவு" என்று விஜயன் போன்றவர்கள் விமர்சித்தாலும், தமிழக அரசு இந்த விஷயத்தில் மிகுந்த பொறுப்போடும் பொறுமையோடும் நடந்துகொண்டிருப்பதாக சொல்கிறார் மூத்த கல்வியாளர் வி.சி. குழந்தைசாமி. இந்த பிரச்னையை ஆராய தமிழக அரசு நியமித்த ஓய்வு பெற்ற நீதிபதி மோகன் தலைமையிலான குழுவில் உறுப்பினராக இருந்த இவர், "இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இல்லாத எதையும் இந்த அரசு சொல்லவில்லை. இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டு, மொழிவழி சிறுபான்மையினரின் நலன்களையும் பாதுகாக்கும் விதமாக இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கு" என்கிறார். இந்த அரசாணை ஆங்கிலத்துக்கு எதிரானது அல்ல என்பதை உறுதியாக சொல்லும் அவர், "ஆங்கிலம் ஒரு மொழியாக கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எங்கள் குழு தெளிவாக பரிந்துரை செய்திருக்கு. 3ஆம் வகுப்பு முதல் ஆங்கிலம் படிக்கவும் வசதி செய்யப்படும்" என்கிறார். தாய்மொழிக் கல்விதான் இயற்கையானது, எளிமையானது, குழந்தைகளுக்குப் பிடித்தமானது என்பதை உலகம் முழுவதும் உள்ள கல்வியாளர்கள், குழந்தை மனோதத்துவவியலாளர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். அறிவியல்பூர்வமாகவும் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. "அப்படியிருக்கும்போது தமிழக அரசாணை எந்த விதத்தில் தப்புன்னு சொல்லறாங்கன்னே புரியல".

தமிழக பெற்றோர்கள் பலர் இந்த அரசாணையை எதிர்ப்பதால் நாங்களும் எதிர்க்கிறோம் என்கிறார். தமிழ் நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கென்னடி ராமச்சந்திரன். அரசாங்கத்தின் சார்பில் 40,000 தமிழ்வழிக் கல்வி பள்ளிகள் நடத்தப்படும் நிலையில் அதை விரும்பாத பெற்றோர்கள்தான் சொந்த பணத்தை செலவழித்து தனியார் நடத்தும் ஆங்கிலவழிப் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளை சேர்க்கிறார்கள்.

"அப்படியிருக்கும்போது அவர்களின் உரிமையைப் பறிக்க அரசுக்கு என்ன அதிகாரம் இருக்கு. அந்த அந்த பெற்றோர்கள் எல்லாம் அரசாங்கத்துக்கு எதிராக கொதிச்சி போயிருக்காங்க" என்கிறார். பெற்றோர்கள் கொதித்துப்போய் இருக்கிறார்களோ இல்லையோ. இந்தப் பள்ளிகளை நடத்துபவர்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள் என்பது உண்மை. "அரசாங்கம் சொல்றபடி தமிழ்வழி பள்ளிகள் நடத்தினா எங்க பள்ளிகளில் யாரும் பிள்ளைகளை சேர்க்கமாட்டாங்க. நாங்கள்ளாம் ஸ்கூல இழுத்து மூடிட்டுப் போகவேண்டி இருக்கும்" என்கிறார் குணசேகரன். தமிழை ஒரு கட்டாயப் பாடமாக வைப்பதை யாருமே எதிர்க்கவில்லை. "தமிழ்வழிக் கல்வியைத்தான் எதிர்க்கிறோம்".

ஆனால் குழந்தைசாமி இதில் மாறுபடுகிறார். பொதுமக்கள் மத்தியில் தங்கள் குழந்தைகளுக்கு ஆங்கிலப் புலமை வேண்டும் என்கிற பரவலான ஆசை இருப்பதை ஒப்புக்கொள்ளும் அவர். "ஆரம்பப் பள்ளியிலிருந்தே ஆங்கில வழிப் பாட திட்டத்தின் மூலம்தான் ஆங்கிலமொழிப் புலமை கிடைக்கும் என்பதை மறுக்கிறார். "ஆங்கிலத்தை ஒரு பாடம் என்கிற அளவில் ஒழுங்கா நடத்தத் தெரிந்த ஆசிரியர்கள் இல்லை என்பதுதான் நிஜம். இங்கு பணிபுரியும் நூற்றுக்கு 90 சதிவீதம் ஆசிரியர்கள் தமிழ் மீடியத்தில் படித்துவிட்டு கஷ்டப்பட்டு ஆங்கிலத்தில் பாடமா நடத்துபவர்களே தவிர ஆங்கில மொழிப் புலமை உள்ளவர்கள் அல்ல". இதனாலேயே தமிழ் வழிக் கல்வி கற்பிப்பதற்கு புதிய ஆசிரியர்களைத் தேடி இந்த தனியார் பள்ளிகள் போக அவசியம் இருக்காது. இருக்கும் ஆசிரியர்களையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிறார். இந்த அரசாணையை வெகுவாக வரவேற்றுள்ள பா.ஜ.க. பொதுச்செயலாளர் இல. கணேசன், "மதரீதியான சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு இந்த அரசாணை பொருந்தாது என பிரச்சாரம் செய்யப்படுகிறது. இதில் அரசின் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்" என்கிறார்.

மீனா ஸ்வாமிநாதன், வி.ஆர். தேவிகா போன்ற பிரபல குழந்தைக் கல்வியாளர்கள் பலரும் தாய்மொழிக் கல்வி திட்டத்தை வரவேற்கிறார்கள். "குழந்தைகளுக்குத் தாய்மொழியில் கற்பிக்கும்போது அந்தப் பாடம் மட்டும்தான் புதுசு. ஆனா அதே பாடத்தை ஆங்கிலத்தில் சொல்லும்போது மொழியும் புதுசு. பாடமும் புதுசு. பிஞ்சு வயசுலேயே இரண்டு சுமையை சுமக்க வேண்டிய நிர்பந்தம் தேவையில்லை" என்கிறார் தேவிகா. ஆரம்பக் கல்வி தாய்மொழியில் இருக்க வேண்டும். ஆங்கிலம் ஒரு பாடமாக 3ஆம் வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்டு 5ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை தீவிரமாக பயிற்சி அளிக்கப்பட வேண்டும். "அதுக்குப் பிறகு ஆங்கிலவழிப் பாடமா,

தாய்மொழிவழிக் கல்வியாங்கிறதை அந்தந்த மாணவர்களே தீர்மானிச்சுக்கிறலாம்.'' அரசாங்கப் பள்ளியில் தமிழ் வழிக் கல்வி பயின்ற அப்துல் கலாம் இன்று இந்திய அரசாங்கத்தின் அறிவியல் ஆலோசகராக உயர்ந்திருப்பதை சொல்லும் தமிழறிஞர் தமிழண்ணல், "தாய் மொழியில் படித்தால் விஞ்ஞான அறிவு வளராதுன்னு சொல்றவங்களுக்கு அவரைவிட சரியான பதில் வேற இருக்கமுடியாது'' என்கிறார்.

ஆனால் இதெல்லாம் விதிவிலக்குகள் என்கிறார் குணசேகரன். "அதனால்தான் தமிழ் தமிழ்னு மேடையிலே பேசற தி.மு.க. அமைச்சர்களின் பிள்ளைகள் எல்லாம் ஆங்கிலவழிக் கல்வியில் தனியார் பள்ளிகளில் படிக்கிறாங்க. இவங்க பிள்ளைகளுக்கு ஒரு நீதியா?'' என்கிறார். இதற்கு தி.மு.க. தரப்பிலிருந்து நேர்மையான பதில் சொல்ல ஆளில்லை. அமைச்சர்கள் யாரும் தயாரில்லை. "ஒரு கொள்கையைப் பேசுபவனின் இரட்டை வேஷத்தை காரணம்காட்டி கொள்கையையே தப்புன்னு சொல்லக்கூடாது''என்கிறார் தி.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் அருள்மொழி.

தமிழக அரசு தற்போது கொண்டுவந்திருக்கும் அரசாணை. அண்டையிலுள்ள ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது என்பது தான் விசேஷம். அங்கெல்லாம் எழாத சர்ச்சை தமிழகத்தில் மட்டும் எழக்காரணம் இங்கே மொழி அரசியலாகி 60 ஆண்டுகளாகிறது. 1937ல் துவங்கிய இந்தித் திணிப்பு எதிர்ப்பு அரசியல் 1965ல் இந்தியாவையே உலுக்கும் அளவுக்குத் தீவிரமடைந்தது. இதன் விளைவுதான் இந்திய ஆட்சி மொழியாக ஆங்கிலம் இன்று வரை நீடிக்கிறது. திராவிடக் கட்சிகளால் "இந்தி எதிர்ப்புக் கவச"மாக உருவகப்படுத்தப்பட்ட ஆங்கிலம் தமிழ்நாட்டில் தழைத்தோங்கியதற்கு இது முதல் காரணம். அடுத்த காரணம். அ.தி.மு.க. ஆட்சி. 1967க்கும் 1976க்கும் இடையிலான தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட தமிழ்வழிக் கல்விக்கான தொடர் முயற்சிகள் 1977 முதல் 1987 வரை நடந்த எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் சுத்தமாகக் கைவிடப்பட்டன. நேர்மாறாக ஆங்கிலவழி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அரசு ஆதரவுடன் பல்கிப் பெருகின. இதே நிலை 1991 முதல் 1996 வரை நடந்த ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.. ஆட்சியிலும் தொடர்ந்தது. 1996ல் திரும்ப ஆட்சிக்கு வந்த தி.மு.க., மீண்டும் தன் பழைய மொழிக்கொள்கையை தூசி தட்டியதன் விளைவு. தற்போதைய தமிழ்வழிக் கல்வி அரசாணை.

ஒரு பக்கம் தமிழ்வழிக் கல்வி விஷயத்தில் தி.மு.க. அரசு "தெளிவாகவும் திடமாகவும் உறுதியாகவும் இருப்பதாக'' முதல்வர் மு. கருணாநிதி

சொன்னாலும் அவருடைய அமைச்சர்கள் மற்றும் கட்சிக்காரர்களில் பலரே இதற்கு எதிராக செயல்படுவதாக சொல்லப்படுகிறது. உதாரணமாக தமிழ்வழிக் கல்வியை எதிர்த்து வழக்கு தொடுத்திருக்கும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் சங்கத்திற்கு சமூக நலத்துறை அமைச்சர் சற்குண பாண்டியன் தான் புரவலர். சங்கத்துக்கும் அரசுக்கும் சமாதானம் செய்யும் வேலையில் சற்குணம் இறங்கியிருப்பதாக சொல்கிறார் கென்னடி ராமச்சந்திரன். "3ஆவது வகுப்பு வரையாவது தமிழ் வழிக் கல்விக்கு ஒத்துக்கங்கன்னு எங்கிட்ட அமைச்சர் கேட்டார். நாங்க அதுக்கு சுத்தமா முடியாதுன்னுட்டோம்'' அதேபோல் அரசை தீவிரமாக எதிர்க்கும் குணசேகரனின் சங்கத்துக்கு தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.வும் அண்ணாநகர் பகுதி தி.மு.க. செயலாளருமான சோ.மா. ராமச்சந்திரன்தான் புரவலர். அவர் தமிழ்வழிக்கல்வியை எதிர்ப்பதில் சங்கத்தின் நிலையை ஆதரிப்பதாக சொல்லப்படுகிறது. "அவர் மட்டுமல்ல; கருணாநிதி, அன்பழகன், தமிழ்க்குடிமகன் மூணுபேரைத் தவிர மத்த எல்லா அமைச்சர்களுமே இதை எதிர்க்கிறாங்க'' என்கிறார் குணசேகரன். இந்தப் பின்னணியில் பார்க்கும்போது தி.மு.க. அரசின் தமிழ்வழிக் கல்வி பற்றிய அரசாணை குறித்து பலவித சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

இந்தச் சர்ச்சைகளெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் தமிழ்வழிக் கல்வியின் நிஜமான வெற்றி தோல்வி தமிழக மக்கள் இந்த விஷயத்தில் காட்டக்கூடிய ஆதரவு அல்லது எதிர்ப்பைப் பொறுத்தே அமையும் என்பதில் சந்தேகமில்லை. 1965ல் மொழிக்காகத் தீக்குளித்த தமிழ்நாட்டில் இன்று அந்த அளவு தமிழ்ப்பற்று இல்லை என்பதற்கு மூலைக்கு மூலை முளைத்திருக்கும் ஆங்கிலவழிக் கல்வி நர்ஸரி பள்ளிகளே சாட்சி. "தமிழ் மொழி வர்த்தக வியாபார மொழியல்ல என்பதுதான் காரணம்'' என்கிறார் விஜயன். தமிழர்களின் அன்றாடத் தேவைகளான வேலைவாய்ப்பு, வியாபாரம். தகவல் தொடர்பு போன்றவற்றில் ஆங்கிலம் அவசியமானதாக இருக்கிறது. "தமிழனின் அன்றாட பயன்பாட்டிற்கு தமிழ் பயன்படாத போது தமிழ்வழிக் கல்விங்கிறதெல்லாம் ஊர ஏமாத்தற வேலை.''

பத்து மாதம் சுமந்து பெற்ற தாயையே வயதான காலத்தில் சுமையாக நினைத்து முதியோர் இல்லத்தில் கொண்டுபோய்விட்டுவிடும் அளவுக்கு தமிழ் சமுதாயம் பயன்பாடு சார்ந்ததாக மாறிவரும் நிலையில், தமிழ்வழிக் கல்வியின் வெற்றி தோல்வி அதன் பயன்பாட்டைப் பொறுத்தே அமையும். அதற்கு அரசு என்ன செய்யப்போகிறது என்பதுதான் முக்கியமான கேள்வி.''

## பேட்டி : தமிழ்க்குடிமகன்

**“அவசரப்படவில்லை''**

*ஊருக்குப் போற அவசரத்திலும் தமிழ்வழிக் கல்வி பற்றிய சர்ச்சைகளுக்கு சளைக்காமல் பதில் சொன்னார் அமைச்சர் தமிழ்க்குடிமகன் பேட்டியிலிருந்து:*

கேள்வி: தமிழக அரசு அவசர அவசரமாக இந்த ஆணையை பிறப்பித்ததாக சொல்லப்படுதே?

பதில்: இல்லை. உரிய அறிஞர்களைக் கொண்ட குழுவை நீதிபதி மோகன் தலைமையில் அமைத்து இது பற்றிய சாதகபாதகங்களை விரிவாக ஆராய்ந்து, சகல தரப்பினரிடமும் கருத்து கேட்டு அமைச்சரவையில் விவாதித்து தெளிவான முடிவெடுத்திருக்கிறோம். தாய்மொழிக் கல்விதான் சிறந்ததென்று உலகம் முழுவதும் நிரூபிக்கப்பட்டதைத்தான் நடைமுறைப்படுத்தச் சொல்கிறோம்.

கேள்வி: தங்கள் பிள்ளைகள் எந்த மொழியில் கல்வி கற்பது என்பது பெற்றோர் உரிமை. அரசு அதில் தலையிடக்கூடாதுன்னு சொல்றாங்களே?

பதில்: தங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில்தான் படிக்கவேண்டும் என்று நினைக்கின்ற பெற்றோர் தாராளமா அப்படிபடிக்க வைக்கலாம். அதுக்கு தடையில்லை. ஆனால் அவர்கள் அரசாங்கத்திடம் அங்கீகாரம் கேட்கக்கூடாது. அரசு அங்கீகாரம் வேண்டுமென்றால் அரசின் விதிகளுக்குக் கட்டுப்படவேண்டும். இது தான் உலகம்பூரா உள்ள அரசு நடைமுறை. இந்தியை பரப்பறதுக்கு இந்தி பிரச்சார சபா இருக்கிற மாதிரி ஆங்கிலத்தை பரப்ப ஆங்கில பிரச்சார சபா நடத்தட்டும். நாங்க தடுக்கலையே.

கேள்வி: இவ்வளவு தூரம் தமிழ் பற்றி பேசற தி.மு.க. அரசிலுள்ள அமைச்சர் வீட்டுப் பிள்ளைகள் ஆங்கிலவழிக்கல்வியில்தானே படிக்கறாங்க?

பதில்: கடந்த காலத்தைப் பத்திபேசறதில் பயனில்லை. இனிமேல் அவர்களும் தமிழில்தானே படிக்கவேண்டும். அவர்களுக்கு ஒன்றும் விதிவிலக்கு கொடுத்துவிடவில்லையே.

கேள்வி: ஆங்கிலவழி தனியார் பள்ளிகள் வளர்வதற்கு, அரசு பள்ளிகளின் தரமின்மையும் முக்கிய காரணமில்லையா?

பதில்: இந்த ஒப்பீடு பள்ளிகளுக்கு மட்டுமல்ல. வங்கிகளுக்கும் இன்னபிற துறைகளுக்கும் கூட பொருந்துமே. அந்த விவாதம் இங்கு தேவையில்லை.

கேள்வி: மெட்ரிக் பள்ளிகள் எல்லாம் சி.பி.எஸ்.இ.க்கு மாறப்போறதா சொல்றாங்களே?

பதில்: மாறட்டும். பிறகு அதைப் பத்தி பேசலாம்.

கேள்வி: மொழிவழி சிறுபான்மை பள்ளிகள் அதிகம் பாதிக்கப்படும்னு சொல்லப்படுதே?

பதில்: இல்லை. தமிழ்நாட்டிலிருக்கும் 1008 மொழிவழி சிறுபான்மை பள்ளிகள் இனிமேல் அவங்கவங்க மொழியிலேயே கல்வி கற்கலாம்னு தான் நாங்க சொல்றோம். இதில் என்ன தவறு?

இதில் எங்கள் பக்கத்தில் உள்ள சரியான முயற்சிகளைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இராணி (26.12.99) இதழில் ஒரு கட்டுரை. ஆசிரியர் அ.மா. சாமி எழுதியது. நல்ல விளக்கம் தருகிறது கட்டுரை.

"எல்லாத் தொடக்கப்பள்ளிகளிலும் முதல்வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் பாடம் நடத்தவேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் ஆணைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அதற்கு மூன்று முக்கியக் காரணங்களைக் கூறுகிறார்கள். அவை:-

1. ஆங்கிலத்தில் படித்தால்தான் அறிவு வளரும்.
2. ஆங்கிலத்தில் படித்தால்தான் வேலை கிடைக்கும்.
3. ஆங்கிலத்தில் படித்தால் வெளிநாடுகளில் போய், மேலே படிக்க முடியும்; அல்லது வேலை செய்ய முடியும்.

ஆனால், இந்த மூன்றுமே தவறானவை!

அறிஞர் முடிவு

குழந்தைகள் தாய் மொழியில்தான் கல்வி கற்கவேண்டும். அதுதான் அவர்களின் அறிவுவளர்ச்சிக்கு உகந்தது என்று உலகம் முழுக்க உள்ள அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், ஒருவர் தமிழே படிக்காமல் பி.ஏ., எம்.ஏ. என்று பட்டம் பெறக்கூடிய கேவலம் தமிழ் நாட்டில் மட்டுமே இருந்தது. அந்த இழிவைத்தான் இப்போது தமிழ்நாடு அரசு துடைத்திருக்கிறது.

இதனால் குழந்தைகளின் அறிவு வளர்ச்சி குறையுமா? குறையாது என்பதற்கு, இன்றைய இந்தியாவின் முதல்தர அறிவியலார் அப்துல்கலாமே சாட்சி! அவர் தமிழில் படித்தவர்! எனவே, தமிழில் படித்தால் மாணவர்களின் அறிவுவளர்ச்சி குறைந்துவிடும் என்று கூறுவது அடிப்படையில்லாதது ஆகும்.

மேல்படிப்பு

மேல்படிப்பு படிக்க - வெளிநாடுகளுக்குப் போய் பெரிய பெரிய படிப்புகள் படிக்க ஆங்கிலம் வேண்டுமே என்பார்கள்!

சரி, எத்தனை பேர் மேல்படிப்பு படிக்கிறார்கள்? வெளிநாட்டில் போய்ப் படிக்கிறார்கள்?

பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் சேரும் மாணவ மாணவிகளில் நூற்றில் ஒருவர் கல்லூரிக்குள் நுழைவது இல்லை! வெளிநாட்டுக்குப் படிக்கப் போகிறவர் இலட்சத்தில் ஒருவர்கூட இருக்கமாட்டார்! இவர்களுக்கான பள்ளிக்கூடத்தில் படிக்கும் அத்தனை பிள்ளைகளும் ஆங்கிலத்தில்தான் படிக்க வேண்டும் என்பது என்ன நியாயம்?

பட்டிக்காட்டுப் பிள்ளைகள் தமிழில் படிக்கிறார்கள்; பட்டினத்துப் பிள்ளைகள் ஆங்கிலத்தில் படிக்கிறார்கள். குப்பன் மகனும், சுப்பன் மகளும் தமிழில் படிக்கிறார்கள். பெரிய இடத்துப் பிள்ளைகள் ஆங்கிலத்தில் படிக்கிறார்கள். இது படிப்பிலும் ஒரு ஏற்றத்தாழ்வை உண்டாக்குகிறது. இது தேவையா? எல்லாரும் தமிழில் படித்தால் இந்த ஏற்றத்தாழ்வு நீங்கும் அல்லவா?

வேலை கிடைக்குமா?

தமிழ்நாட்டில் படித்தவர்கள் - பட்டம் பெற்றவர்கள் வேலை தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஆங்கில வழி படித்தவர்கள். ‘ஆங்கிலம் படித்தால்தான் வேலை கிடைக்கும். தமிழ் படித்தால் வேலை கிடைக்காது’ என்று எப்படிச் சொல்லுகிறார்கள்?

‘தமிழ்நாட்டில் வேலை கிடைக்காவிட்டாலும், மும்பாய், டெல்லி, கல்கத்தா என்று வேலைக்குப் போகலாமே’ என்பார்கள். டெல்லி, மும்பாய், கல்கத்தாவில் ‘வேலைக்கு ஆள் தேவை’ என்று விளம்பரம் போட்டுக்கொண்டா

இருக்கிறார்கள்! வடநாட்டில் எத்தனை இலட்சம் பேர் வேலை தேடிக்கொண்டிருக்கிறார்கள்!

இன்றைக்கும் பல இலட்சம் தமிழர்கள் வடக்கே வேலை பார்க்கிறார்கள்; தொழில் செய்கிறார்கள். இவர்களில் ஒருவர் கூட இந்தியோ, ஆங்கிலமோ படித்துக் கொண்டு, வடக்கே போனவர்கள் அல்ல! மும்பாய்க்கு, டெல்லிக்குப் போய், இந்தி பேசக் கற்றுக்கொண்டவர்கள்!

## வெளிநாடுகளுக்கு

ஆங்கிலம் படித்தால்தானே வெளிநாடுகளுக்குப் போக முடியும் என்பதும் தவறு!

ஐரோப்பாவில் இங்கிலாந்தில் மட்டுமே ஆங்கிலம். மற்ற நாடுகளில் அவரவர் தாய் மொழியே ஆட்சி. வேலைக்கு - மேற்படிப்புக்கு என்று ஜெர்மனி, பிரான்ஸ், ரஷியா என்று போகிறவர்கள் முதலில் ஒரு ஆறு மாதம் தாங்கள் போகும் நாட்டின் மொழியைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். இதற்காக அவர்கள் முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற அவசியமில்லை!

யாழ்ப்பாணத்தில் நூறாண்டுகாலமாக மருத்துவக் கல்வி (டாக்டர் படிப்பு) தமிழில் கற்றுத் தருகிறார்கள். அந்த மருத்துவர்கள் இன்று உலகம் முழுக்கத் தொழில் செய்கிறார்கள்!

## தொழில் செய்யுங்கள்!

ஆங்கிலேயன் போய்விட்டாலும், ஆங்கில மாயை இன்னும் நம்மிடமிருந்து போகவில்லை. எனவேதான், இத்தனை சப்பைக்கட்டுகள்!

அன்றைக்கு ஆங்கிலம் ஆட்சி மொழி. ஆட்சி நடத்த ஆங்கிலம் படித்தோர் தேவைப்பட்டார்கள். எனவே, அடிமைகளையும் ஆங்கிலம் படிக்க வைத்தான், ஆங்கிலேயன்! இன்று மாறிவிட்டதே! ஆங்கிலம் படித்தால் வேலை என்று ஏன் இன்னும் அடிமைகளை உற்பத்தி செய்ய வேண்டும்?

'வேலைக்குப் போகத்தான் படிப்பு' என்ற தத்துவமே தவறு. படித்துவிட்டு. சொந்தத் தொழில்கள் தொடங்க வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு டாடாவாக, ஒரு பிர்லாவாக வளர்ச்சி அடைய வேண்டும். அதுதான் நாட்டுக்கும் நல்லது! வீட்டுக்கும் நல்லது!!''

நித்திலக்குவியல் (திசம்பர் 1999) இதழ் ஓர் ஆசிரியவுரை எழுதியுள்ளது.

பாரதி மீண்டும் தோன்றினால்!

“நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்”

என்று பாடிய பைந்தமிழ்ப் பாவலர் தேசியக்கவி பாரதி மறுபடியும் இன்று தோன்றினால் ‘நிலைகெட்ட மனிதரை’ என்பதை மாற்றி ‘நிலைகெட்ட தமிழரை’ என்று பாடுவார். அந்த அளவிற்குத் தமிழ் நாட்டில் தமிழரிடையே மூடக் கொள்கைகளும், பழக்க வழக்கங்களும், அதனால் சாதிச் சமயக் கொடுமைகளும் மலிந்துள்ளன; அஞ்சி அஞ்சிச் சாவும் அவலநிலை தோன்றியுள்ளது; தாய்மொழி உணர்வும் தன்மானமும் குறைந்து வருகின்றன. இந்நிலை காணவோ பாரதி விடுதலை முழக்கம் செய்தார். சிந்திக்கவேண்டும்.

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாரதி விடுதலை பெற்ற திருநாட்டில் ‘எல்லாரும் கல்வி கற்று, பன்னரும் கலை ஞானத்தால் பராக்கிரமத்தால் உன்னத இமயமலை போல் சிறந்து விளங்க வேண்டும்’ என்று கனவு கண்டார்.

இந்நாளில் (11.12.99லும்) அவர் கண்ட கனவை, காணவிரும்பிய திருநாட்டை முழுமையாக நாம் நிறைவு செய்யவில்லை. பைந்தமிழ்ப் பாவலர் பாரதி, பக்திப் பாடல்கள், தேசிய கீதங்கள், பல்சுவைப் பாடல்கள், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு பாஞ்சாலி சபதம் ஆகிய காவியங்கள். பல்வகைப் பாடல்கள் சமூகம், வசன கவிதைகள் ஆகியவற்றைப் படைத்து, ஆன்மீக வாதிகளும், இலக்கியப் படைப்பாளர்களும், அரசியல் அறிஞர்களும் பெண்களும், சாதாரண மக்களும், தொழிலாளர்களும் விழிப்புணர்வு பெற்று நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டவர்களாய், ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கொண்டு, உழைப்பையும் விடா முயற்சியையும் மேற்கொண்டு, அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தோங்க ஒருமைப்பாட்டுணர்வுடன் வாழவேண்டும் என எண்ணினார். தன் எண்ணத்தைக் கவிதையின் வாயிலாகத் தாய்மொழியில் - தமிழில் வெளியிட்டார். தன் கருத்தைப் பெரியவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், வருங்காலக் குடிமக்களாகிய மழலையர் ஏற்றுக் கொள்வார்கள் என உறுதியாக நம்பினார்; பாப்பாவுக்காகப் பதினாறு பாடல்களைப் பாடினார்.

உடம்பை வளர்ப்பது உணவு. அறிவை வளர்ப்பது கல்வி. அக்கல்வியை ஏழைகளுக்குத் தருவது அறங்களும் தலையாய அறம் என்பதை,

**“இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்**
**இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்**

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்''

என்று வலியுறுத்திச் சென்றார் பாரதி.

கல்வியைத் தாய்மொழிவழியாகக் கற்பிக்க வேண்டும் என்று அறிஞர் பெருமக்களும், கல்வித்துறை வல்லுநர்களும் கூறியுள்ளனர். இந்தியப் பெருநாட்டில் அனைத்து மாநிலங்களிலும் அவரவர் தாய்மொழி வழியாகக் கல்வி கற்க வேண்டும் என்ற அறிவுப்பசி மக்களிடையே வளர்ந்து வருகின்றது. இவர்களின் கனவு இன்று தமிழக அரசால் ஓரளவு நிறைவுசெய்யப்பட்டுள்ளது - அவர்களை உளமாரப் பாராட்டி வரவேற்கின்றோம்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ், அறிவியல் தமிழ் என்னும் இனிய மொழியைக் கேட்கின்றோம். படிப்பது ஓரினம், பாராளுவது மற்றோரினம் என்ற நிலைமாற வேண்டும். எல்லோரும் கல்வி கற்று இல்லாமையும் கல்லாமையும் நீங்கி வாழவேண்டும் என்பதே பாரதியின் எண்ணமாக இருந்தது. தமிழனின் நிலையையும், தமிழின் சிறப்பையும் அதனை எவ்வாறு உலக அரங்கில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதைத் தம் பாடல்களில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஆயினும் இன்றைய தமிழின் நிலை என்ன? எண்ணிப் பார்க்கும்போது வேதனைதான் விஞ்சுகின்றது. தமிழர் இல்லங்களில் தமிழ் உலவுகிறதா? பிஞ்சுக் குழந்தைகளின் மம்மி, டாடி, ஆண்ட்டி, அங்க்கிள் என்றுதான் பேசுகிறார்கள். அவ்வாறு பேசுவதையே பெற்றோர்கள் விரும்பி வரவேற்கின்றனர். அந்தக் குழந்தைகளுக்கு வைக்கும் பெயர்களும் நல்ல தமிழில் இல்லை. இந்நிலை காணவோ பாரதி ஏழு வயது முதல் காலமெல்லாம் பாடினார்.

தமிழகமெங்கும் - சிற்றூர்களிலும் பேரூர்களிலும் நகரங்களிலும் ஆங்கிலப் பள்ளிகள். மெட்ரிக் பள்ளிகள் தெருவெல்லாம் தோன்றியுள்ளன. ஆங்கிலமும் இந்தியும் பிஞ்சு உள்ளங்களில் திணிக்கப்படுகின்றன. அப்பள்ளிகளில் மிகுந்த கட்டணம் கட்டித் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதில் பெற்றோர்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றனர். இளம் பருவத்தில் தாய் மொழியைப் புறக்கணித்து வேற்றுமொழி பயில்வது இரவல் இதயத்தால் வாழ்வதற்கு ஒப்பாகும். இரவல் இதயத்தால் எத்தனை நாள்

வாழமுடியும்? பிற மொழிகளைப் பயில்வதை வேண்டா என்று கூறவில்லை; மாணவர்கள் தாய்மொழியில் பயின்று அறிவு பெற்றால்தான் பிற மொழிகளை எளிதாகக் கற்கலாம்; எதிர்காலத்தில் சிறந்த அறிஞர்களாக ஆற்றல் மிக்கவராக விளங்கலாம். தமிழன் தமிழனாக வாழ வேண்டாவா? தமிழ் மாணவர்கள் கல்வி கற்க, ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகள் தேவைதானா? அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். பாரதி இன்று தோன்றினால் இந்த வினாவைக் கேட்டுத்தான் இருப்பார். 'நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட தமிழரை நினைந்து விட்டால்' என்று கண்ணீர் வடிப்பார்.

கல்வித்துறை மட்டுமல்லாமல் தமிழ்மக்கள் நடத்தும் அங்காடிகள் மன்றங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் நல்ல தமிழ்ப் பெயர்ப்பலகைகளைக் காணோம்; பழகு மொழியிலும் ஆங்கிலமே முதலிடம் பெறுகின்றது. இந்நிலைமை தொடர்ந்தால் தமிழனென்று சொல்ல முடியுமா? தலைநிமிர்ந்து நிற்க முடியுமா? ஒரு வினாடி சிந்தித்துப் பாருங்கள்.

தமிழை ஆட்சிமொழியாக்குவதற்கு 1956இல் சட்டம் இயற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து பல்வேறு ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டன. தமிழ் ஆட்சி மொழியாக இன்றுவரை முழுமையாக நிறைவு பெறவில்லை. மொழிக் கொள்கையை வலியுறுத்தியே சான்றோர் பேரவையும், தலைநகர்த் தமிழ்ச் சங்கமும், பிற தமிழ் அமைப்புகளும், தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் சென்னை மாநகரில் கண்டோர் கேட்டோர் வியக்கும் வண்ணம் பேரணியும் மாநாடும் நடத்திக் காட்டினர். மாணவர் மன்றமும் நித்திலக்குவியலில் வலியுறுத்தி எழுதியுள்ளது.

தமிழ்நாட்டில் மழலையர் பள்ளிமுதல் மருத்துவம் பொறியியல், வேளாண்மை சட்டம் தொழில் நுட்பம் ஆகிய தொழிற் கல்விவரை தமிழைப் பாடமொழியாகவும், பயிற்றுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் ஆக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய மொழிக் கொள்கையைத் தமிழ் அறிஞர் குழுவை அமைத்துச் செயல்படுத்த வேண்டும். அனைத்து அரசியல் கட்சிகளும் தங்கள் தேர்தல் அறிக்கையில் மொழிக் கொள்கையை அறிவிக்க வேண்டும். தமிழ் பயிற்றுமொழிக் கொள்கையை மேனிலையில் தொடங்கினால் கீழ்நிலையில் தானாகவே இடம் பெறும். மருத்துவம், தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் பெற்ற மதிப்பெண்களையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும்; தமிழைப் பாடமொழியாகவும் பயிற்றுமொழியாகவும் படித்த மாணவர்களுக்குத் தமிழக அரசு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும்; தனியார் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை அது முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலைமையை மாற்றித் தமிழக அரசு தமிழைப் பயிற்றுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் உறுதியாக நடைமுறைப் படுத்த வேண்டும். இதனையே தேசியக்கவி பாரதி இன்று தோன்றினால் வலியுறுத்துவர்; ஆனால் தோன்ற மாட்டார். அவர் சார்பில் நாமும் இதனையே வலியுறுத்துகின்றோம். பைந்தமிழ் பாவலர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் அவர் கண்ட கனவை கூறிச் சென்ற - பாடிச் சென்ற கருத்துகளைச் செயல்படுத்துவதே அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்; நமது கடமையுமாகும்.''

எல்லா இதழ்களும் தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தியே அமைகின்றன. அவற்றை விளக்கமாகப் படித்தாலேயே தமிழக அரசின் முயற்சி எவ்வளவு சரியானது என்பது தெரியும்.

இந்தியன் எக்சுபிரசு (27.12.99) இதழில் ஆசிரியர்க்கு 5 மடல்கள்

காரைக்குடியிலிருந்து பிரவீன் எழுதுகிறார்.

"Because of the change to be introduced, almost 99 per cent of the educated parents would rush to CBSE schools for their children to be admitted. The early birds get their children enrolled but what about others. Is this doing justice to our wards and the development of our country" (விளக்கம் ஏற்கெனவே தரப்பட்டுள்ளது)

சென்னையிலிருந்து வி.எஸ். ஜெயராமன் எழுதுகிறார்.

"In today's context, where the technological advantages are far too many, we are able to convey, communicate and transact business worth crores of rupees - thanks to the enormous growth of information technology. It, therefore, becomes necessary for one to know a language which is best understood the worldover i.e. English."

'to convey, communicate and transact business worth crores of rupees' என்கிறார். இதெல்லாம் எந்த வயதில்? 5ஆம் வகுப்புப் படிக்கும் பத்து வயதிலா? கோடிக்கணக்கான வணிகத்துக்கான பொறுப்பினை எந்தத் தந்தை 10 வயதுப் பாலகனிடம் ஒப்படைக்கிறார்? ஏன் இந்தப் பித்தலாட்டம்?

எம்.ஜே.எம். நாராயணன் என்பவர் எழுதுகிறார்.

"Children of forward classes can acquire English knowledge even if it is not taught in schools. On the strength of this knowledge they can get jobs anywhere in India and the world."

5ஆம் வகுப்பு முடிந்ததும் உலகெங்கும் வேலைக்குப் போய்விடுவார்களா? வசதி படைத்த குடும்பத்துப் பிள்ளைகளாக இருந்தாலும் இதுதான் உண்மையா?

மேலும் கவலைப்படுகிறார். அரசாணையை நிறைவேற்றினால் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகள்தான் பாதிக்கப்படுவார்களாம். ஆடு நனைகிறதே என்று ஓநாய்கள் எவ்வளவு கவலைப்படுகின்றன? பாவம் ஓநாய்கள்!

இந்தியன் எக்சுபிரசு ஆசிரியவுரை இது. Much ado about Tamil அதில் என்று It is said in the editorial that English is not being banished from shools in Tamil Nadu, but it is just that Tamil is being made the medium of instruction up to class V in government - run and government - aided schools என்று எழுதப்பட்டுள்ளது. 'English is not being banished' என்று தெளிவுபடுத்தப்பட்டும் சென்னை கே. பிரதீப் அதை உணராமல் தத்துவம் பேசுகிறார்?

சென்னையிலிருந்து ஸ்ரீவத்சா எழுதுகிறார். இவர் 'தமிழ் வழிபாடு' தொடர்பாகவும் இந்த இதழ்களில் எழுதியவர். இவரது 'மேதைத்தனம்' எப்படியிருக்கிறது பாருங்கள்!

"Barring Justice Mohan, all other members are Tamil scholars only. Could anyone having modicum of common sense ever envision that Tamil pundits would ever suggest the continuance of English medium in nursery and Matriculation schools, which goes against their grain, when English itself is beyond their kin?"

அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த முனைவர் வா.செ. குழந்தைசாமி, 'நீரியல்' துறையில் உலக வல்லுநர்களில் ஒருவரான பொறியாளர். அடுத்து ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர். ஆங்கிலத்தின் அழகையும் ஆழத்தையும் நன்கு அறிந்தவர்கள் இவர்கள். இவர்களையும் ஸ்ரீவத்சா 'தமிழ்ப் பண்டிதர்கள்' வரிசையில் சேர்த்துவிட்டாரா? இப்படி அறியாமல் எழுதித்தான் தங்கள் அறியாமையை வெளிச்சம் போட்டுக் காட்டி விடுகிறார்கள் இவர்கள். இதற்குமேல் இவர் போன்றவர்களைக் கருதிடாமல் ஒதுக்கி உதறுவதே சரியாகும்.

குமுதத்தைப்போலவே 'கல்கண்டு' இதழும் தமிழ்வழிக்கல்விக்குச் சார்பாக எழுதியது (கல்கண்டு 30.12.99)

## தமிழை எதிர்க்கும் தமிழர்கள்!

"மெட்ரிகுலேஷன் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பு வரை கண்டிப்பாகத் தமிழே பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் பிறப்பித்த உத்தரவின்படி நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் பாடங்களில் ஏதேனும் இரண்டு பாடங்களை தமிழ்மொழி வாயிலாகக்கற்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளிகளின் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.டி.குமார் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்திருக்கிறார். இரண்டு பாடங்களைத் தமிழ்மொழி வாயிலாக இது கற்பிக்க வேண்டும் என்பதை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கு.

இந்த வழக்கு முடிவுபெறாத நிலையில் கடந்த மாதம் 19ஆம் தேதி தமிழக அரசு மற்றோர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் மொழி வாயிலாக எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டும் என்றும், 2000 ஆண்டிலிருந்து முதல் வகுப்பில் தமிழ்மொழியைப் பயிற்றுமொழியாக அமல்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகப் பயில்விக்க வேண்டும் என்கிறது புதிய உத்தரவு.

அப்போது இந்தியை எதிர்த்து, ஆங்கிலத்தை ஆதரித்த தி.மு.க., இப்போது பதவியில் இருந்துகொண்டு தமிழை ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது நியாயமா என்று கேட்கிறது ஒரு கூட்டம்.

தமிழகத்தில், நகரங்களிலும் சிற்றூர்களிலும் உள்ளவர்கள் தமது பிள்ளைகள் ஆங்கிலம் படிக்க வேண்டும். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதன் விளைவாகத் தமிழை ஆதரிக்கும் பல அரசியல்வாதிகள் கூட தமது பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளில் கான்வெண்ட்டில் படிக்க வைக்கிறார்கள்.

எந்தப் பாடத்தையும் ஆங்கிலத்தில் படித்தால்தான் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். அகில உலக அளவில் அறிவைப் பெறமுடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

தமிழ் அல்லது தாய்மொழியை கட்டாயமாகப் பயிலவேண்டும் என்று ஒரு நிபந்தனை இருப்பதால் தமிழை ஒரு பாடமாக அதுவும் முக்கியமான பாடமாக படித்து வருபவர்கள் உண்டு.

இப்போது நடப்பது கம்ப்யூட்டர் யுகம். கம்ப்யூட்டர் பயின்றுவிட்டு வெளிநாடுகளுக்குப் போகிறவர்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் தெரிந்திருக்கவேண்டும் என்ற நிலை.

கம்ப்யூட்டர் வருவதற்கு முன்கூட இன்ஜினீயர்களும் டாக்டர்களும் ஆங்கிலத்தில் பாடங்களைப் படித்தால் தான் வெளிநாடுகளில் வேலை செய்ய முடியும் என்று நினைத்தார்கள்.

ஒருவர் எந்த மொழியில் பாடங்களைக் கற்க வேண்டும் என்பது அவரவர்களது அடிப்படை உரிமை.

தமிழகத்தில் ஆங்கிலம் அல்லது தமிழில் மட்டுமே பாடங்களை நடத்துகிறார்கள். ஒரு சில பள்ளிகளில் தெலுங்கில் பாடங்களை நடத்துகிறார்கள்.

வடநாட்டில் வேலை தேடிப்போகிறவர்கள் இந்தி கற்றால்தான் முன்னேற முடியும் என்ற நிலையில் இந்தியைக் கற்பவர்களும் அதிகரித்து வருகிறார்கள்.

தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த பல பிள்ளைகள் ஆங்கில மீடியத்தில் படிப்பதுடன் தாய்மொழிக்குப் பதில் ஆங்கிலப் பாடத்தைக் கற்பதும் அதிகமாகி வருகிறது.

ஆங்கில மோகம் அதிகமாகிவிட்டதால், நாளுக்கு நாள் தமிழ் புறக்கணிக்கப்படுவதால், தமிழ் கற்ற ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. இதனால் தமிழ் ஆசிரியர்கள் போராட்டங்களைத் தொடர்ந்தார்கள்.

மத்திய அரசு, இந்தியில் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்த போதிலும் இந்தி பேசாத மாநிலங்களுக்கு ஆங்கிலத்தில் உத்தரவுகளை அனுப்பி வருகிறது. மத்திய மாநில அரசுகளுக்கு இடையே ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருந்துவருகிறது.

தமிழக அரசு பொதுவாக எல்லா உத்தரவுகளையும் தமிழில் அனுப்பி வருகிறது. அரசுக் கோப்புகளில் கூடத் தமிழில் தான் எழுதவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டாலும், தமிழ் தெரியாத ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் இருப்பதால் நிறையப் பைல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

தி.மு.க.தலைவர்கள் ஆங்கிலச் சொற்களை நீக்கி, முழுக்க முழுக்கத் தமிழில் பேசியும், எழுதியும் வந்தே மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறார்கள். மேடைத் தமிழை வளர்த்த பெருமை இவர்களையே சேரும்.

அதுமட்டுமின்றி தி.மு.க. அரசு பதவியில் இருந்த காலத்தில்தான் ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் சரியான தமிழ் மொழியை பயன்படுத்தினார்கள். உதாரணமாக, டெலிபோன் என்பதை தொலைபேசி என்றும், பஸ் என்பதை பேருந்து என்றும், டிரைவரை ஓட்டுநர் என்றும் குறிப்பிட்டதை யார் மறக்க முடியும்?

தமிழக அரசின் சார்பில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. ஆனாலும் தனியார் நடத்தும் மழலைப் பள்ளிகள் பெருகிவிட்டன என்பது அரசின் கருத்து.

தனியார் பள்ளிகள் பாடங்களைத் தமிழில் நடத்தியிருந்தால் இந்தப் பிரச்சனை இல்லை என்று கூறுவதுடன், பிள்ளைகள் அப்பா அம்மாவைக்கூட 'டாடி, மம்மி' என்றே மேலைநாட்டு கலாசாரத்துடன் அழைக்கின்றன என்பதும் ஒரு வாதம்.

தனியார் பள்ளிகளில், பள்ளி வளாகங்களில் தமிழில் பேசினால் தண்டனை என்று வரம்பு மீறிச் செயல்படுவதாகவும், பயிற்சி பெறாத பலர் தெருவுக்கு தெரு மழலைப் பள்ளிகளைத் தொடங்கி நடத்துகிறார்கள் என்றும் இங்கே உள்ள ஆசிரியர்கள் பலர் முறைப்படி ஆசிரியர் பதவிக்குப் படித்தவர்கள் இல்லை என்றும் அரசு கூறுகிறது.

இந்தித் திணிப்பை எதிர்த்ததால் நாம் பின்னடைந்து விட்டதாகச் சிலர் கூறுவதை அரசு மறுக்கிறது. இந்தியைத் தனியாகப் படிக்க, இந்தி பிரசார சபா இருக்கிறது என்று குறிப்பிட்டு, பீகாரில் 35 லட்சம் பேரும், உத்தரப்பிரதேசத்தில் 40 லட்சம் பேரும் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்களையும் எடுத்துக் கூறியிருக்கிறது.

'ஆந்திராவில் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தெலுங்குதான் பயிற்று மொழி என்று ஆந்திர அரசு சமீபத்தில் உத்தரவிட்டிருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மோகன் தலைமையிலான குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்கிறது தமிழக அரசு.

தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளிகள் அளித்த கருத்துக்களை மோகன் தலைமையிலான குழு ஏற்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

அரசின் இந்த ஆணையால், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஆசிரியர்களும் 50 ஆயிரம் ஆசிரியர் அல்லாத அலுவலர்களும் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கூறப்படுகிறது.

தமிழ் மூலம் பிற பாடங்களையும் பயிலுவதில் உள்ள நடைமுறைச் சிரமங்கள் பள்ளிகளில் பெரிதுபடுத்திப் பேசப்படுகின்றன. பள்ளிகளில் காலங்காலமாகத் தமிழ்மொழி அடியோடு புறக்கணிக்கப்பட்டதால்தான் இப்படியொரு அதிரடியான முடிவை அரசு மேற்கொள்ள நேரிட்டுவிட்டது.

பள்ளிகளுக்குத் தமிழை முழு அளவில் கொண்டு வருவதன் மூலம் ஏற்படப்போகும் இடர்பாடுகளை அரசு பரிவுடன் பரிசீலிக்க வேண்டும். சிக்கல்~~கள்~~களையப்பட வேண்டும். அதற்காகத் தமிழே வேண்டாம் என்று விலகிப் போவதை நல்ல தமிழ் உணர்வு உள்ள எவரும் ஏற்கமாட்டார்கள்.

தமிழ்நாட்டிலேயே தமிழுக்கு எதிர்ப்புக் கிளம்பியிருப்பதை ஜீரணிக்கவே கடினமாக இருக்கிறது.

தமிழ்மொழிக் கல்விக்கான முட்டுக் கட்டைகள் உடைத்தெறியப்பட வேண்டும்.

தமிழக அரசு இந்த விஷயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். தமிழினம் இந்த முக்கியமான காலகட்டத்திலாவது கருத்து ஒருமித்து ஒன்று பட்டு நிற்கட்டும்!"

இந்தக் கட்டுரையில் வெளியிடப்பட்டவை மூன்று படங்கள்:

'வலுவாகச் சிபாரிசு செய்த நீதிபதி மோகன்' படம் ஒன்று. கலைஞர் படத்துக்கு மேல் 'செயல் படுத்துவதில் ஆர்வம்' என்றும் என் படத்துக்கு மேல் 'ஆக்கபூர்வமான பிடிவாதம்' என்றும் கல்கண்டு தலைப்பிட்டு எங்களை மகிழ்வித்திருக்கிறது.

'தமிழக அரசு இதில் உறுதியாக இருக்கவேண்டும்' என்கிறது 'கல்கண்டு.' அரசு - அரசின் கல்வித்துறை - உறுதியாக இருந்ததா? அல்லது உலட்டி விட்டதா?

# இயல் இருபத்தொன்பது - உ

## வழக்குக் காலம் - 2000

தமிழ்ப்பாவை (1.1.2000) இதழ் எழுதுகிறது.

''தமிழ்ப் பயிற்றுமொழி அண்மையில் தமிழக அரசு அறிவித்துள்ள முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை தமிழில் கற்க வேண்டும் என்ற திட்டத்தை வரவேற்கிறோம்.

தமிழ்நாட்டில் தமிழனுக்குப் பிறந்தவர்கள் இதை எதிர்க்கிறார்கள், நீதிமன்றம் செல்கிறார்கள் என்றால் அப்பேர்ப்பட்டவர்கள், பள்ளி தொடங்கிய ஆரம்ப நிலையில் அவர்களின் நிலை என்ன? அவர்களின் அசையும் சொத்து அசையா சொத்து எவ்வளவு? வங்கியில் யார் யார் பெயரில் கணக்குள்ளது என்பவற்றை ஆய்வு செய்ய ஆய்வுக்குழு ஒன்று (விசாரணைக்கமிசன்) அமைக்கத் தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்''.

இதையெல்லாம் செய்திருந்தால் எத்தனையோ பேர் பிடிபட்டிருப்பார்கள் என்பது உண்மைதானே!

அதே 'இந்தியன் எக்சுபிரசு' (8.1.200) இதழில் சென்னை, 'தமிழ் மாந்தன்' எழுதுகிறார். அவர் எழுதுவதைப் படியுங்கள்.

''I spoke in Tamil in the presence of the members of the commission about the greatness of Tamil. Everyone present in the hall enjoyed that part of my speech. But when I said that most modern subjects of science and technology needed to be taught only in the modern world language of English from the level of primary school itself there was pandemonium in the hall and to my agony, even one or two members of the Justice Mohan Commission shouted me down".

"I , myself, am a recent convert to English medium. For decades, I was for Tamil and Tamil only. I named my children Tamil Malar and Tamil Muthu. Though I am a scholar in Tamil, all my unlimited Tamil did not give me a chance to learn even a tenth of what limited English has now offered me".

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் தொடர்பான பாடங்கள் எல்லாம் 'modern world language' ஆன ஆங்கிலத்தால் போதிக்கப்பட வேண்டும் என்றாராம். அதுவும் தொடக்கப்பள்ளியிலிருந்தே...... என்றாராம்.

இந்த மடலே இட்டுக் கட்டப்பட்ட ஒரு பெயரால் எழுதப்பட்டதோ, என்பதுதான் எனக்குரிய ஐயம்.

சீனாவோ, சப்பானோ, பிரான்சோ, செருமானியோ எந்த நாடானாலும் ஆங்கிலம் உலகமொழி என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. தமிழ் மைந்தனைப் போன்ற நூற்றாண்டுகால அடிமைகட்கு - கிணற்றுத் தவளைகட்கு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் ஏறவில்லை. அங்கெல்லாம் ஆங்கிலம் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது; எந்த வகுப்பிலிருந்து பயன்படுத்தப்படுகிறது; பயிற்றுமொழியாக - பாடமொழியாக (Subject) எங்கெங்கே பயன்படுத்தப்படுகிறது என்பதனை அறிந்து கொண்டு பேசுவது நல்லது. அப்போதாவது அவர் வீட்டில் தமிழ் மலரும். தமிழ் முத்தும் சரியான கல்வி நோக்கிச் செல்வார்களா என்று பார்ப்போம்.

இதுவரை ஆங்கிலத்திலேயே பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்களாம். இனி அவர்களெல்லாம் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்க மறுபயிற்சி செய்ய வேண்டுமாம். அடடா! என்ன கவலை பாருங்கள்!

ஏதோ, மழலையர் பள்ளிகளிலும் மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் எல்லாம் கேம்பிரிட்ஜ், ஆக்சுபோர்டு, ஹார்வேர்டு பல்கலைக்கழகங்களில் பயின்றவர்கள் போலவும், பல ஆண்டுகள் பணியாற்றுவார்கள் போலவும் அவர்கள் தமிழ்நாட்டுக்கு அழைக்கப்பட்டு மேற்கண்ட பள்ளிகளில் ஆங்கிலத்திலேயே சொல்லிக் கொடுப்பதுபோலவும், அவர்கள் தமிழுக்கு மாறுவது மிகவும் கடினம் என்பதுபோலவும் கதை விடுகிறார் தோழர். இதழ் கையில் இருக்கிறது; எதை எழுதினாலும் போட்டு விடுவார்கள் என்ற வாய்ப்புதான் இப்படி வாய்க்கொழுப்பாக எழுத வைக்கிறது.

மேற்கண்ட பள்ளி ஆசிரியர்களில் 95% பேர் முறையான ஆசிரியர்ப் பயிற்சியோ, முழுவதும் ஆங்கிலத்தில் பேசிப்பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய திறனோ இல்லாதவர்கள். வேலை வாய்ப்புக்காக அலைந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு ஒரு 'வேலை'; அதற்கு ஏதோ கைச் செலவுக்கு ஒரு 'சம்பளம்' வேலையில்லாதவர்கள் இரண்டு மூன்றுபேர் சேர்ந்து ஒரு பள்ளியையே தொடங்கி நடத்துகிறார்கள். இவர்களில் பெரும்பாலர்க்கு ஆங்கிலமே அரைகுறை. 5, 6ஆம் வகுப்பு மாணவர்கள் வரை எதையும் எளிதாகச் சொல்லிக் கொடுத்துவிடமுடியும் என்பதால் சமாளிப்பவர்கள்.

ஏற்கெனவே அவர்கள் தாய்மொழி தமிழ்; அவர்களால் தமிழில்தான் சொல்லிக் கொடுக்கமுடியும். அதுதான் அவர்கட்கு எளிது. வேறுவழியின்றி 'பிழைப்புக்காக' ஆங்கிலத்தில் சொல்லித்தர முயல்கிறார்கள். இவர்களுக்கே கூட 1 ரூ அதிகமாகச் சம்பளம் கொடுத்து பிரெஞ்சுமொழி கற்றுக் கொடுக்கச் சொன்னால் அதையும் மூன்றுமாதத்தில் கற்றுக் கொண்டு சொல்லிக் கொடுத்துவிடுவார்கள்.

எனவே இவர்களுக்காக 'இந்து இதழ்' தோழர் உருகுவது போலித்தனம்; உண்மையை மூடி மறைத்து எங்கள் முயற்சியை மூளியாக்கும் பேடித்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இவர் சொல்கிறாரே கணிதமும் அறிவியலும் தமிழில் சொல்லிக் கொடுத்த காலம் என்று, அது இராசாசி காலம்தான் 1937. அவர் அன்று மாற்றித் தந்த தமிழ் வழிக் கல்விதான் இன்று வரை அரசு, ஒன்றியப் பள்ளிகளில் நின்று நிலைத்துள்ளது.

இந்து இதழில் ஒரு மடல்:

"First and foremost, what is the overriding need for enforcing this basically meaningless burden on small children? I say meaningless because the children are not going to learn enough to be able to go on to class 6 and pick up subjects in English. But more important than anything else, and which seems to have totally escaped the perpetrators of this scheme is the psychological stress it will place on children who hear English all around them, including at home. Take television for instance. This column and many readers have tries to draw the attention of the Minister of Tamil Culture that there is not a single cable TV programme which does not abound in English. This applies to the talk shows also. I do not exclude Doordarshan either. The other evening, waiting for the news on DD, listened idly to a farmer's programmed that proceed it. There was so much English in it that I wondered what the poor farmers will make of it. I ask again, why does not the Minister for Tamil Culture try to do something about cable TV and movies, instead of coming down on officials whom he is forcing to sign their official letters, and now school children.

The Tamil Culture Minister will succeed only in making our children totally confused. That English has become a global language no one can deny. I am always slightly surprised when I watch BBC or CNN, and hear diplomats from Japan to Sweden express themselves fluently in

English. The Union Commerce Minister held forth in English in Seattle. Our own Chief Minister has been known to indulge in English when the occasion called for it. And to say that in countries like Japan and Germany, for instance, children are taught in their own languages form the word go is a specious argument as they are one language countries. In conclusion I would like to express, my amazement that my distinguished friend Justice Mohan, presided over the committee which came to such a retrograde conclusion. The Tamil Nadu government is ''amused" at the new ukase being called retrograde. I am not".

ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் படியுங்கள் என்று நாங்கள் சொன்னால் அது basically meaningless burden on small children' என்கிறார். தமிழ் மட்டுமே பேசும் இளம் பிஞ்சுகளுக்கு LKG, UKG வகுப்புகளில் மம்மி, டாடி என ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தால் அது சுமையில்லையாம்; தமிழ் மட்டுமே தெரிந்தவர்கட்கு, தமிழில் அப்பா, அம்மா சொல்லிக் கொடுத்தால் அது சுமையாம்; இப்படிப்பட்டவர்கள் தான் இதழ்களை வைத்துக் கொண்டு பலரை மூளைச் சலவை செய்யப் பார்க்கிறார்கள். இவர்கள் புத்திசாலித்தனமாக வாதிடுவதாக நினைத்துக் கொள்கிறார்கள். இப்படி வாதிடுவது எவ்வளவு தலைப்பிரட்டைத்தனம் என்பது சாதாரணக் குடிமகனுக்கும் விளங்கி விடும்.

"who hear English all around them, including at home' எவ்வளவு பெரிய பொய் இது? என்னால் அடித்துச் சொல்ல முடியும். தமிழ்நாட்டில் மட்டுமின்றி, பிறமாநிலங்களில், பிறநாடுகளில் வாழ்கின்ற பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த குடும்பத்தார் எல்லாம் மிகுந்த ஆர்வத்தோடு தமிழில்தான் வீட்டில், நேர் உரையாடலில் பேசி மகிழ்வார்கள். அப்படியிருக்கும் போது வீட்டிலும் தமிழ் நாட்டார் ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருக்கிறார்களாம். எல்லாமே பொய்: புரட்டு. வேறென்ன சொல்வது?

தமிழ் வளர்ச்சி அமைச்சர் அனைவரையும் மொத்தமாகக் குழப்புவதில் வெற்றி பெற்று விடுவாராம். குழப்புவது நானா? இதனை எழுதிய தோழரா?

"To an idiot all but himself are idiots" என்ற தொடர் தோழர்க்குத் தெரியுமா?

தெளிதமிழ் இதழ் (15.1.2000) தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

''மழலையர் பள்ளியிலும், மருத்துவம், பொறியியல், வேளாண், சட்டம் உள்ளிட்ட உயர்கல்விகளிலும் தமிழே பயிற்று மொழி என அரசாணை அறிவிக்காதது ஏமாற்றத்தைத் தருகிறது. எனவே, மழலையர் வகுப்பு உள்ளிட்ட அனைத்து வகுப்புகளிலும் உயர்கல்விகளிலும் தமிழே பயிற்றுமொழி என அறிவித்து அடுத்த ஆண்டுமுதலே செயல்படுத்துமாறு அரசைக் கூட்டமைப்புக் கேட்டுக் கொள்கிறது.

இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அரசாணைகளைப் போலவே இவ்வாணையும் செயலற்றுப் போவதற்கு வழிவகுக்கா வண்ணம் அரசின் கல்விமொழிக் கொள்கைக்குச் சட்டப்பாதுகாப்பு அளித்துச் செயற்படுத்த வேண்டுமென அரசைக் கூட்டமைப்பு வற்புறுத்துகிறது.

ஆறாம் வகுப்பில் ஏற்பளிக்கப்படாத பள்ளிகளில் படித்தவர்களும் தனியே பயின்றவர்களுக்கும் நுழைவுத் தேர்வு நடத்தி திறமை, தகுதி கண்டு சேர்க்கப்படவேண்டும் என்று அரசாணையில் குறிக்கப்பட்டிருப்பது, வழிப்பறி, பகற்கொள்ளைப் பள்ளிகள் மேலும் வளர வாய்ப்பளிப்பதாகவே உள்ளது. தகுதி திறமை என்பன பெறப்படும் - தரப்படும் பணத்தின் மதிப்புக்கு ஏற்ப அமைதலே கண்கூடு. எனவே அரசாணையின் இப்பகுதி முற்றாக நீக்கப்பட வேண்டும்.

பதின்நிலைப் பள்ளிகளில் (மெட்ரிக்குலேசன்) பயில்பவர் தமிழர்களும், தமிழ்பேசும் பிறமொழி மாணாக்கர்களுமே ஆவர். எனவே, பதின்நிலைப் பள்ளி (மெட்ரிக் பள்ளி) வாரிய விதிகளில் தமிழ் - தாய்மொழியை மட்டுமே பயிற்றுமொழியாகச் சேர்க்க வேண்டும்.

அனைத்துவகைப் பள்ளிகளிலும் தமிழே முதன்மைமொழி என்று சட்டமாக்கப்பட வேண்டும்.

தமிழ் நாட்டரசின் தமிழ்வழிக் கல்விச் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பும் கல்வி வணிகச் சந்தையரான ஆங்கில மழலையர், பதின்நிலைப்பள்ளி (மெட்ரிக்) நிர்வாகங்களின் தமிழினப் பகைப்போக்கிற்குக் கூட்டமைப்புக் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழினப் பகைவர்களின் நச்சுப்பரப்புரைகளை ஒதுக்கித் தள்ளித் தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவு தருமாறு பொதுமக்களையும் ஆசிரியப் பெருமக்களையும், மாணாக்கர்களையும், தொழிலாளர்களையும், அரசு பணியாளர்களையும் கூட்டமைப்புக் கேட்டுக் கொள்கிறது.

தமிழ் நாட்டரசின் தமிழ்வழிக் கல்விச் செயற்பாடுகட்குக் கூட்டமைப்புத் துணை நிற்குமென ஒருங்கிணைப்பாளர் கி.த. பச்சையப்பன்.

இராசேந்திர சோழன், பேராசிரியர் கல்யாணி இம்மூவரும் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்''

தமிழ் மாருதம்'(சனவரி 2000) இதழ் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது' அது இதுதான்.

''தமிழ்ப் பயிற்றுமொழி' குறித்து முற்போக்கு எழுத்தாளர் சங்கம்!

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தளர் சங்கமும், திருக்குறள் அஞ்சல்வழிக் கல்வி மையமும் சேர்ந்து வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள செய்தி:

'பயிற்றுமொழி தமிழில்' என்ற கருத்தைத் தமிழ்வெறி கொண்டவர்களின் கோரிக்கையாகத் திசை திருப்ப முயல்கின்றனர் சிலர். ஆங்கிலவழிப் பள்ளிகளை நடத்தும் நிர்வாகிகள் பல்வேறுபட்ட கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். இந்த எதிர்ப்புத் தேவையற்றது. ஆங்கிலவழிப் பள்ளிகளை நடத்துபவர்கள் மட்டுமே, மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதைப்போல் காட்டிக் கொள்கின்றனர்! தங்களுடைய வணிக லாபங்கள் பறிபோய்விடும் என்ற அச்சம் காரணமாக எழுப்பப்படும் இந்த எதிர்ப்பைத் தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்!

''உலகில் தலைசிறந்த கல்வியாளர்கள் எல்லோருமே, தாய்மொழிக் கல்வி மட்டுமே சிறந்த புரிதலையும் விரைந்த முன்னேற்றத்தையும் தரும் எனத் தெளிவுபடுத்தியுள்ளனர். இந்தி நன்றாக அறிந்த மகாத்மாகாந்தி, தன் சயசரிதையை குசராத்தியில்தான் எழுதினார்; ஆங்கிலம் அறிந்த கார்ல் மார்க்ஸ், 'மூலதனம்' என்ற நூலைத் தன் தாய்மொழியான செர்மனியில்தான் எழுதினார். இரவீந்திரநாத் தாகூர், தனது கீதாஞ்சலியை வங்காளத்தில்தான் எழுதினார். நாட்டின் தலைசிறந்த அணுசக்தி விஞ்ஞானி அப்துல் கலாம், ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மட்டுமே படித்தவர்! எனவே, தாய்த் தமிழ்வழிப் படித்தால், பின்தங்கிவிடுவோம் என்ற கூற்றுப் புனையப்பட்டதேயாம்!''

'வெல்லும் தூயதமிழ்' (சனவரி 2000) இதழ் ஓர் அருமையான செய்தியைத் தந்திருக்கிறது.

''தமிழ்வழிக் கல்விக்கு எதிரான போராட்டம் தேவையற்றது''

"அதை எதிர்ப்பது என்பது இம்மண்ணிற்குரியவர்களிடமிருந்து இப்பள்ளிகள் விலகிச் செல்லும் நிலையே ஆகும். தமிழ் பயிற்றுமொழி என்பதால் நமது பள்ளிகளுக்கு மாணாக்கர் வருகை குறைந்து போகும் என அஞ்சத் தேவையில்லை. காரணம், பெரும்பாலான பெற்றோர்கள் பயிற்று மொழியைப்

பற்றி கவலைப்பட வில்லை. தரமான கல்வியையும் தூய்மைமிக்க கட்டடங்களையும் மிகுந்த கட்டுப்பாடு மிக்க பள்ளிகளையே விரும்புகின்றார்கள். மெட்ரிக்குலேசன் பள்ளிகள் நடத்தும் நாம் அதற்கு அணியமாக (தயாராக) இருக்கும்போது மாணாக்கர் வருகை குறையாது.

புதிய நூற்றாண்டில் உலக மக்களுடன் ஒட்டிப் போவோம். பெரும்பாலான நாடுகள் சின்னஞ்சிறிய நாடுகள். இனங்கள் தங்கள் தாய்மொழியைத் தங்களின் பிஞ்சுக் குழந்தைகளுக்குக் கற்பித்து உலகில் தலைசிறந்த அறிவாளிகளை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வாழும் நாட்டின் அரசு ஆணையை ஏற்று வாழ்வதே அறிவுடையார் செயலாகும். அதை மறந்து வேலை நிறுத்தம் போராட்டம் என்பது தேவையற்றது. அதனால் மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் கூட்டமைப்பு விடுத்துள்ள 8.12.99 ஆம் நாள் பள்ளிகளை மூடவேண்டும் என்பது தேவையற்றது".

தினகரன் இதழில் (28.1.2000) ஒரு செய்தி.

11.6.1934 இல் திருநெல்வேலியில் சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாடு நடைபெற்றது. மறைமலையடிகள் தலைமை. பொ.தி. ராசன் (P.T. Rajan) த.பே. உமா மகேசுவரம் பிள்ளை முதலியோர் கலந்து கொண்ட மாநாடு இது. அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது:

"கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிக் கூடங்களிலும் ஆங்கிலம் ஒழிந்த எல்லாப் பாடங்களையும் தமிழிற் கற்பித்தல் வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது".

66ஆண்டுகட்கு முன்பே மூத்த தமிழறிஞர்களும், தலைவர்களும் கூடி முடிவு செய்து நிறைவேற்றிய தீர்மானம் இது என்பதை அன்பர்கள் நினைவிற்கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே 'தினமணி கதிர்' இதழில் எழுதப்பட்டிருந்த கட்டுரைக்கு மறுப்பாக இல்லாமல் 'ஒரு கருத்தாக' நெல்லிக்குப்பம் அன்னமரியாள் எழுதுகிறார். (6.2.2000)

"இன்று உலகில் பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் தமிழர்கள் தங்களுக்கு ஆங்கில மொழியில் உள்ள புலமை மூலம் உயர்பதவியில் உள்ளனர். உயர்கல்வி புலமை மூலம் உயர்பதவியில் உள்ளனர். உயர்கல்வி பெறுவதற்கும் புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கும் புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கும் உதவும் மொழியாகவும்,

கணிப்பொறித்துறையில் செயல்மொழியாகவும் ஆங்கிலம் உள்ளது. இதனை விருப்பு வெறுப்பின்றிப் பயன்படுத்திக் கொள்வது நம் மனப்பான்மையைப் பொறுத்தது. ஆகவே தமிழ் என்னும் தீபத்தை அணையாமல் பாதுகாப்பது நமது முதற்கடமை. அதே நேரத்தில் எரிந்து ஒளிகொடுத்துக் கொண்டிருக்கும் ஆங்கிலம் என்னும் தீபத்தை அணைத்து, இருக்கும் வெளிச்சத்தைக் குறைக்க வேண்டாம்".

ஆறாம் வகுப்பிலிருந்து உயர்கல்வி வரை விரும்புபவர் ஆங்கிலத்தில் பயில வாய்ப்பளிக்கப்பட்டுள்ள போது. இவரது கவலைக்கே இடமில்லை என்பதை அன்னமரியாள் உணர்வாரா?

கண்ணியம் (15.2.2000) இதழில் 'யுனெஸ்கோ 1953' அறிக்கையில் ஒரு பகுதியை வெளியிட்டிருக்கிறார்கள். உச்சநீதிமன்றம் வரை இக்கருத்து வ.அய்.சு. போன்றவர்ளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அக்கருத்து இதுதான்.

## குழந்தைக் கல்வி

"குழந்தைக்குக் கல்வி கற்பிக்கும் மொழி தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்பதற்குக் காரணம் காட்டி விளக்கத் தேவையில்லை. உளவியலின் படி, குழந்தையின்மனம் கருத்துக்களைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்தித் தன்னிச்சையாக இயங்கும் வகையில் பொருள் பொதிந்த குறியீடுகளின் தொகுப்பாக அமைந்திருப்பது தாய் மொழியே. சமூகவியலின்படி, குழந்தை தான் சார்ந்த சமூகத்தில் தன்னை ஓர் உறுப்பாக அடையாளம் காணுதற்குரிய கருவியும் தாய்மொழியே. கல்வியலின் படி, அறிமுகமாகாத வேறு மொழி மூலம் ஒன்றைக் கற்பதை விடக் குழந்தை வெகுவிரைவில் கற்பதும் தாய் மொழி மூலமே".

The Hindu (22.2.2000) இதழில் இரு மடல்கள்.

மதுரையிலிருந்து என். சட்டநாதன் எழுதுகிறார்: ஒருவர் முதுகலை வகுப்பு முடிக்க 17 ஆண்டுகள் ஆகும். இதற்குள் 3 ஆட்சிகள் மாறும். ஒவ்வோர் ஆட்சியும் பயிற்றுமொழிக் கொள்கையை மாற்றிக் கொண்டே வந்தால் மாணவர்கள் என்ன ஆவார்கள்? என்கிறார் சிலர்.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டபோதே 1937 ஆம் ஆண்டிலிருந்தே அதுவரை 11ஆம் வகுப்பு வரை ஆங்கிலப் பயிற்று மொழியில் இருந்த பாடங்களை எல்லாம் மாற்றி 1 முதல் 11 வரை தமிழ் வழியில்தான் என்று உறுதிபட மாற்றம் செய்த பெருமை இராசாசி அவர்கட்கு உண்டு. காங்கிரசு,

தி.மு.க., அ.தி.மு.க. என்று எல்லாக்கட்சி ஆட்சிகளும் வந்துவிட்டன. எத்தனையோ முதலமைச்சர்களையும் பார்த்துவிட்டோம். ஆனால் அரசு சார்ந்த 45000 பள்ளிகளில் இராசாசி வகுத்துத் தந்த வழிதானே இன்றும் தொடர்கிறது? சட்டநாதன் அறிவாரா?

''If Tamil becomes the medium of instruction, in course of time, there will be no one with a knowledge of English and the windows of knowledge will be tightly shut''.

அடடா! என்ன பார்வை? அதிலும் பரந்து விரிந்த உலகப்பார்வை? 5ஆம் வகுப்புவரை ஒருவன் தமிழ் வழியில் படித்துவிட்டால், காலப்போக்கில் ஆங்கில அறிவு உள்ளவர்கள் யாரும் இருக்க மாட்டார்களாம். அறிவுச் சாளரங்கள் அப்படியே அடைக்கப்பட்டு விடுமாம். இவருக்கெல்லாம் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்தான் பதில். 11ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்து, முறையாக ஆங்கிலமும் படித்து வந்தவராயிற்றே அவர்.

சென்னையைச் சேர்ந்த கே.எஸ். அசோக்குமார் எழுதுகிறார்.

''Their scope of education and employment will be restricted solely to the state of Tamil Nadu and their movement even to other states within India will become hazardous, and competing in the modern world would be out of the question''.

விவரம் தெரிந்த இவர்கள் எப்படி இவ்வளவு முட்டாள்தனமாக எழுதுகிறார்கள்? 5ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் படித்துவிட்டு 6ஆம் வகுப்பு முதல் எம்.ஏ வகுப்பு வரை ஆங்கிலவழியில் ஒருவர் படித்தால் அவர் தமிழ் நாட்டுக்குள்ளேயே முடங்கி விடுவாரா? வெளியுலகில் இவர்களால் போட்டி போட முடியாதாம். என்ன பைத்தியக்காரத்தனமான கருத்து?

இதழ்களின் எதிர்ப்புகள் பிப்ரவரி 2000

வி.டி. டைட்டஸ் போன்றவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் அதிகாரிகளாக இருந்திருக்க வேண்டியவர்கள். எதிர்பாராமல் திராவிடர் ஆட்சிக்காலத்தில் பொறுப்பில் இருந்திருக்கிறார்கள். இவரைப் போன்றவர்கள் கல்வித்துறை அலுவலர்களாக இருந்த போதுதான் ஏராளமான மழலையர் பள்ளிகள் முளைக்க மறைமுக ஊக்கம் தரப்பட்டுள்ளது.. வரைதுறையின்றி மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான இசைவும் தரப்பட்டுள்ளது.

அவர் சொல்கிறார்: ''Students, who learn science and mathematics in Tamil, would find it difficult when reverting to English medium, later''.

நான் கலவைக் கணிதம் (composite maths) பயின்றவன். அதிலும் அந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்த பேராற்றல் படைத்த ஆசிரியர்கள் சுந்தரம், நல்லமுத்து ஆகியோரை நினைவு கூர்கின்றேன். அவர்கள் தமிழில்தான் சொல்லிக் கொடுத்தார்கள். நானும் அரசுத்தேர்வில் 97 மதிப்பெண்கள் எடுத்தேன். அதன்பின் ஆங்கில வல்லாண்மையை நமக்கு வழங்கும் திருச்சி, தூயவளனார் கல்லூரி மாணவன் நான். புகுமுகவகுப்பில் கணிதம், ஆங்கிலத்தில் வெற்றிபெற்று பி.எசி. கணித வகுப்பிலும் புகுந்தவன். தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மாறியதில் நான் ஒன்றும் இடர்ப்படவில்லையே! அதிலும் ஒரு கிராமப்புற மாணவன் நான். திருச்சிக்கு வந்த பின்தான் நகர்ப்புறக் கல்வியைப் பார்த்தவன். எனவே டைட்டஸ் போன்றவர்கள் தங்கள் பிழைப்புக் கெடுமே என்பதற்காகப் 'பூச்சாண்டி காட்டக் கூடாது'.

தமிழ் வழிக் கல்விக்காக அரசு ஆணைகள் பிறப்பித்துச் செயற்படத் தொடங்கிய நிலையில் ஆங்கில வழியில் பிழைப்பு நடத்தும் கூடாரங்கள் இந்த ஆணைகளை எதிர்த்து உயர் நீதிமன்றத்துக்குச் சென்றன. அங்கு, தமிழக அரசின் ஆணை இலதாக்கப்பட்டது. (இரத்து)

இந்தக் காலகட்டத்தில் பல செய்தித்தாள்களில் சிலர் ஆங்கில வழிக் கல்வியை வெகுவாகப் பாராட்டி ஒரு சில கட்டுரைகள் எழுதி வந்தனர். அதே நேரத்தில் பலர், தமிழ் வழிக் கல்வியை வெகுவாகப் பாராட்டியும், வரவேற்றும், எதிர்த்தரப்பினருக்குப் பதிலடி கொடுத்தும் கட்டுரைகள் வரைந்தனர். 27.2.2000 நாளிட்ட 'தினமணி கதிர்' இதழில் நிர்மலா இராசேந்திரன் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். தொடர் எதையும் குறைக்காமல், அவரது எழுத்தை அப்படியே தந்துள்ளேன். படியுங்கள்.

## எதிரொலி

## மானம் காக்க தமிழ்!

6.2.2000 தினமணிகதிர் இதழில் ஆங்கில ஆசிரியை ஜி. அன்னமரியாள் எழுதியுள்ள 'ஒளி கொடுக்கும் தீபத்தை அணைக்கலாமா?' என்ற கட்டுரையை வாசித்தேன்.

'ஆங்கிலம், தமிழின் செல்வாக்கினைக் குறைத்துவிடும் என்பது சரியான வாதமல்ல' என்கிறார். இவர் எந்த நாட்டில் இருந்து கொண்டு இப்படிப் பேசுகிறார்? அம்மா, அப்பா என்று தமிழில் அழைப்பதையே மறந்து ஆங்கிலம் சோறு போடுமா என்று பார்த்துக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டில்தானே....! தொலைக்காட்சியின் அலைவரிசையில் ஆங்கிலம் கலந்த அரைகுறைத் தமிழில் நாள் தோறும் நிகழ்ச்சிகளைக் கண்டு உல்லாசமாயிருக்கிறோமே... அந்தத் தமிழ்நாட்டில்தானே...!

மலையாளம், தெலுங்கு, ஆங்கிலம் என எல்லாவற்றையும் சரியாக உச்சரித்துவிட்டுத் தமிழை மட்டும் உச்சரிக்கத் தெரியாமல் முகம் மலர மலரத் தடுமாறும் தமிழ் நாட்டில்தானே....!

ஆங்கில மொழியின் பாதிப்பு தமிழின் வளர்ச்சியை எந்தவிதத்திலும் குறைக்கவில்லையாம்!

இன்று பள்ளிகளில் தமிழ் வகுப்பு என்றாலே அலட்சியப்படுத்துவதும் தமிழாசிரியை என்றால் கேலி பேசுவதும் தாய்மொழி தமிழில் பேசினால் தரக்குறைவாக நினைத்துக் கொள்வதும் நடக்கிறதே/ இவையெல்லாம் தமிழை நேசிப்பதையும் போற்றுவதையும் குறிக்கிறதா?

மூத்த குடிப்பிறந்த தொன்மொழி', 'உயர்தனிச் செம்மொழி' என்று தமிழின் பெருமைகளையெல்லாம் அடுக்கு மொழியில் பேசுவதுவெறும் பரிசுகள் வாங்க மட்டும்தானா? தமிழை நேசிப்போம்: வணங்குவோம்: போற்றுவோம்... என்று சொல்லியிருக்கிறாரே... இந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் என்னவென்று தெரியுமா? நம் தாய்த்திருநாட்டில் எரிந்து கொண்டிருந்த தமிழ் எனும் தீபம் அணையும் தறுவாயில் அல்லாடுகிறது. அந்தத் தீபத்தைக் காக்க வேண்டும் என்று உண்மை உணர்வுடன், உயிர்த்துடிப்புடன் தமிழ் நெஞ்சங்கள் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் தாய்த் தமிழை வாழவிடாமல் செய்யும் செயலுக்கு உடந்தையாய் இருப்பதுதான் தமிழை நேசிப்பதா?

அழகு தமிழில் எத்தனையோ சொற்கள் இருக்க ஆங்கில நாட்டைப் போல டைம், லவ் டுடே, வி.ஐ.பி. என்று ஆங்கிலப் பெயர் மோகத்தில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அலையவும்... இடது பக்கம், வலது பக்கம் என்பது கூட மறந்து போய், "லெப்டுன்னு நல்ல தமிழில் சொல்லுப்பா" என்று சாதாரண ஆட்டோ ஓட்டும் தமிழ் மகனும் சொல்கிற அவலம் நேர்ந்திருக்கிறதே... இதற்கெல்லாம் என்ன காரணம்? வேறு எந்த மாநிலத்திலாவது அவர்களது தாய் மொழியைப் பின்னுக்குத் தள்ள அனுமதிப்பார்களா? பள்ளிகளில் ஆங்கிலம் மட்டுமே கோலோச்ச விடுவார்களா?

"உலகின் பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் தமிழர்கள் தங்களுக்கு ஆங்கில மொழியில் உள்ள புலமை மூலம் உயர்பதவியில் உள்ளனர்" என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார். அந்தக் கருத்து உண்மை என்று விவாதத்துக்காக எடுத்துக் கொண்டாலும் அவர்கள் ஆங்கிலத்திலாவது புலமை பெற்றிருந்தார்கள். இப்போது ஆங்கிலம் வழி படிக்கும் பிள்ளைகளுக்கு

ஆங்கிலத்திலும் புலமை இல்லை. தாய்மொழி தமிழிலும் புலமை இல்லையே... இந்த அலங்கோலத்தை என்னவென்று சொல்வது!

இன்னொன்றையும் தெரிந்து கொள்ளுங்கள். உலக மேதைகள் பலரும் அடிப்படைக் கல்வியைத் தங்கள் தாய் மொழியில் கற்றுக் கொண்டவர்கள்.

தாய் மொழியில் கல்வியைக் கற்றுக் கொண்டு ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாகக் கற்றுத் தேர்ந்த நிலையை மாற்றி மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஆங்கில மொழி வழியே அனைத்துக் கல்வியும் - அதாவது தமிழ்நாட்டில் தமிழே படிக்காமல் உயர்கல்விப் பட்டம் பெற்றுவிடுவது - என்று கொண்டு வந்தார்களே! தமிழைத் தமிழரே மறுக்கும் வண்ணம் செய்துவிட்ட இந்தக் கொடுமைக்கு ஒரு நாளும் உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் இனியும் இடம் கொடாது. இதில் வேடிக்கை என்னவென்றால் ஆங்கிலத்தைக் கற்க வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. அப்படியிருந்தும் இத்தனை இடர்ப்பாடுகள்!

'ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக நான்காம் வகுப்பிலிருந்து கற்றுக் கொடுக்கப்படும். மற்ற பாடங்கள் அனைத்தும் தாய்மொழியில் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்' என்பதுதான் இன்றைய தேவை. அதிலும் இப்போது புதிதாய்ச் சேரும் முதல்வகுப்பு இந்த வருடமும் அடுத்த வருடம் முதல் இரண்டாம் வகுப்பும், அதற்கடுத்த வருடம் மூன்று வகுப்புகளிலும் என்று படிப்படியாகத்தானே தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வரவேண்டும் என்று அரசு விரும்புகிறது. இதைக் கூடச் செயல்படுத்தவிடாமல், உண்மை என்னவென்று அறியாமல் ஆங்கிலத்தைத் தூக்கிப்பிடித்துக் கொண்டுள்ளனரே என்று வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

தாய்மொழி தமிழை நேசிக்கிறார்களாம். தாய் மொழி காலடியில் கிடக்கட்டும்: அனைத்து ஆதிக்கத்தாலும் மிதிபட்டுச் சாகட்டும் என விட்டுவிட்டு அன்னிய மொழியைத் தம் தாய் நாட்டிலேயே தூக்கிப் பிடிப்பவர்கள் தமிழை நேசிக்கிறார்களாம். எரியும் தீபத்தை அணைத்துவிட வேண்டாம் என்று வக்காலத்து வேறு. இதில் ஜி.யு. போப் அவர்களையும் துணைக்கு அழைத்துக்கொண்டுள்ளார்கள். அவர்களது உயர்வு, தமிழ் மொழிக்கு ஆற்றிய பங்கு என்னவென்று தெரியுமா? திராவிட மொழிகளுக்கெல்லாம் தமிழ் அடிப்படையாக இருப்பதைக் கண்டு 'திராவிட ஒப்பிலக்கணம்' எழுதியவர் கால்டுவெல். ஜி.யு. போப், தமிழை உலக அரங்கிற்குக் கொண்டு போனவர்தான். எப்படி? தன் கல்லறையிலும் தான் ஒரு தமிழ் மாணவன் என்று எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டவர். இறந்த பின்னும் கூட தமிழால்

அவர்கள் பெருமை செய்தவர்கள்/ அப்படிப்பட்ட தமிழைக் கல்வியில் பயிற்று மொழியாகக் கொண்டுவருவதற்குத் தமிழ்நாட்டில் இத்தனை பாடுபடுகிறோமே...

'ஆங்கிலம் நம் குரலை உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்யும் ஒலிபெருக்கி' என்றாராம் அறிஞர் அண்ணா. அறிஞர் அண்ணா ஆங்கிலப் புலமை பெற்றிருந்தவர்தான். ஆனால் அதை ஒரு கருவியாக மட்டுமே நினைத்தவர். தாய் மொழி தமிழையோ தனக்கு அணியாக நினைத்து அணிந்து கொண்டவர். அவர் காலத்தில்தான் மதறாஸ் என்றிருந்த மாநிலம் தமிழ்நாடு என்று சட்டப்படி மாற்றப்பட்டது.

ஆங்கிலம் கற்பது காலத்தின் கட்டாயம் என்கிறீர்கள். கற்றுக் கொள்ளலாமே... யார் வேண்டாமென்று சொன்னது? உயர் கல்வியில் ஒரு பாடமாக எடுத்துப் படித்து அதிலாவது உருப்படியாக வரலாமே. அதற்கும் வழி விடப்பட்டுள்ளதே. ஆனால் ஆரம்பக் கல்வி அவரவர் தாய் மொழியில் தான் இருக்க வேண்டும். இதற்கு எந்தக் கருத்தும் மாற்றாக அமைய முடியாது.

'ஆங்கிலம் உனக்கு அலங்காரம் செய்விக்க. தமிழ் உன் மானத்தைக் காத்துக் கொள்ள.' இந்த உணர்வுதான் தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டும்.

இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழைப் பின்னுக்குத் தள்ளி ஆங்கில மோகத்தைக் கொண்டு வந்து, எதிலும் தமிழன் முன்னுக்கு வராமல் முட்டுக்கட்டையாக்கி விட்ட நிலைமை இனியும் தமிழ்நாட்டுக்கு வேண்டாம். தமிழை அடிப்படைக் கல்வியாகக் கட்டாயப் பாடமாகக் கற்று, பின்னர் ஆங்கிலத்தை நமது சந்ததியினர் கற்றுத் தேர்ந்து கொள்ளலாம். அதுவே தமிழருக்கு வாழ்வளிப்பது. உலகம் முழுவதும் தமிழனுக்குரிய மரியாதையைத் தக்கவைப்பது".

கட்டுரை மிகவும் தெளிவான பார்வையில் எழுதப்பட்டுள்ளது. இதுபோன்று பலர் தெளிவோடிருந்தும், சில சுய நலச் சக்திகளின் சூழ்ச்சிக்கும், ஆட்சியில் இருந்தபடியே சிலர் செய்த கீழறுப்பு வேலைகட்கும் இடையில் அகப்பட்டுத் 'தமிழ் வழிக் கல்வி' மூச்சை விட்டு விட்டதே! என் செய்ய?

இன்றைய முதல்வர் அன்று விடுத்த அறிக்கையைக் கண்டித்து நாடெங்கும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அப்போது 'முரசொலி' எழுதிய ஆசிரியவுரையிலிருந்து சில பகுதிகள் (25.2.2000)

1. தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களில் ஐந்தாம் வகுப்புவரை தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று கழக அரசு ஆணை

பிறப்பித்தபோது தமிழ் உணர்வு படைத்த பெருமக்கள் - தமிழ் ஆர்வலர்கள் - தமிழ்ப்பால் குடித்து வளர்ந்தவர்களெல்லாம் ஆனந்தக்கடலில் மிதந்தார்கள். தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து - தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றே ஒரு காலத்தில் ஆட்சிப் பீடத்தில் ஏறியிருந்தாலும் அந்தக் கால ஆட்சியாளர்கள் யாருமே செய்யாத ஒரு சாதனையை கலைஞர் செய்திருப்பது கண்டு தமிழ்ப் பெருங்குடி மக்களெல்லாம் பூரித்துப் போனார்கள்.

ஆனால் ஆங்கில வழிக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகளைத் தொடங்கி கோடிக்கணக்கான ரூபாய்களை தமிழக மக்களிடமிருந்து ஆண்டுதோறும் சம்பாதித்துக் கொண்டிருக்கும் தனியார் பள்ளிகளின் உரிமையாளர்கள் மட்டும் தமிழ் பயிற்றுமொழியாக ஐந்தாம் வகுப்பு வரை இருக்கவேண்டும் என்ற கழக அரசின் ஆணையை எதிர்த்து வருகிறார்கள்.

2. '''தமிழைப்படி; தமிழில் படி; ஆங்கிலத்தைப் படி; ஆங்கிலத்தில் படிக்காதே'' - தலைவர் கலைஞர் அவர்கள் சிவகங்கை உரையில் இப்படி குறிப்பிட்டிருக்கிறாரே; தமிழ்வழிப் பயிற்று மொழித் திட்டத்தின் அடிப்படையே இதுதான்.

தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் - தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் **தமிழில்தான் படிக்க வேண்டும்** என்று சொல்வதாலேயே - அவர்கள் **ஆங்கிலத்தைப் படிக்கக் கூடாது** என்று யாரும் சொல்லவில்லையே!

## பிப்ரவரி 2000

**'சிந்தனையாளன்'** இதழில் வே. ஆனைமுத்து எழுதுகிறார்

1. இன்றுள்ள 187 உலக நாடுகளையும் ஆட்டிப் படைக்கிற வல்லமை கொண்ட நாடுகள் அமெரிக்கா, இங்கிலாந்து, செர்மனி, பிரான்சு, சப்பான் முதலானவை.

2. அமெரிக்காவில் பயிற்று மொழி, ஆட்சி மொழி ஆங்கிலமே: செர்மனியில் செர்மானிய மொழியே: இங்கிலாந்தில் ஆங்கிலமே: பிரான்சில் பிரெஞ்சு மட்டுமே, சப்பானில் சப்பான் மட்டுமே, கனடாவில் ஆங்கிலமும், பிரெஞ்சு மக்களுக்கு பிரெஞ்சு மட்டுமே பயிற்று மொழி, ஆட்சி மொழி. தத்தம் தாய்மொழி வழியில் கற்று, தாய் மொழியை மட்டுமே ஆட்சி மொழியாகப் பெற்ற இவர்களே இன்று உலகத்தை ஆட்டிப் படைக்கிறார்கள்.

அரசியல், அறிவியல், பொருளியல், தொழில்நுட்ப இயல், கணினி இயல் என்கிற எல்லாத் துறைக் கல்வியையும் அவரவர் தாய்மொழியில்

கற்றதால் தான் அவர்கள் அறிவாளிகளாக. கண்டுபிடிப்பாளர்களாக - உலகத்தை ஆட்டிப்படைப்பவர்களாக உருவாக முடிந்தது. இதுவே நடக்கக் கூடியது. இதுவே சரியானது.

3. மேலே கண்ட நாடுகளில் தொழில் நுட்ப அறிவுக்காக மேற்படிப்புக்குப் போகிற மற்ற நாட்டினரும் எந்த எந்த நாட்டுக்குப் போகிறார்களோ - அந்த அந்த நாட்டுத் தாய் மொழியை ஓராண்டுக்காலம் கற்றுக் கொண்டு, அதன் வழியாகப் பெற்ற புரிதல் அறிவை (Working Knowledge) மட்டுமே வைத்துக்கொண்டு, அந்தந்த மொழி மூலம் மட்டுமே மேல்படிப்பு, ஆய்வுப்படிப்பு என்பதை ஆங்காங்கே பெறுகிறார்கள்.

அய்ரோப்பாவிலுள்ள 20 தனித்தனி நாட்டினரும் அவரவர் தாய்மொழி வழியேதான் எல்லா நிலை - எல்லாத்துறைக் கல்வியையும் பெறுகின்றனர்.

ஆங்காங்கு உள்ள அரசும், மக்களும், கல்வியாளர்களும், ஏடுகளும், மாணவர்களும் இதையே அப்படியே ஏற்கின்றனர்.

இவ்வளவு உண்மைகளையும் இங்கே யார் மறைக்கின்றனர்?

அரசு மறைக்கிறது. அரசும் அதிகார வர்க்கமும் பார்ப்பன மேல் சாதி அரசு, மேல்சாதிக் கூட்டம். எனவே மறைக்கிறது.

கல்வியாளர்கள் மறைக்கின்றனர். கல்வியாளர்களில் பெரும்பாலோர் பார்ப்பனரும் - மேல் சாதியினரும், எனவே மறைக்கின்றனர்.

ஏடுகளும் மற்ற கருத்துப்பரப்புச் சாதனங்களும் மறைக்கின்றன. செல்வாக்குள்ள ஏடுகள் எல்லாம் பார்ப்பனர், பனியா, மார்வாரி, குசராத்தி, நாயர் என்கிற இந்து மதவெறியர்களால் நடத்தப்படுபவவை, மற்ற கருவிகள் அரசியல் - பண ஆதிக்கம் படைத்த சமூக விரோதிகளால் நடத்தப்படுபவை. எனவே இவை மறைக்கின்றன.

இந்தச் சூழல்களில் நீதிமன்றத்தை நாடுவது என்பது மொழிச் சிக்கலுக்கான தீர்வுக்கு என்றும் கைகொடுக்காது.

மக்கள் மன்றமும், மாணவர் மன்றமுமே இதற்கான சரியான தீர்வைக் காணும் களங்களாகும்.

1. தமிழ்நாட்டிலுள்ள மூன்று இலக்கம் - நான்கு இலக்கம் ஆசிரியர்கள் நூற்றுக்கு நூறு பேரும் தமிழ்வழிக் கல்வி/தாய்மொழி வழிக் கல்வி என்கிற கொள்கையின் காவலர்களாக உருவாகிட எல்லாம் நம்மால் செய்யப்பட வேண்டும்.

2. தமிழகம் முழுவதிலும் உள்ள 6 ஆயிரம் உயர் நிலை, மேல் நிலை, மெட்ரிகுலேசன் `பள்ளி மாணவர்களிடையே ஓர் இருபத்தைந்து விழுக்காடு மாணவர்களாவது தெருவுக்கு வந்து போராடி தாய்த்தமிழ்க் கல்விக்கு வழி காண்பவர்களாக மாற்றப்பட வேண்டும்.

3. 16 ஆயிரம் வருவாய் ஊர்களில் (Revenue Villages) ஓராயிரம் ஊர்களிலாவது ஓராண்டுக்காலத்தில் தமிழ்வழிக் கல்வி பற்றிய விழிப்புணர்வை நாம் உண்டாக்குதல், தெருவுக்கு வந்து போராடுதல், சிறைப்படல் என்கிற அறிவு வழிப்பட்ட நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நாம் மேற்கொள்ள வேண்டும். இதற்குப் பிறகுதான் அரசும் ஊக்கம் பெறும்: ஆங்கிலம் போற்றிகளும் வழிக்கு வருவார்கள்.

இதற்குப் பிறகும் வழியில் முட்டுக் கட்டைபோட எவரும் துணிய மாட்டார்கள். அப்படி எவர் துணிந்தாலும் அது தமிழுக்கு - தமிழருக்கு - தமிழ் நாட்டுக்குப் பகையான கும்பலாகவே இருக்கும். அப்படிப்பட்ட பகைக் கும்பலை அடியோடு அடக்கிட வழி. அடியாத மாடு படியாது, என்கிற ஒன்றுதான். இதற்கும் நாம் ஆயத்தமாக வேண்டும்.

படியாத மாட்டுக்கு இது தான் புரிகிற ஒரே பாடம்.

இவற்றை மனத்தில் கொண்டு, அரசின் தமிழ் வழிக் கல்வித் திட்டத்தை அனைத்துத் தமிழரும் தூக்கிப்பிடிப்போம். திருவள்ளுவர் தந்த திருக்குறள் பரப்பப்படும் சீரிய திட்டத்தை கட்சி, சாதி, தலைமை வேறுபாடு பாராமல் முழுமனதோடு வெற்றி பெறச் செய்வோம்.

இந்த இரண்டு செய்திகளில் கலைஞரின் அரசு மேற்கொண்டுள்ள திட்டம் எல்லாத் தமிழர்களுக்கும் பொதுவானது: நன்மை தருவது: ஏற்றம் அளிப்பது. இவற்றை எவர் தலைமையிலான அரசு எப்போது செய்தாலும் தமிழர் அனைவரும் ஏற்போம்: செயல்படுத்துவோம்.

தமிழ் தழைத்திட - வள்ளுவம் பரவிட, தமிழக அரசினரின் தகைசால் இத்திட்டங்கள் வெற்றி பெறுவது இன்றியமையாதது'' என்று குறிப்பிடுகிறார்.

'தினமணி' (25.2.2000)யில் ஆசிரியர்க்கு இரு மடல்கள். இவர்கள் தமிழ் வழிக்கல்விக்காக வாதிடுகின்றனர்.

நீதிமன்ற நிந்தனை !

பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை, தாய்மொழி வழியே கல்வி கற்பிக்கத் தமிழக அரசு பிறப்பித்த ஆணையை எதிர்த்து, ஆங்கில மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளியினர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். அவ்வழக்கு விசாரணையில் உள்ளது.

வழக்கு விசாரணையில் உள்ள நிலையில், அப் பள்ளியினர் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் எனப் பல்வேறு கிளர்ச்சிகளில் ஈடுபட முனைந்துள்ளனர். பள்ளிகளில் கல்வி கற்பிப்பவர்களே, கிளர்ச்சியில் ஈடுபடுவது, அப் பள்ளிக் குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் கிளர்ச்சியெனும் நச்சு வித்தையும் ஊன்றுவது போலுள்ளது.

ஒரு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது இத்தகு கிளர்ச்சிகளில் வழக்குத் தொடுத்தவர்கள் ஈடுபடுவது நீதிமன்ற நிந்தனையாகாதா? - கண்ணன் கி.நா.ஈ, சென்னை -28.

மறந்தது ஏனோ?

தமிழ்வழிக் கல்வி கேட்கிற யாரும் ஆங்கிலத்துக்கு எதிரானவர்கள் அல்ல. தமிழ்வழிக் கல்வி எல்லா நிலையிலும் இருக்க, ஆங்கிலம் துணையாக வரலாமே தவிர முதன்மை இடத்திலே இருக்கக்கூடாது. இதுவே குழந்தைகள் சீரான அறிவு சார்ந்த வளர்ச்சிக்கு உறுதுணை.

புதிய தொழில்நுட்பத்தைப் பெறத்தான் தாய்மொழிக் கல்வி தேவைப்படுகிறது. அண்ணாவின் இருமொழிக் கொள்கையைத் துணைக்கு அழைக்கின்ற இவர்கள், 1968 ஜனவரி 23-ல் சட்டமன்றத்தில், ‘‘இன்னும் 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தமிழ் பயிற்றுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் நீதிமொழியாகவும் ஆகும். அதற்கான முன்முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்‘‘ என்று அண்ணா இயற்றிய தீர்மானத்தை மறந்தது ஏனோ? - சாலினி இளந்திரையன், சென்னை- 86.

இன்றைய முதல்வரின் அன்றைய அறிவிப்புக் குறித்து நந்தன் (மார்ச் 2000) தெரிவித்த கருத்து இது.

ஒரு ஓலைக்கொட்டகையும் (அதுவும் வாடகைதான்) பத்தாம் வகுப்பில் தேர்ச்சியுறாத ஒரு இளம் பெண்ணும் (அவருக்கு ஊதியம் ரூ.300) இருந்தால் போதும் மழலையர் பள்ளி ஆரம்பித்து விடுகிறார்கள். இவர்களெல்லாம் எந்தக் காலத்தில் சி.பி.எஸ்.இ. அனுமதி வாங்குவது?

சுமார் ஐம்பதாயிரம் ஆங்கிலவழி மழலையர் பள்ளிகள் தற்போது உள்ளன. இவற்றில் பதிவு பெற்றவை வெறும் 2100 தாம். மழலையர் பள்ளி துவங்குவதற்கே போதுமான இடம், கழிப்பறை, விளையாட்டுத் திடல் வசதி இல்லாமல்தான் இவர்கள் பதிவு செய்யாமல் இருக்கின்றனர். இந்த இலட்சணத்தில் இவர்கள் சி.பி.எஸ்.இ. அனுமதி பெறுவதாவது?‘‘

அதே முதல்வரால் இன்று தமிழகமெங்கும் ஓலைக் கொட்டகைகள் பிய்த்தெறியப்பட்டுள்ளன.

இதழ்கள் எப்படியெல்லாம் திசை திருப்பும் - ஒன்றுமில்லாத செய்தியைக் கூட கை, கால் ஒட்டவைத்து உலா வரவிடும் என்பதற்கு என்னிடம் எத்தனையோ ஆதாரங்கள் உண்டு. 'The Hindu' மிகவும் பொறுப்பான இதழ் - தரமானது - கீழ்த்தரமாக இறங்காதது என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் இங்கே அதன் செய்தியாளர் ஒருவர் சொன்ன செய்திகளைப் பார்க்கும் போது இவர்களது தரத்தை மதிப்பிட்டு விடமுடியும். செய்தியைப் படியுங்கள்.

Talk of the Town (The Hindu 8.3.2000)

''The Government Order, which makes learning in Tamil or mother tongue mandatory till the fifth standard, is the most controversial language issue after the anti-Hindi agitation in the state. If Tamil cannot be protected in Tamil Nadu, where else could it be done, was the question of the ruler and their supporters.

But is the Government as serious as it appears to be when it comes to the beneficial use of Tamil? Or is the frenzy about the supremacy of Tamil just a political gimmick?

A while ago, when the representatives of the construction workers met the Minister for Tamil culture, Mr. Tamizhkudimagan asking him to ensure that all the Labour Department GOs relevant to them are in Tamil, they expected a favourable response. Though he granted the group audience, his response was that the Ministry was busy with the construction of 'Thiruvalluvar's statue``.

**அரசாணைகள் அனைத்தும் தமிழில் வரவேண்டும் என்றும் படிக்காத பாமரர்கள் ஏமாற்றும் வகையில் அவற்றை ஆங்கிலத்தில் வெளியிடக் கூடாது என்றும் கண்டிப்புக் காட்டியவன் நான். இவை பற்றிய முழு விளக்கம் தமிழ் வகையில் 'தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கம்' எனும் என் நூலில் ஏராளமான எடுத்துக் காட்டுகளைத் தந்திருக்கிறேன். ஆனால் 'இந்து' தரும் செய்தி என்ன?**

**கட்டுமானத் தொழிலாளர்கள் என்னைப் பார்த்தார்களாம். தங்கள் தொடர்பான அரசாணைகள் யாவும் தமிழில் இருக்கவேண்டும் என்று**

கேட்டார்களாம். ஆனால் இது தொடர்பாக நான் எதுவும் சொல்லாமல், எங்களுக்கு இப்போது 'திருவள்ளுவர் சிலை' அமைக்கும் வேலை இருக்கிறது என்று கூறினோம். திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டது 1.1.2000த்தில். அது தொடர்பான வேலைகள் எவ்வளவு இருந்தாலும் 'அரசாணைகளைத் தமிழில் தர ஏற்பாடு செய்வோம்' என்று ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஒரு நல்ல கருத்தினைச் சொல்கிறது.

"ஆரம்பக் கல்வி நிலையில் ஆங்கில வழிக்கல்விப் பள்ளிகளை கட்டண முறையில் ஆயிரக்கணக்கில் துவக்கி நடத்த செல்வி ஜெயலலிதா ஆட்சி காலத்தில்தான் முதன் முதலில் அனுமதிக்கப்பட்டது அதனுடைய தொடர்ச்சிதான் இன்றைய நிலை, தி.மு.க. ஆட்சி வந்தபின் இரண்டு ஆண்டுகள் வரை ஆங்கிலவழி கட்டணக்கல்வி பள்ளிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதன்பின்னர் ஏனோ தெரியவில்லை தி.மு.க. ஆட்சியும் ஆங்கில வழிக் கட்டணக்கல்வி பள்ளிகளை தனியார் ஏற்படுத்தி நடத்த அனுமதித்தது.

இதனுடைய விளைவே இன்றைய பள்ளிகளில் கல்வியின் சீரழிவாகும் இலவசப்பள்ளிகளில் படித்த 12 இலட்சம் குழந்தைகள் கடந்த மூன்றாண்டுகளில் ஆங்கிலவழிப் பள்ளிக்கு சென்று படித்து வெளியேறினர். ஆங்கிலப்பள்ளிகளில் சேர்ந்த இந்த பனிரெண்டு லட்சம் பிள்ளைகளில் ஒரு சில ஆயிரம் பிள்ளைகள் கூட பன்னிரெண்டாம் வகுப்புவரை தொடர்ந்து படிக்க முடியவில்லை. இதற்குக் காரணம் ஆங்கில மொழி வழிக் கல்விதான்.

அதே நேரத்தில் தாய்மொழிவழியில் தற்போது துவக்கப்பள்ளிகளில் படிக்கும் 66இலட்சம் குழந்தைகளில் 60 இலட்சம் வரை மேல் வகுப்பு வரை தொடர்ந்து படிக்க முடிந்திருக்கிது. இதற்கு காரணம் தாய்மொழி வழிக்கல்விதான். மேற்கண்ட விசயத்தை ஒப்பீடு செய்யும்போது தமிழக மக்களை முன்னேற்றுவது தாய்மொழி வழிக்கல்வியா ஆங்கில மொழி வழிக்கல்வியா என்பது தெளிவாகும்." கவனிக்க வேண்டிய கருத்து இது.

தமிழகத் தமிழாசிரியர் கழகம் ஆசிரியர் மடலாகச் சில செய்திகளைத் தருகிறது (25.3.2000)

"கல்வி என்பது மாணாக்கரின் சிந்தனையைத் தூண்டிவிட்டு, புரிந்து கொள்ளவும், புரிந்து கொண்டதை வெளியிடவும் அவரது தாய்மொழியால் தொடக்கநிலையில் உதவிடும். எனவே தாய்மொழி வழிக்கல்வியே தாய்ப்பால் உணவாகும். மார்க்ஸ் முல்லர், ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர், ராபர்டிநொபிலி போன்ற மேலைநாட்டு அறிஞர்கள்

தமிழ்மொழியின் இலக்கிய, இலக்கண வளத்தையும், தமிழின் சிறப்பையும் உணர்ந்து, கற்று, நூல்களை ஆக்கினர். இவர்கள் தமிழால் சிறந்தவர்கள், தமிழுக்குச் சிறப்புச் சேர்த்தவர்கள் தமிழ்வழிக்கல்வி கற்று இன்று உலகத்தார் பார்வையைத் தம்மீது பதியவைத்துள்ள அறிவியல் அறிஞர்கள் அப்துல்கலாம், வா.செ. குழந்தைசாமி, மு. ஆனந்தகிருட்டினன், மருத்துவர் பி. இராமமூர்த்தி ஆகியோர் வாழ்ந்து காட்டும் சான்றோர்கள் அல்லரோ? அண்ணல் காந்தியடிகள், இரவிந்திர நாத் தாகூர், தம் கருத்துப் புதையலை தாய்மொழியிலேயே எடுத்துவைத்தவர்கள் அவரவர் தாய்மொழி வழிக்கல்விதான் அறிவியல் நிலையிலும், உளவியல் கூற்றுப்படியும் சிறந்தது என்று சொல்லாதவர் இலர். இந்திய மண்ணிலும், பிற மாநிலங்களில் அவரது தாய்மொழியைக் கற்காது பட்டம் பெற இயலாத நிலை இன்றும் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் இந்நிலை இல்லை. இதை வேதனையுடன் சுட்டிக்காட்டினால் சுடுமனம் கொண்டவர்கள் என்றும், உலகத்தோடு ஒட்டிவாழத் தெரியாதவர்கள் என்றும் மேதாவிகள் நம்மைக் கேலி பேசுகின்றனர்.

இலங்கையில் தமிழ் ஏற்றம் பெற்றுள்ள நிலை இங்கில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். அங்கு உயர்கல்வியும் தமிழ்மொழியில் தரப்படுகிறது. அங்கு மருத்துவப்படிப்பும், பொறியியல் பட்டப்படிப்பும் தமிழ்மொழி வழியே கற்றுத் தரப்படுகிறது.

அன்பு நண்பர்களே!

உலகநாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்ட கல்விக்கொள்கை தாய்மொழிவழிக் கல்வி என்பதே! மேலும் அறிவியல் அறிஞர்கள், உளவியல் அறிஞர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள் என எல்லோரும் ஏற்றுக்கொண்ட கொள்கை "தாய்மொழிக் கல்வி" என்பதே! எனவே, தமிழக அரசு வெளியிட்டு உள்ள தமிழ்வழிக்கல்வி ஆணையைத் தடையின்றிச் செயல்படுத்த வேண்டும். அரசுக்குத் துணையாக நம் கழகம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வடமொழி ஆதிக்கம் செலுத்த முனைந்த போது தமிழகம் எதிர்த்து வென்று தனித்தமிழை நிலைநாட்டியது. இந்தி ஆதிக்கம் செலுத்திட முனைந்தபோதும் தமிழ் உணர்வாளர்கள் தமிழ்காக்கக் களம் கண்டனர். வென்றனர். இந்தி ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. இப்போது ஆங்கில மொழி ஆதிக்கம் செலுத்திட முனைகிறது இதை எதிர்த்து வெல்ல வேண்டியது நம் கடமையாகும். ஆங்கிலம் கற்கக்கூடாது என்று யாரும் தடுக்கவில்லை. யார் வேண்டுமானாலும், எத்தனை ஆண்டு வேண்டுமானாலும் ஆங்கிலம்

கற்கலாம். ஆங்கில இலக்கியம் கற்று, ஆங்கிலேயனுக்கே ஆங்கிலம் கற்றுத்தரும் மேதைகளாகட்டும். ஆனால், தமிழ்மண்ணில், பிஞ்சுக் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியை விடுத்து ஆங்கிலவழியில் தான் கற்றுத் தரவேண்டும் என்பதைத்தான் எதிர்க்கின்றோம்.

தமிழ் அழிந்தால் தமிழன் முகவரியும், பண்பாடும், தொன்மைச் சிறப்பும் அழியும் நிலை ஏற்பட்டு விடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அன்பு நண்பர்களே!

தமிழால் வாழும் நாம் தமிழுக்காக வாழ வேண்டிய காலகட்டம் இது. ஆங்கிலத்திற்குத் துணையாகவும், தமிழ்வழிக் கல்விக்கு எதிராகவும் யார் குரல் கொடுத்தாலும் நாம் எதிர்ப்போம். நாம் மட்டுமல்ல, தமிழ் உணர்வாளர்களும், தமிழ் அமைப்புகளும் அதை எதிர்க்கும் என்பதில் ஐயமில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குக் காத்திருப்போம். நம் கழகமும் தமிழ்வழிக் கல்விதான் வேண்டும் என்று வழக்குத் தொடுத்துள்ளது. தீர்ப்பு வரும் வரை காத்திருப்போம்" என்கிறது இந்த அமைப்பு.

* * *

'தினமலர் - வாரமலரில்' (26.3.2000) ஒரு வாசகர் எழுதியதைப் படியுங்கள், நிலைமை புரிந்துவிடும்.

மெல்லத் தமிழ் இனி சாகும்!

ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் தமிழில் தான் கல்வி கற்பிக்க வேண்டுமென அரசு அறிவித்ததை அடுத்து, அரசின் அறிவிப்பு அரசியலாக்கப்பட்டு, அரசை ஆதரித்தும், எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும், ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் ஆங்காங்கே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. நர்சரி பள்ளியில் முதல் வகுப்புப் படிக்கும் என் மகனின் நோட்டுப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்து அதிர்ந்து உறைந்தேன்.

1. காகம் காகா எனக் 'காரையும்' (கரையும்)
2. அடு 'மேமே' (மேமே) 'என்க' (எனக்) கத்தும்
3. 'பலி' (புலி) உர் உர் என உறுமும்.
4. 'பானை' (பூனை) 'மயாவ்' (மியாவ்) மியாவ் எனக் கத்தும்.
5. நாய் 'வொள் வொள்' (லொள், லொள்) எனக் 'கரைக்கும்' (குரைக்கும்)

அடைப்புக் குறிக்குள் இருக்கும் சரியான வார்த்தைகள் வாசகர்கள் புரிந்து கொள்வதற்காக நான் எழுதியது. கொடுமை என்னவென்றால் என் மகன் தப்பும் தவறுமாக எழுதி இருப்பதை திருத்திய வகுப்பு ஆசிரியை, அதை 'ரைட்' போட்டு பத்துக்குப் பத்து மார்க் போட்டிருப்பது தான். இப்போது அவன், தவறைத் திருத்தச் சொன்னாலும் திருத்திக் கொள்ளாமல், 'தான்' எழுதியுள்ளது தான் சரி' என்று சாதிக்கிறான். அதில், 'மேமே' என்பதை எப்படி உச்சரிப்பது என்று நாட்டிலுள்ள நர்சரி பள்ளிகளில் ஏதாவது ஒன்று விளக்கிக் கூறினால் பேருவகை அடைவேன்." - *க.நா. சுப்பிரமணியன் சர்மா, மடிப்பாக்கம்.*

மழலையர் பள்ளி (ஆசிரியர் பெயரில் உள்ள) சம்பள அலுவலர் எப்படித் திருத்துகிறார் என்பதைப் பார்த்தவுடன் 'கடனுக்கு' நடக்கும் பள்ளிகள் எவை என்பது புரிந்து விடும்.

இந்து இதழில் மனோ. சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஏ.ஆர். வேங்கடாசலபதி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் சில பகுதிகள் (4.4.2000)

The Tamil Nadu Government, in a belated but laudable move, has put forward a small step in tthe right direction by passing an executive order that will make Tamil/mother tongue the medium of instruction from class I to V from the next academic year. Hopefully, the State Government will move further in the same path and extend this pedogogical arrangement to higher education also.

This has been the consistent and long-standing demand of organic intellectuals in Tamil nadu and elsewhere for well over half a century now - a legacy not only of the dravidian movement but also of the Indian nationalist movement. No less a person than the Mahatma wanted to enfore the mother tongue as the medium of instruction.

Children are fined for every Tamil word they speak. The self-appointed defenders of fundamental rights who claim parental prerogative of choosing the language of instruction have not uttered so much as a murmur against such fascis procedures. The mother tongue and the organic culture that goes with it is inferiorised. At best it is relegated to a kitchen language, a language employed to address maid-servants watchmen and other social 'inferiors'.

In a desperate bid to emulate the privileged urban class of the English-educated, they patronise a host of upstart English schools. Promoted by fly-by-night operators such schools are accountable to nobod. Untrained teachers are hired at miserable salaries and made to work for unreasonably long hours. The fundamental right of association is denied and the voice of dissent is silenced. The high tuition fee structures are the staple of jokes in the popular Tamil press. Parents and teachers do not realise that this is a race that cannot be won. English can only be the language of a small fraction.

English is by no means prohibited. English will continue to be taught as a language of communication. In all probability, without the burden of having English as the medium of instruction, proficiency in the language will improve.

The primary concern of a state is to provide a system of education that functions through the language of the people. The use of the mother tongue - Tamil in our case - will democratise not only education but also society at large. Little children will not be reduced to reciting nursery rhymes that have no bearing to the social world they live in. The absurdity of singing 'Rain, Rain go away, Come again another day' in a water-starved, monsoon-dependent country will cease. Gone will be the self-consciousness of an inferiority that comes with the inability to employ an alien language in its 'acceptable register'. Our children would have a mind that is unbridled and without fear. Then they will learn English as a language, on their own terms, and put it to functional use. And then, not only will Pudumaippithan and Jayakanthan be best - sellers in Tamil Nadu, Dostoevsky, Tolstoy and Kafka will be read in Tamil."

The Tamil Nadu Government, in a belated but laudable move, has put forward a small step in the right direction by passing an executive order that will make Tamil/mother tongue the medium of instruction from class I to V from the next academic year. Hopefully, the State Government will move further in the same path and extend this pedogogical arrangement to higher education also.

This has been the consistent and long-standing demand of organic intellectuals in Tamil nadu and elsewhere for well over half a century

now - a legacy not only of the dravidian movement but also of the Indian nationalist movement. No less a person than the Mahatma wanted to enfore the mother tongue as the medium of instruction.

குழுவில் உறுப்பினராக இருந்த வா.செ. குழந்தைசாமியை balanced and experienced educationist என்கிறார் ஆசிரியர்.

'பண' விருப்போடு தொடங்கப்படும் பள்ளிகளில் மாணவர்கள் எப்படி ஒடுக்கப்படுகிறார்கள், ஆசிரியர்கள் எப்படி உறிஞ்சப்படுகிறார்கள் என்பதனை நயமாகக் காட்டியுள்ளார்.

Invoking the minority rights argument is indeed mischievous. No minority, other than the Anglo Indian can claim a right to study in English என்று கூறியிருப்பதையும் கவனியுங்கள்.

English is by no means prohibited. English will continue to be taught as a language of commnication. In all probability, without the burden of having English as the medium of instruction, proficiency in the language will improve.

ஆங்கிலம் எந்தவகையிலும் தடுக்கப்படவில்லை. 3ஆம் வகுப்பு முதலே ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்கலாம் என்றுதான் அரசு சொல்கிறது. ஆறாம் வகுப்புக்கு மேல் பாடமாகவும், பயிற்றுமொழியாகவும் ஆங்கிலத்தைக் கொண்டுள்ள பள்ளிக்கு எந்தத் தடையும் இல்லை என்பதையும் உணர வேண்டும். இதனை ஆசிரியர் தெளிவு படுத்துகிறார்.

'Rain Rain go away' என்று பள்ளிப்பிள்ளைகளை இப்போது பாடவைப்பது எவ்வளவு `அபத்தமானது` என்பதை அருமையாக விளக்கியுள்ளார்கள்.

நூற்றுக்கு நூறு உடன்பாடுள்ள, ஆங்கிலம் நன்கறிந்த தமிழ் நெஞ்சம் படைத்துள்ள ஒருவரின் கட்டுரை இது. அரசின் கோட்பாட்டில் உள்ள தெளிவான மேலும் விளக்கமாக - அதுவும் ஆங்கிலத்திலேயே தருவது சிறப்பாகும். ஆங்கில வியாபாரிகள் தங்கள் பசப்புகளை உணர்வார்கள் என்று கருதுகின்றேன்.

ஐதராபாத்திலிருந்து வெளிவரும் 'டெக்கான் குரோனிக்கள்' (9.4.2000) இதழில் சாரதா பிரசாத் எழுதுவதைக் கவனியுங்கள்.

'1991 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆங்கிலம் பேசத் தெரிந்தோர் எண்ணிக்கை 90,042,487 பேர்தான்.

"It means that India is the second largest English speaking country in the world, next only to the US, and also that more people speak English in India than in the UK, Canada and Australia put together"

உலகிலேயே ஆங்கிலம் பேசும் இரண்டாவது பெரிய நாடு இந்தியா. ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்தில் உள்ளவர்களை ஒட்டுமொத்தமாகச் சேர்த்தாலும், அதற்கும் அதிகமானவர்கள் ஆங்கிலம் பேசுவது இந்தியாவில்தான்.

இதனை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்தபிறகு சில தமிழறிஞர்களின் கருத்துகளைக் 'கதிரவன்' வெளியிட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் சனார்த்தனம் கூறுகிறார்.

1. "தோற்றது தமிழல்ல

5-ம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்று மொழி எனும் தமிழக அரசின் உத்தரவைச் சென்னை உயர்நீதி மன்றம் ரத்து செய்துள்ளதால் தோற்றது தமிழுமல்ல! தமிழக அரசும் அல்ல!

தமிழ் வழிக் கல்வி 1960 இல் சுப்ரமணியம் கல்வி அமைச்சராக இருந்த காலத்திலேயே எடுக்கப்பட்ட முடிவு. 40 ஆண்டுகளாக அம்முயற்சி வழியில் படிப்படியாக, தமிழில் போதிய அளவு பாட நூல்கள் பதிப்பித்தல் ஆசிரியர்களைத் தயார்படுத்துதல், மக்களுக்கும் மாணவர்களுக்கும் தாய் மொழிக் கல்வியின் பயனைப் புரியவைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

அதைச் செய்யத் தவறிவிட்ட கல்வித் துறை, கல்வியாளர், அரசு, பல்கலைக் கழகங்கள், பெற்றோர்கள் அனைவரும் தோற்றனர் என்பதே இத்தீர்ப்பு! தமிழ் பாதுகாக்கப்பட வேண்டும். ஆங்கிலம் அதற்குக் கேடயமாக இருக்க வேண்டும். தமிழ் வழிக் கல்வி தாய்மொழிக் கல்வி ஆங்கில மொழி அறிவுக்கு எதிரல்ல என்பதை எடுத்துரைக்க வேண்டும். அந்த வகையில் இத்தீர்ப்பு ஓர் நல்ல இடைக்காலத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேரறிஞர் அண்ணா போன்ற அறிஞர்களை தந்த நமது அரசு, மாநகராட்சி, மற்றும் நல்லோர் அமைத்த கல்விக் கூடங்கள், சிறப்பானவையாக, பெற்றோர் தம் பிள்ளைகளை விரும்பி அனுப்பும் தரத்திற்கு உயர்த்தப் பாடுபடுவோம். இந்தத் தமிழ்க் கல்வி எனும் தேரை அனைவரும் சேர்ந்து இழுக்கும் நேரம் இது. தவறினால் இன்னும் 50 ஆண்டுகள் கழித்தும்

இப்படித் தீர்ப்புகள் வரும். புரியாதவர் தமிழைத் தோற்கடித்து விட்டதாக ஆடிப்பாடி அகமகிழலாம்! இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.''

2. ''தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கர்நாடகம், மேற்கு வங்கம் போன்ற பல்வேறு மாநிலங்களில் தாய்மொழிகளே கல்வி மொழிகளாக உள்ளன. ஆனால் தமிழ் நாட்டில் மட்டும் அவ்வாறு செய்வது அரசியல் சட்டத்திற்கு முரணானது என வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு புரியாத புதிராக உள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.''

3. ''பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு கல்விக்கொள்கைகளையும், பாட திட்டங்களையும் உருவாக்க உரிமை உண்டு. பயிற்று மொழி கொள்கையும் அதில் அடங்கியது தான். தமிழக அரசு நியமித்த மோகன் குழு, பெற்றோர்கள் கருத்துக்களையும், பொது விசாரணையின் போது கேட்டறிந்ததுதான் தமிழ்மொழி கல்விக்கு ஆதரவாக தனது அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. தமிழ்வழி கல்விக் கொள்கையை நிலைநிறுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும். கட்சிகள் வேறுபாடின்றி இந்த பிரச்சனையில் தமிழர் நலனில் உண்மையான கவலை கொண்ட அனைத்து அமைப்புகளும் இதில் ஒன்று திரண்டு நிற்க வேண்டும். தமிழர்கள் உரிமையை கல்வி வியாபாரிகள் களவாடிக் கொண்டு போக அனுமதிக்க முடியாது.''

மற்றுமொரு செய்தி

4. தமிழ் வழிக் கல்விக்குத் தடை: சட்டக் கல்லூரி மாணவர்கள் நகல் எரிப்பு

சென்னை, ஏப்ரல் 22- தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் 5-ம் வகுப்பு வரை தமிழில் மட்டுமே கற்பிக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகிகள் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இதில் ஐகோர்ட்டு தமிழ்வழிக் கல்விக்கு தடை விதித்து தீர்ப்பு கூறியது.

ஐகோர்ட்டு தீர்ப்பை எதிர்த்து சென்னை சட்டகல்லூரி மாணவர் அணியினர் நேற்று காலை புரசைவாக்கம் சட்ட கல்லூரி விடுதி முன்பு

திடீரென ஆர்ப்பாட்டம் நடத்தினர். வி.பி.ஆர். இளம்பரிதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழ் வழிக் கல்வியை அமுல் படுத்த வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். அதைத் தொடர்ந்து ஐகோர்ட்டு தீர்ப்பு நகலை எரித்தனர். பின்னர் அவர்கள் கலைந்து சென்றனர்.

முகம் (1.5.2000) இதழ் சில நல்ல கருத்துகளை எடுத்து வைக்கிறது:

"நீதி விலை போனதோ?

ஆங்கிலப் பள்ளி வணிகர்கள் நீதியை விலைக்கு வாங்க பெட்டிகளோடு அலைந்து கொண்டிருக்கிறார்கள் - என, தமிழ் மேடைதோறும் பேசப்பட்டு வந்தது உண்மையாகி விட்டது என்று மக்கள் சொல்கிறார்கள்...!

இனி என்ன செய்யலாம்?

1. தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் அய்ந்தாம் வகுப்புவரை எல்லாப் பள்ளிகளிலும் இலவசக் கட்டாயக் கல்வியை அவரவர் தாய் மொழியிலேயே வழங்க சட்டம் இயற்றலாம்!

2. தமிழில் படித்தவர்களுக்கு, தமிழக அரசுப் பணிகளிலும், அரசு உதவி பெறும் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கலாம்.

3. பள்ளி இறுதித் தேர்வுகளில் தமிழிலும், ஆங்கிலத்திலும் சேர்த்து 70 மதிப்பெண் பெற்றால் தேர்வு பெற்றதாக அறிவிக்கலாம்!

4. பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் தமிழில் பெறும் மதிப்பெண்ணை உயர்கல்விக்கு எடுத்துக் கொள்ளலாம்.

5. அரசுத் தேர்வாணையத் தேர்வுகளின் நேர்காணலும் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும்.

6. தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்குவதோடு, அப்பள்ளிகளுக்கு ஊக்கத்தொகையும் வழங்கலாம்.

இவற்றை, கலைஞர் அரசு, உடனே இந்த ஆண்டே செய்ய வேண்டும்!"

இவற்றில் எதையாவது உடனடியாக செய்யத் தமிழக அரசு முன் முன் வந்ததா என்பதனைத்தான் ஒவ்வொரு குடிமகனும் - தமிழ்க்குடிமகனும் கேட்கிறான்.

'தமிழில் அர்ச்சனை' செய்ய வேண்டும் எனபதை நான் செயற்படுத்திட முனைந்தபோது எதிர்நிலையில் திறனாய்வு செய்த சில

இதழ்கள் கூட, தமிழ்வழிக் கல்வியை ஆதரித்தும், நமக்கு ஊக்கமூட்டியும் எழுதின. அந்த வகையில் 'குமுதம்' (4.5.2000) எழுதிய ஆசிரியவுரை சிறப்பாக உள்ளது.

நாடகம்?

"வரும் ஆண்டு முதல் தமிழிலேயே கல்வி கற்கும் ஒரு புதிய தலைமுறை தமிழ்நாட்டில் உருவாகும் என்று ஆவலாய் எதிர்பார்த்திருந்த நேரத்தில் உயர்நீதிமன்றம், தமிழக அரசின் தமிழ் வழிக் கல்வி ஆணையை ரத்து செய்து தீர்ப்பளித்திருக்கிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில் இருந்து தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் துவங்கி விட்டன. ஆனால் இத்தனை ஆண்டுகள் கழிந்தும் அரசாங்கத்தால் அதனை நடைமுறைக்குக் கொண்டு வர இயலவில்லை. இந்த முறை நிச்சயம் அமலாக்கப்படும் என்று தமிழ் ஆர்வலர்கள் நம்பியிருந்தபோது, இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. இது தமிழுக்கும் தமிழக அரசுக்கும் ஒரு பின்னடைவு என்பதில் சந்தேகமில்லை.

ஆணையை ரத்து செய்து உயர்நீதிமன்றம் கூறியுள்ள தீர்ப்பில், சில அம்சங்கள் தமிழக அரசை விமர்சிப்பதாக உள்ளன. தேவையான அம்சங்களைக் கருத்தில் கொள்ளாமல் தேவையற்ற விஷயங்களை அரசு பரிசீலித்திருப்பதாக தீர்ப்பு சொல்கிறது. அதேபோல் அரசின் தமிழ்வழிக் கல்வி ஆணை தெளிவாக இல்லையென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்ன மொழியில்தான் கற்கவேண்டும் என்று ஆணையிடுவது அடிப்படை உரிமைகளில் தலையிடுவது போன்றது. இது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்றும் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, தமிழக அரசு தமிழ் வழிக் கல்விக்கான தனது வாதங்களை நீதிமன்றம் முன் சரியாக வைக்கவில்லையோ என்கிற சந்தேகம் எழுகிறது.

தீர்ப்பு ஒருபுறம் இருந்தாலும் இந்த ஆண்டு தமிழ் வழிக் கல்வியைத் துவக்க தமிழக அரசு எந்த அளவு ஆயத்தமாக இருந்தது என்பதும் ஒரு கேள்விக்குறியே.

தமிழ் வழிக் கல்விக்கு ஏற்ற புதிய பாடநூல்கள், துணை நூல்களை தயாரித்தல், அவற்றைக் கற்றுக் கொடுக்க ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சி அளித்தல், தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை பெற்றோருக்கு உணர்த்துதல், தமிழ் வழிக் கல்வி ஆங்கிலத்துக்கு எதிரானது அல்ல என்பதை

மக்களுக்குப் புரிய வைத்தல் போன்ற காரியங்களை தமிழக அரசு அழுத்தமாக மேற்கொண்டிருக்க வேண்டும்.

பெயரளவிலும் பேச்சளவிலும் மட்டும் கொள்கைகள் இருந்தால் தமிழ் வளராது. செயல்படுத்துவதிலும் தீவிரம் காட்ட வேண்டும். தமிழ் வழிக் கல்வியில் அரசு நாடகம் ஆடுகிறது என்று மக்கள் நினைத்து விடக் கூடாது.

தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப் போவதாக அரசு தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தமுறை கோட்டை விட்டது போல் உச்ச நீதிமன்றத்திலும் கோட்டைவிட்டு விடக் கூடாது.''

ஒரு தொடர் நம்மால் மீண்டும் கவனிக்கப்படவேண்டியது.

''தமிழக அரசு தமிழ் வழிக் கல்விக்கான தனது வாதங்களை நீதிமன்றம் முன் சரியாக வைக்கவில்லையோ என்கிற சந்தேகம் எழுகிறது''

குமுதம் ஐயத்தை எழுப்புகிறது. ஆனால் எனக்கு இதில் ஐயமில்லை. கல்வித்துறை தொடக்கத்திலிருந்தே தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வர விரும்பவில்லை. கல்வி அமைச்சர் 'மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளோடு' ஏற்படுத்திக் கொண்ட இறுக்கமான தொடர்பு, மின்னல் வேகத்தில் மெட்ரிக் பள்ளிகட்கு அனுமதி தருவதில் அவர் காட்டிய வேகம் - 'தமிழ்வழிக் கல்வி'க்கான எதிரிகளை எண்ணிக்கையாலும், பண வலிமையாலும் பலப்படுத்தியது - பள்ளிக் கல்விச் செயலர் எம்.ஏ. கௌரி சங்கர் இது வாராமல் இருப்பதற்கு என்னென்ன வாதங்கள் உண்டோ அவ்வளவையும் அடுக்கடுக்காக எடுத்துவைத்தது, அமைச்சரவையில் முதல்வர் முன்னிலையில் அமைச்சர்கள் முன்னிலையில் எதிர்ப்புக் கிளப்பியது - இவர் நீதிமன்றத்தில் எப்படிப்பட்ட ஆதாரங்களைத் 'தமிழ் வழிக் கல்வி'க்குச் சார்பாக எடுத்து வைத்திருப்பார்?

ஆற்றலுடன் வாதாடக்கூடிய மூத்த வழக்கறிஞர் சாந்திபூஷனுக்கே போதுமான ஆதாரங்களைப் பள்ளிக் கல்வித்துறை வழங்கியிருக்குமா? இல்லை, அது ஒரு நாடகமா?

'குமுதம்' தந்த தலைப்பே அதுதானே!

பள்ளிக் கல்வித் துறையினர் வேண்டுமேன்றே கோட்டை விட்டார்கள் என்பதுதான் என் கருத்து.

தீர்ப்புக்குப் பின்

'தமிழ் வழிக்கல்வி' தொடர்பான அரசாணை செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தபின் பல இதழ்கள் பல செய்திகளை வெளியிட்டன.

துக்ளக் (3.5.2000) இதழ் பின் வருமாறு எழுதுகிறது.

1. 'தங்கள் வீட்டுக் குழந்தைகள் எந்த மொழியில் பாடங்களைக் கற்க வேண்டும் என்று தீர்மானிப்பது பெற்றோர்களின் உரிமை; அவர்களுடைய இந்த அடிப்படை உரிமையை பறிக்கும் அதிகாரம் அரசுக்குக் கிடையாது' என்பது உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சம்.

2. கல்வி சம்பந்தமாக பெற்றோர்களுக்கு இருக்கக் கூடிய உரிமையில் அரசு தலையிட முடியாது - என்ற வாதத்தை வெகுதூரம் நீட்ட முடியாது. அப்படி நீட்டினால் கல்வி முறையே கூட கேள்விக்குரியதாகி விடும். ஆகையால் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தால், உயர் நீதிமன்றத் தீர்ப்பு உறுதி செய்யப்படுமா அல்லது மாற்றப்படுமா என்பது நிச்சயமில்லை. சில பிரச்னைகள் நீதிமன்றத்தின் முன் எழுப்பப்படும் போது, சம்பந்தப்பட்ட நீதிபதியின் சிந்தனையைப் பொறுத்து தீர்ப்புகள் அமையும்; அம்மாதிரி பிரச்னைகளில் இதுவும் ஒன்று. ஆகையால் இறுதி தீர்ப்பு என்னவாகும் என்பது பற்றி எதுவும் சொல்வதற்கில்லை.

3. அமைச்சர்கள் வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் ஆங்கில வழிக் கல்வியில் படிப்பார்கள் - ஆனால் ஊர் பிள்ளைகள் மட்டும் ஆங்கில வழிக் கல்விப் பக்கம் போக முடியாது என்ற நிலை இருப்பதால்தான், இவ்விஷயத்தில் ஆட்சியாளர்களின் உள்நோக்கம் பற்றிய கேள்வி எழுகிறது.

4. ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் எல்லாப் பாடங்களையும் படிப்பதால், ஒரு குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடாது என்பது மறுக்க முடியாத உண்மையே.

5. தமிழை ஒரு பாடமாக கற்பதாலேயே, ஒரு மாணவன் தன்னுடைய வாழ்க்கையில் சந்திக்கக் கூடிய் பல கட்டங்களுக்கும் போதுமான தமிழ் அறிவை பெற்றுவிட முடியும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் அதுவே போதுமானது.

'கல்வி தொடர்பாக பெற்றோர்களுக்கு இருக்கும் உரிமையை நீட்டினால் கல்வி முறையே கூட கேள்விக்குரியதாகி விடும். அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தால், தீர்ப்பு உறுதியாகுமா மாறுமா என்பது உறுதியில்லை.' என்று கூறும் 'துக்ளக்'கின் கருத்து நடுநிலைமையோடு எண்ணிப்பார்க்கத் தகுந்ததுதான்.'

'அமைச்சர்கள் வீட்டுப்பிள்ளைகள் ஆங்கில வழியில் படிப்பது' குறித்த செய்தி தொடர்ந்து எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் வழிக்கல்விதான் என்றால் அமைச்சர்கள் வீட்டுப் பிள்ளைகளும் இதில்தான் படித்தாகவேண்டும். அப்படிச் செய்யாமல் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பார்களானால் அப்போது துக்ளக் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை என்றாகி விடும்.

"ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் எல்லாப் பாடங்களையும் படிப்பதால், ஒரு குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடாது என்பது மறுக்க முடியாத உண்மையே."

இது முற்றிலும் சரியான கருத்துத்தான்.

"தமிழை ஒரு பாடமாக கற்பதாலேயே, ஒரு மாணவன் தன்னுடைய வாழ்க்கையில் சந்திக்கக் கூடிய பல கட்டங்களுக்கும் போதுமான தமிழ் அறிவை பெற்றுவிட முடியும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் அதுவே போதுமானது."

இப்படிச் சொல்லும்போது 3ஆம் வகுப்பு முதல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகவும், 6ஆம் வகுப்பு முதல் ஆங்கிலப் பயிற்று மொழியிலும் கற்பதாலேயே ஒரு மாணவன் தன்னுடைய வாழ்க்கையில் சந்திக்கக் கூடிய பல கட்டங்களுக்குப் போதுமான ஆங்கில அறிவைப் பெற்றுவிட முடியும்' என்று நாங்கள் கூறினால் அதில் என்ன தவறு?

துக்ளக்குக்கு உண்மைகள் தெரிகின்றன. அவற்றை வெளிப்படுத்தவும் அந்த இதழ் தயங்கவில்லை. ஆனால் ஆங்கிலத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் மற்றவர்களுக்கு ஏன் வீம்பு?

'11.5.2000 இந்தியன் எக்சுபிரசு' இதழில் ஒரு மடல். படியுங்கள்:

Language barrier

Sir: The Madras High Court delivered landmark judgement quashing the GO issued by the Tamil Nadu Government on imposing Tamil as medium of instruction.

Minister for Tamil and Culture Tamizhkudimagan should resign in the light of the judgement and for causing immense agony to students,parents and teachers.

Tamil chauvanists should see beyond their nose and realise that theycannot mar the prospects of the children by forcing them to

study in Tamil. How will these students face the growing challenges and competition?

It is shocking that visionary leaders like chief Minister M Karunanidhi have fallen into Tamizhkudimagan's trap and in the bargain paid a heavy price.

Kudos to the Association of Matriculation Schools and others who fought against this imposition. Finally, it is a victory for students. - G.K. Francis, chennai

''How will these students face the growing challenges and competition? என்று கேட்கிறார் தோழர். 5ஆம் வகுப்புப் படித்து முடித்த உடனேயே எந்த மாணவன் அறைகூவல்களையும் போட்டிகளையும் சந்திக்கப்போகிறான்? பிரான்சிஸ் போன்றவர்களுக்கு அடிப்படையே தெரியவில்லை. இதிலே இவர்கள் `தமிழ்க்குடிமகன் உடனே பதவி விலக வேண்டும்` என்று வேறு கூறிக் கொள்கிறார்கள். அறிவாளிகள் ஏதாவது கூறினால் செவி கொடுத்துக் கேட்கலாம். கீழ்ப்பாக்கத்திலிருந்து உளறுபவர்கட்கெல்லாம் காது கொடுத்தால் என்ன ஆவது?

முதல்வர் கருணாநிதி என் வலையில் விழுந்து விட்டாராம். இது வேறு. இவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து உளறுவாயர்களின் ஊதுகுழலாக இந்தியன் எக்சுபிரசு இருக்கிறதே என்பதுதான் என் வருத்தம்.

'இந்தியன் எக்சுபிரசு' இதழில் (29.5.2000) சில மடல்கள்:

சென்னை, என். இராமமூர்த்திதாசன் கருத்து இது.

1. An atmosphere should be created for everybody to learn the language of their own free will.

2. Leave the choice of medium of instructions to the parents. The Madras High Court judgement on the GO indeed provides a sigh of relief.

இராசபாளையம் சார்ந்த பி. செயபால் என்பவர் மிக அருமையாகத் தன் கருத்தினைப் புலப்படுத்தியுள்ளார். அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டிய ஆழமான கருத்துகள் இவை. அவரது மடல்.

"Proficiency in English through Tamil

Sir: The English language may be instrumental in enabling Indians to shine in the field of modern science and technology. But thinking that English as medium of instruction in the lower classes (I to V Standard) works for proficiency in English for an Indian is wrong. History reveals that the mother tongue as medium of instruction at the primary level has worked for extraordinary proficiency in English. Even under British rule, English language was never the medium of instruction at the primary level of the state. During the first two decades of the 20th century English was the medium of instruction only from 6th std. It was in 1937, Rajaji (as Chief Minister of Madras prsidency) made Tamil as medium of instruction for the entire school education (Ist to 10th Std.), abolishing English medium. All would agree that even an average school student of that period (1900-1937) had such high a proficiency in English that he envied by even the English. This astonishing height of proficiency in English was attained when English was the medium of instruction from 8th Std.
Students of 19th century too had their primary education with their mother tongue as the medium, Rt. Hon. Srinivasa sastry, C.P. Radhakrishnan, Satyamurthy, C.R. Reddy, Prof. K. Swaminathan and hundreds of others, than whom we are never going to create greater masters in English, had their primary education, with mother tongue as medium of instruction. Was it the secret behind their phenomenal mastery of the English language?" - V. Jeyapaul, Rajapalayam.

தீர்ப்பு வெளிவந்தபின் எஸ். குருமூர்த்தி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் பல உண்மைகளை உணர்த்தியிருந்தார். அவரது கட்டுரையை மனத்திற்கொண்டு சென்னை எம். ஜெயராம் என்ன எழுதுகிறார் என்று பாருங்கள்.

1. While thousands of parents in Chennai were happy and heaved a sigh of relief at the Madras High Court judgment on the medium of instruction from class 1 to 5 S. Gurumurthy found nothing meritorious in it. On the other hand, he quoted Mahatma Gandhi as saying it was "a sin against the motherland if children are taught in a tongue other than their mother's for their mental development".

2. Over a hundred years ago, Gurumurthy has stated, "Swamy Vevekananda had warned that this education denationlised us and

destroyed the respect for our culture and forefathers". But surprisingly, Swamy Vevekananda, who was a product of that education, went to Chicago and held and international audience at the Parliment of Religions spell-bound by his extempore English speech.

மகாத்மா காந்தியும், விவேகானந்தரும் தாய்மொழி வழிக் கல்வியை வலியுறுத்தினார்கள் என்பது உண்மை. அதைத்தான் குருமூர்த்தி சுட்டிக் காட்டுகிறார். ஆனால் செயலாகுமோ அது அந்தக் காலம்; இக்காலத்திற்கு அது பொருந்தாது என்கிறார். மேலும் சிக்காகோவில் விவேகாநந்தர் ஆங்கிலத்தில் நேர் உரை நிகழ்த்தி எல்லாரையும் அயர வைத்தார் என்று தன் கூற்றுக்கு வலிமை சேர்க்க விரும்புகிறார் செயராம். காந்தியடிகளும் விவேகாநந்தரும் தாய்மொழிக் கல்வி வலியுறுத்துவதால் அவர்களால் ஆங்கிலத்தில் பேச முடியாது போய்விடுமா? அப்படி எந்தப் பைத்தியக்காரனாவது சொல்வானா? அந்தப் பெரியவர்களை விடுங்கள். இந்த நூலை எழுதுகிற தமிழ்க்குடிமகன் தான் சொல்ல விரும்பும் கருத்துகளை ஆங்கிலத்தில் புலப்படுத்த முடியும். இங்கிலாந்தின் பேரரசியாகிய எலிசபெத் மகாராணியிடமே தன் துறை சார்ந்த சிற்பங்கள் குறித்து ஆங்கிலத்தில் எடுத்து விளக்கமுடிந்ததே! இது எல்லார்க்கும் தெரியுமே! எனவே 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் வழியில் படிப்பவர்கள் பிற்காலத்தில் ஆங்கிலத்தில் பேச முடியாமல் போய் விடும் என்ற தவறான கருத்தினால்தான் செயராம் தடுமாறித் தவிக்கிறார். ஆங்கிலத்தில் பயில 1956 - 60 இல் எனக்கு கிடைத்த வாய்ப்பினை விட, இப்போது தமிழக மாணவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு மும்மடங்கு என்று கூடச் சொல்ல முடியும். எனவே, செயராம் போன்றவர்கள் வீண் கவலைப்பட வேண்டாமே!

கீதா இராமசேசன் சொல்கிறார்:

'The judgment in fact, protects the rights of linguistic minorities'

இது எந்த அளவுக்கு உண்மை என்பதனை மற்றோர் இடத்தில் பேசுவோம். (உச்சநீதிமன்றம் சிறுபான்மையோர் கல்வி நிலையங்கள் குறித்து அளித்த தீர்ப்பைக் கவனியுங்கள்)

இந்து(24.4.2000) இதழில் 'Between you and me' பகுதியில் எஸ். கிருஷ்ணன் எழுதுகிறார். முதலில் அவர் கருத்துகளைப் பார்ப்போம்.

1. In some of the strongest and most unequivocal language, the Court called the G.O. arbitrary, vague and violative of Article 14 of the

Constitution, and irrational. The Court also pointed out that the right to education is a fundamental one, and includes the right to choose the medium of instruction as well, and the right can be exercised by parents, on behalf of their children. The Bench also pointed out that the petitioners/managements were not given the opportunity of a hearing, before passing of the G.O. ''This,'' the court said, ''the Government should have done on the principle of legitimate expection.''

2. Incidentally, the petitioners pointed out that if Tamil were made the compulsory medium, ''30,000 English medium schools, onwhom lakhs of women (who were employed as teachers) and children depended for livelihood and education would be put to great difficulty''.

3. The importance of knowing English for getting along with the governments of the country as well as for careers abroadneed not be stressed all over again.

4. In any event I find the assumptions and claims of people like the Minister for TamilCulture as the guardians of Tamil quite visible. Many of us, including myself, know enough Tamil to write and debate in the language. I think I might also say for most of us, English-trained speakers, Tamil writing remains an important part of our intellectual life.

5. But exactly what has the Minister for Tamil Culture accomplished for the cause of Tamil. He has terrorised officers in the Secretariat and the districts into signing their names in Tamil. He has cluttered up Government offices with Tamil typewriters. But what has he done, and what can he possibly do, about the enormous amount of English in Tamil movies, Doordarshan, and Cable TV? These are after all what our children watch all the time. The other day I watched in part a programme in Tamil for farmers. There was so much English in it that if the farmer understood it, he was a better man than I am.

தீர்ப்பின் சாரத்தை விளக்குகிறார். 'நீதிமன்றத் தீர்ப்பு' பகுதியில் அதனை நாம் பார்த்திருப்பதால் இங்கு விளக்கம் வேண்டியதில்லை.

ஆங்கிலப் பள்ளி நடத்துபவர்கள் கோரிக்கை என்ன?

**30000** ஆங்கில வழிப் பள்ளிகள் உள்ளனவாம். அரசின் ஏற்பைப்பெற்ற ஆங்கிலவழிப் பள்ளிகள் இவ்வளவுதான்: (CBSE. **193,**

ஆங்கிலோ இந்தியன் 41, பதிவுசெய்யப்பட்ட மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் 2100; மெட்ரிகுலேசன் பள்ளிகள் 1999 வரை 2650 மொத்தம்: 4984 இவ்வளவுதான்) ஆனால் மனுதாரரர்கள் - மழலையர் பள்ளிகளை நடத்துபவர்கள் கணக்குப்படி 25000 பள்ளிகளுக்கு மேல் எந்த ஏற்பும் பெறாமல் பெட்டிக்கடைகளைப் போல் இயங்கி வருகின்றன என்பதுதான் உண்மை. கல்வி கடைச் சரக்காகி விட்டது என்று நாங்கள் கூறுவதற்குக் காரணம் இப்போதாவது விளங்கியிருக்கும் என்று கருதுகிறேன். (ஒரு கட்டிடத்தில் மூன்று பள்ளிகளை நடத்திய கும்பகோணம் பழனிச்சாமியைக் கேளுங்கள்)

இவற்றில் 1 இலட்சம் பெண்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்களாம். அவர்களது வாழ்க்கைக்கு வேட்டு வைப்பதாகி விடுமாம் எங்கள் தமிழ்வழிக் கல்விக் கொள்கை. ஏற்கெனவே இங்குப் பணியாற்றும் ஆசிரியர்களின் தரமும், திறமும் குறித்து விளக்கியுள்ளேன்.

மேற்சுட்டிய 3-ஆம் கருத்தினை மற்றோர் இடத்தில் அலசுவோம்.

மேற்சுட்டிய 4-ஆம் கருத்து - இது ஏற்கத்தக்க கருத்துத்தான்.

எங்கோ சுற்றி, எஸ். கிருஷ்ணன் என்னிடத்தில் வந்து விட்டார்; கவனியுங்கள். தமிழில் கையொப்பமிட வேண்டும் என்று மாவட்ட அலுவலர்களையும் தலைமைச் செயலக அலுவலர்களையும் மிரட்டி வருகின்றேனாம். தமிழ்நாட்டில் வேலை பார்த்துக் கொண்டு 1978 இல் அரசாணை பிறப்பித்த பிறகும் தமிழில் கையொப்பமிடக்கூட விரும்பாதவர்களைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சவேண்டும்" என்று எதிர்பார்க்கிறாரா கிருஷ்ணன்?

அரசு அலுவலகங்களில் எல்லாம் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளை நிரப்பி விட்டேனாம். அதே நேரத்தில் தமிழ்த் திரைப்படங்களிலும், தூரதர்சனிலும், கம்பி வழிதொலைக்காட்சிகளிலும் (Cable Tv) பெரும்படையெடுப்பு நடத்திக் கொண்டிருக்கும் ஆங்கிலத்தைத் தடைசெய்ய அவர் என்ன செய்திருக்கிறார்? நம் குழந்தைகள் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது இவற்றைத்தானே! ஒரு நாள் தொலைக்காட்சியில் உழவர்களுக்கான நிகழ்ச்சி ஒன்றைப்பார்த்தேன். அதில் ஏராளமாகக் கலந்து வந்த ஆங்கிலச் சொற்களை அந்த உழவனாவது புரிந்து கொள்வானானால் அவன் என்னைவிடச் சிறந்தவனே!" என்று கூறுகிறார் கிருஷ்ணன். இந்தப் பகுதி நூற்றுக்கு நூறு உண்மை. இவற்றையும் ஒழுங்கு செய்திட ஒருநேரம் வரும். அதற்குமுன் முதலில் தொடவேண்டியவை, உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை என்று நான் எத்தகைய திட்டம் வைத்திருக்கிறேனோ அத்துறையில் தெளிவாகப் போய்க் கொண்டிருக்கிறேன். மற்றொன்றில் உள்ள

சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டி நான் செய்யும் செயல்கள் அடாவடித்தனம் என்று சொல்ல எவருக்கும் எந்தத் தகுதியும் இல்லை.

(31.5.2000) 'தினமணி'யில் ஆசிரியர்க்கு மடல்கள் பகுதியில் ஏழு மடல்கள் நம் கவனத்துக்கு உரியவை.

1. மனப்பாடக் கல்வி

'தமிழ்வழிக் கல்விக்கு எதிர்ப்பு: மெக்காலேவுக்கு மீண்டும் வெற்றி'' - எஸ். குருமூர்த்தி எழுதிய விமர்சனக் கட்டுரை (19-5-2000) கண்டேன்.

தன் தாய்மொழியில் ஒரு விஷயத்தைப் படிக்கும் மாணவன் அதை ஆழமாகப் புரிந்து கொள்கிறான். ஆங்கிலத்தில் கற்கும்போது அவன் மனப்பாடம்தான் செய்கிறான். மனப்பாடம் செய்து அப்படியே ஒப்பிக்கும் மாணவனின் சுயசிந்தனை மட்டுப்படுத்தப்படுகிறது. - வீ. கணேசன், கோவில்பட்டி-1

2. அக்கறை இல்லை

தமிழை, அரசியல் ஆதாயங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டஅளவுக்கு, அதை ஆட்சிமொழியாக்குவதிலோ, பயிற்றுமொழி ஆக்குவதிலோ, திராவிட இயக்கங்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பதே உண்மை. தமிழ்நாட்டில் வேலை செய்வோருக்கும் வெள்ளைக்காரனே சம்பளம் தருவதாக இவர்களது நினைப்பு.

இந்தியாவில் 33 விழுக்காட்டினரே பேசும் இந்தியைக் கட்டாயமாக்க முடிகிறது. ஒரு விழுக்காடுகூட தமிழ்நாட்டில் தாய் மொழியாக் கொள்ளாதவர்களின் ஆங்கிலத்தைக் கட்டாயமாக்க முடிகிறது. ஆனால் 85 விழுக்காடு தமிழ்பேசும் மக்கள்வாழும் தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாயப்படுத்த முடியாதது என்ன விந்தை! - பூவை. செந்தமிழன், சென்னை-56.

3. நடிப்பில் லயிப்பு

தமிழுக்கு இது விநோதமான துயர காலம். எல்லோரும் தமிழ் வாழ்க என்பவர்களாக இருந்தும், நடைமுறையில் நடிக்கிறோம். நமது நடிப்பிலேயே நாம் லயிப்பதும் நடக்கிறது. இது அவலம்.

தமிழை, ஆதிமுதல் அந்தம் வரையில் நேசித்தவர்கள் வீழ்ந்தா போயினர்? ஆரம்பக்கல்வி கூடவா தமிழில் படிக்கக் கூடாது? நம் சொந்த மண்ணிலேயே (கலாசார வேரின்றி) அன்னியனாக வாழத்தான் வேண்டுமா! - பா. சத்தியமோகன், நெய்வேலி-1.

4. அனைவரும் போலிகள்

கட்டுரையில் ‘மேல்தட்டு மக்கள், தகவல் ஊடகங்களின் கருத்துகள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய அளவுக்கு இந்த ‘லாபி’ செல்வாக்குப் பெற்றுள்ளது’ என்ற வரிகளைச் சற்று விளக்கியிருக்கலாம். எனக்கு விளங்குகிறது. வாசகர்களுக்கு விளங்காது. ‘பெரும்பாலும் போலியான தமிழ்ப்பற்றாளர்கள்’ என்பதில் ‘பெரும்பாலும்’ என்ற சொல் பொருந்தாது. அவ்வாறு சொல்வது நழுவல் உத்தி. அனைவரும் போலிகளே. - க.மா. வீரணன், உசிலம்பட்டி.

5. ம.பொ.சி.யின் கருத்து

கட்டுரைக் கருத்து நூற்றுக்கு நூறு சரி. இதைத்தான் பல்லாண்டுகளாக ம.பொ.சி. சொல்லிவந்தார். அப்போது நம் தமிழர்களே கேலி பேசினர். தமிழ் வாழ்க! இந்தி ஒழிக என்று முழக்கமிட்டு, ஆங்கில ஆதிக்கம் வளரவே வழி செய்து விட்டார்கள். 1960களில் கல்லூரிகளில் தமிழே பயிற்றுமொழி எனும் வளர்ச்சி நிலையில் இருந்தோம்.

1967க்குப் பின் கழக அரசுகளின் காலத்தில்தான் ஆங்கிலவழிக் கல்விக் கூடங்கள் பெருகி, இன்று தொடக்கக் கல்வி மட்டும் தாய்மொழியில் தர அரசாணை போட்டும் நீதிமன்றத் தடை எனும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மெய்யான ஈடுபாட்டுடன், தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தாய்மொழியில் கற்றிடவேண்டும் எனும் முனைப்புடன் தலைவர்கள் செயற்படவில்லையே! - ஞானச்செல்வன், சென்னை -106.

6. வேடம் வேண்டாம்

1967-ல் தி.மு.க. ஆட்சி மலர்ந்தது. அப்போதே தமிழ்வழிக் கல்வி தழைப்பதற்கு உரிய சட்டத் தீர்மானம் நிறைவேற்றி இருக்க வேண்டும். தமிழ் உணர்வை மையமாக வைத்தே தி.மு.க. ஆட்சி மலர்ந்தது என்பதை மறந்திடலாகாது.

காமராஜர் ஆட்சிக் காலத்திலேயே தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறியது. ஆனால் அதனைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த காங்கிரஸ் அரசும், தொடர்ந்து வந்த திராவிட இயக்க அரசுகளும் தவறி விட்டன.

இன்றும்கூட அரசு ஆணைகள் ஆங்கிலத்தில் வரும் நிலை உள்ளது. அரசு ஆணைகளைத் தமிழில் வெளியிடத் தயக்கம் ஏன்?

தமிழ்வழிக் கல்வியைச் செயல்படுத்துவதில் இரட்டை வேடப்போக்கு கூடாது. - முத்து வேங்கடேசன், திருமயம்.

7. 'மான உணர்ச்சி பெறவேண்டும்'

தமிழகத்தில் நேரிய பார்வையுள்ள ஒரு கல்வியாளர் கூடவா இல்லை என மனம் நொந்து போயிருந்த எனக்கு, எஸ். குருமூர்த்தியின் செய்திக் கட்டுரை மிகுந்த மன ஆறுதல் தந்தது.

'பிஞ்சுக் குழந்தைகளுக்குத் தமிழைத் தாய்மொழியாகக் கற்பியுங்கள். ஆறாம் வகுப்பிலிருந்து எந்த முறைக்கும் மாற்றிக்கொள்ளுங்கள்' என்ற தமிழக அரசின் ஆணை எந்த வகையில் தவறாகும் என்று, கட்டுரையாளர் காரண காரியத்தோடு விவரித்திருப்பதை எல்லோரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

'மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டதே அந்தந்த மொழிகள் வளரவேண்டும் என்பதற்காக எனவும் அரசு ஒரு மொழிக் கொள்கையை வகுக்கும்போது, நீதிமன்றங்கள் அதில் தலையிடலாகாது' என்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு (எண் 550) கூறுகிறது. தமிழக அரசின் ஆணையொன்றை, ஏற்றுத் தீர்ப்பு வழங்கிய நீதிபதி பி. சண்முகம் 'தாய்மொழிக்கு எதிரானது கல்வியாகாது' எனக் கூறியுள்ளார்.

இங்கு காங்கிரஸ் கட்சி, காந்தியின் கொள்கையைப் புதைத்துவிட்டது. அவர்கள் என்றுமே தாய்மொழிக்காகப் பரிவு காட்டியதில்லை. அதனாலேயே அவர்களும் பிற 'கம்யூனிச' நண்பர்களும் தமிழகத்தில் இன்றளவும் வேரூன்றாமல் போனார்கள். 'காங்கிரஸ் அல்லாத தமிழ் ஆட்சியாளர்கள் பெரும்பாலும் போலியான, தமிழ்ப் பற்றாளர்களாக இருந்ததே இந்தக் கேட்டுக்குக் காரணம்' என்பதை, கட்டுரையாளர் தெளிவுபட விளக்கியுள்ளார். தமிழுக்காக உயிரை விடுவதாகப் பேசும் கட்சிகள் மௌனிகளானதையும் விளாசுகிறார். நாற்காலி ஆசையால், களத்தில் இறங்கிப் போராடத் தயங்கும் தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தையும், கர்நாடகத்தையும் வங்காளத்தையும் பார்த்தாவது மான உணர்ச்சி பெறுங்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. - தமிழண்ணல், துணைத் தலைவர் - தமிழ்ச் சங்கப் பலகைக் குறள்பீடம், மதுரை-20.

மடல்களிலேயே போதுமான விளக்கம் உள்ளது.

'தினமணி' ஆசிரியர்க்கு மடல்கள் (1.7.2000) பகுதியில் சில தமிழறிஞர்கள் கூட்டாகச் சேர்ந்து சில செய்திகளைச் சொல்லியுள்ளார்கள். படியுங்கள். மருத்துவர் இராமமூர்த்திக்கும் இதில் விடையுள்ளது.

2. இதோ சமூக விஞ்ஞான ஆதாரம்

தாய்மொழி என்பது தாய் பேசும் மொழிதான், தந்தை பேசும் மொழிதான், குடும்பம் பேசும் மொழிதான், ஊர்பேசும் மொழிதான். அந்தக் குழந்தை எந்த மொழிச் சமூகத்தைச் சேர்ந்ததோ அந்த சமூகம் பேசும் மொழிதான். தாய்மொழி என்பதே, சமூக மொழி என்பதன் மறுபெயர்தான்.

தன் இருப்புக்காகவும் தன் வாழ்வுக்காகவும் தாய், தந்தை, குடும்பம், உறவுகள், சமூகம் இவர்களோடு குழந்தை எந்த மொழியில் தொடர்பு கொள்கிறதோ அதுதான் தாய்மொழி.

தாயிடம் இருந்து கற்கும் மொழியையே சமூகம் சார்ந்த பயன்பாட்டு மொழியாக வளர்த்துக் கொள்ள முடியும் என்பதும் தாயும் கூட அந்த மொழியைச் சமூகத்திடமிருந்துதான் பெற்றுக் கொள்கிறாள் என்பதும் மனித இன வரலாறு, அறிவியல். அறிவை ஒரு மனிதன் உலகின் எந்த மொழியில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம். சமூகத்திற்கான பயனாக அந்த அறிவு மாறவேண்டுமானால், சமூகம் சார்ந்த பெரும்பான்மை மக்களின் மொழியில் அது அளிக்கப்பட வேண்டும்.

அறிவு அல்லது அறிவு வளர்ச்சி என்பதை, சமூகத்திற்கானதாகக் காண வேண்டும். கல்வி மூலம், ஒருவர் எந்த அறிவைப் பெற்றுக் கொண்டாரோ, அதைச் சமூகத்திற்குத் திரும்ப வழங்குதல் வேண்டும். எந்த சமூகத்தின் மொழியில் கற்றுக் கொண்டாரோ அந்த மொழியில்தான் அந்த சமூகத்திற்குத் திரும்பவும் சொல்ல முடியும்: வழங்க முடியும்.

அதனால் ஒரு மொழியில் அறிவு இருக்கிறதா? இல்லையா என்பது பிரச்சினையே அல்ல. ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் அறிவு குறைவாக அல்லது கூடுதலாக இருக்கிறதா என்பதல்ல கேள்வி. அறிவு ஏன் தேவை என்பதுதான் கேள்வி. அறிவு, யார் மூலமாகச் சமூகமயமாகிறது என்பதுதான் கேள்வி. ஒவ்வொருவரும் தான் பெற்ற அறிவை எந்த மொழி மூலம் சமூகமயமாக்க வேண்டும் என்பதுதான் அடிப்படையே தவிர, அறிவு எந்த மொழியில் இருக்கிறது என்பதல்ல அடிப்படை.

சமூக மனிதன் அந்த அறிவோடு உறவாடுவதற்கும், அந்த அறிவைத் தெரிந்து கொள்வதற்கும், தெரிந்து கொண்டதைச் சமூகத்தின் மற்ற மனிதர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கும் பரஸ்பரமாகத் தாய்மொழிதான் பயன்படமுடியும்.

எந்த மொழியில் இருந்து பெறப்படுகிற அறிவுக்கும் நிபுணத்துவத்திற்கும் பயன்பாடுதான் முக்கியம். தாய்மொழிக் கல்வி

கிடைத்திருக்குமானால் நரம்பியல் துறையின் முன்னோடியான டாக்டர் ராமமூர்த்தி போன்ற நூற்றுக் கணக்கானவர்கள் கிடைத்திருப்பார்கள். இதுபோல் எல்லாத் துறைகளிலும் நூற்றுக்கணக்கான வல்லுநர்கள் கிடைத்திருப்பார்கள்.

நுணுக்கங்கள், விவரங்கள், வளர்ச்சி நிலைகளை வேற்று மொழியில் கற்றுத்தருவது என்பது அந்த மொழி அறியாத, தாய்மொழி மட்டுமே தெரிந்தவர்களிடம் செலுத்தும் ஆதிக்க அம்சம்தான்.

ஒரு சமூக மனிதனைப் புறக்கணிக்க வேண்டுமானால், அவனுடைய மொழியை முதலில் புறக்கணிக்க வேண்டும். ஒரு சமூக மக்களைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கட்டுப்படுத்தவே ஆங்கிலேயர்கள் அந்த மக்களின் மொழியில் உரையாட விரும்பவில்லை என்பதுதான் உண்மை.

தமிழ்நாட்டில் பிறந்த ஒரியக் குழந்தை தமிழகத்தின் பெரும்பான்மை மக்களின் தாய்மொழியில் கல்வி கற்கவேண்டுமா அல்லது தனது மாநிலத்திற்குச் சென்று தனது தாய்மொழியில் கற்க வேண்டுமா என்பது அதன் சூழ்நிலையைப் பொறுத்தது. ஆனால் பெரும்பான்மையான ஒரியக்குழந்தைகள் ஒரிய மொழியில் கற்றுக் கொள்வதே சரியானது.

தாய்மொழியில் கற்பது மூளைக்குச் சுலபம்தான். எந்த சந்தேகமும் இல்லை. தாய்மொழி அல்லாத இரண்டாம் மொழியில் அறிவு வளரும். ஆனால் அந்த வளர்ச்சி எல்லைக்குட்பட்டது. நமது அக்கறை அறிவு வளர்ச்சி மட்டும் அல்ல. அதன் சமூகப் பயன்பாடும் பற்றியது.

விஞ்ஞான ஆராய்ச்சி வழியில் பதில் தேடுவது அத்தியாவசியம் என்கிறார் டாக்டர் ராமமூர்த்தி. அதிலும் ஒரு திருத்தம்: சமூக விஞ்ஞான ஆராய்ச்சி வழியில் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் சரியான பதில்கள் கிடைக்கும். - *இன்குலாப், எஸ்.வி. ராஜதுரை, பா. செயப்பிரகாசம், பொ.வே. பக்தவத்சலம், பி.வி. வெங்கட்ராமன், பெ.நா. சிவம், ஜெயந்தன் - சென்னை.*

பொள்ளாச்சி மகாலிங்கம் ஓர் அருமையான கருத்தினை வெளியிட்டிருக்கிறார் (தினமலர் 2.7.2000)

இரவல் மொழியில் அறிவை விருத்தி செய்கிறோம்!

நம் நாட்டில் மராட்டியம், வங்காளம், ஆந்திரா, கர்நாடகம், கேரளா போன்ற மாநிலங்களில் அம்மாநில மொழிகள் சிறப்பாக வளர்ந்துள்ளன.

காரணம், அம்மாநிலங்களில் மாநில மொழியைக் கட்டாயமாக அனைவரும் படித்தாக வேண்டும். நாம்தான் இரவல் மொழியில் அறிவை விருத்தி செய்வதற்குக் கடுமையாக முயற்சி செய்து வருகிறோம். பெரும்பான்மை மாணவர்கள் இதில் படுதோல்வியும், சிறுபான்மை மாணவர்கள் இதில் வெற்றியும் பெறுகின்றனர். இது நமது எதிர்காலச் சந்ததிகளின் இன அடையாளங்களை மெல்ல மெல்ல அழித்து விடும். தமிழிசை, தமிழ்கல்வி, தமிழ் மருத்துவம், தமிழ் வழிபாடு, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ்க்கலைகள் ஆகியவைகளே நமது பாரம்பரிய அடையாளங்கள். இவற்றை இழக்காமல் இவற்றோடு இன்னபிற தேசிய மொழிகளையும் சர்வதேச அறிவியல் மொழிகளையும் இணைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனமும், சுயமரியாதையும் ஆகும். - *தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம்.*

'இதயம் பேசுகிறது' (9.7.2000) இதழில் ஒரு கவிதைப்போட்டி தமிழ்வழிக் கல்வி குறித்து சிற்றிதழ்கள் ஆய்வு நூலகம் நடத்திய போட்டி - சிறந்த கவிதை. படியுங்கள்.

வா வா தம்பி!
நீ அடியெடுத்து வைக்கும்
இந்த அ-கரம்
தமிழின் இன்னொரு அரிச்சுவடு!

வாள் கொண்டு
உலகாள வந்தது - ஒரு
கிரேக்கக் கூட்டம்!

வஞ்சத்தால்
உலகாள வந்தது - ஒரு
வெள்ளையன் கூட்டம்!

அம்மாக்கள் சிலருக்கு
ஆங்கிலத்தில் மோகமுண்டு!
அவர்களிடம்,
'நாங்கள் மொழிக்காகப்
போர்வாள் ஏந்திப் புறப்படுகையில்
நீங்கள் ஏன்
மம்மிகள் ஆக
ஆசைப்படுகின்றீர்கள்?
என்று கேளுங்கள்!

இந்த மொழி
இளைத்துவிட்டது!
விஞ்ஞானத்தின் வேகத்துக்கு
இதனால்
ஓடிவர முடியாதென்று
பொய்ஞானிகள் சிலர்
புகழ்வதுண்டு!
நம்பாதே தம்பி!

சீனத்துக் கணினியெல்லாம்
சீனமே பேசுகின்றன!
வெறும்
சித்திர எழுத்துக்கே
இத்துணை சக்தியெனில் - நம்
சரித்திரத் தமிழாலே
சாதிக்க முடியாததேது?

தமிழுக்கு
விஞ்ஞானச் சுவை இல்லையென
சூரியன் பார்த்து - சில
நாய்கள் குரைப்பதுண்டு!

அவனின்
சட்டை பிடித்துக் கேள் தம்பி!
தாய்ப்பாலுக்குச்
சர்க்கரையா போட்டுக் குடித்தான்!
பின் ஏன்
ஞானப்பாலுக்கு மட்டும்
ஆங்கிலச் சர்க்கரை?

தமிழ்த்தாயைச் சிலுவையில்
அறைந்துவிட்டு
கடவுள் ஆகிவிட்டார்
தமிழன்னை - என்று
ஆங்கில மோகிகள் சிலர்
பொய்ச்சாயம் பூச வரலாம்!
அவர்களிடம் கேள் தம்பி -
'தாயை எரித்த

சிதைத்த வெளிச்சத்திலா
காமப்பாடம் படிப்பாய்?' என்று.

சங்கம் வளர்த்த
தங்கத் தமிழ் - இப்போது
அலுமினியம் ஆகிவிட்டது!

இதன்
ஏழைக் குரலுக்கு
அமெரிக்கா
கரன்சி காசு வீசாதென்று
அறிவிலிகள் சிலர்
அலறுகின்றார்கள்!

நன்றாய்க்கேள் தம்பி!
அமெரிக்காவில்
மென்பொருள் வல்லுனர்களில்
ஐம்பது விழுக்காட்டுக்கு மேல்
நம் தமிழர்!

இப்போது புரிகிறதா?
அவன் எந்த மொழியையும்
வழிமொழிய வில்லை!
அவன்
தமிழனின் மூளையினாலேயே
தரணி ஆளுகின்றான்!

மொழியை மட்டுமே
அவன்
முன் மொழிந்திருந்தால்
ஆங்கிலம் படித்த
அத்தனை பேருக்கும் அங்கே
வேலை இருந்திருக்குமே!

பாட்டன்
பனையோலைய்யில் எழுதியதை -
அப்பன்
காகிதத்தில் எழுதியதை

நீ
கணினியில் எழுதப்போகிறாய் -
அவ்வளவுதான்.

குருவியின் தலையில்
பனங்காய் - ஆங்கிலம்!
குழந்தையின் கையில்
அமுதசுரபி - தமிழ்!
நம்மொழி
கேட்கக் கேட்க சொல் கொடுக்கும்
அட்சயப் பாத்திரம்!

ஆங்கிலமா?
அது
இலத்தீனில் ஒரு வார்த்தை
கிரேக்கத்தில் ஒரு வார்த்தை
துருக்கியில் ஒரு வார்த்தை
தமிழில் ஒரு வார்த்தை
என
உலகம் சுற்றிய திருவோடு!

சொந்தத்திலேயே
சொல் இல்லாத
அந்த மொழியா
உலகாள முடியும்?

- செ. செந்தில், சரஸ்வதி
அச்சகம். ராஜாமணி காம்ப்ளக்ஸ்,
வத்தலக்குண்டு - 624 202.

'தினமணி'யில் (14.7.2000) ஒரு மடல். பேராசிரியை திலகவதி பாஸ்கரன் எழுதியது. பா. இராமமூர்த்திக்கு ஒரு பதிலடி இது.

மூடநம்பிக்கை

"தாய் மொழிக் கல்வி பற்றிய டாக்டர் ராமமூர்த்தியின் கடிதம் மற்றும் பதில் கடிதங்களைப் படித்தேன். வாழ்வின் சகல உண்மைகளும் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டால் தான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதும் ஒரு வகையான மூட நம்பிக்கையே.

பல ஆண்டுகளாக, தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும், கல்லூரி ஆசிரியையாகப் பணியாற்றியபோது, தாய்மொழி மூலம் ஆரம்பக்கல்வி கற்ற

மாணவர்களுக்கும். ஆங்கில மொழி மூலம் பயின்ற மாணவர்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூர்ந்து கவனிக்க முடிந்தது. தாய் மொழியில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் கல்லூரிக்கு வந்தபின், தாம் கற்கும் பாடத்தின் கருதுகோள்களை உள்வாங்கி, அந்தத் துறையில் தங்கள் அறிவை வளர்த்துக்கொண்டு திறமையைக் கூட்டும் நிலையில் இருப்பதைக் கவனித்திருக்கிறேன்.

கருதுகோள்களை ஆங்கிலத்தில் எழுத, வெளிப்படுத்த மட்டுமே அவர்களுக்குச் சில நேரங்களில் சிரமமேற்படுவதுண்டு. ஆனால், ஆங்கிலப் பள்ளியில் ஆரம்பக் கல்வி பெற்ற மாணவர்கள், தமிழும் தெரியாமல் ஆங்கிலமும், தெரியாமல் தடுமாறுவதைக் காண முடிகிறது. சிந்தனைத் தளத்தில் செயல்படும் திறனும், ஆளுமை முழு வளர்ச்சியடையும் சாத்தியமும் குறைகிறது. ஓரிரு தலைமுறைகளாக ஆங்கிலமே புழக்கத்திலுள்ள குடும்பத்திலிருந்து வரும் மாணவர்கள் சிலர் இதற்கு விதிவிலக்காயிருக்கலாம்."

'தெளிதமிழ்' இதழ் தரும் செய்தி (16.7.2000)

## தமிழண்ணல் - நா. அருணாசலம் ஆகியோர் எழுதிய திறந்த மடல் முதல்வர்க்குத்தான்!

"தமிழ்வழிக் கல்வி குறித்த அரசாணையைச் சட்டமாக்க வேண்டும். ஒரு குழுவிடம் தந்து, முறைப்படுத்தி, உடனே சட்டமாக்கலாம்.

தமிழ் வழியில் உயர்கல்வியை M.B.B.S., B.E., M.B.A., M.C.A., போலும் தொழிலும் பயன்பாடுமுள்ள கல்வியை உடனே தமிழ்வழியில் நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய கல்வி அமைச்சர் முரளிமனோகர் ஜோஷி, தமது வேதியியல் கல்வியில் டாக்டர் பட்டத்திற்கு இந்தியில் ஆய்வேடு கொடுத்தவர். இந்தியப் பெருமொழிகள் பலவும் உயர்கல்வியைத் தாய்மொழியில் தர மிகவும் முன்னேறி வருகின்றன.

இதை நேரில் கண்டறிய அறிஞர் வ.அய். சுப்பிரமணியம் தலைமையில், தமிழ்வழி உயர்கல்வியில் நம்பிக்கையுடைய கல்வியாளர்கள் தமிழறிஞர்கள் கொண்ட குழு ஒன்றை அமைத்து, இரண்டு திங்களில் அறிக்கை தரச் செய்ய வேண்டும். அவர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தபோது, தமிழ்வழியில் மருத்துவம், பொறியியலைக் கொணர எல்லா ஏற்பாடுகளும் செய்தவர்.

தமிழில் கலைக்களஞ்சியம் விற்பனை ஆவதில்லை. மலையாளக் கலைக்களஞ்சியங்கள் பல பதிப்புகள் வந்துவிட்டன. இதற்கான காரணத்தை விளக்கிய அவர், "கேரளாவில் எந்த ஒரு தேர்வையும் மலையாளத்திலும் எழுதலாம்; ஆங்கில வழியில் படித்தாலும், ஆங்கிலத்தில் வினாத்தாள் இருந்தாலும், மலையாள மொழியில் எழுதத் தடையில்லை. அதனால் அங்குக் கலைக்களஞ்சியங்கள் தீர்ந்துபோகின்றன. பயன்பாடு இல்லாவிட்டால் யாரும் வாங்கமாட்டார்கள்" என்று தலைமைச் செயலகத்தில் புதிய கலைக்களஞ்சியம் தொடங்குவது பற்றிய கூட்டத்தில் கூறினார்.

மலேசியாவில் உயர்கல்வி அனைத்தும் மலாய் மொழியில் நடைபெறுகின்றன. அங்குள்ள ஏழு பல்கலைக்கழகங்களில் ஒன்று, மலாய் மொழிவழி உயர்கல்வியைத் தொடங்குவது - சோதனை செய்து பார்ப்பது - மற்றப் பல்கலைக்கழகங்கட்கு முன்னோடியாய் உதவுவது என இவற்றுக்கென்றே நடைபெறுகிறது. டத்தோ சாமுவேலு அவர்களிடம் உசாவி இவ்வுண்மையை அறியலாம்.

முன்னர்க் குறித்த அறிஞர் பவித்திர சர்க்கார் அறிக்கைப்படி ஐரோப்பா, தென்னமெரிக்கா, சோவியத் உருசியா, சப்பான் போலும் நாடுகளில் ஆங்கிலவழி என்பதே முதலிலும் இல்லை; முடிவிலும் இல்லை.

தொடர்பு மொழியாக, துணை மொழியாகக் கூட மிகச் சிறுபான்மையினரே படிக்கின்றனர்.

தமிழர்களின் ஆங்கில மோகம் தணிய வேண்டும். தமிழுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கவேண்டும். டை கட்டி வாழ்வாரே வாழ்வார் என்ற நிலை மாறி, தமிழ்ப் பண்பாடு தழைக்க வேண்டும். தமிழனின் சுயமரியாதை காக்கப்பட வேண்டும். தமிழ் எல்லா நிலையிலும் முதலிடம், முதன்மை பெற வேண்டும்.

இவை யாவும் நடைபெற வேண்டுமென்றால், தமிழ்வழியில் உயர்கல்வி அனைத்தும் தரப்படவேண்டும். தொழிற்கல்வி உட்பட்ட உயர்கல்வி அனைத்திலும் தமிழிலும் தேர்வெழுத ஆணை பிறப்பிக்க வேண்டும்.

நடுவணரசின் IAS, IPS போலும் தேர்வுகளைத் தத்தம் தாய்மொழியிலும் எழுதலாம் என்ற நிலைதான் இன்று கேரளாவிலும் பிற பல மாநிலங்களிலும் உள்ளது.

தங்கள் காலத்தில் இது செய்யப்படவில்லையென்றால், தமிழுக்குரிய இடத்தை வேறு யாரும் தரப்போவது இல்லை.''

“நம் வாழ்நாள் கொஞ்சம். காலம் எல்லாம் மறக்க முடியாத ஓர் அரிய செயலைச் செய்தாக வேண்டும்.

**எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.**

நாளை என்று தள்ளிப்போட முயலும் பலர் தங்களைச் சூழ்ந்துள்ளனர்.“

‘தமிழ் நெஞ்சம்’ (16.7.2000) இதழில் ஓர் ஆசிரியவுரை.

“தமிழக அரசே! தமிழ் வழிக் கல்விக்குச் சட்டம் இயற்று!“

“சென்னை உயர்நீதி மன்றத்தின் தமிழ் மொழிக்கு எதிரான தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்து தாய்மொழிக்கு அரண் செய்!“

“தமிழக அரசு கொண்டு வந்த கல்விக்கான அரசாணையை எதிர்த்துச் சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்புக்கூறியது. தீர்ப்புக்கூறிய நாளில் தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை. சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்துகொண்டிருந்தது. ஆனால்

இன்று வரை தமிழக அரசோ
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரோ
மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியரோ
மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனாரோ
மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆளுங்கட்சியினரோ,
மாற்றுக்கட்சியினரோ,

எவருமே அத்தீர்ப்புபற்றிக் கருத்து ஏதும் உரைக்கவுமில்லை; நாவசைத்துக் கருத்துகூடக் கூறவில்லை; இது ஏன்? ஏன்? என்று விளங்கவில்லை!“

சுமார் 6கோடி தமிழ் மக்கள் உள்ள ஒரு தமிழ் நாட்டில் 50 பேர் கொண்ட ஆங்கிலக்கல்வி வணிகர் குழு நம் தமிழைச் செயலற்றதாகச் செய்த மாயம் என்ன? என்றே புரியவில்லை.“

நம் தாய் மொழியாகிய தமிழில் மட்டும்தான் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படவேண்டும் என்பத தமிழக மக்களின் ஒருமித்த கருத்து. இதற்குச் சட்ட வடிவம் கொடுத்துச் செயலுக்கு கொண்டுவரத் தங்களை யன்றி யாரால் முடியும்?

நோயாளிக்கு மருந்தை மருத்துவர்தான் முடிவு செய்வார். அதைப்போல தமிழ்க் குழந்தைகளுக்குப் பயிற்றுமொழிக் கல்வி தமிழ்தான்

என்பதை தமிழகத்தில் கல்வித்துறையில் உள்ள அறிஞர்களும், புலவர் பெருமக்களும், அறிவியல் அறிஞர்களும்தானே முடிவு செய்யவேண்டும் என்பது ஒரு பொதுவான இயற்கை விதி என யாரால் மறுக்கமுடியும்? இதை அறியாமல் கூறுவது பேதைமையல்லவா?"

உணர்ச்சியுடன் எழுதப்பட்ட மடல் இது. சட்டமன்றம் நடக்கிறது. தமிழ்வழிக் கல்வி - அமைச்சர் அன்பழகன் திட்டவட்டமாகவோ, உணர்ச்சியுடனோ எதுவும் கூறவில்லை. முதல்வரும் எழுந்து சட்டம் இயற்ற ஆவன செய்வோம் என்று கூறாமல் பேசாமல் இருந்தார். இந்நிலையில் தமிழ்க்குடிமகன் எழுந்து, இந்த இருவரையும் மீறி, ஏதாவது அறிவிக்க முடியுமா?

எழுதிய சுந்தரேசன் வழுவிய இடம் இது!

'மக்கள் மேடை' ஆசிரியர், இயக்குநர் சேகர் அவர்கள் தரும் ஆசிரியவுரை (ஆகஸ்ட் 2000)

"தமிழகத்தில் தான் தமிழன் தன் தாய்மொழியில் கற்கவேண்டுமென்று முழக்கமிடவும், சாகும் வரை பட்டினிப்போர் நடத்தவும் வேண்டிய இழிநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த நூறு ஆண்டுகளாகத் தமிழர்களிடையே மொழி உணர்வு, இன உணர்வு, பண்பாட்டு உணர்வு ஆகியவை பற்றிப் பேசப்பட்டன; இயக்கங்கள் நடத்தப்பட்டன. இவ்வுணர்வுகள் அழிவதற்குப் பகைப்புலம் வடக்கெனவும் பேசப்பட்டது. அப்பேச்சுகளில் உண்மை இருந்தது; பகைவர் ஆரியர் என விளக்கிக் கூறப்பட்டது. அதுவும் உண்மையே.

நாட்டு விடுதலைக்குப் பின்னர், ஆரியப் பகையோடு பேராயக்கட்சியின் (காங்கிரசின்) பகைமையையும் இணைத்துப் பேசினர் அதுவும் உண்மையே.

1967க்குப்பின் பயிற்று மொழி தமிழ் (தாய்மொழி) என அறிவிக்கவும், சட்டமியற்றவும் தடையாக நின்ற - நிற்கின்ற - பகைவர்கள் யார்? இவ்வினாவிற்கு நடுநிலை பிறழாமல் விடை காணவேண்டியத சிந்திப்போரின் கடமை அல்லவா?

மொழியினப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முயலாமல், இப்பிரச்சனைகளைத் தமது அரசியல் சூதாட்டத்திற்கு முதலீடாக்கியவர் யார்? நாற்காலிச் சுகத்தை நாடும் (நக்கும்) மாந்தரால், ஆறுகோடி தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதுதானே உண்மை?

அரசுப்பணியில், பெரும் பொறுப்புகளில் இருந்தவர்கள் தமிழுக்கு எதிரிகளாகச் செயல்பட்டனர்; பொருள் குவித்தனர்; பணிஓய்வு பெற்றபின்னர் தமிழ்மொழி இனப்பற்றாளர்களாக நடிக்கின்றனர்; மீண்டும் ஏதாவது பதவிகள் கொடுக்கப்பட்டால் பெட்டிப் பாம்பென அடங்கி விடுகின்றனர். இவர்களைப் பச்சோந்திகள் என அழைப்பதில் தவறுமுண்டோ?

அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒழுக்கமானவர்களாக, மொழி இனப்பற்றுடையவர்களாகக் காட்டிக் கொள்கிறார்கள்; ஆளுங்கட்சியாக மாறியவுடன் முற்றிலும் முரண்பட்டவர்களாக, எதிர் வினையாற்றுபவர்களாக மாறிவிடுகிறார்கள்; மேடையில் ஏறி, புரட்சியாளராக மாறி. இறங்கியதும் எதிர்ப் புரட்சியாளராக மாறிவிடுகிறார்கள். திரையில் கண்டுகளித்த இரட்டை வேடத்தையும் தோற்கடிக்க, மூன்று, நான்கு வேடங்கள் இட்டுக் கொண்டு திறம்பட நடிக்கக் கற்றுக் கொண்டு அதில் வெற்றியும் பெற்று விடுகிறார்கள். இவர்களின் நடிப்புத் திறனுக்கு ஆஸ்கர் விருது வழங்கப்படாமை புரியாத புதிராகவே இருக்கிறது.

நீதிபதி மோகன் குழு பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. மொழிக்கொள்கை பற்றிச் சட்டமியற்றவேண்டும் என்பதொன்றே அக்குழுவின் பரிந்துரையுமாகும்.

**தமிழ்ப் படித்தால் மாடுதான் மேய்க்கப்போகவேண்டுமென்று கூறிய கல்வி அமைச்சரின் கல்வித்துறையால் தயாரித்து, அரசு ஒப்புதல் பெற்ற அரசாணை பத்திக்குப் பத்தி முரண்பாடுகளைக் கொண்டதாக அமைந்தது. திட்டமிட்டு வெளியிடப்பட்ட ஓர் ஆணை என்றால்கூடத் தவறாக இருக்க முடியாது. பயிற்று மொழிதாய்மொழியே எனச் சட்டமியற்ற அரசு விரும்பவில்லை.**

ஆணையின் முரண்பாடுகளைத் தமது கல்வி வணிகத்துக்குப் பயன்படுத்திக் கொண்டனர் ஆங்கிலப் பள்ளிகள் நடத்தும் தமிழ் மார்வாடிகள் (புதிய சுரண்டல் பேர்வழிகள்).

"ஆங்கிலப் பள்ளிகள் நடத்துவோரை விசாரணை செய்யவில்லை", என்பது தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வாசகம். மூன்று நாள்கள் மோகன் குழுவிடம் ஆங்கில வழிக் கல்வி நடத்தும் வணிகர்கள் வாய்மொழியாகவும், எழுத்து மூலமாகவும் முறையீடு செய்துள்ளார்கள். இழிகுணம் படைத்த கல்வி வணிகர்கள் வன்முறையாளர்களைக் கொண்டு கலாட்டாவும் செய்தனர். தமிழ் ஒழிக! ஆங்கிலம் வாழ்க! என்ற முழக்கங்கள் அம்மூன்று நாளும். விசாரணை நடைபெற்ற வளாகத்துக்குள்

எதிரொலித்தவண்ணம் இருந்தன என்பது உண்மை. இத்தகைய நடவடிக்கைக்குப் பிறகும் ஆங்கிலப் பள்ளிகள் நடத்துவோரை விசாரிக்க வில்லை எனக்கூறுவது, நீதிமன்றத்தின்மீது இருக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்கிறது.

சட்டம் வேண்டுமென்று போராட்டம் நடத்திய தமிழ்ச் சான்றோர் பேரவையும், அகில இந்திய அரசியல் கட்சிகளும் மேல்முறையீடு வேண்டுமென்றும் அறிக்கைகள் விடுகிறார்களே தவிர, சட்டம் கொண்டுவரவேண்டுமென்று குரல் கொடுக்கத் தயங்குகிறார்கள். இந்தத் தயக்கம், தமிழர்களுக்கு ஐயத்தை ஏற்படுத்துகிறது.

தமிழர்களே! நம்பிக் கெட்டது போதும்! குட்டக் குட்டக் குனிவது மடமை! நிமிருங்கள்!" எண்ணுங்கள்! நிமிர்ந்தோமா?

அதே இதழில் (செப்டம்பர் 2000) மற்றுமொரு செய்தி. படியுங்கள்.

"கான்வென்ட் யுகத்தில், தம் பிள்ளைகளுக்கு எப்படியாவது ஆங்கிலப் பள்ளியில் இடம் பிடித்துவிடவேண்டும் என்று நடுத்தர வர்க்க பெற்றோர்கள் படுகிற பாடு கொஞ்ச நஞ்சம் அல்ல.

நகை நட்டை வைத்தும், ஐந்து வட்டிக்கும் பத்து வட்டிக்கும் கடன் வாங்கியும் பணத்தைத் தயார் செய்து கொண்டு சீட்டுக்காக கியூவில் நிற்கின்றர்; சிலர், பிரபலமான கான்வென்ட் ஸீட்டுக்காக, எம்.எல்.ஏ., எம்.பி., அமைச்சர் சிபாரிசுக் கடிதங்களுடன் அலைவதையும் பார்க்கிறோம்.

சிலர் குழந்தை கருத்தரித்த உடனேயே கான்வென்ட்டில் பிள்ளைக்கு இடம் கேட்டு முன்பதிவு செய்து கொள்கின்றனர்.

இத்தகைய கான்வென்ட்களில் எடுத்த எடுப்பில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கே ரூபாய் ஆயிரம் முதல் பத்தாயிரம் வரை தேவைப்படுகிறது.

ஒரு குழந்தையை எல்.கே.ஜி. முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரை கான்வென்ட்டில் படிக்க வைப்பதற்கு லட்ச ரூபாய்க்கு மேல் செலவாகிறது.

ஆனால், அரசுப் பள்ளிகளில் அதே படிப்பைப் படித்து முடிக்க ரூபாய் ஐயாயிரம் அளவுதான் செலவாகும். அரசுப் பள்ளிகளில் ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடப்புத்தகங்கள், கல்வி உதவி நிதியாக ஸ்காலர்ஷிப், சில பள்ளிகளில் இலவச தங்குமிடவசதி போன்றவையும் கிடைக்கும்.

ஏழை எளிய மக்களின் வேர்வையிலே, உழைத்த பணத்தைக் கொண்டு நடத்தப்படும் கான்வென்ட் பள்ளிகள் அந்த மக்களின்

எண்ணங்களை, கனவுகளை, ஆசைகளை, நம்பிக்கைகளை நிறைவேற்றுமா? நிறைவேற்றமுடியுமா? சிந்தித்துப் பார்ப்போம்.

அரசுப் பள்ளிகளில் தமிழில் என்ன ஏட்டுக்கல்வியைச் சொல்லிக் கொடுக்கிறார்களோ, அதே ஏட்டுக் கல்வியைத்தான் ஆங்கிலத்தில் கான்வென்ட்டில் சொல்லிக் கொடுக்கிறார்கள். இரண்டு பள்ளிகளுக்கிடையே உள்ள ஒரே வித்தியாசம் மொழி மட்டுமே.

ஏற்கெனவே பல லட்சம் இளைஞர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஆங்கிலத்தில் ஏட்டுக் கல்வியைக் கற்றுவிடுவதால் மட்டும் வேலை கிடைத்துவிடும் என்பது அர்த்தமற்றதாகும். ஆங்கில மொழிவழிக் கற்றவர்கள் பல இலட்சம் பேர் வேலையில்லாதிருப்பது இவர்களுக்குத் தெரியவில்லை. வேலை வாய்ப்புக்கும் வாழ்க்கைக்கும் உத்தரவாதமில்லாத அந்த ஆங்கிலக் கல்வியைப் பல லட்சரூபாய்க்குமேல் கண்மூடித்தனமாகச் செலவு செய்து படிக்கவைப்பது தேவைதானா?

கான்வென்ட்டில் ஆங்கிலத்தில் படித்த அத்தனை லட்சம் மாணவர்களுக்கும் டாக்டர், எஞ்சினீயர் ஸீட் கிடைத்துவிடப் போவதில்லை. தனியார் கல்லூரிகள் முளைத்துவிட்ட நிலையில் பல லட்சம் பணம் இருந்தால்தான் அங்கே இடம் கிடைக்கும்.

அரசு மருத்துவ, பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்காதவர்களும், தனியார் கல்லூரியில் ஸீட் பிடிக்கும் சூதாட்டத்தில் பெரும் பணம் கட்ட முடியாமல் தோற்றுப் போனவர்களும் இறுதியாக வேறு வழியில்லாமல் தம் பிள்ளைகளுக்குத் தேர்ந்தெடுக்கும் படிப்பு பி.ஏ., பி.எஸ்.சி., பிகாம்., பி.லிட் போன்றவை தாம்.

யாரோ ஒருவருக்கு லட்ச ரூபாய் கிடைக்கப்போகிறது என்பதற்காக எல்லோரும் லாட்டரிசீட்டு வாங்குவது போன்றதே கான்வென்ட் படிப்பு."

சிறப்பாசிரியர் உண்மைகளைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார். அனைத்தும் வெளிப்படையான, மறுக்க முடியாத உண்மைகளே!

* * *

# இயல் முப்பது

## இதழ்களின் குழப்பவாதங்கள்

'இந்து' இதழ் நீண்ட காலமாகவே யார் யாருக்குச் சார்பாக எழுதும், யார் யாரை எதிர்க்கும், எதிர்க்க வேண்டிய சூழலில் பிறரது மடல்களை வெளியிட்டு எப்படித் தன் வெறுப்பை வெளிப்படுத்திக் கொள்ளும் என்பதனை ஒவ்வொரு 'திராவிடக் குடிமகனும்' அறிவான்.

இந்தக் கட்டத்தில் 24.4.2000 அன்று 'The Tamil Tangle' எனும் பெயரில் `இந்து` இதழ் ஓர் ஆசிரியவுரை எழுதியிருந்தது. இதற்கு முன்பே 29.11.98 இல் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது. தலைப்பு ''The language Tangle"

"Mr. Karunanidhi's rcent announcement that Tamil would become the sole medium of instruction for certain subjects in all nursery and primary schools that follow the State Board syllabus may not be legally sustainable if it is implemented'. என்று கட்டுரையில் முகுந்த் பத்மநாபன் எழுதினார். ஆனால் இந்த அரசாணையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்காடியபோது, நீதியரசர் சண்முகம் தெளிவாக தீர்ப்பளித்தார்.

"மொழித்தொடர்பாக அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்துக் கொண்டால், அது சட்டப்படி செல்லும்" என்றார்.

எனவே, 'may not be legally sustainable' என்று இந்து எழுதியது அடிபட்டுப் போயிற்று.

'இந்து' நமது கொள்கைகட்கு எதிராக எப்படி எழுதுகிறது பாருங்கள்:

"All private nursery and primary schools (all schools wit classes from LKG to standardV) have to teach geography, history, mathematics and social sciences in Tamil from the next academic year, 1999-2000. Practical difficulties in teaching the physical sciences in Tamil have led to their exclusion.

-To ensure compliance, schools which fail to obey will be de-recognised.

-Tamil will be introduced in those linguistic minority schools which do not teach it.

The announcement was preceded by the submission of a paper by the Minister for Tamil Culture, Mr. M. Tamizhkudimagan, to different wings of the Government. While, on the face of it, the announcement, which is partially based on the paper, may appear clear and unproblematic, it raises a host of questions".

"Does it apply only to the nursery and primary schools? If so, how could Mr. Tamizhkudimagan, an unyielding champion of the language, maintain that Tamil would be used as a medium of instruction up to standard VII or the middle school level?"

"But among those schools under the State's control are ones which take the State Board, Matriculation and Anglo-Indian examinations. Will institutions in the latter two streams - which include a clutch of well-known Chennai schools such as Churchpark and Don Bosco - be coverd?"

"It is believed that the Government is considering limiting the applicability of the order to nursery and primary schools, but this is bound to be legally challenged as a discriminatory policy"

கல்வி நிறுவனங்கள் அரசை எதிர்த்து வழக்குத்தொடர இந்து இதழ் எப்படி அடிஎடுத்துக் கொடுக்கிறது என்பதைப் பாருங்கள்! வழக்குத் தொடர்ந்தவர்களும் இதையே வற்புறுத்துகிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. எனவே ஆங்கில வியாபாரிகட்கு 'இந்து' தான் வழிகாட்டுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது! ஆனால், நீதியரசர் சண்முகம் அவர்களின் தீர்ப்பு அரசின் கொள்கையை ஏற்று வரவேற்பதாகவே அமைந்துவிட்டது. இதை மற்றோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

மெட்ரிகுலேசன் பள்ளிகளும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளும் இந்தப் பயிற்றுமொழித் திட்டத்துக்குள் உட்படுத்தப் படாதபோது "Why should a private institution following the State Board syllabus switch to Tamil" என்று `இந்து` அவர்களுக்கு எடுத்துக் கொடுக்கிறது!

பிறகு அவர்களே சொல்கிறார்கள்.

"The only logical step would be to extend the order to all schools under the State's control. While this may mitigate the criticism of inequality or discrimination (and hugely please the undaunted Mr. Tamizhkudimagan), it would be a thoughtless and rash political step. Too many influential schools, some of them run by the religious minorities, would be extremely unhappy with such an order"

மேலும் சிறுபான்மை மொழியினரையும் இதில் இழுத்து, எப்படியும் குழப்பி விடவேண்டும் என்னும் திட்டத்தோடு 'இந்து எழுதுகிறது.

"Ironically, the Government appears to lack the will to insist on Tamil being taught in its own minority schools"

1008 பள்ளிகள்தான் தமிழ்நாட்டில் சிறுபான்மை மொழியினர் பள்ளிகள் என்பதனையும் அவற்றில் தமிழை விரும்பிப் படிக்க விரும்புவர்கட்கெல்லாம் தனி ஏற்பாடு செய்யப்படும் என்றும் அரசு தெளிவுபடுத்திவிட்டது.

(தற்போதைய நிலைமை: என்வரைக்கும் முயன்று, இயக்குநர் நாராயணசாமியும் தெளிவாகப் பரிந்துரைத்த ஒன்றை, அன்பழகன் ஊறுகாய்ப்பானையில் போட்டு 'ஊத்தி' மூடிவிட்டார் என்பது ஒன்று.

தற்போது உச்ச நீதிமன்றமே, 'சிறுபான்மைய்ர் பள்ளிகளிலும் ஓர் அரசு தாய்மொழியை, வட்டாரமொழியை ஒரு பாடமாகப் படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த உரிமை உண்டு' என்று தீர்ப்பளித்து விட்டது.)

"If the linguistic minority schools have to teach Tamil in addition to the mother-tongue and English, what will happen to the State's much-touted two-language policy?"

என்று கேட்கிறது 'இந்து' இந்திய அரசின் மும்மொழிக் கொள்கை இந்தி- ஆங்கிலம்- அவரவர் தாய்மொழி அல்லது வட்டார மொழி என்பதுதான். நமது அரசு இருமொழித்திட்டம் கொண்டிருப்பதால் இந்தியை மூன்றாவது மொழியாக ஏற்கவில்லை. ஆனால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தியைப் பயிற்று மொழியாகவும் பாடமொழியாகவும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அப்படி நடைபெறுகின்ற பள்ளிகள் 8 மட்டும்தான்.

ஆனால் அவரவர் தாய்மொழி மற்றும் ஆங்கிலம் மட்டுமே படிக்கும் பிள்ளைகள் தமிழையும் பயில விரும்புவதும், தமிழைக் கற்பிக்கத் தமிழாசிரியர்

அமர்த்திக் கொடுப்பதும் மும்மொழிக் கொள்கையாகாது. தமிழ் நாட்டில் உள்ள எல்லாரும் தமிழ் படிப்பதற்கான தாராளமொழிக் கொள்கை இது.

ஆனால் 'இந்து' எப்படி நம்மைக் குழப்ப முற்படுகிறது என்பதைக் கவனியுங்கள்.

நமது அரசு, அரசுப்பள்ளிகளிலும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் **ஏதாவதொரு பிரிவில் மட்டும்** ஆங்கிலப் பயிற்றுமொழி வைத்துக் கொள்ள அனுமதி தந்துள்ளது. ஆனால் பல பள்ளிகளில் அனுமதியின்றியே ஒன்றுக்கு மேற்பட்ட **ஆங்கிலப் பிரிவுகளைத்** தொடங்கி நடத்துகிறார்கள் சில தலைமை ஆசிரியர்கள். கல்வி அமைச்சர்க்கு நெஞ்சில் துணிவும், நேர்மைத் திறமும் இருந்திருந்தால் ஒரே நாளில் அதிகாரிகளை அழைத்து ஒரே நேரத்தில் இரண்டு மூன்று பள்ளிகளைப் பார்வையிட்டு, ஒன்றுக்குமேற்பட்ட பிரிவுகளை அனுமதியின்றி நடத்திய இரண்டு மூன்று தலைமை ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்திருந்தாலே போதும்! ஆனால் என்ன நடந்தாலும் கண்டு கொள்ளாத எருமைத்தனம் கோலோச்சும் போது என்ன நடக்கும்? அதைத்தான் 'இந்து' எழுதுகிறது.

"State-aided schools like this are allowed to run only one section in English for every class, but they circumvent this by running additional sections unofficially. Admits the principal: ''Everybody does this and so do I?'' என்கிறாராம் ஒரு தலைமை ஆசிரியர்.

இது கல்வி அமைச்சகத்தின் கையாலாகத்தனமா? இல்லை. நாங்கள் கண்டு கொள்ள மாட்டோம், என்று சொல்லி நடத்த விட்ட களவாணித்தனமா?

"The real difficulty lies in whether such a discriminatory decision can be legally sustained"

நீதியரசர் சண்முகத்தின் தீர்ப்பையும் அதன்பின் ஏற்பட்ட விளைவுகளையும் விரிவாக விளக்கியுள்ளேன்.

'The Tamil Tangle' எனும் 'இந்து' கட்டுரைக்குத் தமிழண்ணல் எழுதிய மறுப்பே சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். அவர் எழுதுகிறார்.

''It is not parents but only the merchants of nursery and primary education by which they are swindling money in thousands and lakhs who challenged the Government order. There is no mention about these money - mongers in your editorial".

இந்து இதழ் பெற்றோர்களின் பின்னால் ஒளிந்து கொண்டு எழுத நினைக்கிறதே தவிர, அதுவும் பெற்றோர்கள் சார்பில் எழுதுவதாக நடிக்கிறதே தவிர வேறொன்றுமில்லை.

தமிழண்ணல் கடுமையாகவே சொல்கிறார்.

"It is but common sense that learning by children in their tender age through their mother tongue is easy since it is in consonance with Nature. Nobody will doubt that you would lack in this common sense. But you choose to say that Tamil nadu Government is lacking in common sense / in prescribing the mother tongue for the children to learn"

பொது அறிவு - Common Sense - இந்து இதழுக்கு இல்லை என்று அடித்துச் சொல்கிறார்.

மேலும் சொல்கிறார்.

''And the traders of English medium schools are encashing this delusion of the ignorant people. You know all these things pretty well. But you choose to preach that the Tamil Nadu Government must simply remain passive without doing anything against these money - mongers who have found a roaring business through the English medium schools"

அறியாத மக்களின் ஆசைகளை வைத்துக் காசு பார்க்கும் ஆங்கிலப் பள்ளிகளின் தீய நோக்கைத் தெரிந்திருந்தும் 'இந்து' இதழ் தெரியாததுபோல் நடிக்கிறது.

கேட்கிறார்:

"Don't you know that in all other states their respective mother tongue alone is the medium of instruction? Why do you want totreat Tamil Nadu separately as if it were separate from India?

To say that the mother tongue is the natural medium of instruction for the children means to you as' linguistic chauvinism' and storm troppers?"

'இந்து'வுக்குச் சூடாக ஒரு கேள்வி கேட்கிறார்.

கர்நாடக மாநிலத்தில் 1994 இல் நீதியரசர் மோகன் கூறிய தீர்ப்பை எடுத்துக் காட்டியுள்ளீர்கள். ஆனால் அந்தத் தீர்ப்பும் சென்னை உயர்

நீதிமன்றத் தீர்ப்பும் ஒரே மாதிரியானவையா? நீர் உண்மையானவராகவும் நேர்மையானவராகவும் இருந்திருந்தால் கர்நாடக மாநிலத்தில் மோகன் தீர்ப்பின் விவரங்களைச் சொல்லியிருக்க வேண்டும். But you have conveniently hiddenit.

மேற்கு வங்கத்தில் மூன்றாம் வகுப்பு முதல் பள்ளிகளில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகச் (பயிற்றுமொழியாக அன்று) சொல்லிக் கொடுப்பதை வலியுறுத்தி டாக்டர் பவித்ர சர்க்கார் தந்த அறிக்கையை நீங்கள் பார்த்திருக்கலாம். ஆனால் உங்கள் கட்டுரையில் இதுபோன்ற அறிக்கையில் எல்லாம் காட்டப்படவில்லை.

'இந்து' இதழ் மீது தமிழண்ணல் நேரடியாகவே குற்றம் சாட்டியிருக்கிறார்.

"You have developed such a deep hatred against the classical Indian language Tamil. It may be your intention that Tamil should also become as an unspoken and domrmant language as your celestial language of Sanskrit. Your innate hatred against Tamil, the mother tongue of Tamilnadu is clearly understood"

'இந்திய இலக்கிய மொழியாகிய தமிழின் மீது தாங்கள் அப்படியொரு ஆழ்ந்த வெறுப்பினை வளர்த்து வைத்துள்ளீர்கள். தங்கள் சமஸ்கிருத மொழியைப் போலவே தமிழும் பேசப்படாத, மூச்சடங்கிய மொழியாக ஆகிவிடவேண்டும் என்பதுதான் உங்கள் நோக்கமாக இருக்கவேண்டும். தமிழர்களின் தாய்மொழியாகிய தமிழின்மீது தாங்கள் கொண்டுள்ள உள்ளார்ந்த வெறுப்பு தெளிவாகவே எங்களுக்குப் புலப்படுகின்றது

நீங்களெல்லாம் இயற்கையாகவே தமிழர்களிடம் அமைந்துள்ள மனிதநேயம் பரந்த மனப்பாங்கு, பிறரிடத்தில் காட்டுகின்ற மாறாத பாசம் ஆகியவற்றால் இந்த மண்ணின் வாழ்த்துகளோடு வசதியோடும், தாராளமாகவும் வாழ்ந்து வருகிறீர்கள்.

ஆனால் இவ்வளவிருந்தும் தமிழ் மக்கள் மீதும் தமிழ்மொழி மீதும் ஓர் ஆழ்ந்த வெறுப்பினைக் காட்டுவதற்கு உங்களைப் போன்றவர்கள் என்றும் தயங்குவதில்லை. உங்களைப் போன்றவர்கட்காகத்தான் திருவள்ளுவர் 'பெருமை' எனும் அதிகாரத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"There is redemption even to him who has violated any order of goodness; but no redemption at all for these who have killed the sense of gratitude towards a help rendered"

தமிழின் மீது தாங்கள் கொண்டுள்ள ஆழ்ந்த வெறுப்பினை நீக்கிக் குணப்படுத்த எந்த ஒரு மருந்தும் இல்லை என்பதை நாங்கள் அறிவோம் என்றாலும் உங்களை ஓரளவாவது தெளிவுபடுத்தும் எனும் நம்பிக்கையில் எங்கள் நிலையில் உள்ள நியாயங்களை உணர்த்துவதற்கான அறிக்கையை அனுப்பியுள்ளோம். கடைசியில் இப்படி முடிக்கிறார்.

"If you wish to remain with perverse knowledge that favours only hatred and aversion you will never see the truth of nature. We would request you to come out of your innate hatred"

'இந்து' இதழ் என்ன எழுதியிருக்கும் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளலாம். தட்டிக் கேட்கமாட்டார்கள் - அல்லது தலையில் போட மாட்டார்கள் என்ற தைரியம்தான் இவர்களை இப்படி ஆடவைக்கிறது.

அப்படியானால் இங்கொரு பால்தாக்கரேயோ, வட்டாள் நாகராசோ வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையோ?

தமிழர்களே! இந்தக் கேள்வி உங்களுக்குத்தான்.

இதழ்களில் வெளிப்படும் கருத்துகள்

59 ஆண்டுகளுக்கு முன் (5.3.1938இல்) 'தினமணி'யில் வெளிவந்த செய்தியை மீண்டும் 'தினமணி' வெளியிட்டுள்ளது. தினமணி நமக்கு எதிரான கருத்துச் சொல்லும் இதழன்று. என்றாலும் இந்தச் செய்தியை வெளியிட்டிருப்பதால் நாமும் அதனை ஆராய்கிறோம்.

1. 'தமிழைக் காக்க இங்கிலீஷ் வேலியா?'

சென்னை, மார்ச் 4- சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ் மாணவர் வருஷவிழா கொண்டாடிய பொழுது, மகா மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையரின் உருவப்படம் ஒன்று கலாசலை பிரசங்க மண்டபத்தில் திறந்துவைக்கப்பட்டது.

சென்னை கல்வி மந்திரி ஸ்ரீ சுப்பராயன், உருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசியதின் சாரம் வருமாறு:

தமிழன் ஹிந்தியை கற்றுக் கொண்டாலும் தன் தமிழை மறக்க அவனால் முடியாது. பிற பாஷைப் பரிச்சயத்தால் பயனுண்டு என்று நான் கருதுகிறேன்.

நமது பாஷையைப் பரப்ப நமது காங்கிரஸ் சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். ஹிந்தி போதனையை ஏற்படுத்துவதால் அவர்கள் தமிழை

மறந்துவிடவில்லை. இப்பொழுது முளைத்துவரும் 'தமிழ் பாதுகாப்பு ச சங்கங்கள் இங்கிலீஷில் தமிழைப் பாதுகாக்க பேசிக்கொள்கின்றன.

இதே சுப்பராயன்தான் தமிழகச் சட்டமன்றத்தில் 'சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்' என்று தீர்மானம் வந்த போது எதிர்த்து வாக்களித்தவர். இப்போது நமது தமிழ்ச் சங்கங்கள் பற்றிக் கேலி பேசுகிறார்.

'தமிழ்ப் பாதுகாப்புச் சங்கங்கள் இங்கிலீஷில் தமிழைப் பாதுகாக்கப் பேசிக்கொள்கின்றன! என்று கிண்டல் செய்திருப்பதைக் கவனிக்கவும்.

நம்மை எதிர்ப்பதில் எப்போதும் 'துக்ளக்' இதழுக்குத்தான் முதலிடம். 'தமிழில் வழிபாடு' தொடர்பான நாமும் துக்ளக்குக்குப் பதிலடி கொடுத்திருக்கிறோம். இப்போது 'தமிழ் வழிக் கல்வி'. துக்ளக் எழுதுகிறது பாருங்கள்.

"தமிழனை முன்னேற விடாமல் அடித்து விட்டால், தமிழ் வளர்ந்து விடும் - என்ற தீர்மானத்திற்கு அமைச்சர் தமிழ்க்குடிமகன் வந்து விட்டார் போலிருக்கிறது.

தமிழை ஒரு மொழியாக எல்லா பள்ளிகளிலும் கற்பிக்க வேண்டும் - என்பது முற்றிலும் ஏற்கக் கூடியது. ஆனால் தமிழில்தான் எல்லா பாடங்களையும் கற்பிக்க வேண்டும் என்பது இன்றைய நிலையில் தமிழனை பின்னுக்குத்தான் தள்ளும். ஆங்கிலம் ஏற்கெனவே நம்மிடம் இருக்கிற ஒரு பெரிய வசதி. அதை இழந்தே தீருவோம் என்ற அமைச்சரின் பிடிவாதம், தமிழர்களை பெரிதும் பாதிக்கும்" என்கிறார் சோ.

வேறு இரண்டு செய்திகளை எழுதுகிறார்.

சோ எப்போதும் தானே விரும்பிக் 'குழப்ப ஜோதி'யில் கலப்பவர் என்பதை 'தமிழில் வழிபாடு' நூலிலேயே பார்த்தோம்.

'ஆங்கிலம் நம்மிடம் இருக்கிற பெரிய வசதி. அதை இழந்தே தீருவோம்' என்பது என் பிடிவாதம் என்று எழுதுகிறார். இங்கு ஆங்கிலம் படிப்பதற்கு எத்தனை வாய்ப்புகள் உள்ளன என்பதை எல்லாம் அறிவர்.

ஏற்கெனவே முற்றிலும் ஆங்கிலப் பயிற்றுமொழியிலேயே இருந்த பள்ளிக்கல்வியை ஒரே ஆணையில் தமிழ்வழிக்கல்வியாக மாற்றினாரே இராசாசி. அந்த ஆணை தமிழனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டதா? நானும், முதல்வரும், கல்வி அமைச்சரும், சோவை விட முந்திக்கொண்டு என்னைக் கொத்திக்குதறும் முரசொலி மாறனும் இங்கு புலம்பும் சோவும் 1 முதல் 11 வரை அனைத்துப் பாடங்களையும் தமிழ்வழியில் படித்தவர்கள்தானே! ஆங்கிலம் ஒரு

ப்பாடமாக ஆறாம் வகுப்பிலிருந்துதானே கற்றுத் தரப்பட்டது! இன்று அரசின் சார்பில் இயங்கும் அனைத்துப் பள்ளிகளும் இராசாசி காலத்தில் மாற்றம் பெற்றவைதானே!

இன்று என்ன நிலை?

1) ஆங்கிலத்தை 3 ஆம் வகுப்பிலிருந்து சொல்லிக் கொடுக்க ஏற்பாடு.

2) அரசு சார்ந்த பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் ஆங்கிலப் பயிற்றுமொழியாக ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளை வைத்துக்கொள்ள ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளது.

3) மெட்ரிகுலேசன் முதலிய பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து அனைத்துப் பாடங்களையும் ஆங்கில வழியில் சொல்லிக் கொடுக்க அனுமதி.

4) அரசினர் கல்லூரிகள் அனைத்திலும் இரண்டுமே பயிற்று மொழிகள்.

5) அரசு உதவிபெறும் 136 கல்லூரிகளில் ஒன்றிரண்டு கல்லூரிகளில் ஒன்றிரண்டு பாடங்களைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் ஆங்கிலம்.

6) சுய நிதிக் கலைக்கல்லூரிகள் (100க்கு மேற்பட்டவை) அனைத்திலும் ஆங்கிலம்.

7) சுயநிதி மற்றும் அரசு பொறியியற் கல்லூரிகள் 233. இவை அனைத்திலும் ஆங்கிலம்.

8) 10க்கு மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் அனைத்தும் ஆங்கிலம்.

9) வேளாண்மைக் கல்லுரிகளில், கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் ஆங்கிலம் - இவ்வளவும் சோவுக்குத் தெரியுமா? தெரியாதா? இவ்வளவு கல்வித்துறைகளும் ஆங்கில வழியில் நடத்தப்படும்போது ‘அதை இழந்தே தீருவோம்‘ என்பது இங்கே எங்கே வருகின்றது?

‘பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லுங்கடா
போக்கற்ற பசங்களா?’ என்றார் உடுமலை நாராயணக் கவி.

இதை நினைத்துக் கொண்டேன். அவ்வளவுதான்.

அடுத்து எங்கள் முயற்சிகளைத் திறனாய்வு செய்யும் இதழ் 'இந்தியா டுடே' **(16.12.1998).** அதிலும் அக்காள் வாசந்திக்கு எப்போதுமே ஒரு தனிப் பார்வை உண்டு.

என்றாலும் இம்முறை அவர் நேருக்குநேர் எங்கள் 'தமிழ்வழிக் கல்வி' யை எதிர்க்காமல் சுற்றி வளைத்துச் செல்கிறார்.

ஒரு இடம் கவனிக்கத்தகுந்தது.

"யார் எந்தப் பள்ளியில் எந்த மொழி மூலம் படித்தாலும் தமிழையும் கட்டாயப் பாடமாகப் படிக்க வேண்டும் என்று இது நாள் வரை வலியுறுத்தாதது ஏன்? மாநிலம் முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கான அரசு பள்ளிகளில் தமிழ் வழியிலேயே பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. ஆனால், அந்தப் பள்ளிகளில் எந்த வசதிகளும் இல்லை என்பதாலும், அரசின் பெரும்பாலான ஆசிரியர்களின் அலட்சியத்தாலும்தான் பட்டிதொட்டியெங்கும் நர்சரிப் பள்ளிகள் முளைத்தன என்பது இவர்களுக்குத் தெரியுமோ?" என்று கேட்கிறார். இவர் சொல்லும் இந்தப் பகுதியில் பல உண்மைகள் அடங்கியிருக்கின்றன என்பதை நானும் ஒப்புக் கொள்வேன். ஆனால் அதனாலேயே 1 முதல் 5 வரை அனைத்துப் பாடங்களையும் தமிழ்வழியில் படிப்பது என்பதும் 3 ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஒரு பாடமாக இருக்கும் என்பதும் தவறாகுமா? இவர் அந்தப் பகுதிக்குள் வரவில்லை.

அடுத்தது 'ஆனந்த விகடன்' **(13.12.1998)**

முதலில் செய்தியைப் படியுங்கள்:

தலைப்பு: வெல்லுமா இந்தத் தமிழ்ப்புரட்சி?

"நர்சரிப் பள்ளிகளிலும் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் அனைத்திலும் அரசு அங்கீகாரம் பெற வேண்டுமானால் தமிழில்தான் பாடங்கள் நடத்த வேண்டும் என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது தமிழக அரசு.

இந்த அறிவிப்பை எதிர்த்தால் தமிழையே எதிர்ப்பது போலாகிவிடுமா என்ற அச்சத்தில் அரசியல் கட்சிகள் மௌனம் சாதித்தாலும்,"ஒரு சில புல்லுருவி ஆசிரியர்கள் இந்த அறிவிப்பை எதிர்க்கிறார்கள்" என்று அமைச்சர் தமிழ்க்குடிமகனே வாய் திறந்திருப்பது, பரவலாக எதிர்ப்பலை இருக்கிறதை புரியவைக்கிறது. விசாரித்துப் பார்த்தால் பெற்றோர்களும் ஒருவித பீதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பது புரிகிறது.

உண்மையில் இந்த அறிவிப்பின் விளைவு என்னவாக இருக்கும்... அதன் பயன் மற்றும் பாதிப்புகள் பற்றி ஓர் அலசல்-

"அரசின் இந்த அறிவிப்பு நிச்சயமாக பலன்தரக்கூடியதுதான்!" என்று ஆரம்பித்தார் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் துணைவேந்தராகப் பணியாற்றிய அனுபவம் கொண்ட டாக்டர் விசி. குழந்தைசாமி.

"எதற்கெடுத்தாலும் ஆங்கிலம், ஆங்கிலேயர் என்றே பேசும் நம் மக்களுக்கு அப்படியொரு ஆங்கிலேயர் குறிப்பிட்டதையே உதாரணமாக சொல்கிறேன் - 1854-ம் ஆண்டு இந்தியாவில் கல்வியைப் பரப்ப அனுப்பப்பட்ட சர். சார்லஸ் வுட் என்ற அந்த ஆங்கிலேயர் கண்டறிந்த உண்மை என்ன தெரியுமா? மேலை நாட்டு அறிவு மக்களைப் போய்ச் சேர வேண்டும் என்றால், அது அந்தந்த மக்களின் மொழியில் இருக்க வேண்டும் என்பதுதான். உலகம் முழுக்க ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை இது!" என்று சொல்லும் குழந்தைசாமி,

"இங்கே படிப்பவர்கள் எல்லோருமா வெளிநாட்டு வேலைக்குப் போகிறவர்கள்? ஒரு புள்ளிவிவரம் சொல்கிறேன் - இந்தியாவில் பன்னிரண்டாம் வகுப்பு தாண்டி உயர் கல்விக்குப் போகிறவர்கள் வெறும் ஆறு சதவிகிதம் பேர் மட்டுமே! ஆரம்பக் கல்வியை ஆங்கிலத்தில் படித்து அரைகுறையான அறிவோடு போன மீதி தொண்ணூற்று நான்கு சதவிகிதம் பேருக்கு அந்த ஆங்கிலப் பாட அறிவு எந்த வகையில் பயன்படப் போகிறது? அதுவே தமிழில் படித்திருந்தால் அவர்களது வாழ்க்கைக்குப் பல வகைகளிலும் உபயோகமாக இருக்கும் இல்லையா?" என்கிறார்.

குழந்தைசாமியின் கருத்தை ஆமோதிக்கிறார் தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் உதவித் தலைவரும் அண்ணா பல்கலைக்கழக முன்னாள் தணைவேந்தருமான அனந்தகிருஷ்ணன்.

"அனுபவப்பூர்வமாகவும் அறிவியல் பூர்வமாகவும் சொல்கிறேன். தாய்மொழியில் கற்கும்போதுதான் கருத்துத் தெளிவு கிடைக்கும். ஒரு பொருள் பற்றி விளக்க ஆசிரியர்களுக்கும் தாய்மொழியில் அதிக வார்த்தைகள் தெரிந்திருக்கும். மாணவர்களுக்கு அது புரிவதிலும் சிக்கல் இருக்காது. ஆனால், இங்கே ஆங்கிலத்தில் விளக்க அதிக வார்த்தைகள் தெரியாததால் தெளிவாக மாணவர்கள் புரிந்துகொள்ள மாணவர்கள் புரிந்து கொள்ளப்படுகிறது.

நான் சொன்னதை நீங்கள் பரீட்சித்துக்கூட பார்க்கலாம். இங்கே தமிழ் மீடியத்தில் படித்த மாணவர்களுக்கும் ஆங்கில மீடியத்தில் படித்த மாணவர்களுக்கும் ஒரு பொதுத்தேர்வு வைத்துப் பாருங்கள். கண்டிப்பாக தமிழ்

மீடியத்தில் படித்த மாணவனுக்குத்தான் பாடங்கள் பற்றிய கருத்துத் தெளிவு அதிகம் இருக்கும்!" என்று சவாலாகவே சொல்கிறார் அனந்தகிருஷ்ணன்."

இதுவரை நமக்குச் சார்பான கருத்துகள்.

டான்பாஸ்கோ மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர் மைக்கேல் கருத்து இது:

"முழுமையான கல்வியைத் தர முடியும் என்றால்தான் தாய்மொழிக் கல்வி நல்லது. ஆனால், நம் மொழியை இன்னும் அந்த அளவுக்கு நாம் வளப்படுத்தவில்லையே. ஜப்பானியர்கள் தங்கள் தாய்மொழியில் பாடங்கள் படிக்கிறார்கள் என்றால், அங்கு நிலைமையே வேறு. கம்ப்யூட்டர் முதற்கொண்டு சகல அறிவியலும் அவர்கள் மொழியில் வந்துவிட்டது. இங்கே அப்படியா?" என்று கேட்கிறார்.

"இந்தக் கேள்வி எழும் என்றுதான் அறிவியலை மட்டும் ஆங்கிலத்தில் படிக்கலாம் என்று அரசு சலுகை காட்டியிருக்கிறது. ஆனால், இதுகூட அவசியமில்லாதது என்பது என் கருத்து. முக்கியமான சொற்களை தமிழ்ப்படுத்தி சிரமப்பட வேண்டியதில்லை. உதாரணத்துக்கு, பொட்டாசியம் பெர்மாங்கனேட்டை பொட்டாசியம் பெர்மாங்கனேட் என்றே படிக்கலாம். இப்படிப் பல சொற்களை அப்படியே பயன்படுத்தலாம். விளக்கம் மட்டும் தமிழில் இருக்கட்டுமே!"

'நம் தாய்மொழியை நாம் இன்னும் அந்த அளவுக்கு நாம் வளப்படுத்தவில்லை' என்கிறார் மைக்கேல். ஒரு பள்ளி முதல்வர் புரிந்து பேசுகிறாரா புரியாமல் பேசுகிறாரா? எனக்கு நன்கு தெரியும்; பல கல்லூரிப் பேராசிரியர்கள். பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர்களிலே சிலர் கூட அடிப்படை தெரியாமல் பேசிவிட்டதை நானே நேரில் கேட்டிருக்கிறேன்: எழுத்தாலும் பேச்சாலும் அவர்களுக்குப் பதிலடி கொடுத்திருக்கிறேன்.

இந்த நிலையில் மைக்கேல், பாவம்! இவரைக் கால்டுவெல்லும், ஜி.யு. போப்பும், வீரமாமுனிவரும், சீகன்பாக்கும் மன்னிப்பார்களாக! இன்று இந்தியாவிலேயே ஆங்கிலத்துக்கு அடுத்தபடி கணினியில், தகவல் தொழில் நுட்பத் துறையில் மேலோங்கி நிற்பது தமிழ்தான். மேலும் மருத்துவக் கலைக் களஞ்சியங்கள், அறிவியல்'கலைக்' களஞ்சியங்கள், கணினி அகராதி, பொறியியலுக்கான பாடங்கள் எல்லாவற்றையும் உருவாக்கி வைத்திருக்கும் வளமான மொழி தமிழ்.

பொறியியலை எங்களால் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியும் எனும்போது, போயும் போயும் ஒரு மேல்நிலைப்பள்ளிப்பாடம் சொல்லிக் கொடுக்கும் ஒருவர் தமிழைப் பற்றி இவ்வளவு தவறான கருத்துவைத்திருப்பது வியப்புத்தான். நானே 11ஆம் வகுப்பில் சிறப்புக் கணிதத்தைத் (Composite Maths) தமிழில் படித்தவன். நானே 11ஆம் வகுப்பு வரை தமிழில் கணிதம் சொல்லிக் கொடுத்தவன். மைக்கேல் பக்கத்தில் உள்ள மாநிலக்கல்லூரிக்குப் போய் பி.எசி. வேதியியல் - தமிழ்வழி வகுப்பில் உட்கார்ந்து பார்த்து விட்டு வரலாமே!

இனி, இவரது கருத்து புரியாமல் பேசிய பேச்சு எனக் கூறுவேன். அறிவியலை மட்டும் நிறுத்திவைத்தது தமிழுக்கு அதனை நடத்தும் திறமையில்லை என்பதற்காக அல்ல. கலைப்பாடங்கள் முதலில் வரட்டும்; அறிவியல் பாடங்கள் அடுத்து என்று கருதியதால் தான். பி.எசி. இயற்பியலைத் தமிழில் நடத்தும் நாங்கள் 5ஆம் வகுப்பு அறிவியலை நடத்த வலுவற்றவர்களா?

படித்த மேதாவிகள் ஏன் இப்படிப் புரியாமல் பேசுகின்றார்கள் என்பதுதான் வியப்பு! பொட்டாசியம் பெர்மாங்கனேட்டை நாங்கள் அப்படியேதான் பயன்படுத்துகிறோம். மொழி பெயர்க்கவில்லை. இது புரியாமல் மைக்கேல் எங்களுக்குப் பாலபாடம் நடத்துகிறாரா!

நல்லவேளை முனைவர் ஆனந்தகிருஷ்ணன் தெளிவாகவே விடை சொல்லி விட்டார்.

"அரசின் இந்த அறிவிப்பு அதன் கட்டுப்பாட்டில் வரும் பள்ளிகளுக்கு என்று கூறப்பட்டாலும், மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளுக்கு அது பொருந்தாது என்று கூறப்படுகிறது. இத்தனைக்கும் இந்தப் பள்ளிகளும்கூட அரசின் அங்கீகாரம் பெற்றவைதான். சென்னை எழும்பூர் டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளியின் முதல்வர் மைக்கேல், "மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பற்றி எதுவும் அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை. அதையும் மீறி நாங்களும் தமிழ் மீடியத்தில்தான் பாடம் நடத்த வேண்டும் என்றால், அதை ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், அரசு எங்களுக்கு மானியம் தரவேண்டும் என்கிறார்" என்கிறது ஆனந்த விகடன்.

செய்தியாளர் தொடுத்த செய்தியிலேய தவறு உள்ளது. அரசின் கட்டுப்பாட்டில் வரும் பள்ளிகள் என்றால் அரசின் ஏற்புப் பெற்ற (Recognized

by the Govt.) பள்ளிகள் என்றுதான் பொருள். அதில் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் (41), சிபிஎஸ்சி பள்ளிகள் (193) ஆகியவற்றுக்கு மட்டுமே விதிவிலக்கு. மற்றபடி, அரசின் ஏற்பினைப் பெற்ற 2100 மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கும் 2900 மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கும்தான் அரசின் இந்தக் கொள்கை முடிவே செயற்படுத்தப்படும். இதுதான் எங்கள் அறிவிப்பு.

எனவே உண்மைபுரியாமலேயே மைக்கேல் கருத்துத் தெரிவித்திருப்பது அடிப்படையிலேயே தவறாகும்.

கிறிஸ்தாஸ் கூறுகிறார்:

"அரசின் இந்த அறிவிப்பை எதிர்த்த கோர்ட்டுக்குப் போகப் போகிறோம். இதையும் மீறி நாங்கள் தமிழ் மீடியத்தில்தான் பாடம் நடத்தவேண்டும் என்றால், பள்ளிகளை மூடிவிட்டுப் போவதைத் தவிர எங்களுக்கு வேறுவழியில்லை. அரசுப் பள்ளிகள் இலவசக் கல்வி தரும்போது, அதே கல்விக்கு இங்கு பணம் கொடுத்து கற்க யார் வருவார்கள்? இருபதாயிரம் நர்சரிப் பள்ளிகளும் மூடப்படுமேயானல், இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வேலை இழப்பார்கள். வேலை தரவேண்டிய அரசாங்கம், அதைத் தரமுடியாமல் போனாலும், இப்படிப் பலரை வேலையிழக்க வைப்பது நியாயமா?"

ஏற்கெனவே மலையம் சம்பத்துக்குத் தந்த விடையே இதற்கும் பொருந்தும். காசுக்காகக் கடைவிரித்த மிகமோசமாகச் சம்பளம் கொடுத்து பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களின் உழைப்பை உறிஞ்சும் இவர்கள் . . அடடா! அந்த ஆசிரியர்களுக்காக என்னமாய்க் கண்ணீர் விடுகிறார்கள்!

உங்கள் நடிப்பு எங்களுக்குத் தெரிந்துதான் இருக்கிறது.

"அரசின் அறிவிப்பில் இன்னொரு குழப்பமும் இருக்கிறது. சிறுபான்மை மொழிப் பள்ளிகளும் தமிழ் மீடியத்தில் தான் பாடம் நடத்தவேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. அரசு நடத்தும் பள்ளிகளும் இதில் இருக்கின்றன. அங்கே ஆங்கிலமும் அவர்களின் மொழியும்தான் கற்றுத் தரப்படுகின்றன. அரசின் இருமொழிக் கொள்கைப்படி இது சரி. ஆனால், கூடுதலாக தமிழும் திணிக்கப்படுவது அரசின் கொள்கைக்கு எதிரானது மட்டுமல்ல... அப்படித் திணிப்பது சுப்ரீம் கோர்ட் உத்தரவை மீறுவது போன்றது. இதுபோன்ற பள்ளிகளில் மொழி விஷயங்களில் மாநில அரசுகள்

தலையிடக்கூடாது என்று ஒரு தடவை சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது! என்கிறார் பெயர் சொல்ல விரும்பாத நர்சரிப் பள்ளி ஒன்றின் நிர்வாகி.''

இதற்குத் தேவையேயில்லை. 1008 சிறுபான்மையர் பள்ளிகள் குறித்த விவரம் வேறு இடத்தில் உள்ளது.

அறிவிப்புகளைப் பற்றிய முழு உண்மைகள் தெரியாமலேயே பள்ளி முதல்வர் மைக்கேலும், ஆ.வி. செய்தியாளர் சிவகுமாரும் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பிற மாநில இதழ்கள் என்ன சொல்கின்றன?

அடேயப்பா! 'தமிழில் அர்ச்சனை' என்று நாங்கள் இறங்கியதும் பிற மாநில இதழ்களில் எல்லாம் கட்டுரைகள் எழுதத் தொடங்கிவிட்டன.

அதேபோல 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் தான் கல்வி என்று அறிவித்ததும் பிற மாநில இதழ்களும் இதனைத் திறனாய்வு செய்து எழுதின. ஆனால் 'அர்ச்சனை' அளவுக்கு எங்களை அர்ச்சனை செய்யாமல், செய்திகளை வெளியிட்டுள்ளன. ஒரு சிலர் மட்டும்தான் திரிபுடன் எழுதியுள்ளனர்.

புதுத்தில்லியிலிருந்து வெளியாகும் 'Times of India' அதிகம் பேசியுள்ளது. 17.11.98இல் வெளியான செய்தித் தலைப்பு இது: 'Tamil made Compulsory in TN Govt. Schools' தமிழில் நமக்குத் தெரிந்த செய்திகள்தாம். எனினும் அவர்கள் மொழியில் பார்ப்போம்.

"Tamil Nadu chief minister on Monday announced that Tamil would be made a compulsory subject and a medium of instruction in important subjects in all state government schools and private schools recognised by the government.

Schools that did not take it up would be denied recognition by the government, warned the chief minister. Students from unrecognised schools would also be banned admission in government recognised schools." Instead of being the optional language, Tamil would be the medium of instruction for subjects like social sciences and maths from kindergarten until the eighth standard. While Mr. Karunanidhi said that Tamil as a subject should be taught in schools, science could be taught in English.

Sops would be provided to schools which opted for being Tamil medium alone, said Mr. Karunanidhi. In wholly Tamil medium schools, the recognition fee would be less by 50 per cent and books would be supplied free by the state government.

Mr. Karunanidhi said as many as 1008 schools run by the linguistic minorities in the state did not teach Tamil at all. These schools taught Tamil as an additional language. Henceforth, Tamil would be taught as a compulsory language besides the "mother tongue" of the students as well, he said.

However, the order would be applicable to students who enrolled for the next academic year and those students who had already chosen English as the medium of instruction would not be affected. This order would also not be applicable to schools of the Central Board of Secondary Education.

Barely hours after Mr. Karunanidhi's announcement, industrial groups, including the Sindhi Chamber of Commerce and the Andhra Pradesh Chamber of Commerce, protested that linguistic minorities living in the state would have their careers affected by the order."

மற்ற செய்திகள் எங்களால் அறிவிக்கப்பட்டவைதான். நமக்குத் தெரிந்தவைதாம். ஆனால் கடைசிப் பத்தியில் இதழ் எப்படி 'வத்தி' வைக்கிறது பார்த்தீர்களா!

இந்தி வர்த்தகக் கழகமும், ஆந்திர பிரதேச வர்த்தகக் கழகங்களும் எதிர்க்கின்றனவாம். 5ஆம் வகுப்பு வரை படிக்கின்ற 10 அகவை மாணவர்கட்கும், வர்த்தகக் கழகங்களுக்கும் என்ன தொடர்பு? இவர்களெல்லாம் வர்த்தகக் கழக உறுப்பினர்களா? அல்லது பங்காளிகளா? எதற்கு இந்த வீண் பதற்றம்? பொருளற்ற பதற்றம்.

சிறுபான்மை மொழியினர் நடத்தும் பள்ளிகள் 1008. இவற்றுள் அவரவர் தாய்மொழியும், தாய்மொழி வழியில் கல்வியும் கிடைக்கிறது. ஆங்கிலமும் பயிற்றுவிக்கப்படுகிறது. ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதாலும், இவர்களும் தமிழக அரசு பணிகளைப் பெறவும் தமிழ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்றோம்! அவ்வளவுதான். வர்த்தகக் கழகங்கள் குலுங்கிக் குலுங்கி அழுகின்றனவாம்! 'டைம்ஸ் ஆப்

இந்தியா' சொல்கிறது. (கடைசியில் ஒன்றும் நடக்கவில்லை. இது குறித்து மற்றோர் இடத்தில் பேசுவோம்)

அதே இதழில் இராசாராம் மெஹ்ரோத்ரா என்பவர் சில செய்திகளைத் தருகிறார் (16.12.1998)

அடிப்படை உண்மைகளைப் பற்றிக் கவலைப்படாமல் மனம்போன போக்கில் எழுதுகிறார். கலைஞருடைய அறிவிப்பு 'reveals parochial mind set' என்கிறார்.

தமிழ்த் தொடர்பாக நாம் எடுத்த முயற்சிகளுக்கெல்லாம் அவர் சூட்டும் பட்டம் 'Linguistic Chauvinism'.

இவ்வளவு எழுதினாலும் வல்லுநர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும், யுனெஸ்கோவின் கருத்தையும் எடுத்துக்கூறி 'தாய்மொழி வழிக் கல்வி'யின் சிறப்பை உணர்த்தத் தவறவில்லை.

"Experts are unanimous that a child learns best in his mother tongue. A child's mother tongue is more than a mere means of communication; it is his essential identity in that it plays an important role in his cognitive development, concept formation and acts of socialisation. UNESCO underlines the importance of the mother tongue at the early stage of education, "Mother tongue is still the principal means by which any human being fits in his society and culture, it is the basis of his intellectual faculties."

அரசியல் சட்டம் தாய்மொழி வழிக் கல்வி குறித்துத் தந்துள்ள குறிப்புரைகளையும் தெளிவாகத் தருகின்றார்.

"The Indian Constitution also provides for education through the mother tongue at the early stage. Articles 350A and 350B make clear the obligation of every state to provide adequate facilities for instruction in the mother tongue to primary schoolchildren belonging to linguistic minority groups. In other words, every child has the right to learn in his own mother tongue even if he is in a minority of one."

இவ்வளவு உணர்ந்து எழுதியவர் அடுத்த வரியில் தடுமாறுகிறார்.

"For any government to make learning compulsory in the language of the majority is both unethical and unconstitutional" என்கிறார்.

தமிழக அரசின் அறிவிப்பினை முழுமையாகப் புரிந்து கொள்ளாமலேயே எழுதுகிறார்.

சிறுபான்மையர் பள்ளிகள் 1008, சிபிஎஸ்இ (CBSE) பள்ளிகள் 194 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் 41 ஆகியவற்றுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன. 1243 பள்ளிகள் இந்த வசதிகளைப் பெறுகின்றன. எந்தச் சிறுபான்மையினரும் இந்தப் பள்ளிகளில் சேர்ந்து பயிலலாம். அதற்காக ஊருக்கு ஊர் பிறமொழிப் பள்ளிகளை நடத்த முடியாது. ஆங்கில வழிதான் முதல் வகுப்பில் பயில முன்வரும் ஒரு தெலுங்கு மாணவன் தன் ஊரில் தன் வட்டாரத்தில் தன் தாய்மொழியைப் பயில வாய்ப்பில்லாவிட்டால் 1 முதல் 5 வரை தமிழில் படிப்பதால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. 30 மாவட்டங்களிலும் 1242 பள்ளிகளில் தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, குசராத்தி, இந்தி மொழிவழி கற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

அயல்மொழியான ஆங்கிலத்தை 1ஆம் வகுப்பில் கற்றுக் கொள்ள முனையும் 5 அகவைப் பையன், தன் ஊரில் சுற்று வட்டாரத்தில் பேசப்படும் தமிழில் பயில்வது ஒன்றும் கொடுமையல்ல என்பதை உணரவேண்டும்.

எந்த மாநிலத்தில் வாழும் தமிழர்களும் அந்தந்த மாநில அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளை எதிர்ப்பதில்லை; ஏற்றே செயற்படுகின்றனர். அதே நேரத்தில் இங்குள்ள பிற மொழியாளர்களும் அந்தப் போக்கில்தானே இயங்கவேண்டும். அப்படித்தானே இயங்குகிறார்கள்! ஆனால் தமிழ்வழிக் கல்வியை மறுத்து முழங்குபவர்கள் யார்? தமிழர்கள். தமிழ்த்தாயின் தவப்புதல்வர்கள். எனவே, தமிழக அரசின் இந்த முடிவு இந்தியா முழுவதும் ஒரு பரபரப்பையும் சலசலப்பையும் உண்டாக்கிவிடும் என்று கூறுவது. சும்மா இருப்பவர்களையும் தூண்டி விட்டுப் பயன் பார்க்கும் 'ஓநாய்' வேலையாகும்.

"The Tamil Nadu government's stand may create a situation of language tension and mutual intolerance in the country at large" என்கின்ற வாசகம் கண்டனத்துக்குரியது.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' (17.11.1998) இதழில் கலைஞர் அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டிருக்கிறார்கள். என்றாலும் அவர்களது குறும்பு போகுமா?

"In a Controversial decision that could stir up linguistic trouble" என்றுதன் வெறுப்பைக் கொட்டிவிட்டுத்தான் இதழ் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. இதில் உள்ள சில வரிகளைக் கவனியுங்கள்.

"Only such schools that teach Tamil as a subject would get recognition"

"Government would not allow any unrecognised nursery or primary school to function next year" வெறுமனே அறிவித்ததோட இல்லாமல், உண்மையில் இதை உறுதியோடு கடைப்பிடித்திருந்தால் போதும். அதாவது `37அ` விதிக்கு - தளர்வு செய்து (Relaxation) ஆணை பிறப்பிக்காமல் அப்படியே விட்டிருந்தால் போதும்.

இப்படிக் கலைஞர் - அதுவும் முதல்வர் அறிவித்தது பள்ளிக் கல்வி இயக்குநர்க்கும் - தொடக்கக்கல்வி இயக்குநர்க்கும் தெரியுமா தெரியாதா?

முதல்வர் அறிவித்த ஒன்றை, செயற்படுத்தும் அதிகாரிகளே கண்டு கொள்ளாமல் '37அ' விதிக்குத் தளர்வு வேண்டி 99-2000த்தில் பரிந்துரை செய்துள்ளார்களா இல்லையா? அவர்கள் பரிந்துரையை ஏற்று பள்ளிக்கல்விச் செயலர் எம்.ஏ. கௌரி சங்கர் ஆணை பிறப்பித்ததே அது எப்படி?

முதல்வர் அறிவித்தது கல்வி அமைச்சர்க்குத் தெரியுமா தெரியாதா? தெரியவில்லை என்றால் முதல்வரின் முனைப்பான அறிவிப்புக்கும் கல்வி அமைச்சர் பிறப்பித்த ஆணைக்கும் முரண்பாடு ஏன்? கல்வி அமைச்சர் முதல்வர் அறிவிப்பைக் காலில் போட்டு மிதித்துவிட்டு 10000க்கு மேற்பட்ட - ஏற்புப் பெறாத பள்ளிகளுக்கு வாழ்வளித்துள்ளாரே எப்படி?

இதற்கு யாரோ பின்னணியில் இருக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டினால் அது தவறா? எண்ணிப் பாருங்கள்.

இந்த இதழ் மற்றொரு புள்ளி விவரத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது.

"Presently there are over 20000 unrecognised nursery and primary schools in the State while only 2100 are recognised"

தமிழக அரசின் கல்வித்துறை சரியான தமிழ்க் கொள்கையையும் சரியான கல்விக் கொள்கையையும் கடைப்பிடிக்காததால்தான் 20000 பள்ளிகள் ஏற்புப் பெறாமலேயே நடத்தப்படுகின்றன என்றால் அதனை மறுக்க முடியுமா?

ஆங்கிலக் கல்விக்கு இவர்கள் எவ்வளவுதான் முட்டுக் கொடுத்தாலும் அனைத்து இந்திய அளவில் ஆங்கிலத்தில் தோல்வி அடைபவர்களே அதிகம் என்பதை மறுக்கமுடியாது.

28.12.99 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழில் வந்த செய்தியை அப்படியே பாருங்கள்.

# Efforts to improve English

**HT Correspondent**
Ludhiana, December 27

THE 44TH Annual All India English Teachers' Conference was held at Banaras Hindu University, Varanasi from December 20 to December 22, 1999. Prof. K. Venkata Reddy of Anantpur University (Andhra Pradesh) was unanimously elected as president of the Association.

Prof. K.B.S. Sodhi of GGN Khalsa College, Ludhiana, was elected member of the executive committee from the North zone. Briefing the Press here about the proceedings of the annual conference, Prof. Sodhi said the Association was deeply concerned about the deteriorating standards of English as a subject

The Association will approach the HRD Minister, UGC and The British Council in India to provide funds for running additional and remedial classes to minimise the number of failures in English.

அடுத்தது, 'டெக்கான் குரோனிக்கள்' (17.11.98) இதழ். இந்த இதழும் கலைஞரின் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

"We will not allow any unrecognised nursery and primary schools to function in future,"

என்கிற அறிவிப்பினைக் கவனிக்கவும்.

ஒருவகையில் இந்த இதழும் சில செய்திகளை நமக்கு எதிராகச் சொல்லித் தூண்டி விடுகிறது.

"The decision to force out English as the medium of instruction could whip up linguistic and legal problems. Should another State, such as Karnataka, follow suit, the Tamil children there would be deprived of sound knowledge of their mother-tongue.

The government does not seem to have gone into the legal aspects of the controversial decision which could offend the fundamental rights guaranteed by the Constitution" என்கிறது.

கர்நாடக அரசு போன்றவை வழக்குத் தொடர்ந்தால் தமிழ்க்குழந்தைகள் தங்கள் தாய்மொழி அறிவை இழப்பார்களாம். இதுவே தவறான கருத்து. கருநாடக மாநிலத்தில் எல்லாரும் கன்னடத்தில் படித்தே ஆகவேண்டும். அங்கே மும்மொழிக் கொள்கை. மேலும் அவரவர்

தாய்மொழியைப் படிக்கவும் தடையில்லை. எப்படியாவது குழப்பவேண்டும். குரோனிக்கள் இதழ் குழப்புகிறது.

நாம் 1008 சிறுபான்மையர் பள்ளிகளில் ஆங்கிலமும்; அவரவர் தாய்மொழியும் பயில அனுமதித்தும் இந்த இதழ் அதைக் கண்டு கொள்ளாமலேயே குதறுகிறது.

தமிழில் பயிலுங்கள் என்று சொல்வதே தமிழ்த் திணிப்பாம். இந்தித் திணிப்பை எதிர்த்தவர்கள், தமிழர்கள் அல்லாதவர்கள் மீது தமிழைத் திணிக்கலாமா என்று கேட்கிறது. இது முறையற்ற கேள்வி என்பதை நாம் உணர வேண்டும்.

"The DMK party has long opposed Hindi being imposed on the people of Tamil Nadu." but now its government has chosen to impose Tamil on the non-Tamils living in the State by seeking to snuff out English-medium schools"

அடுத்தது 'ஸ்டேட்ஸ்மேன்' இதழ் (23.11.98) தலைப்பைப் பாருங்கள்:

## Imposing Tamil

## D.M.K. stirs a hornet's nest

இந்த இதழும் சொல்கிறது.

"Students of the unrecognised schools will not be admitted to the recognised schools from next year (இதுதான் 37அ விதி)

மற்றொன்றையும் சொல்கிறது:

''The hasty decision of the government seems to have paid scant attention to the plight of these linguistic minorities" என்கிறது இதழ். சிறுபான்மையர் நடத்தும் 1008 பள்ளிகட்கு நமது சலுகைகள் என்ன என்று அறிவித்த பிறகும் இதழ் திசை திருப்புகிறது.

அரசியல் சட்டத்தின் 29, 30 ஆவது பிரிவுகளை மேற்கோள் காட்டி இந்த இதழ் எழுதியுள்ளது.

கொல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'தி டெலிகிராம்' இதழில் ஆசிரியர்க்கு மடல் பகுதியில் ஒருவர் எழுதுகிறார்.

''Rabindranath Tagore too believed a certain hold over the mother tongue was necessary in order to learn a foreign tongue"

தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை குறித்துத் தாகூர் கருத்துகளை நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம்.

வெளிமாநிலங்களில் இருந்தும் எத்தகைய கருத்துகள் வருகின்றன, எத்தகைய எதிர்ப்புகள் கிளப்பி விடப்படுகின்றன என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகள்.

'இந்து' இதழில் (23.11.1998) இதழ் சார்ந்த ஒருவர் எழுதுகிறது பாருங்கள்

''Almost the only occasion when this column came to loggerheads with the present Government in Tamil Nadu had been when the ineffable Minister for Tamil Language and Culture came up with one of his more extraordinary proposals.

Let me remind the readers of his efforts to replace English language typewriters with Tamil ones; insisting on offices communicating in Tamil, and most objectionable of all, his introducing Tamil 'archanas" in traditional Hindu temples"

தோழர் என் மீது குறிவைத்துத் தாக்குகிறார்.. அதிலும் தமிழில் அர்ச்சனை செய்யச்சொன்னது 'most objectionable of all' என்கிறார். அவர் எழுத வருவது, தமிழ் வழிக்கல்வி பற்றித்தான் என்றாலும் போகிற போக்கில் என் மீது ஒரு கல் எறிந்தால்தான் அவர்களுக்குத் `திருப்தி`.

அடுத்ததுதான் பெரிய செய்தி:

''It means more than that - it means that teachers have to reorient themselves to be able to teach the subjects in Tamil which they have so far been doing in English.

Decades ago, when I was in school, for reasons not clear to me now, the school decided to teach the mathematical and science subjects in Tamil"

பழைய பஞ்சாங்கங்களைப் புரட்டிக் காலங்கழிக்கும் இவர்களை அந்தப் பஞ்சாங்கங்களோடு சேர்ந்து எடைக்குப் போடவேண்டியதுதான்.

## கோட்டைக்குள் பெரும் ஓட்டை

தி.மு.கழகம் தமிழை முன்வைத்து இயங்கிய - இயங்கி வருவதாகக் கருதப்படுகின்ற இயக்கம். 'தமிழ்வழிக் கல்வி' பற்றிய முயற்சிகளின்

அடிப்படையில் முடிவுகளை எட்டும்போது வெளிப்படையாக அதனை எதிர்த்தவர் முரசொலிமாறன்.

ஆணை பிறப்பிக்கப்பட்டபின் இவரே அடிக்கடி சொல்லும் ஒரு வாக்கியம்: "இது பூடும்" அதுவும் முதல்வரையும் என்னையும் வைத்துக் கொண்டே சொல்வார். 'இது பூடும்' என்பது சென்னை மொழி. 'இது தோற்றுப் போய்விடும்' என்பதுதான் அவரது உண்மை மொழி. அரசாணை நீதி மன்றத்துக்குச் சென்று பின் இலதாக்கப்பட்டது (இரத்து) மிக மிகப்பிந்தி. ஆனால் எடுத்த எடுப்பிலேயே நீதி மன்றம் சொல்வதாக ஒரு தீர்ப்பை வழங்கியவர் முரசொலி மாறன். என்ன இருந்தாலும் இவர் 'பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பு'. எனவே யாரும் இவரை எதிர்க்க முடியாது. இவரது தமிழ் வெறுப்பு எந்த அளவுக்குப் போய்விட்டது என்பதற்கு அவர் தி.மு.க. பொதுக்குழுவில் பேசிய பேச்சே போதுமான எடுத்துக் காட்டாக இருக்கும். அந்தச் செய்தியை, துக்ளக் (29.12.99) இதழ் மிகவும் 'அக்கறை'யோடு வெளியிட்டுள்ளது. இதுபோன்றவற்றில் 'சோ' காட்டுகிற வேகம் எத்தகைய உள்நோக்கம் படைத்தது என்பதனை உணர இதுவும் பயன் படும்.

## 'தமிழ் வழிக் கல்வி'க்கு மாறன் கடும் எதிர்ப்பு!

## தி.மு.க. பொதுக்குழுக் காட்சிகள்

"வழக்கம் போல, 'முதல்வரின் மனசாட்சி' முரசொலி மாறன் பேச்சு காரசாரமாக இருந்தது. அவருடைய விமர்சனத்துக்கு இந்த முறை சிக்கியவர், அமைச்சர் தமிழ்க்குடிமகன். 'ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி' என்ற அரசின் திட்டத்துக்கு, மத்திய அமைச்சர் மாறன் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

"மேற்கு வங்க மாநிலத்தில், தாய் மொழிக் கல்வி தோல்வி அடைந்து விட்டது".

"மாறிவரும் உலகத்தில் தமிழ் வழிக் கல்வி சரிப்பட்டு வராது. என் பிள்ளைகள் ஆங்கிலத்தில்தான் படித்தார்கள்" - என்று வெளிப்படையாகப் பேசிய அவர், முத்தாய்ப்பாக, "தமிழ்க்குடிமகன் செய்யும் அமர்க்களம் தாங்கவில்லை; நான் தமிழுக்கு எதிரி அல்ல. தமிழ் வாழ்க - தமிழ்க்குடிமகன் ஒழிக" - என்று வேடிக்கையாகக் கூற கூட்டத்தில் சிலர் சிரித்தனர்; சிலர் அதிர்ச்சி அடைந்தனர்".

"மாறனின் - 'மனம் திறந்த' பேச்சுக்கள் பற்றி, கடைசியாகப் பேசிய முதல்வர் குறிப்பிடத் தவறவில்லை. தாய் மொழிக் கல்வியை ஆதரித்த முதல்வர், "என் மகள் நன்றாக ஆங்கிலம் பேசுவாள். ஆனால் அவள் 'தமிழ் வழிக் கல்வி எப்போது வரும்?' என்று என்னிடம் ஒருமுறை கேட்டாள்" -

என்று சொன்னார். 'மாறனின் பேச்சு அவருடைய பாணியில் இருந்தது' என்பது முதல்வரின் சமாதானம்".

மாறன் பேச்சை அடிப்படையாக வைத்து, இந்து (The Hindu, 22.12.99) இதழ் 'Talk of the Town' எனும் தலைப்பில் எப்படி எழுதுகிறது பாருங்கள்.

"If "Tamil first, Tamil supreme" has been the raison d'etre of Dravidian politics, it might be under threat from forces within.

The churning, the recent Government order making Tamil as the compulsory medium of instruction has created, is not just confined to circles opposed to the move alone, but within the party itself. Though it is not a destabilising dissent, the discordant note came, according to sources, from none other than a senior leader like Mr. Murasoli Maran.

At the General Council of the party held in the city last weekend, the Union Industries Minister, reportedly lost his cool with a Minister whose full-time engagement is promotion of Tamil, and called for a more level-headed approach. His defence was that in the North, the South Indians were respected for their knowledge of English and it cannot be overlooked. Sources say that Mr. Maran's stand has followers in the Chief Minister's family itself. The ''generation next'' within the family questioning the move cannot be ruled out, they say"

முதல்வர் கலைஞர் குடும்பத்தில் (Kitchen Cabinet) யார்யாரெல்லாம் மறைமுகமாக 'தமிழ் வழிக் கல்வி'க்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்பதனை மற்றோர் இடத்தில் பார்ப்போம்.

கட்சிக்குள் எதிர்ப்பு என்பது கலைஞர் குடும்ப எதிர்ப்பு மட்டுமன்று: அமைச்சர்கள் ஆலடி அருணாவும், சற்குண பாண்டியனும் கூட எதிர்ப்பாளர்கள் தாம். இவர்கள் மெட்ரிகுலேசன் பள்ளிகளை நடத்துபவர்கள்; மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கத்தின் பாதுகாவலர் சற்குணபாண்டியன். எனினும் இவர்கள் வெளிப்படையாக தமிழ்வழிக்கல்வியை எங்கும் எதிர்த்துப் பேசியதில்லை. நான் எதிர்ப்பேன் என்பது மட்டுமன்று; முதல்வரே கடிந்து கொள்வார் என்னும் எண்ணமும் அவர்களிடத்தில் இருந்தது.

அதே நேரத்தில் கட்சிக்காரர்கள் பலர் மழலையர் பள்ளிகளையும், மெட்ரிகுலேசன் பள்ளிகளையும் நடத்துபவர்கள் என்பது உண்மை. எனினும் அவர்களில் யாரும் எங்கள் கொள்கை முடிவுகட்கு எதிர்ப்புத் தெரிவித்ததில்லை.

அரசின் முடிவு எதுவானாலும் ஏற்றுச் செயற்படுவது என்பதுதான் அவர்கள் நிலை.

எனவே, வானளாவிய வாய்ப்பைப்பெற்ற மாறன் தான் 'தமிழ்ப்பற்றை' எப்படி வெளிப்படுத்தியுள்ளார் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

## மடல்கள்

தினமணி, தினத்தந்தி, தினமலர், தினகரன் ஆகிய இதழ்கள் தமிழ்வழிக்கல்விக்கு ஆதரவாக ஆசிரியவுரைகள் தீட்டியதுடன், பல அன்பர்களின் கருத்துகளைத் திரட்டியும் வெளியிட்டுள்ளன. ஆனால் இந்து, இந்தியன் எக்சுபிரசு இதழ்களோ, எங்களுக்கு எதிரானவர்கள் எழுதும் மடல்களை ஆர்வத்துடன் வெளியிட்டு தங்கள் 'அக்கறை'யைக் காட்டியுள்ளன. அவற்றிலிருந்து சில: 8.12.99, 10.12.99, 14.12.99, 17.12.99, 18.12.99 ஆகிய நாள்களில் 'இந்து'வில் 'ஆசிரியர்க்கு மடல்கள்' பகுதியில் எங்களைத் தூக்கிப்பிடித்திருக்கிறார்கள்.

சென்னை ஆர்.சி. நாராயணன் சொல்கிறார்: மேற்குவங்கம் பல ஆண்டுகளாக வங்கப் பயிற்றுமொழியைக் கொண்டிருந்து தற்போது ஆங்கிலத்தில் பாடம் நடத்தலாம் எனும் முடிவுக்கு வந்துள்ளதாம். மற்றபடி செர்மனியில் வணிகத் தொடர்பில் ஆங்கிலம் வெகுவாக இடம்பிடித்துள்ளதாம். தோழர் கருத்து இது.

நீண்டகாலமாகவே பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியைத் தடைசெய்திருந்தது மேற்குவங்கஅரசு என்கிறார். ஆனால் தமிழ் நாட்டில் 1975 முதல் மெட்ரிகுலேசன் பள்ளிகள், மழலையர் பள்ளிகள் எனவும், அரசுப் பள்ளிகளில் ஒரு பிரிவு மட்டும் ஆங்கிலம் எனவும் தாராளமாக வளர விட்டு விட்டு, இப்போதுதான் கட்டுப்பாடு விதிக்கத் தொடங்கியிருக்கிறோம். தொடக்கத்தில் இருந்தே கல்வியில் தமிழுக்குரிய இடத்தைச் சரியாகக் கொண்டு செல்லத் தவறி விட்டோம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மேற்கு வங்கம் ஆங்கிலத்திலும் பயிலலாம் என்று சற்றுத் தளர்த்தியிருக்கிறதே தவிர, 'ஆங்கிலத்தில் மட்டுமே' என்று எங்கும் சொல்லவில்லை. எனவே ஆர்.சி. நாராயணன் யாரையோ காட்டித்திசை திருப்பக்கூடாது. மேலும் செர்மனி, சப்பான், சீனா, பிரான்சு ஆகிய நாடுகளில் முற்றிலும் அவரவர் தாய்மொழிவழியாகத்தான் கல்வி அதுவும் உயர்கல்வி வரை ஆங்கிலம் ஓரளவுக்குத்தான். சப்பான் தவிர மீதி நாடுகளை நேரில் கண்டவன் என்பதால் அடித்துச் சொல்ல முடியும்.

கோத்தகிரியிலிருந்து இந்திராணி இராதாகிருஷ்ணன் என்பவர் எழுதுகிறார்.

"In today's competitive world, where employment is scarce, Tamil medium students will face a dark future".

இதுதான் அறியாமை என்பது (அறிவுகெட்டதனம் என்றால் கடுமையாக இருக்கும்) 5ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படிக்கிற 10 அகவை மாணவனுக்கு வேலைவாய்ப்பு எந்த ஊரில் கொடுக்கிறார்கள்? சிவகாசியிலா? அல்லது சென்னைக் கடற்கரையில் சுண்டல் விற்பதிலா? ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் படிக்கவும், ஆங்கிலத்தில் படிக்கவும் எல்லா உரிமைகளும் இங்கு தரப்பட்டுள்ளன. எனவே இந்த, அறிவுக்குப் பொருந்தாத வாதம் ஏற்கத்தக்கது அன்று.

மேட்டுப்பாளையம் நாரயணன் ஒரு வினாத் தொடுக்கிறார். தமிழ்வழிக்கல்வியை வலியுறுத்துகின்ற அரசியல்வாதிகள் தங்கள் பிள்ளைகளையும், பெயரப் பிள்ளைகளையும் எந்தப் பயிற்று மொழியில் சேர்த்துள்ளார்கள் என்று தெரிவிப்பார்களா? என்று கேட்கிறார். கல்வி அமைச்சர் சட்டமன்றத்திலேயே இதற்கு விடை சொல்லியிருக்கிறார். 1 முதல் 5 வரை அனைத்துப்பள்ளிகளிலும் தமிழ்ப்பயிற்று மொழி என்று வரும்போது என் பெயரப்பிள்ளைகளும் தமிழ்வழியில் தான் படிப்பார்கள்; இதற்கு யாரும் விதிவிலக்கல்ல' என்று குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து, ஒசூரிலிருந்து ஜெயஸ்ரீ சாரநாதன். அவர் கூறுகிறார்.

"It is being proved in research after research that linguistic skills are at their best only in early years of one to 10 when the brain cells responsibile for language learning are tender and active. After 10 years they shut themselves up and language learning becoms difficult.
Our endeavour must, therefore, be to create opportunities for the children to learn as many languages as possible and as early as possible in their life. Teaching languages (they be English or Tamil) should begin at the kindergarten level itself"

மூளையின் இயங்குதிறம், ஈர்க்கும் சக்தி, பதியும் விதம் ஆகியவற்றைப் பற்றி 'உணர்ந்து' எழுதியிருக்கிறார் இவர். நரம்பியல் மருத்துவர் பா. இராமமூர்த்தி சொல்வதைப்போல் உள்ளது இது. இந்த உண்மைகள் மலேசியா, சீனா, சப்பான், செருமனி, பிரான்சு நாட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டதே! அவர்கள் எல்லாரும் 'ஜெயஸ்ரீ'க்குத் தெரிந்த அளவு விவரம் தெரியாமல் அல்லவா அவரவர் தாய்மொழியில் மட்டுமே தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை கற்றுக்

கொடுக்கிறார்கள்! மலேசியாவில் கூட 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ்ப்பள்ளிகளில், தமிழ் வழியில் படித்துக் கொள்ள வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது. 7ஆம் வகுப்புக்கு மேல்தான் 'பாஹா மலேசியா' கட்டாயமாகிறது. ஆனால் தமிழ்ப்பள்ளிகளில் பயிலாமல் பொதுவான மலேசியப் பள்ளிகளில் சேர்ப்பவர்கள் மலேசியமொழியைத் தொடக்கத்திலிருந்து படித்தாக வேண்டும். இதை 'ஜெயஸ்ரீ' போன்றவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து, கோவையிலிருந்து இரா. கற்பகம் எழுதுகிறார்.

"If the medium of instruction till the fifth standard is Tamil, what happens after that? How will the students switch over to English suddenly"

தமிழ்நாட்டில் உள்ள 36000 அரசு தொடக்கப்பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழில் படித்து விட்டு 12 வரை தமிழ் வழியிலேயே தொடர்பவர்கள் பலர். என்றாலும் 6ஆம் வகுப்பு முதல் ஆங்கிலம் பயிற்றுமொழியில் படிக்கத் தொடங்குபவர்களும் பலர். இவர்கள் எப்படித் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு வர முடிந்தது? தமிழ்க்குடிமகன் 11வரை தமிழ்வழியில் படித்தவன். புதுமுகவகுப்பிலும், பட்டவகுப்பிலும் அனைத்தும் ஆங்கில வழியில். இப்போதும் அரசு மேல் நிலைப்பள்ளிகளில் தமிழ் வழியில் படித்துவிட்டு, கல்லூரி சென்றதும் ஆங்கில வழியில் படிப்பவர்களே மிக அதிகம். இவர்கள் எல்லாம் பட்டதாரியாகி, முதுகலைப் பட்டதாரிகளாகி, முனைவர்களாகி வெளிவருகின்றார்களே எப்படி?

அவர்கள் மூளை அதற்கு இடம் கொடுக்கிறது. எந்த "Switch over" இருந்தாலும் ஏற்றுச் சமாளிக்கிறது. வெற்றி தேடித்தருகிறது. ஆனால் கற்பகத்தின் `மூளை` மட்டும் தான் இதற்குத் தயாராகவில்லை. என்ன செய்வது? இப்படி வாதம் செய்பவர்கள் சிலர்.

ஊரப்பாக்கம் இரத்தினசாமி எழுதுகிறார்:

"Now English is tried to be sent out"

அரசு ஆணை என்ன? தமிழ்நாட்டில் ஆங்கிலம் படிப்பதற்கு உள்ள வாய்ப்புகள் என்னென்ன? என்பவற்றையெல்லாம் ஒரே வரியில் அடித்து விடுகிறார் இவர். "ஆங்கிலத்தை வெளியேற்ற முயல்கிறோமாம் நாங்கள்."

விளங்காமலேயே எழுதும் இவர்களைப் புறக்கணிப்பது ஒன்றே சரியான வழி.

என். ஸ்ரீராமன் என்பவர் எழுதுகிறார்:

மழலையர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் நடத்தப்படுவதால் அரசுக்கு 1000 கோடி மிச்சமாம். தமிழ்ப்பயிற்றுமொழியை 5 ஆம் வகுப்பு வரை கொண்டு வந்தால் இப்பள்ளிகட்கு மானியம் வழங்கவேண்டுமாம் அல்லது அவற்றை நிரந்தரமாக மூடவேண்டி வருமாம். அரசியல் சட்டமே, '5 முதல் 14 அகவை வரை உள்ள குழந்தைகட்கு இலவச, கட்டாயக் கல்வியைக் கொடுக்க' உறுதியளிக்கிறது. மெட்ரிகுலேசன், மழலையர் பள்ளிகளை நடத்துபவர்கள் அரசியல் சட்டப்படி நடப்பவர்களைப்போலப் பசப்புவதுதான் விந்தை. கல்வியைக் காசாக்கும் இவர்கள் அரசியல் சட்டத்தையே குழிதோண்டிப் புதைப்பவர்கள் என்பதனை உணரவேண்டும்.

நரம்பியல் மருத்துவர் இராமமூர்த்தி இந்து (17.12.99) இதழில் எழுதுகிறார்.

"Forcing Tamil medium on the children in the new information millennium will hamper all commercial, economic and scientific progress that Tamil Nadu is likely to make

All Tamil children must be taught English very early in childhood. It is much easier for a child to learn two languages early rather than learn a second language when the child is older' 'The worst part of this policy is that only the poorer sections of Tamil Nadu will suffer. Not knowing English they will have no opportunities for progress and will stay as poor as they are or even worse. The cricher and the powerful sections will somehow or other teach English to their children very early, which they have always been doing. One should not condemn the poorer sections to continuing poverty, by a misplaced enthusiasm to encourage Tamil"

இவருக்கு, மூத்த தமிழறிஞர் முனைவர் வ.அய். சுப்ரமணியம் தரும் விடைதான் பொருத்தமாக இருக்கும்.

'இந்தியன் எக்சுபிரசு' (24.11.98) இதழில் அகிலா தினகர் என்பவர் நமது மொழிக் கொள்கையை அலசியிருக்கிறார்.

"In an age when the world talks of Mc Luhan's Global Village and connecting through the Internet, Tamil Nadu is to day witness to an unseemly row over which language should be used for worship in temples and which should be the medium of instruction in schools"

உலகக் கிராமமும் இணையமும் வந்துவிட்டதாம். இப்போதுபோல் மொழியைச் சுருக்கலாமா என்கிறார் அகிலா.

1975 ஆம் ஆண்டிலேயே 35 மெட்ரிகுலேசன் பள்ளிகள் இருந்தன. அப்போது இந்த 'Global Village' சிந்தனை இருந்ததா? இணையம் இருந்ததா? அவர்கள் ஏன் ஆங்கிலவழியில் பள்ளிகளை நடத்தத் தொடங்கினார்கள்? அகிலா விடை சொல்வாரா? இப்போது தான் `விரிந்த பார்வை` உங்களுக்கு வருகிறதோ! இதுபோன்ற பொருந்தாத வாதங்களை மூட்டைகட்டி வையுங்கள்.

வா.செ. குழந்தைசாமியின் கருத்துகளைக் கேட்டுப் போட்டிருக்கிறார்கள். அதில் அவர் நெற்றியடி கொடுக்கிறார். அவரே 11ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் படித்தவர்தானே! இன்று அவரது பொறியியல், அறிவியல், ஆங்கில அறிவு எத்தகையது! அகிலா உணர்வாரா? இதோ அவர் கூற்று.

"Former Anna University Vice-Chancellor VC Kulandaiswamy recalled what Gandhi advocated - that education should be through the mother tongue.

"Learning at the primary levels through a foreign medium is against the rules of education," Kulandaiswamy said.

Though he does not debunk the need to know English, which is an international link, he said learning a subject through a foreign language is bound to handicap a child's understanding.

"An impression held by the people that study in English is better, is not supported by facts," he said.

Kulandaiswamy added that when he could study in a Municipal School in Tamil medium up to SSLC and then cope with English education latter, it cannot be all that much difficult for others, too".

ஆனால் அகிலா இலலிதாவைத் துணைக்கு அழைக்கிறார். அவர் மாநில அரசு விருதுபெற்ற கணித ஆசிரியராம். அவர் கருத்துச் சொல்வதில் தவறு இல்லை. ஆனாலும் இவ்வளவு அறிவு கெட்டதனமாகவா சொல்வது? இதை எழுதும் தமிழ்க்குடிமகனும் கணித ஆசிரியராக இருந்தவன். பி.எசி. கணிதம் படித்தவன்தான்.

அவர் சொல்கிறார் பாருங்கள்:

"Even if taught in Tamil, students will find it difficult to learn words like 'vattam' for circle and 'vittam' for diameter"

இதுதான் வாய்க்கொழுப்பு என்பது! பல நூற்றாண்டுகளாகவே வட்டமும் தெரியும் விட்டமும் தெரியும் தமிழ் மக்களுக்கு! ஆங்கிலம் தெரிவதற்கு முன்னாலேயே தெரியும் எங்களுக்கு! வட்டமும் விட்டமும் எங்கள் வீட்டுச் சொற்கள்! 36000 அரசு, ஒன்றிய தொடக்க, நடுநிலைப்பள்ளிகளிலும், 5000 உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளிலும், 67 அரசுக் கல்லூரிகளிலும், 136 அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் கணிதம் பயிலும் அனைவர்க்கும் வட்டமும் தெரியும்; விட்டமும் தெரியும். இது மக்கள் வழக்கு.

'தினமலர்' விளங்காத சொல்லைப் பயன்படுத்தித்தான் விளக்கம் அளிக்கிறது என்கிறாரா?

அகிலா கண்டிப்பாகத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவராக இருக்க முடியாது. வேற்றுமொழியினர் எங்கள் தாய்மொழியைக் கேலி செய்வதை அடியோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். எனக்கு ஒன்று தோன்றுகிறது. 'இவரை விட்டத்தில் தொங்கவிட்டடால் என்ன? என்று.

இதுபோன்ற போலித்தனமான வாதங்கள் ஒரு நொடியில் பொசுங்கிப் போகும் என்பதை நினைவிற் கெள்ளவும்.

ஆனால் பி.கே. சீனிவாசன் நன்றாகவே சொல்கிறார்.

"Even during the British rule, the stress was on learning subjects through one's mother tongue".

ஒரு கணித ஆசிரியர் கூறியதாக அகிலா எழுதுகிறார்.

"Such an enforcement will see more students flocking to Central Board of Secondary Education schools"

ஏற்கெனவே உள்ள 'சிபிஎஸ்இ' பள்ளிகள் 194 தான். அந்தப் பள்ளிகளில் ஒவ்வொன்றிலும் சில மாணவர்கள் மட்டும் வேண்டுமானால் சேரலாம்.

ஆனால் தமிழக அரசின் ஒப்புதல் இல்லாமல் யாரும் புதிதாக (CBSE) பள்ளிகளைத் தொடங்க முடியாது என்ற உண்மையை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கட்டுரை எழுதிய அகிலா தினகர் நாங்கள் தொடாத ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் இருந்து கூட எதிர்க்கருத்துகளை வாங்கிப்

போட்டிருக்கிறார். அரசு என்ன செய்கிறது என்று தெரியாமலேயே ஓர் ஆங்கிலோ இந்தியப்பள்ளி நிர்வாகி சொல்கிறாராம்.

"They will oppose Tamil as medium of instruction tooth and nail"

பேட்டி கொடுத்தவர்களில் பலரது அரைவேக்காட்டுத்தனம் மட்டுமின்றி அகிலா தினகரின் அரைவேக்காட்டுத் தனமும் இதில் தெரிகிறது. அதே அகிலா தினகர் 19.12.99 இல் 'இந்தியன் எக்சுபிரசு' இதழில் செய்திகளை எழுதுகிறார்.

எந்த அளவுக்குத் 'தமிழ் வழிக் கல்வி'யை எதிர்த்து வெறுப்பேற்ற முடியுமோ அந்த அளவுக்குச் செய்கிறார். அவரது எழுத்தில் படியுங்கள்.

"When the idea is to catch them young, how can the students who will shift to English medium after Std VI be expected to master the language? The notables who claim to have had their earlier education in Tamil are exceptions to the rule. The world is a whole lot different now," the principals argued".

"On the Government's comparison with countries like Japan and Russia, one parent said that a multi-lingual and a monolingual country cannot be put on the same plane. An alternative to compulsory Tamil medium could be teaching the language to all students till Std XII and the setting up of a Tamil Prachara Sabai" "A former Madras University Vice - Chancellor put it all succintly: "the pride of the Tamils is that they can speak English fluently. Why then through such sweeping moves, should it be snatched away from them". "But this irate Corporation school teacher, whose son is studying in an English medium school, like any other's, has the last word: "Our children go to English medium schools because we do not have faith in the Tamil medium we teach in our school".

ஆங்கிலத்தில் ஆற்றொழுக்காகப் பேசுவதில் தமிழர்கள் வல்லவர்களாம். மறைமலையடிகள், திரு.வி.க. காலத்தில் படித்த எல்லாருமே ஆங்கிலத்தில் அருமையாகப் பேச வல்லவர்களாம். அன்றைய அரசுக்கு அது தேவைப்பட்டது. இன்றைய அரசுக்கு அந்த நிலை தேவையா? முதல்வகுப்பு முதல் அனைத்துப் பாடங்களையும் ஆங்கில வழியில் படித்தால்தான் ஆற்றொழுக்காகப் பேசுவார்களா! ஆறாம் வகுப்பிலிருந்து படித்தால் பேசமாட்டார்களா? முன்னைத் துணைவேந்தர் எவரோ சொன்னாராமே! அவருக்குத்தான் இந்தக் கேள்வி?

மாநகராட்சிப் பள்ளி ஆசிரியரின் கூற்றைக் கவனத்தீர்களா? அவர் பிள்ளைகள் ஆங்கில வழியில்தான் படிக்கிறார்களாம். அவர்களது பள்ளிகளில் அவர்களே பயிற்றுவிக்கும் தமிழ் வழியில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையாம். இவரைப் போன்ற 'இரட்டை வேடதாரிகள்' - போலி வேடதாரிகள் - பலர் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இவருக்கே அரசு தரும் சம்பளத்துக்கு வேலை கிடைக்காமல், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 500 அல்லது 750 வாங்கிக்கொண்டு 'அந்தக் கூலி'க்கு வேலை பார்த்தால்தான் தெரியும். வியர்வை சிந்தி உழைக்கவேண்டிய தேவையும். நெட்டி வாங்கிவிடும் வேலைப்பளுவும் எப்படியிருக்கும் என்று. இப்போது வேலை உறுதி. சம்பளம் உறுதி. வேலை பார்க்காமல் 'வெட்டிப் பந்தா' செய்தே காலத்தை ஓட்டிவிடலாம். அரசும், அதிகாரிகளும் கண்டு கொள்ளவா போகிறார்கள். அதனால் மாநகராட்சி ஆசிரியரின் குரல் இப்படிக் கேட்கிறது!

அகிலாவின் நாணயக் குறைவு இதில் பளிச்செனப் புலனாகும். இவருக்குக் கருத்து வழங்கியவர்களின் பெயர்களையும் வெளியிட்டிருந்தால்தான் அது முறையாகும். ஏன் மறைந்து நின்று தாக்குதல் தொடுக்கவேண்டும்? நேரடியாகப் பேர் சொல்லியே மோதலாமே!

நாங்கள் பிறப்பித்த அரசாணை வெளியானபின் இந்து இதழில் (29.12.99) இராதாகிருட்டிணன் என்பவர் 'The Language muddle' எனும் பெயரில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இவர் ஒரு கல்லூரிப் பேராசிரியர் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு இவரது கருத்தினை ஆராய்வோம்.

"The focus is on matriculation schools which have to replace from next year their present English medium with Tamil.

For, even while resisting all attempts of the Centre to enforce the constitutional provision that made Hindi the official language of the Indian Union, Periyar E.V. Ramasamy Naicker and other stalwarts of the Self-Respect and Dravidian movements emphasised the need for studying English and expected the people to benefit from it vastly.

All have raised several vital and valid issues: The G.O. is chauvinistic, fatalistic with fascistic overtones; through it the state has encroached upon and usurped the parental prerogative to choose the medium of instruction for their children.

The G.O. has already caused a lot of anguish to the parents because of the real and perceived threat that if enforced it will endanger

the very career and futrure of lakhs and lakhs of children who are currently undergoing their courses in matriculation schools all over the State.

If people in large numbers from non-academic sections of society have entered the education fray, and there is vulgar commercialisation, rampant corruption and malpractices in matriculation schools, as alleged by the Tamil Nadu Government."

தமிழக அரசு வைக்கின்ற முறையான விவாதங்கள் எல்லாம் - 'are all maine contrary to reality and bordering on the absurd என்கிறார்.

நாம் பிறப்பித்த அரசாணை மொழிவெறியோடு கூடி பாசிசப் போக்கால் விளைந்தது என்கிறார் தோழர்.

எல்லாரும் சொல்கின்ற எதிர் நிலைக் கருத்துகளைத்தான் சிலர் தன் ஆங்கிலத்தில் கொடுக்கிறார்: எனவே இவருக்கு இதற்கு மேல் விளக்கம்தேவையில்லை.

இந்தச்செய்திகள் தொடர்பாக எனக்கேற்பட்ட வியப்பே நரம்பியல் மருத்தவராக விளங்கும் பா. இராமமூர்த்தியின் கருத்துத்தான்.

## தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழ முடியும்

"தமிழ்நாட்டில் 5-ம் வகுப்பு வரை எல்லாக் குழந்தைகளுக்கும் தமிழ் மொழியிலேயே பாடம் கற்பிக்க வேண்டுமென்று அண்மையில் ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு இது அத்தியாவசியம் என்று கருதப்படுகிறது. ஆனால் உண்மையை உணர வேண்டும். தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழமுடியும். தமிழனை, தமிழ் நாட்டை முன்னேற்றம் இலலாமல் ஏழையாக்கும் எந்த முயற்சியும் தமிழை வளர்க்காது. பிற மொழிகள் எல்லாம் - ஆங்கிலம், பிரெஞ்ச், ஜப்பானிய மொழிகளெல்லாம் - நாடு முன்னேறிய பிறகே வளம் பெற்றன. தமிழ் நாடு தனி நாடாக இருந்தால் கூட, நவீன அறிவைப் புறக்கணித்து நாட்டை வளப்படுத்துவது இயலாத காரியம். இந்திய நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வளரும் தமிழ்நாடு, நவீன அறிவைப் புறக்கணித்தால் தமிழன் முன்னேறி வாழ முடியாது.

தமிழ் மொழியிலே மட்டும் படிப்பதனால் வேறு எங்கும் வேலைவாய்ப்புக் கிடைக்காது, தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைப்படும்.

முக்கியமாக, இது தமிழ்நாட்டின் ஏழைகளை வெகுவாகப் பாதிக்கும். வசதி உள்ளவர்கள் எப்படியோ சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு ஆங்கிலப்

பயிற்சி கொடுத்து வாழ்வில் முன்னேற்றி விடுவார்கள். தமிழ்நாட்டு ஏழை மக்களின் கதி என்ன? எந்தத் துறையிலும் முன்னேற்றம் இல்லாமல் 21-வது நூற்றாண்டில் தமிழக ஏழை மக்கள் இன்னும் ஏழைகளாகி விடுவார்கள். அழுத்தமாகச் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் எல்லாவித முன்னேற்றமும் ஏற்பட்டால் - பணம் பெருகி, வர்த்தகம் பெருகி, விஞ்ஞானம் பெருகினால் - தமிழ் தானே வளரும். இதைக் கவனித்துச் செவிசாய்க்க வேண்டும்.''

அவரது கருத்துகளைக் கவனியுங்கள். முதல்வரின் நெருங்கிய நண்பர் - எனக்கும் நெருக்கமானவர்.

ஐந்தாம் வகுப்புவரை தமிழ்வழியில் படிப்பதனால் எந்தத்துறையிலும் முன்னேற்றம் ஏற்படாமல் போய் விடுமா? 36000 அரசு தொடக்க நடுநிலைப் பள்ளிகள், 5000 அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் 80 இலட்சம் மாணவர்கட்கும் எதிர்காலமே இல்லை என்கிறாரா இராமமூர்த்தி?

மழலையர், மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்திய, சிபிஎஸ்இ பள்ளிகளில் (2100+3250+41+193 பள்ளிகள்) படிக்கும் மாணவர்கள் மட்டும் தான் வாழப்போகிறவர்கள்; மற்றவர்கள் எல்லாம் ஏழையாகி வீழப்போகின்றவர்கள் என்பது பொருந்துமா? இராமமூர்த்தி மூளை நரம்புகளை ஆராய்வதில் வல்லவர்; ஆனால் தமிழகத்தின் நாடி நரம்பினை உணரத் தவறிவிட்டாரே! 'எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது' என்பதை இவர்க்குத் தான் சொல்லவேண்டும்.

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ச. இராமச்சந்திரன் எனக்கொரு மடல் வரைந்துள்ளார். அதிலும், 'துக்ளக்' இதழின் வாயிலாக (27.1.99) முதலில் அவரது கருத்துகளைத் தெரிந்து கொள்ளுங்கள் :

''தமிழ்நாட்டின் முக்கியத் தலைவர்களான தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, அறிஞர் அண்ணா ஆகியோர் கூட. இந்த சிக்கல் நிறைந்த பிரச்னையில் ஒரே கருத்தை கொண்டிருந்தார்கள் என்றால், அது ஆங்கிலத்தின் அவசியம் பற்றித்தான். ஆகவே தமிழ்நாட்டு மக்களின் எதிர்காலம் என்ற வகையில் பார்க்கிறபோது, ஆங்கிலத்தின் மீது எதிர்ப்பைத் தூண்டும் வகையில் தமிழ்மொழி மீது உள்ள ஆர்வம், ஒரு அரசுப் பொறுப்பிலுள்ள அமைச்சருக்கு அமைந்துவிடக் கூடாது.

ஒவ்வொரு இனமும், தனது தாய் மொழியோடு ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டால், பரந்த உலகத்தின் எல்லோருடனும் தொடர்பு கொள்ளமுடியும். உலகத் தொடர்பு மொழியான ஆங்கிலம், இந்தியாவுக்கும் தொடர்பு மொழியாக பயன்படும் என்பதை உணர்த்தும் வகையில்தான், 'பூனை

செல்வதற்கு ஒரு வழியும், பூனைக்குட்டி செல்வதற்கு வேறு வழியும் தேவையில்லை' என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

வசதி படைத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கின்றனர். வறியவர்கள் அரசுப் பள்ளிகளில் சேர்க்கின்றனர். அரசாங்கக் கொள்கைகள் மூலம், ஆங்கிலத்தை அகற்றுவதனால், அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மக்களின் குழந்தைகளுக்கே ஆங்கிலம் கற்கும் வாய்ப்பு அகற்றப்படுகிறது. இதனால் ஒருவகையில், பொறியியல் படிப்பு, மருத்துவப் படிப்பு போன்ற உயர் பட்டப் படிப்புகளில் வசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்கு, வசதியற்றவர்களின் வீட்டுப் பிள்ளைகளால் ஏற்படும் போட்டி குறையும். அவர்கள் எளிதாக தொழிற் கல்விக் கூடங்களில் இடம் பெறவே அரசின் இந்த முயற்சி வழிவகுக்கும்.

தாய்மொழியில் கல்வி என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். ஆனால் அதே நேரத்தில், இந்த 21ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழிப் பயிற்சி என்பது, வெறும் மொழிப் பயிற்சி மட்டுமல்ல; தகவல் புரட்சியைக் கையாளும் திறமைக்கான வழியுமாக அமைந்துவிட்டது. ஆகவே, ஒவ்வொரு தாயும் தன்னுடைய பிள்ளை ஆங்கிலப் புலமை பெறவேண்டும் என்பதில் தணியாத ஆர்வத்தோடு இருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆங்கிலத்தால் தமிழுக்கு ஆபத்து ஏற்படும் என்ற வாதம் சரியல்ல. தமிழ் மொழி, தாய்ப்பால் போன்றது. ஆங்கிலம், புட்டிப்பால்தான். தமிழை இயற்கையாகவே அறிந்து கொள்ளக்கூடிய தமிழர்கள். அதில் எழுதவும் - பேசவும் எளிதில் கற்றுக் கொள்ளமுடியும். ஆனால் ஆங்கிலம் படிப்பதன் மூலம், அதை புரிந்து கொள்ளலாமே தவிர, அதில் சரளமாகப் பேசுவது எல்லோருக்கும் எளிதில் கைவரப் பெற்றதல்ல.

ஆங்கிலத்தின் மூலம் உலகமயமாகி வரும் தொழில் நுட்பத்தை, பொரளாதாரத்தை, தகவல் புரட்சியை புரிந்து கொள்ளமுடியும். ஆகவே அது நமக்கு ஒரு நல்ல ஆயுதமாகப் பயன்படும். "தாய் மொழியாகிய தமிழை நம் எப்படியும் தெரிந்து கொள்ள முடியும்; ஆனால் ஆங்கிலத்தை ஆரம்பத்திலிருந்தே கற்றால்தான் ஓரளவுக்காவது புரிந்து கொள்ள முடியும்?" என்று தாய்மார்கள் எழுப்பும் வாதம் அர்த்தமுடையதுதான்.

ஆங்கில மொழி வழிக் கல்வியை அகற்றுவது சாத்தியமல்ல. சிறுபான்மையினரும், வசதி படைத்தோரும் ஆங்கில மொழி வழிக் கல்வியை வைத்துக் கொள்வர். ஆங்கில மொழி வழிக் கல்வியை அகற்றுவது நல்லதும் அல்ல. அதனால் சாதாரண மக்களே பாதிக்கப்படுகிறார்கள். இந்த 21-ஆம்

நூற்றாண்டில ஆங்கிலம் ஒவ்வொருவருக்கும் அவசியத்தேவை. இன்னும் சொல்லப் போனால், ஆங்கிலம், ஒவ்வொருவருக்கும் சொநத மொழியாகும் காலம் விரைந்து வருகிறது.''

தமிழ்நாட்டில் 75க்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றுள் முழுமையாக இயங்குபவை, சட்டமன்ற, பாராளுமன்ற வாய்ப்புப் பெறுபவை ஒரு பத்துப் பன்னிரண்டுதான். மற்றவை உப்புமாக் கட்சிகள்தாம்: அவற்றுள் ஓர் உப்புமாக் கட்சியின் தலைவர் தான் ப.இரா.

அவர் எழுதிய மடலில் அடிப்படையிலேயே ஒரு தவறு செய்கிறார். நான் ஏதோ ஆங்கிலத்துக்கு எதிரானவன் போலவும் அதை ஒழிக்க முற்படுபவன் போலவும் எழுதியுள்ளார். இதுவே அவர் செய்த அடிப்படைத் தவறு.

தமிழ்நாட்டில் மூன்று அணிகள் உண்டு.

மும்மொழித் திட்டத்தை ஏற்றுச் செயற்படும் அனைத்திந்திய கட்சிகளான பா.ஜ.க.வும் காங்கிரசும்...

ஆனால் இவர்கள் எல்லாம் எங்கள் 'தமிழ்வழிக் கல்வி' முயற்சியைப் பாராட்டி வரவேற்றார்களே தவிர எதிராகப் பேசவில்லை.

மற்றொரு அணி: 'அன்னைத் தமிழே ஆட்சியேறு;
ஆங்கிலமே வெளியேறு' என்று கூறும் சிலர்.

இந்த முழக்கத்தை உருவாக்கியவரும் வழிநடத்தியவரும் அறிஞர் வ.சுப. மாணிக்கனார்தாம். ஆனால் தமிழக அரசு இந்திய ஆட்சிக்குள் ஒரு மாநிலமாகத்தான் இருக்கிறது என்பதால், இந்தியத் தொடர்புக்கான மத்திய ஆட்சிமொழியாக ஆங்கிலத்தை ஏற்றே தீரவேண்டும். அதை மறந்தவர்கள் இந்த அணியினர்.

மூன்றாவது அணி: இருமொழிச் சட்டத்தில் இணைந்து நிற்பவை. தி.மு.க., அ.தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க ஆகியவை எல்லாம் இதனை உணர்ந்தவை. ஆங்கிலத்தைத் தேவையான அளவுக்குக் கற்றாக வேண்டும் என்பதும், ஆனால் ஆங்கிலம் தமிழை மடக்கியோ, முடக்கியோ போட்டுவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதும் இவர்கள் கருத்து.

பண்ருட்டி இராமச்சந்திரன் அ.தி.மு.கவில் அமைச்சராக இருந்தவர். 'ஆங்கிலத்தின் மீது எதிர்ப்பைத் தூண்டும் வகையில் அமைச்சர் அமைந்துவிடக்கூடாது' என்கிறார்.

1967 ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் இருந்து கவனித்த காரணத்தாலேயே ஆலோசனை வழங்குகிறாராம் எனக்கு. நாங்கள் என்ன கருதுகிறோம் என்ன செய்கிறோம் சட்டமன்றத்தில் என்ன பேசினோம் என்பதை அறிய வாய்ப்புப் பெறாத பண்ருட்டி இராமச்சந்திரனுக்கு என் விளக்கம் இதுதான். ‘தாங்கள் எங்கள் கோட்பாட்டையே விளங்கிக் கொள்ளவில்லை’

அண்ணா சொன்னது சரி. அந்த வழியில்தான் எங்கள் ஆணை அமைந்துள்ளது என்பதே உண்மை.

‘அரசாங்கக் கொள்கைகள் மூலம் ஆங்கிலத்தை அகற்றுவதனால்’ என்கிறார். இதுவே விளங்காத்தனம் என்பது. ஆங்கிலம் எங்கே அகற்றப்பட்டுள்ளது எங்கெல்லாம் தரப்பட்டுள்ளது என்பது தெரியாதா பண்ருட்டி இராமச்சந்திரனுக்கு!!

‘ஆங்கிலத்தை ஆரம்பத்திலிருந்தே கற்றால்தான் ஓரளவுக்காவது புரிந்துகொள்ள முடியும்’ என்று தாய்மார்கள் வாதம் செய்கிறார்களாம்.

ஆம் பக்கத்தில் உள்ள விளக்கத்தைப் பார்க்கவும். என் காலத்தில் இருந்ததை விட இப்போது ஆங்கிலம் கற்கும் வாய்ப்பு அதிகம் என்பதை அனைவரும் உணர்வர்.

பின் ஏன் இந்தத் தவறான கருத்து?

‘ஆங்கிலமொழி வழிக்கல்வி’யை அகற்றுவது சாத்தியமல்ல.

ஆங்கிலமொழி வழிக்கல்வி’யை அகற்றுவது நல்லதும் அல்ல’

நாங்கள் ஆங்கிலமொழி வழிக்கல்வியை அகற்றவும் இல்லை: அதற்கான கவலையை பண்ருட்டி இராமச்சந்திரன் கைவிடலாம். விரைவில் அவரோ அவரைச் சார்ந்தவர்களோ ஆங்கிலத்தையே சொந்தமொழியாக்கிக் கொள்ளலாம். தமிழை எங்காவது கடைத்தெருவில், தேநீர்க் கடையில், பலசரக்குக் கடையில் கேட்டால் போதும்; தமிழறிவு அந்த அளவுக்கு இருந்தால் போதும்; ஆங்கிலத்தில் தான் புலமை வேண்டும் என்று கருதும் பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர்கள் தமிழகத்தின் மேன்மையைச் சரியான நோக்கில் புரிந்து கொள்ள முடியாமல் இப்படிப் பொழிந்து தள்ளுகிறார்களே என்பதுதான் வருத்தம்.

‘குமுதம்’ இதழ் ஏற்கெனவே ‘தமிழ் வழிக் கல்வி’யை வரவேற்றுத்தான் ஆசிரியவுரை எழுதியுள்ளது. என்றாலும் பிறர் கருத்துகளையும் வாங்கிப் போட்டு நமக்கு உணர்த்துகிறது. **(9.3.2000)** ஒரு

செய்தியாளராக இருந்து 'மணா' என்பவர் எழுதிய பகுதி இது. அவர் ஒரு தவறான புள்ளி விவரத்தைத் தருகிறார்.

"தமிழகத்தில் இருக்கின்ற சுமார் 15 ஆயிரம் மெட்ரிகுலேசன் பள்ளிகள்" என்கிறார். 1975 முதல் 1995 வரை இருந்த பள்ளிகள் 1421. கல்வி அமைச்சராக இருந்த அன்பழகன் அனுமதித்த பள்ளிகள் 4 ஆண்டுகளில் 1400. 31.7.2004 இல் 3244 பள்ளிகள்தாம் மணா கவனிக்க வேண்டும். மெட்ரிகுலேசன் 'பெற்றோர்கள்' அவர்கள் பங்குக்கும் அள்ளி விட்டிருக்கிறார்கள். 'எங்கள் முடிவால்' சுமார் 40 இலட்சம் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும்' என்கிறார்களாம். மெட்ரிகுலேசன் பள்ளிகள் பகுதியில் புள்ளி விவரங்களைப் பாருங்கள். உண்மை தெரியும். இவர்கள் விடும் 'உல்டா'வும் தெரியும்.

நீதியரசர் பெ. வேணுகோபால் கூறிய முக்கிய கருத்துகளை 'மணா' தொகுத்துத் தருகிறார்.

"முக்கிய கருத்துகள்: 1. ஆங்கிலம் கற்பதை வேண்டாம் என்று அரசு கூறவில்லை. 2. ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்கத் தடையில்லை. 3. வேறுமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ்நாட்டில் தமிழ் படித்துத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை... அரசாணையை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்ள பெரியவர்கள் யார் என்ற வினா எழுகிறது. ஆங்கில வழிக்கல்வி நிலையங்கள் நடத்திக் கல்வியை வணிகப் பொருளாக்கிப் பெரும் பொருள் திரட்டுகிறவர்கள்தான் எனக் கூறப்படுகிறது. இந்த 'கல்வி வணிகர்கள்' மழலையர் கல்வியில் ஈடுபாடு கொண்டவர்கள் அல்ல. பொருள் ஈட்டுவதில் வல்லமை பெற்றவர்கள் என்று கூறப்படுகிறது. இது குறித்து மக்கள் மன்றம் தான் தீர்ப்பு கூற வேண்டும்".

எங்கள் கருத்துகளுக்கு அழகான வடிவம் கொடுத்துள்ளார். வாழப்பாடி இராமமூர்த்தி தமிழக அரசின் கொள்கைகட்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார்.

இந்த வகையில் 'குமுதம்' இதழ் இருதரப்புக் கருத்துகளையும் வாங்கி வெளியிட்டுள்ளது.

அடுத்து 'கல்வி' (16.1.2000) இதழ் பேரா. மா. நன்னனையும், வழக்குரைஞர் கே.எம். விசயனையும் மோதவிட்டு, கருத்துகளை வெளிக்கொணர்ந்துள்ளது. விசயன் கருத்து தலைப்பாகிறது. "மணிக்கொடி காலத்தில் வளர்ந்த தமிழைவிட தமிழ்க்குடிமகன் காலத்தில் அழிந்த தமிழ் அதிகம்"

கவனியுங்கள்: தமிழ்க்குடிமகன் அழித்த தமிழ் என்று சொல்லவில்லை; சொல்ல மாட்டார்; சொல்ல முடியாது.

என் காலத்தில் 'அழிந்த தமிழ்' என்று ஒரு பகுதி உள்ளது. அதை நானும் ஒப்புக் கொள்பவனே!

முதலில் விசயன் கருத்துகளைப் பார்ப்போம்.

"என் தலைமுறையில் தமிழர்கள் இந்தியா முழுவதும், ஏன் வெளிநாடுகளுக்கும் சென்று வியாபித்து விட்டனர். எனவே, எனக்குத் தொடர்பு மொழியாகவும் வியாபார மொழியாகவும் ஆங்கிலம் அவசியமாகிறது. எனக்கு அடுத்த தலைமுறையினருக்கு அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஆங்கிலத்தைத் தவிர்க்கவே முடியாது. காரணம், தாராளமயமாகக்கலாலும் தகவல் தொடர்புகளாலும் இன்றைய உலகம் மிகச் சிறியதாகி விட்டது. அதாவது இன்றைய குழந்தை என்பது உலகக் குழந்தை என்கிற நிலையில்தான் இருக்கிறது. இந்த நிலையில் உலகத்தில் அதிகமாக உபயோகப்பட்டுக் கொண்டிருக்கிற தொடர்பு மொழியான ஆங்கிலத்தை எந்த நிலையிலும் ஒதுக்கி விடமுடியாது. இப்படியிருக்க, ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலம் கற்றுக் கொள்வதை அரசு ஆணை தடை செய்வது என்பது என்ன நியாயம்" என்று கேட்கிறார்.

"இன்டர்நெட்டை நாடுபவர்களுக்கு 'உபயோகப் படுகிற வகையில் தமிழ்க் களஞ்சியங்களை உருவாக்குவதை விட்டு விட்டு, இப்படியொரு அரசாணை மூலமாகத் தமிழை வளர்க்க முடியாது" என்கிறார்.

"ஆங்கிலத்தின் தேவையையுணர்ந்து, இன்றைய குழந்கைள் அரசின் உதவியை நாடாத பள்ளிகளில் சென்று படிக்க விரும்பினாலும் அங்கு இந்த வசதிக்கு அரசு இடைஞ்சலாக இருப்பது என்ன நியாயம்? இது தனிமனித உரிமையைப் பாதிப்பதாகாதா?"

"வாழ்க்கையை இரண்டு விதமாகப் பார்க்கலாம். ஒன்று மொழிசார்ந்த வாழ்க்கை. அது தமிழாசிரியர்கள், எழுத்தாளர்கள் போன்றோருக்கு மட்டுமே சாத்தியம். பிறரெல்லாம் பிழைப்புச் சார்ந்த வாழ்க்கையைத்தான் வாழ்கிறார்கள். அந்தப் பிழைப்புக்கு எது தேவையோ அதை அவர்கள் தேடிப்போய் கற்றுக் கொள்கிறார்கள். இன்றைய தமிழன் என்பவன் தமிழ்க்குடிமகன் மட்டுமல்ல; இந்தியக் குடிமகன் மட்டுமல்ல; உலகக் குடிமகன். இன்றையச் சூழலில் பிழைப்புச் சார்ந்த வாழ்க்கைக்கு உலகக் குடிமகனாகத்தான் இருந்தாக வேண்டும் ஆனால், அரசின் இந்த ஆணை இந்த யதார்த்த சூழ்நிலையை மனத்தில் கொள்ளாமல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதே" தனது கருத்து என்கிறார்.

விசயன் போன்றோர் மொழியை ஒரு கருவியாக - ஊடகமாக மட்டுமே பார்ப்பவர்கள். மொழி சார்ந்த பண்பாடு பற்றி அவர் கவலைப் படவே இல்லை. அவரே கூறுவதுபோல பிறரெல்லாம் பிழைப்புச் சார்ந்த வாழ்க்கையைத் தான் வாழ்கிறார். பிறர் என்றால் அதில் விசயனும் அடங்குவார்! இந்த எண்ணம் படைத்தவர்களின் புலம்பல்தான் எங்கள் முயற்சிக்கு எதிர்ப்பு என்பதை உணர முடியும்.

'தமிழால் பாரதி தகுதிபெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்' என்பாரே பாவேந்தர்.

பாரதியைத் தமிழ் உயர்த்தியது; பாரதி தமிழை உரமிட்டு வளர்த்தான். இதுதான் சரியான வாழ்வு.

'தேடிச் சோறு நிதம் தின்று' வாழ்வதே போதும் என்கிறார் விசயன். கல்லறைக்குப் போகும் வரை சில்லரை தேவைப்படுகிறது எனும் வாலியின் பேச்சைப்போலவே, பிழைப்புக்குத் தமிழ் பயன் படுமா என்று பார்க்கும் ஒரு கூட்டத்தின் சார்பாளராகவே விசயன் குரல் கொடுக்கிறார். கூடுதல் வருமானமும் வசதியான பிழைப்பும் கிடைக்கும் என்றால் இவர்கள் எதையும் இழக்க அணியமானவர்களே! அப்படி இழக்கப்படுவது 'தமிழ்' என்றாலும் அது தவறில்லை என்பதுதான் விசயன் கருத்து. 'நானும் தமிழன்தான்' என்கிறார். ஆனால் 'தமிழை' எப்போது வேண்டுமானாலும் கைவிடவும், புறக்கணிக்கவும் தயாராக உள்ளவர் இவர். 'தேவநாகரி மொழிதான் கடவுளுக்குகந்த மொழி' என்று கூறி 'தமிழ் அதற்குத் தகுதியற்றது' என்று சொல்லாமல் சொன்ன, இதனை நீதி மன்றத்திலும் நிலைநாட்ட முயலும் வி.எஸ். ஸ்ரீகுமாரும் என்ன சொன்னார் தெரியுமா? 'நானும் தமிழன் தான்' என்கிறார். 'கோயில்களில் தமிழ் வேண்டாம்; சமஸ்கிருதம்தான் வேண்டும்' என்று சொல்கிறார் ஒரு தமிழர். 'பள்ளிகளில் தமிழ் வேண்டாம்; ஆங்கிலம்தான் வேண்டுமென்கிறார்' ஒரு தமிழர்.

இப்போது இப்படிப்பட்ட தமிழர்கள் பலர் தலைதூக்கியிருப்பதைப் பார்க்கும்போது 'தமிழ்க்குடிமகன் காலத்தில் அழிந்த தமிழ் அதிகம்' என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இதோ என் கண் முன்னே இரண்டு தமிழர்கள் அழிந்து போய் விட்டார்களே! மேலும் கவிஞர் வைரமுத்து 'ஷக்கலக்க பேபி ஷக்கலக்க பேபி லவ் பண்ணத் தோணலையா' என்று பாடியதால்தான் என்காலத் தமிழ் அழிந்து விட்டது. அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இதில், மறுப்புத் தெரிவித்த, 'தமிழ்வழிக்கல்வி'க்கு ஆதரவுக்குரல் கொடுத்த நன்னன் கருத்துகள் இவை.

"இந்த அளவுக்குத் தமிழ் நாசமாய்ப் போவதற்குக் காரணமே ஆங்கிலத்தின் மூலம் படிப்பதுதான். இன்னும் கூட நான் உதாரணம் சொல்கிறேன். 'அந்தப் பச்சை நாற்காலியை எடுத்துக் கொண்டு வா! என்று இன்றைய குழந்தையிடம் கூறினால், 'யு மீன் கிரீன்' என்று அதை ஆங்கிலப் படுத்திக்கொண்டுதான் செய்கிறது. இது நாளடைவில் நமது பண்பாட்டையே சீர்குலைத்து விடாதா? இது தவிர்க்கப்பட வேண்டாமா?"

"தமிழை ஒரு மொழியாக மட்டும் படித்தால் போதாது. அதில் சரித்திரம், விஞ்ஞானம், கணிதம் என்று எல்லா வற்றையும் படிக்க வேண்டும். எனவேதான் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமாவது அப்படிப் படிக்கச் சொல்கிறோம்" அரசின் மனநிலையைப் புலப்படுத்துகிறார் அவர்.

"ஆங்கிலம் சொல்லித் தருவதை யாரும் தடுக்கவில்லை. ஆனால் ஒரு குழந்தையை ஆங்கிலேயனைப் போலவே ஆக்குகிற முயற்சியைத்தான் சில பள்ளிகளில் பார்க்கிறோம். அதனால் அந்தக் குழந்தைகள் மனத்தளவில் பிறரோடு ஒட்டாமலேயே போகிறார்கள். இந்த நிலைமாற வேண்டுமானால் ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் படிப்பதுதான் சிறந்த வழியாகப்படுகிறது. அதோடு உலகிலுள்ள பல மொழியியல் அறிஞர்களும் ஒரு குழந்தை தொடக்கக் கல்வியை அதன் தாய்மொழியில் கற்றுக் கொள்கிறபோது, சுலபமாகக் கற்றுக் கொள்ளும் என்றே கூறியிருக்கிறார்கள். எனவே குழந்தைகளின் மனச்சுமையைக் குறைக்கிற நோக்கத்துடனேயே அரசு இந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. மற்றபடி ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதற்காக அல்ல".

தமிழ் வழியில் பள்ளியில் சேர்ப்பதற்குப் பல பெற்றோர்கள் தயங்கும் சூழ்நிலை இன்று இருப்பதாகவே பலர் நினைக்கின்றனர். 'தமிழன்' என்பவர் எழுதிய மடலைப் படியுங்கள். (தினத்தந்தி 26.6.1998)

"காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தில் இளநிலை கல்வியியல் (பி.எட்) சேர்க்கைக்காக நுழைவுத் தேர்வு நடைபெற்றது. வினாத்தாள் ஆங்கில வழியில் மட்டுமே வழங்கினர். அப்போது நான் எழுந்து தமிழில் வினாத்தாள் கிடையாதா? என்று கேட்டபோது கிடையாது என்றார்கள்.

அதனால் தமிழ் மாணவர்கள் விழித்துக் கொண்டு தான் இருந்தார்கள். தனித் தமிழ் பட்டமான 'பி.லிட்' பயின்று நுழைவுத் தேர்வு எழுத வந்த தமிழ் மாணவர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. ஏற்கனவே பி.லிட். தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தமிழாசிரியர் பயிற்சியையும் அரசு இந்த ஆண்டு முதல் நிறுத்தி விட்டது. இப்படிச் செய்தால்தான் தமிழ் வழியில் படிக்க மாட்டார்கள் எனத் திட்டமிட்டு செய்வது

போல் தெரிகிறது. இதை சந்தித்த பிறகும் எப்படி எங்கள் வாரிசுகளை தமிழ் வழியில் சேர்ப்பது? நாங்கள் படும் துன்பம் போதாதா? தமிழன், ராமநாதபுரம்''.

கலைஞர் காலத்தில், போராசிரியர் கையில் கல்வித்துறை இருக்கும் போது, அழகப்பர் பல்கலைக் கழகமும், அரசும் தமிழை எப்படி ஒழித்திருக்கின்றன என்பதைக் கவனியுங்கள். எனினும், நான் தலையிட்டுத் துணைவேந்தர்க்கு எழுதியபின் அடுத்த ஆண்டு தமிழிலிலும், ஆங்கிலத்திலும் வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. (பார்க்க: தமிழ் ஆட்சி மொழிச் செயலாக்கம்)

19.11.99 அன்று 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக்கல்வி என்று ஆணைபிறப்பிக்கப்பட்டபின் துக்ளக் இதழில் (15.12.99) வெளிவந்த செய்தி. 'துக்ளக் டெலிவிஷன்' எனும் தலைப்பில் கற்பனையாகவும் கிண்டலாகவும் புனையப்பட்ட செய்தி இது. படியுங்கள்.

வணக்கம். துக்ளக் வழங்கும் அதிர்ச்சிச் செய்திகள்.

ஏற்கெனவே ஆங்கில மீடியத்தில் படித்து, தமிழை ஏமாற்றி பட்டம் பெற்றவர்கள் - மீண்டும் தமிழ் மீடியத்தில் படித்து பட்டம் பெற்றால்தான் அரசு வேலை தரப்படும் - என்று அமைச்சர் தமிழ்க்குடிமகன் ஆவேச அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ஆங்கிலத்தை பயிற்று மொழியாகக் கொண்டு முறைகேடாக பட்டம் பெற்றவர்களை அரசு அங்கீகரிக்காது என்றும், அவர்கள் மீண்டும் ஒன்றாம் வகுப்பிலிருந்து தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு படித்து பட்டம் பெற்று, அதற்குப் பிறகு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டு அரசு வேலை பெறலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்துள்ளார். அத்தகையவர்களின் நலனுக்காக, அரசு வேலை பெறுவதற்கான அதிகபட்ச வயது 75-ஆக உயர்த்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்க்குடிமகனின் இந்த அறிவிப்பு, தமிழை வாழ வைக்கும் முயற்சியில் ஒரு மைல்கல் என்று வைகோ, ராமதாஸ், குமரி அனந்தன் ஆகியோர் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள்''.

தமிழ் வழிக்கல்விக்கான ஆணை பிறப்பித்தவர் கல்வி அமைச்சர். ஆனால் 'துக்ளக்' என்னைத்தான் பிடித்திருக்கிறது என்பதிலிருந்து உங்களுக்குப் பல உண்மைகள் புரிந்திருக்கும். புரிந்திருந்தால் மகிழ்ச்சி.

எனவே இதழ்களின் திறனாய்வுகளின் நடுநிலையையும், வரவேற்பையும், தவறான எதிர்ப்பையும் பார்க்க முடிகின்றது.

* * *

# இயல் முப்பத்தொன்று

## தாய்த்தமிழ்ப்பள்ளிகள்

'ஆங்கில மோகம்' கொண்ட பெற்றோர்களின் மிகை ஆர்வத்தை முதலீடாகவும் 'பணம் அள்ள வேண்டும்' எனும் தங்கள் ஆசையைக் கையிருப்பாகவும் கொண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகளையும், மழலையர் பள்ளிகளையும் தொடங்கி நடத்தும் 'கல்வி வணிகர்கள்' ஒருபக்கம் மின்னல் வேகத்தில் இயங்க, அவர்களுடன் கைகோத்துக் கொண்டு சில அலுவலர்கள் அரங்கேற இந்தக் கூத்தை பின்னிருந்து இயக்கும் அரசியல் பெருமக்கள் இவற்றைக் கட்டுப் படுத்தும் எண்ணம் ஏதுமின்றி ஒரு நாளுக்கு இரண்டு பள்ளிகள் எனும் அளவில் இவை முளைக்கவும், தழைக்கவும் வழி வகுத்தார்கள்.

மறுபக்கம், 'இன்பத் தமிழ்க்கல்வி'க்கு இவர்களெல்லாம் புதைகுழி தோண்டுகிறார்களே எனும் கவலையோடும், தாய்த்தமிழை வளர்க்கவும் பேணவும் கடமைப்பட்ட தவப்புதல்வர்கள் தாங்கள் எனும் உணர்வோடு மாற்று வழிகளைச் சிந்தித்தார்கள் பலர்.

அப்படிச் சிந்தித்ததன் விளைவுதான் 'தாய்த்தமிழ்ப் பள்ளி'களின் தொடக்கம். 1993 இல் அருமை நண்பர் தியாகும் அம்பத்தூரில் முதல் பள்ளியைத் தொடங்கினார். சிறைச் சாலையில் நீண்டகாலம் இருந்தாக வேண்டும் எனும் கட்டாயத்துக்கு ஆளானவர். அங்கிருந்தபோதே கார்ல் மார்க்சின் 'மூலதனம்' நூலினைத் தமிழில் மொழிபெயர்த்து முடித்தவர்.

இன்று சிறை மீண்ட பறவை. எனினும் தன்னைத் தமிழ்ப் பணிக்குள் அடைத்துக் கொண்டவர். அந்தத் தியாகிதான் இந்தப்பள்ளியைத் தொடங்கியவர். இதன்பின் இவரது முயற்சியிலும் வேறு இடங்களிலும் வேறு சிலரது ஆர்வத்தாலும் தாய்த்தமிழ்ப் பள்ளிகள் உருவாகின.

1. அம்பத்தூர் (1993)
2. திருப்பூர் (1995)
3. கோபி (1997)
4. காவேரி நகர், மேட்டூர் அணை (1998)
5. புதுச்சாம்பள்ளி, மேட்டூர் அணை (1998)

6. கெஞ்சனூர் (பவானிசாகர்)
7. பல்லடம் (1998)
8. ஊஞ்சவேலம்பட்டி
9. செஞ்சி
10. தேக்கம் பட்டி (1999)
11. உடுமலைப்பேட்டை (1998)
12. கி. குப்புசாமி நகர். கோவை
13. நாச்சியார் கோவில்
14. மீனாட்சிபுரம், மதுரை (2)
15. குன்றத்தூர்
16. செக்கடிக்குப்பம்
17. சின்னதானக் குப்பம்
18. காரைக்கால்
19. தேவரிசி குப்பம் (குடியேற்றம்)
20. திசையன்விளை
21. பொன்னமராவதி
22. புலியூர் குறிச்சி
23. உவரி
24. பாறையூர் (இலத்தேரி)

இவற்றுக்குப் பின்னால் பல பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 30.6.2003 வரை உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 70.

1990 - 91 முதல் இயங்கி வரும் ‘பாவேந்தர் கல்விச் சோலை’ திண்டுக்கல் மேட்டுப்பட்டியில் உள்ளது.

சென்னை, திருவான்மியூரில் ‘திருவள்ளுவர் மழலையர் பள்ளி’ சிறப்புடன் இயங்கி வருகிறது.

தியாகு எங்களுக்கு ஒரு மடல் எழுதியிருந்தார் (8.8.98) அதில் ‘தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளி’களின் நோக்கத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

“தமிழ்நாட்டில் தமிழ்க் கல்வியும் தமிழ் வழிக் கல்வியும் புறக்கணிக்கப்படுகிற நிலைகண்டு, அதிலும் குறிப்பாக மழலையர் மற்றும் தொடக்க நிலையில் தாய்மொழி தமிழுக்குரிய இடத்தை அயல் மொழிகள் ஆங்கிலமும் இந்தியும் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தும் நிலை கண்டு, இதில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக ஆக்கப் பணிகள் செய்யும்

நோக்கத்துடன் நானும் என் நண்பர்கள் சிலரும் சேர்ந்து தாய்த் தமிழ் கல்விப் பணியைத் துவக்கினோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அவற்றின் நிலை குறித்தும் அவரே எழுதுகிறார்.

''மனித நேயத்தையும் சமூக உணர்வையும் அறிவியல் கண்ணோட்டத்தையும் கல்வியின் குறிக்கோள்களாகக் கொண்டு, வணிக நோக்கம் சிறிதுமின்றி இயங்கி வரும் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளிகள் மிகக் குறைந்த கல்விக் கட்டணமே தண்டுகின்றன. தமிழ் அன்பர்கள் மனமுவந்து அளிக்கிற நன்கொடைகளைக் கொண்டுதான் இப்பள்ளிகள் நிலைத்து நிற்கின்றன.''

எனவே ஆர்வத்தில் இப்பள்ளிகள் தொடங்கப்பட்டாலும் போதுமான இடவசதிபெறாமல் தடுமாறுகின்றன என்பதுதான் உண்மை. பெரும் விலை கொடுத்து இடம் வாங்கிட அவர்களால் இயலாது. காரணம், அவர்கள் தண்டும் 'குறைந்த கட்டணம்'. எனவே நோக்கம் உயரியதாக இருந்தும், உடனடியாக விரிவு படுத்த முடியாத தட்டுப்பாடு நிலை.

ஆனால் இந்தப் பள்ளிகள் பலவும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன என்பது கண்கூடு.

1997இல் நானே 'அமைச்சர்' எனும் முறையில் அம்பத்தூர்ப் பள்ளியில் கலந்த கொண்டு உரையாற்றி வாழ்த்தியிருக்கிறேன்.

பொதுவாகவே ஓர் இணைப்பில் வரும் இப்பள்ளிகளில் LKG மாணவர்களை 'மொட்டுகள்' என்றும், UKG மாணவர்களை 'மலர்கள்' என்றும், ஆசிரியரை 'அண்ணா' என்றும், ஆசிரியையை 'அக்கா' என்றும் அழைக்கின்றனர்.

குடியேற்றம் பகுதியில் 'தேவரிசி குப்பத்'தில் நடைபெறும் பள்ளி பற்றித் 'தினமணி' (13.5.97) ஒரு பாராட்டுரை வழங்கியுள்ளது.

''இந்த நர்சரிப் பள்ளியில் எல்.கே.ஜி., யு.கே.ஜி. படிக்கும் குழந்தைகள் புத்தகங்களைச் சுமந்து செல்ல வேண்டிய அவதியில்லை. பள்ளியில் சேருவதற்கு நுழைவுத் தேர்வு, நேர்முகத் தேர்வு எதுவும் கிடையாது என்பதும் இதன் சிறப்பு அம்சம்.

'சிசுவாடிகா' என்று அழைக்கப்படும் இந்த நர்சரிப் பள்ளியை வித்யாபாரதி அமைப்பு நடத்துகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி.யை 'அருணா'

என்றும் யு.கே.ஜி.யை 'உதயா' என்றும் அழைக்கின்றனர். மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளே இப்பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். வாரத்தில் ஒரு நாள் மட்டும் சீருடை, மற்ற தினங்களில் சீருடை கட்டாயமில்லை. வழக்கமாக நர்சரிப் பள்ளிகளில் உள்ளது போல சிறிய அறையில், இடநெருக்கடியில் வகுப்புகள் நடைபெறுவதில்லை. குழந்தைகளிடம் ஆசிரியர்கள் சிறப்பாகக் கவனம் செலுத்த ஏற்றவாறு 20-25 குழந்தைகளுக்கு ஓர் ஆசிரியர் உள்ளார். குழந்தைகளிடம் தாயன்புடன் பழகும் நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியைகள் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த வகுப்புகளுக்குப் புத்தகம், நோட்டு எதுவும் கொண்டு வர வேண்டியதில்லை. படிப்பது, எழுதுவது, வீட்டுப்பாடம், தேர்வுகள் என்பவை கிடையாது. பாட்டு, விளையாட்டு, கதை, சப்தமிடல், எளிய தேகப்பயிற்சி, கைகளுக்கு வேலை, நடனம் என்று குழந்தைகளுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயங்கள் மூலமாக அறிவூட்டப்படுகின்றன.

சுற்றுப்புறத் தூய்மை, தோட்டக்கலை போன்றவற்றில் குழந்தைகளை ஈடுபடுத்தும் போதே அது தொடர்பான பல்வேறு விஷயங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படுகின்றன. சிசுவாடிகாவில் இரண்டு ஆண்டுகள் படித்த பிறகு முதல் வகுப்பிலிருந்து மாணவர்களுக்கு முறையான கல்வி தொடங்குகிறது.

தாய்மொழிக் கல்வி அஸ்திவாரம் பலமாக இருந்தால் அறிவைத் தேடிக் கொள்வது எளிது. குழந்தைப் பருவத்தில் தாய்மொழியில்தான் கல்வி கற்றுத்தர வேண்டும் என்ற நோக்கத்தில் இப்பள்ளியைத் துவங்கியுள்ளோம். திசையன்விளை, பொன்னமராவதி, புலியூர்குறிச்சி, உவரி ஆகிய இடங்களிலும் இதுபோன்ற தமிழ் நர்சரிப் பள்ளிகளை வித்யா பாரதி அமைப்புத் தொடங்கியுள்ளது" என்கிறார். அதன் செயலாளர். இதே அமைப்பு மேலும் 4 இடங்களிலும் இதுபோன்ற பள்ளிகளை நடத்தி வருகிறது.

இது குறித்துச் சில கல்வியாளர்கள் குறிப்பிடுவதாக இதழ் சுட்டுவது இதுதான்.

"ஆனந்தமாக இருக்கவேண்டிய மழலைக் கல்வி அவலமாகியுள்ளது. சீராட்டப்படவேண்டிய வயதில் நமது மழலைகள் வகுப்பறை என்னும் சிறையில் வாடுகின்றனர். துள்ளிக் குதிக்கும் பருவத்தில் முதுகில் சுமை தூக்கி வாடுகின்றனர். தழைத்து வளர வேண்டிய மழலையர் களைத்துக் கவலையோடு உள்ளனர். இந்த விபரீதமான நிலைமையை மாற்றுவதற்கு நர்சரிக் கல்வி

முறையில் அடிப்படை மாற்றங்கள் வந்தாக வேண்டும்' என்கிறார்கள் கல்வியாளர்கள்.''

அடுத்து, பெரிதும் பாராட்டப்பட்ட பள்ளி திருப்பூர் தாய்த் தமிழ் தொடக்கப்பள்ளி. திருப்பூர் வேலைவாய்ப்பு வழங்குவதிலும், உள்ளாடை ஏற்றுமதியிலும் தமிழகத்திலேயே முன் நிற்பது என்பதை நாம் அறிவோம். அங்குள்ள இப்பள்ளியில் 400 மாணவர்கள். நம்ப முடியவில்லை. கூடுதலாக வந்த மாணவர்கட்கு 'இடமில்லை' என்று சொல்லித் திருப்பி அனுப்பவேண்டிய நிலை. இப்பள்ளிகள் குறித்துத் 'தினமணி' ஒரு கட்டுரை வெளியிட்டது. அதிலிருந்து சில பகுதிகள் :

''ஓலைச் சுவடிகளில் அடிஎடுத்து வைத்த தமிழ் மீண்டும் ஓலைக் கூரைக்குள் நுழைந்து புத்துயிர் பெற புறப்பட்டு உள்ளது. தூய தமிழில் பேசுவது அரிதாகி விட்ட இன்றைய கால கட்டத்தில் - கன்னித் தமிழை காப்பாற்ற - தமிழ் ஆர்வலர்கள் கடும் முயற்சியில் களம் புகுந்து உள்ளனர். திருப்பூரில் உள்ள தாய் தமிழ் பள்ளியில் தான் இந்த அருந்தவ முயற்சி ஆர்வமாக நடந்து வருகிறது.

பள்ளிக்கு வருபவர்களை 'வணக்கம் ஐயா' என்று இருகரம் கூப்பி வரவேற்கின்றனர். தமிழ்வழி கல்வி மூலம்... தரமான தேர்ச்சியும் - நம் பண்பாட்டுக்கு பாலம் அமைக்கும் முயற்சியும் அந்த பள்ளி மழலைகளின் அறிவு வளர்ச்சியில் இருந்து வெளிப்பட்டது.

ஆசிரியர்கள் பணத்துக்காக பணி புரியாமல் தமிழ் ஆர்வத்துடன் தங்களை அர்ப்பணித்து உள்ளனர். ஆசிரியர் - ஆசிரியைகள், குழந்தைகளை வாடி... போடி என்று வாடியமுகத்துடன் வார்த்தை அர்ச்சனை செய்வதில்லை வாங்க... போங்க என்று மரியாதையுடன் அழைத்து வருங்கால மன்னர்களுக்கு இப்போதே... முடிசூட்டி விடுகின்றனர். வயது வித்தியாசம் இருந்தாலும் வார்த்தை வித்தியாசம் பார்க்காமல் அழைக்கும் பாங்கு - தாய் தமிழ்ப்பள்ளியின் தாரக மந்திரம்.

இந்த பள்ளியில் விளையாட்டு கல்வி முறையில் பாடம் கற்று கொடுக்கப்படுகிறது. ஆடலும்... பாடலும் சொல்லி கொடுத்து பாடத்தில் ஒன்றிப் போகசெய்து விடுகின்றனர். குழந்தைகளின் விளையாட்டு உணர்வை கொண்டு விளையாட்டு பொருட்கள் மூலம் கணக்கு சொல்லி கொடுக்கப் படுகிறது.

தமிழ்... தமிழ் என்று மாணவர்கள் தலையில் பதிய வைத்தால்.... அடிப்படை ஆங்கில அறிவு இல்லாமல் மாணவர்களின் எதிர்காலம்... எப்படி

இருக்கும் என்று கேட்ட போது அதற்கு நிர்வாகி... தாய்பால்... கொடுக்க வேண்டிய நேரத்தில் குழந்தைகளுக்கு மாமிச உணவு கொடுக்க கூடாது தமிழில் பாலூட்டி.... தாலாட்டிய பிறகு 3-வது வகுப்பில் இருந்து குழந்தைகளுக்கு ஆங்கில பாடம் கற்று கொடுக்கிறோம்... என்று கூறினார்.

பள்ளி தலைமை ஆசிரியை சுபா கூறியதாவது:-

மற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எப்பொழுது மணி அடிப்பார்கள் வீட்டுக்கு போகலாம் என்று இருப்பார்கள் ஆனால்... எங்கள் பள்ளி குழந்தைகள் நாங்கள் போக சொன்னாலும் போவதில்லை. எங்களுடன் குழந்தைகள் படிப்பு பிணைப்பில் மட்டும் அல்ல பாசப்பிணைப்பிலும் ஒன்றி போய் விட்டார்கள். இந்த பள்ளியை கல்லூரி வரை கொண்டு செல்ல ஆசை, நாங்கள் சம்பளத்துக்காக நினைத்த வேலை பார்க்கவில்லை. தமிழ் மேல் உள்ள பற்றால் எங்களையே அர்ப்பணித்து விட்டோம் என்று கூறினார்.''

'கல்கி' குழு நேரில் சென்று பார்த்து இப்பள்ளியைப் பற்றி அருமையாக எழுதியுள்ளது. அவை:

அரசுப் பள்ளிகளில் கூட 'தமிழ் மொழி வழிக் கல்விக்கு வரவேற்பு மிகக் குறைவு' என முடிவு செய்து அவை LKG, UKG என ஆங்கில வழித் தடத்தில் போக முற்பட்டு விட்ட இக்கால கட்டத்தில், தமிழால் நெகிழ்த்துகின்றன. தாய்த் தமிழ்ப் பள்ளிகள்.... அதிலும் திருப்பூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் இந்த வருடம் சேர்க்கைக்கு இடம் இல்லை என பிள்ளைகளை திருப்பியனுப்பியதாகத் தகவல்!

'உங்க பேர் என்ன....?' என்று குழந்தையைக் கேட்டதும் அதன் பெயர் சொல்லி அதற்குத் தமிழ் அர்த்தமும் சொல்லுகிறது. உதாரணமாக 'சுந்தரராஜன்' என்றால் 'அழகிய அரசன்' என்று பொருளும் சொல்லுகிறது.

குழந்தைகளுக்கு முதலில் பாடலுடன் ஆடலும் சொல்லிக் கொடுத்து, தாங்கள் சொல்லிக் கொடுப்பதில் ஒன்றிப் போகச் செய்து விடுகின்றனர். பின்புதான் எழுத்து வடிவம் எல்லாம். முதலில் கோடு வடிவிலான எழுத்துக்களே அறிமுகம் செய்யப்படுகின்றன. உதாரணமாக 'ட', 'ப', 'ம' போன்ற எழுத்துக்களே... பிறகுதான வட்ட வடிவ எழுத்துக்கள்!

'தினம் ஒரு திருக்குறள்!' இங்கே பள்ளி துவங்கப்பட்ட கடந்த நான்கு ஆண்டுகளாகவே நடைமுறையில் உள்ளதாம். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு அதிகாரம் பிரித்துக் கொடுக்கப் பட்டு விடுகிறது. பத்துக் குறள்களையும் அத்தனை குழந்தைகளும் பாடி பொழிப்புரையும் சொல்லித் தேர்ந்த பிறகு அடுத்த அதிகாரத்திற்குச் செல்கிறார்களாம்.

கணக்கு சொல்லிக் கொடுப்பதில்கூட எண்முறை இரண்டாம் பட்சம்தான். குழந்தைகளின் விளையாட்டு உணர்வைக் கொண்டு மணிச்சட்டங்கள், பாசிகள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் மூலமாய் சொல்லிக் கொடுக்கின்றனர். விஞ்ஞானத் தகவல்களைக் கூட பாடல் வழியே சொல்லி விளக்குகின்றனர். 'சுறவம்', 'கும்பம்', 'மேழம்' என தமிழ் மாதங்கள். அரசு பாடத் திட்டத்திலிருந்து விதி விலக்காய் காரிக்கிழமை (சனிக்கிழமை) அறிவன் (புதன்) கிழமை என்றெல்லாம் தமிழ்ப்பதங்களை உபயோகப் படுத்தி தமிழ் எண்களையும், புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கித் தருகின்றனராம் ஆசிரியர்கள். பென்சில் - கரிக்குச்சி, பால் பாயிண்ட் பேனா - உருள்முனைத் தூவல்!

"ஆங்கிலப் பாடத்திற்கு நாங்கள் எதிரிகளல்ல. அதற்காக தாய்ப்பால் கொடுக்க வேண்டிய தருணத்தில் யாராவது மாமிச உணவைத் தருவார்களா? அதனாலேயே தமிழால் பாலூட்டி, தாலாட்டி பிறகு மூன்றாம் வகுப்பில் துவங்கி ஆங்கிலத்தைத் தருகிறோம். அதைக்கூட பாடல் வடிவில் தெளிந்த தமிழ் விளக்கமளித்து!"

"அரசிடமிருந்து நாங்கள் எந்த உதவியும் பெறவில்லை. கேட்கவில்லை. தமிழுக்குக் கேட்டுப் பெறுவதில் எங்களுக்கு உடன்பாடில்லை. தமிழன்னைக்கு அவர்களாகப் பார்த்து ஏதாவது செய்தால்தான் உண்டு..? என்று நிர்வாகி சொன்னாலும் அவர் முகத்தில் ஓர் எதிர்பார்ப்பு இருக்கவே செய்கிறது. குழந்தைகள் மாதந்தோறும் கொடுக்கும் கல்விக் கட்டணமான 35-40-45 ரூபாய்களில்தான் பள்ளி சிரமப்பட்டு நடக்கிறதாம்.

"தமிழ் அரசாங்கம் தமிழனோட அரசாங்கம். அப்படியென்றால் இதற்கு உடனடியாக ஏதாவது செய்திருக்க வேண்டும். அரசு விதிப்படி இதற்கு ஏதும் கொடுக்கவழியில்லை யென்றால் முதலமைச்சர் தம் நிவாரண நிதியிலிருந்து ஏதும் தரலாமே... அவங்களைக் கூட விடுங்க. தமிழால் வாழுகிற நம் இலக்கியவாதி களுக்கு தமிழ் உணர்வு இருக்கான்னுதான் எனக்கே சந்தேகமா இருக்கு!" என்கிறார் கோவை ஞானி.

இப்பள்ளி இருப்பதோ வாடகை இடத்தில், ஒலைக் கூரையில், ஆசிரியர்களின் எளிய வாழ்க்கையில்! அப்புறம் அங்கீகாரம் எப்படிக் கிடைக்கும்....?

இங்கே 14 ஆசிரியைகள். அனைவரும் இளம் வயதினர்.

"இப்போதைக்கு ஒரு நிழல் போலத்தான் எண்ணி இங்கே வந்தோம். சம்பளம் கருதினால் சம்மதமில்லை. ஆனால் இந்தக் குழந்தைகளோடு....

தாய்த் தமிழோடு எங்களை அறியாமல் ஒன்றிப் போய் விட்டோம்.... இனிப் பிரிவதும் - பிரிப்பதும் எண்ணிப் பார்க்கவே இயலாது'' என்று ஒருமித்துக் கூறியது போலியான வார்த்தையல்ல; உணர்வுப்பூர்வமான வார்த்தை!''

இவற்றையெல்லாம் நான் எடுத்துக்காட்டக் காரணமே குறை தமிழில் இல்லை. நமது அமைப்பு முறையில் சமுதாய ஒழுங்கின்மையில் அடங்கி இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகத்தான்.

மேலும் இப்பள்ளி குறித்து, அதன் மேலாண்மையர் தங்கராசு தந்த நேர்காணலிலிருந்து சில பகுதிகள்.

"தமிழ் மீது பற்றுக்கொண்ட 13 பேர் கொண்ட பணிக்குழு அமைத்துள்ளோம். சென்னையில் உள்ள தாய்த் தமிழ்ப்பணி அறக்கட்டளையோடு இப்பள்ளியை இணைத்துள்ளோம். இப்பள்ளியின் நோக்கம் தாய்மொழிக் கல்வியே ஆகும். மழலையிலிருந்து படிப்படியாகத் தொடங்கி மருத்துவம் வரை அனைத்துத் துறைகளிலும் தாய்மொழிக் கல்வியைக் கொண்டு வருவதே எங்கள் நோக்கமாகும்.

கட்டாயமாக பாடங்களை மண்டையில் திணிக்கும் ஆங்கிலக் கல்வி முறை குமாஸ்தாக்களை மட்டுமே உருவாக்க முடியும். சுயமாக சிந்திக்கிற சமூகப் பிரஜைகளை உருவாக்க அந்தக் கல்வி பயன்படாது. அதனால் தான் நாங்கள் குழந்தைகளின் குடும்பம். புரிந்துகொள்ளும் திறன். தகுதி, சிந்தனை முறை போன்றவற்றை தெரிந்துகொண்டு அதற்கேற்றபடி அளவான கல்வியை மட்டுமே தருகிறோம். அவர்களின் சக்திக்கு மீறிய பாடங்களைத் திணித்து அஜீரணத்தை உருவாக்குவதில்லை.

*ஒரு ஆங்கிலப்பள்ளியில் படிக்கும் மாணவன் மூன்றாம் வகுப்பு வரும்போதே குறிப்பிட்ட தேர்ச்சியைப் பெற்றுவிடுகிறான். உங்கள் பள்ளி மாணவர்கள் தாய்மொழிக் கல்வி முறையைப் படிக்கும் பொழுது பிற மொழிகளைக் கற்றுக் கொள்வதில் தடை இருக்காதா? பிற குழந்தைகளுடன் தன்னை ஒப்பிட்டுக் கொண்டு தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்காதா?*

இல்லை. இல்லை. தாய்த் தமிழ்ப் பள்ளிக் குழந்தை இரண்டாம் வகுப்பில் படிக்கும் போதே தாய் மொழியில் உள்ள அனைத்து விஷயங்களையும் கற்றுக்கொண்டு விடுகிறது. ஆங்கிலப் பள்ளிகளில் வேப்ப மரத்திற்கு "Neem Tree" என்று சொல்லித் தருவார்கள் ஆங்கிலப் பள்ளிக் குழந்தைகளுக்கு Neem Tree என்று படிக்கத் தெரியுமே ஒழிய தன் வீட்டு வாசலில் நிற்கும் வேப்பமரம் தான் Neem Tree என்று தெரியாது. ஆனால் நாங்கள் வேப்ப

மரத்தைக் காட்டியே பாடம் சொல்லித் தருகிறோம். இது தான் வேப்ப மரம் இதன் பயன்கள் இவை இவை என்று. இதன் பின் அந்தக் குழந்தை Neem Tree என்று ஆங்கிலத்தில் படிக்கும்போது அந்தக் குழந்தைக்கு அதைப்பற்றி கூடுதலான அறிவு இருக்கும். ஆகவே, எதையும் தன் மண்ணின் மொழியில் கற்றுத் தேர்வதின் மூலம் பிற மொழியைக் கற்றுத் தேர்வது எளிதாகிறது. மேலும் கூடுதலான கற்றுக் கொள்ளும் திறனும் உருவாகிறது. எனவே இதில் தாழ்வு மனப் பான்மைக்கு இடம் இல்லை. இன்னும் சொல்லப் போனால் எங்கள் பள்ளியில் கற்று உயரும் ஒரு மாணவன் 8-ம் வகுப்பில் படிக்கும் போதே 10-ம் வகுப்பு தேர்வு எழுதும் அளவு தகுதி பெற்றுவிடுவான். எங்கள் பள்ளியின் இரண்டாம் வகுப்பு குழந்தை பிற பள்ளியின் நான்காம் வகுப்புக்குச் சமமான கல்வித் திறனைக் கொண்டிருக்கிறது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். இதை நீங்கள் நேரில் வந்து பார்த்துக் கூடத் தெரிந்து கொள்ளலாம்.

*உங்கள் பள்ளிக்கு பெற்றோர் ஆதரவு எப்படி இருக்கிறது?*

தொடக்கத்தில் சிறிது அச்சமாகத்தான் இருந்தது. பெற்றோர்கள் எந்தமாதிரி ஆதரவு தருவார்கள் குழந்தைகளை அனுப்புவார்களா? என்ற கேள்விகள் இருந்தன. ஆனாலும் எங்களுக்குத் தெம்பூட்டும் வகையில் முதலாண்டிலேயே 70 குழந்தைகள் சேர்ந்தனர்.

*உங்கள் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா?*

நிச்சயமாக வழங்கும் அந்நிய மொழியான ஆங்கிலப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் தரும்பொழுது, தாய்மொழிப் பள்ளிக்கு தரமாட்டார்களா? அங்கீகாரம் பெறுவதற்கு பள்ளிக்கு சொந்த இடம் வேண்டும். இடம் வாங்குவதற்கான முயற்சியில் இருக்கிறோம். பள்ளியில் ஐந்தாம் வகுப்பு தொடங்குவதற்குள் இடம் வாங்கப்பட்டுவிடும். இதற்காக நிறைய புரவலர்களையும். தமிழ் ஆர்வலர்களையும் அணுகியுள்ளோம். பள்ளி நடத்த ஏற்கனவே பலர் உதவி வருகின்றனர். இந்த வகையிலும் உதவுவார்கள்.

நமது பழைய வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் கூட சுலபமாகப் புரியும். தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் கோபுர உச்சியின் நிழல் நிலத்தில் விழாத மாதிரி அந்த கோபுரத்தை அமைத்திருக்கிறார்கள். அந்த சாதனைக்கு அவர்கள் பிற மொழி அறிவை எதிர்பார்க்கவில்லை. இதுமாதிரி பல உதாரணங்கள் உண்டு.

இதனால் ஆங்கிலத்தைப் புறக்கணிக்கவேண்டும் என்று நாங்கள் முரட்டுத்தனமாக சொல்கிறோம் என்று முடிவு செய்துவிடக் கூடாது. குழந்தைகளுக்கு உடனடியாக ஏன் ஆங்கிலக் கல்வியைத் தரக்கூடாது

என்றால், ஒரு குழந்தைக்கு எடுத்தவுடன் மாமிச உணவைக் கொடுக்க முடியாது. முதலில் தாய்ப்பால் தான் தரவேண்டும். எடுத்தவுடன் மாமிச உணவைக் கொடுத்தால் அது செரிக்காததோடு உடல் நலத்தையும் கெடுத்துவிடும். அது போலத்தான் அதற்கு தாய்மொழிக் கல்வியைக் கொடுத்து ஆரோக்கியப்படுத்திய பிறகு பிற மொழிக் கல்வியைத் தரும்போது குழந்தைக்குச் சுலபமாக இருக்கும். பிற மொழியை ஜீரணித்துக் கொண்டு உள்வாங்கும் சக்தியை தாய்மொழிக் கல்வி தருகிறது.''

இப்பள்ளிகளுக்கு முறையான ஏற்புக் கிடைத்து, அரசின் உதவியும் இருக்குமானால் இவை எங்கேயோ போய்விடும் என்று கருதுகிறேன்.

கோவையில் இயங்கும் 'வித்யா விகாசினி நிறுவனங்களில் எங்கள் அறிவிப்புகளைப் பார்த்து மகிழ்ந்து வரவேற்றிருந்தது. பிள்ளைகட்கான எளிய நூலினை வெளியிட்டிருப்பதையும் பார்த்து மகிழ்ந்தோம்'. ஆனால் அந்த நிறுவனம் வெளியிட்ட பாடங்கள் தாய்த் தமிழ்ப் பள்ளிகட்குப் பொருத்தமானவை அல்ல. நல்ல தமிழில், குழந்தைகட்கான எளிய பாடல்கள் நூற்றுக் கணக்கில் வெளியாகியிருக்கும் போது இவர்கள் வெளியிட்ட பாடல்களை ஏற்க இயலாது.

'ஊர்திகள் எனும் தலைப்பில் வந்தவை இவை.

''டிரைவர் ஓட்ட நான் அதில் அமர்ந்தேன்
சைக்கிள் குறுக்கே வருகுது
மோட்டார் உடனே நிக்குது
பெட்ரோல் ரொம்பக் குடிக்குது''

''பஸ் பஸ் பஸ்
எங்கள் பள்ளி பஸ்
நடுத்துநர் சொல்வார் ரைட்
ஓட்டுநர் சொல்வார் குர்''

''ஸ்டேஷனில் நிற்கும் ரயில் வண்டி''

வருங்காலத்தில் இவற்றைச் செம்மைப்படுத்தி அவர்கள் வெளியிட வேண்டும்.

தாய்த் தமிழ்த் தொடக்கப் பள்ளியினர் அதிலும் குறிப்பாக தியாகு போன்ற அன்பர்கள் அரசிடம் சில கோரிக்கைகளை வைத்தனர்.

அவர்கள் வேண்டுகோள் இது:

"தாய்த் தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் மிகப் பெரும்பாலும் சமூகத்தின் அடித்தட்டிலிருந்து வருகிறார்கள். கல்விக் கட்டணம் குறைவு என்பதால் ஆசிரியர்களுக்குத் தரப்படும் ஊதியமும் குறைவுதான்.

தாய்த்தமிழ்க் கல்விப் பணியின் இந்த முயற்சிக்குத் தங்கள் அரசு எல்லா வகையிலும் துணை நிற்க வேண்டுகிறோம். இவ்வாறு,

1. தாய்த் தமிழ்ப் பள்ளிகள் அனைத்துக்கும் உடனே அரசு அங்கீகாரம் வழங்கிடவும்,
2. தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு இடம் ஒதுக்கித் தந்து, கட்டடம் கட்ட உதவி செய்யவும்,
3. தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுதுபொருட்கள் அரசே இலவசமாகத் தரவும்,
4. தாய்த்தமிழ்க் கல்விப் பணியின் செயற்பாடுகளுக்கு உதவித் தொகை வழங்கவும். . .

ஆணையிட்டுதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்."

முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி பயிற்றுமொழியாக இருக்கும் என்று அரசு ஆணை பிறப்பித்த அதே வேளையில் தமிழ்ப் பள்ளிகளை மேலும் ஊக்குவிக்கவும் அரசு சில அறிவிப்புகளை ஆணையாகத் தெரிவித்தது.

எனவே இந்த அறிவிப்பு தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளிகட்கு ஒரு வாய்ப்பினை, உயர்வினை அளிக்கும் என்று நம்புகிறோம்.

ஒரு பக்கம் தாய்த்தமிழ்ப் பள்ளிகட்குச் சலுகைகள்; மற்றொரு பக்கம் ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களையும் தமிழ்வழியில் படித்தாகவேண்டும் எனும் ஆணை.

எல்லாம் சரிதான்! இப்போதாவது செய்தோமே என்று பெருமைப்படமுடியாது.

ஆனால் யார்யாரோ போட்ட அரசாணைகள் தமிழ் வகுப்புகளை எந்த அளவுக்குப் பாதித்திருக்கின்றன என்பதையும் பார்க்க வேண்டும்.

1963ஆம் ஆண்டில் கல்வி அமைச்சர் பொறுப்பில் இருந்த பக்தவத்சலம் - உயர் நிலைப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் ஒரு பிரிவு ஆங்கில வழியில் அமையலாம் என்ற ஆணை பிறப்பித்தார்.

1967இல் ஆட்சிக்கு வந்த திராவிட இயக்கத்தின் கல்வி அமைச்சர் இந்த ஆணையை நீக்கி இருக்கவேண்டும். கண்டு கொள்ளாமலேயே வளரவிட்டார்கள். இது போதாதென்று, 1989இல் கல்வி அமைச்சராக இருந்த க. அன்பழகன் ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட ஆங்கிலப் பிரிவுகளைத் தொடங்கி நடத்தலாம் என்று ஆணை பிறப்பித்தார். அரசு பள்ளிகளில் இந்த அவல நிலையை உண்டாக்கிய பெருமை பக்தவத்சலத்துக்கும் அன்பழகனுக்கும் உண்டு.

தமிழக அரசு இத்தகைய பள்ளிகளுக்கு இயன்ற வரை சலுகைகளை அறிவித்தது. முதல்வர் அறிவிப்பைக் கவனியுங்கள்.

## பாடப்புத்தகம் இலவசமாக தரப்படும் தமிழ்மொழி வழியில் இயங்கும் மழலையர் பள்ளிகளுக்கு சலுகை கருணாநிதி அறிவிப்பு

தமிழ் வழியில் இயங்கும் மழலையர் பள்ளிகளுக்கு பாடப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும் என்று கருணாநிதி அறிவித்து உள்ளார்.

16-ந் தேதி (நேற்று) என்னுடைய முன்னிலையில் கல்வித் துறை அமைச்சர் அன்பழகன், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் மற்றும் அதிகாரிகள் கலந்துபேசி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் குறித்து பின்வரும் முடிவுகளை எடுத்து அறிவிக்கப்படுகின்றது.

### தமிழ் வழியில் கற்பிக்க வேண்டும்

தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரும் பள்ளிகளுக்குத் தான் ஏற்பளிக்கப்படும். அடுத்த கல்வி ஆண்டு முதல் (1999 - 2000) பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ்வழியில் கற்பிக்க வேண்டும். தமிழ்மொழி வழியில் பல மழலையர் பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றிற்குப் பின்வருமாறு சலுகைகள் வழங்கப்படும். ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படும். இப்பள்ளிகளுக்கு அரசின் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும்.''

வருங்காலத்திலாவது இப்பள்ளிகட்கான இடர்களை நீங்கி, மேலோங்கிய கல்வி நிறுவனங்களாக இவை வளர்ந்தோங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

# இயல் முப்பத்திரண்டு

## தமிழ்வழிக் கல்வி - அரசின் நிலை

தி.மு.க. தேர்தல் அறிக்கை 1996 தேர்தலுக்காக முன்வைக்கப்பட்ட போது பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''தமிழகத்தில் கல்வி பயிலும் அனைவரும் மழலையர் பள்ளி முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழை ஒரு பாடமாகப் படிக்குமாறு வலியுறுத்தப்படும். மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதிக்காமல் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழுக்கு முதலிடம் அமையுமாறு கல்வித் திட்டம் வகுக்கப்படும்.''

அந்த அடிப்படையில் தேர்தல் உறுதிமொழியினை மறவாது செயற்படுத்தும் முறையில் மாண்புமிகு முதல்வர் 97-98க்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவித்தார்.

''ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாக (Part I) தமிழ் கட்டாயப் பாடமாகவும், 2ஆவது பாகமாக (Part II) ஆங்கில கட்டாயப் பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய் மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழிவகை செய்யப்படும். இதனால் சிறுபான்மையரது மொழி நலம் காக்கப்படுவதுடன் தமிழைப் படிக்காமலேயே தமிழ்நாட்டில் ஒருவர் பட்டம் பெற முடியும் எனும் நிலையும் நீங்கும்.

இதைப் பலரும் வரவேற்றனர்.

தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில்தான் இந்த அறிவிப்புச் செய்யப்பட்டது. இப்போதும், 'தமிழ்வழிக் கல்வி' என்பது வரவில்லை. மேலும், 'மொழிச்சிறுபான்மையினர் தமிழ் படிக்க விரும்பினால்' என்பதன் விரிவினைத் தனியாக ஒரு கட்டுரையில் காண்போம்.

'மெல்லத் தமிழ் இனி வாழும்' எனும் தலைப்பில் ''மார்ச்சு 12-18, 97 தமிழன் எக்ஸ்பிரஸ்'' இதழ் ஆசிரியவுரையில் (Editorial) பின்வருமாறு எழுதியது:

''பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பு வரை தமிழ்மொழி கட்டாயப் பாடமாக்கப் பட்டுள்ளது. இந்த உத்தரவை தாய்மொழியை நேசிக்கும் தமிழர்கள் அனைவரும் உளமார வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மொழிப்பற்று என்பது வேறு. மொழி வெறி என்பது வேறு. இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவு, தமிழ்நாட்டில்தான் தாய் மொழியில் பேசுவது இரண்டாம் தமரமாகக் கருதப்படுகிறது. தாங்கள் பெற்ற பிள்ளைகள் பாரதி பாடலைப் பாடுவதைவிட, 'பாபா பாபா பிளாக் ஷீப்' பாடுவதையே தமிழ்த்தாய்கள் விரும்புகிறார்கள்.

இந்த நாட்டில் பல வேறு மொழிகள் பேசப்படுவதாலும், உலகத் தரத்துக்கு கல்வியறிவு உயரவேண்டிய அவசியத்தாலும் ஆங்கிலம் படிப்பதற்கு யாரும் தடை சொல்லப் போவதில்லை.

ஆனால், தமிழ் தெரியாமலிருப்பதே கௌரவம் என்னும் அர்த்தமற்ற அழுத்தம் இங்கே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதே நிலை நீடித்தால், 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்ற கொடுமை நிகழ்ந்துவிடும். அப்படியொரு அவல நிலை வந்தால் இடைப்பட்ட காலத்தில் சொந்த மண் இன்றி அலைந்த யூதர்களைப்போல், மொழியின்றி அலையும் கூட்டமாகத் தமிழர்கள் மாறிவிடும் அபாயம் உண்டு. தாய்மொழி தெரியாத மனிதன் முழு மனிதன் அல்ல.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, ஐந்தாவது வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கியிருக்கிறார் முதல்வர். ஏற்கனவே ஒரு தலைமுறை, 'நர்சரி' கலாசாரத்தால் தமிழைத் தள்ளிவைத்துவிட்டது. இனியும் அது நிகழாதிருக்க வேண்டும்.

தான் இட்ட உத்தரவு சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதையும் கண்காணித்து, 'முத்தமிழ் அறிஞர்' என்று அழைக்கப்படுவதைத் தக்க வைத்துக் கொள்வார் முதல்வர் என்று எதிர்பார்க்கிறோம்'' என்று எழுதியது அந்த இதழ்.

அறிவிப்பினை வரவேற்றுள்ள இதழில் நறுக்குத் தெறித்தாற் போன்ற ஒரு வரி: ''ஒரு தலைமுறை, 'நர்சரி' கலாசாரத்தால் தமிழைத் தள்ளி வைத்து விட்டது: இனியும் அது நிகழாதிருக்க வேண்டும்''

**24.4.98** அன்று தமிழ் அமைப்புகள் பல ஒன்றாக இணைந்து அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சிமொழி, பயிற்றுமொழி ஆக்கக் கோரிப் போராட்டம் நடத்தின. அதில், அவர்கள் 10 கோரிக்கைகளை முன்வைத்தனர்.

''முதலாவது அமைந்தது,

ஆங்கில மழலையர் பள்ளி உள்பட ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்மொழி மட்டுமே பயிற்று மொழியாகவும், பாடமொழியாகவும் அமைந்திடல் வேண்டும்''. என்பதுதான்.

'வெளியிலிருந்து தமிழ் அறிஞர்களிடமிருந்து தொடர்ந்து வற்புறுத்தல்கள் தொடர்கின்றன.

பேரணி ஒன்றை நடத்திய தமிழ் மேம்பாட்டுக் கூட்டமைப்பு பின்கண்டவாறு வற்புறுத்துகிறது.

'முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மொழி மட்டுமே பயிற்று மொழியாகவும் பாட மொழியாகவும் இருந்திடல் வேண்டும். பாலர் பள்ளி முதல் பல்கலைப்பட்டப் படிப்பு வரை தமிழே பயிலாமல் தமிழ் நாட்டில் பட்டப்படிப்பு வரை பயிலலாம் என்ற நிலையை நீக்க, தமிழைக் கட்டாயப் பாடமாகக் கற்க அரசு ஆணை வழங்குக.

தமிழாசிரியர்கள், தமிழ்ச் சான்றோர் பேரவை, தமிழறிந்திருப்போர் பலரும் இதை வற்புறுத்திய பிறகும், ஆளுங்கட்சியின் கொள்கையானது சட்டமன்றத்தில் முறையாக அறிவிக்கப்பட்டும் இது செயற்படுத்தப்படவில்லை.

தமிழகத்தில் வரும் வருமானம் 15,000 கோடி என்றால் அதில் 3,600 கோடி வரை கல்வித்துறைக் காகவே செலவிடப்படுகிறது. கி.பி. 2000த்தில் ஒதுக்கீடு 4949 கோடியாகும். 36,000-க்கும் மேற்பட்ட தொடக்கப்பள்ளிகள் நேரடியாக அரசின் பொறுப்பில் இயங்குகின்றன. எனினும் தமிழகமெங்கும், சில நேரங்களில் பட்டி தொட்டிகளிலும் மழலையர் பள்ளிகள் (Nursery Schools) முளைத்துள்ளன. இவை அனைத்தும் ஆங்கில வழியில் இயங்குவதும், 'மம்மி டாடி' பண்பாட்டை வளர்ப்பதும், தமிழை ஒரு பாடமாகக் கூடப் படிப்பதில்லை எனும் நிலையில் இயங்குவதும் கண்கூடான உண்மையாகும்.

என்றும் வேறு வகையில் தமிழக அரசு இவற்றை ஒழுங்குபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டது. அனைத்து மழலையர் பள்ளிகளும் பதிவு செய்யப்பட வேண்டும், அவை ''தமிழை முதன்மொழியாகக் கற்பிப்பதற்கான'' சான்றினைத் தரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் அகவையில் தாய்மொழியில் கற்பிப்பதன் சிறப்பினை விளக்கி, படிப்படியாகத் தாய்மொழியில் கற்பிப்பதற்கு மாற்றிக்கொள்ளுமாறு அப்பள்ளிகளுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. கவனியுங்கள்,

“வேண்டுகோள்” தான் விடப்பட்டுள்ளது. 28.8.1997 ஆம் நாளைய பள்ளிக் கல்வித்துறையின் மடல் இந்த வேண்டுகோள்தான்.

மேலும், பகுதி 3-ல் கற்பிக்கப்படும் விருப்பப் பாடங்களைத் தமிழில் கற்க மழலையர்களுக்கு ஊக்கம் அளிக்கவும், படிப்படியாகத் தமிழ் வழிப் பாடங்களை அறிமுகப்படுத்தவும் நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இங்கும் கவனியுங்கள். ‘அறிவுரைதான்’ வழங்கப்பட்டுள்ளது.

13.5.96 இல் ஆட்சிக்கு வந்த அரசு அதாவது கல்வித்துறை 1998 அக்டோபர் வரை எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இந்தத் திட்டங்களை ஒட்டி எந்த அரசாணையும் பிறப்பிக்கவில்லை.

இது, பள்ளிக் கல்வித் துறையின் நிலை.

இதுவரை 2,100 மழலையர் பள்ளிகள்தான் முறைப்படி பதிவு பெற்று இயங்குகின்றன. இன்னும் பல ஆயிரம் பள்ளிகள் அரசு ஏற்புப் பெறாமல் இயங்குகின்றன. இவை 20000 வரை இருக்கக் கூடும் என்பதே உண்மை.

எனவே, இவற்றை ஒழுங்கு செய்ய வேண்டியதும் அனைத்துப் பள்ளிகளும் தமிழை ஒரு பாடமாகப் பயில்வதை உறுதி செய்ய வேண்டியதும் கட்டாயத் தேவையாகின்றன. மேலும், மூன்றாம் பாகப் பாடங்களைத் தமிழ் வழியில் பயில்வதும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

இளங்கலை, முதுகலை வரையில் கூட இவை தமிழில் கற்றுக் கொடுக்கப்படும்போது தொடக்கப் பள்ளிகளில் இந்த வாய்ப்பு மறுக்கப்படுவது நமது மொழிக் கொள்கைக்கு எதிரானதாகும். அரசினர் கல்லூரிகளில் பி.எசி. பட்ட வகுப்புகள் அனைத்தும் தமிழ் வழியில் சொல்லித் தரப்படுகின்றன என்பதை உணரவும்.

இப்போது மழலையர் பள்ளிகளில் தமிழ் பெறு.ம் இடம் எவ்வளவு என்பதைக் குறிப்பிடலாம்.

வாரத்தில் 5 நாளும் சனிக்கிழமை அரை நாளும் பள்ளி நடைபெறுகிறது.

ஒரு நாளைக்கு ஏழு என்ற முறையில் 35 பிரிவேளைகள் (Periods)
சனிக்கிழமை 4 பிரிவேளைகள்

ஆகமொத்தம் 39 பிரிவேளைகள் நடைபெறும்.

ஒரு மழலையர் பள்ளியில்,

| | | | |
|---|---|---|---|
| முன்மழலையர் வகுப்பில் | (LKG) | 12/39 | பிரிவேளைகளும் |
| முதிர்மழலையர் வகுப்பில் | (UKG) | 12/39 | ,, |
| முதல் வகுப்பில் | (1st Std) | 9/39 | ,, |
| இரண்டாம் வகுப்பில் | (2nd Std) | 9/39 | ,, |

தமிழுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. மீதி அனைத்தும் ஆங்கில வழியில்.

எனவே, வேண்டுகோள் விடுவதைத் தவிர்த்து பின்வருமாறு கட்டாய ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

1. தமிழ் ஒரு பாடமாகச் சொல்லித்தரப்படும் பள்ளிகட்குத்தான் ஏற்பளிக்கப்படும்.

2. பள்ளி வளாகத்துக்குள் தமிழில் பேசினால் தண்டனை எனும் நிலை தோன்றுமானால் அந்தப் பள்ளிக்குரிய ஏற்பு (அங்கீகாரம்) உடனே விலக்கிக் கொள்ளப்படும். இந்த இடத்தில் ஒரு பள்ளியில் பொதுவான விதிமுறைகள் (General Rules) எனும் தலைப்பில் ''உரையாடல்'' என்று துணைத் தலைப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதை அப்படியே தருகிறேன்.

"It is absolutely imperative that only English should be spoken at all times inside the campus as it is presumed that those with Tamil as their second language have sufficient practice in speaking the language at home and hence requires no practice to speak in inside the school campus."

இரண்டாவது மொழியாகவுள்ள தமிழை மாணவர்கள் வீட்டில் பேசிப் பழக வாய்ப்பிருப்பதால் பள்ளி வளாகத்தினுள் எல்லா நேரங்களிலும் ஆங்கிலத்தில் மட்டுமே பேசவேண்டும் என்று அழுத்தமாக வற்புறுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

3. தமிழ் மொழி வழியில் பல மழலையர் பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றுக்குப் பின்வருமாறு சலுகைகள் வழங்கப்படலாம்:-

(அ) ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படலாம்.

(ஆ) கழிப்பறை, குடிநீர் வசதிகள் கட்டாயம் - ஓரளவுக்கு வசதியுள்ள வகுப்பறைகள் இருந்தால் ஏற்பு வாங்கலாம்.

(இ) இப்பள்ளிகட்கும் அரசின் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படலாம்.

4. ''அரசு ஒப்புதல் பெறாமல் இயங்கும் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் மேல் படிப்பிற்காக வருகிற கல்வியாண்டு (1998-99) முதல் சேர அனுமதிக்கப்பட மாட்டார்கள்'' என்று தொடக்கக் கல்வி இயக்குநர் இரா.நாராயணசாமி ஓர் அறிக்கையில் கூறியுள்ளார். இதனைக் கடுமையாகக் கடைப்பிடிக்கலாம்.

5. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும் என்றும், தாய்மொழி தமிழ் அல்லாத மாணவர்கள் அவர்கள் தாய்மொழியில் பயில விருப்பம் தெரிவிக்கும் நிலையில் இரண்டாவது மொழியாகத் தாய்மொழியும், கட்டாயக் கூடுதல் மொழியாகத் தமிழும் இருத்தல் வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. ஆனால், இது ஏன் செயற்படுத்தப்படவில்லை என்று தெரியவில்லை.

7. மழலையர் பள்ளிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றால் ஏழாம் வகுப்பு வரை எவர் வேண்டுமானாலும் எந்தப் பள்ளியிலும் படித்துச் சான்றிதழ் பெறலாம் என்ற நிலையுள்ளது. அந்த விதிவிலக்கை எடுத்துவிட்டாலே அனைவரும் சரியாக வந்துவிடுவார்கள். அல்லது அனைவரும் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்கத் தொடங்கிவிடுவர்.

இந்த வேண்டுகோளை எத்தனை பேர் ஏற்றார்கள்? 'அறிவுரை'யை எத்தனைபேர் கேட்டுக் கொண்டார்கள்?

2.12.97இல் வெளிவந்த மடல் இது.

பொருள்: ஆங்கில வழி - மழலையர் மற்றும் துவக்கப் பள்ளிகளில் (நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள்) தாய்மொழியில் பாடம் கற்பிக்க அறிவுரை வழங்கிய தகவல் பணிந்தனுப்புதல் - சார்பாக.

பார்வை 1ல் காணும் அரசுக் கடிதத்திற்கிணங்க, மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகளில் தாய்மொழிப் பாடம் கற்பிப்பதின் சிறப்பினை விளக்கியும் மற்றும் போதனா முறையைத் தாய்மொழி மூலம் கற்பிப்பதற்கு படிப்படியாக மாற்றிக் கொள்ளும் வகையில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, தமிழகத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட அனைத்து மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகளின் நிர்வாகிகளுக்கு சுற்றறிக்கை இவ்வலுவலக

செயல்முறைகள் ந.க.எண்.35483/தொகஅ1/97, நாள் 22.9.97ன் படி அனுப்பட்டுள்ளது என்ற தகவலைப் பனிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுதி 3ல் கற்பிக்கப்படும் விருப்பப் பாடங்களை தமிழில் கற்க மழலையர்களுக்கு ஊக்கம் அளிக்கவும், படிப்படியாக தமிழ் வழிப்பாடங்களை (Subject in Tamil Medium under Part III) அறிமுகப்படுத்தவும் மழலையர் பள்ளி நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்குமாறு மாவட்டத் தொடக்க கல்வி அலுவலர்களை இவ்வலுவலர் செயல்முறைகள் ந.க.எண்.35483/தொகஅ1/97, நாள் 26.11.97ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது)

மேலும் அந்தந்த ஆளுகைக்குள் உள்ள மழலையர் பள்ளிகளை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நேரில் பார்வையிட்டு மழலையர் தாய்மொழியாகிய தமிழில் கற்பதின் சிறப்பினை எடுத்துக்கூறி தமிழ்மொழியில் பகுதி 3ல் கற்பிக்கப்படும் விருப்பப் பாடத்தை கற்பிக்க ஊக்குவிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டது.

15.11.1998 வரை பள்ளிக் கல்வித்துறையின் வேண்டுகோள், அறிக்கை, மடல், விதி முதலியன இப்படித்தான் இருந்தன. ஆனால் என்ன நடந்தது?

பல பள்ளிகளில், குறிப்பாக மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழ்ப் பயிற்றுமொழி என்பது அறவே கிடையாது. சில பள்ளிகளில் தமிழ் - ஒரு கட்டாயப் பாடமாகவும் இல்லை. விருப்பப் பாடமாகத்தான் இருந்தது. (Optional)

பாகம் 1 - தமிழ் அல்லது இந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது பிரெஞ்சு என்றே தங்கள் குறிப்பேட்டில் சிலபள்ளிகள் தெளிவுபடுத்தியிருக்கின்றன.

எனவே, தமிழ் வழியிலும் படிக்கவேண்டிய தேவையில்லை. 'தமிழை' ஒரு பாடமாகவும் படிக்கவேண்டிய கட்டாயமில்லை. 1996-1997ஆம் கல்வியாண்டில் இதுதான் நிலை. 15.11.98 வரை - ஆட்சி அமைத்து ஒன்றரை ஆண்டு வரை இதுதான் நிலை.

தமிழ்மக்களுக்கு நான் ஒன்றைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். 'தமிழ்வழிக் கல்வி' பற்றி நான் இதுவரை எழுதி வந்ததில் சிலவற்றைத் தொகுத்து ஓர் அறிக்கையாகவே தந்துள்ளேன். மேலே உள்ள செய்திகள், முதல்வர்க்குத் தரப்பட்ட அறிக்கைப் பகுதிகள் பல, கல்வி அமைச்சர், பள்ளிக் கல்வி இயக்குநர் போன்றவர்கட்கு இந்த அறிக்கை நேரில் தரப்பட்டது.

சட்டப்படி பார்த்தால், இதனை முழுக்க முழுக்கக் கவனிக்க வேண்டியது பள்ளிக் கல்வித்துறை. செய்யவேண்டியவர் கல்வி அமைச்சர் பேரா. அன்பழகன் அவர்கள்.

ஒன்றரை ஆண்டு காலம் இதுபற்றிச் சிந்திப்பதிலேயே காலம் ஓடியிருக்கிறது என்பதை உணர்ந்தேன். இது என் துறை அன்று என்றாலும், தமிழ் வளர்ச்சி அமைச்சர் எனும் முறையில் 'எங்கும் தமிழ்' எனும் கோட்பாட்டை நிறைவேற்றப் பாடுபடுவதில் தவறில்லை என உணர்ந்தேன்.

எனவே, அடுத்தவர் துறையில் தலையிட்டேன் என்றில்லாமல், அடுத்தவர் துறை இதற்கான ஆணை பிறப்பிக்கும் வரை தொடர்ந்து பாடுபடுவது. அதனை உரிய இடத்திற்குக் கொண்டு செல்வது தவறாகாது எனும் முறையிலேயே இத்துறையில் செயற்பட்டேன்.

இந்தக் கோணத்திலேயே என் பேச்சும், முயற்சிகளும் இருந்தன. 21.10.1996 'மலேசிய நண்பன்' இதழில் வந்த செய்தி இது: சிதம்பரத்தில் தமிழகப் புலவர் குழுவின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. நானும் புலவர் குழுவின் ஒர் உறுப்பினன்தான். எனினும் அமைச்சர் எனும் முறையில் கலந்து கொண்டு உரையாற்றினேன். அந்தப் பேச்சு :

5ம் வகுப்பு வரை தமிழ் கட்டாயமாக்கப்படும்

பிற துறையில் அரசு கவனம் செலுத்துவது போல் தமிழ்த் துறையில் ஒர விழுக்காடு கூட செலுத்தவில்லை என்று கி.ஆ.பெ. விசுவநாதம் கூறி மறைந்துவிட்டார். அதன்பின் பொறுப்பேற்ற முதல்வர் கலைஞர், முத்தமிழ்க் காவலரின் கனவை நினைவாக்க அதற்கென ஒரு துறையை உருவாக்கி ஒரு அமைச்சரையும் நியமித்துள்ளார். நாங்கள் 5 மாத காலத்தில் தமிழ்த்துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளோம். குறிப்பாக பசும்பொன் மாவட்டத்தில் உள்ள கருவூலத்தில் சம்பளப்பட்டியல் தமிழில் கையொப்பமிட்டதால் சம்பளம் வழங்காமல் திருப்பி அனுப்பப்பட்டது. அரசாணை மீறிய குற்றத்திற்கு அந்தக் கருவூல அதிகாரி மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1978ல் அரசு அலுவலர்கள் தமிழில் கையெழுத்துப் போடவேண்டும் என அரசாணை இருந்தும் யாரும் தமிழில் கையெழுத்திடுவதில்லை. சட்டமியற்றியும் பின்பற்றவில்லை என்றால் அதை விடக் கேவலம் வேறொன்றுமில்லை.

கர்நாடகத்தில் 5ம் வகுப்பு வரை கட்டாயம் கன்னடம் படிக்க வேண்டும் என சட்டம் உள்ளது. இது பற்றி தினமணியில் இந்திரா பார்த்தசாரதி

எழுதியதை சட்டப்பேரவையில் சுட்டிக் காட்டியுள்ளேன். விரைவில் தமிழ் நாட்டில் 5ம் வகுப்பு வரை கட்டாயம் தமிழ் படிக்க வேண்டும் என ஆணை பிறப்பிக்க ஆவன செய்வோம்.

தமிழ்நாட்டில் மொத்தம் 38 ஆயிரம் தொடக்கப்பள்ளிகள் உள்ளன. இதற்கு ரூ.600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவைகளை நல்ல நிறுவனங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு கல்வித் துறைக்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2,553 கோடி ஒதுக்கியுள்ளது. மழலையர் பள்ளிகள் தமிழைப் பயன்படுத்தவில்லை யெனில் கண்டிப்பாக இழுத்து மூடும் நிலை வரும்.

1971ம் ஆண்டு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வர கலைஞர் முயன்றபோது அரசியல் கட்சிகள் மாணவர்களைத் தூண்டி போராட்டம் நடத்தியதால் அம்முயற்சி ஒத்திபோடப்பட்டது. தற்போது சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் உள்பட அனைவரும் ஆதரவு தெரிவித்து வருவதால் இத்திடம் வெற்றி பெறும் என்றார் தமிழ்க்குடிமகன்.

எனவே ஆட்சி அமைத்து ஐந்தாவது மாதத்திலேயே 5ஆம் வகுப்பு வரை கட்டாயம் தமிழ் படிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியதோடு, மழலையர் பள்ளிகள் தமிழைப் பயன்படுத்தவில்லை எனில் இழுத்து மூடப்படும் நிலை வரும் என்று கண்டிப்பாகவும் கூறியுள்ளேன்.

எனவே என்னுடைய சிந்தனையும், செயலும் தமிழ்வழிக் கல்வி நோக்கி நடைபோட்டிருப்பதை உங்களால் உணர முடியும்.

அதே நேரத்தில் கல்வி அமைச்சரும் அந்தக் கோணத்தில் பேசினார் என்பதையும் சொல்லி ஆகவேண்டும். (25.11.1996 தினகரன்) அயன்புரம் மெட்ரிகுலேசன் பள்ளி விழாவில் பேராசிரியர் பேசியதாவது:

“இன்றைக்கு ஆங்கிலத்தில் படித்தால்தான் கவுரவம் என்ற தவறான கருத்து எல்லோரிடமும் உள்ளது. காந்தி, நேரு போன்ற தலைவர்களே தாய்மொழிக் கல்வியைப் பெருமைப்படுத்திக் கூறியிருக்கிறார்கள்.

ஆங்கிலம் மீது எனக்கு வெறுப்புக் கிடையாது. ஆங்கிலத்தைப் புறக்கணிக்கும் படியும் நான் சொல்லவில்லை.

ஆனால் தாய்மொழியை அறவே கைவிட்டு விட்டு ஆங்கிலம் பயிலுவது என்பது சரியல்ல. தமிழோடு சேர்ந்து ஆங்கிலமும் கற்கலாம். தமிழை விட்டு விட்டு ஆங்கிலம் என்பது ஏற்புடையதல்ல.

இன்றைக்கு உலகிலேயே தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் ஜப்பானியர்கள் தாய்மொழியில்தான் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு முன்னேறி இருக்கிறார்கள்.

தாய்மொழி என்பது தாய்ப்பால்போன்றது தாய்ப்பால் குடிக்கும் குழந்தைதான் ஆரோக்கியமாக வளரும். புட்டிப்பால் போன்றது ஆங்கிலம். அதை தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்தி கொள்ளலாம். தமிழைக் கைவிடுகிற மாணவன் வளர்ந்த பிறகு தமிழ் மொழியை, தமிழ் உணர்வை, தமிழ்நாட்டைக் கைவிட்டு விடுவான்.''

எனவே, கல்வி அமைச்சர் சரியான கோணத்தில் இதனை அணுகியிருக்கிறார் என்றே சொல்லலாம்.

பொறுப்பேற்ற எட்டரை மாதங்களுக்குப்பின் 28.1.97 அன்று முதல்வர் அவர்கட்கு நான் ஒரு மடல் வரைகின்றேன்.

1997-98ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப் படுவதற்கான பரிந்துரைகள் அடங்கிய மடல் அது. அதில் முதல் பரிந்துரையே இதுதான்:

“1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாக (Part I) தமிழ் கட்டாயப் பாடமாகவும், 2-ஆவது பாகமாக (Part II) ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய் மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 20 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை அமர்த்திக் கொடுக்க இந்த அரசு வழி வகை செய்யும். இதனால் சிறுபான்மையரது மொழி நலம் காக்கப்படுவதுடன் தமிழைப் படிக்காமலேயே இந்தத் தமிழ் நாட்டில் ஒருவர் பட்டம் பெறமுடியும் எனும் அவல நிலையும் இதன் வாயிலாக நீங்கும்.''

‘தமிழ்வழிக் கல்வி’ பற்றி அறிவித்தால் அது பள்ளிக்கல்விச் சார்பில் வரவேண்டும். எனவே தமிழ் படிக்காமலேயே எவரும் பட்டம் பெறும் நிலை இனிமேலும் இருக்கக் கூடாது என்ற கோணத்தில் பரிந்துரை செய்யப்பட்டது.

10 பரிந்துரைகளில் எட்டு அறிவிக்கப்பட்டன. அதில் ஒன்றுதான் மேலே குறிப்பிடப்பட்டது.

இதேகால கட்டத்தில் பேராசிரியர் என்ன பேசியுள்ளார் என்பதையும் கவனிக்க வேண்டும். (2.3.97 மக்கள் செய்தி) வள்ளியம்மாள் கல்வி நிறுவனத்தில் அவர் பேசியது: அவரே ஒரு மெட்ரிகுலேசன் பள்ளியில் பேசியதாவது. (5.3.97 தினமணி)

“மழலையர் வகுப்புகளிலிருந்து 2-ம் வகுப்பு வரை பாதி நேரத்துக்குத் தமிழில் பாடம் நடத்த வேண்டும் என்ற அறிவிப்பை விரைவில் தமிழக அரசு வெளியிடும் என்று கல்வி அமைச்சர் க. அன்பழகன் கூறினார்.

மழலையர் பள்ளி, மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் மற்றும் பல பள்ளிகளின் தலைமையாசிரியர்களை அரசு அழைத்துப் பேசியது. மழலையர் வகுப்புகளிலிருந்து 2-ம் வகுப்பு வரை பாதி நேரம் தமிழில் பாடம் நடத்த வேண்டும் என்று சில நாட்களில் அரசு அறிவிக்க உள்ளது.

5-ம் வகுப்பு வரை தமிழில் பாடம் நடத்தினால்தான் பள்ளிகளுக்க அரசு அனுமதி வழங்கும் நிலை உருவாகும். கர்நாடகத்தில் எல்லாக் குழந்தைகளும் கன்னடம் படிக்கவேண்டும் என்று அரசு ஆணை உள்ளது. தற்போது அவ்வாறு செய்யாவிட்டாலும் படிப்படியாக தமிழில் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற நிலையை தமிழக அரசு உருவாக்கும்.

35,000 ஆரம்பப் பள்ளிகள், 5000 நடுநிலைப் பள்ளிகள், 3,800 உயர் பள்ளிகள், 2,800 மேல்நிலப் பள்ளிகள், 100 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 5 கோடி. இதில் 1.75 கோடி பேர் 5 வயது முதல் 20 வயது உள்ளவர்கள். அரசு பள்ளிகளில் உள்ள இட வசதிகளைக் கொண்டு 1 கோடி பேருக்கு கல்வியளிக்க முடியும். மீதமிருக்கும் 70 லட்சம் பேர் தனியார் பள்ளிகளில் சேர்ந்து பயன்பெற வேண்டிய நிலை உள்ளது.”

இந்தப்பேச்சில் உள்ள சில தொடர்களை மீண்டும் - நன்கு கவனிக்க வேண்டும்.

மழலையர் பள்ளி, மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளுடன் பேசப்பட்டது.

“5ஆம் வகுப்பு வரை **தமிழில்** (Through Tamil Medium) பாடம் நடத்தினால்தான் பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கும் நிலை உருவாகும்.”

இவ்வளவு தெளிவாகக் கல்வி அமைச்சர் கூறியுள்ளார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் 1989-91இல் 1996-2001இல் இதனைச் செயற்படுத்தினாரா? அல்லது தாராளமாக இசைவு வழங்கினாரா?

“கர்நாடகத்தில் எல்லாக் குழந்தைகளும் கன்னடம் படிக்கவேண்டும் என்று அரசு ஆணை உள்ளது. தற்போது அவ்வாறு செய்யாவிட்டாலும் படிப்படியாக தமிழில் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற நிலையை தமிழக அரசு உருவாக்கும்.”

இவ்வளவு தெளிவாய பேசிய பேராசிரியர் தமிழில் கட்டாயம் படிக்கவேண்டும் என்று ஆணை பிறப்பிப்பதில் உறுதியாக இருந்தாரா?

(நான் இப்போது ஐயம்தான் எழுப்பியுள்ளேன். வேறு இடத்தில் இதற்கு விடை காண்போம்.)

அவருடைய கணக்குப்படி 46200 அரசு சார்ந்த பள்ளிகள் உள்ளன. நினைவில் நிறுத்த வேண்டிய செய்தி இது.

இதற்கிடையில் ஒரு செய்தி: தமிழ்நாட்டில் உள்ள ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் 41 மட்டுமே. எங்களுடைய திட்டம் எல்லாப் பாடங்களிலும் தமிழ் ஒரு பாடமாகப் படிக்கப் படவேண்டும். தமிழ்நாட்டில் நிலையாக வாழ்ந்துவரும் ஆங்கிலோ இந்தியர்கள் தமிழை ஒரு பாடமாகப் படித்தால்தானே பிற்காலத்தில் தமிழக அரசு அலுவலர்கள் சரியாகப் பணியாற்ற முடியும்? தமிழே படிக்காமல் இவர்கள் பட்டம் பெறும் நிலை இருப்பது சரியா? எண்ணிப் பார்க்கவேண்டாமா? சட்டமன்ற 'நியமன' உறுப்பினர் ஆன் டிமாண்டி இதுபற்றிப் பேசிய போது நான் குறுக்கிட்டு 'தற்போதுள்ள பயிற்சி மொழித் திட்டம் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் அப்படியே தொடரும்' என்றேன். தமிழை ஒரு பாடமாகப் படிக்கட்டும். மற்றபடி அவர்களது 41 பள்ளிகளிலும் ஆங்கிலத்தின் வாயிலாகவே பயில 'விதிவிலக்காக' இசைவளிக்கலாம் என்பது எங்கள் நிலை.

இதனை நான் தொடர்ந்து வற்புறுத்தினேன்.

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் சங்க விழாவில் பேசும்போது நானே குறிப்பிட்டுள்ளேன்.

"தமிழ்நாட்டில் மழலையர் பள்ளிகள் 25 ஆயிரம் இருக்கின்றன. இவைகளில் 2500 தான் அரசாங்க பதிவு பெற்றவைகளாக இருக்கின்றன.

இம்மாதிரியான மழலையர் பள்ளிக்கூடங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும். மழலையர் பள்ளிக்கூடங்களில் தமிழ் முதல் பாடமாக இருக்கவேண்டும். ஆங்கிலம் 2-வது பாடமாக இருக்கவேண்டும்.

ஆங்கிலம் இருந்தால் உலகம் முழுவதும் போகமுடியும். ஆனால் தமிழ்நாட்டில் 5-வது வகுப்பு வரையில் தமிழ்தான் கட்டாயப் பாடமாக இருக்கும்.

மழலையர் பள்ளிகளை ஒழுங்குபடுத்துவோம். ஆங்கிலம் நமக்கு உறவுமொழி. சிங்கப்பூர் போன்ற நாடுகளில் 18 சதவீதம்தான் மலேசிய மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கு முதல்மொழியாக தேசிய மொழியாக இருப்பது மலேசிய மொழிதான்."

எனவே எந்த இடத்திலும் எங்கள் கருத்தினை வலியுறுத்திடப் பின்வாங்கியதில்லை என்பதை உணரலாம்.

முன்பக்கங்களில் நான் குறிப்பிட்டுள்ளபடி, பள்ளிக்கல்வித்தறை 'வேண்டுகோள்' விடுத்துத்தான் தாய்மொழியில் பாடம் கற்பிக்க முற்பட்டது என்பதை இங்குக் காணலாம்.

பள்ளிக் கல்வித் துறை

கடித (நிலை) எண்.377 நாள் **28.8.1997**

அனுப்புநர்

திரு.எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர்
சென்னை - **600 006**

ஐயா,

பொருள் : ஆங்கில வழி மழலைகள் மற்றும் துவக்கப் பள்ளிகளில் (Nursery and Primary Schools) தாய்மொழியில் பாடம் கற்பிக்க அறிவுரைகள் வழங்குவது குறித்து.

பார்வை :
1. அரசாணை எண்.404, கல்வி, நாள் 24.4.91
2. அராசணை எண்.349, கல்வி, நாள் 31.3.93

மாநிலத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெறாத நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளிகளை ஒழுங்குபடுத்தி நெறிமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப, சிறு வயதில் தாய்மொழியில் கற்பிப்பதில் சிறப்பினை விளக்கி படிப்படியாக தாய்மொழியில் கற்பிப்பதற்கு மாற்றிக்கொள்ளுமாறு தமிழ் நாட்டில் உள்ள அனைத்து ஆங்கில வழி மழலைகள் மற்றும் துவக்கப்பள்ளிகள் (Nursery and Primary Schools) மேலாண்மையினருக்கு வேண்டுகோள் விடுக்கவும். அப்பள்ளிக்கு அங்கீகாரம் வழங்குவதை மீண்டும் தொடரவும், தொடக்கக் கல்வி இயக்குநரைக் கேட்டுக்கொள்ளலாம்.

இதன்மீது எடுத்த நடவடிக்கையின் விவரத்தினை அரசுக்கு தெரிவிக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.''

படிப்படியாகத் தாய்மொழியில் கற்பிக்க முனையுமாறு 'வேண்டுகோள்' விடுக்கும் வேலையைத்தான் கல்வித்துறை செய்து கொண்டிருந்தது விளங்கிவிடும். பேராசிரியர் நினைத்திருந்தால் அரசாணை பிறப்பித்திட ஆவன செய்திருக்கலாம். ஆனால் நடக்கவில்லை.

மேலும், பள்ளிக் கல்வித்துறையின் மற்றொரு சறுக்கலைக் கவனியுங்கள்.

'இன்னும் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் 31.12.97க்குள் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். முன் அனுமதி. அங்கீகாரம் பெறாமல் புதிய பள்ளிகள் தொடங்கவும், அங்கீகாரம் பெறாமல் பழைய பள்ளிகள் இயங்கவும் 31.12.97க்குப் பின் அரசு அனுமதி இல்லை' என்று துறை கண்டிப்பாக அறிவித்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் எல்.கே.ஜி. முதல் 2ஆம் வகுப்பு வரை 50% அளவாவது தமிழில் சொல்லித் தரப்படவேண்டும் என்று ஏற்கெனவே செய்திருந்த அறிவிப்பினைப் பள்ளிக் கல்வித்துறை தளர்த்தியுள்ளது. (தினமலர் 29.9.97)

"தமிழ்நாடு நர்சரி, பிரைமரி & மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கம்"

'தஞ்சாவூர், திருவாரூர் & நாகப்பட்டினம் மாவட்ட கிளைகள் மற்றும் மாநில சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று ஆங்கிலப் பள்ளிகளில் 50 விழுக்காடு தமிழ் என்ற அரசின் முடிவை தளர்த்தி அறிஞர் அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கையின்படி முன்போல் மீண்டும் அங்கீகாரம் வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் மதிப்புமிகு தொடக்கக் கல்வி, பள்ளிக் கல்வி இயக்குநர்கள் அவர்களுக்கும் அல்லும் பகலும் அயராது உழைத்து வெற்றிக் கனி பறித்துத் தந்த "தமிழ்நாடு நர்சரி & பிரைமரிப் பள்ளிகளின் தரித்திரம் நீக்கிய சரித்திர நாயகன்" "சங்கம் வளர்த்த சிங்கம்" "கல்விக் காவலர்" மதிப்புமிகு டாக்டர் கே. ராமச்சந்திரன் எம்.ஏ., எம்.எட், டி.லிட்., பிஹெச்டி., அவர்களுக்கும்" சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இப்போது 97-98ஆம் கல்வியாண்டும் ஓடிவிட்டது. 98-99ஆம் ஆண்டும் பாதி ஓடிவிட்டது. இந்நிலையில் 21.10.98 அன்று என் துறைச் செயலாளர்க்கு நான் எழுதிய நேர்முக மடல் இது:

அன்புக்குரிய சீனிவாசன்,

20.10.'98 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துரையாடியபோது, மழலையர் பள்ளிகளில் தமிழை நிலைநாட்டுவது குறித்தும், தமிழ்நாட்டில் தமிழ் படிக்காமலேயே பட்டம் பெறும் நிலையை

மாற்றுவதற்குச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட குறிப்பு குறித்தும் விரிவான அறிக்கை ஒன்றை அளிப்பது என்றும், இதனை அமைச்சரவையில் வைத்து முடிவு செய்யலாம் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்த அடிப்படையில் நான் அனுப்பியுள்ள குறிப்புகளைக் கொண்டு, கோப்பினை அணியப்படுத்தி அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும்..''

மழலையர் பள்ளிகளில் தமிழை நிலைநாட்டுவது குறித்துத்தான் என் மடல் அமைந்துள்ளது (13.5.96 - 21.10.98) ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகள் ஆகியும் பள்ளிக் கல்வித் துறை எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதை முதலில் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இரண்டாம் கட்டம்

**16.11.98** அன்று அடுத்த கட்டம் தொடங்குகிறது. அதற்கு முன் **6.4.1995** முதல் (அ.தி.மு.க.ஆட்சியிலிருந்து) **15.11.98** வரை பள்ளிக்கல்வித்துறை மழலையர் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி பற்றியும், மழலையர் பள்ளிகளை ஒழுங்கு படுத்துவது பற்றியும் எழுதிய மடல்கள், விடுத்த அறிவிப்புகள், பிறப்பித்த அரசாணைகள் குறித்து ஒரு பார்வை பார்த்துக்கொண்டால்தான் நமது அடுத்த கட்டம் ஏன் பிறந்தது என்பதை நாம் உணரமுடியும்.

முதல் கட்டக் கட்டுரையிலேயே இரண்டரை ஆண்டு காலமாகப் பள்ளிக்கல்வித்துறை எந்த முடிவும் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டேன். அப்படியானால் என்னதான் செய்து கொண்டிருந்தது அத்துறை? தெரிந்துகொள்ள நம் ஒவ்வொருவர்க்கும் எவ்வளவு ஆர்வம் இருக்கும்?

தெரிந்துகொள்ளத்தானே வேண்டும்.

தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண்: **4936** நாள்: **6.4.95**

பொருள் : தொடக்கக் கல்வி - நர்சரி பள்ளிகள் தமிழை கட்டாய பாடமாகக் கற்பித்தல் - அறிவுரைகள் வழங்குதல்

- - -

நர்சரி பள்ளிகள் அனைத்திலும் தமிழ் ஒரு பாடமாக கட்டாயமாக கற்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு கற்பிக்கத் தவறினால் சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

இவ்விவரத்தினை அனைத்து நர்சரி பள்ளிகளுக்கும் உதவிக் கல்வி அலுவலர்கள் மூலம் தெரிவிக்கும்படி அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கு உடனடியாக ஒப்புதல் கடிதம் அனுப்பக் கோரப்படுகிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், மழலையர் பள்ளிகள் அனைத்திலும் தமிழ் ஒரு பாடமாகக் கட்டாயமாகப் படிக்கப்பட வேண்டும் என்று அ.தி.மு.க. ஆட்சி காலத்திலேயே வலியுறுத்தி உள்ளது தெளிவு.

அடுத்ததுதான் மிகவும் முக்கியம்:

ஏற்புப் பெறாத பள்ளிகளில் படிப்பவர்கள்-தனிப்படிப்பாகக் கருதப்படுபவர்கள்-ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவது குறித்து ஓர் அரசாணை. அரசாணை:356/நாள்30.5.96 கல்வித்துறை (அப்போது இரண்டாகப் பிரிக்கப்படவில்லை)

ஆனால் இந்த அரசாணை முழுவதும் ஆங்கிலத்தில் உள்ளது. மிகமிக எளிய செய்தி. மாநிலத்தில் உள்ள சில நிறுவனங்கட்கு மட்டுமே அனுப்பப்பட வேண்டியது. வெளியில் எங்கும் அனுப்பப்படவேண்டிய தேவையேயில்லை. அரசாணையைத் தமிழில் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை.

சரி செய்திக்கு வருவோம்.

Elementary Education and Secondary Education - Admisssion of pupils in recognised schools after private study - Restriction imposed - Relaxation for 1996 - 97 - Orders - Issued.

---

EDUCATION, SCIENCE AND TECHNOLOGY DEPARTMENT

G.O.MS.No.356 Dated : 30.5.96

Read:

1. G.O. Ms.No.408, Education, dated 18.3.1974
2. G.O.Ms.No.1085, Education, dated 31.5.76

3. G.O.Ms.No.433, Education, dated 17.4.84
4. G.O.Ms.No.476, Education, dated 10.5.84
5. G.O.Ms.No.624, Education, dated 8.5.86
6. G.O.Ms.No.811, Education, dated 1.6.87
7. G.O.Ms.No.498, Education, dated 29.3.88
8. G.O.Ms.No.479, Education, dated 5.5.89
9. G.O. Ms.No.404, Education, dated 21.3.90
10. G.O.Ms.No.443, Education, dated 12.4.91
11. G.O.Ms.No.397, Education,dated 30.4.92
12. G.O.Ms.No.355, Education, dated 2.4.93
13. G.O.Ms.No.501, Education, dated 16.6.94
14. G.O.Ms.No.195, Education, dated 15.3.95.
15. From the Director of School Education Letter

Rc.No.10356/E1/96, dated 19.2.96.

ஏற்புப் பெறாத பள்ளிகளில் தனிப்படிப்பாய் படிக்கும் மாணவர்களை 6 முதல் எட்டு வரை ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்த்துக் கொள்ள இசைவளிக்கும் அரசாணை இது.

இதனை 96-97 ஆம் கல்வியாண்டுக்கும் நீட்டித்துள்ளார்கள். நீங்கள் கருதலாம், இப்போதுதானே ஆட்சிக்கு வந்துள்ளனர். இதெல்லாம் அலசிப்பார்த்து முடிவெடுக்கக் காலம் போதாதே என்று கருதலாம்.

உண்மை என்ன?

1974இல் பிறப்பிக்கப்பட்ட ஆணை இது. நாவலர் கல்வி அமைச்சர். அடுத்தது 1976இல் - குடியரசுத் தலைவர் ஆட்சி 77 முதல் 83 வரை எந்த அரசாணையும் பிறப்பிக்கப்படாமலேயே, ‘அனுமதி’ வழங்கப்பட்டதாகவே எடுத்துக்கொண்டு ஏற்புப் பெறாத பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை ஏற்புப் பெற்ற பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அதன்பின் தொடர்ந்து நீட்டிப்பு வழங்கி 1984, முதல் 1996 வரை அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

எனவே 1974 முதல் 1996 வரை, ஏன் 2001 வரையிலும் கூட 27 ஆண்டுகள் ஏற்புப் பெறாத பள்ளிகள் எந்தக் கவலையுமின்றி, ஏற்புப் பெறாமலேயே தங்கள் ‘பணி’களைத் தொடர்கின்றார்கள்.

இந்த அனுமதியை நிறுத்தி வைத்து, அனைத்துப் பள்ளிகளையும் ஏற்புப் பெற வைக்கும் எண்ணம் மொத்தத்தில் தமிழக அரசுக்கு - கல்வித்துறைக்கு இல்லை.

96 இல் ஏன் கொடுத்தார்கள்? தமிழ் வளர்ச்சிக்குத் தனி அமைச்சர் அமைத்தபின்னராவது மறு ஆய்வு செய்திருக்கலாமே என்று கேட்கலாம். அதுதான் போதிய "கால அவகாசம்" இல்லை என்று நாமும் ஒரு 'சமாதானம்' செய்து கொண்டோமே! அது சரி! பேராசிரியர்க்கு இப்போதுதான் கால அவகாசம் இல்லை. ஆனால் 1989-90, 1990-91 ஆகிய இரண்டாண்டுகளிலும் அவர்தானே கல்வி அமைச்சர். அப்போது இதைச் சிந்திக்கவில்லையே ஏன்?

அல்லது 96இல் மீண்டும் கல்வி அமைச்சராக வந்த பின்பாவது இதனைச் சிந்தித்தாரா? இல்லையே.

இரண்டரை ஆண்டு காலமாக எந்த உருப்படியான கட்டுதிட்டமும் இன்றி, மழலையர் பள்ளிகளை ஒழுங்கு படுத்துவது குறித்தோ, ஏற்புப் பெறாத பள்ளிகளின் முறைகேட்டை ஏற்காமல் அந்தரத்தில் விடுவது பற்றியோ கல்வித்துறை சிந்திக்கவில்லை. அதன் விளைவுதான் 27 ஆண்டுகளாகத் தொடரும் இந்த அரசாணை.

இது அடுத்த செய்தி:

'இப்போது எந்தமொழியில் கல்வி பயில வேண்டுமென்பது பெற்றோர்களின் உரிமை. அதில் தலையிட அரசுக்கு உரிமையில்லை' என்கிறார்களே!

இவர்களால் வளர்க்கப்படும் 'நாற்றங்கால்' பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் 'எதிர்காலம்' பயன் பெற வேண்டுமானால் அரசுதானே சான்றிதழ் தரவேண்டும்.

கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்: 1974 முதல் 1997 வரை ஏற்புப் பெறாத (Unrecognised Schools) பள்ளிகளில் 6, 7, 8ஆம் வகுப்புகளில் சேர்த்துக் கொள்ள 27 ஆண்டுகளாக இசைவு அளித்து வருவது அரசுதானே. 1997 முதல் ஏற்புப் பெறாத பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் 6, 7, 8ஆம் வகுப்புகளில் ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று அரசு உறுதிபட அறிவித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?

27 ஆண்டுகளாக ஏய்த்துக் கொண்டு வருபவர்கள் (ஒன்று), முயன்று ஏற்புப் பெறுவார்கள் (அல்லது) ஏற்புப் பெறாததனால் பள்ளியை இழுத்து

மூடுபவர்கள் (அல்லது) ஏற்புப் பெற்றதாகச் சொல்லியே மாணவர்களை ஏமாற்றுவார்கள்.

இத்தகைய மாணவர்கள் 6 ஆம் வகுப்பில் சேர ஏற்புப் பெற்ற பள்ளியில் போய் நிற்கும்போதுதான் உண்மை தெரியும். அப்போது அந்த மாணவன் நிலை என்ன?

கல்வித்துறை, இதில் கண்டிப்பாக இருந்திருந்தாலே போதும் 20000க்கும் மேற்பட்ட மழலையர் பள்ளிகளை ஒழுங்கு செய்திருக்க முடியும். ஆனால் பேராசிரியர் தலைமையில் இருக்கும் கல்வித்துறை கடைசிவரை 'இசைவு' தந்தே கதையை முடித்துவிட்டது. தமிழன்பர்கள் இதனை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மற்றொன்று; இது மிகவும் முக்கியமானதொன்று. இங்கு ஒரு சில காலம் படித்துவிட்டு, தந்தையின் பணிகாரணமாக மாறுதலில் செல்லும்போது, மாணவனும் வெளி மாநிலம் சென்று படிக்கவேண்டியுள்ளது. அத்தகைய மாணவர்கள் பள்ளியில் சான்றிதழ் பெற்றால் மட்டும் போதாது. அந்தச் சான்றிதழில் மாவட்டத் தொடக்கக் கல்வி ஆலுவலர் கையொப்பம் இட வேண்டும்.

தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.12944 நாள் 7.4.97

அதனை முழுமையாகப் பாருங்கள்:

"வெளிமாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய மாணவ / மாணவியர் சார்பாக தற்காலிக / முறையான ஒப்புதல் / ஒப்புதல் புதுப்பித்துள்ள நர்சரி மற்றும் தொடக்கப்பள்ளிகள் வழங்கிய மாற்றுச் சான்றுகளில் கையொப்பமிட அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கட்கும் அனுமதி வழங்கப்படுகிறது"

இந்த அனுமதியையும் தக்க நிபந்தனைகளோடு கல்வித்துறை இறுக்கிப் பிடித்திருந்தால் - முறையான ஒப்புதல் பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளிலிருந்து வரும் சான்றிதழ்களைத் தவிர, ஏற்புப் பெறாத எந்தப் பள்ளியில் இருந்தும் வரும் சான்றிதழ்களில் கையொப்பமிட வேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்தால், பெற்றோர்களும் பள்ளி நடத்துபவர்களும் 'அரசு' ஒன்று இருக்கிறது; நாம் அதனிடம் தான் போய் நிற்கவேண்டும் என்பதை உணர்ந்து ஏற்புப் பெறாத பள்ளிகளை நடத்துவதினின்றும் பின்வாங்கியிருப்பார்களா இல்லையா? தமிழன்பர்கள் சிந்திக்க வேண்டும். கல்வித் துறை ஏன் இதைச் செய்யவில்லை?

30.5.96க்குபின் தொடக்கக் கல்வி இயக்குநர் விடுக்கும் அடுத்த செயல்முறைக் குறிப்பு இது.

எனவே மழலையர் மற்றும் தொடக்க பள்ளிகள் எந்தக் கவலையுமின்றித் தங்கள் வரவு - செலவுகளைப் பார்த்துக் கொள்ளப் பக்கத்துணையாக - ஏன் 'பக்காத்' துணையாகவே கல்வித்துறை இயங்குகின்றது என்பதை உணர முடிகின்றதா இல்லையா?

ஏற்கெனவே அரசுக் கல்வித்துறை வேண்டுகோள் விடுவதும் அறிவுரை வழங்குவதுமே அதன் பணி என்று முடிவு செய்துவிட்டது என்று குறிப்பிட்டேன்.

கடித (நிலை) எண்: 377 நாள் 28.8.1997

இதன் சாரம் இதுதான்.

பள்ளிக் கல்விச் செயலாளரின் அறிக்கையை ஒட்டி, தொடக்கக் கல்வி இயக்குநர் அனைத்தும் மழலையர் பள்ளி நிர்வாகிக்கும் ஓர் மடல் எழுதுகிறார். தாய்மொழி வழிக்கல்வி - அதாவது தமிழ் வழிக் கல்வியின் சிறப்பினை வலியுறுத்தி, மேற்கோள் காட்டி, அந்த மடல் அமைகின்றது.

எனினும் 'போதனா முறையைத் தாய்மொழி மூலம் கற்பிப்பதற்கும் படிப்படியாவது மாற்றிக் கொள்ளும் வகையில்' கேட்டுக் கொள்ளப்பட்ட அளவில்தான் இந்தக் கடிதம் அமைந்துள்ளது.

கல்வி அமைச்சர் முடிவு எடுத்து இதனைச் செய்தாக வேண்டும் என்று கட்டளை இடாதபோது, தொடக்கக் கல்வி இயக்குநர் இவ்வளவுதான் செய்ய முடியும். மேலிடத்து ஆணையின்றி அவரே எதுவும் செய்து விட முடியாது. எனவே, எந்த வகையிலும் அவரைக் குற்றம் சொல்ல நான் விரும்பவில்லை.

இந்நிலையில், தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல் முறைக் கடிதம் ஒன்று அடுத்து வருகிறது (22.9.97) மழலையர் பள்ளிகள் பற்றியது என்பதால் முழுமையாகவே நீங்கள் படித்துவிடலாம்.

ந.க. எண்.35483/இ1/97 நாள் 22-9-97

பொருள் : ஆங்கிலவழி மழலைகள் மற்றும் துவக்கப் பள்ளிகளில் (Nursery & Primary Schools.) தாய்மொழியில் பாடம் கற்பிக்க அறிவுரைகள் வழங்குதல் குறித்து.

பார்வை : 1) மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகள் ஒழுங்குபடுத்தி நெறிமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகள்.

2) அரசு கடிதம் (நிலை) எண் 377 பள்ளிக் கல்வித்துறை நாள் : 28.8.97

தமிழகத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெறாத மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகளின் செயல்பாடுகளில், அதற்குரிய தனித்தன்மைக்கு எத்தகைய இடையூறும் ஏற்படாத வகையில், இப்பள்ளிகளை ஒழுங்குபடுத்த தமிழக அரசு விதிமுறைகள் ஏற்படுத்தி ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது, பெரும்பாலான இதுபோன்ற பள்ளிகளில் ஆங்கில மொழியை போதனா மொழியாகக் கொண்டு கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் இது போன்ற பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக கட்டாயமாக கற்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1997-98ம் ஆண்டுக்குரிய நிதி நிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்து பேருரையாற்றும்போது தமிழகப்பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் ஐந்து வகுப்புகளில், தமிழ்மொழி முதன்மை மொழிப் பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதும் அனைவரும் அறிந்ததாகும்.

மேலும் தாய்மொழிவழிக் கல்வியைத்தான் குழந்தைகள் உணர்ச்சிபூர்வமாக அறிந்துகொள்ள இயலும். தாய்மொழிவழிக் கல்வி மூலம் தான், ஒருவரது அடிப்படை தேவைகள், சிந்தனைகள், மகிழ்ச்சி, துயரம் மற்றும் இதர உணர்வுகளை வெளிப்படுத்த இயலும். வளர்ச்சி அடைந்த நாடுகள் மற்றும் வளர்ந்துவரும் நாடுகளில் உள்ள பல கற்றறிந்தவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் ஆகியோர் தாய்மொழிவழிக் கல்வி மூலம் தான் பல்வேறு சிறப்புகளை அடைந்துள்ளனர்.

தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்பினைப் பற்றி ஓர் வல்லுனர் குழு தெரிவித்துள்ள பின்வரும் கருத்தினை இத்தருணத்தில் நினைவுகூர்வது பொருத்தமானது எனவும் கருதப்படுகிறது.

The mother tongue is the true vehicle of mother-wit. Another medium of speech may bring with it a current of new ideas. But the mother tongue is one with the air in which a man is born. It is through the vernacular that the new conceptions of the mind should pass their way to birth is speech. A man's native speech is almost like his shadow, inseparable from his personality. Through its mother tongue the infant learn to name

the things it sees or feels or tastes or hears, as well as the ties of kindred and the colours of goods and evil. It is the mother tongue which gives to the adult mind the relief and illumination of utterance as it clutches after the aid of words then new ideas or judgements springs from the wordless recesses of thought of feeling under the stimulus of physical experience or of emotion.

தற்போது பொறியியல் கல்லூரிகளும்கூட தமிழ் வழியில் பயிற்றுவிக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் பல கல்வி வல்லுனர்கள் குழு தாய்மொழிவழிக் கல்வியே சிறந்தது என குறிப்பிட்டுள்ளது.

ஆகவே, இந்தியா தனது சுதந்திர பொன்விழா ஆண்டினைக் கொண்டாடி வரும் இத்தருணத்தில் தாய்மொழியில் கற்பிப்பதின் சிறப்பினை அமலாக்கம் செய்யும்பொருட்டு அனைத்து மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகளில் போதனா முறையைத் தாய்மொழி மூலம் கற்பிப்பதற்கு படிப்படியாக மாற்றிக் கொள்ளும் வகையில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு, தமிழகத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட அனைத்து மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகளின் நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.
சென்னை - 6.

இரண்டு மாதங்கள் கழித்து, தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் என்ற வகையில் (26.11.97) அடுத்த மடல்.

(இதன் சாரத்தை முன்பக்கங்களில் பார்த்தோம்)

பகுதி 3 இல் கற்பிக்கப்படும் விருப்பப் பாடங்களைத் தமிழில் கற்க. . . அறிவுரைகள் வழங்கப்படுவதற்காக இந்த மடல். இரண்டரை ஆண்டுகளாக நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்றால் 'அறிவுரை' வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆல்பர்ட் சுவைட்சரால் 'வியந்து பாராட்டப்பட்ட வள்ளுவரின் அறிவுரைகளையே' வீசை என்ன விலை?' என்று கேட்டும் வீம்பு பிடித்த தமிழர்களுக்குக் கல்வித் துறை 'உடம்பும் வலிக்காமல், அடித்த கம்பும் நோகாமல்' அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தது.

பள்ளிக் கல்வித் துறையால் ஒரு விளம்பரம் தரப்பட்டுள்ளது (1.1.98 முரசொலி) அதில்,

“தமிழகத்தில் அரசின் ஒப்புதல் பெறாத - மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் தொடர்ந்து இயங்குவதை அனுமதிக்கக் கூடாது என்று அரசு கருதுகிறது” என்றுள்ளது. அப்படி, கல்வித்துறை கருதியிருந்தால் ஏற்பளிக்கப்படாத பள்ளிகளில் பயில்பவர்கள் 6,7,8 வகுப்புகளில் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் சேர்வதைத் தடை செய்து ஆணை பிறப்பித்திருக்க வேண்டும். ஏற்பளிக்கப்படாத பள்ளிகளில் பயின்று வெளிமாநிலங்களில் பயிலச் செல்பவர்களின் சான்றிதழ்களில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மேலொப்பம் இடுவதை நிறுத்தியிருக்க வேண்டும்.

அப்படி எதுவும் செய்யாமல் ‘அரசு கருதுகிறது’ என்று மட்டும் விளம்பரம் விட்டால் என்ன பொருள்?

27 ஆண்டுகளாக ஏற்புப் பெறாமலேயே இன்றும் துணிச்சலுடன் இயங்கும் பள்ளிகள் அலுவலர்களின் துணையோடு மீண்டும் நீட்டிப்புப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள் என்றுதான் பொருள்.

இந்த இரட்டைப் போக்கை நாம் உணரவேண்டும்.

அதே நேரத்தில் ஆங்கில மழலையர் பள்ளிகட்கு அளிக்கப்படும் ஒப்புதல் ஒரு புறம் நடந்து கொண்டே இருக்கிறது. 19.3.98 இல் திருப்பூரில் உள்ள புவனம் ஆங்கில நர்சரி, பிரைமரிப் பள்ளிக்கு ஏற்பு. அதிலும் 30.7.96 முதல் 29.7.99 முடிய. 27.3.98 இல் புதுக்கோட்டையில் உள்ள அதிலும் 26.1.99 வரை.

ஒரே ஒரு முக்கிய நிபந்தனை இதுதான்.

“தமிழ் மொழிப் பாடம் கட்டாயம் கற்பிக்கப்படவேண்டும். தாய்மொழி தமிழ் அல்லாத மாணவர்களும் தமிழ் மொழியைக் கூடுதல் மொழிப் பாடமாகக் கற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்” என்பதுதான் அது.

இதில் இரண்டாவது வாக்கியத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வேறு ஓர் இடத்தில் இதுபற்றி நாம் வாதிட வேண்டியிருக்கும்.

“தமிழ்நாடு கல்வி விதிகள் 37 (அ) வின் படி, தனிப்படிப்பு மற்றும் அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் கல்வி பயின்ற குழந்தைகளை அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் ஆறாம் வகுப்புக்கு மேல் சேர்க்கக் கூடாது” என்று உள்ளது.

ஆனால் கடந்த 27 ஆண்டுகளாக இதற்கு விதித்தளர்வு செய்து சேர்த்துக் கொண்டே இருக்கிறோம்.

ஏற்கெனவே தி.மு.க. ஆட்சிவந்த பின் 96-97, 97-98 ஆண்டுகட்கு விதித்தளர்வு செய்து அனுமதி அளிக்கப்பட்டது. அரசாணை 175/28.5.98 (பள்ளிக்கல்வித்துறை) இன்படி 1998 - 1999 ஆம் ஆண்டுக்கும் விதித்தளர்வு செய்யப்பட்டுள்ளது.

இவ்வளவு ஆண்டுகளாகியும் 30.6.1998 வரை அரசின் ஏற்புப் பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை 2100 தான். அதிலும் சென்னை, வேலூர், நெல்லை, திருச்சி, சேலம், தருமபுரி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 100க்கும் மேற்பட்ட பள்ளிகள் ஏற்புப் பெற்றவை. ஆனால் தேனியில் 9 பள்ளிகளும், நாமக்கல்லில் 12 பள்ளிகளும் கல்வியில் மேம்பட்ட நாகர்கோவிலில் 23 பள்ளிகளும் தான் அரசின் ஏற்புப் பெற்றுள்ளன. பட்டியலை முழுவதும் படித்துச் சிந்தியுங்கள்.

இன்றும் ஏற்புப் பெறாத ஏனோதானோ, அரைகுறைப் பள்ளிகள் 20000க்கும் மேல் உள்ளன என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். 37 அ எனும் விதியில் தளர்வு செய்வதுதான் இவர்களைத் தொடர்ந்து காப்பாற்றி வருகிறது என்பதையும் உணரவேண்டும். 28 ஆண்டுகளாகத் தளர்வு செய்தும், 2100 பள்ளிகள் மட்டுமே ஏற்புப் பெற்றுள்ளன என்றால் கல்வி வானில் எவ்வளவு கொடி கட்டிப் பறக்கிறது என்பதைப் பளிச்சென உணர முடியும்.

பட்டியல் 563 - 564 ஆம்பக்கத்தில் உள்ளது.

இப்போது மூன்றாவது கட்டத்துக்கு வருகின்றோம்.

திருப்பு முனை இதுதான் என்பதால் 15.11.98 முதலான நிகழ்ச்சிகளை வரைகின்றேன்.

'தமிழ்வழிக்கல்வி' கொண்டு வருவது பற்றி நமது அரசு திட்டவட்டமான முடிவு எடுக்காதது வருத்தமாக இருக்கிறது என்றும், பள்ளிக் கல்விச் செயலாளர் கௌரி சங்கர் 'அது' வரக்கூடாது என்ற கருத்துடையவராக இருக்கிறார் என்றும், கல்வி அமைச்சரும் 'அவர்' சொல்வதைக் கேட்டுக் கொள்வதால் காலம் கடந்து கொண்டே போகிறது என்றும் முதல்வர் இடத்தில் நான் விரிவாகப் பேசினேன்.

என் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்தேன். எவ்வளவுதான் தமிழ்ப்பள்ளிகள் செய்தாலும் கல்வியில் தமிழ் வாராதவரை பெரிய முன்னேற்றம் இராது என்றும் தெரிவித்தேன். சற்று, அதிக நேரம் எடுத்துக் கொண்டு பேசியது அவரது மனத்தைத் தொட்டது. அன்று (15.11.98) மாலை 5 மணியளவில் என்னை அறைக்கு அழைத்தார். 'தமிழ்வழிக் கல்வி'

தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்களோ அதை எழுதிக் கொண்டு வாருங்கள் என்றார். ஏற்கெனவே என்னிடம் குறிப்புகள் இருந்தமையால் அவற்றை ஒழுங்குசெய்து கணினியில் தட்டச்சுச் செய்து வைத்திருந்தேன்.

16.11.98 காலையில் அறையில் சந்தித்துக் கொடுத்தேன். அந்த அறிக்கைதான் இது.

மழலையர் பள்ளிகள் எடுக்கவேண்டிய முடிவுகள்

1. தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரும் (as a subject) பள்ளிகளுக்குத்தான் ஏற்பளிக்கப்படும்.

2. அடுத்த கல்வியாண்டு முதல் (1999-2000) பூகோளம், வரலாறு, சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியில் (through the medium of Tamil) கற்பிக்க வேண்டும்.

3. தமிழ் மொழி வழியில் பல மழலையர் பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றிற்குப் பின்வருமாறு சலுகைகள் வழங்கப்படலாம்.

அ) ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படும்.

ஆ) இப்பள்ளிகளுக்கும் அரசின் பாட நூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

இ) அரசு தரும் பேருந்துக் கட்டணச் சலுகையை அளிக்கலாம்.

ஈ) கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள் கட்டாயம் இருக்க வேண்டும்.

மேலும், ஓரளவுக்கு வசதியுள்ள வகுப்பறைகள் இருந்தால் ஏற்பு வழங்கலாம்.

4. பள்ளி வளாகத்துக்குள் தமிழில் பேசினால் தண்டனை எனும் நிலை தோன்றுமானால், அந்தப் பள்ளிக்குரிய ஏற்பு (அங்கீகாரம்) உடனே விலக்கிக் கொள்ளப்படும்.

5. ஏற்கனவே உள்ள விதிகள் 37(அ)-யின்படி, அரசின் ஏற்புப் பெறாத பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளை அரசு ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்க்கக்கூடாது என உள்ளது. இந்த விதியை எந்த வகையான தளர்வும் செய்யாமல் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். 1.1.1998 அன்று வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அரசின் ஒப்புதல்

பெறாத மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் தொடர்ந்து இயங்குவதை அரசு அனுமதிக்கக்கூடாது.

6. தமிழகத்தில் தமிழ் படிக்காமலேயே ஆங்கிலத்தோடு தம் தாய்மொழியை மட்டுமே படிக்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மொத்தம் 1008. இப்பள்ளிகள் அனைத்துக்கும் தமிழாசிரியர்கள் அமர்த்தப்பட்டு, அவரவர் தாய்மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள வகை சேய்யப்படும். இவ்வகுப்பு நேரங்களை அனைத்துத் தரப்பினரின் கலந்துரையாடலுக்குப் பின்னர் முடிவு செய்யலாம்.

இதனை முழுமையாக ஒருமுறை படித்துக் கொள்ளுங்கள்.

எண்: 2க்கு மட்டும் ஒரு விளக்கம்.

பி.எசி. வகுப்புவரை அறிவியல் பாடங்களும் (Physics, Chemistry, Zoology, Botany, Maths) தமிழில் சொல்லித் தரப்படுகின்றன என்பதை நான் அறிவேன்.

எனினும் எடுத்த எடுப்பில் கலைப்பாடங்களைத் தமிழுக்குக் கொண்டு வந்து விட்டால், அதற்கடுத்த கல்வியாண்டியே அறிவியல் பாடங்களையும் (Maths & Science) தமிழில் கொண்டுவந்து விட முடியும் என்பதாலும், சில அமைச்சர்கள் அமைச்சரவையிலேயே சொன்னதாலும்; என் இரண்டாவது வேண்டுகோள் அதற்குத் தக்கவாறு எழுதப்பட்டது. மற்றபடி என் கொள்கையின் முழுவடிவம் உங்களுக்குத் தெரியும்.

இந்த முடிவுகளில் சிலவற்றைமட்டும் எடுத்துவிடச் சொன்னார் முதல்வர்.

(3) இ. பேருந்துக்கட்டணச் சலுகை

ஈ. கழிப்பறை, குடிநீர் வசதி

ஏற்கெனவே போக்குவரத்துத் துறை படும் இடர்களை மனத்திற்கொண்டு 3(இ) எடுக்கப்பட்டது.

தாய்த்தமிழ்ப் பள்ளிக்குக் கடுமையான நிபந்தனை வேண்டாம் என்று கருதியதால் 3(ஈ) எடுக்கப்பட்டது. 4ம் எடுக்கப்பட்டது.

மேலும் நான் பூகோளம், வரலாறு, சமூக அறிவியல் என்று குறிப்பிட்டிருந்ததைச் சற்றுமாற்றி, முதல்வர் கணிதம் என்பதையும் சேர்த்துக் கொண்டார் (அறிவியல் பின்னர்)

நான் முதல்நாள் பேசிய பிறகு 16.11.98 காலையில் நான் கொடுத்த வேண்டுகோள் மடலை வைத்துக் கொண்டு கல்வி அமைச்சருடனும் அலுவலர்களுடனும் முதல்வர் கலந்து பேசியிருந்தார்.

எனவே 16.11.98 மாலையில் செய்தியாளர்கள் அனைவரையும் கூட்டி, முதல்வர் அறிவிப்புச் செய்துவிட்டார். திருத்திச் செம்மை செய்யப்பட்ட அறிக்கை இதுதான்.

மழலையர் பள்ளிகட்கு, செய்திகள் - "பளிச்'' தமிழக அரசு கட்டுப்பாடு. தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரவேண்டும்' - மாலைமலர் 16.11.98

தமிழை ஒரு பாடமாக வைத்தால் மட்டுமே அனுமதி - தினத்தந்தி 17.11.98 கருணாநிதி அறிவிப்பு.

மழலையர் தொடக்கப் பள்ளிகளில் - "தமிழ்வழியில்தான் கற்பிக்கவேண்டும்" - தமிழக அரசு உத்தரவு - தினமலர் 17.11.98

தமிழ் கற்பிக்கும் பள்ளிக்கே இனி அனுமதி - முதல்வர் அறிவிப்பு - தினமலர் 17.11.98

'Recognition only for schools teaching Tamil'

The Hindu 17.11.98

Indian Express 17.11.98

இதில் 'Inidan Express' கூடுதலாகச் சில செய்திகளையும் வெளியிட்டது.

"Later, Tamil Official Language and Tamil Culture Minister M. Tamilkudimagan said there are more than 20,000 unrecognised private schools, as against the 2,100 recognised private schools in the State. Besides, there are 36,000 schools run by the State Government and local bodies.

The new order of the Government will be applicable to students enrolled from the next academic year, and will not cover those already studying from LKG to eighth standard, he said.

It will also not be applicable to schools recognised by the Central Board of Secondary Education. Students who have already opted for English as the medium of instruction will not be affected, he said".

தமிழ் கட்டாயப் பாடம் - தமிழக அரசு அறிவிப்பு விடுதலை **18.11.98**

முதல்வரின் அறிவிப்பு வெளியான உடனேயே செய்தியாளர்கள் என்னையும் பிடித்துக் கொண்டதால் சில விளக்கங்களை அளித்தேன். இவற்றின் மீது கல்வி அமைச்சர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**16.11.98** அன்று முதல்வர் அறிவித்தும் நாட்டில் ஒரு பரபரப்பும் தருக்கங்களும் தொடங்கின என்று சொன்னால் மிகையாகாது.

இதனைஒட்டி, பள்ளிக்கல்வித்துறை முதல்வரது அறிக்கைகளில் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது. இரண்டரை ஆண்டுகளாகத் 'தத்துவம்' பேசியே இழுத்துக்கொண்டு வந்தவர்கள் இப்போது கட்டாயம் செயற்பட்டுத் தீரவேண்டிய நிலை.

முதல்வர் வெளியிட்ட முடிவுகள் - செயற்பாடுகள் குறித்த விளக்கம் - பள்ளிக் கல்வித்துறை எப்படி நெளிகிறது என்பதைக் கவனியுங்கள்.

முதல்வர் வெளியிட்ட முடிவுகள் - செயற்பாடு குறித்து விளக்கம்

முதல்வர் முடிவு: தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரும் (as a subject) பள்ளிகளுக்குத்தான் ஏற்பளிக்கப்படும்.

விளக்கம் :

1. அனைத்து மழலையர் பள்ளிகளிலும் (LKG, UKG, 1 முதல் 5 வகுப்பு வரை) அரசாணை எண் **484** நாள் **24.4.91**ன்படி தமிழ் மொழி ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்னும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது அதன்படியேதான் approval ஏற்பு வழங்கப்படுகிறது. அவ்வாறே நடக்கிறது. Recognition வழங்காமல் approval வழங்குவதற்குக் காரணம் -

அங்கீகாரம் வழங்கினால் பள்ளிகளுக்கு அரசு நிதி உதவி வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் சென்றால், நிதி வழங்குமாறு நீதிமன்றம் சொல்லக்கூடும் என்பதால் அதைத் தவிர்த்திட இவ்வாறு approval வழங்கப்படுகிறது. (வேறு வகை உதவி பெறும் சிறுபான்மைப் பள்ளிகள் சில உரிமை கோரி நீதிமன்றம் செல்லும்போது அவ்வாறு சில தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.)

2. முதல்வர் முடிவு : அடுத்த கல்வி ஆண்டு முதல் (**1999 - 2000**) பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியில் (through the Medium of Tamil) கற்பிக்க வேண்டும்.

விளக்கம் : அனைத்துப் பாடங்களையும் தமிழ் வழியில் கற்பிக்க வேண்டும் என்பது, இது அரசின் கொள்கையாகக் கொண்டு, 1997ல் மழலையர் பள்ளி நிருவாகிகளுடன் பேசப்பட்டது. அப்பள்ளிகளில் - தமிழும் ஆங்கிலமும் தவிர அறிவியல்; கணிதம்; சமூகவியல் என்னும் பாடப்பிரிவுகள் நடைபெறுகின்றன. இந்த 3 பாடங்களில் ஒன்றை (சமூகவியல்) 97-98ல் தமிழில் நடத்தவும் மற்றொரு பாடத்தை 98-99ல் நடத்தவும் இசைந்தனர். மூன்றாவது பாடம் பற்றி உறுதி தரவில்லை. ஆனால் படிப்படியாக அனைத்துப் பாடமும் தமிழில் நடத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

ஆனால் பல பள்ளிகளில் நடைமுறையில் ஒரு பாடம் மட்டுமே தமிழில் நடைபெறுகிறது. இரண்டாவது பாடம் இன்னும் தமிழில் நடைபெறவில்லை.

இதனை மேற்பார்வையிடுவதற்குத் தகுந்த அலுவலர் இல்லாமலிருந்து அண்மையில்தான் (இந்தப் பணிச் சுமையைப் பகிர்ந்திட) 29 AEOக்கள் வழங்கப்பட்டுள்ளனர்.

இதை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருப்பதாக மழலையர் பள்ளி நிருவாகிகள் முறையிடுகின்றனர்.

அதில் முதலாவது, ஆங்கிலத்தில் பயில்வதை விரும்பித்தான் தங்கள் பள்ளியில் கட்டணம் செலுத்திப் பிள்ளைகளைச் சேர்க்கின்றனர் என்பதும், அப்படிப் படிப்பித்தால்தான் மெட்ரிகுலேஷன் பள்ளியில் அந்த மாணவர்கள் சேர முடிகிறது என்பதும் முக்கியமாகும்.

இரண்டாவது - தொழில் முறையில் அரசின் ஒப்புதல் பெற்ற 2228 பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 10,000 ஆசிரியர்களும், அரசின் ஒப்புதல் பெறாத 12,000 பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 60,000 ஆசிரியர்களும் (மொத்தத்தில்) 70,000 பேர் பாதிக்கப்படுவர் என்பதாகும். (அவர்கள் மிகைப்படுத்திக் கூறுவது, 2 லட்சம் ஆசிரியர் - 10 லட்சம் மாணவர் உள்ளனர் என்பது)

எனவே இந்த ஆணையை நிறைவேற்ற அவர்களை மனமாற்றம் அடையச் செய்யவும், இயலாவிடினும் பெரும் அளவில் வெற்றி காணவும் படிப்படியாகச் செயற்படுத்தும் முறையில் 2 ஆண்டுகள் தேவைப்படும்.

**3.** முதல்வர் முடிவு: தமிழ் மொழி வழியில் பல மழலையர் பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றிற்குப் பின்வருமாறு சலுகைகள் வழங்கப்படும்.

அ) ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படும்.

ஆ) இப்பள்ளிகளுக்கும் அரசின் பாட நூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

விளக்கம் : தமிழ்மொழி வழியில் பாடங்களை நடத்தி அ-ஆ-வில் அறிவித்துள்ள சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக 10 அல்லது 20 விழுக்காடு பள்ளிகளே இன்று முன்வரும் நிலை உள்ளது. எனினும் இது ஓர் அளவுக்கு ஊக்கப்படுத்தும் எனலாம்.

4. முதல்வர் முடிவு : ஏற்கனவே உள்ள விதிகள் 37(அ)யின்படி, அரசின் ஏற்பு பெறாத பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளை அரசு ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்க்கக் கூடாது என உள்ளது. இந்த விதியில் எந்த வகையான தளர்வும் செய்யாமல் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். 1.1.1998 அன்று வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அரசின் ஒப்புதல் பெறாத மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் தொடர்ந்து இயங்குவதை அரசு அனுமதிக்காது.

விளக்கம் : அரசின் ஏற்புப் பெறாத பள்ளிகளின் மாணவர்களை அரசு ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்க்கக்கூடாது என்று விதி இருந்தாலும், தனியாகப் படித்தவர்கள் (Private tuition) என்று சொல்லி, எந்தச் சான்றிதழும் இல்லாமல் 6வது வகுப்பு வரை பள்ளியில் சேர்க்கப்பெற்றோருக்கு உரிமை உள்ளது.

மேலும் 14 வயது வரையில் உள்ளவர்கட்குக் கட்டாயக் கல்விக் கொள்கையை நிறைவேற்ற, படிக்காத பிள்ளைகட்குச் சிறப்புப் பள்ளிகள் நடத்தி அவர்களை 7வது வகுப்பு வரையில் சேர்க்க அனுமதிக்கப்படுகிறது.

எனவே ஏற்புப் பெறாத பள்ளிப் பிள்ளைகள் சேர விரும்பும் பள்ளியில் தேர்வு எழுதித் தகுதி தகுதியிருந்தால் சேர்ப்பதைத் தடைசெய்துவது இயலுமா என்பதும், சரியா? என்பதும் கருதப்படவேண்டும். எட்டாவது வகுப்பிலும் அதற்கு மேலும் சேர்க்க அனுமதி இல்லை. (அதுவே போதுமானது என்று கருதலாம்)

மழலையர் பள்ளியில் படித்தாலும், அவர்களுள் 25 விழுக்காடு அளவே மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் சேரலாகும். 75 விழுக்காடு அரசு உதவி பெறும் பள்ளிகளில் சேர்வதால் பெரும்பாலும் தமிழில் பயிலும் நிலை உருவாகிறது.

2004ஆம் ஆண்டு ஏப்ரலில் உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பைக் கவனியுங்கள்.

மேலும் மெட்ரிக் பாடமுறைப் பள்ளிகளில் (கான்வெண்டுகளும் International School போன்றவையும்) முதல் வகுப்பு முதல் தமிழ் ஒரு பாடமாக

இடம் பெற்றாலும், சிறுபான்மையினர் மொழிகளான இந்தி போன்றவையும் இடம் பெற்று, ஆங்கில வழியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவற்றுள் சிறுபான்மை (கிறிஸ்தவர்) உரிமை கொண்டவை பல. மெட்ரிக் பள்ளிகள், பல்கலைக்கழக விதிகளின்படி துவக்கத்தில் உருவானவை. இப்பொழுது மெட்ரிக் போர்டு விதிகளின்படியும், பள்ளிக் கல்வி இயக்குநர் மேற்பார்வையிலும் இயங்குபவை. அப்படிப்பட்ட 2037 பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் 7,83,994. 1998ல் மெட்ரிக் தேர்வு எழுதிய 54,246 பேரில் இரண்டாவது மொழியாகத் தமிழ் படிப்போர் 45,449 இந்தி, பிரஞ்சு, அராபிக் முதலான பிறமொழி படிப்போர் 8,764 பேர்களே (16 விழுக்காடு) (அனைவருக்கும் ஆங்கிலமே பயிற்று மொழி). அவர்கள் கட்டணம் செலுத்திப் பயில்வோர். தொடக்கம் முதல் இப்பள்ளிகள் ஆங்கில வழியில் நடைபெறுவதால், சிறுபான்மை செல்வாக்குள்ள போர்டு அதலாலும், அவர்கள் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழிலேயே நடத்த முன் வருதல் எளிதல்ல:-

41 ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளில் சிறுபான்மை உரிமையின்படி ஆங்கிலம் வழிப் பயிற்சி நீடிக்கும். அதில் பயிலும் அனைத்து மாணவர்களும் 56,930. A.I.S.L.C. (SSLC சமம்) தேர்வு எழுதியவர் எண்ணிக்கை 4520. தமிழை ஒரு மொழியாகக் கொண்டவர் 3344 பிறமொழியை ஒரு பாடமாகக் கொண்டவர் 1175 மட்டுமே.

194 C.B.S.E. & I.S.C. பள்ளிகள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் வராதவை. (மைய அரசின் இசைவு பெற்றவை)

இந்நிலையில் மழலையர் பள்ளியில் தமிழ் வழியை வலியுறுத்தும் கொள்கையை மறுப்பவர்கள் மெட்ரிக் பள்ளி முறை மாற்றப்படுமா? இல்லையாயின் எங்கள் உரிமை மட்டும் மறுக்கப்படுவதேன்? என்று வினவுகின்றனர்.

அந்த வினாவிற்கு 5 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகட்குத் தாய்மொழி தவிர வேறு மொழி பயிற்றுதலை அண்ணல் காந்தியும், தாகூரும், பலரும் ஒப்பவில்லை என்று சொன்னாலும், தமிழைத் தாய்மொழியாகப் பெற்றில்லாத பிறமொழி மாணவர்கள் இடத்திற்கேற்ப 10 முதல் 30 விழுக்காடு உள்ளதை எடுத்துக்காட்டுகின்றனர்.

மேலும், தமிழ்வழியில் பயிற்றுவிப்பதை ஏற்காத மழலையர் பள்ளிகளை அரசு அனுமதிக்காது என்றாலும் அரசின் ஒப்புதல் இன்றி நடத்த வாய்ப்பு உள்ளது. கருநாடக உயர்நீதிமன்றத் தீர்ப்பில் பெற்றோர் தாம் விரும்பும் மொழியில் பிள்ளைகளைப் படிக்க வைக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் பிளஸ் 2 வரையில் உள்ள வகுப்புகளில் (பெரும்பான்மை தமிழ் வழி படித்தாலும்) சிறுபான்மையினருக்காக என்று கேட்டு, 19990-91ல் இருந்து ஆங்கில வழிப் பயிற்சி அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னர் கிராமப்புற மாணவர்கள் ஆங்கிலத் தேர்ச்சி பெறுவதற்கு ஆங்கில வழிப் பயிற்சி வேண்டுமென மிகப் பிற்பட்ட மக்கள் சார்பாகவும் கேட்கப்பட்டு, கட்டணம் செலுத்திப் பயிலும் முறையில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவு அவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| கட்டணம் | 6,7,8 வகுப்பு | ரூ.20 | (10மாதம்) |
| | 9&10 வகுப்பு | ரூ.30 | (10 மாதம்) |
| | 11 & 12 வகுப்பு | ரூ.50 | (10 மாதம்) |

அவ்வாறு ஆங்கிலமும் பயிற்று மொழியாக இடம் பெறும்

பள்ளிகள்
வகுப்புக்கள் (Sections)
மாணவர்கள் -
கட்டண வசூல்

துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவு அனுமதிக்கப்படவில்லை.

மழலையர் பள்ளிகளில் 5ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் கல்வி வழங்க வேண்டும் என்று கூறும்போது 6ஆம் வகுப்பு முதல் அரசு பள்ளிகளில் ஆங்கிலப் பிரிவு அனுமதிக்கப்படுகிறதே என்னும் கேள்வி எழுகிறது.

ஆங்கிலப் பிரிவு - விரும்பிக் கட்டணம் செலுத்திப் பயிலும் நிலை இருந்தாலும், தமிழில் பயில முடியாத மொழிச் சிறுபான்மையினரின் உரிமைக்காகவும் ஏற்கப்பட்டுள்ளது. இதனைக் கைவிடுவது என்று அரசு முடிவு எடுத்தாலும், பாமர மக்கள் அதை ஒரு முன்னேற்ற வாய்ப்பாகக் கருதுவதால் அவர்கள் உரிமை மறுக்கப்படுவதாகக் கருதுவர். இந்த முறையைச் செயற்படுத்துவது எனில் வருகிற ஆண்டுகளில் 99ல் 6ஆம் வகுப்பும், 2000ல் 7ஆம் வகுப்பும் என்றும், மேல் வகுப்பு வரையில் 7 ஆண்டு காலத்தில் ஆங்கிலப்பயிற்சி மொழிப் பிரிவைக் கைவிட வேண்டும். ஓராண்டு ஆங்கிலம் வழி படித்த மாணவனை அதற்கு மேற்பட்ட வகுப்பில் தமிழ் வழி மாறச் செய்வதை நீதிமன்றம் ஏற்பது கடினம்.

5. முதல்வர் முடிவு : தமிழகத்தில் தமிழ் படிக்காமலேயே ஆங்கிலத்தோடு தத்தம் தாய்மொழியை மட்டுமே படிக்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மொத்தம் 1008. இந்தப் பள்ளிகள் அனைத்துக்கும் தமிழ்

ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டு அவரவர் தாய்மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ள வகை செய்யப்படும். இவ்வகுப்பு நேரங்களை அனைத்துத் தரப்பினரின் கலந்துரையாடலுக்குப் பின்னர் முடிவு செய்யப்படும்.

விளக்கம் : தமிழகத்தில், தமிழ் படிக்காமலே ஆங்கிலத்துடன் தாய்மொழி (தெலுங்கு, மலையாளம், உருது முதலியவை) பயிலும்,

அ) தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் எண்ணிக்கை-1008
இதில் பயிலும் மாணவர் தொகை -104213

ஆ) சிறுபான்மையினர் மொழிப்பள்ளிகள்

| | | |
|---|---|---|
| உயர் நிலை | - | 51 |
| மேல் நிலை | - | 38 |
| மொத்தம் | | 89 |

- அத்துடன் மற்ற பள்ளிகளில் மொழிப்பிரிவு வகுப்புகளில் பயிலும் மொத்த மாணவர்கள் - 55,891
- மற்ற பள்ளிகளில் தமிழ் அல்லாத பிற மொழிகளை மொழிப்பாடமாகப் பயில்வோர் - 33,500

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாணவர் - 89,391

தமிழ்நாட்டில் பயிலும் மாணவர் மொத்தம் - 126,24,000

இந்த மாணவர்கள் தாய்மொழியுடன் ஆங்கிலம் தவிர மூன்றவாது மொழியாகத் தமிழ் பயில வேண்டும் என்று கூற முடியாது. தமிழ்நாட்டில் மிகப் பெரும்பான்மையான மாணவர் 2 மொழி பயிலும்போது, அவர்கள் மட்டும் 3 மொழி பயிலச்செய்வது பாடச் சுமையில் வேறுபாடு காட்டுவதாக (Discrimination) கருதப்படும். அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர் 126 இலட்சத்தில் சிறுபான்மை மொழி உரிமை கொண்ட மாணவர் 89,391பேர்தான். (இது 100க்கு ஒருவர் கூட இல்லை. இது 0.7 விழுக்காடுதான்) இவர்கட்கு தமிழ் பயிற்றுவிக்க விருப்பப்பாட முறையைத்தான் மேற்கொள்ள முடியும்.

இவர்கட்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகப் பயிற்றுவதானால் கருநாடக உயர்நீதிமன்றக் கருத்துப்படி - துவக்கப் பள்ளியில் 3வது வகுப்புக்கு மேல் 2வது மொழி பயிற்றுவிக்கலாம். கட்டாயம் ஆக்கக்கூடாது. தமிழ்நாட்டில்

3வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாயம். எனவே 3வது மொழியாகத் தமிழ் பயிற்றுவிப்பதானால் 8வது வகுப்பில்தான் துவங்கலாம்.

கருநாடகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டப்படி 3ஆம் வகுப்பில் இருந்து கன்னடர் அல்லாதாருக்குக் கன்னடம் (2வது மொழியாக) விருப்பப் பாடமாக பயிற்றுவிக்கப்படும். 5ஆம் வகுப்பில் இருந்து 2வது மொழி ஒன்று கட்டாயம். (கன்னடம் பயிலும் சூழல் 3ஆம் வகுப்பில் இருந்து உருவாக்கப்படுகிறது) கன்னடம் முதல் மொழியாகப் பயின்றோர் ஆங்கிலம், இந்தி போன்றவற்றுள் ஒன்றை 2வது மொழியாகப் படிப்பர். 8ஆம் வகுப்பு முதல் கட்டாயம். எந்நிலையிலும் மொழி வழிப் பயிற்சி பற்றி பேசப்படவில்லை.

எனவே பல காரணங்களால் துவக்கப் பள்ளியை விடுத்து

நடுநிலைப்பள்ளியில் (I Stage - தமிழ்)
உயர்நிலைப்பள்ளியில் (II Stage - தமிழ்)
மேல்நிலைப்பள்ளியில் (III Stage - தமிழ்)

தமிழ்மொழியை விருப்பத்தின் அடிப்படையில் பள்ளி வகுப்பு நேரத்தைத் தவிர்த்து பயிற்றுவித்து, தேர்வுக்கும், மதிப்புக்கும் எடுத்துக் கொள்ளாமல் தகுதிச் சான்றிதழ் மட்டுமே வழங்கலாம்.

தமிழ்ப் பயிற்சி மொழி வழங்கும் பள்ளிகளில் தெலுங்கு, மலையாளம், இந்தி வழி பயிற்றும் Sections பிரிவுகளில் இடம் பெற்றுள்ள மாணவர்கட்கும் விரும்பினால் மட்டுமே தமிழ்ச் சான்றிதழ் வகுப்பு நடத்த வழி செய்யலாம்.

பள்ளிக்கல்வித்துறை என்ன சொல்ல வருகிறது என்பதை மட்டும் மறவாமல் மீண்டும் ஒரு முறை தெளிவுபடுத்திக் கொண்டால்தான் திட்டத்தை நிறைவேற்ற விடாமல் செய்வதற்கு எவ்வளவு முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்று தெரியும்.

ஏற்பு 'Recognition' வழங்காமல்

ஒப்புதல் 'Approval' என்று மட்டும்

வழங்குவது சரிதான் பாராட்டலாம்.

97-98இல் ஒரு பாடத்தைத் தமிழில் நடத்தவும்,

98-99இல் மற்றொரு பாடத்தைத் தமிழில் நடத்தவும்

ஒப்புக்கொண்ட மழலையர் பள்ளி நிருவாகிகள் மூன்றாவது பாடம் பற்றி உறுதி தரவில்லையாம்.

அதாவது சமூகவியல் எனும் பொதுத் தலைப்புக்குள் அடங்கும் பூகோளம், வரலாறு ஆகிய பாடத்தைத் தமிழில் நடத்துவார்களாம். 'கணிதம்' நடத்த முன்வருவார்களாம். 'அறிவியல்' பாடத்தை நடத்த முன்வர மாட்டார்களாம். அதாவது அது குறித்து எந்த உறுதியும் அளிக்க மாட்டார்களாம். இதுதான் நிலை.

அறிக்கை தரும் பள்ளிக்கல்வித் துறையே சொல்லுகிறது. 'பல பள்ளிகளில் நடைமுறையில் (Actually) ஒரு பாடம் மட்டுமே தமிழில் நடைபெறுகிறது' என்று. இது குறித்து, மழலையர் பள்ளிகள் என்ன சொல்கின்றன?

"ஆங்கிலத்தில் பயில்வதை விரும்பித்தான் தங்கள் பள்ளியில் கட்டணம் செலுத்திப் பிள்ளைகளைச் சேர்க்கின்றனர் என்பதும், அப்படிப் படிப்பித்தால்தான் மெட்ரிகுலேஷன் பள்ளியில் அந்த மாணவர்கள் சேர முடிகிறது என்பதும் முக்கியமாகும்.

இரண்டாவது - தொழில் முறையில் அரசின் ஒப்புதல் பெற்ற 2228 பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 10,000 ஆசிரியர்களும், அரசின் ஒப்புதல் பெறாத 12,000 பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 60,000 ஆசிரியர்களும் (மொத்தத்தில்) 70,000 பேர் பாதிக்கப்படுவர் என்பதாகும். (அவர்கள் மிகைப்படுத்திக் கூறுவது, 2 லட்சம் ஆசிரியர் - 10 லட்சம் மாணவர் உள்ளனர் என்பது)"

இதில் இரண்டு பகுதிகள் உள்ளன.

1) ஆங்கிலத்தில் பயில்வதை விரும்பித்தான் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கின்றனர் என்பது.

இதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்னும்போதே நாங்கள் தமிழுக்கு மாற்றினால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் பள்ளியில் சேர்க்கமாட்டார்கள் என்றும்,

அப்படி அவர்கள் சேர்க்க விரும்பவில்லையானால் நாங்கள் பள்ளி தொடங்கிய நோக்கம் பாழ்படும் என்றும்,

அதாவது வணிகநோக்கில் தொடங்கப்பட்ட பள்ளி வருமானத்தை இழக்கும் என்றும்,

வருமான இழப்பு ஏற்பட்டால் நாங்கள் பள்ளிகளை நடத்துவதற்கு மாறாக இழுத்து மூடிவிடுவோம் என்றும் நமக்குச் சொல்லாமல் சொல்கிறார்கள்.

'கல்வி வாணிகம்' ஆகி வெகு நாளாகி விட்டது. எனவே கல்வி வணிகர்கள் இதைத்தான் தொடர்ந்து சொல்வார்கள் என்பது நமக்குத் தெரிந்ததுதானே! தெரிந்துதானே நாம் ஆணை பிறப்பிக்க வசதியாக அறிவிப்புச் செய்திருக்கிறோம்.

எனவே, பள்ளிக்கல்வித் துறையே 'கல்வி வணிகர்' போக்கிற்கே விட்டு விடலாமே என்ற 'தொனி'யில் எழுதுகிறது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம்.

அடுத்தது, இங்கு பணியாற்றுவோர் ஏறத்தாழ 70,000 பேர் (இது பள்ளிக்கல்வித் துறையின் கணக்கு) ஆசிரியர்கள் என்பது. ஆனால் அவர்கள் சொல்வது 2 இலட்சம் ஆசிரியர்கள் என்று.

இந்த இரண்டு இலட்சம் ஆசிரியர்களும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களா? அல்லது பி.எட். பட்டம் பெற்றவர்களா? இவர்களில் பலர் +2 மட்டும் படித்தவர்கள். மிகப்பலர் ஏதேனும் ஒரு பட்டம் மட்டுமே பெற்றவர்கள்; இளங்கலையே முதுகலையோ முடித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள். இவர்கள் குறிப்பிடும் 2 இலட்சம் பேரில் 25% பேர்கூட முறையான ஆசிரியப் பயிற்சி பெறாதவர்கள்.

இவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்றால் என் கேள்வி இதுதான்; பாடங்களைத் தமிழில் நடத்தினாலும் அதே மாணவர்கள் தானே பயில்வார்கள்; அதே பாடவேளைதானே! அதே ஆசிரியர்கள்தானே. ஆசிரியர் பயிற்சியே பெறாதவர்கள் ஆங்கிலத்தையே சொல்லிக் கொடுப்பதைவிட, தமிழில் சொல்லிக் கொடுப்பது எளிதல்லவா? மேலும் இவர்களில் எல்லாரும் ஆங்கிலத்தில் புலிகளா? இவர்களுள் 2000 பேர் ஆங்கிலத்தை நன்கு சொல்லிக் கொடுப்பார்கள் என்று நம்பலாம்.

எனவே, பாதிக்கப்படுவர் என்பது போலி வாதம். பாதிக்கப்படுவர் என்பது ஆசிரியர்களை குறிக்கவில்லை. குறைந்த முதலீட்டில், வேலையில்லாப் பட்டதாரிகட்கு 300ம் 400ம் கொடுத்துவிட்டுப் பலமணிநேரம் அவர்களது உழைப்பை உறிஞ்சும் (சுரண்டும்) பள்ளி நிர்வாகிகளுக்கு 'பணவரவு' ஒன்றே குறியாகக் கொண்டு நடத்தும் கல்வி வணிகர்கட்கு வேண்டுமானால் பாதிப்பு இருக்கலாம். அதனால்தான் பதறுகிறார்கள்; 'பாதிக்கப்படுவர்' என்று பிறர் மேல் ஏற்றிச் சொல்லுகிறார்களே தவிர வேறில்லை.

16.11.98இல் தரப்பட்ட அறிவிப்பு. பள்ளிக்கல்வித்துறையின் கருத்துப்படி 2 ஆண்டுகள் ஆகும் என்றனர். 16.11.2000த்தில் இந்தப் பணிகள்

- நமக்குச் சொன்ன 2 ஆண்டுகளில் - முடிந்துவிட்டதா? இல்லையே! அதிலும், பள்ளி நிர்வாகிகளை மனமாற்றம் அடையச் செய்கிறார்களாம்.

இப்படியே சொல்லிக் கொண்டு போனால், பள்ளி நிர்வாகிகள் யாரும் ‘மனமாற்றம்’ அடையப் போவதில்லை; வேண்டுமானால் ‘பணமாற்றம்’ கொள்வார்கள்! அது, இந்த நூற்றாண்டில் நடக்காது.

எனவே, பள்ளிக்கல்வித்துறை பூசிமெழுகுகின்றதே தவிர, திட்டவட்டமான ஆணை பிறப்பிக்கும் மனநிலையில் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தாய்த்தமிழ்ப் பள்ளிகட்கு ஊக்கம் அளித்தாலேயே போதும். இதுதான் முதல்வர் அறிவிப்பு.

இதனை உடனே ஆணையிட்டுச் செயற்படுத்தலாம் என்று பள்ளிக்கல்வித் துறை சொல்ல முன்வரவில்லை.

அதைக்கூட இழுக்கிறார்கள் பாருங்கள். “ஓர் அளவுக்கு ஊக்கப்படுத்துமாம்“

அடடா! என்ன தெளிவு; என்ன துணிவு!

முதல்வர் அறிவித்த நான்காவது முடிவுக்கு பள்ளிக்கல்வித்துறை 4 பக்கங்கட்கு விளக்கம் வரைகின்றது.

இவர்கள்தான் விளம்பரம் விட்டவர்கள். 1.1.98 ‘முரசொலி‘யில் வெளிவந்திருப்பதைச் சுட்டிக்காட்டித்தான் முதல்வரின் அறிவிப்பு உள்ளது.

37(அ) எதற்காகப் போடவேண்டும்? போட்டுவிட்டு எதற்காக 27 ஆண்டுகளாக விதித்தளர்வு செய்து கொண்டே வரவேண்டும்?

இதற்கு எப்போதுதான் முடிவு?

முதல்வர் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். பள்ளிக்கல்வித்துறை செயற்படுத்த முன் வருவதற்கு மாறாக, எப்படிச் சொதப்புகிறது என்று பாருங்கள்.

தனியாகப் படித்தவர்கள் என்று சொல்லி எந்தச் சான்றிதழும் இல்லாமல் 6ஆவது வகுப்புவரை பள்ளியில் சேர்க்கப் பெற்றோருக்கு உரிமை உள்ளது என்கிறது பள்ளிக்கல்வித்துறை.

விவாதத்துக்காக ஒப்புக் கொண்டாலும், தனிப்படிப்பும் படித்தவர்கள் மட்டும் சேரட்டும்! பெற்றோர்கட்கு உரிமை உள்ளது என்கிறார்கள் - அதற்கு எந்த அரசாணை இடப்பட்டுள்ளது? அதை ஏன் இங்குக் காட்டவில்லை?

ஆனால் அதற்காக 37அ விதியை ஏன் தளர்த்தவேண்டும்! ஒருமுறை - முதல்வர் அறிவித்து விட்ட காரணத்தால் 99-2000 ஆண்டுக்கு - அதாவது மார்ச்சு 99க்குப் பின் விதித்தளர்வு இல்லை என்று அறிவிக்க ஏன் பள்ளிக் கல்வித்துறை துணிவு பெறவில்லை?

இவர்களே மழலையர் பள்ளி, நிர்வாகிகட்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதுதான் பொருள். ஏன்? இதைக் கல்வி அமைச்சர் தடுத்திருக்கக் கூடாது?

"இந்த ஆண்டு '37அ' அப்படியே இருக்கட்டும், விதித்தளர்வு செய்யவேண்டாம். என்ன நடக்கிறது என்று பார்த்து விடுவோம்" என்று கல்வி அமைச்சர் விடை சொல்லியிருக்கலாமே!

அவர் கண்டிப்பாக இருந்திருந்தால் பெற்றோருக்கு உரிமை உள்ளது என்று எழுதுவார்களா?

இவர்கள் கருதுவது - 37அ - விதிக்கு ஒவ்வோர் ஆண்டும் விதிவிலக்குக் கொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டும் என்பதுதான் முதல்வர் அறிவிப்புக்கு இவர்களது விடை:

இருப்பது அப்படியே இருக்கவேண்டும். அதுவே போதும் என்கின்றனர்.

25% பேர்கள் தான் பின்னர் மெட்ரிகுலேசன் பள்ளியில் சேர்கிறார்களாம்.

அதாவது மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் ஆங்கில வழியில் படித்தவர்களில் 25% தான் தொடர்ந்து மெட்ரிகுலேசன் பள்ளிகளில் சேர்ந்து, ஆங்கில வழியில் பயில்கின்றார்களாம். மீதி 75% பேர்களும் (எல்.கே.ஜி) முன் மழலையர் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் பயின்றாலும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சேர்கிறார்களாம். அதனால் அவர்கள் தமிழில் பயிலும் நிலை உருவாகி விடுகிறதாம். நமக்குக் காது குத்துகிறது பள்ளிக்கல்வித்துறை இது மெட்ரிகுலேசன், மழலையர் பள்ளிக்காரர்கள் சொல்லவேண்டிய விடை. ஆனால் அவர்களது கையாளாக இருக்கும் பள்ளிக்கல்வித்துறை இப்படி விடை சொல்கிறது.

இங்கேதான் ஒரு முரண்பாட்டைக் கண்டுபிடிக்கவேண்டும்.

நமது அரசின் குறிக்கோள் என்ன? 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயில்பவர்கள் சமூகவியல், கணிதம், அறிவியல் பாடங்களைத் தமிழ் வழியில் படிக்கட்டும். 6ஆம் வகுப்பு முதல் அவர்கள் விரும்பியபடி ஆங்கில வழியில் படிக்கட்டும் என்கிறது அரசு.

இதற்கே இவர்கள் - பள்ளி நிர்வாகிகள் (வியாபாரக் கம்பெனிகள்) கேட்கும் கேள்வி என்ன தெரியுமா?

5ஆம் வகுப்பு வரை தமிழில் படித்துவிட்டு 6ஆம் வகுப்பில் திடீரென்று ஆங்கிலப் பயிற்று மொழியில் சேர்ந்தால் மாணவர்கள் தடுமாறமாட்டார்களா? பாதிக்கப்பட மாட்டார்களா? என்று கேட்கிறார்கள்.

இப்படி இவர்கள் கேட்பது உண்மையானால் - மாணவர்கள் தடுமாறத்தான் செய்வார்கள் என்றே வைத்துக்கொள்வோம்.

(நாங்கள் எல்லாம் 11ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் தமிழில் படித்துவிட்டு, கல்லூரிப் புகுமுகவகுப்பிலும், பி.எசி. பட்டவகுப்பிலும் ஆங்கிலப் பயிற்றுமொழியிலும் படித்தவர்கள்.

இதில் தமிழ்க்குடிமகனும் அடங்குவான்; தலைசிறந்த அறிவியல் மேதை மேதகு குடியரசுத்தலைவர் அப்துல்காமும் அடங்குவார்)

அப்படியானால் பள்ளிக்கல்வித்துறை ஒரு சமாதானம் சொல்கிறதே அது முரண் பாடில்லையா?

5ஆம் வகுப்பு வரை ஆங்கிலத்தில் படிப்பவர்களில் 75% தமிழ்வழிப் பள்ளியில்தான் சேர்வார்கள் என்று கூறுகிறார்களே!

இந்த 75% மாணவர்கள் 5 வரை ஆங்கிலத்தில் படித்துவிட்டு, 6ஆம் வகுப்பில் தமிழ் வழியில் படிக்கத் தொடங்கினால் தடுமாற மாட்டார்களா? பாதிக்கப்பட மாட்டார்களா?

இந்தக் கேள்விக்கு என்ன பதில்?

பள்ளிக்கல்வித்துறை ஏன் இப்படி உளறுகிறது?

5ஆம் பக்கத்தில் அவர்கள் தந்த விளக்கத்தின்படி கான்வெண்டுகளும் அனைத்துலகப் பள்ளிகளும் வேண்டுமானால் விதிவிலக்குப் பெறட்டும்.

மற்ற பள்ளிகட்கு ஏன் விதிவிலக்கு!

அவர்கள் கட்டணம் செலுத்திப் பயில்வோர்.

"தொடக்கம் முதல் இப்பள்ளிகள் ஆங்கில வழியில் நடைபெறுவதாலும், சிறுபான்மை செல்வாக்குள்ள போர்டு ஆதலாலும், அவர்கள் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழிலேயே நடத்த முன் வருதல் எளிதல்ல" என்று மெட்ரிகுலேசன் பள்ளிகள் அரசின் முடிவை எதிர்க்கலாம் என்று தூண்டிவிட்டவர்களே பள்ளிக்கல்வித்துறைதான். பிற்காலத்தில் அதுதானே நடந்தது?

மெட்ரிகுலேசன் பள்ளிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் சிறிதும் முயற்சி எடுக்காத பள்ளிக்கல்வித்துறை 1-5 வரை தமிழிலேயே நடத்த முன் வருதல் எளிதல்ல என்றால் என்ன பொருள்?

முதல்வர் அறிவிப்பு தேவையற்றது என்றுதானே பொருள்! முதல்வர் அறிவிக்கிறார். கல்வி அமைச்சர் துறை எப்படி மறுக்கிறது பாருங்கள்.

இவர்களே கேட்கிறார்கள்?

'மெட்ரிக் பள்ளிகள்' உரிமை மட்டும் மறுக்கப்படுவதேன்? என்று அவர்கள் வினவுவதாக மெட்ரிக் பள்ளிகள் தமிழக அரசின் ஏற்புப் பெற்று நடத்தப்படுபவை? அதனால்தான் அவற்றுக்கு நாம் சிலவற்றை வலியுறுத்த நேர்கின்றது.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளோடு இவர்கள் ஏன் தங்களை ஒப்பிட்டுக் கொள்ள வேண்டும்?

இப்போதுதான் ஓர் உண்மையை உங்களுக்கு உணர்த்த வேண்டும். 1972இல் தான் பல்கலைக்கழகக் கட்டுப்பாட்டில் இருந்த மெட்ரிகுலேசன் பள்ளிகள் பள்ளிக்கல்வித்துறையின் கீழ் வந்தன. அப்போதிருந்த மெட்ரிகுலேசன் பள்ளிகள் : 30.

12.5.1996 வரை இயங்கிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் : 1427

அதாவது 24 ஆண்டுகளில் உருவான மெட்ரிகுலேசன் பள்ளிகள் : 1397 மட்டுமே

ஆனால் 13.5.96 முதல் 2000 வரை கல்வி அமைச்சர் பேராசிரியர் காலத்தில் இசைவு பெற்று நடத்தப்படும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் மட்டும் : 1141 என்பதை உணரவும்.

24 ஆண்டுகளில் 1397

4 ஆண்டுகளில் 1141

இதுதான் கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் காலத்தின் இமாலயச் சாதனை.

உண்மையிலேயே 1996 தேர்தல் முடிந்து ஆட்சி அமைந்தவுடனேயே இத்துறைப் பேராசிரியர் தம் காலத்தில் தமிழுக்கு ஆக்கம் சேர்க்கவேண்டுமென்று நினைத்திருந்தால் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதியில்லை என்று சொல்லி நிறுத்தியிருந்தால் பள்ளி நிர்வாகிகளுடன் பேசிய பிறகு 1 முதல் 5 வகுப்பு வரை 'தமிழ்வழி' எனும் நிபந்தனையோடு அனுமதி வழங்கியிருக்கலாமே!

ஏன் செய்யவில்லை?

கல்வி அமைச்சர் கவலைப்படவில்லை. கவனம் செலுத்தவில்லை. இப்போது முதல்வர் முடிவுக்கு விளக்கம் எழுதும்போதும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் சார்பாகவே பள்ளிக்கல்வித்துறை விளக்கம் எழுதுகிறது என்றால் அதற்குக் கல்வி அமைச்சர் மட்டுமே முழுப் பொறுப்பாவார்.

இதுதான் என் கருத்து.

'கல்வி வியாபாரம்' வளரவிட்டு விட்டு, அவர்களை வலிமையுள்ளவர்களாகவே ஆவதற்கு வழி திறந்து விட்டுவிட்டு நமக்கு அறை கூவல் விடக்கூடிய அளவுக்கு அவர்களைப் (பணப்) பலசாலிகளாக ஆக்கிவிட்டு -

"நாங்கள் அடிப்பதுபோல் அடிக்கிறோம்

நீங்கள் 'சரியாகவே' எங்களைத் திரும்பி அடியுங்கள்"

என்பது போலல்லவா இருக்கிறது இது.

பள்ளிக்கல்வித்துறை பாசாங்கு செய்தது. அவர்களைப் பலமாகத் திருப்பி அடித்துவிட்டார்கள்.

இன்று கை, கால் உடைந்து, முகத்தைப் பெயர்த்துக் கொண்டு வந்து நிற்கும் பள்ளிக்கல்வித்துறை, இந்த இழி நிலைக்குத் தாங்கள்தான் காரணம் என்பதையாவது உணருமா?

தமிழைத் தாய்மொழியாகப் பெற்றில்லாத 0.7% பேர்களுக்காக ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகள்? மீதி, தமிழைத் தாய்மொழியாகக்

கொண்டவர்களுக்கு ஏன் இந்தத் திணிப்பு? தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் கடைசிவரை தமிழைப் படிக்காமலேயே பட்டம் வாங்குவதற்கு இவர்கள் கூறும் தவறான விவாதம் தானே காரணம்?

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத 0.7% விழுக்காட்டினர் தமிழ்படிக்க பள்ளிக்கல்வித்துறை என்ன செய்தது?

அதிலும் அவர்கள் சரியாக நடந்துகொள்ளவில்லை என்பதை மற்றோர் இடத்தில் விளக்குவேன்.

அவர்களே தெளிவு படுத்திவிட்டார்கள்.

“தமிழ்வழியில் பயிற்றுவிப்பதை ஏற்காத மழலையர் பள்ளிகளை அரசு அனுமதிக்காது என்றாலும் அரசின் ஒப்புதல் இன்றி நடத்த வாய்ப்பு உள்ளது. கருநாடக உயர்நீதிமன்றத் தீர்ப்பில் பெற்றோர் தம் விரும்பும் மொழியில் பிள்ளைகளைப் படிக்க வைக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.“

இதன் உண்மை என்ன என்றால் 1.1.98 இல் விளம்பரம் விட்டதே பள்ளிக்கல்வித்துறை. அது உண்மையா? அல்லது நாடகமா?

இத்தகைய சூழல்கள் ஆராயப்படுமுன், பேராசிரியரே கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் 1990-91இல் அவர் செய்த மாபெருந்தவறுதான் இவர்களது பிற்காலச் சொதப்பலுக்குக் காரணம்?

அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 6 முதல் +2 வரையில் உள்ள வகுப்புகளில் அதிக அளவு ஆங்கில வழிப்பயிற்சியை அனுமதித்தவரே முதலில் சிறுபான்மையருக்கு என்று கேட்டார்களாம். இவர்கள் கொடுத்தார்களாம். இதைக் கொடுக்கும்போதே சிந்தித்திருக்க வேண்டும்.

1990-91இல் தொடங்கினார்கள் அரசுப்பள்ளிகளிலும் ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்பு என்று.

“பின்னர் கிராமப்புற மாணவர்கள் ஆங்கிலத் தேர்ச்சி பெறுவதற்கு ஆங்கில வழிப் பயிற்சி வேண்டுமெனமிகப் பிற்பட்ட மக்கள் சார்பாகவும் கேட்கப்பட்டு, கட்டணம் செலுத்திப் பயிலும் முறையில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவு (Section) அவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.”

முதலில் சிறுபான்மையினருக்காகக் கொடுத்தார்களாம். அடுத்து, கிராமப்புற மாணவர்களுக்காகக் கொடுத்தார்களாம். பின், மிகப்பிற்பட்ட மாணவர்களாக ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவு தொடங்கினார்களாம்.

'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்று இவர்களே உள்ளதாகச் சொல்லிவிட்டார்கள்.

1. மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஏராளமாக அனுமதித்து விட்டார்கள்.
2. அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளிலேயே ஆங்கிலவழிப் பயிற்சிக்கு அனுமதி கொடுத்துவிட்டார்கள்.
3. ஒவ்வொரு பள்ளியிலும் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவு ஆங்கில வழியில் பயில அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 'கொடுத்து வைத்துவிட்டு' யார் இந்தக் கெடுதலுக்குக் காரணமோ அவர்களையே 'தமிழ்மொழிக் கல்வி'க்கு ஆதரவாகக் கருத்துச் சொல்லச் சொன்னால் எப்படிச் சொல்வார்கள்?

'எங்களால் முடியாது' என்று தங்கள் கையாலாகத்தனத்தை வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை, அதனால்தான் விளக்கம் விளக்கெண்ணெய் தடவியுள்ளார்கள். செய்வதையும் செய்துவிட்டு அவர்களே நம்மிடம் திருப்பி ஒரு கேள்வி கேட்கிறார்கள்?

"மழலையர் பள்ளிகளில் 5ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் கல்வி வழங்க வேண்டும் என்று கூறும்போது 6ஆம் வகுப்பு முதல் அரசு பள்ளிகளில் ஆங்கிலப் பிரிவு அனுமதிக்கப்படுகிறதே என்னும் கேள்வி எழுகிறது" என்கிறார்கள்.

ஒரு பழமொழி உண்டு :

நாயை அடிப்பானேன் . . . .

அந்தக்கதையாக இருக்கிறது.

இன்னொன்றும் சொல்லலாம்.

"சும்மா இருந்த சிட்டுக் குருவிக்குச் சோற்றைப்
போடுவானேன்? அது
குண்டியைக் குண்டியை ஆட்டிக்கிட்டுக்
கொத்த வருவானேன்?"

என்பதும் பழமொழிதான்.

அரசுப்பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலப் பிரிவை அனுமதித்தது பேராசிரியர் தான்.

இப்போது 5ஆம் வகுப்புவரை தமிழ்வழியைச் செயற்படுத்தப் போவதும் பேராசிரியர் தான்.

ஆனால் அவர்களுக்கே தெரிந்துவிட்டது.

முன்னே செய்த முடிவு - முன்னே கொடுத்த அசடு - பின்னே எடுக்கப்பட இருக்கும் முடிவைச் சற்று இடிக்கிறது என்று அவர்களுக்கே தெரிகிறது.

சற்றே என்ன - பலமாகவே இடிக்கிறது. கேள்வியையும் அவர்களே எழுப்பிக் கொண்டு அதற்கொரு சொதப்பலான விடையையும் அவர்களே தருகின்றார்கள் பாருங்கள்.

“ஆங்கிலப் பிரிவு - விரும்பிக் கட்டணம் செலுத்திப் பயிலும் நிலை இருந்தாலும், தமிழில் பயில முடியாத மொழிச் சிறுபான்மையினரின் உரிமைக்காகவும் ஏற்கப்பட்டுள்ளது. இதனைக் கைவிடுவது என்று அரசு முடிவு எடுத்தாலும், பாமர மக்கள் அதை ஒரு முன்னேற்ற வாய்ப்பாகக் கருதுவதால் அவர்கள் உரிமை மறுக்கப்படுவதாகக் கருதுவர்.’’

எனவே பள்ளிக்கல்வித்துறை, சிறுபான்மையினரின் உரிமை என்று சொல்லி ஒரு தடையை அமைக்கிறது.

அடுத்த தடையையும் அமைக்கிறது. இருந்தாலும் இவற்றுக்கு ஒரு தீர்வு சொல்கிறார்களாம்!

“1999இல் 6ஆம் வகுப்பும், 2000ல் 7ஆம் வகுப்பும் என்றும், மேல் வகுப்பு வரையில் 7 ஆண்டு காலத்தில் ஆங்கிலப்பயிற்சி மொழிப் பிரிவைக் கைவிட வேண்டும்.’’

இப்படிச் சொல்லிவிட்டு, தடாலடியான ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறது பள்ளிக் கல்வித்துறை.

“ஓராண்டு ஆங்கிலம் வழி படித்த மாணவனை அதற்கு மேற்பட்ட வகுப்பில் தமிழ் வழி மாறச் செய்வதை நீதிமன்றம் ஏற்பது கடினம்’’ என்கிறது பள்ளிக் கல்வித்துறை.

நீதிமன்றம் ஏற்பது கடினம் என்று சொல்லிவிட்டு, முதல்வர் தன் திட்டத்தைக் கைவிடலாம் என்று மறைமுகமாக உணர்த்தும் பள்ளிக்கல்வித் துறை, தமிழ் வழிக்கல்விக்காக எப்படி உயர்நீதிமன்றத்தில் வாதாடியிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இவர்களே 'நீதிமன்றம் ஏற்காது' எனும் முடிவோடிருக்கும்போது, அதனை ஏற்கும்படியாகவா எடுத்துச் சொல்லி வாதிட்டிருப்பார்கள்? எண்ணிப்பார்த்தால் இவர்கள் 'வேடதாரிகள்' என்று தெரிந்துவிடுமே.

எனக்கு வருத்தமெல்லாம், கலைஞர் ஆட்சிக் காலத்தில், தமிழ்ப் பேராசிரியராக இருந்த, 'இனமானம்' பேணும் பேராசிரியர் கல்வி அமைச்சராக இருக்கும்போதா இப்படியொரு மோசமான முடிவு எடுக்கப்படவேண்டும் என்பதுதான்.

நான் பகிரங்கமாகவே சொல்கிறேன். தமிழ்வழிக் கல்வித்திட்டம் தோல்வி அடைந்தது என்றால் அதற்கு முழு முதற் காரணம் கல்வி அமைச்சர் - க. அன்பழகன் தான்.

அவர்மீது எவ்வளவோ மதிப்புடையவன் நான்; அவரை ஒருநாளும் குறைவாக எண்ணியதுமில்லை; பேசியதும் இல்லை. ஆனால் தமிழ்வழியில் கல்வி வருவதைப் பேராசிரியர் பெரிதும் விரும்பவில்லை என்பதே உண்மை.

89-91இல் அரசும் பள்ளிகளிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட ஆங்கிலவழிப் பிரிவுகளை அனுமதித்தவர்.

96-2000இல் 1121 மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி அளித்தவர்.

இவ்வளவையும் வளர்த்துவிட்ட பிறகு 'தமிழ்வழிக் கல்வி'யைக் கொண்டு வருவதில் தயக்கம் காட்டுகிறார்.

முதல்வர் அறிவித்தபின்பு, அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் எனும் முனைப்பு அவரிடம் இல்லை.

மாறாக, மழுப்பல் விடையேதான் உள்ளது. முதல்வரின் ஐந்தாவது முடிவு குறித்து, பள்ளிக்கல்வித்துறை தம் விடையை அலசி ஆராயவேண்டும்.

ஏனெனில், அது தனிக்கதை. மற்றோர் இடத்தில் பேசுவோம்.

முதல்வரின் அறிவிப்புகள் தொடர்பாகக் கோப்பு வந்தபோது நான் பின்வருமாறு எழுதினேன்.

1. தமிழகமெங்கும் உள்ள மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகச் சொல்லித்தரவேண்டும். அப்படிப்பட்ட பள்ளிகளுக்குத்தான் ஏற்பு அளிக்கப்படும். இதுகுறித்து 24.4.91ஆம் நாளிட்ட அரசாணை எண்.484-லும், 31.3.93ஆம் நாளிட்ட அரசாணை எண்.349-லும் விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி உட்பிரிவு 3-ல் மழலையர்

மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்ட விதிமுறை இப்போதும் ஆணை வடிவில் தரப்படவேண்டும்.

2. அடுத்த கல்வியாண்டு முதல் (1999 - 2000) பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியில் கற்பிப்பதற்காக வேறு ஒரு கோப்பில் சுற்றனுப்பப்படுவதாகக் கல்வித்துறைச் செயலாளர் பக்கம் 9-ல் குறிப்பிட்டுள்ளார்.

3. மூன்றாவதாக உள்ள அறிவிப்பு - தமிழ் மொழி வழியிலான மழலையர் பள்ளிகளுக்குச் சலுகைகள் வழங்குவது குறித்ததாகும். அதுகுறித்து இக்கோப்பிலுள்ள கருத்துருவை ஏற்றுக்கொள்ளலாம்.

இதில் பக்கம் 5-ல் 'ச' - "கட்டளை நிதி" குறித்தது. இதில் இயக்குநர் பரிந்துரையைச் செயலாளர் ஏற்கவில்லை. பள்ளி நடத்துபவர்களே வைப்பு நிதியாக வைக்கின்ற தொகைதான் இது. எனவே, இதையும் பாதியாகக் குறைப்பதில் தவறில்லை.

4. விதி 37-அ பற்றியது. அதில், தனிப்படிப்பு மற்றும் அரசின் ஏற்புப்பெறாத பள்ளிகளில் கல்வி பயின்ற குழந்தைகளை அரசின் ஏற்புப்பெற்ற பள்ளிகளில் சேர்க்கக்கூடாதென உள்ளது. அந்த விதியில் சிறு திருத்தம் செய்து, மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளைத் தனிப் படிப்பாகக் கருதி, அரசின் ஏற்புப் பெறாத பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை 1999-2000 கல்வியாண்டில் அனைத்து வகை அரசு ஏற்புப்பெற்ற பள்ளிகளிலும் வகுப்பு ஒன்று முதல் வகுப்பு எட்டு வரை சேர்க்கக்கூடாதென அறிவிக்கவேண்டும். இதில் விதித்தளர்வு செய்யாமலிருந்தாலேயே போதுமானது.

இந்தக் குறிப்புகளையும் இணைத்து, ஆணை வெளியிட்டால் - மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்புகள் முழுமையாகச் செயற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றுதான் நான் எழுதியிருக்கிறேன்.

இப்போது சொல்லுங்கள் :

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் தரப்பட்ட குறிப்புகட்கும் என் சார்பில் நான் எழுதிய குறிப்புகட்கும் பின்னால் ஏதோ ஒரு 'தொனி' இருக்கிறதா இல்லையா?

"கட்டாயம் வந்துதான் தீரவேண்டும்'' எனும் தொனிதான் என் எழுத்தில் உள்ளது.

இதே தொனி, பள்ளிக்கல்விதுறைதான் வரைவுகளில் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பினைத் தமிழர்களே! உங்களிடமே விட்டு விடுகிறேன்.

* * *

இந்த அறிவிப்புகள் தாள்களில் வந்தபின் எங்கு பார்த்தாலும் இதே பேச்சுத்தான். ஒவ்வொரு வீட்டிலும் படிக்கும் பிள்ளைகள் கட்டாயம் இருப்பார்கள். எனவே, எங்கள் அறிவிப்புடன் பற்றிய பேச்சுகளும் நடந்தாகவேண்டுமே!

அப்படிப்பட்ட சூழலை விளக்கியும், மேலும் சில விளக்கங்களைப் பெற்றும் 'சூனியர் விகடன்' சில செய்திகளை வெளியிட்டது. அதனை அப்படியே தருகிறேன்.

"உள்ளே தகித்துக்கொண்டிருந்த கனலை மறுபடி ஊதிவிட்டிருக்கிறது கலைஞர் அரசு.

எல்.கே.ஜி.யிலிருந்து எட்டாம் வகுப்பு வரையுள்ள அனைத்து ஆங்கிலப் பள்ளிகளிலும் அடுத்த கல்வியாண்டு முதல் பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் ஆகிய பாடங்களைத் தமிழில்தான் சொல்லித்தர வேண்டுமென தமிழக அரசு அறிவித்துள்ளது! அறிவிப்பு வெளியானதிலிருந்தே கல்வியாளர்கள், பெற்றோர்கள், ஆங்கிலப் பள்ளிகளின் கூட்டமைப்பினர் மத்தியில் வாக்குவாதங்கள். எதிர்ப்புகள், உணர்ச்சிகரமான ஆதரவுக் குரல்கள்!

கல்வித்துறையின் அமைச்சர் அன்பழகனாக இருந்தாலும், இந்த 'எங்கும் தமிழ்' கல்வித் திட்டத்தின் நாயகர் தமிழ்க்குடிமகன்தான்.

சென்னை கோட்டையில் தனது துறைச் செயலாளர்களுடன் முக்கிய ஆலோசனையில் இருந்த தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனைச் சந்தித்தோம்... நமது ஐயங்களைக் கேட்டோம் -

"ஏன் இப்படி ஒரு திடீர் அறிவிப்பு?"

"இது திடீர் அறிவிப்பு இல்லை. தமிழகத்தில் தமிழ் மொழியில்தான் பாடங்கள் நடத்தப்படவேண்டும் என விரும்பி, அதில் உள்ள சாதக பாதகங்களைப் பல வருடங்களாக நானே ஆராய்ந்து வந்தேன். நேரடியாகப் பல ஊர்களுக்குச்சென்று மக்களிடமும் ஆசிரியர்களிடமும் வேறு கல்வியாளர்களிடமும் விவாதங்களை நடத்தினேன். பிறகே இந்த முடிவுக்கு

வந்தேன். என் முடிவைக் கல்வியமைச்சர் அன்பழகனும் அப்படியே ஏற்றுக்கொண்டார்! அதைத்தான் முதல்வரும் திருப்தியடைந்து அறிவிப்பாக வெளியிட்டுள்ளார்! இது கலைஞர் ஆட்சி தமிழர்களுக்குச் செய்யும் பல கைம்மாறுகளில் மிக முக்கியமான ஒன்று!''

“தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்குப் போவதையும் ஆங்கிலத்தில் பேசுவதையும் பார்த்து மகிழும் பெற்றோரின் உரிமையில் தலையிடுகிற மாதிரி இது இல்லையா?''

“நீங்கள் குறிப்பிடும் அந்த மாதிரியான பெற்றோரைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அவர்களுக்கு விருப்பமிருந்தால் அரசின் அங்கீகாரத்திலிருந்து நீக்கப்படப்போகும் ஆங்கிலப் பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்பட்டும்! அவர்கள் குழந்தைகளும் ஆங்கிலத்திலேயே பேசட்டும்! ஆங்கிலத்தை மட்டுமே தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கும் பெற்றோர்கள், அவர்களது குழந்தைகளின் வேலை வாய்ப்புக்காகத் தமிழக அரசைத்தானே நாடி வரவேண்டும்! ‘அப்படியில்லை. எங்கள் பிள்ளைகள் தமிழக அரசிடம் வேலைவாய்ப்புக் கேட்கமாட்டார்கள்’ என்று கூறமுடியுமா? அல்லது பிள்ளைகளை ஆங்கிலம் மட்டுமே படிக்கவைக்கும்பெற்றோர், அவர்களைக் கப்பலேற்றி இங்கிலாந்துக்கு அனுப்பிவைக்கட்டும். அங்கே போய் அவர்கள் வேலை தேடிக்கொள்ளட்டுமே! ஆங்கில வழியில் முதுநிலைப் பட்டம் வரை பெற்றவர்கள் மொத்தம் நாற்பது லட்சம் பேர் (தற்போது 52 இலட்சம்) எங்கும் வேலை கிடைக்காமல் தமிழக வேலை வாய்ப்பகங்களில் பதிந்துவிட்டு நிற்கிறார்கள். இது தெரியுமா உங்களுக்கு?

இதேபோல் இந்தி படித்தால், வேலை வாய்ப்பு பிரகாசமாக இருக்கும் என்கிற பேச்சும், தமிழகத்தில் இருந்துகொண்டே இருக்கிறது! உத்தரப்பிரதேசத்தில் மொத்தப் பேரும் இந்தி படித்தவர்கள்தான்! அங்கே வேலை கிடைக்காமல் அறுபது லட்சம் பேர் திண்டாடுகிறார்களே? ஆக... படிக்கிற மொழிக்கும் வேலை வாய்ப்புக்கும் சம்பந்தம் இல்லை எனத் தெரிகிறது. அப்படியிருக்க, தமிழ் மாணவர்கள் தமிழிலேயே படித்துவிட்டுப் போகலாமே! நம் மொழியின் அருமையாவது அவர்களுக்குப் புரியும் அல்லவா?

என் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு புகாரை உங்கள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்! பிரபலமான ஆங்கிப் பள்ளி ஒன்றில் இரு மாணவர்கள் பள்ளி நேரத்தில் தமிழில் பேசினார்கள் என்று அவர்களைத் தண்டித்திருக்கிறார்கள்! தமிழ்நாட்டில் தமிழில் பேசுவதே குற்றமென்றல்லவா கற்பிக்கப்படுகிறது? இதைத் தடுப்பது யார்?

இன்னொரு முடிவையும் இந்த அரசு எடுக்கப்போகிறது. தமிழக அரசுப் பணியாளர்கள் அரசுத் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாலும்; அவர்கள் 'ஆட்சித் தமிழ்' என்கிற ஒரு தேர்வை எழுதினால்தான் அவர்களது தகுதிகாண் பருவம் (Probation Period) பூர்த்தியடைந்து அரசு வேலையில் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள்! இதற்கான அரசாணை சீக்கிரமே வரப்போகிறது!''

''ஏற்கெனவே 1971-ம் ஆண்டு ஒன்றாம் வகுப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரை அனைவரும் கண்டிப்பாக தமிழில்தான் படிக்க வேண்டும் என்று தி.மு.க. அரசு அறிவிப்பு செய்தது. ஆனால், அதை அமல்படுத்த முயன்று தோற்றுப்போனது. அதேபோல் இப்போதும் உணர்ச்சிவசப்பட்டு அறிவித்திருப்பது எங்கே போய் முடியும்? இந்த கம்ப்யூட்டர் யுகத்துக்கு இப்படி ஒரு தமிழ்வெறி தேவையில்லாதது என்று கான்வென்ட் நடத்துபவர்கள் சொல்கிறார்களே?''

''1971-ல் தி.மு.க. அரசு கொண்டுவந்த அந்தத் திட்டம் தோல்வியடைந்தது உண்மைதான்! அப்போதிருந்த கல்வியின் அமைப்பு, கல்லூரிகள் அமைப்பு அப்படியிருந்தது. அந்தத் திட்டம் தோற்றதற்குப் பின்னால் காங்கிரஸ் கட்சியின் கால் வாரிவிடும் திருப்பணியும் இருந்தது! இப்போது வந்திருக்கும் இந்த அறிவிப்பு அரசியல் ஸ்டண்ட் அல்ல! இந்த அறிவிப்புக்கு முன்னால் நானே பல ஊர்களுக்கு, பல ஆங்கிலப் பள்ளிகளுக்குச் சென்று ஆய்வுநடத்தி வந்துள்ளேன்! ஏற்கெனவே தோற்றதுபோல் இப்போதும் தோற்கக்கூடாதென்று உறுதியோடுதான் சகல வகையிலும் திட்டமிட்டு, அறிவிப்பை வெளியிட்டுள்ளோம்! பி.ஜே.பி., போன்ற கட்சிகளும் அமைப்புகளும்கூட இந்த அறிவிப்பை வரவேற்றுள்ளன? அ.தி.மு.க., ம.தி.மு.க, பா.ம.க. போன்ற கட்சிகளும் இந்த அறிவிப்பை விமரிசனம் செய்யவில்லை! இவர்கள் கண்டிப்பாக இதை எதிர்க்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்! எப்போது தமிழுக்கென்று முதல்வர் ஒரு தனி அமைச்சரை நியமித்தாரோ, அப்போதே இப்படிப்பட்ட திட்டங்களுக்கு வெற்றிதான் என்பது உறுதியாகிவிட்ட ஒன்று!''

''பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் ஆகிய பாடங்களை மட்டும் தமிழில் பயிற்றுவிக்கச் சொல்கிறீர்கள். அறிவியலை மட்டும் ஆங்கிலத்திலேயே கற்பிக்க அனுமதித்திருக்கிறீர்களே... அங்கேயே உங்கள் இயலாமை தெரிவதாக விமரிசங்களை கிளம்பியுள்ளதே?''

''அப்படியில்லை. அறிவியலையும் கண்டிப்பாகத் தமிழில்தான் பயிற்றுவிக்க வேண்டும்! ஆனால் அது உடனடியாக வேண்டாமென நிறுத்தி

வைத்துள்ளோம். மற்ற பாடங்களைத் தமிழில் பயிலும் மாணவர்கள் அதில் உள்ள சுகத்தை அனுபவித்தபின் 'எங்களுக்கு அறிவியலையும் தமிழிலேயே சொல்லித் தாருங்கள்' என்று கேட்கட்டுமே. அப்போது அதையும் தமிழில் போதிப்போம்! அதுமட்டுமல்ல, எட்டாம் வகுப்புவரை தமிழில் சொல்லித்தரவேண்டும் என்று முதல் கட்ட முடிவை செயல்படுத்திய பின், பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் நீடிக்கவும் யோசிக்கிறோம்!''

"மாநிலம் தழுவிய 'மக்கள் கருத்துக்கணிப்பு' நடத்தி, பெரும்பாலானவர்கள் விருப்பம் அறிந்து, அதன்படி இந்தப் புது திட்டத்தை அமல்படுத்தியிருக்கலாமே?''

"அதற்கு அவசியமே இல்லை. கண்டிப்பாகச் சொல்கிறேன்... இந்த அறிவிப்புக்குக் கண்டனங்களே இருக்காது! தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள் பலரும் இந்தத் திட்டம் வந்தால் நல்லதே எனப் பல்வேறு மேடைகளில் பேசியுள்ளார்கள். அதை அரசிடமும் தெரிவித்துள்ளார்கள்! அந்தக் கல்வியாளர்களும் அறிஞர்களும் தி.மு.க-வில் மட்டுமல்ல, தி.மு.க.-வுக்கு வெளியிலும் பொதுமக்களுக்கு மத்தியிலும்கூட இருக்கிறார்களே!" (ஜூனியர் விகடன் 25.11.98)

இந்த நூலை எழுதும் இவ்வேளையில்கூட (9.5.2002) என் கருத்து எதையும் நான் மாற்றிக் கொள்ளவில்லை; எதிலும் பின் வாங்கவில்லை; தவறான முடிவு எடுத்துவிட்டதாகவும் எண்ணவில்லை.

அதே எண்ணத்தோடு, அதே சிந்தனையோடுதான் இப்போது எழுதுகிறேன்.

முதல்வர் செய்த அறிவிப்பில் 'தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்குச் சில சலுகைகள் வழங்கப்படும்' எனத் தெரிவித்திருந்தார். அதன்படி, சலுகைகள் அடங்கிய ஓர் அரசாணையைப் பள்ளிக்கல்வித்துறை 27.11.98இல் பிறப்பித்தது. அறிவிப்பு வெளியான 11ஆம் நாளில் இந்த அரசாணை வந்தது.

அரசாணை (நிலை) எண் 421
நாள் : 27.11.98

படிக்கப்பட்டது:-

தொடக்கக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.
எண். 35483/தொக அ1/97, நாள்.17.11.98.

ஆணை:

அரசாணை (நிலை)எண்.377 பள்ளிக்கல்வித்துறை, நாள்.28.8.97 மற்றும் அரசு நேர்முகக் கடித எண்.37656/சி2/97-1 நாள் 10.11.97ல் அறிவித்துள்ளதற்கிணங்க மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகளில் பகுதி 1 மற்றும் பகுதி 2 ஆகிய மொழிப்பாடங்கள் தவிர்த்து பகுதி 3ல் கீழ் வரும் பாடங்களை (கணிதம், சமூக அறிவியல், வரலாறு மற்றும் புவியியல்) படிப்படியாகத் தமிழ் வழியில் போதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யத் தவறும் மழலையர் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி இரத்து செய்யப்படும் என்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் செயல்முறைகளின்படி மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்கள் வழியாக அனைத்து மழலையர் மற்றும் துவக்கப்பள்ளி நிர்வாகிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், இருப்பினும் குறிப்பிட்டு சொல்லத்தக்க ஒரிரண்டு பள்ளிகளைத் தவிர இதர பள்ளிகள் மேற்கூறப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றாமல் தொடர்ந்து அனைத்துப் பாடங்களையும் மொழிப்பாடங்களை தவிர்த்து ஆங்கில வழியிலேயே கற்பித்து வருகின்றன என்றும், இச்சூழ்நிலையில் தற்போது இயங்கிவரும் 2200 மழலையர் மற்றும் துவக்கப் பள்ளிகளிலும், வருங்காலத்தில் துவங்கவிருக்கும் பள்ளிகளிலும் தமிழ்வழிக் கல்வியை அறிமுகப்படுத்தி, படிப்படியாக தமிழ்வழிக் கல்வி முறையை செயல்படுத்தும் வகையில் ஏற்கனவே தமிழ்வழிக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ள மழலையர் மற்றும் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கும் இனிமேல் தமிழ்வழியில் பாடங்களை அறிமுகப்படுத்தவுள்ள மழலையர் பள்ளிக் குழந்தைகளுக்கும் சில சலுகைகள் வழங்கலாம் எனத் தொடக்கக்கல்வி இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார்.

2. தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்த பின் கீழ்குறிப்பிட்ட ஆணைகளை வெளியிடுகிறது.

1) தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகள் படி தமிழ் அனைத்து நிலைகளிலும் ஒரு பாடமாக (As a subject and Language) கற்பிக்கப்படவேண்டும்.

2) தமிழ்வழிக் கல்வியை அறிமுகப்படுத்தி படிப்படியாக தமிழ் வழிக் கல்வி முறையை செயல்படுத்தும் வகையில், ஏற்கனவே தமிழ்வழிக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ள மழலையர் மற்றும் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கும், இனிமேல் தமிழ் வழியில் பாடங்களை அறிமுகப்படுத்தவுள்ள மழலையர் பள்ளிகளுக்கும் குழந்தைகளுக்கும் கீழ்க் குறிப்பிட்டுள்ள சலுகைகள் வழங்கப்படும்.

தமிழ்வழியில் மூன்றாவது பகுதி பாடங்களை அதாவது கணிதம், சமூக அறிவியல், வரலாறு (மற்றும்) புவியியல் ஆகியவை (Part - III subjects) கற்பிக்கும் மழலையர் பள்ளிகளுக்கு அனுமதி / புதுப்பித்தல் கட்டணம் (Approval / Renewal fees) கீழ்க்கண்டவாறு பாதியாகக் குறைக்கப்படும்.

| | | ஏற்கெனவே உள்ள கட்டணம் ரூ. | குறைக்கப் பட்ட கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1. | பதிவுக் கட்டணம் | 500/- | 250/- |
| 2. | கட்டளை நிதி | | |
| | மாணவர் எண்ணிக்கை 100 வரை | 5000/- | 2500/- |
| | மாணவர் எண்ணிக்கை 101 முதல் 250 வரை | 75,00/- | 3750/- |
| | மாணவர் எண்ணிக்கை 251 முதல் 500 வரை | 15,000/- | 7,500/- |
| | மாணவர் எண்ணிக்கை 500க்குமேல் | 25,000/- | 12,500/- |
| 3. | ஒப்புதல் / புதுப்பித்தல் கட்டணம் | | |
| | மாணவர் எண்ணிக்கை 100 வரை | 150/- | 75/- |
| | மாணவர் எண்ணிக்கை 101 முதல் 250 வரை | 250/- | 125/- |
| | மாணவர் எண்ணிக்கை 251 முதல் 500 வரை | 400/- | 200/- |
| | மாணவர் எண்ணிக்கை 500க்குமேல் | 500/- | 250/- |

3) இவ்வாணை அடுத்த கல்வி ஆண்டு 1999-2000லிருந்து அமுலுக்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ. கௌரிசங்கர்
அரசுச் செயலாளர்.

பேராசிரியர் க. அன்பழகன் எங்கு பேசினாலும் தமிழ் பற்றித் தெளிவாகவே சொல்லிவிடுவார். அதில் நாங்கள் எப்போதும் குறை கண்டதில்லை.

"ஒசூர் பகுதியில் பள்ளிக் கூடங்களில் தெலுங்கு மொழியில் தொடர்ந்து கல்வி கற்பிப்பதில் அரசுக்கு தடையேதும் இல்லை. சிறுபான்மையின் மக்கள் வசிக்கும் பகுதியில் அவர்கள் விரும்பும் தொழில் கல்வி கற்கலாம். அந்தப் பகுதியில் இருப்பவர்கள் விரும்பினால் தமிழிலும், பாடங்கள் சொல்லித்தர அரசு ஏற்பாடு செய்யும்.

ஆங்கில மொழி ஒதுக்கப்படவில்லை. அதேசமயம் தமிழகத்தில் தமிழுக்குத் தரப்படும் இடத்தினை ஆங்கிலத்திற்குத் தர முடியாது. 3 ஆண்டுகால பரிசீலனைக்குப் பின்பு மழலையர் பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

தாய்மொழியில் கல்வி கற்பது மிகவும் அவசியமானது. தமிழில் பாடங்கள் நடத்தப்படாவிட்டால் தமிழ் தகுதியில்லாத மொழி என்று குழந்தைகள் மனதில் ஒரு கருத்து பதிந்துவிடும். தமிழில் படித்து அறிவாளி ஆகமுடியாது என்ற எண்ணத்தை ஆசிரியர்கள் மாற்றவேண்டும்."

இது, பேரா. க. அன்பழகன் தருமபுரி மாவட்டத்தில் பேசியது. முதல்வரின் அறிவிப்பை ஒட்டியகாலம் இது. (முரசொலி 3.12.98)

அதே காலகட்டத்தில் 'உலகத் தமிழாசிரியர்கள் மாநாட்டில்' நான் பேசியதையும் படித்துப் பாருங்கள். முதல்வர் அறிவிப்பினை அடியொற்றியே என் பேட்டி அமைந்திருப்பதைக் காணலாம்.

"எந்த ஒரு பள்ளியிலும், கல்லூரியிலும் நல்ல ஆசிரியர்களுக்கு எப்போதும் மதிப்பு கிடைக்கும். தமிழுக்கு கொண்டு செய்வதன் மூலமாக, தமிழாசிரியர்களுக்கு கூடுதல் பொறுப்பு உண்டு. தொடக்கப்பள்ளிகளிலேயே மாணவர்களுக்கு தமிழ் பாடம் சரியாக பயிற்றுவிக்கப்பட்டு விட்டால், மேல்நிலை ஆசிரியர்கள் மாணவர்களை எளிதாக ஒழுங்குபடுத்தி விடுவர். தமிழ் வாழ்வியல் மொழியாக இருக்கவேண்டும். இதற்காக அரசு பல திட்டங்களை செயல்படுத்தவுள்ளது.

மொத்தம் 38 நாடுகளில், 86 லட்சம் தமிழர்கள் உள்ளனர். கிட்டத்தட்ட ஒரு கோடி தமிழர்கள் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். தமிழகத்தில் 6கோடி பேர் உள்ளனர். ஆக மொத்தம் ஏழுகோடி தமிழர்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளனர். சிங்கப்பூரில் 467 தமிழாசிரியர்கள் உள்ளனர். மலேசியாவில் படிக்கும் 1.5 இலட்சம் மாணவர்களில், 75ஆயிரம் பேர் தமிழ் படிக்கின்றனர். மொரிஷியசில் 215 தமிழ் ஆசிரியர்கள் உள்ளனர். மொரிஷியஸ் நாட்டிற்கு முதுகலை பட்டம் பெற்ற ஆசிரியர் ஒருவர் இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட உள்ளார். தமிழ் மொழி வளர்ச்சிக்காக, 22 நாடுகளுக்கு, தலா

130 நூல்கள் வீதம், விலை மதிப்பு மிக்க, தரமான, மிகச் சிறந்த நூல்களை இலவசமாக அனுப்பிவைக்க உள்ளோம். இதற்காக ஐந்து லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆகமங்களையும், வேதங்களையும், மனுதர்மங்களையும் காட்டி, இனி யாரையும் மிரட்டிவிட முடியாது. விதையை செக்கில் ஆட்டி, அதை எண்ணெயாக பிழிந்து விற்பவர் பாவம் செய்தவர் என்று மனு தர்மம் சொல்கிறது. அப்படியென்றால், இனிமேல் யாரும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் பயன்படுத்தக் கூடாதா? தமிழுக்கு உரிய மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டியது எனது கடமை. என்னுடைய தலைமை இருக்கும் வரை, எனது பணியில் இனியாரும் குறுக்கீடு செய்ய முடியாது.

எனது கணக்குப்படி, அங்கீகாரம் பெறப்படாத 20 ஆயிரம் பள்ளிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஆனால், அந்த அமைப்பினர், 12 ஆயிரம் பள்ளிகள் தான் உள்ளன என்கின்றனர். இப்பள்ளிகளினால்தான், தமிழ்நாட்டில் தமிழ் வழி கல்விக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று இங்கு பேசியவர்களும் கூறினர். சட்டத்தில் 37 'அ' என்ற விதியின்படி, அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர்க்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் இவ்விதி தளர்வு செய்யப்பட்டு வந்துள்ளது. இனி இந்த ஆட்சியில் அந்த விதி எப்போதும் தளர்வு செய்யப்படாது.

தமிழ் வழிக் கல்வி முறையை தெலுங்கர் முன்னணி போன்ற மாற்று மொழியினர் அனைவரும் வரவேற்றுள்ளனர். ஆனால்,? நம்முடைய ஆசிரியர்களில் சில புல்லுருவிகளே, 'கணக்கு பாடத்தை தமிழில் நடத்தினால் மாணவர்களுக்கு புரியாது; வரலாறு, பூகோளம் பாடங்களை தமிழில் நடத்தினால் புரியாது' என்று எனக்கு கடிதம் எழுதியுள்ளனர். இவர்களை நாம் முதலில் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். தமிழ் படிக்காமல் இனிமேல் யாரும் இந்த மாநிலத்தில் பட்டம் பெறக் கூடாது.

தமிழ் மொழி வளர, முதலில் நாம் நம்முடைய பள்ளிகளை ஒழுங்காக நடத்த வேண்டும்.

தமிழ் மொழியில் வேலை வாய்ப்பு கிடைக்காது; ஆங்கிலம் படித்தால் தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நிலை உருவாக்கப்பட்டு விட்டது. பிரெஞ்சுக்காரர்கள் நம் நாட்டில் வலுவாக கால் ஊன்றி ஆட்சி செய்திருந்தால், நாம் பிரெஞ்ச் மொழியை படித்தால் தான் வேலை கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

தமிழ் மொழியை படித்தால்தான் வேலைவாய்ப்பு என்ற நிலையை உருவாக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி தெரியாமல் அரசு வேலையில் சேருபவர்கள், புரொபசனரி காலத்திற்குள் ‘ஆட்சித் தமிழ்’ என்ற பாடத்தை படித்து, தேர்வு எழுதி, வெற்றி பெற வேண்டும். அப்போதுதான் அவர்கள் பணியில் நீடிக்க முடியும். இல்லாவிட்டால், வேலையை விட்டு போய்விட வேண்டியதுதான். அதற்கான பாடப்புத்தகம் தயாராகிக் கொண்டிருக்கிறது. வெகு விரையில் வெளியிடப்பட்டு விடும்.

(பிற்பகல், ‘இதழ்’ 3.12.98)

8.12.98 இல் பேராசிரியர் க. அன்பழகன் பேசிய பேச்சு இது.

“தமிழை வீழ்த்த ஒரு கூட்டம் வெளியே அமர்ந்து சதி செய்து கொண்டு இருக்கிறது. அந்த கூட்டத்தின் திட்டங்களை முறியடிக்க தமிழ் அறிஞர்களால்தான் முடியும்“

எனவே அரசு அறிவித்த திட்டங்களுக்கான சிலரது எதிர்ப்பை க. அன்பழகன் சுட்டிக் காட்டுகிறார் என்று கொள்ளலாம். இது ஒரு நூல் வெளியீட்டு விழாவில் பேசியது. (மாலை முரசு, 8.12.98)

தமிழக அரசின் விருது வழங்கும் விழாவில் பேராசிரியரும் நானும் விருது பெற்றோரும் கலந்து கொண்ட கூட்டத்தில் முதல்வர் கலைஞர் பின்வருமாறு பேசினார்.

“கழக அரசு என்றென்றும் தமிழுக்காக வாழும் தமிழர்கட்காக நலம் பல செய்யும்'' (முரசொலி 25.12.98)

16.11.98 இல் அறிவிப்பு வெளிவந்ததையும், பள்ளிக் கல்வித்துறையையும் அதற்குத் தந்த விளக்கக் குறிப்புகளையும் பார்த்தோம். பள்ளி நிர்வாகிகள் பலர் உடனடியாக பாடம் 3 இல் உள்ள எல்லாப் பாடங்களையும் தமிழில் நடத்த இயலாது என்றும் படிப்படியாக நடத்தலாம் என்றும் தெரிவித்தார்கள்.

இது தொடர்பாக முதல்வர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதன் விவரம் முழுவதையும் அப்படியே தருகிறேன்.

“16.11.98 அன்று தமிழக அரசின் சார்பில் அறிவித்தவாறு மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக நடத்துவதோடு பிற பாடங்களை ஆங்கில மொழியில் நட.த்துவதை மாற்றி குறைந்தது மூன்றில் இரண்டு பாடங்களையாவது அதாவது சமூகவியல் (பூகோளம், வரலாறு உள்ளடங்கிய), கணிதம், அறிவியல் ஆகிய மூன்றில் இரண்டு

பாடங்களை தமிழ் வழியில் (through the medium of Tamil) அடுத்த கல்வி ஆண்டு முதல் கற்பிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது.

ஏற்கனவே கல்வித் துறையினுடைய ஏற்பு பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளானாலும் வருகிற ஆண்டில் மூன்றில் இரண்டு பாடங்களை தமிழில் பயிற்றுவிக்க முன் வருகின்ற பள்ளிகளுக்குத்தான் தொடர்ந்து ஏற்பு வழங்கப் பட்ட பள்ளிகளில் படிக்கிற - படித்த மாணவ மாணவியர்தான் அரசு அங்கீகரித்த பள்ளிகளில் சேருவதற்கு தகுதி பெற்றவர்கள் ஆவார்கள்.

ஏற்பு பெறாத பள்ளிகளில் படித்தவர்கள் யாராயினும் அவர்கள் சேர விரும்புகிற பள்ளிகளில் நடத்தப்படுகின்ற தேர்வின் அடிப்படையில்தான் உரிய வகுப்புகளில் சேர்க்கப்படுவார்கள்.

தமிழ்மொழி வழியில் இயங்குகின்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படுவதோடு இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாட நூல்கள் அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு அறிக்கையில் (மக்கள் குரல் 12.1.99) கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அதிரடி மாற்றம் வேண்டாம்; படிப்படியாகக் கொண்டு செல்லலாம் என்றதால்தான் அறிவியல் (Science) பாடத்தை மட்டும் பின்னர் பார்த்துக் கொள்ளலாம். பிற பாடங்களைத் தமிழில் நடத்தவேண்டும் என்று அறிவிப்புச் செய்தோம். தற்போது ஆய்வுக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு பாடங்களை நடத்தவேண்டும் என்று 'இறங்கி' வந்துள்ளோம். அதன்படி பார்த்தால் 'அறிவியல்' போன்ற ஏதாவதொரு பாடம் தொடர்ந்து ஆங்கில வழியிலேயே பயிற்றுவிக்கப்படலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது என்பதை அறிய முடியும்.

இதில் கூடுதலாக ஓர் அறிவிப்பு உள்ளது. தாய்த் தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கட்குப் பாடநூல்கள் அனைத்தும் அரசின் சார்பில் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. இது ஏற்கெனவே 16.11.98 அன்று நான் எழுதிக் கொடுத்த அறிக்கையில் உள்ளது என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

இதன் அடிப்படையில் 13.1.1999 ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. அரசு ஆணை (நிலை)எண்.6 இதன் உள்ளடக்கம் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது.

இந்தக் கால கட்டத்தில் "உயர்கல்விக்குழு" கூடி ஆய்வு செய்து சில முடிவுகளை வெளியிட்டுள்ளது. கல்லூரிகளில் அதிலும் பொறியியல்,

மருத்துவம் சட்டம் போன்ற படிப்புகளிலேயே தமிழின் தேவை உள்ளது என்பதை வலியுறுத்தி அந்தத் தீர்மானம் அமைந்தது.

"தமிழ்நாடு உயர்கல்வி கவுன்சில் டாக்டர் ஆனந்தகிருஷ்ணனை தலைவராகவும் டாக்டர் முத்துக்குமரனை செயலராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் தமிழக பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளில் மொழிப்பாடத்திட்டங்கள் எந்த முறையில் அமையவேண்டும் என்பதை பற்றி ஆராய தமிழ்நாடு உயர்கல்வி கவுன்சில் முடிவு செய்தது.

இதற்காக நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவில் சென்னை பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறை தலைவர் பொன். கோதண்டராமன், தமிழ் மொழித் துறை தலைவர் இ. சுந்தரமூர்த்தி, ஆங்கிலத்துறை தலைவர் சி.தா. இந்திரா, பாண்டிச்சேரி தமிழ்த்துறை தலைவர் அறவாணன், இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவன இணை இயக்குனர் ஞானசுந்தரம், கோவை பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் கோபாலன் ஆகியோர் இடம் பெற்றனர்.

அக்குழு செய்துள்ள பரிந்துரைகள் வருமாறு:

பொதுவாக மொழிப்பயிற்சி குறித்து கூறப்படும் குற்றச்சாட்டு என்னவென்றால், பட்டப்படிப்பு முடித்த மாணவர்கள் கருத்துக்களை விவரிக்கவும், எடுத்துக்கூறவும் இயலாத நிலையில் உள்ளனர். இது அவர்களது வேலை வாய்ப்பை பாதிக்கிறது. உயரிய சிந்தனைகளையும், கொள்கைகளையும் பின்பற்ற தூண்டும் வகையில் மொழிப்பாடங்கள் அமையவேண்டும். கலை அறிவியல், வணிகவியல் பட்டப் படிப்பில் நான்கு தாள்களாக இரண்டு ஆண்டுகளில் தமிழ்ப்பாடம் இடம்பெற வேண்டும். கால்நடை, வேளாண் பல்கலைக்கழகங்களில் இடம் பெற்றுள்ள தமிழ் மொழிப் பாடம் சீரமைக்கப்படவேண்டும். வகுப்பு நேரம் கூட்டப்பட வேண்டும்.

தற்போது சட்டம், பொறியியல், மருத்துவம் ஆகிய பட்டபடிப்புகளில் தமிழ் மொழிப்பாடம் இல்லாமல் உள்ளது. சில படிப்புகளில் ஆங்கிலப்பாடம் மட்டும் உள்ளது. தமிழ் வழி ஆட்சி பற்றி பேசும் இக்காலத்தில் சட்டம், பொறியியல், மருத்துவம் ஆகியவற்றிலும் தமிழ் மொழிப்பாடத்தை கட்டாயம் இடம் பெறச் செய்ய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது."

உயர்கல்வியிலேயே தமிழ்வழிக்கல்வி அமைந்தால்தான் தங்கள் முழுச் சிந்தனையையும் பயன்படுத்தி, ஒவ்வொருவரும் திறம்படப் பேசவும், எழுதவும், சிந்திப்பதைத் தடுமாற்றமின்றி, உணர்த்தவும் முடியும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அப்படியிருக்கும்போது? தொடக்கக்கல்வியில்

தமிழ் வழியில் பாடங்கள் நடப்பதில் ஏன் இந்தத் தடுப்புகள், தகராறுகள் எல்லாம்?

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி 'தமிழ் வழிக்கல்வி எழுச்சி மாநாடு' நடத்தியது. அதில் பேசிய கல்வி அமைச்சர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"தமிழ்வழிக் கல்வி எழுச்சி மாநாட்டில் கலந்துகொள்வதில் பெருமைப்படுகிறேன். நான் நீண்டகாலமாக எந்த பலன், எந்த குறிக்கோளோடு இயக்கத்தில் சேர்ந்தேனோ, எந்த நோக்கத்தில் பொது தொண்டில் ஈடுபட்டேனோ அதை எல்லாம் உறுதிமொழியாக எடுத்துக்கொண்டீர்கள். தமிழக ஆசிரியர்கள் பெருமைக்கு உரியவர்கள் கல்வி தரத்தை ஆசிரியர்கள் உயர்த்த வேண்டும். வருங்கால தமிழகம் உங்கள் கையில் உள்ளது. அவர்களுக்கு கல்வியியை சிறப்பாக போதியுங்கள். எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உருவாக்க உள்ளீர்கள். சிறப்பான கல்வியை மாணவர்களுக்கு போதிப்போம் என்ற உறுதிமொழியை பின்பற்றுங்கள். தமிழக வருங்காலம் ஒளி உடையதாகும். தமிழ்வழி கல்வியை அரசு கல்விகளில் பயிலும். மாணவர்கள் 1¼ கோடிக்கு மேற்பட்டவர்கள் பயிலுகிறார்கள். மற்ற மாநிலத்தில் தமிழில் வல்லவர்கள் இருக்கிறார்கள். தாய்மொழியில் குழந்தைகள் பயில்வதை பலரும் வரவேற்றனர். 100-க்கு 2பேர் தான் வேறுமொழியை படிக்கிறார்கள். பெற்றோர்கள், குழந்தைகளை தமிழ்வழி கல்வியியை படிக்க செய்யவேண்டும். 5 வயதுக்கு உட்பட்ட மழலைகள் நர்சரி பள்ளிகளில் சேர்க்கிறார்கள். 2500 நர்சரி பள்ளிகூடம் உள்ளது. இதில் 5 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆங்கில வழியை படிக்கிறார்கள். இதைமாற்ற வேண்டும். இந்த குழந்தைகள் தமிழ்வழி பாடத்தை படிக்க வேண்டும்.

வசதி படைத்தவர்கள் குழந்தைகளை ஆங்கில பள்ளியில் சேர்க்கிறார்கள். அறிவாளிகள் கருத்தை தெரியாதவர்கள் இதைசெய்கிறார்கள். நர்சரி ஆங்கில பள்ளிகளை முறைப்படுத்த திட்டமிட்டேன். தமிழக பிள்ளைகளுக்கு தாய்மொழி தமிழை சொல்லி கொடுங்கள் என்று நர்சரிபள்ளி நிர்வாகிகளிடம் கூறினேன். நடப்பாண்டு 3 பாடங்களில் ஒரு பாடத்தை தமிழ்மொழியில் நடத்துங்கள் என்று கூறினேன். சிலர் மட்டும் என் வேண்டுகோளை கேட்டனர். இவர்களை வாழ்த்துகிறேன். மற்றவர்கள் கேட்க தவறிவிட்டனர். எனவே இதில் முதல்வர் தலைமையில் ஆய்வு கூட்டம் நடத்தி, நர்சரி பள்ளிகளில் 3-ல் 2 பாடம் தமிழ்வழி நடத்தினால் தான் ஒப்புதல் கிடைக்கும் என்று அறிவித்து விட்டோம். அதற்குள் தமிழ் சான்றோர்கள் பெரிய உண்ணாவிரதம் இருந்தனர். அப்போது சில உறுதி அளித்தோம். 100-க்கு 90 பேர் தமிழில் படிக்கிறார்கள். ஆகவே அரசு தமிழ் வழி கல்வியை படிப்படியாக நிறைவேற்றும். நீதிமன்றம் எங்கள் பணியை தடுக்காவிட்டால் தமிழ்வழிக்கல்வியை 2 ஆண்டில் அமுல்படுத்துவோம்.

தமிழ்வழி பாடமொழி குறிக்கோளை நிறைவேற்ற ஆராய அரசு முன்னாள் நீதிபதி மோகன் தலைமையில் குழு அமைத்தது. இந்த குழு நல்ல கருத்தை தெரிவிக்கும். அதை அரசு அமுல்படுத்தும். அரசு ஆற்றும் பணிக்கு நல்ல பலன் கிடைக்கும். அணுகுண்டு வெடிக்க செய்த தமிழகத்தை சேர்ந்த அப்துல்கலாம் அறிவை நாடு போற்றுகிறது. எங்கு தமிழ் பற்று உள்ள இளைஞன் உருவாகிறானோ அங்கு தமிழ் உயரும். ஆசிரியர்களுக்கு பல பணி இருந்தாலும், தமிழ் ஆர்வத்தை மாணவர்களுக்கு ஊட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'' இதுதான் அவர் பேசியது.

அவர் சொல்வதைப் பார்த்தால் தமிழ்வழிக் கல்வியைக் கட்டாயம் கொண்டு வந்துவிடுவோம் என்று அவர் உறுதியெடுத்துக்கொண்டு செயல்படுகிறார் என்றே தோன்றும். ஆனால் பள்ளிக் கல்வித்துறை தந்துள்ள அறிக்கையைப் பாருங்கள். தமிழ்வழிக் கல்வியைக் கைவிட்டு விட்டு அவ்வப்போது 'அறிவுரை' கூறிக் கொண்டிருந்தால் போதும் என்பதுபோல அமைந்திருப்பதைக் காணலாம்.

தமிழ்ச் சான்றோர் பேரவை நடத்திய உண்ணாநோன்பின் போதும் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வைச் சொன்னாரா என்றால் இல்லையென்றே சொல்லலாம்.

நீதியரசர் மோகன் குழுவின் பரிந்துரைகள் மீது முடிவெடுக்கக் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வி அமைச்சரின் அணுகுமுறை எப்படி இருந்தது?

எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கிறேன்.

''தமிழை பாடமாக கற்பிக்காத பள்ளி அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்ததற்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று தோழர்கள் மகிழ்ச்சியோடு தீர்மானம் போட்டுள்ளார்கள். இவர்கள் மகிழ்ச்சியடைய வழியில்லை. நான் முன்பே குறிப்பிட்ட 1974 முதல் 2001 மார்ச்சு வரை இந்தக் கண்டிப்பான விதியைத் தளர்வு செய்தே ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

அந்த விதி உறுதியுடன் கடைப்பிடிக்கப்படவில்லை

அதுமட்டுமன்று 10.5.2002இல் கூடத் தொடக்கக்கல்வி இயக்குநர் இந்த விதிக்குத் தளர்வு கூறி ஓர் ஆணைபிறப்பித்துள்ளார். 1974 முதல் 2002 வரைக்கும் கூட நாம் எந்த நாளிலும் இந்த விதியைக் கடைப்பிடிக்கவில்லை.

எனவே, தீர்மானம் போட்ட தோழர்கள் சிந்திக்கவும். அடுத்த தீர்மானம்.

“ஆங்கில வழி கற்பிக்கும் மெட்ரிகுலேசன் பள்ளி தொடங்க அனுமதி தரக்கூடாது'' என்று தீர்மானம் போட்டுள்ளார்கள்.

அவர்களுக்குத் தெரியாமல் போன உண்மை இதுதான். தமிழ்நாட்டிலேயே தன் ஆட்சிக் காலத்தில் குறைந்த ஆண்டுகளில் அதிக அளவு மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதியளித்த ஒரே பெருமகன் கல்வி அமைச்சர் க. அன்பழகன் தான். பின் ஏன் அவரை வைத்துக் கொண்டே தீர்மானம் போடவேண்டும்? நடக்குமா? பேராசிரியர் காது கொடுத்துக் கேட்பாரா? கேட்டாரா?

ஆனால், நானோ கண்டிப்பாகப் பேசிக்கொண்டிருக்கிறேன். செயற்படுத்த வேண்டிய துறையோ பள்ளிக்கல்வித்துறை.

அதனை நேரடியாகக் கட்டுப்படுத்த முடியாத நான் கண்டிப்புடன் பேசுவது சரிதானா என்று எண்ணவேண்டியதாகிவிட்டது.

**7.6.99** அன்று நீலகிரி மாவட்ட ஆட்சிமொழிக் கருத்தரங்கில் பேசினேன். அங்கும் கூட என் கருத்தை வலியுறுத்தினேன்.

“மழலை பள்ளிகளில் கண்டிப்பாக தமிழ் புலமை பெற்ற ஆசிரியர்களால் தமிழ் பாடம் கட்டாயமாக கற்பிக்கவேண்டும். அப்படி கற்பிக்கும் பள்ளிகளுக்குதான் அரசு தேர்வு சான்றுகள் வழங்கும். இல்லை எனில் சான்று கேட்டு அரசிடம் வரக்கூடாது“ என்று பேசியுள்ளேன் (தினத்தந்தி **8.6.99**)

**12.7.99**இல் மு.க. வள்ளலார் விழாவில் பேசும்போது கூடக் குறிப்பிடுகிறார். (முரசொலி 13.7.99)

“எப்படித் தமிழ்மொழியை. . . . கொள்கிறேன்''

இதிலே முதல்வர் உறுதியாக இருக்கிறார்; கடைசிவரை உறுதியாக இருந்தார் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட வேண்டும். (ஒரு காலகட்டத்துக்குள் அவரது கருத்திலும் சில மாற்றங்கள்; அதனைப் பின்னர் கூறுவேன்)

இதற்கிடையில், தமிழ்ச் சான்றோர் உண்ணா நோன்பு, நீதிதியரசர் மோகன் தலைமையில் உயர்மட்டக்குழு அமைப்பு, மோகன்குழு அறிக்கை, அமைச்சரவை முடிவு என்று பல நிகழ்ச்சிகள் நடந்து முடிந்துள்ளன (இவைபற்றி உரிய இடங்களில் எழுதியிருக்கிறேன்) இவற்றின் அடிப்படையில் **19.11.99** அன்று புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்:324/19.11.99 அதனைப் பார்க்கவும் (ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது)

இது தொடர்பான செய்திகளுக்குப்பின் என் நேர்காணல் செய்திகளின் சுருக்கம் இதுதான். (தினமலர் 26.11.99)

"தமிழ் சான்றோர் பேரவையினர் உண்ணாவிரதம் இருந்தபோது, ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, பள்ளிகளில் தமிழை பயிற்றுமொழியாக அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டது. நீதிபதிமோகன் தலைமையிலான இந்த உயர்மட்டக்குழு, தமிழறிஞர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்தாலோசித்து, அரசுக்கு சில பரிந்துரைகளை செய்தது. இவற்றின் மீது மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் வாரியங்களின் கருத்துக்களும் கேட்கப்பட்டு, அரசு சில உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறது.

குழுவின் சில பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சில பரிந்துரைகள் ஆய்வில் உள்ளன. அரசின் பயிற்று மொழிக் கொள்கை தொடர்பான அரசு உத்தரவுகள் செல்லும் என்று நீதிமன்றங்கள் பல தீர்ப்புகளில் கூறியிருப்பதால், சட்டம் இயற்ற வேண்டியதில்லை. அரசு உத்தரவுகளின் மூலமே செயல்படுத்த முடியும்.

எனவே, அரசு உத்தரவாகவே பிறப்பிக்கப்பட்டுள்ளது. 41ஆயிரம் அரசுப் பள்ளிகளிலும், நர்சரிப் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் கட்டாயமாக தாய்மொழி அல்லது தமிழ்மொழியை பயிற்று மொழியாக மாற்றியமைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளுக்குள் தமிழ்மொழியை பயிற்று மொழியாக்க வேண்டும் என்றும் அடுத்தாண்டிலிருந்து முதல்வகுப்பிற்கு கட்டாயமாக தமிழ் பயிற்றுமொழியாகவும், படிப்படியாக மேல் வகுப்புகளுக்கும் பயிற்றுமொழியாகவும் மாற்றம் செய்யவேண்டும் என்று கூறியுள்ளோம்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிப்பள்ளிகள் ஆயிரத்து எட்டு உள்ளன. இவற்றில் தமிழை ஒரு பாடமாக வைக்க வேண்டும் என்று கூறியுள்ளோம். இதைத் தவிர சி.பி.எஸ்.இ., பள்ளிகள் 187, ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் 41 உள்ளன. இவற்றிலும் தமிழ் மொழி பாடத்தைக் கொண்டு வர ஆய்வு செய்து வருகிறோம். தமிழகத்தின் அனைத்து துறைகளிலும் தமிழில் அரசு உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அறநிலையத்துறை,

சட்டத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை ஆகிய துறைகளில் எல்லா ஆணைகளும் முழுமையாக தமிழிலேயே வெளியிடப்படுகின்றன.

மற்ற துறைகளிலும் 3 மாதத்திற்குள் அனைத்து உத்தரவுகளையும் தமிழில் வெளியிட தொடங்க வேண்டும் என்று கோரியுள்ளேன். மேலும், அதிகாரிகளும் தமிழில் கையெழுத்திட வேண்டும் என்று கேட்டுள்ளேன். ஏற்கனவே அமைச்சர்கள் தமிழில் தான் உத்தரவுகளையும், கையெழுத்தையும் எழுதவேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். கர்நாடகத்தில் தொலைபேசி உபயோகிப்பாளர் புத்தகத்தை (டெலிபோன் டைரக்டரி) முழுக்க முழுக்க கன்னடத்தில் அச்சடித்து வெளியிட்டுள்ளனர். இதேபோல், தமிழகத்திலும் தொலைபேசி புத்தகத்தை தமிழில் அச்சடிக்க தொலைபேசித் துறையை அணுகியுள்ளோம்.''

இதில் பல்வேறு செய்திகள் இடம்பெற்றுள்ளன. என் ஈடுபாடு, என் துறையின் பணிகள் ஆகியவற்றைப் பற்றி ஒரு மீள் பார்வையாகவும் இந்த நேர்காணல் செய்திகள் அமைந்துள்ளன.

இது தொடர்பான செய்திகள் எல்லா இதழ்களிலும் வெளிவந்தன. 19.11.99ஆம் நாளே அரசாணை பிறப்பிக்கப்பட்டாலும் அவை வெளியுலகத்துக்குத் தெரியாமலே வைக்கப்பட்டிருந்தன. நானும் ஒரு வாரமாகப் பார்த்தேன். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கல்விஅமைச்சர் செய்தியாளர்கள் கூட்டத்தைக் கூட்டி இந்த அரசாணைகளின் படிகளை வழங்கியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால், என்ன காரணத்தாலோ அவர் வாயைத் திறக்கவே இல்லை. வேறு வழியில்லாத காரணத்தால் 26.11.99 அன்று நானே செய்தியாளர்களை வரச்சொல்லி அரசாணையின் படிகளைக் கொடுத்தேன். அதன்பின்தான் வெளியுலகம் தெரிந்து கொண்டது.

'Indian Express' இதழ் எப்படி எழுதுகிறது பாருங்கள்

"Disclosing this to Journalists at the Secretariat" என்று எழுதுகிறது.

வெளிப்படுத்தப்படாமல் இருந்ததை நான் வெளியிட்டேன் என்கிறது இதழ். தமிழன்பர்கள் இந்த இடத்தைப் புரிந்து கொள்ளவேண்டுகிறேன்.

நல்ல நாளிலேயே சிலர் 'ஆ' 'ஊ' என்று குதிப்பார்கள். பெரிய அளவில், தமிழ்வழிக் கல்வி பற்றி அரசாணை பிறப்பித்தபின் வாளா இருப்பார்களா? சில இடங்களில் நாங்கள் தமிழைத் திணிக்கிறோம் என்று கூடச் சொல்லத் தொடங்கினார்கள். இது குறித்து முதல்வரிடம் பேசினேன்.

விரிவான ஓர் அறிக்கை கொடுக்கலாம் என்றார். நானே அந்த அறிக்கையை உருவாக்கினேன். முதல்வரின் ஒப்புதலோடு 'அரசு அறிக்கையாகவே அது வெளியிடப்பட்டது.

மழலையர், மெட்ரிகுலேசன் பள்ளியினரின் சில தகாத போக்குகளையும் சுட்டிக் காட்டுவதாக, பல நாள் மோசடிகள் சிலவற்றை அம்பலப்படுத்துவதாக அந்த அறிக்கை அமைந்தது.

தமிழ் மொழித் திணிப்பு இல்லை

தமிழ் மொழியை அரசு திணிப்பதாகச் சொல்வது ஏற்கத்தக்கதல்ல என்று தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக புதன்கிழமை அரசு வெளியிட்ட அறிக்கை:

அரசின் சார்பாக பள்ளிகள் 40ஆயிரத்திற்கு மேல் இருந்தும் மெல்ல மெல்லத் தனியார் நடத்தும் மழலையர் பள்ளிகள் பெருகத் தொடங்கின. அவர்களும் பாடங்களைத் தமிழில் நடத்தி, சீருடை, கட்டொழுங்கு போன்றவற்றைக் கடைப்பிடித்து நடத்தியிருந்தால் இப்போது இச்சிக்கல் நேர்ந்திருக்காது. தமிழறிஞர்கள் போராட்டக் களத்தில் இறங்கிட வேண்டியதும் இல்லை. அரசு ஆணை பிறப்பிக்கவும் வேண்டியதில்லை.

ஆனால், மழலையர் பள்ளிகள் கல்வித்தொண்டு புரிவதற்கு மாறாகப் பணப்புழக்கத்துக்கு வழிவகுக்கும் வணிக நிறுவனங்களாகச் செயற்பட முற்பட்டது தான் இப்போதைய கிளர்ச்சிக்குக் காரணம். அதனோடு தமிழை அறவே கைவிட்டு, முற்றிலும் ஆங்கில மயமாக அவை ஆன பிறகுதான் அரசு ஆணை பிறப்பிக்க நேர்ந்தது.

அப்பா, அம்மாவைக்கூட டாடி, மம்மி என்று சொல்ல வைத்த அயற்கலாசாரம், பள்ளி வளாகத்துக்குள் தமிழில் பேசினால் தண்டனை என்று வரம்பு மீறிய செயல்கள் அதிகமானதால் அரசு கட்டாயம் தலையிட்டுத் தீரவேண்டியதாயிற்று.

இதையும் அரசு தன்மூப்பாகச் செய்திடவில்லை. நீதிபதி மோகன் தலைமையில் குழு அமைத்து அனைத்துத் தரப்பினரின் கருத்துகளும் கேட்கப்பட்டன. பொதுமக்களையோ, பெற்றோர்களையோ, மழலையர் பள்ளி நிர்வாகிகளையோ கலந்து பேசவில்லை. கருத்துக்கேட்கவில்லை என்பது அப்பட்டமான பொய்யாகும். இது நீதிபதியின் முறையான நடவடிக்கைகளையே விமர்சனம் செய்வதாகும்.

அதன்பின் குழு உறுப்பினர்களின் அறிக்கை, பள்ளிக் கல்வித்துறையின் குறிப்பு, அமைச்சரவை முடிவு எனும் முறையான ஆய்வுக்குப் பின்புதான் அரசாணைகள் வெளியிடப்பட்டன. எனவே, இதில் அரசு அவரப்பட்டு எதையும் செய்திடவில்லை.

ஆணையை மறுக்கும் மழலையர் பள்ளியினர் அரசு ஏதோ மாணவர் நலனுக்கு எதிராகச் செயற்படுவதாக வேறு கூறியிருக்கிறார்கள். ரூ.4144கோடியைக் கல்விக்காக ஒதுக்கி, இலவசப் பேருந்துச் சலுகையும், சீருடைகளும் இலவசப்பாட நூல்களும், கல்வி உதவித்தொகையும் (Scholarship) வழங்கி நலம்பேணும் அரசைவிட இவர்கள் தான் நலம் பேணுகிறார்கள் என்பது நகைப்புக்கு இடமானது.

படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் பல பட்டதாரிகளை ரூ.500-க்கும் ரூ.600-க்கும் வேலைக்கு அமர்த்தி மலிவு விலையில் கிடைக்கும் சரக்கு என்பது போல் ஆக்கித் தகுதி படைத்த பலரின் உழைப்பைச் சுரண்டுபவர்கள் யார் என்பது நாட்டுக்குத் தெரியும். ஆசிரியப்பயிற்சியே பெறாத பலர் தெருவுக்குத் தெரு மழலையர் பள்ளிகளைத் தொடங்கி நடத்துவதையும் அரசு அறியும்.

சில மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழ் ஒரு விருப்பப் பாடமாகவே உள்ளதை எங்களால் மெய்ப்பிக்க முடியும். Tamil or French or German or Hindi என்று போட்டு, தமிழுக்கு இரக்கப்பட்டுப் பிச்சை போடுவதுபோல் இடமளித்துள்ள பள்ளிகளையும் நாங்கள் அறிவோம்.

அதனால்தான், அனைத்துப் பள்ளிகளிலும் (மெட்ரிகுலேசன் பள்ளிகள், மாநில, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், மற்றும் அரசு நிதியுதவி பெறாத ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் அனைத்திலும்) தமிழ் அல்லது தாய்மொழியே மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அந்த நேரத்தில் தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது பேசும் மக்களின் உரிமைகளில் கைவைக்காமல் தாய்மொழி உரிமை தந்திருப்பதையும் யாரும் மறுக்க முடியாது.

ஒருசில சங்கத் தலைவர்கள் ஒரேயடியாக ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறுங்கள் என்று சொல்வதை எப்படி ஏற்கமுடியும் என்கிறார்கள். இவர்கள் முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயல்கிறார்கள்.

ஆணையின் 4-வது பிரிவு இது: "மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்புகளில் தாய்மொழி அல்லது

தமிழைப் பயிற்று மொழியாக மாற்றியமைக்க வேண்டும். 2000-2001 ஆண்டு முதல், முதல் வகுப்பில் தாய்மொழி அல்லது தமிழ்மொழியே பயிற்று மொழியாக இருக்கவேண்டும். படிப்படியாக மேல் வகுப்புகளுக்கும் பயிற்று மொழி மாற்றம் செய்யப்படவேண்டும்.

அடுத்த கல்வி ஆண்டில் முதல் வகுப்பில் மட்டும் அடுத்து, படிப்படியாக அதுவும் மூன்றாண்டுகளில் மாற்றம் செய்தால் போதும் என்று அரசு தெளிவுபடுத்தியுள்ளது. இவர்கள் யாரையும் குழப்ப முற்படவேண்டாம் என்றுதான் வேண்டிக்கொள்கிறோம்.

அது மட்டுமின்றி, வகுப்பு 6-க்கு மேல் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழியுடன் தமிழ்ப் பயிற்று மொழியும் இணைக்கப்படும். ஆங்கிலப் பயிற்றுமொழியை அறவே ஒழித்துவிடவில்லை.

இந்தித் திணிப்பு எதிர்ப்பால் நாம் ஏற்கெனவே பின்னடைந்து விட்டதாக இவர்கள் புலம்புகிறார்கள். இந்தியைத் தனியாகப் படிக்க இந்திப் பிரசார சபா உள்ளது. அரசு அதில் கைவைக்கவில்லை. பிகாரில் 35 லட்சம்பேரும் உத்தரப்பிரதேசத்தில் 40 லட்சம் பேரும் இந்தியிலேயே எல்லாம் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் அலைகிறார்கள். இங்கே இந்தி படிக்காததால் வேக்குச் செல்ல முடியவில்லை என்பது போலித்தனமான விவாதம், வெளிநாட்டுக்கு வேலைக்குப் போகிற எவரும் அந்தந்த நாட்டு மொழி படித்துவிட்டுப் போவதில்லை. வேலை கிடைத்தபின் கற்றுக் கொள்கிறார்கள்.

எவர் கல்வி பயின்றாலும் அரசினுடைய சான்றிதழ் பெறாமல் எதுவும் நடைபெறாது என்றிருக்கும்போது, அரசு தமிழ்வழிக் கொள்கையைச் செயற்படுத்துவதில் என்ன தவறு? எல்லாரும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் வாழ்ந்தாக வேண்டும். எங்கும் எந்த நாட்டிலும் இது தான் விதி.

அண்மையில் ஆந்திரத்தில் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தெலுங்குதான் பயிற்று மொழி என்று ஆந்திர ஆட்சிமொழி ஆணையம் அறிவித்திருப்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் அரசு தமிழைத் திணிக்கிறது என்று இவர்கள் கூறுவதுதான். நாங்கள் சென்று கர்நாடகத்தில் இந்த ஆணையைச் செயற்படுத்தச் சொல்லவில்லை.

தமிழர்களின் தாயகமாகிய தமிழ்நாட்டில் - ஆறு கோடித் தமிழர்கள் வாழும் தமிழகத்தில் 1008 பள்ளிகள்தான் பிறமொழியாளர்களுக்காக

நடத்தப்படுகின்றன. அவர்களுக்கும் அரசு முழுப்பாதுகாப்பு அளித்துள்ளது. தமிழ்நாட்டில் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகவும், 1-5 வரை தமிழ் வழியில் படிக்க வேண்டும் என்றும் சொல்வது திணிப்பாகும் என்று சொல்வது ஏற்கத்தக்கதல்ல என அரசு விளக்கமளித்துள்ளது.''

இவர்கள் இப்படி எதிர்க்கிறார்களே என்பதற்காக அரசோ, முதல்வரோ, முன்னவரோ தளர்ந்து விடவும் இல்லை; பின் வாங்கவும் இல்லை.

''தமிழ்ப் பாடமொழியில் உறுதியாக இருப்போம்''

என்றே முதல்வர் பேசியுள்ளார். (தினமணி : 11.12.99)

''தமிழ் பாடமொழி குறித்து நாங்கள் தெளிவாகவும் திடமாகவும் உறுதியாகவும் இருக்கிறோம் என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

தமிழ் பாடமொழி குறித்து எழுந்துள்ள சர்ச்சை பற்றி நிருபர்கள் கேட்டபோது முதல்வர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.''

நாங்களும் உறுதியுடனேயே கருத்துத் தெரிவித்து வந்தோம். ரசிகரஞ்சனி சபாவில் நான் பேசிய பேச்சை மலேசிய நண்பன் (22.12.99) இதழ் வெளியிட்டுள்ளது. இதோ.

## 5ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாய பயிற்றுமொழி எத்தனை எதிர்ப்பு வந்தாலும் அரசாங்கம் பின் வாங்காது! அமைச்சர் தமிழ்க்குடிமகன் உறுதி!

''5-ம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம் என்பதில் எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் தி.மு.க. அரசு பின்வாங்காது'' என்று அமைச்சர் தமிழ்க்குடிமகன் உறுதியாக தெரிவித்து இருக்கிறார்.

இந்த விழாவில் பேசியவர்கள் 5-ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, பாரதிதாசன் ஆதங்கம் தணிக்கப்பட்ட தாக கூறினார்கள். இந்தத் திட்டத்திற்கு எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் தி.மு.க. அரசு பின்வாங்காது.

தாய்மொழிக் கல்வி அவசியத்தை காந்தி அடிகள், பாரதியார் போன்ற தலைவர்கள் வற்புறுத்தி தெரிவித்து உள்ளார்கள். பாரதியார் ஆங்கிலக் கல்வி கற்பதற்காக அவருடைய தந்தையார் ஏற்பாடு செய்தார்.

அப்போது பாரதி ''எனக்கு ஆங்கில கல்வி கற்பிக்க

தந்தையாருக்குச் செலவு ஆயிரம் எனக்கோ தீங்கு பல்லாயிரம் இதை 40 ஆயிரம் கோவில்களில் சத்தியம் பண்ணிச் சொல்வேன்'' என்றார்.

எவன் ஒருவன் தாய்மொழிக் கல்வியை மறுக்கிறானோ அவன் பேடி ஆவான் என்று மகாத்மா காந்தியடிகளே கூறியிருக்கிறார். உலக மொழிகளில் தமிழ், லத்தீன், கிரேக்கம், ஹிப்ரூ, சீனம், சமஸ்கிருதம் ஆகியவை மட்டுமே தொன்மை வாய்ந்தவை. அத்தகைய சிறப்பு வாய்ந்தது நம் தாய் மொழி. இவ்வாறு தமிழ்க்குடிமகன் பேசினார்.''

இந்த கோணத்தில்தான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நூல் வெளியீட்டு விழாவில் பேசும்போது கல்வி அமைச்சர் பேராசிரியர் பின்வருமாறு பேசியுள்ளார்.

## அனைத்து கல்வியையும் தமிழில் நடத்த வேண்டும் அமைச்சர் அன்பழகன் பேச்சு

''உண்மையிலேயே தமிழக அரசு அனைத்து கல்வியையும் தமிழில் நடத்த விரும்புகிறது. ஆனால் செயல்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது. பொறியியல் பாடம் தமிழில் கொண்டுவர வேண்டுமானால் அறிவியல், ஆராய்ச்சி சார்ந்த பாடநூல்கள் தமிழில் வெளியிட வேண்டும்.

அரசு துணைவேந்தர்களின் உயர்கல்வி கூட்டத்தை கூட்டியது. அனைத்து பல்கலைக்கழகமும் தமிழில் நூல் வெளியிடவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இடைவெளி இல்லாமல் நிறைய நூல்களை பல்கலைக்கழகம் வெளியிட பதிவாளரிடம் கேட்டுக் கொண்டேன். ஓர் ஆண்டில் 50, 60 நூல்களை பல்கலைக்கழகம் வெளியிட வேண்டும்.

இளைஞர்களுக்கு தமிழ் பயின்றால் வேலை கிடைக்கும். மாற்று மொழிகள் தேவை இல்லை என்ற நம்பிக்கை வர நிறைய நூல்களை வெளியிடவேண்டும்.''

இந்த நேரத்தில் செய்தித்தாள்களில் வந்த ஒரு செய்தியையும் கவனிக்கவேண்டும் (தினமலர் 19.12.99)

'ஆசிரியர் மடல்கள்' பகுதியில் சத்தியமங்கலம் ஏ.ஜே. ஜப்பார் என்பவர் எழுதுகிறார்.

தமிழை 'நேசிக்கும்' அழகு!

எங்களூரில் உள்ள பிரபல மெட்ரிகுலேசன் பள்ளி, ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாக்கப்படுவதை எதிர்த்து பந்த் நடத்துவதாக கூறி அளித்த, ஒரு தமிழ் அறிக்கையைப் படித்து அதிர்ந்து போனேன். காரணம், அதில் தமிழ் படுகொலை செய்யப்பட்டிருந்தது தான்.

மதிப்பெண்கள் எனுமிடத்தில் மிப்பெண்கள் என்றும், பள்ளிகளில் என்பதற்கு கள்கிளில் என்றும், பயில்கிறார்கள் என்பதற்கு பயில்கறிர்கள் என்றும், அனுப்புவீர்கள் எனுமிடத்தில் அனிப்புவீர்கள் என்றும் இன்னும் அநேகம் பிழைகள் மலிந்து காணப்பட்டன.

கிட்டத்தட்ட நான்காயிரம் பெற்றோர்களின் கைகளில் தவழ்ந்த இந்த அறிக்கையில் 'நாங்கள் தமிழை நேகிக்கிறோம்.... ஆகவே, தமிழை மிகச்சிறந்த முறையில் கற்றுத்தருகின்றோம்' எனும் வாக்கியங்கள் இருந்ததைப் படித்ததும் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

சாதாரண, சின்ன அறிக்கையில், தமிழை பாதாளத்தில் தள்ளியவர்களா தமிழை உயர்த்தப் போகின்றனர்? இதிலுள்ள அனேகம் பிழைகளை திருத்த இயலாத ஆசிரியர்களா மாணவர்களை திருத்தப்போகின்றனர்? 'மெல்ல இனி தமிழ் சாகும்' என்பதற்கு உதாரணப் புருஷர்களே இவர்கள்?" இந்த மடலே விளக்கமாக உள்ளது.

ஆங்கிலப் பயிற்றுமொழியை ஊக்குவிப்பவர்கள் அடிக்கடி சொல்லிவரும் கருத்து "அமைச்சர்கள் வீட்டுப் பிள்ளைகள் மட்டும் ஆங்கில வழியில் படிக்கலாம், நாங்கள் படிக்கக் கூடாதா" என்று பேசி வருகிறார்கள்.

அமைச்சர்களே ஆனாலும் அரசு அவர்களுக்கு ஒன்றும் விதிவிலக்குக் கொடுத்துவிடப்போவதில்லை. இது தொடர்பாக என் விடை இது:

"தங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் தான் படிக்கணும்ன்னு நினைக்கிற பெற்றோர், தாராளமா அப்படி படிக்கவைக்கலாம்; ஆனா, அவங்க அரசாங்கத்துக்கிட்டே அங்கீகாரம் கேட்கக்கூடாது. அரசு அங்கீகாரம் வேணும்னா அரசின் விதிகளுக்குக் கட்டுப்படணும். இதுதான் உலகம் பூரா உள்ள அரசு நடைமுறை. இந்தியை பரப்பறதுக்கு இந்தி பிரச்சார சபா இருக்கிற மாதிரி, ஆங்கிலத்தை பரப்ப ஆங்கில பிரச்சார சபா நடத்தட்டும்; நாங்க தடுக்கலை.

தி.மு.க. அரசிலுள்ள அமைச்சர் வீட்டுப் பிள்ளைகள் ஆங்கில வழிக் கல்வியிலேதானே படிக்கறாங்கன்னு கேக்கறாங்க. கடந்த காலத்தைப் பத்தி

பேசறதில் பயனில்லை. இனிமே அவங்களும் தமிழில்தானே படிக்கணும். அவங்களுக்கு ஒண்ணும் விதிவிலக்கு குடுத்துடலையே!'' (தினமலர் 19.12.99)

எல்லாவற்றையும் மனத்தில் வைத்துத்தான் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே எவரும் விதிவிலக்குப் பெறப்போவதில்லை; அரசும் அப்படித் தரப்போவதில்லை என்பதை உணரவேண்டும். இதற்கிடையில் சென்னையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் கலைஞர் பேசிய பேச்சு மிகத் தெளிவான விளக்கமாக இருக்கிறது. தமிழ்வழிக் கல்வியை எதிர்ப்பவர்களில் முதல் மனிதர் என்று சொன்னால் அது முரசொலி மாறன்தான். அதனால்தான் கலைஞர் அவருக்கு விடை சொல்லும் பாங்கும், அனைவர்க்கும் ஒரு விளக்கத்தைத் தந்துவிட்டார். படியுங்கள் (கதிரவன் 21.12.99)

''தம்பி மாறன் ஒன்றைச் சொன்னார். இந்த ஆட்சி முறை ஒரு தவறைச் செய்துவிட்டதாகச் சொன்னார். முதலமைச்சராக இருந்தபோது அண்ணா அளித்த உறுதிமொழிக்கு இணங்கவே 5-ம்வகுப்பு வரை தமிழை கட்டாயம் என்று அறிவித்துள்ளோம். இதை சிலர் எதிர்க்கிறார்கள். நேற்றைக்கு என்னுடைய பேத்தி பூங்குழலி, என்னுடைய மகன் தமிழரசனுடைய செல்வி பூங்குழலி, எட்டேகால் மணிக்கு தான் மாவட்டச் செயற்குழு கூட்டத்தை முடித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பியபோது, தம்பி ஸ்டாலினும், அவளும் இருந்தார்கள்.

வீட்டிலே உள்ளவர்களெல்லாம் என்னை சூழ்ந்து கொண்டு பூங்குழலி (அவளை பூங்கி, பூங்கி என்று கூப்பிடுவார்கள்) 'பூங்கி ஏதோ உங்கக்கிட்ட பேசணும், பேசணும்னு 'ஐந்தாறு நாளா தயங்கிட்டிருக்கா, பயப்படறா அதை என்னான்னு கேளுங்க' என்றார். என்னம்மா என்று கேட்டேன். ஸ்டாலினும் ஆமாம்ப்பா கேளுங்க என்றார். என்னம்மா என்று கேட்டேன். ஒண்ணும் இல்லை தாத்தா, பெரிய எதிர்ப்பு வந்திருக்கு. இந்த மொழிப் பிரச்சினைக்கு - இங்கிலீஷ் படிக்கலைன்னா என்ன ஆகுறது' அப்படி என்றாள்.

முதலில் கொஞ்சம் கோபமாக பேசினேன். இந்த மாதிரி விஷயங்களில் முதலில் அமைதியாகப் பேச ஆரம்பித்தால் நாம் ஜெயிக்க முடியாது. முதலில் கொஞ்சம் கோபமாகப் பேச ஆரம்பித்தேன். 'மழலையர் பள்ளி, அந்தப்பள்ளி, இந்தப் பள்ளி என்று வெச்சிகிட்டு சம்பாதிக்கறவன் கிளப்பிவிடறான் எல்லாரையும், நீயும் அதைக்கேட்டுக்கிட்டு எங்கிட்ட கேள்வி கேட்கிறாயா?'' என்று கேட்டேன். இல்லை தாத்தா என்ன ஆகுறது எதிர்காலம் எல்லாம்.

ஒன்றும் ஆகாது. உங்க தாத்தாவே ஏழாவது, எட்டாவது வரைக்கும் தமிழில்தான் படித்தார். உங்க தாத்தாவினுடைய தலைவர் அறிஞர் அண்ணா இருந்தாரே, அவரும் 8-வது, 9-வது வரைக்கும் தமிழ் படித்துத்தான் அறிஞர் அண்ணா ஆனார். உலகம் போற்றும் தலைவர்களில் ஒருவராக ஆனார். இன்னும் உதாரணம் சொல்லட்டுமா தாத்தா. வேண்டாம் தாத்தா. வேண்டாம் தாத்தா போதும் என்றாள்.

இப்ப நான் கன்வின்ஸ் ஆயிட்டேன் என்றாள். பார்த்தியா இப்பவும் கன்வின்ஸ் என்று இங்கிலீஷிலே பேசறியே. சரி, அமெரிக்காவுல வேலை பார்க்கிறாயா அப்ப ஆங்கிலத்தில் பேசணும் அவங்களுக்கு சொல்றேன் ஆங்கிலமே கூடாது என்று நானோ, பேராசிரியரோ அல்லது தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சரோ ஒரு முடிவுக்கு வந்து அதை அரசு வெளியீடாக வெளியிட வில்லை என்பதை புரிந்த கொள்ளவேண்டும்.

ஐந்தாம் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் படிக்கக்கூடாது என்று நாங்கள் யாரும் தடுக்கவில்லை. படிக்கலாம். ஐந்தாவது வகுப்பு வரையிலேயே நம்முடைய தாய்மொழியிலே அதாவது குழந்தை பிறந்து காலூன்றி நடக்கிற வரையில் தாய்ப்பால் குடிக்கணும் என்று சொல்கிறோம். தாய்ப்பால் குடித்தால் நமக்கு பலம் என்று ராஜாஜி சொல்லியிருக்கிறார். தாய்மொழியிலே படிக்கிறது தாய்ப்பால் குடிக்கிறது மாதிரி என்று ராஜாஜியே சொல்லியிருக்கிறார்.

சில பேர் சொல்கிறார்கள். தமிழைத் திணிக்கிறார்கள் என்று, எந்த மொழியினுடைய திணிப்பையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் நாம். அது ஆங்கிலமாக இருந்தாலும், இந்தியாக இருந்தாலும் எந்த மொழியினுடைய திணிப்பையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் நாம். தமிழைத் திணிக்கவில்லை. தமிழை மறக்காதே. தமிழை அழித்துவிடாதே என்று தமிழர்களைப் பார்த்து சொல்வது தமிழைத் திணிப்பதாக ஆகாது.

இவ்வளவுதூரம் சிலர் பேசுகிற காரணத்தால் கொஞ்சம் மெதுவாகத்தான் போகிறோம். அதைநான் மாறனுக்கு சொல்கிறேன் எனக்கு 76 வயது. என்னைவிட மூத்தவர் பேராசிரியர். நாங்க மெதுவாக நடக்கிறோம். அதனாலே இந்த மொழிப்பிரச்சினையிலும் மெதுவாகத்தான் போவோம்.

ஆனால் மொழிவேகம் உள்ளத்திலே இருக்கும். அந்த வேகத்தை இழக்க மாட்டோம். அந்த வேகத்தை இழந்தால் தமிழன் என்கின்ற உணர்வே பட்டுப்போய்விடும் என்பதற்காகத்தான் சொல்கின்றேன்.

என் மகள் கனிமொழி ஒவ்வொரு முறை என்னையும் தமிழ்க்குடிமகனையும் சந்திக்கும் போதெல்லாம்; கனிமொழி நன்கு ஆங்கிலம்

கற்றவள். எல்லோரிடத்திலும் ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடிய ஆற்றல் பெற்றவள் கனிமொழி. அந்தக் கனிமொழி திருமணமாகி சிங்கப்பூர் செல்கிற வரையில் ஒவ்வொரு நாளும் 'என்ன அப்பா தாய்மொழியை எப்போது பயிற்று மொழியாக்கப் போறீங்க, எவ்வளவு காலத்திற்கு இந்த நிலைமை' என்று கேட்டுக்கொண்டே இருக்கின்ற காட்சி தமிழ்க்குடிமகனுக்கும் நன்றாகத் தெரியும்.

எனவே வளருகின்ற ஒரு சமுதாயத்தில் தாய்மொழியை மறந்துவிட்டு பிறமொழியைப் படித்துவிட்டு வளரவேண்டும் என்று இல்லை.''

உலகத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் பேராசிரியரும் நானும் கலந்துகொண்டோம். 'தமிழ்க்களம் இணையம்' தொடக்கவிழா நடைபெற்றது. 'கணினியில் தமிழ் - கற்றல், கற்பித்தலை' நான் தொடங்கி வைத்துப் பேசினேன். (முரசொலி 23.12.99)

அப்போதும் தமிழ் வழிக்கல்வியை வலியுறுத்திப் பேசினோம்.

"தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள 5-ஆம் வகுப்பு வரையிலான தமிழ் மொழி பயிற்சி திட்டத்தை வகுப்பறைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றும் பொறுப்பு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கையில் உள்ளது"

மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்களிடம் பேசியது மனநிறைவு அளிப்பதாக அமைந்தது.

இந்தக் காலகட்டத்தில் 22.2.2000 அன்று இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஓர் அறிக்கையை வெளியிட்டார். தமிழ்வழிக் கல்வி வருவதால் இந்தி வந்து புகுந்துவிட வாய்ப்புண்டு என்பது போல் அவரது அறிக்கை அமைந்திருந்தது.

அந்த நேரத்தில் அன்றைய முதல்வர் கலைஞர் சிவகங்கையில் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தார். வண்டியில் போகும்போதே அ.தி.மு.க. பொதுச் செயலாளரின் அறிக்கை கைக்குக் கிடைத்ததால் இன்று அதுபற்றி விரிவாகப் பேசுவது என்று முடிவெடுத்தோம். அதன்படி முன்னால் பேசிய நான் கடுமையாகவே பேசினேன். (மாலை முரசு 22.2.2000) அப்பேச்சின் ஒரு பகுதி இது:

**"தமிழைப் பயிற்றுமொழி ஆக்கினால் இந்தி புகுந்துவிடுமா!''**

தமிழ் நாட்டில் கல்லூரி வரை தமிழை பயிற்று மொழியாக்க வேண்டும் என்று அண்ணா விரும்பினார். இன்றைக்கு முதல் அமைச்சர் கலைஞர் 5-ம் வகுப்பு வரை தமிழில் பயிற்று மொழி திட்டத்தை கொண்டு வந்து இருக்கிறார்.

இதைச் சிலர் எதிர்க்கிறார்கள். ஜெயலலிதா இன்றைக்கு ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். அதில் தமிழ் பயிற்று மொழி திட்டத்தின்மூலம் தமிழகத்தில் இந்தியை திணிப்பதாக சொல்லியிருக்கிறர்.

தமிழ்நாட்டில் தாய்மொழி தமிழில் 5-ம் வகுப்பு வரை பயிற்று மொழியாக்குவது இந்தி திணிப்பா? நாங்கள் என்ன கர்நாடகத்திலா திணிக்கிறோம்.

தமிழகத்தில் 3 மொழி திட்டம் வராது. வரவிடவும் மாட்டோம். நாங்கள் ஆங்கிலத்தை ஒதுக்கவில்லை. தமிழை ஆட்சி மொழியாக்குவோம். தமிழகத்தில் என்றைக்கும் இரு மொழிக் கொள்கைதான்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை வரும். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களோடு தொடர்பு கொள்ளவும், உலக அளவில் தொடர்பு கொள்ளவும் தான் ஆங்கிலம். தமிழ்ச் சான்றோர்கள் இதற்காக போராட வேண்டும்.''

என்னுடைய பேச்சு வெளிவந்த மாலைமுரசு இதழிலேயே வாழப்பாடி இராமமூர்த்தி வெளியிட்ட அறிக்கையும் வந்துள்ளது.

அதுவும் இந்த இடத்திற்குத் தேவை என்பதால் இங்கே தந்துள்ளேன்.

''தமிழ்வழிக் கல்வி என்பது ஐந்தாவது வகுப்பு வரை மட்டும்தான். அதற்கு மேல் மாணவர்கள் ஆங்கிலம் பயில்வதற்கு தடையேதும் இல்லை என்பது அரசு உத்தரவில் மிகவும் தெளிவாகச் சொல்லப்பட்டு உள்ளது. இந்த உத்தரவுக்கு நர்சரி, மெட்ரிகுலேசன் பள்ளிகள் நடத்துவோரைத் தவிர வேறு எந்த திசையிலிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தமிழகத்தைச் சேர்ந்த பிற மாநில மொழிகள் பேசுபவர்கள் கூட தமிழ்வழிக் கல்வி உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் இங்கு யாரும், ஒரு போதும் துணிந்து இந்தியைத் திணிக்க முடியாது. இந்தியைத் திணிக்க தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். தமிழ் ஆட்சி மொழி என்பது இன்று நேற்றல்ல, பெருந்தலைவர் காமராஜர் தமிழக முதல்வராக இருந்தபோது தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை 1956-ம் ஆண்டு வாக்கில் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

விஞ்ஞான வளர்ச்சி, மின்னணுவியல், கணிப்பொறியியல் மற்றும் தொழில் நுட்பத்தில் ஆங்கிலத்தின் ஆதிக்கமே நிறைந்துள்ளது என்று சொல்லி தனது வாதத்துக்கு வலிவூட்ட முயற்சிக்கிறார். பிரிட்டன் தவிர

ஏனைய மேலை நாடுகளான ஜெர்மனி, பிரான்ஸ், ரஷியா போன்ற நாடுகளும் சீனா, ஜப்பான் போன்ற நாடுகளும் தங்கள் தங்கள் தாய்மொழியிலேயே விஞ்ஞானம், மின்னணுவியல், கணிப்பொறியியல் என்ற பாடங்களைப் பயிலுகின்றனர்.''

சிவகங்கையில் முதல்வர் கலைஞர் பேசியதாவது:

''கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் தமிழ் அறிஞர்கள் எல்லாம் ஒன்றுகூடி தமிழை ஆட்சிமொழியாக்கவேண்டும் என்று பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

நான் அதற்கு இன்னும் பக்குவமான காலம் வரவில்லை என்று காத்திருந்தேன். தற்போது 5-ம் வகுப்புவரை தமிழ் மொழி கட்டாய கல்வியாக்கப்பட்டது. ஆங்கிலத்தைப் படிக்காதே என்று நாங்கள் கூறவில்லை. ஆங்கிலத்தைப்படி, ஆங்கிலத்திலேயே எல்லாவற்றையும் படிக்காதே என்றுதான் கூறுகிறோம்.

ராஜாஜி, சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் போன்ற தலைவர்கள் தாய்மொழியிலேயே படித்தவர்கள். ஐந்தாம் வகுப்புவரை தமிழ் கட்டாய மொழி என்பதால் இந்தி மொழிக்கு வழி விடுகிறோம் என்று ஜெயலலிதா கூறுகின்றார்.

தமிழகத்தில் ஹிந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் சிப்பாயாக தி.மு.க. திகழும். தாய்மொழியில் படிப்பது தவறு என்று அவர் கூறியிருப்பது கேட்டு நான் துடித்துப்போனேன். முதல்வராக பொறுப்பில் இருப்பதால் இவ்வளவு பொறுமையாக இருக்கிறேன்.

தமிழ்நாட்டின் மீதும், தமிழ் மொழியின் மீதும் கைவைப்பது எவ்வளவு பொல்லாதது என்பதை ஜெயலலிதா உணரவேண்டும். அவரையும் புரிந்துகொள்ள வைக்க தமிழறிஞர்கள் வீதி வீதியாக கூட்டம்போட்டுக் கூறவேண்டும். அவருக்கு தமிழறிஞர்கள்தான் பதில் கூறவேண்டும் என்றார் கருணாநிதி.''

சிவகங்கையில் பேசிவிட்டுச் சென்னை வந்தபின் அறிவாலயத்தில் கலந்து பேசினோம். தமிழ்வழிக் கல்வியை ஆதரித்தும், ஜெ. அறிக்கைக்குக் கண்டனம் தெரிவித்துத் தமிழகம் எங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்துவது என்று முடிவு செய்தோம்.

பேராசிரியர் அதற்கான ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

“தமிழ்ச்சான்றோர்கள், ஆன்றோர்களின் நீண்ட காலக்கனவை நனவாக்கிடவும், பேரறிஞர் அண்ணா மற்றும் பலபெருந்தலைவர்களின் குறிக்கோளை நிறைவேற்றிடவும் கலைஞர் அரசு ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் வழி கல்வித் திட்டத்தை கொண்டு வந்துள்ளது.

இந்த திட்டத்தை ரத்து செய்யக்கோரி விதண்டாவாத அறிக்கைகள் விடுத்துள்ளவர்களைக் கண்டித்து பிப்ரவரி 26 முதல் ஒருவார காலத்திற்கு தமிழகம் முழுவதும் கழகச்சார்பில் பொதுக்கூட்டங்கள் நடத்திடுமாறும், உடன்பாடுடைய இயக்கங்களின் பிரதிநிதிகளையும் அக்கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்திடுமாறும் தி.மு.கழக அமைப்புகள், மற்றும் கழக அணிகளின் அமைப்புகள் அனைத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.”

அதன்படி, பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன்படி 26.2.2000 அன்று சென்னையில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலைஞர், டாக்டர் இராமதாசு, இல. கணேசன், வாழப்பாடியார். எல். கணேசன், திருநாவுக்கரசு, இராம. வீரப்பன், கோவை செழியன், திருப்பூர் சுல்தான், எல்.இளையபெருமாள், எஸ்ரா. சற்குணம் ஆகிய அரசியல் கட்சிகள் மற்றும் பிற இயக்கங்களின் தலைவர்கள் கலந்துகொண்டு பேசினர்.

நான் காஞ்சிபுரத்தில் பேசினேன். அண்ணாவின் மண்ணில், அவரது இருமொழிக் கொள்கையையும் எடுத்துச்சொல்லி, இன்றைய ‘தமிழ்வழிக் கல்வி’யின் தேவைகளையும் விரிவாகப் பேசினேன். பொதுக்கூட்டம் என்றாலும் மொழிசார்ந்த விறுவிறுப்பான ஒருமணி நேரப்பேச்சு. மிகுந்த மனநிறைவோடு பேசமுடிந்தது.

என் கருத்துகள் அத்தனையும் கொட்டித் தீர்த்தேன்.

சிவகங்கையிலிருந்து மதுரை திரும்பினோம். மதுரையிலிருந்து புறப்படுவதற்கு முன் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கல் பாலத்தை முதல்வர் திறந்து வைத்தார். தற்போது நிலவி வரும் ‘தமிழ்வழிக் கல்வி‘ தொடர்பான மாறுபட்ட கருத்துகளுக்குத்தக்க விளக்கம் தந்து பேசினார். மிகவும் பொருத்தமாக அந்தப் பேச்சு அமைந்திருந்தது. அவர் பேசியது.

“வைகை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள 2 பாலங்களில் ஒன்று ஆல்பர்ட் விக்டர் மேம்பாலம். இது பழைய பாலம். மற்றொன்று கல்பாலத்தில் கட்டப்பட்ட புதிய மேம்பாலம். இந்த 2 பாலங்களும் தற்கால அரசியல் உவமைக்கு பொருந்துவதாக உள்ளது.

ஆல்பர்ட்விக்டர் பாலம் ஆங்கில மொழியாக உள்ளது. கல்பாலம் (புதிய மேம்பாலம்) என்பது தமிழ் வழிக்கல்வி போன்றது. (பலத்த கைதட்டல்) புதிய பாலம் கட்டிய காரணத்தால் ஆல்பர்ட் விக்டர் பாலம் இடிக்கப்படவில்லை. அதேபோல் தமிழ்வழிக்கல்வி வருகிற காரணத்தால் ஆங்கிலம் அகற்றப்படவில்லை.

எனவே ஆல்பர்ட் விக்டர் பாலமும் இருக்கும் கல்பாலத்தில் கட்டப்பட்ட புதிய மேம்பாலமும் இருக்கும். புதிய பாலம் கட்டிவிட்டதால் பழைய பாலம் ஆல்பர்ட் விக்டர் பாலம் வேண்டாம் என்று அகற்றி விடும் அசடுகள் அல்ல நாங்கள்.

இரண்டையும் பயன்படுத்துவது எங்களுக்கு தெரியும். எதை எதை எப்படி பயன்படுத்துவது என்பதும் எங்களுக்கு தெரியும். எனவே அந்த வகையில் தான் 2 பாலங்களும் ஒரு தத்துவத்தை போதிக்கும் வகையில் சரியான நேரத்தில் சரியான சமயத்தில் திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றன என்றார்." (கதிரவன், தினகரன் 24.2.2000)

இதுகுறித்து Indian Express எழுதும்போது இப்படிக் குறிப்பிட்டது.

"The articulate Chief Minister compared both Tamil and English to the already Existing Albert Victor Bridge and the new Kalpalam overbridge, thereby enunciating that English and Tamil can exist side by side to the advantage of both the languages."

அவர் பேசியதன் சாரத்தை நன்றாகவே தந்துள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரின் கருத்தினை வழிமொழிந்து துணைப்பொதுச்செயலாளர் கா. காளிமுத்து ஓர் அறிக்கை விட்டார். அது இதுதான்:

"Mr. K. Kalimuthu, in a statement, today accused the Chief Minister, Mr. M. Karunanidhi, of trying to instigate a section of the people to take to the streets and agitate in favour of making Tamil the compulsory medium of education. The Chief Minister was sowing the seeds of violence through his remarks on the issue, he said in a statement. Defending the position of the AIADMK general secretary, Ms. Jayalalitha, against making Tamil the compulsory medium of education, he said the Chief Minister wanted to make English education and foreign tours the preserve of his family"

26.2.2000 அன்று தொடங்கி ஒரு கிழமை வரை பொதுக்கூட்டங்கள் நடத்தப் பெறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி கூட்டங்களின் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. 'தமிழ்வழிக்கல்வி' என்பது ஆழ்ந்து பேசப்படவேண்டிய செய்தி என்பதாலும், சில அமைச்சர்கள் ஒரு மணி நேரமாவது மேடையில் பேசியாக வேண்டும் என்பதாலும் பல செய்திகள் அவர்களுக்குத் தெரிந்தே ஆகவேண்டும்.

அமைச்சர்களில் ஒருசிலர்க்கும் மற்றும் தலைமைக் கழகத்தின் வேறு சில பேச்சாளர்கட்கும் நான் பல செய்திகளைச் சொல்ல வேண்டியிருந்தது. பல தொலைபேசிகள்; விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் முயற்சிகள்.

இதனை நான் குறையாகக் கருதவில்லை. கூட்டம் அறிவிக்கப்பட்ட பின்பாவது பலர் இதில் அக்கறை காட்டுகிறார்களே என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். எனவே எல்லார்க்கும் பயன்படும் வகையில் ஒரு விரிவான கட்டுரையை எழுதி 'முரசொலி'யில் வெளியிட்டால் அதுவே அனைவர்க்கும் பயன்படும் என்று கருதினேன். அதன்படி 26.2.2000 அன்று 'முரசொலி'யில் என் கட்டுரை வெளியானது.

"தமிழ்வழிக் கல்வி' தொடர்பாக அரசு பிறப்பித்த ஆணை செயற்படுத்தக்கூடிய தறுவாயில் மழலையர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளியினர் பிடிக்கும் முரண்டு. சில அரசியல் கட்சிகளின் திசை திருப்பும் முயற்சி ஆகியவற்றைக் காண்கிறோம்.

அதே நேரத்தில் அரசும், தமிழை நேசிக்கும் பல அரசியல் கட்சிகளும், அனைத்துத் தமிழ் அமைப்புகளும் இதனைச் செயற்படுத்தியே தீரவேண்டுமென உறுதி காட்டி எழுந்து நிற்பதையும் காண்கிறோம். எனினும் இந்த நேரத்தில் சில விளக்கங்கள் தருவது பொருத்தமாக இருக்கும்.

இங்கு மொழிச் சிறுபான்மையினர் பலர் வாழ்கின்றனர். அவர்கள் தங்கள் தாய் மொழியைப் பயிலவும் தமிழ் மொழி வாயிலாகப் பயிலவும் தமிழக அரசு முழு அனுமதி வழங்கியுள்ளது. தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, குசராத்தி ஆகியவற்றைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் நடத்தும் பள்ளிகள் 1008 மட்டுமே.

அவர்கள், இதுவரை தத்தம் தாய்மொழியையும், ஆங்கிலத்தையும் மட்டுமே படித்து வந்தனர். 1 முதல் 5 வரை அவரவர் தாய்மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பயில்கின்றபோது இந்த மழலையர் மற்றும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்கு மட்டும் என்ன கேடு வந்தது? ஏன்

குதிக்கிறார்கள்? இவர்களுக்கு மொழி கெடுவது வளர்வது என்பதெல்லாம் பிரச்சினைகள் அல்ல. வருமானத்தில் சிக்கல் ஏற்படுமே என்பதுதான் கவலை.

எனவே, இவர்களை எளிதாக அடையாளம் கண்டுகொள்ள முடியும்!

1008 சிறுபான்மையினர் பள்ளிகளே கூட "எங்களுக்கும் தமிழைச் சொல்லிக் கொடுங்கள். இல்லாவிட்டால் தமிழக அரசில் வேலை பெற்று தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு இயங்குவதில் பின்னடைந்து விடுவோம்" என்று கூறியுள்ளனர். இதற்காகவே 19.11.1998 -இல் அரசு ஓர் அறிவிப்பையும் வெளியிட்டுள்ளது. அதன்படி, படிப்படியாக அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளிலும் ஒவ்வொரு தமிழாசிரியர் பணியிடத்தை உருவாக்கியும், அந்தப் பாடத்தைப் பள்ளி நேரத்திலோ அல்லது பள்ளி முடிந்தபின் சிறப்பாகவோ நடத்திடவும் அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாழ்கின்ற அந்த மக்கள் இந்த அளவுக்கு ஆர்வம் காட்டும்போது, தமிழர்களில் சிலர் ஏன் துள்ளுகின்றனர்?

42000 தொடக்கப் பள்ளிகள், 2500 மேல்நிலைப்பள்ளிகள், 4000 உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12 வரை தமிழ் ஒரு பாடம்: ஆங்கிலம் ஒரு பாடம். தமிழ் வழியில் கல்வி.

பி.எசி., வகுப்பு வரை தமிழில் படிக்கும் நிலை உள்ளபோது 1 முதல் 5 வரை தமிழில் படிக்கும் பல்லாயிரக்கணக்கினர் உள்ளபோது இவர்கள் மட்டும் ஏன் அடம் பிடிக்கின்றனர்?

ஒன்றிரண்டு ஆசிரியர்களின் பழைய பேட்டிகளை நினைவு கூர்கிறேன். கணிதம் போன்றவற்றை ஆங்கிலத்தில் சொல்வதுதான் எளிதாம்; தமிழில் நடத்துவது மிகவும் கடினமாம். இந்த ஆங்கிலக்குஞ்சுகள் ஏதோ இங்கிலாந்தில் பிறந்து அமெரிக்காவில் வாழ்ந்து இங்கு இறக்குமதியானவர்கள் போலும்.

இதை எழுதும் நானே 11 வரை கணிதத்தை அதிலும் சிறப்புக் கணிதத்தைத் தமிழில் படித்து எழுதி 97% பெற்றவன். மூன்று ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிகளில் கணிதத்தைப் பாடமாக - தமிழில் நடத்தியவன். இவர்கள் யாரை ஏமாற்றுகிறார்கள்? கையாலாகாதவர்கள் எல்லாம் இதில் களமிறங்குவது தகாத போக்காகும்.

23.1.1968 - இல் அறிஞர் அண்ணா இருமொழிச் சட்டத்தைக் கொண்டுவந்தபோதே தெளிவுபடுத்திவிட்டார்.

"மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது. மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும் தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும், தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிக்கு இடமளித்து இந்திமொழியை அறவே நீக்கி இம்மன்றம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாடமொழியாகவும், எல்லாக் கல்லூரிகளிலும், நிருவாக மொழியாகப் பல்வேறு துறைகளிலும், நிருவாக மொழியாகப் பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டு காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது.

அதையொட்டி அன்று முதல்வர் கலைஞர் எடுத்த முயற்சிதான். இன்று அரசுக் கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வி நிலைத்திருப்பதற்குக் காரணம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழ் வழிக் கல்விக்கான பாட நூல்கள் அனைத்தையும் வெளியிட்டுள்ளது.

ஆங்கிலத்தின் தேவையை நாம் அனைவரும் உணர்வோம். தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தில்கூட, வெளி மாநிலம், வெளிநாடு, மத்திய அரசு, உச்ச நீதிமன்றம் ஆகியவற்றுக்கு எழுதும் மடல் ஆங்கிலத்தில் இருக்கலாம் என்று தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

நாம் அன்று வகுப்பு 6 முதல் ஆங்கிலம் படித்தோம். இன்று மாணவர்கள் 3 முதல் ஒரு பாடமாகப் படிக்க அனுமதித்துள்ளோம். நாங்கள் கல்லூரிகளில்தான் ஆங்கிலப் பயிற்று மொழிகளில் படிக்கத் தொடங்கினோம். ஆனால் இன்று 6-ஆம் வகுப்பு முதல் ஆங்கிலம் பயில வாய்ப்பளித்துள்ளோம்.

அரசு சார்ந்த பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவில் ஆங்கிலம் பயிற்றுவிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆங்கிலத்தைப் பயில்வதற்கும், ஆங்கில வழியில் பயில்வதற்கும் மிகவும் கூடுதலான வாய்ப்பே தரப்பட்டுள்ளது. எனவே, ஆங்கிலத்தின் தேவையை அரசுக்கு உணர்த்த வேண்டிய தேவையே இல்லை.

ஆங்கிலேயர்களிடமிருந்து நாம் விடுதலை பெற்ற பிறகு தேசிய உணர்வுக்கு வாய்ப்பளித்தோம். அதன்படி இராசாசி போன்றவர்கள் காலத்தில்

- கல்வி அமைச்சராக இருந்த அவினாசிலிங்கம் செட்டியாருடைய காலதில் 1 முதல் 11 வரை ஆங்கில வழியில் பயிற்றுவிக்கப்பட்ட அடிமைக்காலத்தை மாற்றி முற்றிலும் தமிழ் வழியில் கொண்டு வந்தார்கள் என்பதை மறுக்க முடியாது. அன்று ஏன் இதை யாரும் எதிர்க்கவில்லை? காரணம் இந்தக் கல்வி வியாபாரிகள் அப்போது இல்லை. வியாபாரத்தில் இலட்சக்கணக்கில் வரும் வருமானம் கெடுகிறதே என்பதால்தான் இந்தக் கிளர்ச்சி. பொதுமக்கள் புரிந்துகொண்டால் போதும். சி. சுப்பிரமணியம் போன்றவர்கள் 'தமிழால் முடியும்' என்று அழுத்தம் திருத்தமாகத் தொடர்ந்ததும் அந்தக் காலக் கல்வி ஆர்வத்தால்தான்.

தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் 197. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் 49 மெட்ரிகுலேசன் பள்ளிகள் 2037. மழலையர் பள்ளிகளில் பதிவு பெற்றவை - 2500. பதிவு பெறாதவை 10000க்கு மேல்.

பதிவு பெறாத பள்ளிகள் இவ்வளவு இருப்பதற்கு என்ன காரணம்? போதுமான இடம், கழிப்பறை, விளையாட்டுத் திடல் என்று ஏதும் இல்லை. பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இல்லை. காரணம் அவர்கள் கல்வியை ஒரு தொழிலாகச் செய்கிறார்கள். திருப்பத்தூரில் ஒரு பள்ளி 51 மாணவ மாணவியர் ஒரே கூடத்தில் எல்.கே.ஜி. முதல் 5 வரை. ஒரே இடத்தில். 12 வரை படித்த இரண்டு பெண்கள் நடத்துகிறார்கள். இது அவர்கள் இருவருக்கும் ஒரு தொழில் வருமானம். இதில் கல்வித் தரமாவது கத்தரிக்காயாவது? இப்படி நடத்துகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். அண்மையில் அரசை எதிர்த்து அறிக்கை விட்ட மெட்ரிகுலேச்ன் பள்ளிக்காரர் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதுபோல உளறியிருக்கிறார்.

நாங்கள் இந்தப் பள்ளிகளை நடத்தப் படும்பாடு எங்களுக்குத்தான் தெரியும். நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டுத் தொழில் செய்து வருகிறோம்" என்கிறார்கள். இவர்களை யெல்லாம் அண்ணாலை அரசராகவும் வள்ளல் பச்சையப்பராகவும் வள்ளல் அழகப்பராகவும் கருதிக் கொள்ளமுடியுமா? இவர்கள் செய்வதே தொழில் எனும்போது அதில் மொழி எங்கே இருக்கிறது?

இன்று 30 இலட்சம் பேருக்குமேல் வேலை வாய்ப்பகத்தில் பதிந்துவிட்டுக் காத்திருக்கின்றனர்.

அவர்களில் பலர் இந்த மழலையர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தொழில் புரிகின்றனர். பலர், பட்டம் படித்துவிட்டு வீட்டில் இருப்பதைவிடப் பள்ளியில் ஏதாவது சொல்லிக் கொடுக்கலாம் என்பதாலும்,

• 200, 300 மாதச் செலவுக்கு கிடைக்குமே என்பதாலும் பெற்றோரிடமிருந்து தற்காலிமாகத் தப்பித்துக் கொள்ளவும் இந்தக் கல்வித் தொழிற்சாலைகளில் புகுந்துள்ளனர்.

என் தொகுதியில் ஒரு பள்ளியில் ஒருவர் எழுதிய கடிதம் இது. ஏதோ நான்கைந்து பேருக்குப் பிழைப்பு நடக்கிறது. அதைக் கெடுத்துவிடாதீர்கள் என்கிறது மடல்.

இப்படிச் செய்வோர்கள் ஏதோ இலட்சிய நோக்கோடும் அனைவரையும் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கும் அக்கறையோடும் செயற்படுவதுதான் போலி நாடகம் என்கிறோம். மலிவாகக் கிடைத்த ஆசிரியர்களை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்யும் இவர்கள் கொள்கை பேசுவதுதான் விந்தையாக உள்ளது.

1முதல் 5 வரையில் படித்து விட்டு எவனும் வெளிநாட்டு வேலைக்குப் போக முடியாது. அதற்கு மேல் படிக்கவும் ஆங்கிலத்தை வேரூன்றிப் படிக்கவும் அரசு வாய்ப்பளித்துள்ளபோது புலம்புவது போலித்தனமாகும். 4144 கோடியைக் கல்விக்காகச் செலவிடும் அரசுக்கு இல்லாத அக்கறை இவர்களுக்கு இருப்பதாக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்?

கணினி விசைப்பலகை (Computer Key Board) இணையம், மின் அஞ்சல் ஆகியவற்றிலும் இன்று தமிழ் வந்துவிட்டது. தமிழக அரசு, கணினி விசைப்பலகையைத் தரப்படுத்திவிட்டது.

உலகத் தமிழர்கள் நம்மை முந்திக் கொண்டு தமிழைக் கொண்டு வந்துவிட்டார்கள்.

இன்று இந்தியாவில் ஆங்கிலத்துக்கு அடுத்தபடி கணினியில் பயன்படுத்தும் மொழி தமிழ்தான் என்பதை உணரவேண்டும்.

1 முதல் 5 வரை தமிழ் வழியில் பயில்வதால் அதே மாணவர்கள், அதே ஆசிரியர்கள்தானே இருப்பார்கள். யாருக்கும் வேலைவாய்ப்பு போய் விடாதே. பின் ஏன் குதிக்கிறார்கள்?

இந்நிலையிலும் ஒருசில மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர்களும் நிர்வாகமும் அரசின் ஏற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சொன்னதையே குறிப்பிட விரும்புகிறேன்.

“நாங்கள் இதில் தெளிவாகவும், திடமாகவும் உறுதியாகவும் இருக்கிறோம்”

“இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்”

“ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள் - நீ
தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே”

கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கும்போதும், நடந்து முடிந்த பிறகும் பல அன்பர்கள் - அமைச்சர்கள் எனக்கு நன்றி தெரிவித்தனர். கட்டுரை பெரிதும் பயன்பட்டது என்பதைக் கூறி மகிழ்ந்தனர்.

அந்தக் கட்டுரை உங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. நீங்களும் இதில் உள்ள தருக்கபூர்வமான செய்திகளை உணர்ந்து கொள்ள முடியும்.

வீம்புக்குப் பேசுபவர்கள் தவிர, வேறெவரும் இந்தக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளவே செய்வர்.

என் போன்றவர்கள் இதில் கண்டிப்பாகவே இருந்தோம். இராசசிங்கமங்கலத்தில் செய்தியாளர்கள் கேட்டபோதும் எங்கள் உறுதிப்பாட்டையே எடுத்துச் சொன்னேன் (தினமலர் 28.2.2000)

“தமிழ்வழி கல்வி குறித்து மறு பரிசீலனை என்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழகத்தில் உள்ள மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழ் வழிக்கல்வியை அறிமுகப்படுத்தப்படவேண்டும். இல்லையெனில் அவைகளின் அங்கீகாரம் ரத்துசெய்யப்படும்“ என்றேன்.

காஞ்சிபுரத்தில் நான் பேசியதையும் மீண்டும் ஒருமுறை பார்த்துக்கொள்ளுங்கள். (தினமலர் 28.2.2000)

“மெட்ரிகுலேசன் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் தருகிறது. ஆனால் அங்கு மாணவர்கள் தமிழை பயிற்று மொழியாகப் படிப்பதில்லை. ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை ஆங்கில வழியில் பாடங்கள் கற்று கொடுக்கப்படுகிறது. இது நாங்கள் கை வைத்த பகுதி. தமிழகத்தில் தமிழே படிக்காமல் ஒருவர் பட்டம் பெற அனுமதிக்ககூடாது. எனவே 1 முதல் 5ம் வகுப்பு வரை தமிழில் கட்டாயம் படிக்கவேண்டும். 6ம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக வைத்துக் கொள்ளலாம் எனக் கூறியுள்ளோம்.

இதனை எதிர்த்து மெட்ரிக்குலேசன் பள்ளி, மழலையர் பள்ளி போன்றவை போராட்டம் நடத்துகின்றன. சிலர் 5ம் வகுப்பு வரை தமிழில்

படித்தால் அமெரிக்கா போக முடியாது என்கின்றனர். 5ம் வகுப்பு படிக்கும் அனைவரும் கல்லூரி செல்வதில்லை. 10 வயதில் அமெரிக்கா செல்ல முடியாது.

எனவே அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் பயிற்றுமொழியாக இருக்கவேண்டும். இதனை 3 ஆண்டுக்குள் முழுவதுமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தி படித்தால் வட மாநிலத்தில் வேலை கிடைக்கும் என்கின்றனர். உத்திரப்பிரதேசத்தில் இந்தி படித்தவர்கள் 45 லட்சம் பேர் வேலை இல்லாமல் உள்ளனர். பீகாரில் 39 லட்சம் பேர் உள்ளனர். மேலும் மலேசியாவில் 13 லட்சம் தமிழர்கள் உள்ளனர். அவர்கள் மலாய்மொழியை அறிந்தவர்கள். அவர்கள் மலாய் மொழி படித்துவிட்டு வேலைக்குச் செல்லவில்லை. எனவே வேலைவாய்ப்பு தடைபடும் என்பது வீண் விவாதம்.

தமிழக அரசு ஒப்புதல் இல்லாமல் பள்ளி கல்வி இயக்குநரின் மறுப்பு சான்றிதழ் தராமல் யாராலும் சி.பி.எஸ்.இ. பள்ளி துவக்க முடியாது. இதனை மத்திய திட்டக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார். எந்தப் பள்ளிக்கும் அரசு ஒப்புதல் வழங்காது. எனவே அரசு ஆணையை யாரும் மீற முடியாது.

தமிழை பயிற்று மொழியாக ஏற்று கொள்ளாதவர்கள் தொழிலை விட்டு விடலாம். இவ்வாறு தமிழ்க்குடிமகன் பேசினார்.'' ஒரு மணிநேரப் பேச்சின் சுருக்கம் இது.

இதைப்போலவே பலரும் பல ஊர்களிலும் விளக்கங்கள் கொடுத்துச் சிறப்பாகப் பேசினர்.

அரசாணையாக மட்டும் நின்ற 'தமிழ் வழிக்கல்வி' இன்று தமிழ்நாட்டின் மேடைகள் தோறும் அலசப்படுகிறது. இதன் சிறப்பு மக்களுக்கு உணர்த்தப்படவேண்டும் என்று அரசு கருதியதே இதற்குக் காரணம்.

அந்த வகையில் இன்று நாடெங்கும் பேசப்படும் செய்தியாக இது ஆகிவிட்டது.

பொதுக் கூட்டங்கள்முடிந்து, பலரது விளக்கங்களும் தரப்பட்ட பின் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஓர் அறிக்கை விட்டிருந்தார். அந்த அறிக்கையை மறுத்து, நான் விடுத்த அறிக்கையைப் படித்தாலே எங்கள் முயற்சிகள் எவ்வளவு சரியானவை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

'தமிழ் வழிக்கல்வியில் நாங்கள் உறுதியாக இருப்போம்' என்ற எனது நேர்காணலை 'முரசொலி'யில் வெளியிட்டபோதே, 'துக்ளக்' இதழும் அதனை வெளியிட்டிருக்கிறது.

''தமிழ் வழிக் கல்வி' தொடர்பாக மாநில அரசு பிறப்பித்த ஆணையை ஒட்டி எழுந்துள்ள 'சர்ச்சை' குறித்து, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன், இப்பகுதியில் தமது கருத்துக்களை எழுதியிருக்கிறார்'' என்று 'துக்ளக்' முன்குறிப்பு எழுதியது (8.3.2000)

அதே 'துக்ளக்' இதழில் மற்றொரு இடத்தில் (ப.17) புரட்சித்தலைவி விட்ட அறிக்கைக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார் சோ. அறிக்கை விட்டது தவறல்ல என்று கூறினாலும், ''தமிழ்ப்பாடமொழியைக் கட்டாயமாக்குவது, இந்தித் திணிப்புக்கு வழி வகுத்துவிடும் என்று ஜெ. கூறியிருப்பது சரியான வாதமாகத் தெரியவில்லை'' என்றும் 'சோ' கூறியுள்ளார். இது கவனிக்கப்படவேண்டிய கருத்தாகும்.

* * *

ஒரு கொள்கைக்காகக் குரல் கொடுக்கும் போதோ, அதற்கான அரும்பாடு படும்போதோ வாதத்திற்கு எதிர்வாதம் செய்வதை விட்டு விட்டு, பாடுபடும் ஆள்மீது விழுந்து பிராண்டி விட்டால் அந்த ஆளை வெற்றி கொண்டு விட்டதாக எண்ணும் 'பெருச்சாளித்தனம்' சிலருக்கு இருக்கிறது; ஏன், சில இதழ்களுக்கே இருக்கிறது. அந்த வகையில் 'சோ' போன்றவர்கள் வாதிட்டு எதையும் நிலை நாட்ட விரும்புவார்களே தவிர மேலே விழுந்து பிராண்டுவதில்லை. அவருடைய வாதம் என் பார்வைக்கு முட்டாள் தனமாகக்கூடத் தோன்றலாம். அதற்கு நான் எதிர்வாதமும் செய்யலாம். ஆனால் அவர் வாதிடும் போக்கினையும், அதற்கு அவர்க்கென உரிமையையும் பாராட்டுகின்றேன்.

எங்கள் விவாதங்களைக் கேட்கும் மக்கள் முடிவு பண்ணட்டும் எது சரி என்று.

ஆனால் 'ஜூனியர் விகடன்' இதழ் இந்தப் பிராண்டும் வேலையைச் செய்திருக்கிறது. அதுவும் திட்டவட்டமான 'அறிவு' இல்லாமல், தவறான தகவல்களை வைத்துப் பிராண்டியிருக்கிறது.

தமிழ் வழிக் கல்வியியை வலியுறுத்தும் தமிழக அமைச்சரவையில் பல அமைச்சர்களின் பிள்ளைகள் ஆங்கில வழிப் பள்ளிகளில்தான் படிக்கிறார்கள் என்று பட்டியல் இடுகிறது.

அந்தப் பட்டியலை அப்படியே தந்துள்ளேன்.

| | | |
|---|---|---|
| மேயர் மு.க. ஸ்டாலின் | | மகள் டி.ஏ.வி. மெட்ரிக் ஹையர் செகண்டரி பள்ளி. மகனும் இதே பள்ளியில் படித்தவர்தான். |
| அமைச்சர் அன்பழகன் | | பேரன்கள், பேத்திகள் பெயின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி. |
| துணைசபாநாயகர் பரிதி இளம்வழுதி | | இரண்டு குழந்தைகளும் அடையாறு சிஷ்யா ஆங்கிலவழிக் கல்விப் பள்ளி |
| அமைச்சர் பிச்சாண்டி | - | மூன்று பிள்ளைகளும் ரோசரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| அமைச்சர் தமிழ்க்குடிமகன் | - | மகன் சாந்தோம் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கிலவழிக் கல்வி முடித்தவர். |
| அமைச்சர் க. சுந்தரம் | - | பிள்ளைகள் சர்ச்பார்க்கிலும், அடையாறு சிஷ்யாவிலும். |
| அமைச்சர் துரைமுருகன் | - | பிள்ளைகள் அழகப்பா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் படித்து முடித்தவர்கள். |
| அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் | - | மகன் பாஸ்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில். |
| அமைச்சர் ஆலடி அருணா | - | மகனும் மகளும் செயின்ட் ஜான்ஸ் மெட்ரிக் ஹையர் செகண்டரி பள்ளி. |
| அமைச்சர் பொன்முடி | - | பிள்ளைகள் ரோசரி மெட்ரிக் பள்ளியிலும் சர்ச்பார்க் கான்வென்ட்டிலும். |

இதில் என்னைப் பற்றி வந்த செய்தி முற்றிலும் தவறு. என் பிள்ளைகள் எல்லாருமே +2 வகுப்பு வரை தமிழ்வழியில் படித்தவர்களே.

மெய்ம்மொழி, மதுரை தியாகராசர் நன்முறைப் பள்ளியிலும், கோப்பெருந்தேவி, மதுரை, நிர்மலா மகளிர் மேல்நிலைப்பள்ளியிலும், பாரி சென்னை முத்தையா செட்டியார் மேல்நிலைப்பள்ளியிலும் படித்தவர்கள்.

அப்படியிருக்கும்போது ஜூனியர் விகடன் எவ்வளவு பெரிய 'பொய்'யைக் கூசாமல் போடுகிறது பாருங்கள். அவர்களுக்கு நான் விடுத்த மறுப்பு அறிக்கையைப் பார்த்தால் மீதி விளங்கும்.

அன்புடையீர்,

தமிழ்வழிக் கல்வி பற்றி வெளிவந்த கட்டுரையைப் பார்த்தேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், "அமைச்சர்களின் பிள்ளைகள் ஆங்கிலவழிக் கல்வியில்தான் படிக்கிறார்கள் என்பது மிகச் சின்ன விஷயம். ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்விதான் என்ற கொள்கை முடிவை அனைவரும் ஏற்றுக்கொண்டு நடைமுறைக்கு வந்துவிட்டால் என்னுடைய பிள்ளைகளாக இருந்தாலும் பேரன், பேத்திகளாக இருந்தாலும் அனைவரும் தமிழில் கற்றுத்தானே ஆக வேண்டும்'' என்று தெளிவாகவே சொல்லியிருக்கிறார். திராவிட இயக்கம் தமிழின் மேம்பாட்டை, தமிழினத்தைப் பல்வேறு நிலைகளிலிருந்து மீட்பதை - தமிழ்நாட்டின் உயர்வை முன்வைத்துத் தோன்றிய இயக்கம். எங்களைப் போன்றவர்கள் இந்தக் கொள்கைகளுக்காக என்றும் பாடுபடுவோம். இருந்தாலும் உங்கள் இதழில் வந்த ஒரு செய்திக்காக உங்கள்மீது வழக்கு தொடருவதே முறையாக இருக்குமென்று கருதுகிறேன். புலனாய்வு இதழ் (Investigation Journalism) என்று பெயர் வைத்துக்கொண்டு அறிவிப்பு இதழ் (Information Journalism) என்பதைக்கூட சரியாகச் செய்யாமல் எங்களைப் பற்றிய தவறான செய்திகளைப் பரப்புகிற உங்களை என்னவென்று சொல்லுவது! என்னுடைய மகன் சாந்தோமில் ஆங்கில வழியில் படித்தான் என்பதை உரிய இடத்தில் மெய்ப்பிப்பீர்கள் என்று நம்புகிறேன்."

அரசாணை பிறப்பித்தோம். மழலையர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் எங்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவர்கள். உயர்நீதிமன்றம் நாங்கள் விதித்த அரசாணை செல்லாது என்று அறிவித்துவிட்டது. அடுத்து, அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.

இந்த நிலையில் சட்டமன்றத்தில் இந்தச் சிக்கல் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

அந்தச் செய்தியை அப்படியே தந்தால்தான் உங்களுக்கு நிலைமை விளங்கும் (தினமலர் 10.11.2000)

“தமிழ்வழிக் கல்வியை அமல்படுத்த தனிச் சட்டம் இயற்றாததைக் கண்டித்து இடதுசாரி கட்சியினர் நேற்று சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

சட்டசபையில் நேற்று கேள்விநேரம் முடிந்ததும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சுப்பராயன் எழுந்து, “தமிழ்வழிக் கல்வியை கட்டாயமாக்கும் வகையில் சட்டசபையில் தனிச்சட்டம் இயற்ற வேண்டும் என்ற தீர்மானத்தைத் நான் கொடுத்திருந்தேன். ஆனால், அரசு வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு தனிச்சட்டம் இயற்ற தயக்கம் காட்டுகிறது'' என்று பேசினார்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர், “இப்பிரச்னை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதனால் இப்பிரச்னையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை'' என்று விளக்கமளித்தார். ஆனால், சுப்பராயன் தொடர்ந்து இப்பிரச்னையை வலியுறுத்திப் பேசினார். “மாநிலத்தின் நலன்கருதி சட்டம் இயற்றுவது உச்சநீதிமன்ற பிரச்னை அல்ல.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தால் சட்டம் இயற்றக் கூடாது என்று நினைத்தால், சட்டம் இயற்றும் உரிமையையே நாம் இழந்து விடுகிறோம்'' என்று சுப்பராயன் பேசினார்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் அன்பழகன் கூறியதாவது:

சட்டம் நிறைவேற்றுவது சட்ட சபைக்கு உள்ள உரிமை என்பது ஒருபுறம் இருந்தாலும், உருவாக்கப்படும் சட்டம் விதிகளுக்கு உரிமைகளே மீறுவதாக இருந்தால் அந்த சட்டமே அழிக்கப்பட்டுவிடும். இயற்றக்கூடிய சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருக்கக் கூடாது.

கல்வித் துறையில் பின்பற்றப்படும் கொள்கைகள் அனைத்துமே அரசு உத்தரவு வாயிலாக மட்டுமே இதுவரை பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

அதேபோன்று தாய்மொழிக் கல்விக்கான கொள்கையும் அரசு உத்தரவாக பிறப்பிக்கப்பட்டது, இதை எதிர்த்து அவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். அரசு பிறப்பித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.

அதை எதிர்த்து தமிழக அரசின் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில் தமிழக சட்டசபையில் சட்டம் இயற்ற முடியாது. உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வெளியானபிறகு

அதுபற்றி பரிசீலிக்கலாம். எனவே, தாய்மொழிப்பற்றை வேறு யாரும் எங்களுக்கு ஊட்ட வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு அமைச்சர் அன்பழகன் தெரிவித்தார்.

இதையடுத்து தாய்மொழிக் கல்விக்கு தனிச்சட்டம் இயற்றாததைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் ஜி. பழனிச்சாமி, சுப்பராயன், பெருந்துறை பெரியசாமி, அய்யலுசாமி, சிவபுண்ணியம், எஸ்.வி. கிருஷ்ணன், மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன், டி.. மணி, பார்வர்டு பிளாக் உறுப்பினர் சந்தானம் ஆகியோர் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

நீதியரசர் மோகன் குழு அறிக்கையின் முதல் பரிந்துரையே 'தமிழ் வழிக் கல்வி' தொடர்பாகச் சட்டமியற்ற வேண்டும் என்பதுதான். ஒரு நீதியரசர், இரண்டு முன்னாள் துணைவேந்தர்கள், இரண்டு தமிழறிஞர்கள் கூடி இதற்கெனச் சட்டம் இயற்றுங்கள்' என்று கூறுகிறார்கள்.

ஆனால் அமைச்சரவையில் சட்டம் இயற்றத் தேவையில்லை என்று பேசியவர் க. அன்பழகன்தான்.

ஒரேயடியாகச் சட்டமாக இயற்றியிருந்தால் இந்த அளவுக்கு அரசுக்குத் தோல்வி வந்திருக்குமா?

நாங்கள் எவ்வளவோ சொன்னாலும் கல்வி அமைச்சர் கருத்தையே அமைச்சரவை ஏற்றது.

'ஆணைகள் பிறப்பிக்கப்பட்டாலே போதும்' என்று க. அன்பழகனும் பள்ளிக் கல்வித்துறைச் செயலர் கூறியதால் அவை ஏற்றது.

இன்று என்ன ஆனது? உயர்நீதிமன்றம் நமது ஆணையைக் காலி செய்துவிட்டது.

இப்போதாவாது சட்டம் கொண்டு வாருங்கள் என்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள்.

மேல்முறையீடு நிலுவையில் உள்ளபோது, அது தொடர்பாகத் தமிழக சட்டமன்றத்தில் சட்டம் இயற்ற முடியாதா?

இது தொடர்பாகச் சட்ட வல்லுநர்கள் கருத்து என்ன என்பதைப் பின்னர் குறிப்பிடுவேன்.

எப்படியிருந்தாலும், ''சட்டவல்லுநர்களைக் கலந்து, இங்கே ஒரு சட்டம் இயற்றலாமா என்பது குறித்து அரசு முடிவு செய்யும்'' என்று க. அன்பழகன் சொல்ல முன்வரவில்லை.

''தாய்மொழிப்........ பேசியது இல்லை'' என்று சொல்கிறார்.

படிப்படியாகக் கோட்டை விட்டு விட்டு, இப்படிப் பேசுவதால் என்ன பயன்?

எந்த அளவுக்குப் பல்வேறு படிநிலைகளில் நம்மிலேயே பலர் இந்த ஆணையையே வேண்டாம் என்று சொன்னார்கள் என்பதைத் தொடர்புடையவர்கள் எண்ணிப்பார்க்கட்டுமே.

அப்போதாவது 'காலத்தால்' செய்த இமாலயத் தவறு இது என்பதை உணர்கிறார்களா பார்ப்போம்.

கடைசியாக ஒரு செய்தி

நாம் எடுத்துள்ள முயற்சியால் ஆங்கிலத்தில் மாணவர்களுக்குள்ள திறமையை வெகுவாகக் குறைத்துவிடும் என்று ஓர் இதழ் சொல்கிறது. நாம் இந்த முயற்சியை இப்போதுதான் எடுத்துள்ளோம். ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகள் 41; C.B.S.E., பள்ளிகள் 197; மெட்ரிகுலேசன் பள்ளிகள் 2,037; ஏற்புப் பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் 2,100 ஆகியவற்றிலும் கல்லூரிகளில் இணைப்பயிற்று மொழி என்ற முறையில் 65 அரசினர் கல்லூரிகளிலும், ஒரே பயிற்றுமொழியாக 160 அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும், முற்றிலும் ஆங்கிலமயமாக 100-க்கும் மேற்பட்ட சுயநிதிக் கலைக்கல்லூரிகளிலும் ஆங்கிலம்தான் கோலோச்சுகிறது. அப்படியானால், இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுதுபவர்களின் எண்ணிக்கை ஏன் குறைகிறது? முற்றிலும் ஆங்கிலமயமாகவே இருக்கும் இந்த நிலையில் இ.ஆ.ப.,(I.A.S.,) தேர்வு எழுதி வெற்றி பெறுபவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் குறைகிறது என்றால், அதற்கு என்ன காரணம் என்பதை எங்களுடன் மோதுபவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

# இயல் முப்பத்து மூன்று

## கட்டாயம் கடைப்பிடித்திருந்தால்........?

தமிழ்நாட்டில் ஏராளமான மழலையர் பள்ளிகள் எப்படியும் 20000 பள்ளிகளுக்கு மேல்தான் இருக்கும். அவற்றுள் 30.6.1998 அன்று இருந்த நிலவரப்படி 2100 மழலையர் பள்ளிகள்தாம் அரசின் ஏற்புப் பெற்றவை. இவற்றை 'மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்' என அழைப்போம் (Nursery and Primary Schools)

இவற்றுக்கு மேல் 7ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இவற்றில் பயிலும் மாணவர்கள் - அதிலும் ஏற்புப் பெறாத பள்ளிகள் மற்றும் தனிப்படிப்பு மூலம் படித்த மாணவர்களை மேல் வகுப்புகளில் - ஏற்புப் பெற்ற பள்ளிகளில் எப்படிச் சேர்ப்பது?

இதற்கான விதிதான் 37-அ.

விதிகளைக் கவனியுங்கள்

"37(a) the Headmaster of a Secodary School into which a pupil is admitted shall place him in the standard for which he is found fit, provided that in the case of admission, from one recognised school into another, the pupil shall be admitted into the standard for which his transfer certificate declares him fit, but he shall not be placed in a higher standared without the previous permission of the District Educational Officer. A pupil coming from an unrecognised school of after private study shall not be admitted into a standard above standard six"

கடைசிவரிகளைக் கவனியுங்கள். 'A pupil coming from an **unrecognised school** of after **private study** shall not be admitted into a standard above **standard six'**

தமிழில் :

"மேற்குறித்த விதிகளின்படி, அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகள் மற்றும் தனிப்படிப்பு மூலம் கல்வி பயின்ற மாணாக்கர்களை அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் ஆறாம் வகுப்புக்கு மேல் சேர்க்க இயலாது.

இவ்வளவு கடுமையான ஒரு விதியைப் போட்டுவிட்டார்கள். ஆனால் கடைப் பிடித்தார்களா?

பொதுவாக மாணவர்களைச் சேர்க்கும் விதிகளோடு, ஏற்புப்பெறாத பள்ளிகளிலிருந்தோ அல்லது தனிப்படிப்பு மூலமாகவோ வருபவர்களைச் சேர்ப்பதற்கான விதிகள் இவை:

“ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில், மேற்கண்டவாறு கல்வி பயின்ற மாணாக்கர்களுக்குப் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் தேர்வு நடத்தப்பட்டு அவர்கள் எந்த வகுப்புக்குச் சேரத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிந்தும் மற்றும் வயது விதிமுறைகளை நிறைவு செய்பவர்களாக உள்ளார்களா என்பதை உறுதி செய்தும் பள்ளியில் சேர்த்துக் கொண்டு அதற்குரிய அனுமதியை சம்பந்தப்பட்ட உதவித் தொடக்கக்கல்வி அலுவலரிடம் பெற்றுக் கொள்கிறார்கள்.”

ஆனால் 37அ விதியின்படி,

“ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தனிப்படிப்பு மற்றும் அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் கல்வி பயின்ற மாணாக்கர்களை அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர்த்துக்கொள்வதற்கு மேற்குறித்த தமிழ்நாடு கல்வி விதிகள் 37(அ)ன் சேர்த்துக் கொள்ள இயலாது என்பதால், ஆண்டுதோறும் அரசு இவ்விதியினை தளர்வு செய்து ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகள் மற்றும் தனிப்படிப்பு மூலம் கல்வி பயின்ற மாணாக்கர்களை அவர்கள் அனைத்து வகைகளிலும் சம்பந்தப்பட்ட வகுப்புகளில் சேருவதற்கு தகுதி படைத்தவர்களாக இருப்பின், மாவட்டக் கல்வி அலுவலர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அனுமதி பெற்று சேர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.”

இந்த விதிமுறையைக் கட்டாயம் கடைப்பிடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? பல பள்ளிகள் காணாமல் போயிருக்கும் - அல்லது எப்படியாவது ஏற்புப் பெற்றாக வேண்டும் என்று முயன்று ஏற்புப் பெற்ற பள்ளிகளாக இயங்கியிருக்கும்.

நன்றாகக் கவனியுங்கள்.

4ஆம் வகுப்பு முடித்தவர் அப்படியே 5ஆம் வகுப்புக்குப் போய்விட முடியாது.

எந்தப் பள்ளியில் சேர்கிறார்களோ அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் தேர்வு நடத்தி உரிய தகுதியறிந்துதான் ஏதாவதொரு

வகுப்பில் சேர்ப்பாரே தவிர 4ஆம் வகுப்புப் படித்ததாகச் சான்றிதழ் வைத்திருந்ததாலேயே 5ஆம் வகுப்புக்குப் போய்விட முடியாது.

இது ஒரு வகை

37அ விதியின்படி 6 முதல் 8 வரை ஏற்புப் பெறாத பள்ளிகளில் பயின்றவர்களோ அல்லது தனிப்படிப்பு மூலம் படித்தவர்களோ ஏற்புப்பெற்ற பள்ளிகளில் சேர முடியாது.

இதனை **இறுக்கமாகக்** கடைப்பிடித்திருந்தால் ஏற்புப்பெறாத பள்ளி எதுவும் 6,7,8ஆம் வகுப்பினை நடத்துவதற்கு முன் வந்திருக்க முடியாது. அவர்களது ஆட்டத்தையெல்லாம் ஐந்தாம் வகுப்போடு நிறுத்திக்கொண்டு, உயர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளில் எந்த இடரும் இல்லாத நிலையை உருவாக்கிக் கொண்டிருப்பார்கள்.

எதற்கு விதியைப் போடவேண்டும்? போட்டுவிட்டு, ஏன் அதற்கு விதித்தளர்வு செய்யவேண்டும்? அதுவும் ஒரே அடியாக இல்லை. ஒவ்வோராண்டும் விதித்தளர்வு அதுவும் 37அ விதி போடப்பட்ட ஆண்டு 1974: அதிலிருந்து விதித்தளர்வுதான்.

நாங்கள் தமிழ் வளர்ச்சிக்கான பல பணிகளையும் மேற்கொண்டபோதும், கல்வித்துறை இந்தக் கட்டத்திலாவது மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளை ஒழுங்கு செய்ய வேண்டம் என்று நினைக்கவில்லை. கல்வி அமைச்சர் மட்டும் ஒரு திட்டவட்டமான முடிவெடுத்து 13.5.1996இல் பொறுப்பேற்றவுடன் இந்த ஆண்டு 37அ விதிக்குத் தளர்வளித்து ஆணைபிறப்பிக்க வேண்டாம் என்று அறிவித்திருந்தால் போதும் இந்தப் புற்றீசல்களில் பல இறகிழந்து உயிர் விட்டிருக்கும். ஆனால் இதுபற்றி எந்தச் சிந்தனையுமில்லாத கல்வி அமைச்சர் - தமிழ்ப் பேராசிரியர் க. அன்பழகன் - எந்தத் தடங்கலுமின்றி விதித்தளர்வுகளைச் செய்யச் சொல்லிவிட்டார்.

அப்படியானால் இதன் பின்னணியில் என்ன நடந்திருக்கும் விதியை இறுக்கமாகக் கடைப்பிடித்திருந்தால் ஏற்புப் பெற்ற 2100 பள்ளிகளில் மட்டும் தமிழ்வழிக் கல்வியை எளிதாகக் கொண்டு வந்திருக்க முடியும்.

இதோ, விதித்தளர்வு அரசாணையைப் பாருங்கள். அதுவும் 1998-99க்குரிய அரசாணை.

## தமிழ்நாடு அரசு

## பொருட்சுருக்கம்

தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி - தனிப்படிப்பு மற்றும் அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் படித்த மாணவர்களை 1998-99ம் கல்வி ஆண்டில் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்துறை

அரசு ஆணை (நிலை) எண்.175 நாள் 28.5.1998

படிக்கப்பட்டது.

1. அரசாணை நிலை எண்.356, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை நாள்.30.5.96
2. அரசாணை (நிலை) எண்.229 பள்ளிக் கல்வித்துறை நாள் 22.5.97
3. பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதம் ஆர்சி.எண்.002117/இ1/97 நாள் 20.3.98
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.நே.மு.17970/ தொ.க.அ1/94, நாள்.5.5.98

* * *

ஆணை:

தமிழ்நாடு கல்வி விதிகள் 37(அ)-ன்படி தனிப்படிப்பு மற்றும் அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் கல்வி பயின்ற குழந்தைகளை அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் ஆறாம் வகுப்புக்கு மேல் சேர்க்கக்கூடாது என உள்ளது. பார்வையில் காணும் அரசு ஆணைகளில் தனிப்படிப்பு மற்றும் அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் படித்த மாணவர்களை 1996-97 மற்றும் 1997-98ம் கல்வி ஆண்டுகளில், அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை சேர்க்க விதித் தளர்வு செய்து அனுமதி அளிக்கப்பட்டது. பார்வை 3 மற்றும் 4ல் காணும் கடிதங்களில் பள்ளிக்கல்வி இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர் கருத்துருக்களை பரிசீலனை

செய்து தமிழ்நாடு கல்வி விதி 37(அ) வை தளர்வு செய்து தனிப்படிப்பு மற்றும் அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் படித்த மாணவர்களை 1998-99ம் கல்வி ஆண்டில் அனைத்து வகை அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரைசேர்க்க அனுமதி அளிக்கிறது. ஆனால் இம்மாணவர்கள் மற்ற அனைத்து வகைகளிலும் அதற்கு தகுதியுடையவர்களாக இருக்கவேண்டும். இந்த விதிவிலக்கு சலுகையை மாவட்டக் கல்வி அலுவலர் கொடுக்க வேண்டும். தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் இவ்வாணையினை அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துவகை பள்ளிகளின் கவனத்திற்கும் கொண்டுவரவேண்டும். மேலும் இது தொடர்பாக மாவட்ட கல்வி அலுவலர் / மகளிர் பள்ளி ஆய்வர் / முதன்மை கல்வி அலுவலர் ஆகியோருக்கு தேவையான கூடுதல் அறிவுரைகளை பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் வெளியிடவேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ. கௌரிசங்கர்
அரசு செயலாளர்

ஒரு வரியைக் கவனியுங்கள்

இந்த விதித்தளர்வினை - ஆம்! விதிவிலக்குச் சலுகையினை மாவட்டக் கல்வி அலுவலர் தான் கொடுக்கவேண்டும்.

ஆம்! அரசு ஒப்புக் கொண்டால்தான் மாணவர்களுக்கு உயர்கல்வி கிடைக்கும். இல்லாவிட்டால் ஏற்புப் பெற்ற பள்ளிகளிலும் அதுவும் அரசுப் பள்ளிகளில் கட்டாயம் படித்தாகவேண்டும். பலரும் கடை திறந்து வியாபாரம் செய்திருக்க முடியாது.

ஆனால் மாண்புமிகு கல்வி அமைச்சர் தான் பொறுப்பில் இருக்கும் வரை இந்த வியாபாரக் கடைகளுக்குத் தாராள அனுமதி வழங்கிவிட்டார். முறைப்படி, கட்டுப்படுத்தி, ஏற்புப் பெறும் தகுதியுடைய பள்ளிகளாக அவற்றை மாற்றுவதற்குப் பதிலாக, கண்டவரெல்லாம் கடை திறக்க, வரைதுறையில்லாமல் வாரிக்குவிக்கக் கல்வியமைச்சர் வாய்ப்பளித்து விட்டார். இதில் வாய்ப்பும், வளமும் பள்ளி நடத்தியவர்கட்கு மட்டும்தானா? சிந்தியுங்கள்.

மற்றொன்று : ஒவ்வோராண்டும் விதித் தளர்வு பெற்றே மூச்சுவிட்டுக் கொண்டிருந்த இந்தப் பள்ளிகளுக்குச் சங்கம் வைத்துப் பணவசதியில்

குளித்துக் கொண்டிருந்தவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "நாங்களோ அரசு உதவி எதையும் பெறுவதில்லை. அரசு எங்களுக்கு எந்த நிதியும் தருவதில்லை. பள்ளி நடத்துபவர்கள் நாங்கள்; ஆசிரியர்கட்குச் சம்பளம் தருபவர்கள் நாங்கள்! (அடடா! இவர்கள் தரும் சம்பளம் பற்றி அங்குப் பணியாற்றுபவர்களிடம் கேட்டால்தான் தெரியும்!) அப்படியிருக்கும்போது அரசு ஏன் தலையிடவேண்டும்! ஆங்கிலம் படிக்கவும், ஆங்கில வழியில் படிக்கவும்தான் பெற்றோர்கள் எங்கள் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். அப்படியிருக்கும்போது தமிழ் வழியில் படிக்கவேண்டும் என்றால் எப்படி ஏற்பது!"

என்றுதான் வீராவேசமாகச் சொன்னார்கள். அப்போதாவது கல்வி அமைச்சர்க்கு உணர்ச்சி வந்து 'இனி 37அ விதியை இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள்; பார்த்து விடுவோம்! என்றாரா? உண்மையைச் சொன்னால், நாங்கள் ஆணை பிறப்பிப்பது போல் பிறப்பிக்கின்றோம்; நீங்கள் அதை எதிர்த்துப் போராடுங்கள்; நாங்கள் எப்படியும் அதை 'உலட்டி' விடுகிறோம் என்று உறுதி கூறி உள்வேலை - கீழறுப்பு வேலை - செய்தது போலல்லவா இருக்கிறது!

ஏற்புப் பெறவும் அரசுதான் மனம் வைக்கவேண்டும்; 6ஆம் வகுப்புக்கு மேல் சேர்க்கப்பட விதித் தளர்வு வேண்டும் என்றால் அரசுதான் அதைச் செய்யவேண்டும்.

அடிப்படை வசதிகள் இல்லாமல் ஆசிரியர்கட்கு 500ம் 600ம் தந்து ஏமாற்றி வரும் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி அவர்கள் தவறு செய்வதாகக் கண்டறிந்தால் தந்துள்ள ஏற்பினை இலதாக்கவும் (இரத்துச் செய்திடவும்) அரசுதான் அதிகாரம் படைத்தது.

இந்த உண்மைகளைக் கல்விக் கடை நடத்தும் வியாபாரிகள் உணர்ந்தாலும், உணராததுபோல் நடித்தார்கள். ஆனால் அதிகாரம் படைத்த அரசு அதிலும் கல்வி அமைச்சர் இதனை மறந்தது ஏன்?

இதில் மட்டுமன்று; மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதிலும் கல்வி அமைச்சரின் திருப்பணிகளை ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

திருவரங்கம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளித் தலைமைஆசிரியர் திரு. இரா. வரதராசன் அனுபவமிக்கவர்.

தனிப்படிப்பு (Private Study) என்பது எப்படி ஒரு கண்கட்டி வித்தையாக நடைபெற்று, கல்வித் துறையையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறது என்பதனை விளக்கமாக எழுதுகிறார்.

“மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

வணக்கம். அனைத்து மெட்ரிக் பள்ளிகளிலும், மாநில அரசின் பாடமுறைகளைப் பின்பற்றும் பள்ளிகளிலும் தமிழ் வழிக் கல்வியை மூன்றாண்டுகளுக்குள் கட்டாயமாக்கும் சட்டம் தமிழ்மொழிக்கு உண்மையான மகுடம் சூட்டும் முயற்சி என்பதில் ஐயமில்லை. தமிழ்கூறும் நல்லுலகம் என்றென்றும் தங்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இருப்பினும் பல்வேறு கல்வி நிறுவனங்கள் சட்டத்தின் ஓட்டைகளைத் தேடிப் பிடித்துப் பயன்படுத்திக் கொள்ள முயலும்.

ஐந்தாம் வகுப்பு முடியும் வரையிலும் தனிப்படிப்பு மூலம் கற்றதாகக் கூறி - அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் ஆறாம் வகுப்பில் தங்கள் மாணவர்களைச் சேர்த்து விடுவர். பள்ளிகள் இல்லாத ஊர்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்ட பிறகும் நகரத்துப் பள்ளிகளில் மட்டும் தனிப்படிப்பு (Private Study) மூலம் தகுதி பெற்றுள்ளதாகக் கூறி ஆறாம் வகுப்பில் அதிகமான அளவில் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இதனைத் தடை செய்துவிட்டால் தமிழ் வழிக் கல்விச் சட்டம் முழுமையான பயன் தரும் என்பது பலருடைய கருத்து.

தமிழ் வளரப் பாடுபடும் தங்கள் வழிகாட்டுதலில்தான் இது பற்றியும் ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று தளரா நம்பிக்கை கொண்டுள்ளேன். நன்றி.

என்றும் அன்புடன்

(இரா. வரதராசன்)

என்கிறார். இதுகுறித்து என்றேனும் கல்வி அமைச்சர் க. அன்பழகன் தனிக்கவனம் எடுத்து விரிவாக அலசி ஆராய்ந்து இதற்கொரு முடிவு கட்ட எந்த ஒரு ஏற்பாட்டையாவது செய்தாரா?

ஒருவேளை இதனைப் பயன்படுத்துவோர் 6ஆம் வகுப்பில் சேர முடியாதபடி 37‘அ’ எனும் விதியினைப் போட்டோமே! அதையாவது இறுக்கமாகக் கடைப்பிடித்தாரா? ‘இல்லை‘ என்பதனை முன்பே தெளிவு படுத்தியுள்ளேன்.

# இயல் முப்பத்து நான்கு

# கல்வி அமைச்சரின். . . !

கல்வி அமைச்சரின் கருத்து தெளிவானதுதான். அதனை அவரது பேச்சிலிருந்து தெரிந்து கொள்ள முடியும். (தினமணி 14.7.96)

"தமிழ்நாடு மெட்ரிகுலேசன் சங்கத்தின் சார்பில் சர்வதேச கல்வி ஆண்டு மற்றும் அண்ணா விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் விருதுகளை வழங்கி அன்பழகன் பேசியதாவது.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் சிறப்பாக பணியாற்றி வருகின்றன. ஆனாலும் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு நாங்களும் தமிழ்ப்பாடம் நடத்துகிறோம் என்று சொல்வதில் என்ன பெருமை இருக்கிறது?

ஆங்கிலம் படிப்பதில் மட்டுமே சிறப்பு இருப்பதாக உள்ள உணர்வு சரியானதல்ல. இங்கே ஆங்கிலம் பேசத் தெரிந்த பலரால் இங்கிலாந்தில் பேசுகிற ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழகத்தில் ஆங்கிலத்தில் படித்தவர்கள்கூட ஐ.ஏ.எஸ். போன்ற போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறவில்லை என்பது நிலை. ஆங்கில அறிவு தேவைதான். ஆனால் ஆங்கில மொழி வழிப் பயிற்சி என்பது நமது இயலாமையின் அடையாளம். ஆங்கில அறிவை வேண்டும் என்று கூறவில்லை. அதேசமயம் தமிழைப் படிப்பதை அலட்சியமாக எண்ணும் போக்கு மாற வேண்டும். பல்கலைக்கழகம் வரை தமிழ் வழிக்கல்வி அளிக்கவேண்டும் என்பதுதான் தமிழக அரசின் நோக்கமாகும். மருத்துவம், பொறியியல் படிப்புகளைத் தமிழில் அளிக்க முடியும் என்பதுதான் வெளிநாடுகளில் சென்று படித்து பணியாற்றி அனுபவம் பெற்ற தமிழறிஞர்களின் கருத்தாகும். தாய்மொழிக் கல்வி மூலம் முன்னேறிய பல நாடுகளை உதாரணம் காட்டுகிறார்கள். எல்லாப் படிப்புகளும் தமிழால் முடியும். மெல்ல மெல்ல தமிழைப் பயிற்று மொழியாக்குவது குறித்து மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகங்கள் சிந்திக்கவேண்டும்.''

பல்கலைக்கழகம் வரை தமிழ்வழிக் கல்வி மருத்துவ, பொறியியல் படிப்புகளைத் தமிழில் அளிக்க முடியும். எல்லாப் படிப்புகளையும் தமிழில் தரமுடியும். மெல்ல மெல்லத் தமிழைப் பயிற்றுமொழியாக்குவது குறித்து மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் சிந்திக்க வேண்டும்.

இவ்வளவு தெளிவாகப் பேசும் அன்பழகன் இவற்றுக்கான முயற்சியில் இறங்கினாரா? நூலில் இது குறித்து விரிவாகப் பார்ப்போம்.

வேலூர் மாவட்டப் பகுத்தறிவு ஆசிரியரணி அமைப்பாளர் மா. பன்னீர்ச் செல்வன், 'தொடக்கப் பள்ளிகளில்' வழங்கப்படும் மாற்றுச் சான்றிதழில் எந்த அளவுக்கு தமிழ் கொச்சைப் படுத்தப்படுகிறது என்பதை என் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

'ரெகார்ட் ஷீட்' என்று தொடங்கும் அந்தச் சான்றிதழை நல்ல தமிழில் வடித்துக் கல்வித்துறைக்கு அனுப்பி வைத்தோம். அதற்கப்புறம் என்ன நடந்தது என்றுதான் தெரியவில்லை (நூலில் ஆம் பக்கத்தில் உள்ளது)

'தினமணி'யில் (23.5.97) வெளிவந்த செய்தியைப் படித்தாலே பேரா. அன்பழகன் பெருமை விளங்கும். படியுங்கள்.

தமிழைப் படிக்கும் மாணவர்களுக்குப் பயனுண்டா?

ஈரோடு, மே 22- தமிழகத்தில் 10,12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவிகளின் மேற்படிப்புச் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் திட்டத்தில் பயன்பெறப்போகும் மாணவ, மாணவிகள் யார் யார்?

மாநிலத்தில் நடைபெற்ற மேனிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் வெள்ளிக் கிழமை வெளிவருகின்றன.

மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் படிப்புச் செலவை அரசு ஏற்கும் திட்டத்தை நிதி நிலை அறிக்கை யில் புதிய தி.மு.க. அரசு அறிவித்திருந்தது.

எனினும், தமிழ் படிப்பவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் இந்த உதவித் தொகையைப் பெற சம்பந்தப்பட்ட மாணவ, மாணவிகள் தமிழை மொழிப் பாடமாகப் பயின்றிருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்தது.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ, மாணவிகளுக்கு அரசு உதவி வழங்கப் பட்டபோது கூட, மொழிப் பாடமாகத் தமிழைப் பயின்றிருக்க வேண்டும் என்ற நடைமுறையே பின்பற்றப்பட்டது.

பிரெஞ்ச், ஹிந்தி, சமஸ்கிருதம் போன்றவற்றை மொழிப் பாடமாகப் பயின்றிருந்தால் உதவித் தொகை வழங்கப்படுவதில்லை.

1995-ல் தண்டபாணி என்ற ஈரோட்டு மாணவன் ஆகக் கூடுதல் மதிப்பெண் பெற்றாலும் தமிழைப் படிக்காததால் தமிழ் படித்த மற்றொரு மாணவிக்கே மாநில அளவிலான முதல் பரிசும் உதவியும் வழங்கப்பட்டது.

ஆனால், கடந்த ஆண்டில் - தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின் - ஈரோட்டைச் சேர்ந்த சம்ஸ்கிருதம் படித்த இரு மாணவர்கள் அரசின் உதவி பெற்றனர். இவர்கள் தமிழைப் பயின்றிருக்கவில்லை.

தமிழ் தவிர்த்த பிற மொழிகளைப் பயிலும் மாணவர்களால் எளிதில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற முடியும். ஆனால், தமிழைப் பொருத்தவரை இது சாத்தியமேயில்லை; அபூர்வம். இதனால், படித்த வசதியான, மேட்டுக்குடி மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் படிப்பதைத் தவிர்த்து விட்டு, வேற்று மொழிகளுக்குச் சென்று விடுகின்றனர். பெரும்பாலும் மிகவும் வசதியானவர்கள் மட்டுமே பயிலக் கூடிய கல்விக் கூடங்களில்தான் பிற மொழிப் படிப்பும் கிட்டும்.

ஆனால், சாதாரண, கிராமப்புற மக்களின் குழந்தைகளால் தமிழை மட்டுமே மொழிப் பாடமாகப் பயில வாய்க்கும். தமிழைப் படித்தால் நிச்சயம் பிற மொழிகளைப் போல நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் எடுக்க இயலாது; உதவி பெற வேண்டிய நிலையிலுள்ள இவர்களுக்கு உரிய பயனும் கிட்டாது.

தமிழக அரசின் புதிய அறிவிப்பின் மூலம் மாநில அளவில் மூன்று பேரும் 29 மாவட்டங்களில் தலா மூவர் வீதம் 87 பேருமாக மொத்தம் 90 மாணவ, மாணவிகள் பயன் பெற்று மேற்படிப்புக்கான கல்விச் செலவு முழுவதையும் பெறப்போகிறார்கள்.

ஆனால், தற்போதைய நடைமுறையே பின்பற்றப்பட்டால், தமிழ் படிப்பதே தண்டனையாக மாறிவிடுவதால், இவர்களில் தமிழில் படித்த பத்து அல்லது பதினைந்து பேர்கூட அரசின் உதவியைப் பெற முடியாது என ஆசிரிய வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

ஏனெனில், தமிழகத்தில் ஏறக்குறைய அனைத்து மாவட்டத் தலைமையகங்களிலுமே தமிழைப் புறந்தள்ளி பிறமொழி கற்பிக்கும் 'மேல்நிலை'ப் பள்ளிகள் இருக்கின்றன பிற மொழி பயின்றால் மட்டுமே 'ரேங்க்' பெற முடியும் என்ற நிலையில் மாநிலம் முழுவதும் தமிழ் படிப்பவர்கள் இரண்டாந்தர மாணவர்களாகத் தாழ்ந்துதான் போக வேண்டியிருக்கும் என அஞ்சப்படுகிறது.

இக்குறை போக்கத் தமிழை மொழிப் பாடமாகப் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகள் மட்டுமே பயன்பெறும் விதத்தில் விரைவில் அரசு ஆணை

வெளியிடப்படும் என சமீபத்தில் ஈரோட்டில் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அறிவித்திருந்தார்.

எனினும், இதுவரையில் ஆணை எதுவும் வெளியானதாகத் தெரியவில்லை; ஆனால், மேனிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் வெளிவருகின்றன. தமிழ்நாட்டில் தமிழ் படிக்கும் மாணவர்களால் பயன்பெற முடியுமா?

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையைக்கூட அன்பழகன் அப்படியே தொடரவில்லையே ஏன்? 1996 - 97 கல்வியாண்டில் - தி.மு.க. ஆட்சி ஏற்ற முதல் ஆண்டிலேயே ஒரு பெரும் சறுக்கல்.

கவனியுங்கள் “கடந்த ஆண்டில் - தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின் - ஈரோட்டைச் சேர்ந்த சம்ஸ்கிருதம் படித்த இரு மாணவர்கள் அரசின் உதவி பெற்றனர். இவர்கள் தமிழைப் பயின்றிருக்கவில்லை.”

அப்படியானால் தமிழே படிக்காத மாணவன் தமிழக அரசின் உதவி பெறுகிறான் என்றால் - அதுவும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த நடைமுறையையும் மீறி ஒருவன் உதவி பெறுகின்றான் என்றால் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பெறுகிறான் என்றால் தவறு யாருடையது. அதிகாரிகளே அன்பழகனுக்குத் தெரியாமல் செய்து விட்டார்கள் என்றால், அந்த அதிகாரிகள் தண்டிக்கப்பட்டார்களா? இல்லை, அன்பழகனே இதைச் செய்தார் என்றால் ஒரு தமிழ்ப் பேராசிரியரின் மிகப் பெரிய மோசடி என்று இதனைக் கூறலாமா?

எப்படியோ ஓராண்டு - தமிழ் படித்த மாணவர்களை அன்பழகனின் கல்வித்துறை வஞ்சித்து விட்டது. ஆனால் இரண்டாம் ஆண்டில் நான் ஈரோட்டில் கூறியபடியே மாற்றம் செய்யப்பட்டது.

அன்பழகன் இதில் ஏன் தவறு செய்தார்? அல்லது அரசு அதிகாரிகள் தவறு செய்திருந்தால் அன்பழகன் ஏன் தடுத்து நிறுத்தவில்லை?

நானாகக் கற்பனை செய்தோ, இட்டுக் கட்டியோ எதையும் எழுதிவிடவில்லை. சிறு சிறு செயல்களில் ஆர்வம் காட்டிய தமிழ் அன்பர்களையெல்லாம் பாராட்டத் தயங்காத தமிழ்க்குடிமகன் எனக்கும் மூத்தவர், பட்டறிவுள்ளவர், இனமானப் பேராசிரியரைப் பாராட்டாமல் இருப்பேனா?

என்றும் அவர்துறையில் வெளியாகும் அரசாணைகளின் நிலையைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆசிரியர் குரல் 'தமிழக ஆசிரியர் கூட்டணி' சார்பில் வெளியிடப் படுகிறது. 1.3.1997 இல் வெளியான இதழில் ஆசிரியர்க்குத் தொடர்புள்ள அரசாணைகள் பல அப்படியே' தரப்பட்டுள்ளன.

1) தொகுப்பூதிய நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு, "காலமுறை ஊதியம்" வழங்குவது குறித்த ஆணை. இவ்வளவுக்கும் இது 'இடைநிலை ஆசிரியர்கள்' மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கானது. அரசாணை எண்:5 நாள் 6.1.97 இந்த அரசாணை ஆங்கிலத்தில். பிறப்பித்தவர் சபா. இளங்கோவன் இ.ஆ.ப. இவ்வளவுக்கும் இவர் ஒரு காலத்தில் தமிழ் வளர்ச்சி தமிழ் பண்பாட்டுத் துறையின் செயலாளராகவும் இருந்தவர். நல்ல தமிழில் பெயர் கொண்டுள்ள இளங்கோவன் அதே தமிழில் அரசாணையை வெளியிடவில்லை.

(2) அடுத்து, தற்காலிக ஆசிரியர் சம்பள ஆணை 1.7.96 முதல் தற்காலிக ஆசிரியர்கள் தொடர்ந்து பணியில் நீடிப்பது குறித்த செய்திதான். எளிய செய்தி. அரசு இணைச் செயலாளர் டி.ஆர். நாராயணன் எழுதிய அரசு மடல் (30002 - நாள்: 26.12.96)

இது முற்றிலும் ஆங்கிலத்தில் அதேபோல் சனவரி 97க்குரிய - தற்காலிக ஆசிரியர் சம்பள ஆணை இதுவும் ஆங்கிலத்தில்

அதே நேரத்தில் தொப்பம் பட்டி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் 'முன் ஊதிய உயர்வு - இடைநிலை ஆசிரியர்கள்' தொடர்பான மடலை நல்ல தமிழில் வெளியிட்டுள்ளார். ந.க.எண்:2757/19.12.96.

அதே இதழில் 3ஆம் பக்கத்தில் 'ஒய்வூதியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்' தொடர்பாகவும் (762/31.12.96) மருத்துவ நிதி உதவி வழங்கல் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் குறித்த ஆணையையும் (141/26.2.96) நிதித்துறை ஆங்கிலத்திலேயே வெளியிட்டுள்ளது. இங்கிலாந்து கருவூலத்திலிருந்து நிதி பெற்று இங்குள்ள ஏழை இந்தியத் தமிழர்களுக்கு - ஆசிரியர்கட்கு ஊழியம் வழங்க வேண்டியிருப்பதால் இவர்கள் இன்றும் ஆங்கிலத்திலேயே 'ஆதிக்கம்' செலுத்துகிறார்களா?

மாநகராட்சி ஆசிரியர்கட்கு வழங்கும் ஊதியம் குறித்து உள்ளாட்சித் துறை பிறப்பித்த ஆணையும் ஆங்கிலத்தில்.

இதில் என் வருத்தமெல்லாம், கல்வித் துறையிலாவது முதலில் கவனம் எடுத்துக்கொண்டு அரசாணைகளைப் பிறப்பிக்கக் கூடாதா? என்பதுதான். இது தமிழ்ப் பேராசிரியராகிய கல்வி அமைச்சரின் துறையல்லவா?

மேலும் இவரே 1989 - 91 இல் தமிழ் ஆட்சி மொழி அமைச்சராக இருந்தவர் அல்லவா?

கல்வி அமைச்சரின் உணர்வும் செயற்பாடும்

விழுப்புரத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் பேசிய பேச்சினைத் தினகரன் (28.10.98) வெளியிட்டிருக்கிறது.

அதில் சில பகுதிகளை மட்டும் தருகிறேன்.

"நான் மந்திரியாகிவிட்டேன் என்பதற்காக மனநிறைவடைய முடியாது. ஏன் சொல்கிறேன் என்றால் தமிழுக்கு பாதுகாவல் தருகின்ற மிகப்பெரிய பொறுப்பு கலைஞருக்கு இருக்கிறது/ அதற்கு துணை நிற்கக்கூடிய பெரும் பொறுப்பு எனக்கு இருக்கிறது"

"இந்தியாவில் உள்ள கல்வி திட்டத்தில் சமஸ்கிருதம் இடம்பெற வேண்டும் என்பதே பி.ஜே.பி.யின் எண்ணம் சமஸ்கிருதத்தின் செல்வாக்கை உயர்த்திக் கொள்ள இந்தக் கட்சி திட்டமிடுகிறது.

உள்ளம் - உணர்வு

டெல்லியில் ஆட்சியில் இருப்பவர்கள் முதல் இங்குள்ள சங்கராச்சரி வரை உணர்விலே ஒன்றுபட்டு நிற்கிறார்கள். இந்த உணர்வு தமிழர்களிடத்திலே இருக்கிறதா? இங்கு மேடையில் இருப்பவர்கள் மட்டும் சுயமரியாதை திருமணம் நடத்தினால் மட்டும் தமிழ் வாழ்ந்துவிடுமா? ஏதோ 4 பலகைகளில் எழுதினால் மட்டும் தமிழ் வளர்ந்து விடுமா? நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உணர்விலும் தமிழ் வாழ வேண்டாமா?''

இன உணர்வோடு கூடிய இவரது பேச்சைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழ் வாழ்ந்து தீர வேண்டும் என்பதற்காக பேராசிரியர் க. அன்பழகன் செய்த பணிகள் என்னென்ன? எத்தனைபேர் பட்டியலிட்டுக் காட்ட முடியும்?

நான்கு பலகைகளில் எழுதினால் மட்டும் தமிழ் வளர்ந்து விடுமா? என்று கேட்கிறார்.

'ஜூசஸ் செண்டர்' ஒழிந்து 'பழமுதிர்ச்சோலை' வந்துவிட்டது. 'Weighing Bridge' என்பதை எழுதுவதில் சரியாக வரவில்லை. எனவே 'எடைமேடை' என்று எழுதினார்கள். இவை இன்று எங்கும் புழக்கத்தில் உள்ளன. விளம்பரப் பலகைகளில் எழுதியதால்தான் இவை இன்று வாழ்கின்றன.

விளம்பரப் பலகைகளில் தமிழில் எழுதிவைப்பதும் தமிழ் வளர்ச்சிதான். இதை எல்லாம் உணர்ந்தாக வேண்டும்.

இவர் சொல்வதெல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் இவரது செயற்பாடுகள் தமிழுக்குப் பாதுகாப்பு அளித்தனவா? அல்லது ஆங்கிலத்திற்கு அரண் அமைத்துப் பாதுகாத்தனவா? நீங்களே முடிவு செய்யுங்கள்.

முதல்வர் 16.11.98 இல் அரசின் சார்பில் 'தமிழ்வழிக் கல்வி' தொடர்பாக அறிவிப்பு விட்ட பிறகு, (20.12.98) தினமணி கதிரில் ஒரு கேள்வி பதில்.

1. 8-ம் வகுப்பு வரை தமிழில் படித்துவிட்டு அதன்பிறகு ஆங்கிலத்தில் படிக்கச் சிரமமாய் இருக்குமே என்றும், ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் தாய்மொழியிலேயே உயர் கல்வியினையும் பயிற்சியளிப்பதால் மொழிப் பிரச்சினை அங்கு இருப்பதில்லை என்றும், ஆனால் இங்கு அந்த நிலை இல்லையே என்றும் மாணவர்கள் ஆதங்கப்படுகிறார்களே? *-உ. ரவிச்சந்திரன், கண்ணுகுடி.*

எட்டாம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி வரவே எட்டாண்டுகள் தேவை. அதற்குள் மேற்கொண்டும் தமிழிலேயே படிக்கச் செய்யும் சூழல் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் அப்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் தாய்மொழி வழிக் கல்வியைக் கொண்டுவரத் தவணை முறை உகந்ததல்ல. அரசு நினைத்தால் ஒரே நேரத்தில் எல்லா வகுப்புகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்பிக்க ஏற்பாடு செய்துவிட முடியும். ஆங்கிலம் கட்டாய மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படலாம். பணி, தொழில் காரணங்களினால், தமிழ்நாட்டில் வாழ நேரிடும் தமிழறியாத பிற மொழியினரின் குழந்தைகள் மட்டுமே ஆங்கிலவழிக் கல்விக்கு உரியவர்கள் என்று விதிக்கலாம். ஆனால், இது எதையும் அரசு செய்யும் என்று தோன்றவில்லை.

நல்ல கருத்து. நான் படித்தேன். இதை எழுதும்போதும் அந்த இதழைப் பாதுகாத்து வைத்திருக்கிறேன். ஆனால், இதைக் கல்வி அமைச்சர் படித்திருப்பாரா?

அருமை நண்பர்கள் - கவிஞர்கள் பலர் பேராசிரியரைப் புகழ்ந்து கவிதைகள் எழுதியுள்ளனர். அதில் எந்தத் தவறும் இல்லை. நானே பேராசிரியரை வாழ்த்திக் கவிதை எழுதியிருக்கிறேன். 'கவிதைக் கனிகள்' நூலில் இடம்பெற்றுள்ளது. ஆனால் ஒரு சிறு நெருடல்.

அருணா பொன்னுசாமி எழுதுகிறார்.

“தமிழுக்குப் பயிற்றுமொழி உரிமை தந்து
தமிழனுக்குத் தன்மான உணர்வை மூட்டி”ப் பேராசிரியர் வாழ்வதாகக் கூறுகிறார்.

கருவூர்க் கன்னல் எழுதுகிறார்

“பணிசெய்து பழுத்தபழம்! நேர்மை இல்லம்!
பைந்தமிழர் கைகள் தொழும் ஈக வாழ்க்கை!
அணித்தமிழின் அவைத்தொகுப்பு! மக்கள் கண்ணீர்!
அழிக்கின்ற படைவீடு! ஆண்மை மேரு!
துணிவுடமை தொகுத்த துன்பம் கண்டால்
துடைக்களழும் தூயநெஞ்சம்! உலகம் வாழ்த்தும்
கனிவுடமை வளர்க்கின்ற அருளின் தேக்கம்
கவிஞர்புகழ் அன்பழகர் வாழ்க! வாழ்க!
வரலாறு முத்தமிடும் பணிகள் செய்யும்
வழக்கத்தைத் கொண்டவரே நிலைத்து நிற்பர்!
இரவுபகல் இல்லாது தமிழர் வாழ
இவ்வுலகில் பாடுபட்டீர்! தமிழுக் காகக்
கரவின்றித் தொண்டாற்றிப் புகழும் பெற்றீர்!”

என்றும்

“வெறிகொண்ட தமிழ்ப்பகைகள் பறந்து போக
வினைசெய்யும் அன்பழகே!” என்றும் பாடுகிறார்.

கவிதைகள் நன்றாகவே உள்ளன.

“கவிதைக்குப் பொய் அழகு! என்கிறார்களே அது, இதுதானோ!
நான் பார்த்தவரையில் அப்படித்தான்!

உயர் கல்வித் துறையில் தமிழ் வழிக் கல்வி

ஆட்சி அமைந்து நான்கு ஆண்டுகள் ஆன பின்பு - இந்த முயற்சி மேற் கொள்ளப்பட்டது. அதிலும் நீதியரசர் மோகன் தலைமையில் அமைந்த குழு தந்த பரிந்துரைகளில் ஒன்றாக இது இருந்ததால் மேற்கொண்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான 10.3.2000 அன்று ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது (எண் 78)

இதில் உள்ள குறிப்பிடத்தக்க செய்திகளைக் காணலாம்.

இந்தியில் இதுவரை 8.5 இலட்சம் கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டிருக்கிறன. 35 கலைச் சொல் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகள் 19 ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கப்பட்டன. தஞ்சைப் பல்கலைக் கழகம், 2 இலட்சம் கலைச் சொற்களைத் தொகுத்துள்ளது. அதில் மூன்று நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இந்த அரசாணையின் படி,

(1) பொறியியல் - தொழில் நுட்பம். 2) வேளாண்மை. 3) கால்நடை மருத்துவம் 4) மனைஇயல். 5) சமுதாய இயல். 6) சட்டம் 7) மருத்துவம் 8) கணிதம் 9) இயற்பியல் 10) உயிரியல் 11) இலக்கியம் 12) வேதியியல் 13) கணிப்பொறி ஆகிய துறைகளுக்கான கலைச் சொற்கள் தொகுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டனவா? செயற்படுகின்றனவா? 10.3.2002 இல் (இரண்டு ஆண்டுகட்குப்பின்) சில சொற்களாவது தொகுக்கப்பட்டுள்ளனவா? என்பதை யாரேனும் ஆய்ந்து உண்மை நிலவரத்தை உணர்த்த வேண்டும்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் காலத்தில் எடுக்கப்பட்ட காலங்கடந்த முயற்சியைப் பாராட்டினாலும் தொடர்ந்து இத்துறை கண்காணிக்கப்பட்டதா என்பதுதான் கேள்வு.

இதற்குப் பின் 9 மாதங்கள் கழித்து 11.12.2000 அன்று அறிவியல் தொழில் நுட்பக் கலைச் சொல் ஆக்கக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. நானும் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டேன். முன்னர்ப் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின் தொடச்சிதான் இது. பேராசிரியர் தலைமையில் 22 பேர் (துணை வேந்தர்கள், இயக்குநர்கள், அறிவியல் அறிஞர்கள்) கலந்து கொண்டனர்.

1950க்கு மேல் பணிகளைத் தொடங்கிய நடுவண் அரசு இந்தி மொழியில் கலைச் சொல் அகராதிகளை உருவாக்கிட CSTTC (communication for Scientific and Technical Terminology) எனும் அமைப்பை நிறுவியது. இவ்வமைப்பு 50 ஆண்டுகளில் 6 இலட்சம் சொற்களைத் தொகுத்துள்ளது.

1) 35 தொகுதிகள் - கலைச் சொல் அகராதி

2) 55 தொகுதிகள் - சொல், பொருள் விளக்க அகராதிகள்

3) பல தொகுதிகள் - அனைத்திந்திய மொழிக்குப் பொதுவான கடைச்சொற்கள்

4) 12000 பாடநூல்கள் - இவற்றில் இந்தியில் மட்டும் 9000 நூல்கள்.

இவ்வளவும் நடந்திருக்கின்றன. மைய அரசு உதவி ரூ 4 கோடி.

இதில் ரூ 1 கோடி பிற மாநில மொழிகளில் பாடநூல்கள், கலைச் சொற்கள் தயாரிக்கப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கடந்த இருபது ஆண்டுகளாக நாம் விண்ணப்பிக்கவுமில்லை, எந்தத் தொகையையும் உதவியாகப் பெறவும் இல்லை.

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் செய்ய வேண்டிய வேலை. கல்வித்துறையில் அடங்கும் இந்த நிறுவனம் உதவி பெறும் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

மேலும், வருகை தந்த பொதுமக்கள் அனைவரும் மிக்க ஆர்வத்துடன் கருத்துகளைத் தெரிவித்தனர்.

மேற்கொண்டு என்ன நடைபெற்றது? எங்கெங்கு முன்னேற்றம்? எங்கெங்கு தேக்கம்? - இவை ஆராயப்படவேண்டும்.

கல்வித்துறைதான் இம்முயற்சியில் நானும் பங்குபெற்றேன் எனினும் இன்றும் 3 ஆண்டுகட்கு முன்பே இந்த முயற்சியைத் தொடங்கியிருந்தால் இந்நேரம் பெரும் முன்னேற்றத்தைக் கண்டிருக்க முடியும் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

'தினமலர்' (2.4.2000) உயர்கல்வியில் முதல்வர் தலையிட விரும்பி ஒரு வேண்டுகோளை வைத்துள்ளது. எனக்குத் தெரிய முதல்வர் தலையிட்டதாகவும் தெரியவில்லை. உயர்கல்வியில் இவர்கள் எதிர்பார்த்த எதுவும் நடந்ததாகவும் தெரியவில்லை முதலில் 'டாக்மா' தலைவர் ஆர். இலட்சுமிபதியும், பேராசிரியர் பொன் முருகேசனும் கூட்டாக விடுத்த அறிக்கையில் சில செய்திகள்.

1. "தமிழக முதல்வர் கனவு நனவாக வேண்டும் என்றால் தமிழக உயர்கல்வித் துறையில் உள்ள தடைகளும், சிகப்பு நாடா முறைகளும் களையப்படவேண்டும் என டாக்மா வேண்டுகோள் விடுத்துள்ளது.

2. தமிழக அரசில் குறுகிய நோக்கம் கொண்ட ஒரு சிலரின் போக்கால் புதிய திட்டங்கள் உயர்

கல்வித்துறையில் அறிமுகப்படுத்த தடங்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் தமிழக உயர்கல்வித்துறையில் பெரும் முடக்கம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

3. கொள்கை முடிவில் தடுமாற்றம்: தமிழகத்தில் புதிய கல்லூரி துவங்குவதற்கோ அல்லது எம்.சி.ஏ., எம்.பி.ஏ., போன்ற தொழில்நுட்ப வகுப்புகள் துவங்குவதற்கோ தனியார் நிர்வாகங்கள் ஒவ்வொரு கல்வியாண்டில் குறிப்பிட்ட காலத்தில் விண்ணப்பிக்கின்றன. ஆனால் தமிழக அரசின் உயர் கல்வித் துறையோ அதில் சிதம்பர ரகசியம் இருப்பதுபோல கொள்கை முடிவு என்று சொல்லி 7 மாத காலத்திற்குள் முடிவு எடுக்காமல் குழம்பிப்போய் உள்ளது. இந்த 7 மாத காலத்திற்குள் தனியார் நிர்வாகங்கள் கல்லூரி துவங்க சொந்தமாக பல கோடி ரூபாய் செலவு செய்து நிலங்களை வாங்கியும்கூட, கட்டிடங்கள் கட்டியும் காத்திருக்கின்றன. கடைசியாக உயர்கல்வித் துறை கொள்கை முடிவு என்ற பெயரில் "அனுமதி இல்லை" என அறிவித்து விடுகிறது.

4. உயர் கல்வித்துறையில் பல்வேறு முடிவுகளை கிடப்பில் போடுவதும் கால தாமதமாக முடிவை அறிவிப்பதும் தமிழக அரசுக்கு பெரும் அவப்பெயரை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது.

5. கல்லூரிகளுக்கு ஏற்படும் பிரச்னைகளை உயர்கல்வித் துறையில் கவனத்திற்கு கொண்டு சென்றால் அங்குள்ளவர்கள் நிலைமையை புரிந்து கொள்வதுபோல பேசுவது இல்லை. ஏதாவது சாக்குபோக்கு சொல்லி தட்டிக் கழிக்கின்றனர். அதே பிரச்னையை இடைத்தரகர்கள் மூலம் கொண்டு சென்றால் ஒரே நாளில் பிரச்னை தீர்க்கப்படுகிறது. தரமான கல்லூரிகளும் கல்வித் தர மேம்பட்டிற்காக "பெட்டி கலாச்சாரத்தை" அமல்படுத்த வேண்டும் என்றால் தரம் எப்படி மேம்படும். தமிழக உயர்கல்வித் துறையில் 'காசேதான் கடவுளடா' என்ற கொள்(ளை)கையை மாற்ற தமிழக முதல்வர் ஆவன செய்ய வேண்டும்.

6. காலவிரயத்தை ஏற்படுத்தி பொருட்செலவையும் ஏற்படுத்தும் தற்போதைய தமிழக அரசின் உயர்கல்வித்துறையில் உள்ள சிகப்பு நாடா முறையை மாற்றி விரைவில் எந்த முடிவையும் உடனுக்குடன் அறிவிக்கும் திறந்தவெளி முறையை அமல்படுத்த முதல்வர் ஆவன செய்யவேண்டும்.

7. 'கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குவது மிகவும் தேவையான ஒன்று என்றும், கடந்த 1978ம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் அமல்படுத்தப்பட்ட தன்னாட்சி கல்விமுறை 87-88 கல்வியாண்டிற்குப் பின் அரசு கல்லூரிகளில் எந்தவித முன்னேற்றமும் இல்லை' என தெரிவித்துள்ளார். தமிழகத்தைப் பொறுத்தவரை கடந்த 78-79ம் ஆண்டில் 8 கல்லூரிகளுக்கும் 81-82ம் ஆண்டில் 3 கல்லூரிகளுக்கும் 85-86ல் 20 கல்லூரிகளுக்கும், 88-89ல் நான்கு கல்லூரிகளுக்கும், 90-91ல் ஒரு கல்லூரிக்கும் (தி.மு.க. ஆட்சி) தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

8. எந்த ஒரு மாநிலமும் முன்னேற வேண்டும் என்றால் அங்கு கல்வித் துறையில் மாற்றங்களும், சீர்திருத்தங்களும் கொண்டு வரப்படவேண்டும். தாராள மயமாக்கல் பல்வேறு துறைகளில் அமல்படுத்திக் கொண்டு வரும் வேளையில் தமிழக உயர்கல்வித் துறையை 'கட்டுப்பெட்டி'களின் கரங்களில் இருந்து மீட்டிட, புதுமையை புகுத்த தமிழக முதல்வர் ஆவன செய்யவேண்டும்.

சென்னை-34 இல் உள்ள 'இந்திய ஜனநாயக வாலிபர்கள் சங்கம்' அச்சிட்டு ஒரு சுற்றறிக்கையை வழங்கியுள்ளது.

அறிக்கை வெளியிட்டது : தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான்

"திரு. தெய்வ அரங்கமணி பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை - 600 006

இப்படி ஒரு பள்ளிக்கல்வி இயக்குநர் இதுவரை கல்வித்துறை கண்டது கிடையாது. லஞ்சம்! லஞ்சம்!! லஞ்சம்!!!

1. இவர் பள்ளிக்கல்வி இயக்குநராக வந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு மெட்ரிகுலேசன் அங்கீகாரம் வழங்கியுள்ளார்! 756 மேல்நிலைப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்! ஒவ்வொரு பள்ளிக்கு ரூ.60,000/- என வசூல் வேட்டையாடியுள்ளார். அவர் 2½ ஆண்டு காலத்தில் 110கோடி ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளார்! லஞ்சம் பெற்றுள்ளார்! கடலூர், சிதம்பரம், சென்னை, அண்ணாநகர் போன்ற இடங்களில் நிலமும், வீடும் பினாமிகள் பெயரில் வாங்கியுள்ளார்.

2. B.T. குமார் இவருடைய இஷ்ட தேவதை!

B.T. குமார் இவருக்கு கோடிக்கணக்கில் கொள்ளையடித்து பள்ளிக்கல்வி இயக்குநரிடம் வியாபாரம் செய்கின்றார். B.T. குமார் இவரை சந்திக்க (தெய்வமணி) வந்தால் சிவப்புக் கம்பளம் விரித்து

வரவேற்புக்கொடுக்கின்றார்! இரண்டுமணி நேரம் பேசுவான்! இவன்தான் இவருக்கு லஞ்சம் கொடுப்பதில் முக்கியமானவன்! இவருடைய வாக்கு தெய்வமணிக்கு வேதவாக்கு!

ஏற்கெனவே குமார் கொடுத்து 60 பள்ளிக்கூடங்கள் கொட்டகை 150 சதுர அடி கூடகிடையாது. இதற்கு மெட்ரிகுலேஷன் அங்கீகாரம் ஐயோ! ஐயோ பாவம்!

ஐந்து ஆண்டு காலத்தில் 1600 மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கிய பேரா. அன்பழகனையும், அவரிடம் பணியாற்றிய அரங்க தெய்வமணியையும், மெட்ரிகுலேசன் பள்ளிகளின் சரித்திர நாயகன் பி.டி. குமாரையும் இணைத்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் அன்பழகன் திருச்சியில் பேசிய பேச்சினை அப்படியே தருகிறேன். (தினமலர் 18.7.2000)

“பள்ளிக் கல்வித்துறை திருச்சி மாவட்டம் சார்பில் பள்ளி சீரமைப்பு மாநாடு மற்றும் அறிவியல் கண்காட்சி ஆகியவை திருச்சி ஜான் வெஸ்ட்ரி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. கண்காட்சி மற்றும் மாநாட்டை துவக்கி வைத்து கல்வி அமைச்சர் அன்பழகன் பேசியதாவது:

தாய்மொழி மறுக்கப்பட்டு தமிழாசிரியர்களுக்கு மதிப்பு குறைந்ததற்கு காரணம் என்னவென்று தமிழாசிரியர்களே எண்ணிப்பார்க்கவேண்டும். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர்கள் தமிழ் பற்றோட பாடம் நடத்தினர். பாடத்தின் உயர்ந்த கருத்துக்களை மாணவர்களின் மனதில் பதியும் விதம் புரியும்படியாக நடத்தினர்.

ஆனால் தற்போது கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு அவ்வளவாக ஆர்வம் இல்லை. அத்தகையோர் தமிழுக்காக தங்களை ஆர்வம் உடையவர்களாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

மதப்பற்றை விட தாய் மொழிப்பற்று மாணவர்களுக்கு அதிகம் இருக்க ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்.

நமது மொழி தாழ்ந்தது என்ற எண்ணத்தை கைவிடச் செய்ய வேண்டும். தொடக்கப்பள்ளி மற்றும் நர்சரி பள்ளிகளில் ஆங்கிலத்தில் பாடம் நடத்துவது “நீர் இல்லா பயிர்” போன்ற நிலையாகும். தாய்மொழியில் கிடைக்கும் ஊக்கம் மற்ற மொழிகளில் கிடைக்காது. வளரும் குழந்தைகளுக்கு தாய்மொழி பற்றை ஊட்டவேண்டும். அந்தந்த மொழி குழந்தைகளுக்கு அந்தந்த மொழியே தாய்ப்பாலாகும். தாய்மொழியில் படிப்பதால் மற்ற

மொழிகளை படிக்க முடியாது என்ற நிலை ஏற்படாமல் ஆசிரியர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.''

தமிழாசிரியர்களிடம் தமிழ்ப்பற்று இல்லையே என்று கவலைப் படுகிறார் பேராசிரியர். ஆனால் கல்வி அமைச்சராகிய பேராசிரியர் தமிழ்ப்பற்றைப் போற்றிப் பேசினாரே தவிர, உண்மையான பற்றுக் கொண்டு செயல்பட்டாரா என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்கட்டும்.

பொறியியல் கல்லூரியில் 90 பேருக்கு மட்டும் தமிழில் பயிற்றுவிக்கலாம் என்பது என் கருத்து. முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயர்கல்வித்துறையும் அதற்கு ஏற்றாற் போல் செயல்பட்டது. நுழைவுத் தேர்வினை 630 பேர் எழுதினர். 380பேர் தமிழ் வழியில் 7 கல்லூரிகளில் பொறியியல் பயிலத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அ.இ.தொ.நு.க. (AICTE) எனும் அமைப்புக்குப் போகாமலேயே இந்த வகுப்புகளைத் தொடங்கியிருக்க முடியும். (Within the Sanctioned Strength) இசைவளிக்கப்பட்ட மாணவர் இடங்களில் ஆங்கிலப் பயிற்று மொழியில் 3 பிரிவுகள் என்றால் அதில் ஒரு பிரிவில் 30 மாணவர்கள் தமிழில் படிக்கட்டும் என்று முடிவு செய்திருந்தால் AICTE இசைவு பெற வேண்டிய தேவையே இல்லை. ஆனால் ஒரு கல்லூரியில் கட்டுமானப் பொறியியலில் 90 மாணவர்கள் படித்தால் அதற்குமேல் அதே பிரிவில் 30 பேர் தமிழில் படிக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. (Sanctioned Strength 90: Over and above the Sanctioned Strength 30: ) இசைவளிக்கப்பட்ட 90 இடங்களுக்கு மேல் ஒரு மாணவரைக் கூடுதலாகச் சேர்ப்பதானாலும் AICTE இடம் இசைவு பெற வேண்டும்.

எனவே 380 மாணவர்களையும் இசைவளிக்கப்பட்ட இடங்களுக்கு மேலாகச் சேர்த்துவிட்டு, மேலே இசைவு கேட்டார்கள் அவர்கள் கொடுக்கவில்லை.

இவர்கள் செய்யவேண்டியதை ஒழுங்காக செய்திருந்தால் எந்தக் கொம்பனும் தடுத்திருக்க முடியாது. அதற்குப் பிறகு தேர்வு நடத்துவது, மதிப்பெண் வழங்குவது, பட்டம் வழங்குவது எல்லாம் அண்ணா பல்கலைக் கழகந்தான்.

இதில் யாரும் தலையிடமுடியாது. தேவையில்லாமல் தில்லியின் கையில் குடுமியைக் கொடுத்து விட்டு, தமிழ்வழியில் பொறியியல் கல்வி வாராமலே போவதற்கு யார் காரணம்?

தொடர்புடைய கல்வி அமைச்சர்தானே காரணம். மழலையர் பள்ளிகளில் தமிழ்பற்றி பேசுகிறார் பேராசிரியர். ஆனால் 1 முதல் 5 வகுப்பு வரை அனைவரும் தமிழ் வழியில் படிக்கவேண்டும் என்று முடிவு செய்யும் முன்னால் பள்ளிக் கல்வித் துறை அதனை ஆதரித்து முழங்கியதா? இல்லையே? பள்ளிக் கல்விச் செயலர் கௌரிசங்கர் தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வரவேண்டாம் என்பதற்கு என்னென்ன உண்டோ அதைத்தானே சொன்னார்? கல்வி அமைச்சராகிய பேராசிரியரும் அதைத்தானே வழிமொழிந்தார். உண்மையில், இதனைத் தடுத்து நிறுத்தி, தமிழ் வழிக் கல்வி கொண்டுவர வேண்டியது நமது கடமை என்று ஓங்கி அடித்து முடிவும் எடுத்தவர் முதல்வர் மு. கருணாநிதி தான். இதை நான் மறைப்பதோ, மறுப்பதோ முறையன்று.

இன்று மெட்ரிகுலேசன் பள்ளிகளின் ஆட்டம் அதிகமாகவே உள்ளது. கல்வி அமைச்சர் பொறுப்பேற்ற காலத்திலேயே ‘இனிப்புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதியில்லை‘ என்று அறிவித்திருந்தால் அந்த நிர்வாகிகள் இவ்வளவு ஆட்டம் போடுவார்களா?

முதலில் 36 பள்ளிகள் இருந்தன. 1996 ஏப்ரல் வரை 1427 மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆகிவிட்டன. எனினும் ‘தமிழ்’ வழியில் பயிலாமல் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் கிடையாது என்று கல்வியமைச்சர் உறுதியாக இருந்திருந்தால் கதையே வேறாகியிருக்கும்.

ஒரு பக்கம் தமிழ் வழிக் கல்வி பற்றி அரைகுறை மனதோடு பேச்சு. மற்றொரு புறம் ஏராளமான மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு அனுமதி. இது இரட்டை நிலை அல்லவா!

“பேசுவது மானம்; இடை பேணுவது காமம்
கூசுவது மானிடரை; நன்றுநம் கொற்றம்”

என்பது போலல்லவா இருக்கிறது?

கல்வி அமைச்சர் பேராசிரியர் காலத்தில் மட்டும் மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களை வளர்த்து விட்டுவிட்டு, ‘குத்துதே குடையுதே’ என்று நாடகமாடுவதால் என்ன பயன்?

மேடைப்பேச்சுக்கும் உள்ளே நடப்பதற்கும் இடையில் எவ்வளவு முரண்பாடுகள்?

1989இல் மொரிசீயசில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அதற்குத் ‘தாய்த்தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர் சென்றிருக்க

வேண்டும். 1971ல் பாரீசு மாநாட்டுக்குச் சென்றவர் 1987இல் எதிர்க்கட்சிக்காராக இருந்தபோது மலேசியத் தமிழ் மாநாட்டுக்குச் சென்றவர், மொரீசியசு மாநாட்டுக்கு ஏன் செல்லவில்லை என்பது கேள்வி.

அல்லது அவர் செல்லாவிட்டாலும் தமிழறிஞராகிய கல்வி அமைச்சர் பேராசிரிர் அன்பழகன் அவர்களையாவது அனுப்பிவைத்திருக்கவேண்டும். அல்லது தமிழ்ப் பற்றுடைய, சட்டப்பேரவைத் தலைவராக இருந்த தமிழ்க்குடிமகனையாவது அனுப்பி வைத்திருக்கவேண்டும்.

இந்த மூன்றும் நடக்கவில்லை. தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை செயலாளர் அவ்வை நடராசன் தலைமையில் ஏழெட்டுத் தமிழறிஞர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்கள்.

மொரிசீயசில் தமிழ் சரியாகப் பேசத் தெரியாமல், கிரியோல் மொழியையே அதிகம் பேசிக்கொண்டு ஆனால் தமிழர் என்ற இன உணர்வை மட்டும் விடாமல் ஓர் உலகத் தமிழ் மாநாட்டை நடத்த முன்வந்திருக்கிறார்கள் என்றால் அது பாராட்டுக்குரியதல்லவா? முறைப்படி முதல்வர் அல்லது கல்வி அமைச்சர் தலைமையில் அந்தக்குழு சென்றிருக்கவேண்டும்.

மாநாட்டுக்காகக்கூடத் தமிழக அரசு ஓரளவு நிதி உதவிகூடச் செய்திருக்கலாம்.

ஆனால் ஒரு பத்துப்பேருக்கு வழிச்செலவுத் தொகையை மட்டும் கொடுத்து அனுப்பி, கடனைக் கழித்தது கலைஞர் அரசு (1989) தமிழ் வளர்ச்சித் துறையையும் கையில் வைந்திருந்த கல்வி அமைச்சராகிய பேராசிரியர் பொறுப்பு இது.

வெளிநாட்டு தமிழர்கள் கலைஞர், பேராசிரியர், தமிழ்க்குடிமகன் ஆகியோரை நம்பி மொழிப் பாதுகாப்புக்காகப் பல உதவிகளைக் கோருவது அதிகமாகி உள்ளது. இதோ மியான்மர் எனப்படும் பர்மாவிலிருந்து தமிழர் அறநெறிக் கழகம் கல்வி அமைச்சர்க்கு ஒரு மடல் வரைகின்றது. அதில் அவர்கள் தங்கள் வேண்டுகோளைத் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.

“நம் தாய்மொழியான தமிழை நம் சந்ததியினர் மறக்காமல் இருக்க வேண்டுமானால் கோயில்களிலும் அரசியல் சார்பற்ற அமைப்புகளிலும் தமிழ்ப்பள்ளிகள் ஆரம்பித்து குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்து தமிழ்ப்பணி ஆற்றவேண்டும். ஏனென்றால் இங்கு பர்மிய மொழியைத் தவிர வேறு மொழிகளுக்கு அரசு அங்கீகாரம் கிடையாது. இந்த இக்கட்டான நிலையில் வாழும் தமிழர்களுக்கு நம்பிக்கை ஒளியாகத்திகழும் தாங்கள் பர்மியநாட்டில்

தமிழ்மொழிக்கு ஆக்கந்தரும் வகையில் பள்ளிகளும் நூலகங்களும் நடத்தி தமிழை வளர்க்க முழுமையாக உதவிடக்கோருகிறோம்.''

கல்வி அமைச்சர் என்ன செய்திருக்கவேண்டும்? நூலகம் அவரது துறை. நூல்வாங்குவதற்காக / தேர்ந்தெடுப்பதற்காக / ஒவ்வொன்றிலும் 15படிகளை அவர்கள் பெறுகிறார்கள். குறைந்தது 300 நூலாவது வரும். அதில் ஒவ்வான்றிலும் ஒரு படி என்று 300 நூல்களை அனுப்புமாறு ஆணை பிறப்பித்துவிட்டு எனக்கும் ஒரு குறிப்பு அனுப்பினால் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கென்று நாங்கள் 5 இலட்சத்துக்கு விலைகொடுத்து வாங்கியவற்றில் 133 நூல்களையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து சில நூல்களையும் சேர்த்து அனுப்பிவைப்போம். பேராசிரியர் நான் 'கருத' வேண்டும் என்று மடலை அனுப்புவதோடு சரி.

பள்ளிகள் ஒரு சிலவற்றையாவது தொடங்கிக் கல்வி அமைச்சரல்லவா முயற்சி எடுக்கவேண்டும். அதுவும் அவர் துறைதானே! அதையும் நான் எப்படிப் பார்ப்பது?

பள்ளிக் கல்வித்துறைச் செயலரையும், இயக்குநரையும் அழைத்து அவர் பேசினால் ஒரளவு வழிவகை காண முடியும்? ஆனால் ஒரே வரியில் எனக்கு அனுப்பி விட்டார். 15 இலட்சம் தமிழர்கள் தமிழில் கல்வி பெறவும், தமிழ் நூல்களைப் படிக்கவும் துடிக்கிறார்கள். செய்யவேண்டிய கல்வித்துறை, பொறுப்பை அடுத்த துறைக்குத் தள்ளிவிட்டு அயர்ந்து தூங்கத் தொடங்கிவிட்டது.

முனைவர் பா. இறையரசன் தன் நூலில் என்ன எழுதியிருக்கிறார் என்று பாருங்கள்.

''தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் நூறு தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநோன்பு 25.4.99-இல் தொடங்கினர். வரும் கல்வியாண்டில் (1999-2000) தமிழ் வழிக்கல்வி வரும் என்று தமிழ் அமைச்சர் உறுதிமொழி கூறி உண்ணாநோன்பை 26.4.99இல் முடித்துவைத்தார். ஆனால், 4.5.99 அன்று கல்வி அமைச்சர் அன்பழகன், ''மெட்ரிகுலேசன் பாடப் பத்தகங்களை அரசே அச்சிடத் தயார்''என்று அறிவித்தார். ஆங்கில வழிப் பாட புத்தகங்களை அச்சிட்டுத் தருவதாகத் தாமே முன்வந்து அவர் கூறியதன் பொருள் என்ன? வரும் கல்வி ஆண்டிலும் ஆங்கிலவழி இருக்கும்; நீக்கப்படா என்பது தானே!''

# இயல் முப்பத்தைந்து

# இன்றைய முதல்வரின் அன்றைய கருத்துகள்

தமிழ் வழிக் கல்விக்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட சில நாட்களில் இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை இதுதான்:

"தனியார் நர்சரி, மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் தமிழக அரசின் உத்தரவால் அனைத்துப் பள்ளிகளும் மத்திய அரசுக் கல்விக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று, இந்தி மொழி தமிழகத்தில் நுழைவதற்கு வழி வகுக்கச் செய்யும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் இந்தி நுழைவதைத் தடுக்கும் வகையில், ஏற்கெனவே உள்ளபடி பள்ளிகளில் ஆங்கிலமும் தமிழும் நீடிப்பதே அண்ணாவின் இருமொழிக் கொள்கையைப் பாதுகாப்பதாக அமையும்.

மத்திய அரசில் தமிழ் உள்ளிட்ட 19 மொழிகளையும் ஆட்சி மொழியாக்கும் சூழ்நிலை ஏற்படும் போதுதான் தமிழ்நாட்டில் தமிழ் வழிக் கல்வி ஏற்புடையதாக இருக்கும். எனவேதான் மத்திய அரசில் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என அதிமுக வற்புறுத்தி வருகிறது.

தமிழ் வழிக்கல்வி என்று கட்டாயப்படுத்துவது இந்தி மொழியைப் புறவாசல் வழியாகத் தமிழகத்துக்குள் நுழைப்பதற்கு ஏதுவாக அமைந்துவிடும் என்பதை ஆட்சியாளர்கள் மறக்கக்கூடாது.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியான மின்னணுவியல், கணிப்பொறியியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆங்கிலத்தின் ஆதிக்கமே நிறைந்து உள்ளது. எனவே உலகில் தாய்மொழியில் கல்வி கற்பித்துவந்த பல நாடுகள், தங்கள் கல்வி முறையை ஆங்கிலத்துக்கு மாற்றிக்கொண்டிருக்கின்றன. ஆனால் ஆங்கிலத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டு தமிழில் மட்டுமே ஆரம்பக் கல்வி என்ற நடைமுறையைக் கட்டாயப்படுத்த நினைப்பது நமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வோடு விளையாடும் விஷயமாகும்.

பொதுவாக பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு 1 முதல் 5-ம் வகுப்பு வரை கற்பிக்கிற விஷயங்களை எளிதில் கிரகித்துக் கொள்கிற பகுமை அவர்களிடம் நிரம்ப உண்டு. அத்தகைய பிஞ்சு உள்ளங்களில் வளர்ந்து வரும் விஞ்ஞான உலகிற்கு ஏற்ப கல்வியைத் தருவதுதான் அவர்களின் வளமிக்க எதிர்காலத்துக்கு நாம் அடித்தளம் அமைப்பதாக அமையும்.

வரும் கல்வியாண்டில் ஆங்கில வழிக் கல்வி போதிக்கும் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை அவைகளுக்கு இணையாகத் தமிழ் பாட மொழியாகக் கொண்ட புதிய வகுப்புகளைத் துவக்குவதற்குத் தயாராக இருப்பதாகத் தனியார் பள்ளிகள் தெரிவித்துள்ளன. அதேபோன்று ஏற்கெனவே இருக்கும் ஆங்கில வழிக் கல்வி வகுப்புகளில் தமிழை ஒரு கட்டாயப் பாடமாக வைப்பதற்கும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளன.

தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தனியார் பள்ளிகள் தக்க இடங்களை உருவாக்கித் தருகிற நல்ல வா.ய்ப்புக் கிடைத்திருக்கும் போது அதைப் பயன்படுத்தி தமிழை வளர்ப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டுமே தவிர, அரசின் கட்டாயத்தால் அக்கல்வி நிறுவனங்கள் மத்திய அரசுக் கல்விக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று தமிழகத்தில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கித் திணிக்க வழி வகுக்கக் கூடாது என்றார் ஜெயலலிதா.'' (தினமணி - 22-2-2000)

அவரது அறிக்கையை ஒட்டி அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களில் பலர் ஆதரவு அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

'தமிழகத்திற்குள் இந்தி நுழைவதற்குக் கருணாநிதி போட்டு இருக்கிற தமிழ் வழிக் கல்வி உத்தரவு இடம் கொடுத்து விடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் அம்மா அறிக்கை விட்டார்' என்றும்,

'தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகள் மத்திய அரசு கல்விக் குழும அங்கீகாரத்தைப் பெற்று இந்தி, ஆங்கிலம், தமிழ் என்ற மும்மொழிப் பாடத்தைக் கொண்டு வரக்கூடாது என்பதே புரட்சித்தலைவியின் எண்ணம்'' என்றும் இன்றைய பேரவைத்தலைவர் கா. காளிமுத்து தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

'Jaya not against Tamil' என்ற தலைப்பில் இந்தியன் எக்சுபிரசு (25-2-2000) இதழ் புலவர் புலமைப்பித்தனின் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தன் அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“தமிழ் வழிக்கல்வி வளர்ச்சிக்குப் புரட்சித்தலைவி என்றைக்கும் ஆதரவானவர்தான் என்பதைத் தமிழ் அறிந்த நல்லோர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறுகிறார் அவர். (மக்கள் குரல் 26.2.2000) அன்றைய அ.தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன் சில செய்திகளைக் கூறியுள்ளார் :

“தமிழ்வழிக் கல்வியை ஜெயலலிதா எப்போதும் எதிர்த்ததும் இல்லை; எதிர்க்கவும் மாட்டார். அதனை புரிந்து கொள்ளாத இவர், கருணாநிதியின் சுயநலத்திற்கு பலியாவதா? என்று அண்ணா தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன் கேட்டார்.

வீழ்ந்து போன செல்வாக்கை தூக்கி நிறுத்த சிலரை கருணாநிதி தூண்டி விட்டு தமிழக மக்களின் நலனுக்கு எதிராக போராட்டம் நடத்தச் செய்வது கடும் கண்டனத்திற்குரியது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கருப்பசாமி பாண்டியன் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழை கட்டாயமாகத் திணிப்பதால் மட்டும் அது வளர்ந்து விடும் என்று நினைக்கக் கூடாது என்பதாலும், மக்கள் விரும்புகிற மொழியில் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்றும், மத்தியில் தமிழ் ஆட்சி மொழியாக வரும் நிலையில்தான் தமிழ் நாட்டில் தமிழ் பெரும் வளர்ச்சி அடையும் என்றும் தான் எங்கள் பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறினாரே தவிர, தமிழ் வழிக்கல்வியை எப்போதும் அவர் எதிர்த்தது இல்லை, எதிர்க்கவும் மாட்டார் என்பதை புரிந்து கொள்ளாத சிலர், கருணாநிதியின் சுயநலத்திற்கு பலியாவது வருத்தத்திற்கு உரியதாகும்.

கட்டாய இந்தியைத் திணிக்கும் நிலை தமிழகத்தில் ஏற்பட்டபோது மிகப் பெரிய போராட்டங்களும், உயிர்த் தியாகங்களும் செய்து இந்தியை விரட்டி அடித்த தமிழக மக்கள் இப்போதும் எந்த உருவத்திலும் இந்தி நுழைந்து விடக்கூடாது என்பதில் மன உறுதியோடு இருக்கிறார்கள்.

திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சான இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்பதை அண்ணா தி.மு.கழகம் என்றைக்கும் கைவிட்டதில்லை. எதிர்காலத்திலும் இந்தி மொழி எப்படி புகுந்தாலும் அதனைத் தடுப்பதற்கு முன்

நிற்பவர்கள் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும், கழகமும் தான். தமிழ்நாட்டில் மதவாத சக்தியான ஆர்.எஸ்.எஸ்.-க்கு கால்கோள் விழா நடத்தி விட்ட கருணாநிதி, அதனை மறைப்பதற்கு தமிழை ஒரு ஆயுதமாக வைத்து விளையாடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

கழக ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு நவோதயா பள்ளிகளைத் துவக்குவதற்கு எப்படியெல்லாம் ஆசை காட்டியும் கூட அதனை எதிர்த்த ஒரே அரசு கழக அரசுதான். எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் நவோதயா பள்ளிகளை தமிழ்நாட்டில் துவக்கினால், ஒரு பள்ளிக்கு 2 கோடி ரூபாய் மத்திய அரசின் உதவி வழங்கப்படும் என்றெல்லாம் தெரிவித்தார்கள். அன்றைக்கும் தமிழ் தான் முக்கியம்; தமிழக மக்களின் வாழ்வு தான் முக்கியம் என்று கொள்கை உறுதியோடு இருந்த காரணத்தால் நவோதயா பள்ளிகளை தமிழ்நாட்டில் நுழைய விடமாட்டோம் என்று ஆணித்தரமாக இருந்தோம்.

கல்லூரிகளில் இருந்த புகுமுக வகுப்புகளை பள்ளிக் கல்விக்குக் கொண்டுவந்து அந்த வகுப்புகளை தமிழில் நடத்திய அரசு கழக அரசு தான் என்பதை மக்கள் அறிவார்கள். அதேபோன்று தொழில் நுட்பக் கல்வியும், தமிழில் நடத்தப்பட வேண்டும் என்று முடிவெடுத்து நடைமுறைப் படுத்தியதும் கழக அரசுதான்.'' இவை அவர் கூறிய கருத்துகள்.

இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் முக்கியமான கவலை தமிழக அரசைச் சார்ந்து நடக்கும் பள்ளிகள் நடுவண் அரசின் ஒப்புதலுடன் கூடிய CBSE பள்ளிகட்குப் போய் விடக்கூடாது என்பதுதான்' என்று அனைவரும் தெளிவு படுத்தியுள்ளனர்.

புரட்சித்தலைவியின் அறிக்கையை எதிர்க்கும் வகையில் தி.மு.கழகமும் பிற கட்சிகளும் என்னென்ன செய்தன என்பதனை மற்றோர் இடத்தில் விரித்துரைத்துள்ளேன்.

அன்றே, அம்மாவின் கருத்துக்கு அரசின் சார்பில் விளக்கம் தரப்பட்டது. இன்றும் அந்த விளக்கத்தைச் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

'CBSE' எனும் மும்மொழிப் பாடப் பள்ளிகளை - நடுவணரசு சார்ந்த பள்ளிகளை யாரும் நினைத்தவுடன் தொடங்கிவிட முடியாது. தமிழகப் பள்ளிக் கல்வித்துறையின் ஒப்புதல் பெற்றுத்தான் தொடங்க முடியுமே தவிர அவர்களாக நடத்திவிட முடியாது. எனவே `பிடி` நமது பள்ளிக் கல்வித்துறையிலேயே உள்ளது என்று அன்றே ஒரு விளக்கம் சொன்னோம்.

அதனையே மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். எனவே அம்மாவின் கவலைக்கு இடமில்லை என்பதனைச் சுட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் 'தினமணி' (24.2.2000) எழுதிய ஆசிரியுரையைப் படியுங்கள்.

தமிழொடு ஆங்கிலம்

"தமிழகத்தின் ஆட்சி மொழியாக தமிழ் ஆகி, 45 ஆண்டுகள் ஆகின்றன. காமராஜரின் ஆட்சியில் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தைச் செயற்படுத்திய அப்போதைய கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம், 'தமிழால் முடியும்' என்ற தலைப்பில் சட்டப்பேரவையில் ஆற்றிய உரை மறக்கக்கூடியதல்ல. "நிர்வாகத்தில், கல்விக் கூடங்களில் - எல்லா நிலைகளிலும், எங்கும் தமிழே ஆட்சி புரிய முடியும்'' என்று அவர் முழங்கினார். ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்நிலைக் கல்வி வரையில், தமிழிலேயே போதிக்கவேண்டும். அதற்கு ஏற்ற தகுதி தமிழுக்கு உண்டு என்று சி.எஸ்.எழுப்பிய வாதம் இன்றும் பசுமையாக நிற்கிறது.

தமிழே பயிற்று மொழியாக வேண்டும் என்று தமிழறிஞர்கள் எழுப்பி வந்த கோரிக்கைக்கு மரியாதை காட்டி, திமுக அரசு அதற்கான நடவடிக்கையை அண்மையில் எடுத்தது. அதன்படி தனியார் நடத்தும் மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் தொடக்கக் கல்வியில் தமிழைப் பயிற்று மொழியாக்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணை அமலுக்கு வந்து இத்தனை நாள் ஆன பிறகு திடீரென ஜெயலலிதா விழித்தெழுந்த இக் கொள்கையைக் கண்டிக்கும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

ஆங்கிலத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தமிழ் வழியில் மட்டும் கல்வி என்ற நடைமுறையைக் கட்டாயப்படுத்துவதால் எதிர்காலத் தலைமுறையினரின் வாழ்வு பாதிப்புக்குள்ளாகிவிடுமாம்! ஏனெனில் தொழில்நுட்பம், அறிவியல் போன்ற உயர்கல்விக்கு ஆங்கிலமே ஏற்றதென்று ஜெயலலிதா சொல்லாமல் சொல்கிறார். அப்படியெனில் தமிழகக் கல்விக் கூடங்களில் முக்கியத் துறைகளில் முதலிடம், முக்கிய இடம், நிரந்தர இடம் ஆங்கிலத்துக்கே என்றால் தமிழ் புதுயுக மொழியாவது எப்போது? நிரந்தரமாக இரண்டாவது இடத்தோடு அடங்கி ஒடுங்கி இருந்துவிட வேண்டியதுதானா? இக் கேள்விக்கு ஜெயலலிதாவால் என்ன பதில் கூற முடியும்? அதுமட்டுமல்ல, ஆங்கிலத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டால், இந்தி மொழி தமிழகத்தில் நுழைவதற்கு வழிவகுத்ததாக ஆகிவிடுமாம்.

வளர்ச்சியடைந்த பல நாடுகளில் தொடக்கப் பள்ளி நிலையில் தாய்மொழிக் கல்வியே இருந்து வருகிறது. இதையே தமிழக அரசும் அமல்படுத்தும் வேளையில், ஆங்கிலத்தை ஒரு பாடமாகச் சொல்லித் தருவதற்குத் தடையேதும் விதிக்கவில்லை. ஏற்கெனவே தமிழ்வழிக் கல்வி நடைமுறையிலுள்ள பள்ளிகளில் தரமான கல்வியை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தினாலாவது, ஏதாவது அர்த்தம் உண்டு.

அண்ணாவின் ஆட்சியில் தமிழ் - ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கை அமலுக்கு வந்தது. அது இப்பொழுது 'தமிழொடு ஆங்கிலம்' என்று புதிய வடிவைப் பெற்றிருக்கிறது. விஞ்ஞான ரீதியாகக் கல்விக் கொள்கை வடிக்கப்பட்டு, காலக்கெடு நிர்ணயித்து எல்லா நிலைகளிலும் தமிழே பயிற்சி மொழியாகப் பரிணமிக்க வகைசெய்ய வேண்டும். அதேசமயத்தில் கல்விக்கூடங்களில் ஆங்கிலத்திலும் உயர்ந்த தரத்தை நிலைநாட்ட வேண்டும். அப்படியின்றி, தமிழைப் பலியிட்டு ஆங்கிலத்தை மேம்படுத்துவது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் கதைதான்.''

ஓர் இதழ் எனும் முறையில் மிகுந்த பொறுப்புடன் இந்த ஆசிரியவுரை எழுதப்பட்டுள்ளது.

## இயல் முப்பத்தாறு

# இதுதான் 'கரட்டு வாதம்' என்பது!

'1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் வழிக்கல்வி அரசாணை' படும் பாடு. முதலில் சிலரது கருத்துகளை அப்படியே தருகிறேன்! படியுங்கள். அகிலா தினகர் என்பவர் 19.12.99 'இந்தியன் எக்சுபிரசு' இதழில் எழுதுகிறார்.

"But this G.O. has fatalistic and fascistic overtones which to Tamilnadu students jobs outside the state, leave alone the rest of the world, they said" இவ்வாறு பல மெட்ரிக் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கூறினார்களாம்.

'The language muddle' எனும் தலைப்பில் `இந்து` இதழில் (29.12.1999) பி. இராதா கிருட்டிணன் என்பவர் எழுதுகிறார்.

The G.O. will jeopardies the job opportunities of thousands of students'

இதோ, நமது அன்புக்குரிய (கலைஞரின் மிகநெருங்கிய நண்பர்) நரம்பியல் மருத்துவர் பா. இராமமூர்த்தி கூறுகிறார்:

"தமிழ் மொழியிலேயே மட்டும் படிப்பதனால் வேறு எங்கும் வேலை வாய்ப்புக் கிடைக்காது. தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைப்படும்'' 'குமுதம்' இதழில் அதே பா. இராமமூர்த்தியின் நேர்காணல் :

"தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி வேண்டாம் என்கிறீர்களே?

"வேண்டாமென்று சொல்லவில்லை.... தமிழ்மொழி அழகுதான். ஆனால் தமிழ்நாடு முன்னேற நம் குழந்தைகளுக்கு ஆங்கில பயிற்சி வேண்டும். நாடு முன்னேறினால்தான் மொழி முன்னேறும். மொழியை மட்டும் முன்னேற்றி விட்டால் நாடு முன்னேறி விடாது. ஆரம்ப கல்வி தமிழில் இருக்கட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. அதேசமயம் ஆங்கிலத்தை விட்டுவிடக்கூடாது. மூன்று வயதிலேயே குழந்தைகளுக்கு ஆங்கில அறிவையும் வளர்க்க வேண்டும். பதினோரு வயதில் திடுதிடுவென்று இங்கிலீஷை திணித்தால் குழந்தைகளுக்கு brain shock ஏற்படும். தவித்துப்

போகும். தமிழ் மட்டுமே வேண்டுமென்றால் தமிழை கற்றுக்கொண்டு இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கலாம். அப்படியென்றால் தமிழகத்துக்கு முன்னேற்றம் ஏது? மொழிப்பற்றினால் நாட்டுப் பற்றை பாழ்படுத்தக் கூடாது! உயர்கல்வி ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டும்"என்றால் டாக்டர் ராமமூர்த்தி.''

கல்கி (16.1.2000) இதழில் வழக்குரைஞர் கே.எம். விசயன் நேர்காணல் இது:

"என் தலைமுறையில் . . . . என்ன நியாயம்?

(மற்றோர் இடத்தில் இடம்பெற்றுள்ளது)

இராசாராம் மெஹ்ரோத்தா டைம்ஸ் ஆப் இந்தியாவில் (16.12.98) எழுதியவை இவை:

'The present move is also... abroad' Statesman (23.11.98) கூறுவதைக் கவனியுங்கள்.

"Knowledge of English . . . . . well"

துக்ளக் (16.12.98) "தமிழிலேயே . . . . நியாயமாக இருக்கும்"

சடகோபன் என்பவர் சொன்னதாக ஆனந்தவிகடன் (13.12.98) சொல்கிறது.

இவற்றுக்கிடையில் தமிழ்நாடு காங்கிரசைச் சேர்ந்த பீட்டல் அல்போன்சு பின்வருமாறு பேசியுள்ளார்:

"தமிழிலேயே படித்து டாக்டராகவோ, என்ஜீனியராகவோ ஆக முடியுமா? இதுதான் அவரது வினா. அவருக்கு விராலிமலையைச் சேர்ந்த சௌ. மாரிக்கண்ணன் எழுதிய விடையைக் கவனியுங்கள் (24.1.2000)

"வணக்கத்திற்குரிய அய்யா அவர்களுக்கு,

தமிழ்நாடு நர்சரி பிரைமரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகளின் நிர்வாகிகள் சங்கத்தின் மூன்றாவது மகாநாட்டில் தாங்கள் ஆற்றியுள்ள உரை எங்களைப் போன்றவர்களை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. தாங்கள் சங்க நிர்வாகிகளை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பேசினீர்களா அல்லது தங்கள் உணர்வுகளையே வெளிப்படுத்தி உள்ளீர்களா என்று தெரியவில்லை. 23.1.2000 தேதியிட்ட தினகரன் நாளிதழில் வெளிவந்துள்ள தங்கள் உரைக்கு பதிலுரைக்க வேண்டிய மன அழுத்தத்தின் காரணமாக

எழுதுகின்றேன். இதற்கான தகுதி என்னுடைய, அல்லது எங்களுடைய 'தமிழ் உணர்வு' மட்டுமே.

தாங்கள் 'சிந்தனையாளன்' என்ற முறையில் கருத்துச் சொல்லுகின்றேன் என்று கூறியுள்ளீர்கள்.

**தமிழிலேயே படித்து டாக்டராகவோ, என்ஜினியராகவோ ஆக முடியுமா? என்று கேட்டு உள்ளீர்கள்.**

மருத்துவப் படிப்பையும், பொறியியல் படிப்பையும், விவசாயப் படிப்பையும், அரசு தற்போது ஆங்கில வழியிலேயே நடத்துகின்றது. எதிர்காலத்தில் பிறநாட்டில் இருப்பதுபோல தமிழ் நாட்டிலும், தமிழிலேயே தொழிற்படிப்புக்களை உருவாக்க முடியும். இந்திய ஆட்சிப்பணிக்கான தேர்வினை தமிழில் எழுதி வெற்றி பெற்றவர்கள் இல்லையா? தமிழ் மொழிக் கல்விதான் சிறந்தது என்று அரசு சொல்லவில்லை தாய் மொழிக் கல்விதான் சிறந்தது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இப்பொழுது உள்ள பிரச்சனை ஒன்று முதல் ஐந்து வகுப்புக்கள் வரை தாய்மொழியிலேயே கல்வி பயில வேண்டும். இப்படி படித்தால் அறிவு மங்கிவிடும் என்று கருதுகிறீர்களா? அவர்கள் பொறிஇயல் வல்லுநர்களாக மருத்துவ மேதைகளாக வர முடியாது என்று எண்ணுகிறீர்களா? ஐந்தாம் வகுப்பிற்கு பிறகு ஆங்கிலம் படித்தால், மூளையில் ஏறாதா? மேலும் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கிலமே ஒரு பாடந்தானே.

உலகம் முழுவதும் ஆதாரங்களைத் தேடவேண்டாம். ஒரு சிறிய கிராமத்திலேயே சில எடுத்துக் காட்டுக்களைக் கூறலாம். விராலிமலை அரசுப் பள்ளியில், பத்தாம் வகுப்பு வரை தமிழ்ப்பயிற்று மொழியிலேயே அறிவியல் பாடங்களைப் படித்த கோ. கல்யாணசுந்தரம் என்ற மாணவன் இன்று அமெரிக்காவின் ஒரு கணிப்பொறி பொறியாளர். அதே பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை தமிழிலேயே படித்த இராம. வெங்கடசுப்பு என்ற மாணவன் இன்று ஒரு மருத்துவர். அதே பள்ளியில் வாய்ப்புகள் ஏற்பட்டபோதும், வேறு பள்ளிக்குப் போகாமல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை, அனைத்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே படித்து, மாவட்டத்தில் தமிழுக்கான மொழிப்பாடத்தில் முதல் தகுதிபெற்று, முதலமைச்சரிடம் பரிசு வாங்கிய சௌமா. இராசராசன் என்ற மாணவன் விவசாய பட்டதாரி.

இப்படி எத்தனையோ பேரை கிராமப்புறங்களிலேயே சுட்டிக் காட்டலாம். இது உங்களுக்கே தெரியும். இருப்பினும், ஏனோ உங்கள்

மறுக்கின்றது. உலக அளவில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள், மருத்துவ மேதைகள் தங்கள் தாய்மொழியிலேயே கல்வி கற்றவர்கள் என்பது தாங்கள் அறியாததா?

ஒருவருடைய சிந்தனை, அவர் எத்தனை மொழிகள் பயின்றாலும், அவர் தாய்மொழி வழித்தானே செல்லும். பல மொழி படித்து தேர்ந்த பண்டிதன், துன்பம் வரும்போது தாய்மொழியிலேயே புலம்பினான் என்று தெனாலிராமன் கதைகள் சொல்லுகின்றனவே.

மனப்பாடம் செய்வதால் என்ன மாற்றம் வந்துவிடும் என்று கேட்டுள்ளீர்கள். வெறும் மனப்பாடம் சிந்தனையை மழுங்கச் செய்துவிடும் என்று கூறியுள்ளீர்கள். சிந்தனையற்ற மனப்பாடம் பிறமொழியில்தான் நிகழும். தாய்மொழியில் அல்ல. 'திருக்குறள்' மொழி பெயர்க்க நல்ல தமிழ் மொழி சிந்தனையும், மொழி ஆற்றலும் வேண்டும். அதேபோல் எந்த மொழியில் மொழி பெயர்க்கப்படுகின்றதோ அந்த மொழி அறிவும் வேண்டும். ஆக திருக்குறள் மனப்பாடம், சிறுவர்களுக்கு, ஒரு அடிப்படை பின்னாளில், அதில் புலமை பெற ஆரம்பக்கட்டம். புலமை இருந்தால்தானே மொழி பெயர்ப்பில் செழுமை இருக்கும்? கண்ணதாசன் கூறுவாரே, பலதமிழ் பாடல்களை, குறிப்பாக கம்பனை மனப்பாடம் செய்ததால் அன்றோ என் கவிதை வளம் பெற்றது என்று. மனப்பாடம் சிந்தனையை கூர்மழுங்க வைத்துவிடும் என்றால் இன்று ஆங்கிலப்பள்ளியில் பொருள் புரியாமலேயே பிஞ்சுக் குழந்தைகள் 'டுவிங்கிள் டுவிங்கிள் லிட்டில் ஸ்டாரை' மனப்பாடம் செய்து கொண்டிருக்கின்றார்களே! அது ஏன்? விடை தெரியவில்லை. ஆனால் தயவு செய்து திருக்குறள் படிப்பவர்களை கேவலமாக நினைக்கவேண்டாம்.''

கரட்டு வாதங்கள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அது எப்படியிருக்கும் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள். தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

இப்படி எத்தனையோ, பொருந்தாத விவாதங்கள்! பொறுப்பற்ற விவாதங்கள்! அறிவு சாராத இந்தக் கரட்டுவாதங்களை ஒரேயடியாகத் தூக்கி எறிந்துவிட்டுப் பணிகளைத் தொடர்வோம்!

# இயல் முப்பத்தேழு

## வேலை வாய்ப்பு

தமிழ்வழிக் கல்விக்கு எதிராக ஆங்கிலப் பாசறை அமைந்து, 'ஆங்கிலக் குஞ்சு'களை உருவாக்கிடப் படாத பாடுபடும் ஒரு கூட்டம் அடிக்கடி புலம்புவது' 5ஆம் வகுப்புவரை தமிழில் படித்தால் இவர்கள் வெளிமாநிலத்துக்கு வேலைக்குப் போவது கெட்டுவிடும்; வெளிநாட்டுக்குப் போய் வேலை பார்க்கும் வாய்ப்பு, பறிபோய்விடும்!' என்பதுதான் ஒருவரது கட்டுரையில், 'தினமணி'யில் வந்த பகுதி இது:

"மக்கள் தொகையைப் பொறுத்த வரை நமது நாட்டிலே எந்தக் குறையும் இல்லை. சீனாவுக்கு அடுத்தபடி உலகிலேயே அதிகமக்கள் தொகை- 108 கோடி - கொண்ட நாடாக இருக்கிறது. தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டாலும் 6.2. கோடி மக்கள் இருக்கிறார்கள். நம் நாட்டு மக்கள் தொகை பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, கனடா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளின் மக்கள் தொகையை விட அதிக அதிகம்.

ஆனால் இந்த மக்கள், அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையினர் வல்லவர்களாக இருக்கின்றார்களா? உயர்கல்வி என்று எடுத்துக்கொண்டால் இந்தியாவில் ஏறக்குறைய 94%பேர் பள்ளி இறுதி வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. 12-ம் வகுப்பிற்கு முன்பாகவே பலர் விடுபட்டுப் போய் விடுகிறார்கள். தமிழ் நாட்டிலே கல்லூரியில் படிக்கும் வயதுடைய 60 லட்சம் பேர்களில் 6 லட்சம் பேர்கள்தான் கல்லூரிகளிலே இருக்கின்றார்கள்."

இப்போது, ஓர் உண்மை விளங்கியிருக்கும்.

"இந்தியாவில் ஏறக்குறைய 94%பேர் பள்ளி இறுதி வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. 12-ம் வகுப்பிற்கு முன்பாகவே பலர் விடுபட்டுப் போய் விடுகிறார்கள். தமிழ் நாட்டிலே கல்லூரியில் படிக்கும் வயதுடைய 60 லட்சம் பேர்களில் 6 லட்சம் பேர்கள்தான் கல்லூரிகளிலே இருக்கின்றார்கள்."

எனவே கல்வி வாணிகர்கள் புலம்புவது யாருக்காக? இந்தியாவில் 6% பேருக்காக! தமிழ்நாட்டுக் கல்வி வியாபாரிகளின் கரிசனம் என்ன? கல்லூரியில் படிக்கும் வயதுடைய 60 இலட்சம் பேர்களில் உயர்கல்வி பயிலும்

இலட்சம் பேருக்காக? உண்மை நிலை என்ன? பொறியியல், மருத்துவம் பயின்றவர்கள் ஆங்கில வழியில் பயின்றவர்கள். அவர்கள் வெளிநாட்டில் வேலைக்குப் போவது 5ஆம் வகுப்பு வரை தமிழில் பயில்வதனால் பாதிக்கப்படுமா? அப்படிப் பாதிக்கப்படும் என்று சொன்னால் இது கல்வி வணிகர்களின் வஞ்சகம் நிறைந்த, பித்துக்குளித்தனமான உளறல் அல்லவா?

மலேசியா, துபாய்க் கெல்லாம் பலர் வேலைக்குப் போகிறார்களே! அவர்களில் பலர் +2க்கு மேல் படிக்காதவர்கள். மிகச் சிலர் பட்டம் பெற்றவர்கள். அங்குச் சென்று என்ன வேலை பார்க்கிறார்கள் என்பது எல்லார்க்கும் தெரியுமே! அவர்களில் பலர் முகவர்களால் ஏமாற்றப்பட்டு, பிரம்படி வாங்கி, சிறையில் வாடி. வதங்கி அல்லவா மீண்டும் தமிழகத்திலேயே வந்து நிற்கின்றார்கள்!

எண்ணிப் பாருங்கள்! இவர்கள் வேலை பெறுவதை ‘5ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக்கல்வி‘ கெடுத்துவிட்டதா? பிரம்படி வாங்கும்போது ஆங்கிலவழிக்கல்வி அரணாக நின்று காத்துவிட்டதா? யார் பித்தலாட்டக்காரர்கள் என்று தெரியும்.

* * *

ஒருவர் எழுதுகிறார் பாருங்கள்.

“தமிழ்மீடியத்தில் படிப்பது சைபர் (பூச்சியம்)க்கு சமம். தமிழ் மீடியத்தில் படித்தால் தமிழகத்தில் உள்ள தனியார் துறைகளில் வேலை பெறமுடியாது”

“ஆங்கிலம் மீடியம் உலகெங்கும் வேலை பெறமுடியும். இந்தியாவில் எங்கு சென்றாலும் தனியார் மதிப்பளித்து வேலை தருவார்கள். உலகின் எந்த மூளைக்கும் சென்று திறமையை காட்டமுடியும். வேலை பெறலாம்.”

இவர்களைப் போன்றவர்கள் தமிழுக்கு எவ்வளவு வேகமான எதிரிகளாக இருப்பது புரியும். இவர்களை நாம் அடையாளம் கண்டுதானே இவர்களுக்குப் பாடம் கற்பிக்க முடியும்.

“குமுதம்” (27.4.2000) கலைஞரின் நேர்காணல்

| | |
|---|---|
| கலைஞர் | இப்போது ஆங்கிலம் வழியாகப் படிப்பவர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்புக்கான உத்தரவாதம் இருக்கிறதா? (சிரிக்கிறார்) |

குமுதம் : அதற்கு கூடுதலான வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகிறது இல்லையா?

கலைஞர் : இதன்மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வந்தால் நூற்றுக்கு ஒருவர் போகலாம். இங்கிருக்கிற ஆறு கோடி மக்களில் எவ்வளவு பேர் வெளிநாட்டுக்குப் போகிறார்கள்? தமிழ்வழிக் கல்வியிலேயே இருந்தால் கூட, ஆங்கிலத்தில் புலமை பெற்று அங்குப் போகமுடியும். அதற்கு தமிழ் வழிக் கல்வி ஒரு தடையாக இருக்கப்போவதில்லையே. நாங்களும் ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஐந்தாம் வகுப்பு வரை தமிழையும், தமிழிலும் படி என்றுதானே சொல்கிறோம்.

குமுதம் : தமிழ் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கக்கூடாதா?

கலைஞர் : அதெல்லாம் போகப் போகச் செய்யவேண்டும். அதற்கு இன்னும் கூடுதலாகச் சண்டை போடுவார்களே! இப்போது நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அதுபற்றி அதிகம் பேசக்கூடாது...

வழக்கறிஞர் வெ. கிருட்டிணமூர்த்தி இதற்காக வாதாடுகிறார்.

"இரண்டு மாணவர்கள் . . . . . நியாயம் இல்லை.

'News Today' (8.12.99) இதழ் சில செய்திகளைத் தருகிறது.

"The Government's move could be counterproductive with many schools switching over to CBSE and ISE boards. besides, the affluent class will continue to send their children to residential schools in other States and other countries."

உலகச் சந்தையில் நமது குழந்தைகள் போட்டி போட்டு வேலைபெற வேண்டுமானால்... என்ற போக்கில்தான் இந்தக் கருத்து வைக்கப்பட்டுள்ளது. (CBSE பள்ளிகள் பற்றிய விளக்கம் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது)

"When sending a child to school every parent views it as a gate for future employment vistas and not as an opportunity for the child to enrich its knowledge."

பெறோர்களின் வெட்டவெளிச்சமான குணத்தை இதழ் படம் பிடிக்கிறது.

"Education is only a source of future bread and butter for the common man, who has no time to fall in love with the Tamil language, jeopardising the future generation's employment opportunities."

தமிழில் காதல் கொள்ளவெல்லாம் இவர்களுக்கு நேரமில்லையாம். கல்வியே வருங்காலத்தில் 'வாய்க்கு ருசியாகச்' சாப்பிடத்ததான் என்கிறார்கள்.

"Only the middle-class will be deprived of an opportunity to prepare their wards for fighting it out in the job market in the next millennium, whose hallmark will be globalisation in all sectors. Even the most erudite of the Tamil scholars cannot make a mark at a meet like the WTO."

இவர்கள் சொல்கிறபடி போகிறபோக்கைப் பார்த்தால் என் பேரப்பிள்ளைகளை நான் ஆங்கில வழியில் படிக்கவைக்காவிட்டால் 'அலுவல் அங்காடி'யில் இவர்கள் பரிதாபமாக நிற்பார்கள் என்கிறது 'News Today'.

(21.12.99) 'நக்கீரன்' இதழில் சின்னக்குத்தூசி எழுதிய கட்டுரை மிகச் சிறப்பாக உள்ளது. பல விளக்கங்களைத் தருகிறது. கல்வி வணிகர்களின் போலிவாதங்களை உடைத்தெறிகிறார். கல்வி வணிகர்கட்கான கணிசமான வரவு காணாமல் போய்விடுமே எனும் கவலைதான் இவர்களை அரசு ஆணையை எதிர்க்க வைக்கிறது என்று ஓங்கி அடிக்கிறார்.

"உலகத்திலுள்ள ஜாதியர்களிலே ஹிந்து ஜாதி அறிவுத்திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்கு தமிழராகிய நாம் சிகரம் போல விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல் வலிமையும் திறமையும் உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ்ஜாதியின் அறிவொளி சற்றே மங்கி இருந்ததையும் நானறிவேன். ஆனால், போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை; நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்.

அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்கவேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்கவேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்'' - என்று எழுதியிருக்கிறார் பாரதியார். அதுமட்டுமா?

''தம்பி; தமிழ்நாடு வாழ்க என்று எழுது; தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என எழுது; தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்று எழுது;

அந்த தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்று எழுது'' - என்று தமிழ்நாட்டுத் தம்பிகளுக்கெல்லாம் 'தமிழால் முடியும்' என்றும் தமிழிலேயே கற்றுக்கொள் என்றும் அறிவுரை கூறினார் அவர்!

தமிழால் முடியாது என்ற அந்தக் காலத்து நீலகண்டய்யர்களுக்கு ''தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும்'' என்று புத்திமதி கூறினார் பாரதியார்!

ஆங்கிலத்தில்தான் முடியும் என்று கூறுகிற இந்தக் காலத்து நீலகண்டய்யர்களுக்கு பாரதியாரின் தமிழில் ''வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்கவேண்டும்'' என்று சொன்னால் அவர்களுக்கு அதுகூடப் புரியுமோ புரியாதோ; அதனால் பாரதியார் பேரால் - அவர்களைப் பார்த்து ஆங்கிலத்திலேயே 'ஷட்அப்' என்று சொல்வது தவிர வேறு வழியில்லை!

''ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் - தமிழ் மூலமாகவே பாடம் சொல்லித்தரவேண்டும்'' எனும் தமிழக அரசின் ஆணையை எதிர்த்து கல்வி வியாபாரிகள் சிலர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்!

இவர்களை நாம் கல்வி வியாபாரிகள் என்று சொல்வது - இவர்கள் தமிழ் நாட்டில் இருந்துகொண்டு - தமிழ் மக்களிடம் பிழைப்பு நடத்திக்கொண்டு - தமிழையே எதிர்க்கிறார்களே என்ற கோபத்தினாலோ - அல்லது வருத்தத்தினாலோ அல்ல!

சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகே வசிக்கும் நண்பர் ஒருவர் - அவரது மகனை - ஆங்கில வழிக்கல்வி நிலையத்தில் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார். தற்செயலாக அவரை சந்தித்து உரையாடியபோது - ஆங்கில வழிக் கல்வி என்கிற யானைக்கு - தீனிச் செலவு எவ்வளவு ஆகிறது

என்பதைப்பற்றி வருத்தத்தோடு குறிப்பிட்டார். அவரது பையன் படிக்கும் அந்த ஆங்கில வழிப் பள்ளியில் - எல்.கே.ஜி. எனப்படும் ஆரம்ப வகுப்பில் குழந்தையை சேர்த்துக்கொள்ள - அனுமதிக்கட்டணம் 5000 ரூபாய்! ஆறாவது வகுப்பில் படிக்கும் அவரது பையனுக்கு டேர்ம் ஃபீஸ் 1860 ரூபாய்! புத்தகம் - நோட்டு - காலுக்கு சாக்ஸ் - ஷூ - கழுத்துக்கு டை ஐந்து அல்லது ஆறுஜோடி சீருடைகளுக்கான துணி ஆகிய அனைத்தையும் பெற்றோர்கள் அந்தப் பள்ளிக்கூடத்திலேயே வாங்க வேண்டும் என்பது கட்டாயம்; அதற்கான மொத்தச் செலவு பத்தாயிரம் ரூபாய் வரையில் (நம்ப முடியாத கணக்காகத் தோன்றுகிறது; ஆனாலும் சொல்பவரின் குழந்தை அந்தப்பள்ளியில் படிக்கிறது என்பதால் - அவர் பொய் சொல்லவில்லை என்றே தோன்றுகிறது) பள்ளியில் விளையாட்டு கற்பிக்கிறார்கள்; கையில் அதற்காக கட்டிக்கொள்வதற்கான பட்டை - அதற்கு ஒரு கட்டணம்!

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற செலவு ஒன்றினையும் அவர் குறிப்பிட்டார்.

அந்தப் பள்ளிக்கூடம் வள்ளுவர் கோட்டத்திலிருந்து - இரண்டாவது பேருந்து நிறுத்தத்துக்கு அருகில் இருக்கிறது; இரண்டு நிறுத்தங்கள் கொண்ட அந்த தூரத்திற்கு - அந்தப் பள்ளியில் பஸ் கட்டணமாக 220 ரூபாய் மாதந்தோறும் வசூலித்து வந்திருக்கிறார்கள்; டீசல் விலை உயர்வைக் காரணம் காட்டி அந்த பஸ் கட்டணத்தை 350 ரூபாயாக உயர்த்தி விட்டார்கள்.!

பஸ் கட்டணத்தை 1 ரூபாய் உயர்த்தினால் - ஆவின் பால் கட்டணத்தை ஒரு ரூபாய் உயர்த்தினால் - "அய்யோ - தாங்க முடியாத உயர்வு, ஏழை எளிய மக்களின் தலையில் விழுந்த இன்னொரு இடி" என்று நாம் எல்லோரும் அரசாங்கத்தைக் கண்டிக்கிறோம்; அந்தத் தமிழ் நாட்டில்தான் - இரண்டு நிறுத்தங்களுக்கு இடையிலான தூரத்திற்கு மாதம் 350 ரூபாய் வசூலிக்கிறார்கள்; அந்த நண்பர் தந்த இன்னொரு தகவலையும் தெரிந்துகொண்டால் - இவர்கள் எப்படிப்பட்ட வியாபாரிகள் என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

இரண்டு பஸ் நிறுத்தங்களுக்கு இடையிலான தூரத்திற்கு ஒரு குழந்தைக்கு மாதம் 350 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படும் - அந்தப் பள்ளிக்கூடத்துக்கு சொந்தமான பஸ்சை ஓட்டும் ஊழியருக்கு மாதம் சம்பளம் எவ்வளவு தெரியுமா?

ஓட்டுநரின் மாதச்சம்பளம் 1500 ரூபாய் மட்டுமே! "அய்யா - நான் இந்தப் பள்ளிக்கூடத்தில் வேலைக்குச் சேர்ந்து 17 வருடங்கள் முடியப்போகுதுங்க... 17 வருடங்களுப் பிறகு எனது சம்பளம் 1500 தாங்க; ஒவ்வொரு வருஷமும் அவர்கள் 10 ரூபாய்தான் இன்கிரிமெண்ட் தருகிறார்கள்! இப்படி 17 வருடங்களில் - இதுவரை 170 ரூபாய் சம்பள உயர்வு கிடைத்திருக்கிறது; தினசரி பேட்டாவாக 10 ரூபாய் தருகிறார்கள்!'' என்று அந்த ஓட்டுநர் கூறியிருக்கிறார்.

நண்பர் கூறுகிற இந்தத் தகவல்களை எல்லாம் கேட்கும் யாருக்கும் - இது கல்வி வியாபாரம்தான் என்றுதானே நினைக்கத்தோன்றும்?

வள்ளுவர் கோட்டத்துக்கு அருகிலேயே இன்னொரு பள்ளிக்கூடம்! இந்தப் பள்ளிக்கூடத்தில் - நமது குழந்தைகளைச் சேர்க்கவேண்டும் என்றால் - அங்கே ஒரு வினோதமான தேர்வைச் சந்திக்க வேண்டியிருக்கும்!

இந்தப் பள்ளிக்கூடத்தில் - குழந்தைகளைச் சேர்க்க விண்ணப்பிக்கும் அப்பா - அம்மாக்களுக்கு இங்கே நேர்முகத்தேர்வு - எழுத்துத் தேர்வெல்லாம் நடத்தப்படுகிறது!

அப்பா, அம்மாக்களுக்கு ஆங்கிலத்தில் பிழையின்றி பேசவும் எழுதவும் தெரிந்திருக்கவேண்டும்; பள்ளி நடத்தும் பரிசோதனை தேர்வில் அவர்கள் எழுதும் பகுதிகளில் பிழைகள் இருந்தால் - அப்படிப்பட்ட அப்பா அம்மாக்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு 'ஆங்கிலமாதா' அன்புகாட்ட மாட்டாள்; பள்ளியில் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள்! இதையெல்லாம் நம்பமுடிகிறது? நடக்கிறது என்கிறார்களே!

"அய்யோ - ஆங்கிலத்தில் படித்து - அகில இந்தியாவிலும் - வேலை பார்க்கக்கூடிய வாய்ப்பை - இந்தத் 'தமிழ்த்திணிப்பு ஆணை' மூலம் கெடுக்கிறார்களே! நமது குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாழாக்குகிறார்களே'' - என்று இவர்கள் உள்ளம் உருக பேசுகிறார்கள்!

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டின் ஆசிரியர்க்கு - கடிதம் பகுதியில் ஒரு வாசகர் "நான் பெங்களூரில் வேலை பார்த்து - ஓய்வு பெற்ற பிறகு தமிழகத்துக்கு வந்தவன் - 60-களில் எனது படிப்பு முடிந்தது. அப்போது பள்ளிக்கூடங்களில் எல்லா வகுப்புகளிலும் தமிழில்தான் பாடம் நடத்துவார்கள்; ஐந்தாம் வகுப்பு வரையில் - ஆங்கிலம் ஒரு பாடமாகக்கூட இருக்கவில்லை; அறுபதிலிருந்துதான் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் பள்ளியில்

சொல்லித்தருவார்கள்'' என்று எழுதியிருக்கிறார்! இன்று ஆங்கில வழிக்கல்விக்கூடங்களில் தங்களது குழந்தைகளை சேர்த்து படிக்க வைத்திருக்கும் பெற்றோர்கள்

1. எந்த வகுப்பிலிருந்து ஆங்கிலம் படித்தார்கள்?

2. இவர்களில் எத்தனை பேர் ஆங்கில வழிக்கல்வி நிலையங்களில் - ஆங்கிலம் மூலம் பயின்றவர்கள்?

3. ஆங்கில வழிக்கல்வி நிலையங்களில் தங்களது குழந்தைகளை சேர்த்துள்ள அப்பா - அம்மாக்களில் பெரும்பாலானவர்கள் நடுத்தர வர்க்கத்தினர்தானே? அரசாங்க வேலை பார்ப்பவர்கள்தானே? இவர்களுக்கெல்லாம் ஆங்கிலம் மூலம் படிக்காமலே - வேலை கிடைத்திருக்கிறதே; அதனால்தானே - ஆயிரக்கணக்கில் பணம் செலவிட்டு - ஆங்கில வழிக்கல்வி நிலையங்களில் தங்களது குழந்தைகளை இவர்களால் படிக்க வைக்க முடிகிறது?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை - ஆங்கில வழிப்பள்ளிக்கூட நிர்வாகிகள் -

1. தங்கள் பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களில் - எத்தனை பேர் ஆங்கிலம் மூலம் படித்தவர்கள்?

2. தமிழ் வழியாகவே கல்விபயின்று அரசாங்க வேலைகளில் இருப்பவர்கள் எத்தனை பேர்? - என்ற புள்ளிவிபரத்தைத் தொகுத்து வெளியிடுவார்களானால்

"ஆங்கிலம் மூலம் படித்தால்தான் வேலைகிடைக்கும் என்பதல்ல; தமிழ் மூலம் படித்தவர்களின் குழந்தைகள்தான் இன்று ஆங்கில வழிக்கல்வி நிலையங்களில் படிப்பவர்களில் பெரும்பாலோர்'' - என்பது தெள்ளத்தெளிவாகத் தெரியவரும்!

இதைத்தான் பெங்களூர் வாசகர் - "60-கள் வரையில் படித்தேன்; தமிழ் மூலமே படித்தேன்; பெங்களூரில் வேலை கிடைத்தது; ஓய்வு பெற்றபின் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டேன்'' என்பதின் மூலம் எடுத்துக்காட்டுகிறார் எக்ஸ்பிரஸ் ஏட்டில்! இந்த ஒரு வாசகர் மட்டுமல்ல; பெங்களூரிலும் - பம்பாயிலும் - டெல்லியிலும் இலட்சக்கணக்கான தமிழர்கள் வசிக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் வேலை தேடிச்சென்று அங்கே குடிபுகுந்தவர்கள்தான்!

அவர்களில் எத்தனை பேர் ஆங்கில வழிக்கல்வி நிலையத்தில் படித்தவர்கள்' என்று ஒரு புள்ளி விவரம் திரட்டினால் - பெங்களூர் - டெல்லி - பம்பாயில் அவர்களுக்கு வேலை கிடைக்க ஆங்கிலம் காரணமல்ல; தமிழ் மூலம் பயின்றுதான் அவர்கள் அங்கெல்லாம் வேலை தேடிக்கொண்டார்கள் என்பதும் புலனாகும்!

'ஆங்கிலம் படித்தால் - அகில இந்தியாவிலும் வேலை கிடைக்கும்' என்று இவர்கள் பம்மாத்துச் செய்யும் இந்தக்கால கட்டத்தில் - இந்தியா முழுவதும் உள்ள வேலை வாய்ப்பு நிலையங்கள் தரும் தகவல் என்ன?

நீ எந்த மொழியில் படித்தால்தான் என்ன? படித்தவர்கள் எண்ணிக்கைக்கும் - வேலைக்கான இடங்கள் பற்றிய எண்ணிக்கைக்கும் உள்ள வித்தியாசமாகவே இருக்கிறது! - பீகாரில் 35 லட்சம் பேர் படித்து - வேலை தேடித்தரும் நிலையங்களில் பதிவு செய்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கிறார்கள்.

- உத்திரப்பிரதேசத்திலும் அதே கதைதான்! 40 லட்சம் பேக்கு மேல் இந்தியில் படித்தவர்கள் - வேலை கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் - என்பதை தமிழக அரசின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஆங்கிலம் படித்தால் வேலை கிடைக்கும் என்பது மெக்காலே பிரபு காலத்து வாதம்!

இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்பது சேத்கோவிந்ததாஸ் போன்றிருந்த இந்தி வெறியர்கள் காலத்து வாதம்! இப்போது எந்த மொழி படித்திருந்தாலும் வேலை கிடைப்பது குதிரைக்கொம்பு என்பதுதான் யதார்த்தம்!

சுதந்திர இந்தியாவில் பண்டித ஜவகர்லால் நேருவின் காலத்தில் - நாட்டை சகலதுறைகளிலும் வலிமை மிக்கதாக ஆக்கிட ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டன. ஐந்தாண்டுத்திட்டங்கள் காரணமாக

பக்ராநங்கல் அணை, சிந்திரி உரத்தொழிற்சாலை, டிராம்பே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சித்தரஞ்சன் இஞ்சின் தொழிற்சாலை - பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை, நெய்வேலி நிலக்கரி சுரங்கம், ஆவடி டாங்கு ஆலை, திருச்சி பெல் தொழிற்சாலை - என்று ஏராளமான ஆலைகளும் - அணைக்கட்டுகளும் - மின்சார உற்பத்தி நிலையங்களும் உருவாயின. கோடிக் கணக்கானவர்களுக்கு வேலையும் கிடைத்தது.

பொதுத்துறை நிறுவனங்கள் - தனியார்துறை நிறுவனங்கள் - கூட்டுத்துறை (Joint Sector) நிறுவனங்கள் - என்று போட்டி போட்டுக் கொண்டு - இவைகளின் சார்பாக ஏராளமான ஆலைகள் தோற்றுவிக்கப் பட்டன! அதனால் வேலை வாய்ப்பும் பெருகியது!

இன்று புதிய பொருளாதாரக்கொள்கை என்ற பேரால் பொதுத்துறை நிறுவனங்களுக்கு - அனேகமாக மங்களம் பாடும் கட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது!

தனியார் மயமாக்குதல் என்ற பேரால் கோக்கோ கோலா போன்ற அந்நிய நாட்ட பகாசுரகம்பெனிகளுக்கு வழிதிறந்து விட்டதின் காரணமாக உள்ளூர் குளிர்பானக் கம்பெனிகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வருகின்றன! நாற்காலி - மேசை - பீரோ போன்ற மரச்சாமான்கள் கூட அந்நியநாட்டிலிருந்து இறக்குமதியாகி - அரைபக்க - ஒருபக்க - டி.வி. விளம்பரங்களோடு - உள்ளூர் மரப்பொருள் உற்பத்தி சாலைகளுக்கும் - மரத்தச்சர்களுக்கும் ‘டாட்டா‘ காட்டிக்கொண்டிருக்கின்றன! இவை ஒரு புறம் என்றால்-

சுற்றுப்புறத் தூய்மை என்ற பேரால் - நீதிமன்றங்கள் வேறு தங்கள் பங்கிற்கு ஏராளமான ஆலைகளை - அதாவது ஒரே உத்தரவு மூலம் நூற்றுக்கு மேற்பட்ட ஆலைகளை மூடும் அளவுக்கு மூடுவிழாவுக்கு ஏற்பாடு செய்து - நடுத்தெருவில் நிறுத்தி வருகின்றன! எல்லாவற்றிற்கும் சிகரமாக கணினிமயம் - எதிர்காலத்தில் - அரசாங்க அலுவலகங்களில் - தனியார் அலுவலகங்களில் இத்தனை ஆயிரம்பேர் வேலை பார்க்க வாய்ப்பு இருக்காது! பலபேர் பார்க்கக்கூடிய வேலையை கணினி ஒன்றே செய்து - வேலை வாய்ப்புக்கதவுகளை இறுக மூடிவிடும் என்ற கவலைதரும் கட்டத்தில் இருக்கிறார்கள் மக்கள்!

இந்த நிலையில் “ஆங்கிலம் மூலம் படித்தால் வேலை கிடைக்கும். அதில் இந்தியாவிலும் வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பை - தமிழக அரசு ‘தமிழ்த்திணிப்பு’ மூலம் பாழடிக்கிறது“ என்று சொல்வதைப் போன்ற ஏமாற்று வேலை அல்லது அறியாமை வேறு என்ன இருக்க முடியும்?“

அண்மையில் (நவ.2003) நடைபெற்ற பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் பேசிய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தியாகராசன் ஒரு புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளார்.

“இந்தியாவில் 300 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. 18 அகவை முதல் 22 அகவை வரை உள்ள இளைஞர்களில் 17% பேர்தான் உயர்கல்வி

பெறுகின்றனர். அதாவது, பி.ஏ., பி.எசி., பி.காம்.போன்ற பட்டவகுப்புகளிலும் முதுகலை வகுப்புகளிலும் எம்.பி.பிஎசு., பி.இ., பி.எல்., பி.அக்ரி., பி.பி.எஸ். போன்ற பட்டவகுப்புகளிலும் சேர்பவர்கள் 17% என்றால், உயர்கல்விக்கே வாராமல் +2 வகுப்பு அளவிலேயே நின்றுபோகின்றவர்கள் 83% என்பதுதானே உண்மை.

இந்த 83% விழுக்காட்டிலும 5ஆம் வகுப்போடு நிறுத்துபவர்கள் (Drop out) 8ஆம் வகுப்போடு நிறுத்துபவர்கள். 10ஆம் வகுப்போடு நிறுத்துபவர்கள் (S.S.L.C.) என்ற தனித்தனி எண்ணிக்கையும் +2 வகுப்போடு நிறுத்துபவர்களோடு சேர்ந்துதானே 83%.

இதையே நான்காகப் பகுத்தால் ஒவ்வொருகட்டத்திலும் படிப்பைத் தொடராமல் கைவிடுவோர் எத்தனைபேர்? (அ.கி. வேங்கட சுப்ரமணியம் தரும் புள்ளி விவரத்தையும் கவனியுங்கள்)

புள்ளி விவரங்களின்படி :

| | | |
|---|---|---|
| முதல் வகுப்பில் மாணவர்கள் | | 17.62இலட்சம் |
| ஆறாவது வகுப்பில் சேர்வோர் | | 12.47இலட்சம் |
| ஒன்பதாம் வகுப்பில் சேர்வோர் | | 7.54இலட்சம் |
| பதினொன்றாம் வகுப்பில் சேர்வோர் | : | 3.54இலட்சம் |
| கல்லூரி செல்வோர் | : | 1.5.இலட்சம் |

- - -

1 முதல் 8 வரை படித்த 10.08 இலட்சம் மாணவர்கள் தொடர்ந்து படிக்காமல் (Drop out) நின்று விடுகிறார்கள்.

1 முதல் 12 வரை படித்த 16.12 இலட்சம் பேர் நின்று விடுகிறார்கள். இவர்களுக்கு ஏன் அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்தில்?

கல்லூரி செல்லும் 1.5. இலட்சம் பேருக்காக எஞ்சியுள்ள 16.12 இலட்சம் மாணவர்களையும் பாழடிக்க வேண்டுமா?

முடிவு : கல்லூரிகளில் - அரசுக் கல்லூரி 65-இல் இணைப் பயிற்றுமொழி
அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 160இல் ஆங்கிலம் மட்டுமே
சுயநிதிக் கல்லூரிகளில் ஆங்கிலம் மட்டுமே

இவர்கள் போகட்டும் வடநாட்டுக்கும், வெளிநாட்டுக்கும்.

ஆனால் வா.செ.கு. தரும் புள்ளிவிவரத்தில் சிறிது வேறுபாடு உள்ளது. அது துணைவேந்தர் தியாகராசன் சொல்வதை விட 10% குறைவு.

"நம் நாட்டில் 2001-02 நிலவரப்படி நாட்டில் 265 பல்கலைக்கழகங்களும், 13,150 கல்லூரிகளும் உள்ளன. உயர் கல்வி பெறும் அகவையினரில் இது 7 விழுக்காடு ஆகும். 2020ஆவது ஆண்டில் இதை 20 விழுக்காடு அளவுக்கு உயர்த்தவேண்டும் என்றால் இன்றுள்ள உயர்கல்வி வசதிகளை மூன்று மடங்கு அதிகரிக்க வேண்டும்.''

சின்னக்குத்தூசி மேலும் சில கருத்துகளைக் கூறுகிறார்.

"தமிழில் பாடம் சொல்லித்தரக்கூடாது - ஆங்கிலம் மூலமே பாடம் சொல்லித்தரவேண்டும்-'' என்று கூச்சலிடும் கல்வி வியாபாரிகள்

"ஐயோ - இதுவரை ஆங்கிலத்திலேயே பாடங்களை படித்த குழந்தைகளிடம் திடீரென்று தமிழின் மூலம்தான் இனி பாடம் என்றால் - அவர்களது மனோநிலை என்னவாகும்; ரொம்பவும் பாதித்துவிடும் என்று சைக்கியாட்ரிஸ்ட்கள்கூட கூறுகிறார்கள்'' என்று உருக்கமாய் புலம்புகிறார்கள். இந்த சைக்கியாட்ரிஸ்ட்கள் வாதத்தை ஏற்றுக்கொண்டால் - இன்று தமிழ்நாட்டிலே இருக்கிற தாத்தா, பாட்டிகள் - அப்பா, அம்மாக்கள் ரொம்பப்பேர் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் - என்ற முத்திரைக்கு உரியவர்கள் ஆகிவிடுவார்கள்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலம் வரையில் தமிழகத்தில் இத்தனை ஆங்கிலவழி பள்ளிகள் இருந்ததே இல்லை; அரங்கநாயகம் என்கிற புண்ணியவான் - கல்வி அமைச்சராக இருந்தபோதுதான் - சுயநிதி கல்வி நிலையங்கள் என்ற பேரால் - இத்தனை ஆங்கிலவழிக் கல்வி நிலையங்கள் புதர்கள் மாதிரி முளைத்து மண்டிவிட்டன!

அதற்கு முன்பெல்லாம் தமிழ் மக்களது குழந்தைகளை கைதூக்கி விடவேண்டும் என்று இத்தனை ஆயிரம் ஆங்கிலர்கள் முன்வந்ததே இல்லை. காமராஜர் காலத்தில்தான் - மூன்று மைலுக்கு ஒரு தொடக்கப்பள்ளி என்கிற அளவுக்கு 36 ஆயிரம் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

அப்போதெல்லாம் இந்த 'மேனேஜ்மெண்ட் கல்வியாளர்கள்' எவரும் தமிழ் குழந்தைகள் படிக்க - எந்த ஊரிலும் ஒரு திண்ணை பள்ளிக்கூடம்கூட நடத்த முன்வந்ததில்லை. ஏனெனில் - அப்போது படிப்புக்கு - முதல் வகுப்பில் (எல்.கே.ஜி.) குழந்தையை சேர்க்க ஐந்தாயிரம் ரூபாய் அனுமதி கட்டணம் கொடுக்கமளவுக்கு பெற்றோருக்கு பணவசதி இருந்ததில்லை.

அதனால்தான் காமராஜர் - எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படிப்பு இலவசம் என்று அறிவித்தார். அந்த இலவச பள்ளிக்கூடங்களில் படித்து - அரசாங்க வேலையில் அமர்ந்த நடுத்தர வர்க்கத்துப் பெற்றோர்தான் இன்று - "இங்கிலீஸ் படிக்காவிட்டால் குழந்தைகளின் எதிர்காலம் என்ன ஆவது?" என்று கேட்கிறார்கள்.

அன்று - பள்ளிக்கூடங்களை அரசு திறந்தாலும் படிப்பு இலவசம் என்று அறிவித்திருந்தாலும் - காலையில் வீட்டில் 'டிஃபன்' சாப்பிட வைத்த குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் நிலையில் பெரும்பாலான பெற்றோர்கள் இல்லை. ஆகவே காலையில் எதுவும் சாப்பிடாமல்தான் அந்த குழந்தைகள் இலவசமாக படிக்க பள்ளிக்கூடங்கள் சென்றன!

காலை சிற்றுண்டிக்கே வழியில்லை என்றால் மதிய உணவுக்கு எங்கே போவார்கள்? பட்டினியால் மயக்கம் அடித்து விழும் குழந்தைகள்.

இதனை நாகர்கோயில் அருகே ஒரு சிற்றூரில் நேரில் கண்ட அன்றைய பொதுக்கல்வி இயக்குநர் நெ.து. சுந்தரவடிவேல் - சென்னை திரும்பியதும் முதல்வர் காமராஜரை அணுகி - இலவச படிப்பு தந்தால்மட்டும் போதாது; மதிய உணவும் வழங்கவேண்டும் என்று எடுத்துச் சொன்னார். அப்படி பிறந்ததுதான் மதிய உணவு திட்டம். இன்றும் அது சத்துணவு திட்டம் என்று தொடர்கிறது.

சத்துணவு திட்டமும் - சத்துணவு திட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான ஊழியர்களும் சத்துணவுக்காக அரசு செலவிடும் கோடிக்கணக்கான ரூபாய்களும் காட்டுவது என்ன?

இந்த நாட்டில் கோடானுகோடி குழந்தைகளுக்கு - மதிய உணவும் - இலவச சீருடையும் - இலவச பாடப்புத்தகங்களும் தந்துதான் அவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டிய நிலையிருக்கிறது என்பதைத்தானே?

இத்தனை லட்சம் குழந்தைகள் - சத்துணவு - இலவச சீருடை - இலவச பாடப் புத்தகங்கள் பெற்று - அரசு பள்ளிகளில் இலவச கல்வி மூலம் படிக்கிறார்களே! அவர்களெல்லாம் தமிழ்மூலம்தானே படிக்கிறார்கள்.

காமராஜர் காலத்தில் - உயர்நிலைப் பள்ளி வரையில் கல்வி இலவசம் என்றால் - கலைஞர் ஆட்சிக்காலத்தில் அது பி.யூ.சி. வரையில் இலவசம் என்று விரிவாக்கப்பட்டது. காமராஜர் காலத்திலும் - அண்ணாவின் காலத்திலும் - கலைஞர் காலத்திலும் அரசு பள்ளிகளில் தமிழ் மூலம்

படித்தவர்கள்தானே இன்று பல்வேறு அலுவலகங்களிலும் வேலை பார்ப்பவர்கள்! அவர்களுக்கெல்லாம் ஆங்கிலம் மூலம் படிக்காவிட்டாலும் வேலை கிடைக்காமலா போய்விட்டது?

அரங்கநாயகம் காலத்து சுயநிதிக் கல்லூரியில் ஆங்கிலம் மூலம் படித்தவர்களுக்கு மட்டும்தான் இந்த காலத்தில் வேலை கிடைக்கிறது. அரசு பள்ளிகளில் தமிழ் மூலம் படித்தவர்களுக்கு வேலையே கிடைப்பதில்லை என்கிறார்களா 'மேனேஜ்மெண்ட் கல்வி வள்ளல்கள்!'

அன்று எஸ்.எஸ்.எல்.சி. வரையில் - உயர்நிலைக் கல்வி வரையில் தமிழ் மூலமே - தமிழ் மொழி மூலம் மட்டுமே படித்த மாணவர்கள் - கல்லூரியில் சேர்க்கப்பட்டதும் - திடீரென்று ஆங்கில வழிக் கல்விக்கு தங்களை மாற்றிக்கொள்ளவில்லையா? அப்போது எந்த சைக்யாட்ரிஸ்ட்டும் "ஐயோ.... 11-வது வகுப்புவரை தமிழ் மூலம் மட்டுமே படித்த குழந்தைகள் - கல்லூரியில் சேர்ந்ததும் - 'இங்கே ஆங்கிலம் மூலம் மட்டும் படிப்பு சொல்லிக்கொடுக்கப்படும்' என்று கட்டாயப்படுத்துவதால் மனோநிலை பாதிக்கப்படுகிறார்கள்" என்று ஆலோசனை கூறவில்லையே ஏன்?

அன்று உயர்நிலைப் பள்ளி வரையில் - எல்லாப் பாடங்களையும் தமிழ்மூலம் படித்தவர்கள்தானே இன்று பெரிய பெரிய பதவிவகிக்கும் அதிகாரிகளாய்- பெரிய பெரிய எழுத்தாளர்களாய் - பத்திரிகை ஆசிரியர்களாய் இன்று புகழோடு விளங்குகிறார்கள்.

அன்று 6-வது வகுப்பு வரையில் ஆங்கிலம் அறவே கிடையாது. 6-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரையில் ஆங்கிலம் ஒரு பாடமாக மட்டுமே இருந்தது. அதுபோலத்தான் இன்றும் - ஐந்து வகுப்பு வரையில் தமிழ்மூலம்தான் போதிக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருந்தாலும் 'ஆங்கிலம் இனி ஒரு பாடமாகக்கூட இருக்கக்கூடாது' என்று ஆங்கிலத்தை அரசு ஆணை விரட்டி துரத்திவிடவில்லை. பாடம் சொல்லிக் கொடுக்க தமிழை மட்டுமே - பயன்படுத்த வேண்டும் - மற்றபடி ஆங்கிலம் ஒரு பாடமாக நீடிக்கும் என்றுதானே அந்த ஆணையின் வழிப்படி ஆங்கில கல்விக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது!

மேனேஜ்மெண்ட் வள்ளல்கள் நடத்தும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களில் பெரும்பாலோர் ஆசிரியர் பயிற்சி பெறாதவர்கள். அரசு பள்ளிக்கூடங்களில் வழங்கப்படும் ஊதியத்தைவிட மிக மிக மிக மிகக்குறைந்த அற்ப சம்பளத்திற்காக வேலை பார்ப்பவர்கள்.

இவர்கள் கூட ஆங்கிலம் மூலம் பாடம் நடத்துவதைவிட - தமிழ் மூலம் பாடம் நடத்தச் சொன்னால் இப்போது சொல்லித் தருவதைவிட சிறப்பாக பாடம் நடத்துவார்கள். ஏனெனில் - அவர்கள் பள்ளிக்கூடத்தில் கழிக்கும் நேரம் தவிர - மீதிநேரம் முழுவதும் வீட்டிலும் வெளியிலும் தமிழில்தான் பேசுகிறார்கள்.

பள்ளி முடிந்து பஸ்சில் ஏறினால் இவர்கள் - பஸ் கண்டக்டரிடம் கிண்டிக்கு என்றுதான் டிக்கெட் கேட்கிறார்களே தவிர... 'டிக்கெட் கிண்டி ப்ளீஸ்' என்று கண்டக்டரிடம் ஆங்கிலம் பேசுவதில்லை.'' (நக்கீரன் 26.12.99)

எனவே 5ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படிப்பவர்கள் எல்லாம் மாடுமேய்க்கப் போய்விடுவார்கள் என்றும், 5ஆம் வகுப்பில் ஆங்கில வழியில் படிப்பவர்கள் எல்லாம் வெளிநாட்டில் வேலை பார்க்கப்போகிறார்கள் என்றும் நம்பவைக்கச் சிலர் முயல்கிறார்கள். பல வணிகர்கள் நுகர்வோரை ஏமாற்றுவதில்லை; ஒரு சில வணிகர்கள் தான் சிறு தவறுகள் செய்வார்கள். ஆனால் கல்வி வணிகர்கள் தங்கள் பொருளை இப்படி நம்மை ஏமாற்றி விற்கப் பார்க்கிறார்கள்.

# இயல் முப்பத்தெட்டு

# பிற்கால நிலைமை

13.5.2001இல் தேர்தல் முடிவுகள் வந்து 14.5.2001இல் அ.தி.மு.க ஆட்சி வந்துவிட்டது. எனினும் இன்று வரை 'தமிழ்வழிக் கல்வி' உச்சநீதிமன்றத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளை மட்டும் பார்ப்போம்.

7.10.2003 இல் ஒரு செய்தி.

தமிழ் கட்டாயப் பாடம், புதுச்சேரியில் அமல்

"புதுச்சேரி மாநிலத்தில் தமிழ் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நேற்று முதல் அமலுக்கு வந்தது.

புதுச்சேரி மாநிலத்தில் ஒன்றாம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரை தமிழ் மொழி கட்டாய பாடமாக்கப்படும் என்று கல்வித் துறை அமைச்சர் லட்சுமிநாராயணன் சட்டசபையில் அறிவித்திருந்தார். இதன்படி தமிழ் மொழியை கட்டாய பாடமாக்கும் திட்டம் நேற்று துவக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் மொழிப் பாடத்தில் தமிழை படிக்காமல், பிரெஞ்ச், இந்தி போன்ற மொழிகளை படிக்கும் மாணவ மாணவிகள் இனி கட்டாயம் தமிழ் மொழியையும் கூடுதலாக படிக்க வேண்டும். தமிழ் பாடத்துக்கு தேர்வுகளும் வைக்கப்படும்.

இதற்காக 'அறிமுகத் தமிழ்' என்ற புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தின் வெளியீட்டு விழா நேற்று நடந்தது.

விழாவில் அமைச்சர் லட்சுமி நாராயணன் பேசியதாவது:

தமிழ் மொழி கட்டாய பாடமாக்கப்படும் இந்த நாள் எல்லோரும் கொண்டாடும் நல்ல நாளாக உள்ளது. நமது மாணவர்கள் தாய் மொழி தமிழை படித்து அறிந்து கொள்ளாமலேயே பள்ளிப் படிப்பை முடித்து வெளியே செல்லும் துர்பாக்கிய நிலை மாற்றப்பட வேண்டும் என்று நினைத்தோம். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் வகையில் இந்த திட்டத்துக்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

ஒன்றாம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு தமிழ் கட்டாய பாடம் அறிமுகப் படுத்தப்படுகிறது. இதற்காக தற்போது முதல் நிலை புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2வது, 3வது நிலை புத்தகங்களும் விரைவில் தயாரிக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தின் நல்ல விளைவுகள் எதிர்காலத்தில் கிடைக்கும்.

மாணவர்கள் தமிழை விட்டு வேறு மொழி படிப்பதற்கான காரணங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். மற்ற மொழிப் பாடங்களுக்கு அதிக மதிப்பெண் கிடைக்கிறது போன்ற சிறிய குறைகளை ஆராய்ந்து வருகிறோம்.

கணக்கெடுத்து பார்க்கும் போது 5 ஆயிரத்து 100 மாணவ மாணவிகள் மட்டுமே தமிழ் படிக்கவில்லை. தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படுவதால் அனைத்து மாணவ மாணவிகளும் தமிழ் படிக்கின்றனர் என்ற நிலை ஏற்படும். தமிழ் மூலம் பல புதிய செய்திகளை தெரிந்து கொள்வார்கள். புத்தகம் விஞ்ஞானப்பூர்வமாக எழுதப்பட்டுள்ளது.''

கேட்கும்போது மகிழ்ச்சியாகவே உள்ளது. இது எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் படுகிறது என்பதைக் கேட்டுத்தான் அறியவேண்டும். 30 தொகுதிகளைக் கொண்ட சிறிய மாநிலம் புதுவை. ஒரு தொகுதிக்கே 20000 வாக்காளர்கள்தான் இருப்பார்கள். தமிழ் படிக்காத மாணவர்கள் 5100 பேர்தான். அடுத்து இதனை ஆய்வோம்.

முன்னாள் அமைச்சர் செ. மாதவன் தன் ஊரில் உள்ளவர்களின் கூட்டுறவோடு ஒரு மெட்ரிகுலேசன் பள்ளியை நடத்தி வருகிறார் (சிங்கம்புணரி) எனவே அவர் எழுதும் எந்தச் செய்தியும் அவரது கோணத்தில்தான் இருக்கும். 3.1.02 இல் எழுதிய கட்டுரையில் ''ஆங்கிலத்தில் கற்று உலகமுழுதும் செல்ல, ஆங்கில மொழி வழி கற்பதே பயன்தரும் என எண்ணுபவர்களை மாசுபடுத்தக்கூடாது'' என்று எழுதுகிறார்.

5ஆம் வகுப்பு வரை தமிழில் படித்து விட்டு, மேலே ஆங்கிலம் - ஆங்கில வழியில் படியுங்கள் என்று வாய்ப்பளித்துள்ளோம். இவர்கள் உலகமுழுதும் செல்லும் திறனை இழந்து விடுவார்களா? 5ஆம் வகுப்புப் பாடங்களைத் தமிழில் படித்த எல்லாரும் உள்ளூருக்குள்ளே உழவு வேலைதான் பார்க்கிறீர்களா? அப்துல்கலாம் முதலாக அடியேன் ஈறாக உள்ளவர்கள் ஆங்கிலம் அறியாதவர்களா?

'திராவிட இயக்கத்தில்' புகுந்துகொண்டு, தன் நோக்கங்களையே தன் வசதிக் கேற்பச் சொல்லிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய கூட்டம் உண்டு. அந்தக் கூட்டத்தில் இவரும் ஒருவர்.

அதிலும் அண்ணா அமைச்சரவையில் இடம் பெற்றவர். இராமநாதபுர மாவட்டத்தில் முதலில் வெற்றி பெற்ற தி.மு.க. காரர் எனும் ஒரே தகுதியால் தென்னரசு உட்பட எல்லாம் சேர்ந்துதான் இவரை முடிவு செய்தார்கள்.

ஆனால் அவர் எப்படி எழுதுகிறார் பாருங்கள். எனினும் அவரது கருத்தினை எதிர்த்தும் திறனாய்வு செய்தும் தமிழண்ணலும் பெ. மணியரசனும் 'தினமணி' (18.1.2002) எழுதியுள்ளார்கள்

'தமிழண்ணல்' குமுறுகிறார்.

விரும்புவோர்க்கு உரிமை இல்லையா?

முன்னாள் அமைச்சர் மாதவன் கட்டுரையில் (3.1.02) ஆங்கிலத்தில் கற்று உலக முழுதும் செல்ல, ஆங்கிலமொழிவழி கற்பதே பயன்தரும் என எண்ணுபவர்களை 'மாசுபடுத்தக்கூடாது' என எழுதியுள்ளார்.

பொறியியலைத் தமிழ்மொழி மூலம் கற்கலாம் என அறிவித்ததும் 630 பேர் விண்ணப்பித்தார்களே? தமிழ்வழி படிக்க விரும்புவாரைக் கட்டாயப்படுத்தி, அவர்களின் உரிமையை மறுப்பது என்ன நியாயம்?

UPSC - மத்தியத் தேர்வாணையம் எந்த ஒரு தேர்வையும் - அறிவியலுட்பட - ஆங்கிலத்திலும் எழுதலாம். தாய்மொழியிலும் எழுதலாம் என நடைமுறைப்படுத்தி முப்பதாண்டுகளுக்கு மேலாகிறது. காசி, அலிகார், பஞ்சாப் உட்படப் பிற மாநிலப் பல்கலைக்கழகங்கள் அனைத்தும், உச்சகட்டத் தேர்வு வரை எதனையும் ஆங்கிலம் மட்டும் என்னாமல் Either Hindi or English என்பது போல விதி வகுத்து, இரு விருப்பத்தார்க்கும் சம உரிமை நல்குகின்றனவே? தில்லியிலுள்ள மருத்துவம், பொறியியல் கல்வி ஆணையங்கள் இதைத் தடுக்கவில்லையே? 'மொழி' ஊடகம். அங்கு ஒரு பிரச்சினையில்லையே, அவர்கள் பின்பற்றுவது இருமொழிக் கொள்கையா? நாம் பின்பற்றுவதா? அண்ணா இருந்தால் பல்கலைக்கழக பி.எச்.டி., டி.லிட்., வரை இவ்விரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தி இருப்பாரே?

பிற மாநிலங்களில் தாய்மொழி மூலம் கற்று, ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மட்டும் கற்றவர்கள் நம்மை விடத் தெளிவாக ஆங்கிலம்

பேசுகிறார்களே? தாங்கள் போகும் நாடுகளுக்கு ஏற்ப ஜப்பானியம், ரஷியம், பிரெஞ்சு, இந்தி என அவ்வம் மொழி மூலம் தொடர்பு கொள்கிறார்களே?

தமிழகத்தில் மட்டுமே மாநில மொழியாம் தாய்மொழி தமிழை ஒரு பாடமாகக் கூடப் படிக்காமல் பட்டப்படிப்பு முடியப் படித்து வெளியேறும் நிலை உளது. இக் கொடுமையை யாரும் உணரவில்லையே? தமிழ் எண், எழுத்து, சொற்களஞ்சியம், உறவுப் பெயர், சுற்றுச்சூழல் பெயர் எதுவும் தெரியாமல், தாய்மொழி அடிப்படை இம்மி அளவுமில்லாமல், தமிழில் பேசினால் இழிவு என ஒரு நஞ்சையும் பிஞ்சு மனத்தில் விதைத்துப் பல ஆயிரம் நர்சரி, மெட்ரிக் பள்ளிகளை வளர விட்டு, வேடிக்கை பார்க்கும் திராவிடக் கட்சித் தலைவர்களைத் தமிழ்த்தாய் மன்னிப்பாளா?''

ஒரு வேடிக்கை தெரியுமா? செ. மாதவனும், தமிழண்ணலும் ஒரே (சிவகங்கை) மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பக்கத்துப்பக்கத்து ஊர்களைத் சேர்ந்தவர்கள். அந்த மாதவனுக்குத்தான் இந்தத் தமிழண்ணல் பதிலடி கொடுக்கிறார்.

அடுத்து பெ. மணியரசன் வெடிக்கிறார்.

''எதிர்கால வாழ்வுக்கு வழி'' என்ற தலைப்பில் செ. மாதவன் எழுதியிருந்த கட்டுரை (3.1.02) ஒட்டு மொத்த தமிழர்களின் எதிர்கால நலன் குறித்துக் கவலையுடன் எழுதுப்பட்டிருந்தது.

ஆனால், பயிற்று மொழியை மட்டும் பெற்றோர், மாணவர் ஆகியோரின் தனித்தனி விருப்பங்களுக்கேற்ப தேர்வு செய்து கொள்ள உரிமை வேண்டும் என்று அவர் வாதிடுகிறார். இதில் மட்டும் ஒட்டு மொத்தத் தமிழ்ச் சமூகத்தை, தமிழ்த் தேசிய இனத்தை ஓர் அலகாக வைத்துக் கொள்ளாமல் ஒவ்வொரு தனிநபரையும் ஓர் அலகாக வைத்து பயிற்று மொழிக் கொள்கை வகுக்கிறார். உலகில் எந்த சமூகத்திலும், எந்த தேசத்திலும் அவரவர் விருப்பத்திற்கேற்ப பயிற்று மொழியைத் தேர்வு செய்து கொள்ளும் கதம்பக் கொள்கை இல்லை. அந்தந்த தேசத்திற்கென்று மொழிக்கொள்கை இருக்கிறது.

எந்த நிலையில் எந்த வகைக் கலைத்திட்டத்தையும் பாடத்திட்டத்தையும் (Curriculum & Syllabus) மாணவர்களுக்குக் கொடுப்பது என்பதை வல்லுநர்களே முடிவு செய்கிறார்கள். அதுபோலவே, பயிற்றுமொழியையும் வல்லுநர்களே முடிவு செய்ய வேண்டும். தனிநபர் விருப்பத்திற்கு விடமுடியாது.

பொதுவாக, உலக சமூகத்தில், வேலைவாய்ப்பைத் தன் தாயகத்தில், தனது சமூக அமைப்பிற்குள் வழங்க வேண்டும் என்ற கடமையை முன்னிறுத்தித்தான் அரசியல், பொருளியல் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. அதைப்போலவே தனது தாய்மொழியை முன்னிறுத்தியே மொழிக் கொள்கை வகுக்கப்படுகிறது.

வெளிநாடுகளுக்குப் பறக்கும் சிறு தொகையினர் நலனுக்காக, தமிழ்நாட்டையே பெரிதும் நம்பியுள்ள மிகப் பெரும்பான்மையான மக்களுக்குரிய மொழிக் கொள்கையை வகுக்கக் கூடாது.

வேலை வாய்ப்பை ஒரு நாட்டின் சமூக அமைப்பு முறையும், அதன் வளர்ச்சியும் தீர்மானிக்குமே தவிர மொழியல்ல. எந்த மொழியும் வேலைவாய்ப்பை உற்பத்தி செய்து விடாது. இந்தி பேசும் மாநிலங்களில்தான் வேலையின்மை அதிகம். ஆங்கிலத்தின் தாயகமான இங்கிலாந்தில் வேலைவாய்ப்பு சுருங்கிவிட்டது.

மொழிப்பாடமாக ஆங்கிலத்தை ஆறாம் வகுப்பிலிருந்து கற்க வாய்ப்பிருக்கலாம். பயிற்று மொழியாகத் தமிழ் மட்டுமே இருக்க வேண்டும்."

தமிழ்ச் சான்றோர் பேரவையின் 'செய்தி மடலில்' தமிழண்ணல் கொதிப்புடன் எழுதுகிறார் (ஏப்ரல் 2002)

"நமக்கு வாய்த்த தமிழ்த்தாய்க்கு மட்டும் 'வாய்' இருந்தால், இவர்களின் செவிப்பறை கிழிய அறைந்து கேட்டிருப்பாள்.

"முதுகெலும்பில்லாதவர்களே! கடந்த முப்பதைந்து ஆண்டுகளாக ஓர் அங்குலமாவது என்னை முன்னேற்றியதுண்டா? முன்னிலும் கூடுதலாக நான் கல்விக்கூடங்களில் புறக்கணிக்கப்படுகின்றேன். இசையரங்குகளில் இன்னும் துக்கடாவாகவே உள்ளேன். கோயிலுக்குள் என்னை நுழையவிடவில்லை. 'ஆலயப்பிரவேசம்' அரிசனங்களுக்குக் கிட்டிய அளவு கூட, எனக்குக் கிடைக்கவில்லை. இந்திய மொழிகள் எல்லாம் உயர்கல்வி தொடங்கி துறைதோறும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

நான் இங்கு பின் தங்கியிருப்பது மட்டுமன்று, அவமானப்படுத்தப் படுகின்றேன். இழிவு படுத்தப்படுகின்றேன். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு, தமிழ் வாழ்க என்று கூவிக்கொண்டு, 'என் சீரிளமைத் திறம் வியந்து' பாடிச் 'செயல் மறந்து' கிடக்கின்றீர்களே? இது நியாயமா? என்னைச் சொல்லி, என் வளமான சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்தி வாழும் நீங்கள், மெட்ரிக் நர்சரிப் பள்ளிகளில் நான் ஒரு சூத்திர மொழியாக

அவமதிக்கப்படுவதை, மிகச் சாதுரியமாகப் பொறுத்துக் கொண்டிருக்கிறீர்களே? நன்றி சொல்லும் உய்தி உண்டா?" என்னு தமிழ்த்தாய் 'சாபமி'ட மாட்டாளா? 'சபிக்க' மாட்டாளா?

அவளைத் தெய்வமாக்கிவிட்டு, விளையாடும் ஒவ்வொரு தமிழனும் தான் இறந்த பிறகு, தமிழன் நிலை என்னாகும் என ஒருகாலமேனும் எண்ணிப் பார்க்க வேண்டாமா? பல கோடிப் பிள்ளைகள் தமிழாம் தாய்மொழியைச் சிறிதும் அறியாது வளர வாய்ப்பளித்து வரும் திராவிட அரசுகள், எதிர்கால வரலாற்றில் பழிப்பிற்கு இடமாவது உறுதியல்லவா?"

ஒட்டுமொத்தமாகத் திராவிட அரசுகளின் மீதே குற்றம் சுமத்துகிறார். ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டிய கருத்துகள்.

தாய்மொழி வழிக் கல்வி

குறிப்பிட்ட சில வரலாற்று உண்மைகளை முனைவர் இளமாறன் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவர் தரும் செய்திகளைப் பாருங்கள்

"அயலவரின் ஆளுமைக் கீழ் தமிழ்நாடு அல்லல் பட்ட காலத்திலும், தமிழ்நாட்டின் கல்வி மொழி (பயிற்று மொழி) தமிழாகவே இருந்தது. ஏன், நம்மை அடிமை கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலும் தமிழ் வழிக் கல்வியே தழைத்திருந்தது. ஆங்கிலேயர் தங்கள் நிருவாக வசதிக்காகவும், தங்கள் பிள்ளைகளின் கல்விக்காகவும் ஆங்காங்கே ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகளை நடத்தி வந்தனர் என்றாலும், தமிழ்வழிக் கல்வியைக் கெடுக்கவில்லை. தாய்மொழி வழிக் கல்வியே வலியுறுத்தி வந்தனர்".

இவ்வளவிருந்தும் இன்று ஆங்கில மோகம் தலை விரித்ததாடுகிறதே எப்படி?

அரசுப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் பணியமர்த்தப் படவில்லை; பலரை அவரவது தோதுக்கேற்ப மாற்றி மாற்றி, மேல்நிலைப் பள்ளியாக இருந்த ஒன்றை உயர்நிலைப்பள்ளியாகவே ஆக்கிவிட்டார்கள். (ஆலந்தூர் மேல்நிலைப்பள்ளி, 1991 -96) பல பள்ளிகட்குச் சரியான கட்டிடங்கள் இல்லை. சில பள்ளிகளில் சில வகுப்புகள் மரத்தடியில் நடத்தப் படுவதை இன்றும் பார்க்கலாம். கழிப்பறை வசதிகூட இல்லாத பள்ளிகள் பல திருவெண்காடு காரைக்கால் அம்மையாரால் புகழ்பெற்ற ஊர். அங்கு அறநிலையத்துறைக்கு 1000 ஏக்கர் நிலம். எல்லாம் நன்செய்ப்பகுதி. ஆனால் எந்த வருவாயும் வருவதில்லை.

அங்கு அறநிலையத் துறையின் சார்பில் ஆடவர், மகளிர் உயர் நிலைப் பள்ளிகள் இரண்டு. நான் அமைச்சர் பொறுப்பேற்றபின் என் பார்வையில் இவை பட்டன. மகளிர் உயர் நிலைப் பள்ளிக்கு ஒரு கழிப்பறை கூட இல்லை (1997). அதன்பின் ஒன்றியப் பெருந்தலைவராக இருந்த வை. ஞானசேகரனிடம் கூறி, அவரது முயற்சியால் ஒரு கழிப்பறை கட்டித் தரப்பட்டது. அதன்பின் பழனி கோயிலிலிருந்து உருபா 25 இலட்சம் கடனாகப் பெற்று, என் காலத்தில் மகளிர் உயர் நிலைப் பள்ளிக்குக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டன.)

இந்த நலிவினையும் மெலிவினையும் கண்ட தனியார் சிலர் தங்கள் சொந்தப் பொறுப்பில் தனியார் பள்ளிகளைக் கண்டனர். கட்டிடங்களை இவர்கள் கட்டிக் கொடுத்தார்கள். ஆசிரியர்கள், அலுவலர்கட்கான சம்பளத்தை அரசே ஏற்றுக் கொண்டது ((Government Aided Schools). இப்பள்ளிகளிலிருந்து எந்த ஆசிரியரும் மாற்றப் படுவதில்லை. ஒருவர் ஓய்வு பெறும் நிலையிலேயே புதிய ஆசிரியர் அமர்த்தப்படுவார். பள்ளியில் ஆசிரியர் இல்லை எனும் குறையே இல்லை. எனவே கல்வியின் தரம் தாழாமல் இவை முன்னிலை பெற்றன.

1975 இல் வந்த வினைதான் எல்லாவற்றையும் கெடுத்தது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் 'ஆங்கில நாடகம்' நடத்திக் கொண்டே நாட்டில் நுழைந்தன. இன்று?

இளமாறன் சில உண்மைகளை உணர்த்துகிறார்:

"அயலவரின் ஆளுமைக் கீழ் தமிழ்நாடு அல்லல் பட்ட காலத்திலும், தமிழ்நாட்டின் கல்வி மொழி (பயிற்று மொழி) தமிழாகவே இருந்தது. ஏன், நம்மை அடிமை கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலும் தமிழ் வழிக் கல்வியே தழைத்திருந்தது. ஆங்கிலேயர் தங்கள் நிருவாக வசதிக்காகவும், தங்கள் பிள்ளைகளின் கல்விக்காகவும் ஆங்காங்கே ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகளை நடத்தி வந்தனர் என்றாலும், தமிழ்வழிக் கல்வியைக் கெடுக்கவில்லை. தாய்மொழி வழிக் கல்வியே வலியுறுத்தி வந்தனர்."

1854 ஆம் ஆண்டு ஆங்கில அரசு வெளியிட்ட சார்ஸ்வுட் அறிக்கையில், ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை தாய்மொழியே கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1882 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஹண்டா கல்விக்குழு, தொடக்கக் கல்வி பொதுமக்கட்கான கல்வியாகும். தாய்மொழி வழியே அளிக்கப்படும்

தொடக்கக் கல்விதான் பொதுமக்களின் கல்வி நிலையை உயர்த்த உதவும். தொடக்கக்கல்வி வாழ்க்கைப் பயனுடையதாக அமைதல் வேண்டும். அது வட்டார வாழ்க்கைச் செயல் முறைகளுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும் என்று பரிந்துரை செய்தது.

1901 இல் இந்தியாவின் கல்வி நிலையை விவாதிக்க சிம்லாவில் இந்தியர்களை அழைக்காமல் ஆங்கிலேயர்களை மட்டுமே அழைத்த கர்சன் பிரவு ஒரு மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டின் முடிவுப்படி, 1902இல் இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கான குழு ஒன்று நிறுவப்பட்டது. அக்குழு ஆங்கிலப் பல்கலைக் கழகங்களைப் போன்று இந்தியப் பல்கலைக் கழகங்களின் அமைப்பில், பாடத்திட்டங்களை மாற்றி அமைத்தது. இருப்பினும் தொடக்கப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டியதில்லை என்றும், பதின்மூன்று வயதுக்குப் பின் ஆங்கிலம் கற்பிக்கப்படலாம் என்றும் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும் என்றும் அறிவித்தது.

1926இல் சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை, தாய்மொழி வழியாகக் கல்வி கற்பிக்கலாம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

1939இல் இராஜகோபாலாச்சாரியார் அமைச்சரவை உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்மொழியைப் பயிற்றுமொழியாக்கி ஆங்கிலத்தை அறவே நீக்கியது.

இவையெல்லாம் ஆங்கிலேயர் நம்மை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்ததாகும். ஆனால், ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்று, இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் ஆளத் தொடங்கியபோது தான் கல்வித் துறையில் தலைகீழ் மாற்றங்களே நிகழ்ந்தன. ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றவர்கள் அவர்களின் ஆங்கில மொழி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவிரும்பவில்லை"என்கிறார் அவர்.

நம் தமிழர்கள் எந்த அளவிற்கு இன்று அடிமை மோகத்தின் உச்சத்திற்கே போயிருக்கிறார்கள் என்பதனைக் காணும்போது தமிழகத்தை ஆண்ட எல்லா ஆட்சியாளர்களுமே இதில் போதுமான கவனம் செலுத்தாமல் - கண்டும் காணாமலும் - பொருட்சுவை உணர்ந்து கீழறுப்பு வேலைகள் செய்தும் தமிழ் வழிக் கல்வியை வீழ்த்தி விட்டார்கள் என்றே உறுதியாகக் கூறமுடியும்.

மும்பையில் உள்ள பள்ளிகளில் தமிழ்வழிக்கல்வி பயிலும் மாணவர்கள் தமிழக அரசிடமிருந்து இலவசப் பாடநூல்களை

வேண்டியிருந்தனர். 9.5.2001இல் தமிழ் வளர்ச்சி இயக்குநர் எழுதிய மடலுக்கு, ஏற்பளிக்கப் பெற்று 23.7.2002இல்தான் இசைவு வழங்கப்பட்டது. ஆணையிலேயே விவரம் உள்ளது.

பள்ளிக் கல்வி - மும்பையிலுள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

பள்ளிக் கல்வித்துறை

அரசாணை (நிலை) எண்.110
நாள் - 23.07.2002

படிக்கப்பட்டவை -

1. தமிழ்வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.2156/தமிழ் 1-2/2001, நாள்.9.5.2001
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் நேர்முகக் கடித எண்.30589/ஜெ.1/2001, நாள்.28.9.2001.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் நேர்முகக் கடித எண்.86534/ஜே5/2001, நாள்.19.10.2001

ஆணை:-

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மும்பை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தமிழ் வழி கல்வி கற்பிக்கும் 47 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் சிறப்புடன் நடைபெற்று வருவதாகவும் அதில் பயிலும் மாணவர்கள் அனைவரும் வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் என்றும், அம்மாணவர்களது நலனை கருத்திற்கொண்டு தமிழக அரசின் சார்பில் இலவசமாக பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பாடநூல்களை இலவசமாக வழங்கினால் தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவர்கள் பயன்பெறுவர் என பி.எம்.சி. தமிழ் ஆசிரியர்கள் வேண்டியுள்ளதாக குறிப்பிட்டு இவர்களது கோரிக்கையினை ஏற்று மும்பை மாநகராட்சிக்கு உட்பட்ட பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவர்கள் பயன் பெறத்தக்க வகையில் ஆண்டுதோறும் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு பாடத் திட்டத்திற்கும் உள்ள பாடநூல்களை

இலவசமாக வழங்கினால் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவர்கள் பயனடைவர் என்றும் நூல்களை வழங்கிட ஆவன செய்யுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்காணும் சூழ்நிலையில் இக்கோரிக்கையை ஏற்று மும்பை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தமிழ்வழிக் கல்வி கற்பிக்கும் 47 ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 1ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு பாடத்திற்கும் உள்ள பாடநூல்களை 50 செட் இலவசமாக வழங்குவதற்கு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் தன்னுடைய இலாபத்திலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்தச் செலவினம் ஒரே முறைதான் செயல்படுத்த இயலும் என்றும் இது தொடர் செலவினமாக அமையக்கூடாது என்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தமிழ்நாட்டுப் பாடநூல் கழக மேலாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது."

அண்மையில் முதல்வர் அறிவிப்பின்படி மும்பையில் பயிலும் 46320 தமிழ் மாணவர்கட்காக உருபா7.5 இலட்சம் செலவில் தமிழ்ப் பாடநூல்களை அனுப்பி வைக்க அரசு ஆணைபிறப்பித்தது. இந்த நூல்கள் ஆண்டுதோறும் வழங்கப்படும். அனைத்தும் மும்பை மாணவர்கட்கு இலவசப் பாடநூல்கள் ஆகும்.

கல்வித்துறை உருப்படவேண்டுமென்றால் அரசு உடனடியாக என்ன செய்யவேண்டுமென்று 'தினமலர்' தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. எல்லாரது கருத்தும் இதுவே என்பதால் அதனை அப்படியே படியுங்கள்.

"தமிழகத்தில் கல்வி வியாபாரமாக மாறியதைத் தொடர்ந்து தற்போது மூலை, முடுக்குகளில் எல்லாம் புற்றீசல் போல் தனியார் பள்ளிகள் இயங்கி வருகின்றன. பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இதுபோன்ற பள்ளிகள் துவங்கப்படுவதால் அரசு விதிமுறைகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு விடுகின்றனர்.

இதற்கு கல்வித்துறை அதிகாரிகளும், உள்ளூரில் கட்சி வித்தியாசம் இல்லாமல் அனைத்துக் கட்சி பிரமுகர்களும் உடந்தையாகச் செயல்படுகின்றனர். இவர்களின் ஒட்டுமொத்த முறைகேடான செயல்பாடுகளால் அப்பாவி மாணவர்கள் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

* தமிழகத்தில் அரசு ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மட்டும் 50 ஆயிரத்திற்கும்

அதிகமாக இயங்கி வருகின்றன. இதில் கிராமப் புறங்களில் உள்ள பெரும்பாலான பள்ளிகள் எந்தவித அடிப்படை வசதியும் இல்லாத நிலையில் தான் இன்றும் இயங்கி வருகின்றன.

* எல்.கே.ஜி., யு.கே.ஜி., முதல் ஐந்தாம் வகுப்பு வரை செயல்படும் 'நர்சரி பள்ளிகளின் எண்ணிக்கை 10 ஆயிரமாக உள்ளது.

இவற்றில் பெரும்பாலான பள்ளிகள் 'சத்துணவுக் கூடம்' போன்ற இடங்களில் தான் இயங்குகின்றன.

* ஆசிரியர் வேலைக்கு படித்துவிட்டு வேலை கிடைக்காத பட்டதாரிகள், சிறு தொழிலதிபர்கள், கட்சிப் பிரமுகர்கள் போன்றோர் அதிக அளவில் நர்சரி பள்ளிகளை நடத்துகின்றனர்.

இந்த பள்ளிகளில் அரசின் விதிமுறைகள் கடைபிடிக்காமல் இருப்பதற்கு உள்ளூரில் உள்ள கல்வி அதிகாரிகள் முக்கிய உடந்தையாக இருக்கின்றனர்.

பள்ளி நிர்வாகிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு, இந்த பள்ளியில் அனைத்து வசதிகளும் நன்றாக இருக்கிறது.

தாராளமாக அங்கீகாரம் வழங்கலாம் என்று உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்புகின்றனர்.

இதை வைத்து உயர் அதிகாரிகளும் கண்களை மூடிக்கொண்டு அங்கீகாரத்தை வழங்கி விடுகின்றனர்.

* அரசு நிதி உதவியுடன் செயல்படும் நர்சரிப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆயிரக்கணக்கில் இயங்கி வருகின்றன. இந்த பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குரிய சம்பளம் 'சுளையாக' வழங்கப்படுகிறது. நிர்வாகச் செயல்பாடுகள் மற்றும் மாணவர்களுக்காக ஆண்டுதோறும் தமிழக அரசு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கீடு செய்து வழங்குகிறது.

* இந்த நிதியை பெறும் பள்ளி நிர்வாகத்தினர் பணத்தை உரிய வழியில் செலவு செய்யாமல் தங்கள் 'பாக்கெட்டுகளில்' போட்டுக் கொள்கின்றனர். பள்ளிகளுக்கு தேவையான வசதிகளைச் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை.

* அரசுப் பள்ளிகளுக்கு அடுத்தாக மெட்ரிக் பள்ளிகள் மிக அதிக எண்ணிக்கையில் இயங்கி வருகின்றன. சுயநிதியில் இயங்கும் நர்சரிப்

பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் 15 ஆயிரத்திற்கும் அதிகமாக இயங்கி வருகின்றன.

* மெட்ரிக் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மூன்றாயிரத்து 244 என அரசு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* மெட்ரிக் பள்ளி இயக்குனரகம் சில மாதங்களுக்கு முன்பு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மெட்ரிக் பள்ளிகளின் பட்டியலை வெளியிட்டது.

கடந்த மே மாதம் 10ம் தேதி வரையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளின் பெயர்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

* மாடி கூரை கொட்டகையில் இயங்கும் பள்ளிகள், காற்றோட்டம் இல்லாத அடுக்கு மாடி குடியிருப்புகளில் பெயர் பலகையை மாட்டிவிட்டு அங்கீகாரம் கேட்ட பள்ளிகள், விளையாட்டு மைதானம், விசாலமான வகுப்பறைகள் இல்லாத பள்ளிகள் ஆகியவற்றுக்கு அங்கீகாரம் வழங்க இயக்குனரகம் மறுத்துவிட்டது.

* இப்படி அங்கீகாரம் மறுக்கப்பட்ட பள்ளிகளின் பெயர் பட்டியலை இயக்குனரகம் வெளியிடவில்லை. 'உரிய வசதிகளை செய்த பிறகு அங்கீகாரத்திற்கு விண்ணப்பியுங்கள்' என்று அறிவுரை மட்டும் கூறி விட்டுவிட்டனர்.

* அங்கீகாரம் கிடைக்காத பள்ளி நிர்வாகங்கள் இதுவரை பள்ளிகளை மேம்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பள்ளிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இவர்கள் மீது இயக்குனரகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

* அங்கீகாரம் மறுக்கப்பட்ட பள்ளிகள் அனைத்திலும் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இந்த பள்ளிகளில் தான் மாடி கீற்றுக் கொட்டகைகள் போடப்பட்டு வகுப்புகள் நடந்து வருகின்றன. குறிப்பாக, அடிப்படை வசதிகள் மற்றும் மாணவர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை என எதுவுமே இல்லாத காரணத்தினால்தான் அங்கீகாரம் வழங்க இயக்குனரகம் மறுத்துவிட்டது.

* இப்படிப்பட்ட பள்ளிகளில் தற்போது பயின்றுவரும் மாணவர்களின் 'கதி' என்ன வென்று தெரியவில்லை.

அங்கீகாரம் மறுக்கப்பட்ட பள்ளிகளை கணக்கெடுத்து உடனடியாக அவற்றை மூடுவதற்கு அரசு உத்தரவிடவேண்டும்.

இந்த பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையெனில், மீண்டும் ஒரு 'கும்பகோணம் நிகழ்வு' எங்கேயாவது ஏற்படலாம்.

* எனவே, கல்வித்துறையில் 'களை' எடுக்கும் பணியினை தமிழக அரசு உடனடியாக துவக்க வேண்டும் என்பது பெற்றோர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

* தனியார் பள்ளிகளை பொறுத்தவரை அரசுவகுத்துள்ள விதிமுறைகள் படி இயங்கும் பள்ளிகளை மட்டும் விட்டுவிட்டு மற்ற அனைத்து பள்ளிகளையும் உடனடியாக இழுத்து மூடுவதற்கு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட வேண்டும்.

* மாநிலம் முழுவதும் எல்.கே.ஜி., முதல் 12ம் வகுப்பு வரை செயல்படும் அனைத்துப் பள்ளிகளையும் கணக்கெடுத்து சரியான பள்ளிகளின் பெயர் பட்டியலையும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட பெயர் பட்டியலையும் அரசு வெளியிடவேண்டும்.

* அரசின் உத்தரவை மீறி அரை குறையாக பள்ளிகளை நடத்தும் நிர்வாகிகள் மீது 'கிரிமினல்' நடவடிக்கை எடுக்கவேண்டும். முழு வீச்சில் 'களை' எடுக்கும் பணியை அரசு செய்தால் தான் கல்வித்துறை உருப்படும்.''

இவ்வளவு செய்திகளுக்குப்பின்னால் கும்பகோணத்தின் ஒரு பள்ளியில் மிகப்பெரிய தீவிபத்து. 94 குழந்தைகள் வாடி வதங்கி, ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடி கரிக்கட்டைகளாய் எரிந்து கிடந்தனர். இச்செய்தி உலகம் முழுவதும் பரவிவிட்டது. வெளிநாட்டுப் பிரதமர்கள் பலர் தமிழக முதல்வர்க்கு இரங்கல் தெரிவித்தனர். தமிழக முதல்வர் ஓடோடிச் சென்று பார்த்துக் கண்கலங்கினர் ஒவ்வொரு குழந்தையின் குடும்பத்துக்கும் நிதியுதவி வழங்கினர். தமிழ்நாட்டில் எந்தப் பள்ளியில் கூரைக்கொட்டகை இருந்தாலும் பிரித்து எறியும்படி கட்டளையிட்டார். எல்லா அரசியல் தலைவரும் நேரில் சென்று ஆறுதல் வழங்கினர். குடியரசுத் தலைவரே குடந்தை சென்று கண்கலங்கினார். அங்கு நடந்ததைப் பல இதழ்கள் எழுதின. 'ஞானி' விரிவாகவே ஒரு கட்டுரை எழுதினார்.

'தினகரன்' எழுதுகிறது (18.9.2004)

**“குடோன் போல் இருந்த கட்டிடத்தில் செயல்பட்ட 3 பள்ளிகள்''**

தீ விபத்து நடந்த குடந்தை பள்ளியில் சரஸ்வதி நர்சரி பள்ளி, ஸ்ரீகிருஷ்ணா உதவி பெறும் தொடக்கப்பள்ளி, ஸ்ரீகிருஷ்ணா பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகிய 3 பள்ளிகளும் ஒரே கட்டிடத்தில் ஒரே நிர்வாகத்தின் கீழ்செயல்பட்டு வந்தது. குடோன்போல் சிறியதாக இருக்கும் இந்த பள்ளி ஒரு வீட்டு மனை பரப்பு (சுமார் 5 ஆயிரம் அடி பரப்பில்) இருந்தது குறிப்பிடத்தக்கது. பள்ளியின் பிரதான வாசலோ ஒரு ஆள் சென்று வரும் அளவுக்கு குறுகலாக இருந்தது என்றால் மாடி கட்டிடத்தில் உள்ள வாசல் எந்த அளவுக்கு இருக்கும் என்று யூகிக்க முடிகிறது அல்லவா?''

அரசு உதவிபெறும் பள்ளிகள் இரண்டை நடத்தினாலும் புலவர் பழனிச்சாமிக்கு ஆசை தாளவில்லை. அதனால்தான் வாணிபக்கடை ஒன்றினை அதே கட்டிடத்தில் தொடங்கியுள்ளார். அதுதான் சரசுவதி நர்சரி பள்ளி! புலவர்க்குக் கற்பனையெல்லாம் நன்றாகவே உள்ளது. கல்விக்குத் தெய்வமாக இவர்கள் கருதிக்கொண்டிருக்கும் 'சரசுவதி' பெயரையே பள்ளிக்கு வைத்தால்தான் சரசுவதியே நேரில் இறங்கி வந்து ஒவ்வொரு மாணவ, மாணவிகள் நாவிலும் வந்து அமர்வாள் என்று இவர்களுக்கு நம்பிக்கை! ஆனால் 16.7.2004இல் இறங்கிவந்தது 'அக்னிபகவான்' அல்லவா?

புலவர் பழனிச்சாமியின் கற்பனைக்குள் விளைந்த பள்ளி - கல்விக்கான விற்பனைக் கூடமாக இயங்கியதால் தான் இந்த நிலை!

அமெரிக்காவில் வாழும் தமிழ் எழுத்தாளர் காஞ்சனா தாமோதரன் எழுதுகிறார் (தினமணி:21.9.04)

1. கும்பகோணம் பள்ளியில் நடந்த தீ விபத்து பற்றிய விவரங்களும் புகைப்படங்களும் இணையம் மூலம் கிடைத்தன. பிள்ளைகளை இழந்த பெற்றோருக்கு ஆறுதல் சொல்ல எம்மொழியிலும் வார்த்தைகள் இல்லை.

இந்த விபத்தையடுத்து பல நடவடிக்கைகளை அரசு எடுக்க ஆரம்பித்திருப்பதாகவும் தமிழ்நாட்டிலுள்ள பிற பள்ளிகளை ஆய்வு செய்யப் போவதாகவும் அறிகிறேன்.

2. குடியிருப்புப் பகுதிகளில் (Residential Zone) ஒரு பெரிய வீட்டைப் பள்ளியாக மாற்றுவது என்பதே அடிப்படையில் தவறு. இத்தகைய வீடுகளின் முன்னும் பின்னும் பெரிய திறந்த வெளிகள் கிடையாது. தாழ்வாரங்கள் கிடையாது. பல நேரங்களில், தீயணைப்புப் படை எளிதாக நுழையும் வசதியுள்ள வீதிகளில் இவை இருப்பதில்லை. இத்தகைய

கட்டடங்களைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அனுமதி / உரிமம் (licence) வழங்கலாமா என்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்வது அத்தியாவசியம்.

3. கல்வித்துறையும் பள்ளி நிர்வாகமுமே எல்லாவற்றுக்கும் பொறுப்பு, நேர்மை முக்கியம்.

4. பிறரது அலட்சியத்திலும் பேராசையிலும் நேர்மையின்மையிலும் எரிய வேண்டியது பிள்ளைகளா? தமிழ்நாடு முழுதும் உள்ள பள்ளிகள் அனைத்தும் எந்த அளவுக்கு இந்தப் பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றன என்று சோதனை போட வேண்டும். தேறாதவற்றின் உரிமங்களை ரத்து செய்து, கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு மாதம் மனமார வருந்தி விட்டு, பிறகு மறக்கும் விஷயம் அல்ல இது.

5. வேரின் நோயை முழுமையாய்க் குணப்படுத்துவதே சரி. அந்தப் பெரும் நோய் என்ன? பள்ளிக் கல்வி வியாபாரமானதும் பள்ளிக் கல்விக்கு அரசிடமிருந்து போதிய கவனம் கிட்டாததும்தான். அடிப்படைப் பள்ளிக் கல்வியின் சமூக விளைவுகளும் பலன்களும் ஆழமானவை. அடிப்படைப் பள்ளிக் கல்வியை கட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதாரமாக (unregulated free marketplace) அனுமதிப்பது சரியல்ல. கட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதாரத்தில் பிள்ளைகளின் நலம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகிறது என்பது அமெரிக்கச் சமூகத்தின் அனுபவப் பாடம்.

6. அமெரிக்காவில் அரசுப் பள்ளிகளே பெரும்பான்மையானவை. இவை அந்தந்த ‘வட்டத்தில்’ வாழும் மக்களின் வரிப்பணத்தில், அரசு நிதியில் நடப்பவை, அரசு தரும் நிதி போதவில்லை என்ற குரல்கள் எழுந்தாலும், அமெரிக்கப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு (‘இன்ஃப்ராஸ்ட்ரக்சர்’) வலுவாக இருக்கிறது. இது நம் தாயகத்தில் போதிய அளவில் இல்லை. உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் (‘க்ராஸ் டொமஸ்டிக் ப்ராடக்ட்’டில்) கல்விக்கென இந்திய அரசு செலவிடுவது மிகவும் குறைவு. பள்ளிக் கல்விக்கு 1.7%; மொத்தக் கல்விக்கு 3.4%.

7. தமிழ்நாடு அரசு தனது இணையதளத்தில் தான் மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றித் தெரிவித்தால், என்போன்ற அயல்வாழ் இந்தியர்கள் தொடர்ந்து உதவி செய்ய வசதியாக இருக்கும்.

8. அடுத்த தலைமுறையாவது அரும்பில் கருகாமல் வளரவேண்டும். வணிகமற்ற பாதுகாப்புள்ள கல்வி என்பது நம் பிள்ளைகளின் அடிப்படை உரிமை.

அமெரிக்காவில் அரசுப் பள்ளிகளே பெரும்பாலானவை என்பதையும் அவை எத்தகைய சிறப்புடன் திகழ்கின்றன என்பதையும் நாம் உணர முடிகின்றது. இவை நம் நாட்டிலும் தொடர எத்தனை ஆண்டுகள் ஆகுமோ?

## எரிந்தது பிஞ்சுகளின் உடல்கள் மட்டுமல்ல. . . . கல்வித் துறையின் சட்டதிட்டங்களும் தான்

தினமலர் இந்தத் தலைப்பில் தரும் செய்திகளைப் பாருங்கள்.

1. இதுபோன்ற கோர சம்பவங்கள் நடக்க யார் காரணம். பள்ளி நிர்வாகிகளும், அதிகாரிகளும் மட்டும்தானா? இல்லை. தோண்டித் துருவி பார்த்தால், இந்த அசம்பாவிதம் நடக்க ஒரு அரசியல்வாதி பின்னணியாக இருப்பார். அரசியல்வாதிகள் பணம் கிடைத்தால் போதும் என்ற நிலையில் எல்லா முறையற்ற செயல்களுக்கும் உடன் போகிறார்கள்.

அதுபோன்று ஒரு அரசியல்வாதி செயல்பட்ட காரணத்தினால்தான் இத போன்ற அசம்பாவிதம் நடந்திருக்கிறது என்பதை உறுதியாக கூற முடியும். இன்றைக்கு அரசியல்வாதிகள் பல கல்வி நிறுவனங்களை நடத்தி வருகின்றனர். அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டுள்ள இவர்கள் எப்படி கல்வித்துறையின் சட்ட, திட்டங்களை மதிப்பார்கள்.

2. முறையற்ற வகையில் செயல்படும் பள்ளிகள் என்றால் அவற்றின் அங்கீகாரத்தை அந்த அதிகாரிகள் ரத்து செய்யவேண்டும். ஆனால், நடைமுறையில்ஒரு ஆண்டுக்கு ரூயாய் ஆயிரத்து 500 என ரூபாய் 4ஆயிரத்து 500 லஞ்சம் பெற்றுக்கொண்டு, முறையற்ற பள்ளிகள் தொடர்ந்து செயல்பட சில அதிகாரிகள் அனுமதி கொடுத்துவிடுகின்றனர்.

3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் அனுமதிக்கு ரூபாய் 60 ஆயிரமும், மேல்நிலைப்பள்ளி அனுமதிக்கு ரூபாய் ஒன்றரை லட்சமும் கல்வி அமைச்சர் அலுவலகத்தில் பெறப்படுவதாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து போதுமான அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத ஒரு பள்ளிக்கு அரசு அனுமதி கிடைக்கிறது. இப்படித்தான் இப்போது செயல்பட்டு வரும் பல பள்ளிகள் அனுமதி பெற்றுள்ளன. இந்த வகையில் கிராமங்களில் செயல்படும் பள்ளிகள் அதிக ஆபத்து இல்லாதவையாகவே இருக்கின்றன என்பதை குறிப்பிடவேண்டும்.

4. இன்றைக்கு எடுத்துக்கொண்டால் நகரங்களில் உள்ள் அபார்ட்மெண்ட்டுகளில் கூட பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவ்வாறு இயங்கும் பெரும்பாலான பள்ளிகள் நர்சரி பள்ளிகள்தான். 3 முதல் 8 வயது

வரை உள்ள பிஞ்சுகள் தான் இப்பள்ளிகளில் படித்து வருகின்றனர். அதேபோல, மிகவும் குறைவான இடவசதி உள்ள கட்டடங்களிலும் மெட்ரிகுலேசன் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் என ஏராளமான பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. சில நகரங்களில் 2 கிரவுண்ட் இடத்தில் மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இங்கெல்லாம் ஒரு விபத்து ஏற்பட்டது என்றால், அது கும்பகோணம் விபத்து மாதிரி தான் ஆகுமே தவிர, மாணவ, மாணவிகள் தப்பிக்க வழியில்லை. என்ன தான் பணம்கொடுத்து ஒரு பள்ளியை துவக்க அனுமதி கொடுத்தாலும், அவை சிறப்பாக பராமரிக்கப்படுகிறதா என்பதை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிகாரிகள் ஆய்வுசெய்து, பள்ளியின் அங்கீகாரத்தை புதுப்பிக்க வேண்டும் என்பது விதி.

5. மொத்தத்தில் அடிமட்டத்தில் இருந்துமேல் மட்டம் வரையில் நடந்து வரும் ஊழல் சாம்ராஜ்யம் தான் விதிமுறைகளை மீறி இயங்கி வரும் பள்ளிகள் பெருக காரணம் ஆகிறது.

“கும்பகோணம் கொடுமைக்குக் கீற்றுக் கொட்டகை மட்டும் காரணமா?

எனும் தலைப்பில் ஞாநி சில செய்திகளை அலசியிருக்கிறார் (சூனியர் விகடன்)

1. குடந்தையில் சாம்பலாகிப் போன சின்னஞ்சிறு தளிர்கள், எந்த நாளிலும் நமக்குச் சொல்லப்போவதில்லை எப்படி அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று!

இளம் குருத்துகளுடன் சேர்ந்து சாம்பலான முதிர்ந்த தென்னங்கீற்றுகளுக்கு வாய்(ப்பு) இருந்தால் அவை நிச்சயம் புலம்பும், ‘பச்சிளம் பாலகர்களைக் கொன்ற பழியை எங்கள் மீது சுமத்திவிட்டு, நீங்கள் எல்லோரும் தப்பிக்கப் பார்க்கிறீர்களே’ என்று!

2. காரணம்.... கீற்றுக்கூரை அல்ல.. தப்பிச் செல்ல பல வழிகள் இல்லாமல், ஒற்றை வழி மட்டுமே இருந்த குறுகலான கோடௌன் போன்ற, ஆடுகளை அடைக்கும் பட்டி போன்ற நெருக்கடியான அமைப்புதான். ஆனால், கீற்றுக் கூரையை வில்லனாக்கி, இன்னும் பத்து நாட்களுக்குள் எல்லா கீற்றுக் கூரைகளும் அஸ்பெஸ்டாஸ், தகர, கான்க்ரீட் கூரைகளாக மாற வேண்டுமென்று கெடுபிடி செய்து அரசு உத்தரவிடுகிறது.

3. உண்மையில் மக்கள் கவனம் உண்மைகளை அறியவிடாவண்ணம் திசை திருப்பப்படுகிறது. அந்த உண்மைகள் தெரிந்தால், குடந்தையில் குழந்தைகளைக் கொன்றது கீற்றுக் கூரையல்ல, கடந்த

பதினைந்தாண்டுகளாக அரசு காட்டிய அலட்சியமும் மெத்தனமும்தான் என்பது அம்பலமாகிவிடும்.

மழலையர் கல்விக்கு அடிப்படையானவை மூன்று. விளையாட்டின் மூலம், கல்வி, விசாலமான இடவசதி, தேர்ச்சியுடைய ஆசிரியர்கள். இந்த மூன்றும் 99 சதவிகித நர்சரிப் பள்ளிகளில் இல்லை. ஆனால், இவை இருக்கிறதா இல்லையா என்று கவனிக்க வேண்டிய பொறுப்பு அரசுடையது. அந்தப் பொறுப்பை தமிழக அரசு எப்படி நிறைவேற்றியிருக்கிறது.

4. நர்சரிப் பள்ளி ஆசிரியராவதற்கு என்ன தகுதி?
எதுவும் தேவையில்லை!

5. எட்டாவது படித்த, பத்தாவது அல்லது பிளஸ் டூ படித்த பல பெண்களுக்கு வீட்டுக்கருகில் இருக்கும் நர்சரிப் பள்ளியில் 500 ரூபாய் சம்பளத்தில் டீச்சராகிவிடுவது, வசதியாக இருக்கிறது. பயிற்சியில்லாத இவர்களை வேலைக்கு வைப்பது நர்சரிப் பள்ளி உரிமையாளருக்கும் வசதி. குழந்தைகளைப் பற்றி யாருக்கும் கவலையில்லை. தீ விபத்து ஏற்பட்டால், அவர்களை வெளியேற்றாமல் வகுப்புக்குள்ளேயே வைத்து கிரில் கேட்டைப் பூட்டி விட்டுப் போய்விடும் அளவுக்குத்தான் இந்த டீச்சர்களின் 'ஐ.க்யூ' இருக்கிறது.

6. ஆங்கில மோகத்தின் அடிப்படையில் இயங்கும் இந்த சுமார் இருபதாயிரம் பள்ளிகளுக்கு மாற்றாக தமிழகமெங்கும் குழந்தைகள் மீதும் 'விளையாட்டின் மூலம் கல்வி' என்ற முறையின் மீதும் ஆழ்ந்த அக்கறை உடைய தாய்மொழி வழிக் கல்விப் பள்ளிகள் சுமார் எழுபது இருக்கின்றன. மிகக் குறைந்த கட்டணத்தில் நடக்கும் இவை பெரும்பாலும் கூரைக்கொட்டைகையிலேயே நடக்கின்றன. ஆனால், குறுகிய கட்டடங்களில் அல்ல. திறந்த வெளியில், விசாலமாக நடக்கின்றன. அரசின் புதிய கெடுபிடியால் இவற்றில் பல மூடப்படும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

7. நர்சரிப் பள்ளிகள் தமிழ்நாட்டில் போதிய இட வசதி, பயிற்சியும் தகுதியும் உள்ள ஆசிரியர்கள் இல்லாமல் நடப்பதை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்காதது மட்டும் அல்ல. எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்து அரசே நியமித்த கமிட்டிகளின் அறிக்கைகளையும் கிடப்பில் போட்டுவிட்டது.

8 முன்னாள் துணை வேந்தரும் பள்ளிக் கல்வி அனுபவம் உள்ள கல்வியாளருமான எஸ்.வி. சிட்டிபாபு தலைமையில் 1991-ல் போடப்பட்ட

கமிட்டியின் அறிக்கையில் நர்சரிப் பள்ளிகளின் எல்லா குறைபாடுகளைப் பற்றியும் அலசி ஆராய்ந்து பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை கடந்த 13 ஆண்டுகளில் மாறி மாறி ஆட்சியில் இருந்த கருணாநிதி அரசும் சரி, ஜெயலலிதா அரசும் சரி நிறைவேற்றவே இல்லை.

9. அங்கீகாரம் (Recognition) என்ற சொல் இதர நிதி உதவி பெற்ற அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளுடன் இவற்றைச் சமமாக்கிவிடும் என்பதால், அரசு நிதி உதவி இல்லாத, அங்கீகாரமும் இல்லாத இந்த நர்சரிப் பள்ளிகள் நெறிமுறைப்படி மனு செய்யும்போது, (Approved) அதாவது 'ஒப்புதல் பெற்ற' என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்று கமிட்டி கூறியது.

10. இனி கமிட்டியின் நெறிமுறைகள் :

கூட்டம் : "எளிதில் தீ பிடிக்கக்கூடிய ஓலைக்கூரை கட்டடங்களோ, குழந்தைகளின் உடல்நலனுக்கு ஆபத்தான துத்தநாக, அஸ்பெஸ்டாஸ் கூரைக் கட்டடங்களோ தவிர்க்கப்படவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் அறையின் அளவு, குழந்தைகளின் எண்ணிக்கை என்ன என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அதுவே இங்கும் பின்பற்றப்படவேண்டும். கட்டடத்தின் ஸ்திரத்தன்மை குறித்த சான்றிதழ் பொதுப்பணித் துறையிடமிருந்தோ, அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரிடமிருந்தோ பெறவேண்டும்.

மைதானம் : விளையாட்டுக்கான மைதானம் இல்லாமல் பள்ளி இருப்பதில் அர்த்தமே இல்லை. முப்பது குழந்தைகள் இருந்தால் அந்த நர்சரியில் குறைந்தபட்சம் 15x20 அல்லது 30 சதுர மீட்டர் விளையாடுமிடம் இருக்கவேண்டும்.

ஆசிரியர் நிலை : எழுபது சதவிகிதத்துக்கும் மேல் பயிற்சி இல்லாத ஆசிரியர்களே நர்சரிகளில் இருந்து வரும் நிலையில், அவர்களையெல்லாம் உடனடியாக வெளியேற்றினால், கல்விமுறையே ஸ்தம்பித்து விடும். எனவே அவர்கள் எல்லாரையும், பணியில் இருக்கும்போதே முறையான பயிற்சி பெற, கல்வித்துறையின் கற்பித்தல் - ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும் பயிற்சி வகுப்புக்கு அனுப்பவேண்டும். எல்லா ஆசிரியர்களையும் இப்படி பயிற்சி பெறச் செய்தாக வேண்டும். புதிதாக நியமிக்கும் எந்த ஆசிரியரும் பயிற்சி பெறாதவராக இருக்கக்கூடாது.

குறைந்தபட்ச சம்பளம் : பயிற்சி பெறாத எஸ்.எஸ்.எல்.சி. படித்த ஆசிரியருக்கு குறைந்தபட்சம் ரூ.650. பட்டதாரிக்கு ரூ.1400. பயிற்சி

பெற்றபின் புதிய சம்பள விகிதம் இதர ஆசிரியர்களைப் போன்று அரசால் நிர்ணயிக்கப்படலாம். (1992ல் பெரும்பாலோர் ரூ.500க்கும் கீழே சம்பளமாகப் பெற்றபோது சொல்லப்பட்ட பரிந்துரை)

நிர்வாகம் : எல்லா பள்ளிகளும் பதிவு செய்யப்பட்ட கமிட்டினால்தான் நிர்வாகம் செய்யப்பட வேண்டும்.

கல்விமுறை : எல்லா நர்சரிப் பள்ளிகளும் விளையாட்டின் மூலம் கல்வி என்ற முறையையே பின்பற்ற வேண்டும். இதில் அனுபவம் உள்ள ஆறுநிறுவனங்களில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து சர்ட்டிஃபிகேட் தரலாம்.

11. மேலே சொன்ன பரிந்துரைகளை தமிழக அரசு கடந்த 12 ஆண்டுகளில் நிறைவேற்றியிருந்தால், கும்பகோணத்தில் ஒரு குழந்தைகூட இறக்கும் நிலையே ஏற்பட்டிருக்காது. கூரைக் கட்டடம் இருந்திருக்க முடியாது. பயிற்சி இல்லாத ஆசிரியர்கள் இருந்திருக்க முடியாது. மைதானமோ, விளையாடுமிடமேமா இல்லாமல் நர்சரியே நடத்தியிருக்கமுடியாது.

12. அங்கீகரிக்கப்பட்ட மழலையர் மற்றும் ஆரம்பப்பள்ளிகளுக்கான நெறிமுறை விதிக் கோவையின் 8-ம் விதியின்படி குழு ஒன்றை அரசாணை மூலம் மார்ச் 20, 2000-ல் தமிழக அரசு அமைத்தது. அதாவது சிட்டிபாபு குழு பரிந்துரைகள் வந்தபிறகு.

13. குழுவின் முப்பத்தெட்டு உறுப்பினர்களில் புகழ் பெற்ற கல்வியாளரும் முன்னாள் தலைமை ஆசிரியருமான எஸ்.எஸ். ராஜகோபாலன் பெயரும் இருந்தது. இந்தக் குழு இதுவரை என்ன செய்தது என்று அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் சொன்ன பதில் அதிர்ச்சியாக இருந்தது. இப்படி ஒரு குழு 2000-த்தில் அமைக்கப்பட்டதோ, இதுவரை அவருக்குத் தெரிவிக்கப்பட்டதே இல்லை என்றார்.

இதுதான் பள்ளிகள் விஷயத்தில் அதுவும் நர்சரிப் பள்ளிகள் விஷயத்தில் நமது தமிழக அரசு இயங்கிவரும் லட்சணம்.

அரசாங்கம் போடுகிற கமிட்டியை தனியார் பள்ளி நிர்வாகங்கள் மதிப்பதுகூட கிடையாது என்பது திரும்பத் திரும்ப உறுதியாகிக்கொண்டே இருந்தது.

14. கட்டட வசதியை எடுத்துக்கொண்டால் 24 சதவிகிதப் பள்ளிகளுக்கு ஒழுங்கான கட்டடம் கிடையாது. பத்தாயிரம் சதுர அடி அளவுக்கு மேல் கட்டடம் இருந்த பள்ளிகள் நகரத்தில் 21 சதவிகிதம். கிராமத்தில் 18 சதவிகிதம்.

ஆனால், மாணவர்களுக்கான கழிப்பறை வசதி 81 சதவிகித ஆண்கள் பள்ளிகளில் கிடையாது. 72 சதவிகிதப் பெண்கள் பள்ளிகளில் கிடையாது. அங்கெல்லாம் திறந்த வெளியைக் கழிப்பறையாகப் பயன்படுத்தவேண்டிய கொடுமைதான் நீடிக்கிறது!

15. மெட்ரிகுலேசன் படிப்பைத் தரமான கல்வி என்று சொல்லிக் கொண்டாலும் கூட, இந்தப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களில் பாதிக்கு மேல் (57 சதவிகிதம் பேர்) பயிற்சி இல்லாத ஆசிரியர்கள்தான் என்கிறது சிட்டிபாபு கமிட்டி.

16. சம்பள விஷயமும் மோசம். ஆயிரம் ரூபாய்கூட மாதச் சம்பளம் இல்லாத ஆசிரியர்கள் 28.62 சதவிகிதம் பேர். இரண்டாயிரம் வரை வாங்கியவர்கள் 38.42 சதவிகிதம் பேர். ஐந்தாயிரத்துக்கு மேல் சம்பளம் கிடைத்தது வெறும் 3.63 சதவிகிதம் பேருக்குத்தான். பத்தாயிரத்தைத் தாண்டியவர்கள் 0.42 சதவிகிதம். மொத்தக் கணக்கில் இரண்டாயிரம் ரூபாய்க்கு குறைவான சம்பளம் பெறும் ஆசிரியர்கள் எண்ணிக்கையே அதிகம் - சுமார் 67 சதவிகிதம்.

மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிப்பதில் எதிர்மாறான நிலை. எல்.கே.ஜி., யு.கே.ஜி., முதல் வகு.ப்புக்கெல்லாம் இரண்டாயிரம் ரூபாய் வரை வசூலித்த பள்ளிகள் சுமார் 40 சதவிகிதம். பிளஸ்டூ லெவலில் ஐந்தாயிரத்துக்கும் மேல் கட்டணம் வசூலித்த பள்ளிகள் சுமார் 50 சதவிகிதம்.

17. சிக்கல், தும்பை விட்டு வாலைப்பிடிக்கும் அரசின் அணுகுமுறைதான். நர்சரிப் பள்ளிக் குழந்தைகள் விபத்தில் இறப்பது ஒரு சில வருடங்கள் முன்பும் நடந்தது. அப்போது அரசு என்ன செய்தது.

18. ஜூன் 23, 1995-ல் இந்தச் சம்பவம் திண்டிவனம் அருகே ஒரு கிராமத்தில் நடைபெற்றது. நர்சரிப் பள்ளிக்கு சைக்கிள் ரிக்ஷாவில் சென்றுகொண்டிருந்த இந்த 16 குழந்தைகளும் (ஒரே ரிக்ஷாவில்) கிராமப்பாதையில் இருந்த பெரிய துரவுக்கிணற்றில் ரிக்ஷா விழுந்ததில் மூழ்கி இறந்தார்கள். தீ மட்டுமல்ல, தண்ணீரும் கொல்லும். காற்றும் கொல்லும். எதுவும் கொல்லும். நாம் விழிப்பாக இல்லாவிட்டால்!

19. திண்டிவனம் பகுதியின் குடிசைப்பாளையம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இருக்கிறது. அடுத்த கிராமமான காட்டு சீவரியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உண்டு. ஆனால், ஏன் இந்தக் கிராமங்களிலிருந்து 16 குழந்தைகள் அவற்றில் சேராமல் ரிக்ஷாவில்

பயணித்து திண்டிவனம் கான்வெண்ட்டுக்கு செல்லும்படி அனுப்பப்பட்டார்கள்? ஆங்கில மோகம்தான்.

20. பெற்றோர்கள் விரும்புகிறார்கள் என்பதால்தான் நாங்கள் ஆங்கில மீடியம் அளிக்கிறோம் என்ற பள்ளி நிர்வாகங்கள் வாதத்தை கமிட்டி ஏற்கவில்லை. தாய்மொழியில் கற்பதுதான் குழந்தையின் வளர்ச்சிக்கு நல்லது என்று காந்தி முதல் தாகூர் வரை உலகளாவிய அறிஞர்கள் கருத்தைப் பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஏற்கச்செய்யும் கடமை பள்ளி நிர்வாகங்களுக்கு உண்டு என்று கமிட்டி சுட்டிக் காட்டியது.

21. அரசு செய்ததெல்லாம் ஒன்று கமிட்டி போடுவது, அல்லது ஏதேனும் ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதைக் காரணம் காட்டி, அடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது!

22. இப்போதும் அடிப்படைப் பிரச்னைகளை ஒதுக்கிவிட்டு கீற்றுக் கூரை போன்ற மேலெழுந்தவாரியான காரணங்களை முன்னிறுத்திய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உண்மையில் சிட்டிபாபு கமிட்டி பரிந்துரையை நிறைவேற்றும் தாய்மொழி தமிழ் வழிக்கல்வி நர்சரிகள்தான் இந்த நடவடிக்கைகளால் தண்டிக்கப்படுகின்றன. விளையாட்டின் மூலம் கல்வி, தாய்மொழியில் கல்வி, கூடவே மொழிப்பாடமாக ஆங்கிலம் என்பதைப் பின்பற்றும் தமிழ்வழிப் பள்ளிகளுக்குப் பணபலம் இல்லை. எனவே பல இடங்களில் கீற்றுக் கூரையுடன்தான் இவை இயங்குகின்றன.

23. நர்சரி பள்ளிகளில் இட வசதி இருக்கிறதா?

விளையாடப் போதுமான இடம் இருக்கிறதா?

ஒவ்வொரு பள்ளியிலும் அந்தந்தப் பகுதிக் குழந்தைகள் எத்தனை சதவிகிதம்?

பயிற்சி பெறாத ஆசிரியர்கள் எத்தனை பேர்?

இதுபோன்ற கேள்விகளுக்குத்தான் அரசும் மக்களும் இப்போது விடைதேட வேண்டும். கீற்றுக் கொட்டகை அகற்றலுடன் சமாதானமாகிவிட்டால், கும்பகோணங்களும் திண்டிவனங்களும் திரும்பவும் நடப்பதைத் தடுக்க முடியாது என்பதை நாம் உணர வேண்டும்.

அந்த நேரத்தில் 'நக்கீரன்' இதழில் வந்த சில செய்திகள்.

1. பெட்டிக்கடைகளைப்போல தமிழகம் முழுக்க நர்சரிப் பள்ளிகள். பாழடைந்த கட்டிடங்களிலும் கூரைக்கொட்டைகளிலும்தான் பெரும்பாலும் மம்மி, டாடியை சொல்லிக்கொடுக்கின்றன.

கண்டமேனிக்கு முளைக்கும் நர்சரிப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு என்ன பாதுகாப்பு? இதற்கென எந்த சட்டதிட்டங்களும் இல்லையா?

இருக்கிறது. ஆனால் அந்த சட்ட திட்டங்களின்படியெல்லாம் கல்வித்துறை அங்கீகாரம் வழங்குவதில்லை.

எல்லாம் காசுதான். ஒருவர் நர்சரிப் பள்ளி தொடங்கவேண்டுமானால் மாவட்டக் கலெக்டர்களால் நியமிக்கப்பட்ட கணக்கியல் பொறியாளர்களிடமிருந்து 'ஏ.பி.சி.' சர்டிபிகேட்டுகளை முதலில் வாங்கவேண்டும்.

அதாவது பொதுமக்கள் நடமாடக்கூடிய அளவிற்கு பள்ளிக்கட்டிடம் அமைந்திருக்கிறதா? கட்டிடத்தின் தரம். தன்மை என்ன? அடித்தளம் எந்த அளவிற்குப் போடப்பட்டிருக்கிறது? என்னவகை கூரை அமைக்கப்பட்டிருக்கிறது? அத பாதுகாப்பானதுதானா? ஸ்கூல் நடத்த அது போதுமான இடம்தானா? கட்டிடத்தின் ஆயுள் என்ன? என்பதையெல்லாம் அந்தக் கணக்கியல் பொறியாளர் ஆய்வுசெய்து அதன் பிறகே ஏ.பி.சி. சர்டிபிகேட்டை வழங்குவார்.

2. இதில் எல்லாவற்றையும்விட முக்கியமாக நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளி வகுப்புகள் தரைத்தளம் மற்றும் முதல் மாடியில் மட்டும்தான் நடத்தவேண்டும் என்பது கறாரான சட்டவிதி.

3. விபத்து நடந்த பள்ளியின் மூன்றாவது தளத்தில்தான் நர்சரி மற்றும் தொடக்கக் கல்வி வகுப்புகளை நடத்தியிருக்கிறார்கள். அதைவிடவும் கொடுமை... எந்தவிதப் பாதுகாப்புமில்லாத கீற்றுக்கூரையை அங்கு அமைத்திருக்கிறார்கள்.

அதோடு 200 பேர்வரை அந்தத் தளத்தில் படித்திருக்கிறார்கள். அப்படியெனில் ஒரு மாணவருக்கு 10சதுரஅடி வீதம் அது 2 ஆயிரம் சதுரஅடி கொண்ட தளமாக இருந்திருக்கவேண்டும். இது பற்றியும் பள்ளி நிர்வாகம் கவலைப்படவில்லை. இத்தனைக்கும் இந்தப் பள்ளிக்கு அந்தப்பகுதி தொடக்கக் கல்வி அதிகாரி... அடிக்கடி இன்ஸ்பெக்ஷன் என்ற பெயரில் சென்று வந்திருக்கிறார். அப்படியிருந்தும் அவர், பள்ளியின் பாதுகாப்பற்ற நிலை பற்றிக் கவலைப்படவில்லை.

பொறுப்பற்ற அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருந்ததாலேயே... கொடூர தீவிபத்தும் குழந்தைகளின் உயிர்ப்பலியும் ஏற்பட்டிருக்கிறது.

இந்து விபத்துக்கு மறைமுக காரணகர்த்தாக்களாக இருக்கும் இப்படிப்பட்ட அதிகாரிகளையும் சட்டத்தின்முன் நிறுத்தி... தண்டித்தே ஆகவேண்டும்.

தீக்கிரையான பிஞ்சுகளின் கடைசி மூச்சாவது கல்வி வியாபாரத்தின் கதவுகளைச் சாத்துமா?

அந்தப் பள்ளியை நடத்திய புலவர் பழநிச்சாமி என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள்.

“ஸ்கூல் நடத்துற எல்லாரையும் கையெடுத்து கும்பிட்டு கேட்டுக்குறேன். யாரும் கூரைக்கொட்டகை இனிமே போடாதீங்க... அதான் நான் செஞ்ச பெரிய தப்பு...”

அமைச்சர்களின் அக்கறையின்மை, அதிகாரிகளின் அலட்சியப்போக்கு, யாரையும் சரிக்கட்டி விடலாம் எனும் ‘பள்ளி நிர்வாகிகளின்’ நச்சு மனப்பாங்கு எல்லாம் ஒரே நேரத்தில் கோரத் தாண்டவம் ஆடி 94 மலர்களைக் கரிக்கட்டையாக்கி விட்டனவே! இனிமேலாவது திருந்துவார்களா கல்வி வணிகர்கள்!

# இயல் முப்பத்தொன்பது

## என்னுரை

**23.1.99 அன்று சென்னை உட்லண்ட்சு விடுதியில் நடைபெற்ற மழலையர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கத்தின் கலந்துரையாடலின்போது நான் ஆற்றிய உரை.**

முதலில் நம்முடைய அமைப்பாளர்களைப்பற்றிச் சொல்ல வேண்டும். விழா அமைப்பினர் என்னிடத்தில் கேட்டது - நிருவாகிகள் உங்களைச் சந்திக்க விரும்புகிறார்கள். இதுபோன்ற ஒரு மாநாட்டை நடத்தி, குத்துவிளக்கேற்றி, சால்வைகள் அணிவித்து, நீங்களெல்லாம் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதல்ல. இது முதல் நிலை. அவர்கள் கேட்டபோது கொடுத்த நாள் இது. ஆனால், அதற்குப்பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களையும், என்னையும், வேறுசில அமைச்சர்களையும் அழைத்து, அறிஞர்கள் தரப்பில் துணைவேந்தர்களாக இருந்த ஆனந்தகிருட்டிணன், வா.செ. குழந்தைசாமி ஆகியோரையும் அழைத்து, கல்வித்துறையின் செயலாளர் மற்றும் இயக்குநர் ஆகியோரையும் அழைத்து, கலந்துரையாடிய பின்னர் மறு அறிவிப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, முறைப்படி பார்த்தால் இந்த நிகழ்ச்சிக்கு நான் வரத்தேவையில்லை. காரணம்! முதலில் 16.11.98 - ல் அறிவிக்கப்பட்டதற்குப்பின்னால் 12.1.99-ல் கூடி மறு அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் பொதுவான நிலை! உண்மையிலேயே இதற்கு விடை சொல்லப் போவது நானல்ல. அதையும் சொல்லிவிடுகிறேன். காரணம்! என்னுடைய நிலையில் நான் எடுத்து வைக்கவேண்டிய கருத்துகளை நாட்டுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் என்னைச் சந்தித்த போதும், கடந்த ஆண்டு என்னைச் சந்தித்தபோதும் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடத்தில் நானே அதுபற்றிப் பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் என்னுடைய கருத்துகளைத் தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறேன். எனவே, என்னுடைய கருத்துகளும் கேட்கப்பட்டன என்ற அளவில்தான் நீங்கள்

வைத்துக்கொள்ளவேண்டுமே தவிர, முடிவுகளை எடுத்திருப்பவர் மாண்புமிகு ,மிழக முதல்வர் அவர்கள்; ஒவ்வொரு முடிவுகளையும் செயற்படுத்தப் போகிறவர் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள். எனவே, நான் கருத்துகளை எடுத்து வைத்தவன் என்ற முறையில்தான் இப்போது உங்களிடத்தில் நிற்கிறேனே தவிர உங்களுடைய வினாக்களுக்கெல்லாம் விடை சொல்கிற இடத்தில் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சரி - உங்களுடைய வினாக்களுக்கு விடை சொல்வதாக இருந்தால்கூட தமிழக அரசின் சார்பில் சொல்லுகிறேன் என்று சொன்னால்கூட இரண்டு மூன்று பேர் பேசியதைப் பார்த்தால் ஏதோ ஒரு போராட்ட விளக்கக் கூட்டம்போலத் தோன்றியது. நானும் அதே வேகத்தில் பேசுவேன் என்று உங்களுக்குத் தெரியும். இருப்பவர்கள் எல்லாம் மழலையர் சங்கத்துக்காரர்களாச்சே என்று இதையெல்லாம் பேசலாமான்னு நான் யோசிக்க மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அதையும் நீங்களே சொல்லிட்டீங்க... .. எனவே, அதுவல்ல; 'கொடி பிடிக்கப்போகிறோம் என்பதையோ அல்லது ஓட்டுகளைப் பாதிக்கும் என்பதையோ' நான் இல்லாத நேரத்தில் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம். என்னை வைத்துக்கொண்டு பேசினால் நான் திருப்பிப் பதில் கொடுக்கவேண்டியிருக்கும். அது அவ்வளவு நல்லதா? என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். ஒருசில கருத்துகளை நான் கூறுகிறேன். ...(ஏனென்றால் எனக்கு வேறுசில கடமைகளும் இருக்கின்றன) நான் முதலில் ஒப்பிக்கொண்டதே கலந்துரையாடல் என்ற முறையில் சில மணித்துளிகள்; இன்னும் சொல்லப்போனால் அரை மணிநேரம் அல்லது ஒருமணிநேரம். நான் இங்கே வந்து கிட்டத்தட்ட ஒரு மணிநேரமாச்சு; ஒன்றேகால் மணிநேரம் ஆச்சு. நான் பத்தே மணித்துளிகளில் பேசி முடித்துவிடுவேன். (ஏனென்றால் நான் மறுபடியும் கோட்டைக்குப் போகவேண்டும். வேலைகள் இருக்கினறன - எங்களுடைய தொடர்பான வேலைகள்) என்னுடைய கருத்தைச் சொல்லிவிடுகிறேன். அதற்குப்பிறகு மற்றமுடிவுகளை நீங்கள் கல்வியமைச்சர் அவர்களிடம் கலந்துதான் முடிவெடுக்கவேண்டும். என்ன அறிவித்திருக்கிறது என்பது என் கையில் இருக்கிறது. உங்களுடைய கையிலும் இருக்கும்; இல்லாமல் நீங்கள் பேசியிருக்க மாட்டீங்க அது எனக்குத் தெரியும். இரண்டொரு கருத்துகளை மட்டும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இ.ஆ.ப., (ஐ.ஏ.எசு.) தேர்வுகளை எழுதுகிற ஒருவர் தமிழ்நாட்டில் வெற்றி பெற்று ஒரிசாவுக்குப் போனால், பீகாருக்குப் போனால் அங்கே போய் தமிழில் பேசமுடியுமா? என்று கேட்கிறவர்களுக்கு - சொன்னால் வருத்தப்பட மாட்டீங்க

- பேசுகிற அம்மையாருக்கும் தெரியும். இது ஒரு அபத்தமான கேள்வி. என்னுடைய மாணவன் பாலகிருட்டிணன் - தமிழிலக்கியத்தில் பயின்று அதுவும் என்னிடத்தில் பயின்று, முதுகலை படித்து, தேர்வெழுதி, ஒன்றரை இலட்சம்பேர் எழுதியத் தேர்வில் தமிழிலேயே எழுதி தமிழிலேயே நேர்காணல் நடத்தி, 99-வது ஆளாக வெற்றி பெற்றவன். அவன் இப்போது ஒரிசாவில் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர். அவன் ஆங்கிலத்தில் சிறப்பாகப் பேசுவான்; அந்த மாநிலத்திற்குப் போனபிறகு ஒரிய மொழியைக் கற்றுக்கொண்டு அதில் கவிதை எழுதக்கூடிய அளவுக்கு அவன் வலிமை பெற்றிருக்கிறான் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. எந்த ஒரு இந்திய ஆட்சிப்பணியாளரும் ஒரு மாநிலத்திற்கு வந்தால் - மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டால் - அந்த மாநில மொழியை உரிய காலத்தில் கற்றுக்கொண்டு, அதில் நடவடிக்கைகளில் ஈடுபடாவிட்டால், அதில் தேர்ச்சிபெறாவிட்டால் அவர் தொடர்ந்து இந்திய ஆட்சிப் பணியாளராக இருக்கமுடியாது என்ற விதி உங்களுக்குத் தெரிந்திருக்குமோ, தெரியாதோ. எனவே, அந்த மொழிக்குப் போனபிறகு அந்த மொழியை அவர்கள் கற்றுக் கொள்வார்கள். அதிலே ஒன்றும் பெரிய பிரச்சினையே இல்லை என்பதற்கு என்னுடைய மாணவனே எடுத்துக்காட்டு. என்னுடைய பையனே தமிழில் இ.ஆ.ப.,/ தேர்வு எழுதியவன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அவன் இப்போது படைத்துறையில் பணியாற்றுகிறான். இங்கேயுள்ள ஆவடியில் உள்ள படைத்துறை - படை உடைத் தொழிலகத்தில் பணியாற்றுகிறான். அடுத்து அவனுக்கு கான்பூருக்கோ கல்கத்தாவுக்கோ மாறுதல் வருமானால் அவன் ஆங்கிலத்திலேயே உரையாற்றுவான். கொஞ்சகாலம் வங்காளத்திருந்தால் வங்காள மொழியிலும் பேசுவான். இதிலே என்ன பெரிய இடர்பாடு இருக்கின்றது. அதை நீங்கள் இங்கேயிருந்து கற்றுக்கொடுத்துதயார்செய்து ஐ.ஏ.எசு-க்கு அனுப்பப்போறீங்களான்னு கேட்கிறேன். இது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுற வேலை. வேண்டாம் என்கிறது என்னுடைய கருத்து.

அடுத்தது, காந்தியடிகள் சொன்னார் - அன்றைய கிராமங்களைப்பற்றி கிராம ராச்சியம் பற்றிச் சொன்ன அதே காந்தியடிகள்தான் சொன்னார். நாம ஆங்கிலத்தில்வழியிலான ..... சொன்னால் வருத்தப்படக்கூடாது. தயவுசெய்து 'மாணவர்க்கு' என்ற நூலை எடுத்துப் புரட்டிப் படித்துவிடுங்கள். மாணவர்களுக்குக் கல்வி சொல்லிக்கொடுக்கிற நீங்கள் அதைப்படித்திருப்பீங்க என்று நினைக்கிறேன். ஏனென்றால் நானும் மாணவர்களுக்குக் கல்வியைச் சொல்லிக்கொடுத்துவிட்டு வந்தவன்தான் என்பது உங்களுக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால் 11-ஆம் வகுப்பு வரைக்கும் கணிதத்தைத் தமிழில்

நடத்திய "தமிழ்க்குடிமகன்". ஏனென்றால் நான் கணித ஆசிரியராக இருந்தவன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். கல்லூரியில் 23 ஆண்டுகள் கல்வித்துறையில் பணியாற்றியவன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

இரண்டாவது, காந்தியடிகள் என்ன சொன்னார் என்று சொன்னால், ஆங்கிலப் பயிற்று மொழியைப் பற்றியே சொல்லியிருக்கிறார் - "நாம் நீண்ட காலமாக ஆங்கிலத்தில் கல்விகற்றுப் பேடிகளாகிவிட்டோம்; ஆண்மையை இழந்து விட்டோம்" என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என் வீட்டுக்கு வாங்க; புத்தகத்தை எடுத்துக் காட்டுகிறேன். ஏனென்றால், நான் சட்டமன்றத்திலேயே இதை மேற்கோளாகக் காட்டியிருக்கிறேன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. சட்டமன்றத்திலே பேசுவது பதிவானது. எப்போது வேண்டுமானாலும் பதில் சொல்லக்கூடியது.

எனவே, நாம் மாணவர்களைச் சேர்க்கிறபோது - 6-ஆம் வகுப்பிலே சேருகிற மாணவர்களின் எண்ணிக்கையைப்பார்த்தால், 17.5 இலட்சம் என்று சொன்னால், 12-ஆம் வகுப்பை முடித்துவிட்டு, கல்லூரிக்கு வருகிறவர்களின் எண்ணிக்கை 1.5 இலட்சம்தான். அண்மையில் அ.கி. வெங்கடசுப்பிரமணியம் தினமணியில் எழுதிய கட்டுரையைப் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். எனவே, 17.5 இலட்சம் தொடங்கி கடைசியில் கல்லூரிக்குப் போகிறவர்கள் 1.5 இலட்சம்தான். மீதி 16 இலட்சம் மாணவர்கள் இங்கேயே விடப்படுகிறார்கள். (Dropout) இந்த 16 இலட்சம் மாணவர்களுக்கும் நீங்கள் சொல்லுகிற மாதிரி அவர்கள் பொறியியலில் படித்தால் என்ன பண்ணுவாங்க என்று கேட்கிறதோ, இல்லை மேல்நாடுகளுக்குப் போனால் எப்படி, வேலைக்குப் போவாங்க என்று கேட்கிறதோ, இவர்கள் உத்திரப்பிரதேசத்திற்குப் போனால் எப்படி வேலை கொடுப்பாங்க? என்று கேட்கிறதோ இந்த 16 இலட்சம் மாணவர்களுக்குப் பொருந்தாது. நீங்கள் சொல்லப்போகிறது அந்த 1½ இலட்சம் மாணவர்களுக்குத்தான். தமிழ் பயிற்றுமொழியில் படித்தால் அவர்களுக்கு ஆங்கிலமே வராது என்பது முற்றிலும் தவறு என்பதை நானே சொல்லி விடுகிறேன். நீங்களே சொல்லிவிட்டீங்க. எலிசபெத்ராணி கிட்டே நான் ஆங்கிலத்தில் பேசினேன் என்பதைச் சொல்லிவிட்டீங்க. இப்பொழுதும் சொல்கிறேன். நான் இங்கே பேசுவதை ஆங்கிலத்திலேயே விளக்கிச் சொல்கிறேன். ஆனால், ஒரு பாடமாகப் படித்தாலேயே முழு ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளமுடியும் என்பது எங்களைப் போன்றவர்களுடைய எடுத்துத்துக்காட்டு. சொல்லுகிற தமிழ்க்குடிமகனாலும் சரி; என்னுடைய மகன் மெய்ம்மொழியும் சரி. எல்லோருமே ஒரு பாடமாகப் படித்து வந்தவர்கள்தான்.

மறந்துவிடக்கூடாது. அதே நேரத்தில் பாடமாகப் படிக்கிறபோது படிக்கிற கல்வி ஆழமாகப் படிக்கிறபோது எங்களை முழுமைப்படுத்தியது. நான் படித்தது உயர்ந்த கல்லூரி-தூய சூசையப்பர் கல்லூரி - (திருச்சி செயிண்ட ஜோசப் காலேஜ்) மிகச்சிறந்த பாதிரியார் செக்யூரா. அவர்தான் ஆங்கிலத் துறைத் தலைவர். அவரிடத்தில் பயின்றவன் நான். இதிலே ஒன்றும் பெரிய இடர்ப்பாடல்ல. நீங்களே கற்பனை பண்ணிக்கொண்டு வந்தால்தான் அவன் மேலே போவான் என்று நினைப்பது - தவறான வாதம் என்று கூறுவது கடமை.

அடுத்து ஒரு அம்மையார் கூடச் சொல்லியிருக்காங்க. ஒரு இதழில். வட்டம் என்று சொன்னால், விட்டம் என்று சொன்னால் - மாணவர்களுக்குப் புரியாது என்று எந்த நாட்டிலே இருக்காங்க? எனக்குத் தெரியவில்லை. டயாமீட்டர்னு சொன்னால்தான் தெரியும்; ரேடியஸ் என்று சொன்னால்தான் தெரியும்னு சொல்லி யாரை ஏமாத்துறீங்க! என்று வன்மையாகக் கேட்கிறேன். வட்டமா? விட்டமா? என்பது இன்றைக்கு இருக்கிற சொல்லா? கி.பி.1600-க்கு முன்னாலே (ரேடியனா-) (டயாமீட்டர்னா)- சொல்லிக்கொடுத்தீங்க? எப்ப உங்களுக்கு ஆங்கிலம் அறிமுகம், கிழக்கிந்தியக் குழுமம் வந்த பிறகுதானே! கணித ஆசிரியனாக இருந்தவன்; பி.எசி., கணிதத்தைப் படித்தவன். மறந்துவிடக்கூடாது. பி.எசி., கணிதத்தைப் படித்துவிட்டு, கணித ஆசிரியனாக மூன்றாண்டுகள் இருந்தவன். அதுவும் உயர்நிலைப்பள்ளியில் - 11-ஆம் வகுப்புக்குப் பாடம் எடுத்தவன். இப்பவும் உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டிலே இருக்கிற 65 அரசினர் கல்லூரிகளிலும் இணைப் பயிற்றுமொழி இருக்கிறது எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். (பாரலெல் மீடியம்) இங்கே இருக்கிற நந்தனம் கலைக் கல்லூரியில் போய்ப்பார்த்தால் - பி.எசி., வேதியியல், இயற்பியல், கணிதவியல் அனைத்துமே ஒரு வகுப்பு ஆங்கிலத்திலும் இருக்கும்; ஒரு வகுப்பு தமிழிலும் இருக்கும். எனவே, ஏற்கெனவே புத்தகங்களெல்லாம் வந்து -படித்து ரொம்ப காலமாகிவிட்டது. இதுவந்து 30 ஆண்டுகளாகிவிட்டது. அப்புறம் வட்டம் என்று சொன்னால் - தெரியாது - விட்டம் என்று சொன்னால் தெரியாது என்று சொன்னால் - அதை ஒரு அறியாமை என்று மன்னித்துவிடலாம். இதற்கு மேலே விளக்கம் தேவையில்லை.

அப்புறம் இன்னொரு அம்மையார்கூடச் சொல்லியிருக்கிறார்கள். வரலாறு, பூகோளம் போன்ற பாடங்களைத் தமிழில் நடத்துவது அவ்வளவு சுலபமானதல்ல; அதாவது தங்களுக்கு முடியாததெல்லாம் தமிழுக்கு முடியாது என்று சொல்லுவது இது கையாலாகத்தனம். நான் சொல்லுகிறேன் என்று

யாரும் கடுமையாக வருத்தப்படக்கூடாது. தங்களுக்கு முடியவில்லை என்று சொன்னால் வரலாறு, பூகோளம் போன்றவற்றைத் தமிழில் நடத்த முடியாது என்று சொன்னால் நான் எடுத்துக்காட்டுகிறேன். ஆனந்தவிகடனில் இருக்கிறது - ஒரு அம்மையாரின் பேட்டி. பள்ளியின் பெயர் தெரியும். ஆள் பெயர் தெரியும்; அவை நாகரீகம் கருதி நான்அதைச் சொல்லவில்லை. வரலாறு, பூகோளம் போன்றவற்றைத் தமிழில் நடத்த முடியாது என்று சொல்றது உங்களுக்குச் சார்பான வாதமா? எங்கப்பன் ராசராசசோழனையும் குலோத்துங்க சோழனையும் படிக்கறதுக்கு இன்னொரு ஆங்கிலேயன் கால்டுவெல்லும், ஜி.யு. போப்பும் வந்து சொல்லிக்கொடுத்தால்தான் சொல்லுவீங்களா? இவன் மகன் அவன்; அவன் மகன் இவன்; இவன் கோயிலைக் கட்டினான்; குளத்தை வெட்டினான் என்று சொல்றதுக்கு. ஆங்கிலம்தான் வேண்டுமா உங்களுக்கு; இல்லை - இராமநாதபுரத்திற்கு அடுத்தது சிவகங்கை என்று சொல்வதற்கு ஆங்கிலம்தான் வேண்டுமா? எதுக்காக இந்த மாதிரி தவறான வாதங்கள்! நீங்க என்ன பண்ணியிருக்கணும் - இது தொடர்பாக நாங்கள் கொடுத்ததிலே ஐயப்பாடுகளை மட்டும் சுருக்கிச் சொல்லியிருந்தால் நான் உங்களுக்குப் பதில் சொல்லுவேன். நீங்க ஒரு பெரிய மாநாட்டைப் போட்டு சொல்லும்போது நான் அதற்குத்தகுந்தாற்போல் பதில் சொல்வேன். தகுந்த மாதிரி பேசுவேன். ஏனென்றால், என்னை விட்டுவிட்டுப் பேசியிருந்திருக்க வேண்டும். நான் இல்லாமல் பேசியிருந்தால் நான் ரொம்ப மகிழ்ச்சியடைந்திருப்பேன். அது உங்களுடைய உரிமை; உங்களுடைய கடமை.

நீங்க வந்து வாக்காளரைப் பற்றிச் சொன்னது......... உங்க கருத்து சரியல்ல. நீங்கள் உங்கள் கல்வியைப்பற்றிப் பேசுங்கள்; சிந்தியுங்கள்! இது ஓட்டைப் பாதிக்கும் என்று சொன்னால் - அப்புறம் நான் தேர்தலின்போது யோசிப்பேன் என்று சொல்வேன். என் தொகுதியிலே என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியும். நீங்க வந்தவுடனேயே நாங்களெல்லாம் சேர்ந்து உங்களைத் தோற்கடித்துவிடுவோம்என்று சொன்னீங்கன்னா - நாம அங்கே சாந்திச்சுக்குவோம்; களத்திலே சந்திப்போம் வாங்க என்றுதான் சொல்லுவேன். அது தவறான கருத்தல்லவா உங்களுக்கு. அதுவும் என்னையும் வைத்துக்கொண்டு - இரண்டு அமைச்சர்களையும் வைத்துக்கொண்டு அரசு சார்பிலே சந்திக்க வைத்துவிட்டு ஓட்டைப் பாதிக்கும் என்று சொல்றது எவ்வளவு தவறான கருத்து இது எதுக்கு? இதுக்காகவா எங்களைக் கூப்பிட்டீங்க. நீங்க இதைச் சொல்லிவிட்டுப் போறதுக்கு? நாங்களும் வந்து களத்தில் சந்திப்போம் என்று சொல்லிவிட்டு - அறைகூவல் விட்டுப் போவறதுக்கா? அது தவறில்லையா உங்களுக்கு!

இப்ப கேட்கறீங்க கேள்வி - நியாயமான கேள்வி. சி.பி.எசு.இ-யை விட்டுவிட்டீங்களே. நானே சொல்கிறேன். ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் - 41 இருக்கிறது. (புள்ளி விவரத்தோடு சொல்றேன்) பிறகு சிபிஎஸ்இ. பள்ளிகள் 194 இருக்கு. (புள்ளி விவரமெல்லாம் சரியாக இருக்கும். நினைவில் வைத்துச் சொல்கிறேன்) அப்புறம் மெட்ரிகுலேசன் பள்ளிகள் 2037 இருக்கின்றன.

இந்திய ஆட்சிப் பணியிலே இருக்கின்ற அதிகாரிகள் சிலநேரம் சில அடிப்படை உண்மைகளைத் தெரியாமல்கூட சில சட்டங்களைப் போட்டுவிடலாம்; அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அல்லது நாங்கள் சொல்லுகிற அடிப்படையிலே எங்கள் கொள்கைகளை வகுத்துக் கொடுக்கிறோம்; அவுங்க சட்டத்திலே இப்படியிருக்குங்க என்று எங்களுக்குச் சொல்லுவாங்க! அது அவுங்களுடைய கடமை! இப்படிப் போனால் அப்படி வரும்; அப்படிப் போனால் இப்படி வரும். அவுங்களுக்குக் கடமை தெரியும். ஏனெனில் அவுங்க விதிமுறைகளை நீண்டகாலமாகப் படிக்கிறவங்க. ஆனால், மக்களோடு தொடர்பு உடையவர்களாக நாங்கள் அல்லாவா இருக்கிறோம். நான் என்னமோ மக்களையே சந்திக்காத மாதிரியும் - நீங்கதான் எல்லா மக்களையும் சந்தித்துவிட்டு ஒட்டுமொத்தக் கருத்தையும் திரட்டிக்கொண்டுவந்த மாதிரியும், நான் என்னமோ முந்தாநாள் இங்கிலாந்திலிருந்து தமிழ்க்குடிமகன் வந்து திடீரென்று தமிழைக் கொண்டுவந்த மாதிரியும் பேசுவது தவறு. நேற்றுகூட என் தொகுதியில் மக்களைச் சந்தித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். நீங்க சந்திக்கிறதைவிட நான் சந்திக்கிற மக்களுடைய எண்ணிக்கை அதிகம் என்று உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எனவே, மக்களுடைய கருத்து என்னவென்று பார்த்தால், மொத்தத்திலே இருக்கின்ற ஆறுகோடி மக்களில்நீங்க சொல்றது எத்தனைபேர் என்று நீங்கதான் கணக்குப் போட வேண்டும். மொத்தம் ஆறுகோடி - தமிழ்நாட்டிலிருக்கின்ற எண்ணிக்கை. வெளிநாட்டிலிருக்கின்ற தமிழர்களின் எண்ணிக்கை ஒருகோடி. இதுதான் நம்முடைய உண்மையான கணக்கு. எனவே, இதிலே வந்து மக்களுடைய கருத்து என்னவென்கிறது பெற்றோர்கள் என்னென்ன கருதுகிறார்கள் என்பது நீங்கள் சொல்ற கருத்திலேயும் எனக்கு எண்ணமுண்டு. நான் சொல்ற கருத்தையும் நீங்க வாங்கிக்கணும். அவுங்க யாரும் அதுக்காக தினமணியிலே வந்த கட்டுரை, தினமலர் போன்றவற்றில் வந்த செய்திகளையெல்லாம் படித்தவர்கள் அல்ல. "மெல்லத் தமிழ் இனி வாழும்" என்று 'மலர்' ஒன்று போட்டிருக்காங்க! தாய்த் தமிழிலே நடத்துற பள்ளிக்கும் பெற்றோர்கள்தான் பிள்ளைகளை அனுப்புறாங்க! வேற எதையாவது தயாரித்தா தனியாக நாங்களா அனுப்புகிறோம். கோபிசெட்டிப்பாளையம், அம்பத்தூர்லே போய் பாருங்க! அம்பத்தூரிலே கோபிசெட்டிபாளையத்திலே,

திருப்பூரிலே இருக்கின்ற முழுக்க தாய்த்தமிழில் நடத்தும் பள்ளிகள் இருக்கு! ஆங்கிலத்தை ஒரு பாடமாகமட்டும்படித்துவிட்டு மீதி அனைத்தும் தமிழில் நடத்த வேண்டும். எதிலே என்ன எழுதியிருக்கு. பத்திரிகையிலே எழுதுறாங்க! திருப்பூர் பள்ளிக்கூடத்தில்100 பேருக்கு இடமில்லாமல், திருப்பியனுப்பிவிட்டார்கள் என்று இருக்கா? இல்லையா? இன்னும் வேண்டுமானால் நேராகப் போய்ப் பார்ப்போம். வாங்க! நான் கூப்பிட்டுப் போறேன் உங்களை! எனவே, பெற்றோர்கள் விரும்புவது ஒரு சீருடை. ஒரு கட்டுக்கோப்பான பள்ளி அமைப்பு. இதெல்லாம் விரும்புகிறார்கள் என்று எனக்குத் தெரியும். நம்முடைய நகராட்சிப் பள்ளி (அல்லது) மாநகராட்சிப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளில் இன்னும் பல்வேறு வகையானகுறைகள் இருக்கின்றன என்பது எங்களுக்கும் தெரியும். தெரியாமல் இல்லை. கல்விக்கு ரூ.3609கோடி ஒதுக்கினால்கூட அதிலே பெரும்பகுதி ஆசிரியர்கள் சம்பளத்திற்குப் போய்விட்டால்கூட இன்னும் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிறையத் தேவை. நான் அதை மறுக்கவில்லை. அதையெல்லாம் என்னுடைய தொகுதியில் நிறைய பண்ணிக் கொண்டிருக்கிறோம். அதே நிலையிலே மழலையர் பள்ளிகள் வைத்துக்கொண்டிருக்கின்ற நாங்கள் 3000 பள்ளிகள் என்று சொல்லுகிறோம். உங்க இரண்டு மூன்று பேருடைய செய்தித்தாள்நறுக்கையெல்லாம் வைத்திருக்கேன். அதிலே பார்த்தீங்கன்னா நீங்களே ஒரு இடத்தில் 10,000 பள்ளிகள் என்கிறீங்க. இன்னொருத்தர் 20,000 பள்ளிகள் என்று சொல்லியிருக்கிறார். உங்களுக்கே சரியாகத் தெரியவில்லை. 5000 பள்ளிகளில் வேலைபார்க்கின்ற எல்லோரும் - இரமணிபாய் அம்மா நல்லா சொன்னாங்க! இது சேவைக்காக எடுக்கறதைவிட தேவைக்காக என்று நடத்துறதை நாங்க மறுக்கலை அதுதான் உண்மையும்கூட. அவுங்க சரியாத்தான் சொன்னாங்க. அதையும் கனிவோடு கவனியுங்க என்று சொன்னாங்க பாருங்க! அதை ஏற்றுக் கொள்கிறேன்.

நான் அண்மையில் திடீரென்று ஒரு பள்ளியில் நுழைந்து - திருப்பத்தூர் தொகுதியில் திருப்பத்துரில் ஒரு பகுதியில் பள்ளியின் பெயர் உங்களுக்குத் தேவையில்லை. அதுவும் மழலையர் பள்ளி. நான் இந்தக் கோணத்திலேதான் பார்ப்பேன். அது உங்களுக்குத் தெரியும். பள்ளிக்கூடத்தை 12 ஆண்டுகளாக நடத்துறாங்க! அவுங்க நடத்துற பள்ளிக்கூடத்தின் மொத்த அளவு - இந்த மேடையில்பாதி. (சந்தேகமிருந்தால் நான் கூப்பிட்டுப் போறேன். ஏதோ அமைச்சர் சும்மா அடிச்சுவிடுகிறார் என்று நீங்க நினைக்கக்கூடாது) இந்த மேடையிலே பாதி இடம். இரண்டே வகுப்புகள்

மட்டும் இருக்கு முன் மழலையர் வகுப்பு, முதிர் மழலையர் வகுப்பு (எல்.கே.ஜி., யூ.கே.ஜி.,) மட்டும் நடத்துறாங்க. மொத்தம் 51 மாணவ மாணவியர்கள். இரண்டு பேர் நடத்துகிறார்கள். 12 ஆண்டுகளாக - இரண்டு ஆசிரியர்கள் மட்டும் +2 வரை படித்தவர்கள் - ஆசிரியப் பயிற்சிப் பெற்றவர்கள் அல்ல. அதனாலே என்ன நிலை என்பது எனக்கும் தெரியும்; உங்களுக்குத் தெரியும் நிறையபேருடைய வேலைவாய்ப்பு கெடுகிறது என்று சொன்னால் - நாங்கள் சொல்ற விளக்கம் என்னவென்றால், இந்த மொழிமாற்றம் செய்வதினால் பெற்றோர்கள் மொத்தமாக இந்தப் பள்ளிக்கூடத்தை மூடவைத்துவிடுவாங்க என்ற எண்ணத்தைத்தான் நீங்க தோற்றுவிக்கிறீங்க! மொழிமாற்றம் செய்வதனாலே பள்ளிக்கூடம் மூடப்படுவதற்கான வாய்ப்பே கிடையாது! நாங்க ஒரே ஒரு கேள்வியைத்தான் உங்களிடம் கேட்கிறேன். கடந்த ஆண்டே நாம் பேசினோம். நீங்க ஒரு கட்டத்திலாவது ஏதாவது ஒரு முடிவுக்கு வந்திருந்தீங்கன்னா இந்தச் சிக்கல் இவ்வளவு பெரியதாக வந்திருக்காது. நீங்க என்ன பண்ணிட்டீங்க. கடைசி நேரத்திலே 28.5.98-ல் மீண்டும் ஒரு விதித்தளர்வு 37-அ உங்களுக்குத் தெரியும். மீண்டும் விதித்தளர்வு பெற்றுவிட்டீங்க. 37-அ விதி ஏற்கெனவே போடப்பட்ட விதி. நீண்ட நாட்களுக்கு முன்னாலே போடப்பட்ட விதி. ஏதோ இந்த அரசு போட்ட விதி அல்ல. நீண்ட நாட்களுக்கு முன்னே இருக்கிறது. விதி என்ன சொல்கிறது. அங்கீகாரம் பெற்ற, அங்கீகாரம் பெறாத மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் (நர்சரி & பிரைமரி ஸ்கூல்ஸ்) படிக்கின்ற மாணவ மாணவியர்கள் 31.12.97-க்குப்பின்னால், அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர்க்கப்பட மாட்டார்கள். எனவே, அனைவரும் விரைவில் அங்கீகாரம் பெற முயற்சி செய்யுங்கள் என்று நீங்களே அறிவிப்பு கொடுத்திருக்கீங்க! இந்தச் செய்தி அரசின் சார்பில் 1.1.98-ல் முரசொலியிலும் வந்திருக்கிறது - அதிகாரப்பூர்வமாக வந்திருக்கிறது உங்களுடைய விளம்பரம். (நமக்குள்ளே பேசுவதுதான்) நீங்க எல்லோரும் நமக்கு வேண்டியவங்க. அதனாலே நான் ஆர அமரப் பேசிக்கிட்டிருக்கிறேன். நான் அரசாங்கத்திலே இருந்துகொண்டு வெகுண்டெழுந்து பேசுகிற தேவையே கிடையாது. அது உங்களுக்குத் தெரியாததல்ல. ஆனால் நீங்க பேசறபோது இதுபோன்ற வாக்கியத்தை நீங்க பிடிச்சுங்கன்னா அப்புறம் நான் பணிந்து பேசினால், அது தப்பாய் போயிடும். அதையும் பார்க்கணும். நான் ஒருபடி மேலேதான் போகவேண்டும். இப்பப் போகலை. அதுக்காகச் சொல்றேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் - அதுபோல நீங்கள் அங்கீகாரம் பெறவேண்டியது கடமை. இதிலே அங்கீகாரம் பெற்றவை 2100 பள்ளிகள் என்று சொன்னால் - 5000 பள்ளிகள் அங்கீகாரம் பெறவில்லை என்று சொன்னால் - அங்கீகாரம்

பெறுவதற்கான முயற்சிகளை ஏன் இத்தனை ஆண்டுகலும் பெறவில்லை? பதில் சொல்லவேண்டாம். என்னுடைய கேள்வியை மட்டும் வைத்துக்கொண்டு விடையெழுதினால் போதும். அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் இதுவரைக்கும் 2100. அங்கீகாரம் பெறாதவை 5000 என்று சொன்னால் (ஓரளவுக்குக் குறைவாகச் சொல்கிறேன்) இதுவரைக்கும் அங்கீகாரத்துக்கு முழுமையான எல்லைக்குள் கொண்டுவந்திருந்தால், அரசே கூட இந்த அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் எப்படி ஆய்வு செய்யலாம் என்றுகூட வேறு வகையிலே சிந்தித்திருக்கலாம்.

கருநாடக மாநிலம் என்று சொன்னால் அங்கு மும்மொழித்திட்டம். உங்களுக்குத் தெரியாததல்ல. இதிலே பிரச்னைகளே - தமிழை ஒரு பாடமாகப் படிப்பது என்பதையோ அல்லது 1008 பள்ளிகளில் அதாவது பிற மொழியினர் நடத்துகிற பள்ளிகள். 1008 பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகச் சொல்லிக் கொடுப்பதற்கு தமிழாசிரியரை அமர்த்துவதற்கு உங்களுக்கு கருத்து வேறுபாடுகளே கிடையாது. அதே மாதிரி தாய்த்தமிழில் முழுமையாக நடத்துபவர்களுக்கு சலுகைகள் தரப்படுகின்றன என்பதிலும் உங்களுக்குக் கருத்து வேறுபாடே கிடையாது. நம்ம கருத்து வேறுபாடே - இந்தப் பயிற்றுமொழி என்பதில்தான் அதேநேரத்தில் நீங்கள் அங்கீகாரம் என்பதைப் பெற்று 5000 பள்ளிகளில் நீங்க என்ன பண்ணுறீங்க! அங்கீகாரம் தரப்படமாட்டாது என்று விளம்பரம் போடுறீங்க. ஆனால் மே (அ) சூன் மாதத்தில் விதித்தளர்வு வாங்கிக்கிறீங்க. இப்ப அரசு என்ன சொல்கிறது. இனிமேல் விதித்தளர்வு என்பது இல்லை. இது முதல் கட்டம். இனி விதித்தளர்வு இல்லையென்று சொன்னால், நீங்கள் அங்கீகாரம் பெற்றாக வேண்டும். உங்களுக்குத் தெரியாததல்ல - அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் படிக்கிற மாணவர்கள் வெளிமாநிலத்திற்குப் போக வேண்டுமென்றால் மாவட்டக் கல்வி அலுவலர் அதிலே கையெழுத்துப் போடவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். இப்ப அரசு இந்த இடத்திலே வேணுமா? வேணாமா? வேண்டாமென்று சொன்னால் - (நான் என்ன சொல்கிறேன்) நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. திண்ணைப் பள்ளிக்கூடம்போல நடத்துங்க. இன்னும் சொல்லப்போனால் 20,000-ஐ 40,000ஆக நடத்துங்க. ஆனால், அரசு கிட்ட நீங்க வரவேண்டாம். (வரவேண்டிய தேவையில்லை) நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் நடத்திக்கொள்ளுங்கள். நீங்களே ஒரு கல்லூரியை நடத்தலாம். ரொம்ப இடத்திலே பல்கலைக்கழகமே இசைவு பெறாமல் நடக்கிறது. இந்தியாவிலே அப்பப்ப பட்டியல் போடறாங்க. நிறைய இடத்திலே கல்லூரிகளை இசைவு பெறாமல் அங்கீகாரம் பெறாமல் நடைபெறுகின்றன. நாங்க உங்களை நடத்தவேண்டாம் என்று அரசு எப்போதாவது சொன்னதா?

இது உங்க விருப்பம்! நடத்துங்க. எங்களிடத்தில் அங்கீகாரம் பெற வேண்டுமானால் இது நிபந்தனை அவ்வளவுதான். எங்களிடத்தில் அங்கீகாரம் பெறவேண்டுமென்று சொன்னால் அந்த அங்கீகாரம் பெற்றதனால் பெறும் பலன் உங்களுக்கோ மாணவர்களுக்கோ வேண்டுமென்று சொன்னால் இது நிபந்தனை.

நாங்கள் முதல் அறிவிப்பில் அறிவியலைச் சேர்க்கவில்லை. (நாங்க சொல்றதை மட்டும் கேட்டுக்குங்க. பிறகு ஆர அமர இருந்து பேசி முடிவு பண்ணுங்க. நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அது உங்களுடைய விருப்பம்) நான் ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் இங்கு கலந்துகொள்கிறேன். ஏனென்றால், நீங்கள் அழைத்து நான் வராமலிருந்தால், நீங்கள் என்ன நினைத்துக்கொள்வீர்கள் என்றால் - கடைசியிலே அமைச்சர் இதையெல்லாம் சந்திக்க விரும்பவில்லை என்றும் எடுத்துக் கொள்ளலாம்; சந்திக்க இயலவில்லை என்றும் எடுத்துக்கொள்ளலாம்; சந்திக்கத் திரானி இல்லை என்றும் எடுத்துக்கொள்ளலாம். அப்படி என்று நான் எடுத்துக்க மாட்டேன் என்று உங்களுக்குத் தெரியும் என்பதால், நான் எந்த இடத்திற்கும் வருவேன் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இன்னும் எத்தனை இடத்துக்கு வந்து பேசுவதாக இருந்தாலும் பேசுவேன். நாளைக்கு வந்து, அறையில் உட்கார்ந்து அண்ணே இன்னும் விரிவாகப் பேசுங்க என்று சொன்னால் நான் வேண்டாம் என்று சொன்னது கிடையாது; மறுத்ததே கிடையாது. (என்றைக்காவது சொல்லியிருக்கிறேனா இராமச்சந்திரன்) நீங்க என்னைக் கேட்காமல் திடீரென்று வந்தால்கூட அறையில் கூப்பிட்டுப் பேசியிருக்கிறேனே தவிர இல்லை நேரம் ஒதுக்கலை; நேரம் ஒதுக்கிய பிறகு வாங்க என்று சொன்னதில்லை.

அங்கீகாரம் பெறுவது என்பதற்கான அந்த மையத்தில் நில்லுங்கள். அப்ப அறிவியல் பாடத்தை வந்து போட்டவுடனே சிலபேர் என்ன சொல்லத் தொடங்கிவிட்டாங்கன்னா - அறிவியலைத் தமிழில் நடத்தமுடியாது என்று அரசே கருதுகிறது என்றமாதிரி உங்களுக்குத் தெரியும். மருத்துவக் கலைக்களஞ்சியங்கள், அறிவியல் கலைக்களஞ்சியங்கள், பொறியியலுக்கான ஏராளமான நூல்கள் எங்கள் கைவசம் உண்டு. இந்த இடத்தில் நான் ஒரு அறைகூவலே சொல்லமுடியும். ஒரு பாடத்தை என் கையிலே கொடுத்து இதைப் பொறியியல் வகுப்புக்கு பாடத்தை எடுங்க என்று சொன்னால், நான் எடுத்துக் காட்டுவேன். ஏனென்றால், நான் கணிதம் படித்தவன் என்று உங்களுக்குத் தெரியும். ஒரு பொறியியல் கல்லூரியிலே ஒரு வகுப்புக்குப் போய், நீ இந்தப் பாடத்தை தமிழில் நடத்திக் காட்டமுடியுமா என்று கேட்டால் நடத்திக்

காட்டுறேன். நீங்களும் வகுப்புக்கு வாங்க! விளங்குகிறதா விளங்கலையா என்பதைப் பார்த்துக்கொள்வோம். நான் இன்னும் நிறைய வேற செய்திகளைச் சொல்லுவேன் விளங்கும். அதிலே ஒன்றும் விளங்காது என்று சொன்னால் நாமே நம்மை நாமே தவறான திரையைப் போட்டுக்கொள்வோம் என்று அர்த்தம்.

ஏற்கனவே நிலை பெற்றிருக்கின்ற தமிழ்மொழி. ஆனந்தகிருட்டிணன் போன்ற, வா.செ. குழந்தைசாமி போன்ற இரண்டுபேருமே உங்களுக்குத் தெரியும். அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்களாக இருந்தவர்கள்; ஒருவர் இந்திராகாந்தி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்தவர்; இவர் வெளிநாட்டிலிருந்து வந்தவர். அவுங்கதான் கேட்டாங்க - அறிவியலை ஏன் விட்டீங்க என்று. அப்புறம் அறிவியல் சேர்க்கப்பட்டது. ஏனென்றால் அது ஒன்றும் தப்பில்லை. அறிஞர்களின் கருத்து என்பதனால் சொல்கிறேன். அதுக்கப்புறம் தலைவர்தான் என்ன கருதினார். சரி மூன்றுகட்டமாக இருக்கிற சமூக அறிவியல், அதேநேரத்தில் கணிதம், அறிவியல் என மூன்றையும் ஒரே நேரத்தில் நாம் வலியுறுத்தவேண்டாம். இப்போதைக்கு இரண்டு பாடங்கள் எடுக்கப்படும்; எடுத்துப் படிக்கட்டும்; எது வேண்டுமானாலும் எடுக்கப்பட்டும். ஏதாவது இரண்டு பாடங்களை எடுத்துப் படிக்கப்பட்டும். காலப்போக்கில் அதுபற்றி சிந்திக்கலாம் என்பது ஒருநிலை.

இப்போது நீங்கள் ஏன் மெட்ரிகுலேசன் பள்ளிகளை எடுக்கவில்லை என்று ஒரு கேள்வி. அந்தக் கேள்வியை எடுக்கும்போது, அங்கேயே அலசி ஆராய்ந்தபோது, அவுங்க என்ன கருதினாங்கன்னா நாம இப்போது அங்கீகாரம் பெறாத பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுப்பது பற்றிய நிபந்தனையில் மட்டும் நாம இருக்கிறோம். இது குறித்த பிரச்சினையில் பேசுவதோ அல்லது இதற்கெல்லாம் தெளிவுகண்டபிறகோ நாம் அடுத்த அரசாணைகளையோ கலந்துரையாடல்களிலோ பேசி முடிவெடுக்க முடியும் என்பதுதான் அரசினுடைய கருத்து. அதனாலே பேராசிரியர் அவர்களே அதுபற்றிய கருத்துகளைக் கலந்துரையாடலின்போது நிறைய செய்திகளைச் சொன்னார்கள். எவ்வளவு என்பதை - கலந்துரையாடலின்போது நடந்த செய்திகளை நான் வெளிப்படுத்த முடியாது. ஆனாலும், அதனுடைய சாரம் இதுதான். பேராசிரியர் ஒரு கருத்து நான் ஒரு கருத்து என்று சொன்னாலும் கூட, அந்தக் கருத்து எல்லாவற்றையும் அறிஞர்கள் எல்லாம் அதைச் சீர்தூக்கிப் பார்த்து, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது அரசு. எனவே, சீர்தூக்கிப் பார்த்து அரசு முடிவுக்கு வருகிறபோது இன்னும் பேச வேண்டியிருக்குமானால்

அருள்கூர்ந்து, நீங்கள் கல்வியமைச்சர் அவர்களை ஏனென்றால் அவர்தான் ஆணை பிறப்பிக்கப்போகிறார். தாராளமாக நீங்கள் சந்திக்கலாம். அவர் கிட்ட பேசலாம்; அதிலே எந்தத் தவறும் கிடையாது. நானே கூட முறைப்படி பார்த்தால் அதிகச் செய்திகளை அதனுடைய சார்பிலே நான் சொல்லிவிடமுடியாது. ஏனென்றால் நானே, தாய்த்தமிழ்ப்பள்ளி என்று சொன்னால்கூட, ஆணை கல்வித்துறையில்தான் வரும். தமிழ் வளர்ச்சித்துறையிலே வராது. பள்ளிக்கூடங்களெல்லாம் அவருடையது. ஏனென்றால், நீங்கள் கூப்பிட்டதே தமிழ்ப் பற்றாளன் என்ற முறையில் என்னைக் கூப்பிட்டுவிட்டீர்கள். அல்லது இதை நான் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பவன்; இவன் என்னதான் சொல்லுகிறான் என்று பார்ப்போமே என்றிருக்கலாம். எனவே, உங்களுடைய அதாவது பலபேரின் வேலைவாய்ப்புகள் பாதிப்பு வரும் என்ற அச்சம்! அப்புறம் வந்து பெற்றோர் இதைத்தான் விரும்புகிறார்கள் என்ற எண்ணம். நான் இதைச் சொல்லிவிடுகிறேன். பெற்றோர்களும் எதை விரும்புகிறார்கள் என்பதை வந்து - இரண்டு கோணத்திலே சொல்ல முடியும். பொறியியலைத் தமிழில் அறிமுகப்படுத்தி நாங்கள் விளம்பரம் போட்டபோது பொறியியலைத் தமிழில் கொண்டுவரமுடியாது என்றும், எந்த மாணவனும் படிக்க முன்வரமாட்டான் என்றும் சொன்னாங்க. இதுதான் உண்மை. ஆனால், என்ன ஆகிவிட்டது என்றால் நான் வந்து முதலில் சொன்னது 90 பேருக்கு கொடுக்கச் சொல்லித்தான். ஆனால், குழுவிலே இருக்கிற பெரியவர்கள் எல்லாம் சேர்ந்து பொறியியல் கல்லூரிகள்தான் முடிவு பண்ணவேண்டும் என்பதற்காக விட்டபோது அவர்கள் 380 மாணவர்களுக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். நுழைவுத்தேர்வு எழுதப்பட்டபோது 630 மாணவர்கள் எழுதினார்கள். மறந்துவிடக்கூடாது. மாணவர்கள் முன்வரவில்லை என்று சொன்னால் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். நான் கல்லூரியிலே முதல்வராக இருந்தேன் என்பது உங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். இப்பவே வாங்க! மதுரைக்கு! இல்லையென்றால் இங்கே இருக்கின்ற கல்லூரிக்குக் கூப்பிட்டுக் கொண்டு போகிறேன்.

192 மாணவர்கள் பி.காம். வகுப்பில் தேர்வு எழுதுகிறார்கள், என்று சொன்னால், அனைவரும் ஆங்கிலப் பயிற்றுமொழி வாயிலாகத்தான் பயில்கிறார்கள். ஆனால், தேர்வு எழுதுகிறபோது, விடைத்தாளைப் புரட்டிப் பார்த்தீங்கன்னா இந்த 192 பேரும் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்களா என்றால் இல்லை. பயிற்றுவிக்கப்பட்டது ஆங்கிலத்தில். பயிற்றுமொழி என்று நாங்கள் அறிவித்தது ஆங்கிலத்தில். தமிழில் என்று அறிவித்திருந்தால் ரூ.400/- உதவித்தொகையாவது கல்லூரியிலே கிடைத்திருக்கும். அதுவும்

அவர்களுக்குக் கிடையாது. ஆனால், தேர்வு எழுதுகிறபோது இரண்டாம் பருவம், நான்காம் பருவம் (ம) ஆறாம் பருவம் (2nd, 4th, & 6th Semesters) தெரியும். உங்களுக்கு ஆண்டு இறுதியில் அந்தத் தேர்வு விடைத்தாளைப் பார்த்தால் 192 பேரில் குறைந்தது 90 பேரோ 100 பேரோ தமிழில் விடை எழுதுகிறார்கள். நான் சொல்வது பி.காம்-இல் பி.ஏ., வரலாறு இலக்கியம் எல்லாம் எழுதிவிடுகிறார்கள். நான் சொல்வது பி.காம். வகுப்பில் (வணிகவியல்) எனவே, அப்படிப்பட்ட நிலையில், அதுவும் அருமையான ஆங்கிலத்தில் எழுதி 50 பேர் பிரமாதமாக எழுதி மேலே வந்துவிடுவர். இப்போது எந்த வாய்ப்பும் ஆங்கிலத்தில் முழுமையாக படிப்பதற்கு அற்றுப்போகவில்லை. நான் ஆங்கிலத்தை ஒழிக்கிறமாதிரி தான். அது அறவே கிடையாது. ஏனென்றால், இந்தியாவில் ஒரு மாநிலம் தமிழ்நாடு. இதற்கு இணைப்புமொழியே ஆங்கிலம்தான். தமிழகம் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கின்ற இணைப்பு மொழி (Link language) ஆங்கிலம்தான். எனவே, ஆங்கிலம் முழு வல்லமையோடு பயிற்றுவிக்கப்படவேண்டும்; ஆங்கிலம் முழு வல்லமையோட பேணப்படவேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு தமிழனும் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்று, பிற மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும் சென்று தம்முடைய வல்லமையை நிலைநாட்ட வேண்டும் என்பதில் எங்களுக்கு இரண்டாவது கருத்தே கிடையாது. அதிலேதான் எலிசபெத் இராணிகிட்டே ஆங்கிலத்தில் பேசவேண்டியிருந்தது. உண்மையைச் சொல்லப்போனால் நான் பேரவைத் தலைவராக இருந்தபோது, உருசியாவிலிருந்து வந்த துணைப்பிரதமர் என்னைச் சந்தித்தபோது, அவர்கள் ஆங்கிலத்தில் பேசவில்லை. அவர்கள் முழுக்க முழுக்க உருசிய மொழியில்தான் பேசினார்கள். உருசியமொழியும் தமிழ்மொழியும் தெரிந்த ஒருத்தர் - மொழிப்பெயர்ப்பாளர் ஒருவரை வைத்துக்கொண்டு பேசினாங்க. அதுதான் உண்மையான நிலை. நாம் நினைக்கிற மாதிரி ஆங்கிலம் உலகமொழியன்று (Global language) நான் பட்டியலெடுத்துப் படிக்கத் தயார்.

அமெரிக்க நண்பர் ஒருத்தர் கொடைக்கானலில் இருக்கின்றார். அவர் எழுதுகிறார் கடிதம். இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாண்டு, கனடா போன்ற சில 7, 8, 10 நாடுகளைத் தவிர மீதி அனைத்து உலக நாடுகளிலும் அவரவர் தாய்மொழியே முழுமையான தாய்மொழி. அதுதான் உண்மை. நான் எடுத்துப் படிக்கத்தயார். பட்டியலெடுத்து எனவே, நமக்குத்தான் Global language ஏனென்றால் நாம் நீண்டகாலமாக மெக்காலே கல்வியிலே வந்துவிட்டோம். நீண்டகாலமாக நமக்குப் பயிற்சி வந்துவிட்டது. ஆனால், நாம் இந்தியாவில் வாழ்கிறோம். அதை மறந்துவிடக்கூடாது. எனவே, அண்ணா

அவர்கள் எந்த நோக்கில் இருமொழிச் சட்டத்தைக் கொண்டு வந்தாரோ... அதன்படி இன்னொரு மொழி, கண்டிப்பாக, இணைப்பு மொழியாக இருந்து தீர வேண்டும்.

அவரது நோக்கம் நிறைவேற நாம் சிந்திப்போம்; உங்களுடைய விடாப்பிடிகளைத் தளர்த்தி எங்களோடு சேர்ந்து சிந்திப்பீர்கள் என்று நம்புகிறேன். வணக்கம்.

## அறிவியலும் தமிழில்

போலந்து டாக்டர் ஹெர்மன்:

"தமிழில் இல்லாத அறிவியல், அறவியல் சிந்தனைகள் பிற எந்த மொழியிலும் இருக்கமுடியாது' இந்தியாவில் 1500 மொழிகள்; வரிவடிவம் உள்ளவை: 22" என்கிறார்.

அறிவியல் பாடம் ஏன் தமிழில் சொல்லித் தரப்படவேண்டும் என்பது குறித்து ஓர் அமெரிக்கர் ஒரு கட்டுரை எழுதி அதனை எனக்கு விடுத்திருந்தார். இவர் இந்தியாவில் நீண்டகாலம் வாழ்ந்து பழகியவர்; தற்போது கொடைக்கானலில் இருப்பவர். அவரது கட்டுரையை முதலில் படியுங்கள்.

"I enclose an article on why science should be taught in Tamil. If science is taught in all the 25 official languages of Europe and in all the East Asian countries in their languages, where is the argument that can it can't be done in Tamil? Languages such as Danish and Hebrew with 5 million people, and even Estonian with 1.5 million, use their languages for all subjects at all levels. Would Korea have made a mark on the world in technology if their education had been in a lannguage not of the people? So where is the argument that 6 crore - 60 million - Tamils can't use their own language for science? Isn't it clear that all modern dynamic cultures use their own language for all levels of education?

People here are not analyzing the language from the perspective of soical science. It is clear as a bell that the main reason for English medium is to create a social class which the Tamil - educated people can hardly enter during their life time. This new class structure is more insidiousthan the older caste structure, because it is in the false guise of science and modernization.

People are looking only for privilege for themselves and their children. They are not looking at the welfare of the 6 crore Tamils and the potential of civilizational creativity.

Mr. Tamizhkudimagan, you cannot find an example in histroy in any country of a cultural group that made a creative permanent mark on histroy except that it was done in the people's languages. Mr. Tamizhkudimagan, only weak cultural systems rely on a foreign language for education - examples are African countries using English and French, CentralAsian countries using Russian, and philippinos - who have the weakest cultural system and the least creativity among all the Southeast Asian countries because of their education in English. (The only exception today is Singapore, which is a city of immigrants devoted to commerce.) All the Europeans educated in their own languages also learn 2 other languages weill in high school, so there is no problem of international relations and jobs.

If the 6 crore Tamils are to be civilizationally creative, modern ideas must flow through the population in the language of the people. This will not happen until the Government ensures that all subjects are taught in the people's language at all levels so there is integrated understanding. Further, the old idea of science stream separate from 'arts' stream is extremely destructive and must be rectified. It breeds a generation science people who think "science" is superior to other subjects - which they support by using the alibi of English.

Mr. Tamizhkudimagan, keep it up, and don't kneel to the anti - democratic forces who want only privilege for their families. The 6 crore Tamils will win in the long run. You will usher in a new phase of civilizational creativity for the Tamil people.

I am an American having lived in India for most of my life, now permanently in kodaikanal, and I do consulting as for World Bank and bilateral funded projects. I know pretty good Tamil,but have written in English now to get an article off to you quickly and for you to use for influencing the would - be scientists who don't understand what integrated sciences and social sciences means to the cultural system!

கிழக்காசிய நாடுகளில் அவரவர் மொழியிலும் ஐரோப்பாவில் உள்ள 25 ஆட்சிமொழிகளிலும் அறிவியல் பாடங்கள் சொல்லித்தரப்படும்போது, தமிழில் சொல்லித்தர முடியாது என்ற விவாதம் ஏன்? 5 மில்லியன் மக்களை மட்டுமே கொண்ட டேனிஷ், ஹீப்ரு மொழியினரும், 1.5 மில்லியன் மக்களைக்

கொண்ட எஸ்டோனியன் மொழியினரும் எல்லா மட்டத்திலும் எல்லாப் பாடங்களுக்கும் தத்தம் தாய்மொழியையே பயன்படுத்துகின்றனர். மக்கள் மொழியில்லாத வேறுமொழியில் பயின்றிருந்தால் கொரியா தொழில் நுட்பத் துறையில் இவ்வளவு முன்னேறியிருக்குமா? எனவே 6 கோடியே 60 மில்லியன் தமிழ் மக்கள் அறிவியல் கற்கத் தமிழைப் பயன்படுத்த முடியாது என்று சொல்வது என்ன விவாதம்? உலகநாடுகள் எல்லாம் தங்கள் கல்வி முன்னேற்றத்திற்குத் தங்கள்தாய் மொழியைப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெளிவு.

ஆங்கிலப் பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுப்பதே, தமிழ்க்கல்வி கற்ற மக்களை வாழ்நாள் முழுவதும் ஒரு சமூக உயர்வுக்கு உயர்த்துவதற்காகத்தான். அறிவியல் மற்றும் புதுமையாக்கம் எனும் போர்வையில் ஏற்கெனவே உள்ள சாதி அமைப்புக்கும் மேலான ஒரு புதுச் சாதி உருவாகுகின்றது.

மக்கள் அவர்களது முன்னேற்றத்தையும், அவர்தம் குழந்தைகள் நலத்தை மட்டுமே பார்க்கத் தொடங்கி விட்டனர். ஆறுகோடித் தமிழர்களின் நலம் எனும் பொதுப்பார்வையும் இல்லை; பண்பாட்டு உருவாக்கத்துக்கான அடித்தள வலு அவர்களிடம் இருப்பதாகவும் உணரவில்லை.

வரலாற்றில் ஒரு நிரந்தர முத்திரை பதிக்கும், ஒரு பண்பாட்டுக் கூட்டத்தை உள்ளடக்கிய நாட்டில், மக்கள் மொழிகளைப் பயன்படுத்தாதவரை, எந்த அடையாளத்தையும் பார்க்க முடியாது. பலவீனமான பண்பாட்டுப் போக்குக் கொண்ட இனங்களிலும் கல்விக்காக அயலக மொழிகளை நாடி நிற்கும். ஆப்பிரிக்க நாடுகள் ஆங்கிலத்தையும் பிரெஞ்சுமொழியையும், மத்திய ஆசிய நாடுகள் உருசிய மொழியையும், பண்பாட்டுப் பலவீனமுள்ள பிலிப்பைன்சு ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதற்கும் இதுதான் காரணம். சிங்கப்பூர் வந்து குடியேறியவர்கள் மிகுதியாக இருப்பதனால் கல்வியில் வேறுபட்ட நிலை நிலவுகிறது.

டாக்டர் தெய்வபிரகாசு (வில்லுக்குறி) ஒரு கருத்தினைச் சொல்கிறார்

"ஆங்கிலம்: அது மாயை! (தினமலர் 11.12.98)

தமிழக அரசு அறிவித்துள்ள கல்விக் கொள்கை வரவேற்கத்தக்கது. தமிழர்களின் முன்னேற்றத்திற்கானது. ஆங்கிலத்தைப் பற்றி ஒரு சில தவறான நம்பிக்கைகள் பரவியுள்ளன. ஆங்கிலம் 'உலகமொழி' என்பதும், ஆங்கிலத்தின் மூலம் மட்டுமே விஞ்ஞானத்தை கற்க முடியும் என்பதும் அவற்றுள் முக்கியமானவை. எனவே, மழலைப்பருவம் முதல் ஆங்கிலத்தை

கற்றால்தான் விஞ்ஞானத்தை புரிந்து கொள்ளமுடியும்; உலக அளவில் வேலை தேடிச் செல்ல முடியும் என்ற தவறான கருத்து பலர் மனதில் ஆழமாக பதிந்துள்ளது. ஆனால், உண்மையில் ஆங்கிலத்தின் நிலை என்ன என்பதை ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தவர்கள் அறிவர். அங்கு ஆங்கிலம் தெரிந்தவர்களை விட ஆங்கிலம் தெரியாதவர்கள்தான் அதிகம்.

அரபுநாட்டில் வேலை பார்ப்பவரை கேட்டால் ஆங்கிலம் எந்த அளவு உதவி செய்கின்றது என்று கூறுவர். அங்கும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் மிகமிக குறைவே. ஜப்பான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிலும் இதே நிலைதான். உண்மை இப்படியிருக்க ஆங்கிலத்தை உலக மொழி என்று கூறுவது தவறான கருத்து.

ஜப்பான் நாட்டு விஞ்ஞான வளர்ச்சி உலகறிந்தது. தொழில்நுட்பம் மிகவும் பாராட்டத்தக்கது. அந்நாட்டு விஞ்ஞானிகளும் தொழில்நுட்ப வல்லுனர்களும் அவர்களது தாய் மொழியான ஜப்பானிய மொழியிலேயே கல்வி கற்றவர்கள். அவருள் ஒரு சிலர் ஆங்கிலத்தை ஒரு மொழியாக மட்டுமே கற்றவர். ஜெர்மனியிலும் பிரான்ஸ் நாட்டிலும் கூட இதே நிலைதான். எனவே, ஆங்கிலத்தின் மூலம் மட்டுமே விஞ்ஞானம் கற்க முடியும் என்பது தவறான கருத்து. இந்த இரு உண்மைகளையும் தமிழக மக்கள் அனைவருக்கும் புரியவைப்பது அரசின் கடமை.

ஜப்பான் நாட்டின் குழந்தைகள் ஜப்பானிய மொழியின் மூலம் கல்வி கற்று தொழில் நுட்ப விஞ்ஞான முன்னேற்றம் காண்பதை போல நாமும் முன்னேறலாம். விஞ்ஞானத்தையும் தமிழில் போதிக்க முயற்சிப்போம். ராமானுஜர்களையும், சி.வி. ராமன்களையும் நமது நாட்டில் மீண்டும் உருவாக்குவோம். - *டாக்டர் வி.ரா. தெய்வபிரகாஷ், வில்லுக்குறி.*

நமது முன்னோர்கள் நீண்ட காலத்துக்கு முன்பே நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். அந்தக் கருத்து இதுதான்.

“அறிவியல் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தமிழ்ச் சொற்கள் கிடைக்காவிட்டால் வடமொழிச் சொற்களையோ தமிழ், வடமொழி இரண்டிலும் சொற்கள் கிடைக்காதபொழுது மட்டுமே ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தலாம். தகுந்த பாடநூல்கள் தமிழில் உருவாகவில்லையென்றால் ஆசிரியர்கள் ஆங்கில நூல்களை வைத்துக் கொண்டே மாணவர்களுக்குத் தமிழில் கற்பிக்கலாம்.’’

## தமிழால் வென்றவன்

திருவண்ணாமலை டாக்டர் பழ.சண். குமரன் எழுதும் மடல் எவ்வளவு நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது பாருங்கள்

ஆலயம் முதல் ஆரம்பப் பள்ளி வரை - எங்கும் எதிலும் தமிழே - தாய்மொழியே கோலோச்ச வேண்டுமென - தமிழ்வளர்ச்சித்துறைக்கு அமைச்சராக இருக்கும் தங்களுக்கு ஓர் இனிய சேதி!

ஆரம்பப்பள்ளி முதல் மேல்நிலைப்பள்ளி வரை தமிழிலேயே பயின்ற மாணவன் - தற்போது அரசினர் கலைக்கல்லூரியில் பயிலும் மாணவன் த. கார்த்திகேயன் அகில இந்திய அளவில் ஆங்கிலத்தில் நடைபெற்ற QUIZ Competitionல் அகில இந்திய அளவில் இரண்டாம் இடம் பெற்று சாதனை புரிந்துள்ளான்.

1) வரும், பிப்ரவரியில் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள INTERNATIONAL QUIZ COMPETITION

2) 2000ல் நியூயார்க் நகரில் நடைபெறவுள்ள QUIZ ல் இந்தியாவின் சார்பிலும் பங்கேற்கவுள்ளார்.

மிகச் சாதாரண பிற்படுத்தப்பட்ட குடும்பத்தைச் சார்ந்த இந்தத் தமிழ் மாணவனுக்கு தகுந்த பயிற்சி (Coaching), புத்தகங்கள் (Materials), கலைக்களஞ்சியம் தமிழ், ஆங்கிலம் ( Encyclopedia), கணிப்பொறி (Computer) இவையெல்லாம் தந்தால் -தமிழனின் திறமை, பெருமை - உலகுக்கே பறைசாற்றப்படும்.

இம்மாணவனைத் தமிழக அரசே 'தத்தெடுத்து' - அவனை இந்தியத் திருநாட்டிற்கே பெருமை தரும் இளைஞனாக உருவாக்கிட தங்களின் "தமிழ் வளர்ச்சித்துறை" யினை

இத்தகு பெருமைதனை தந்த மண்ணுக்குச் சொந்தக்காரனும் இவன் பயின்ற தமிழ்ப்பள்ளியின் முன்னாள் தமிழ் மாணவனும் - எந்நாளும் 'தமிழ்' உணர்வு கொண்டு இந்தத் 'தமிழன்' வேண்டிக்கொள்கிறேன். - *தமிழால் வணங்கும் தமிழன் பழ. சண். குமரன்.*

# இயல் நாற்பது

## முடிவுரை

தமிழர்கள் - திராவிடர்கள் - கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் மேம்பாடு அடைய உழைத்த சி. நடேசனார், டி.எம். நாயர், பிட்டி. தியாகராயர், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் தன்னலமற்ற பணிகள் ஒரு புறம் - இவர்களில் அண்ணாவைத் தவிர வேறுயாரும் பெரும் பதவிகளைப்பெறவில்லை. பிற்காலத்தில் பெரும் பதவி பெற்ற திராவிட இயக்கத் தலைவர்கள் உள்ளே தன்னலத்தையும் உதட்டில் தமிழ் நலத்தையும் வைத்து 'தமிழ்வழிக் கல்வி'க்குச் சாவுமணி அடித்த கதைகள் பல. மறுக்கவொண்ணாத சான்றுகளுடன் பலரது முகத்திரையைக் கிழித்தெறியும் நூல் இது.

# கருவி நூற்பட்டியல்

## அ) நாளிதழ்கள்

தினத்தந்தி
தினமணி
தினமலர்
தினபூமி
தினகரன்
கதிரவன்
தீக்கதிர்
முரசொலி
மக்கள் குரல்
மாலை முரசு
மாலைக் கதிர்
தராசு

## ஆங்கில இதழ்கள்

The Hindu
The New Indian Express
The Hindustan Times, New Delhi
Deccan Chronicle
The Statesman
The pioneer, New Delhi
The telegraph, kolkatta
Deccan Herald, Bangalore
News side
News Today
University News

## ஆ) கிழமை, மாத இதழ்கள்

| | |
|---|---|
| செந்தமிழ்ச் செல்வி | தர்ம சக்கரம் |
| களஞ்சியம் | யாதும் ஊரே! |
| செந்தமிழ் முரசு | மக்கள்மேடை |
| தமிழர் கண்ணோட்டம் | நெற்றிக் கண் |
| தமிழ் நெஞ்சம் | ஆசிரியர் கூட்டணி |
| நந்தன் | வாசுகி |
| தென்மொழி | தமிழ்வழிக் கல்விக் கழகம் - செய்திமடல் |
| கல்கண்டு | |
| குமுதம் | முகம் |
| கல்கி | இதயம் பேசுகிறது |
| ஆனந்த விகடன் | குங்குமம் |
| சூனியர் விகடன் | தேனமுதம் |
| நக்கீரன் | இளந்தமிழன் |
| தினமணி கதிர் | தமிழ்ப்பாவை |
| தமிழன் எக்ஸ்பிரஸ் | தமிழ்மாருதம் |
| குறளியம் | தலித் முரசு |
| மள்ளர் மலர் | செய்தி மடல் |
| மகாசனம் | தேவி |
| துக்ளக் | இராணி |
| செந்தமிழ்ச் சோலை | நித்திலக்குவியல் |
| முத்தமிழ் முரசு | இந்தியா டுடே |
| முழக்கம் | தெளிதமிழ் |
| மக்கள் செங்கோல் | வெல்லும் தூய தமிழ் |
| வள்ளுவர் வழி | கண்ணியம் |
| தமிழ் இன்பம் | மழலையர் குரல் |

## இ) நூல்கள்


1. காந்தியடிகள் - சத்திய சோதனை
2. காந்தியடிகள் - மாணவருக்கு
3. தமிழ்க்குடிமகன், மு. - சீனநாடும் சின்ன நாடும்
4. மணியரசன், பெ. - நேர்மையற்ற தீர்ப்பு நெருப்புக்குத் தீனி
5. கிருட்டிணமூர்த்தி, வெ. - பயிற்சிமொழியும் உயர்நீதிமன்றத் தீர்ப்பும்
6. அண்ணாமலை, மா.சு. - 'இந்திய தேசிய இராணுவம்' தமிழர் பங்கு.
7. Rabindranath Tagore Open letters, speeches, Tributes.
8. சக்கரவர்த்தி, அ. - கல்விக் கொள்கை நோக்கில் தமிழ்வழிக் கல்வியின் தேவை.
9. மாரிமைந்தன் - மெல்லத் தமிழ் இனிச்சாகும்
10. சிந்தனைப் பேரவை - பயிற்று மொழி தமிழே
11. தமிழ்வழிக் கல்வி இயக்கம் - தீர்மானங்கள்
12. பொன்னீலன் - தமிழ்வழிக் கல்வி
13. இறையரசன், பா. - கல்வித் தமிழ் மலருமா?
14. அ.கி. மூர்த்தி - அண்ணாவின் தலைமை உரைகள்
15. தமிழ்நாடு அரசு - சட்டமன்ற விவாதக் குறிப்பேடு

Report : TN. Forces.

## இவரைப் பற்றி . . .

# முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

மேனாள் சட்டப் பேரவைத் தலைவர்
மேனாள் தமிழ் ஆட்சிமொழி - தமிழ்ப் பண்பாட்டுத்துறை
மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

27.6.1939ஆம் நாள் சாத்தனூரில் பிறந்தார். (இன்றைய சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம்).

### கல்வி

தேவகோட்டை தேபிரிந்தோ உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பின் திருச்சி, தூயவளனார் கல்லூரியில், அறி.இ.(பி.எசி.,) கணக்குப்பட்டமும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில்,தமிழ் முதுகலைப் பட்டமும் பெற்றவர்.

### பணி

1963-1964ஆம் ஆண்டில் திருப்பாதிரிப் புலியூர் வளனார் உயர்நிலைப்பள்ளிக் கணக்கு ஆசிரியராகவும், 'தென்மொழி' துணையாசிரியராகவும் பணியாற்றியவர். அடுத்த இரண்டு ஆண்டுகள் பறம்புக்குடி ஆ.வை. உயர்நிலைப்பள்ளியில் கணக்கு ஆசிரியராகவும், பின் மூன்று ஆண்டுகள் நேரடி அரசியல் வாழ்க்கையிலும் இருந்தவர். 1969 முதல் மதுரை, யாதவர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். 1979 முதல் 1988 திசம்பர் வரை கல்லூரி முதல்வராகப் பணியாற்றியவர்.

### பிற பணிகள்

இளமையில் இருந்தே முற்போக்கு உணர்வும், துடிப்பும் செயலாற்றும் திறமையும் மிக்கவர். 1963இல் எம்.ஏ. பட்டம் பெற்றும் தமிழ்த் தொண்டும் பொதுத் தொண்டும் ஆற்றும் வகையில் நிலையான வேலையை நாடாமல் இயங்கி வந்தவர். சிறந்த தமிழ்த் தொண்டராக இருந்த இவர் சிறந்த அமைப்பாற்றலும் (ORGANISING CAPACITY) -உடையவர். 1969இல் மதுரையில் கல்லூரியில் வேலை பார்த்துக் கொண்டே பறம்புக்குடியில் உலகத் தமிழ்க் கழக மாநாட்டை நடத்திப் பெரும் பாராட்டுக்குரியவரானார்.

ஐயாயிரம் உருபாய் செலவில் 63 பேச்சாளர்களை வரவழைத்து மிகப் பெரும் தமிழ் விழாவை நடத்திக் காட்டிய ஆற்றல் உடையவர்.

தனித்தமிழ் இயக்கத்தைச் சார்ந்த இவர் இன்றளவும் தன்னுடைய இலக்கியப் படைப்புகளிலும், மேடைப் பேச்சிலும், தனித்தமிழ் நடையைக் கையாளுவது இவரின் தனிச்சிறப்பு. இச்சிறப்பால், இவர் பாவாணரின் பாராட்டுதலைப் பெற்றார். 1957 முதல் இத்தனித் தமிழ் இயக்கத்திலிருந்து தமிழுக்கு அரும்பணியாற்றி வருகிறார்.

அறிஞர் தேவநேயப் பாவாணரின் அன்பராக, அவரது உலகத் தமிழ்க் கழக முகவை மாவட்ட அமைப்பாளராக இருந்து பணியாற்றியவர். பின்னர் தமிழகத் 'தமிழ் இயக்கத்தின்' தலைவராக இருந்து சிறப்பித்தவர்.

தந்தை பெரியாரின் பற்றாளர். அவர் கொள்கைகளின் வழி நின்று தமிழுக்கும்,தமிழ்ச் சமுதாயத்திற்கும் பணியாற்றி வருபவர். மாநிலப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் தலைவராக இருந்தவர். உறுதியான கொள்கைப் பிடிப்பு, தரமான இலக்கியப் புலமை ஆகியவற்றால் அனைவரது அன்புக்கும் ஆளானவர்.

நாடகத்துறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர். 'முதல் பரிசு,' 'வாழவிடு', 'போராட்டம்' எனும் சமூக நாடகங்களை எழுதி இயக்கி நடித்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பச்சையப்பனாக நடித்து திரு. சிதம்பரம் செயராமன் இவருக்குப் பின்னணி பாடும் வாய்ப்பைப் பெற்றவர். 'மனமாற்றம்', 'மணிமுடி' என்ற வரலாற்று நாடகங்களையும் எழுதி இயக்கி நடித்தவர்.

1977, 1981, 1985 மற்றும் 1987 இல் ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள, 1994இல் ஐக்கிய முசுலீம் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள 1997, 2000, 2002 ஆண்டுகளில் தமிழ் இணைய மாநாட்டில் கலந்துகொள்ள, பாவாணர் நூல்கள் வெளியீட்டு விழாவிற்காக எனப் பலமுறை மலேசியா, சிங்கப்பூர் நாடுகட்கும், 1985, 1988, 1990 ஆகிய மும்முறை அந்தமான் நிகோபார் தீவுகளுக்கும் 1982இல் 'பாயும் புலி' பண்டாரக வன்னியன் சிலை திறப்பு விழாவுக்காக இலங்கைக்கும் இலக்கியச் சுற்றுப்பயணம் சென்றார்.

1989 செப்டம்பரில் காமன்வெல்த் பாராளுமன்றச் சங்க மாநாட்டுக்காகப் பேரவைத் தலைவர் எனும் முறையிலும், தமிழ்நாடு கிளையின் தலைவர் எனும் முறையிலும் மேற்கிந்தியத் தீவுகள் (பார்படோஸ்), இலண்டன், பாரிசு, நியூயார்க், வாசிங்டன், சிக்காகோ, துபாய் ஆகிய நாடுகட்கும் நகரங்கட்கும் சென்று வந்தார்.

1993இல் செர்மன் நாட்டின் பெர்லின்,இத்தாலி நாட்டின் உரோமபுரி, பாரிசு ஆகிய நகரங்களில் உரையாற்றி மீண்டார். 2002இல் சீனமொழி ஆய்வுக்காகச் சீனநாட்டுக்குச் சென்று வந்தார்.

இனிய குரலில் மெல்லிசை பாடவும் வல்லவர். எல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறந்த பேச்சாளர். இன்று தமிழகத்தில் பேச்சுலகில் அனைவருக்கும் அறிமுகமானவர். பட்டிமன்றங்களிலும், வழக்காடு மன்றங்களிலும் அரசியல் மேடைகளிலும் ஏராளமாகப் பங்கு கொண்டு, ஆணித்தரமாகத் தருக்கமிடக்கூடிய இவர் காட்சிக்கு எளியவர். பழகுவதற்கு இனியவர், இவரது காலத்தில் இவரது கல்லூரியில் காந்தியம், மார்க்சியம், பகுத்தறிவுச் சிந்தனைகள் ஆகியவற்றில் மாலைநேர வகுப்புகள் நடைபெறுவது இவரது கொள்கை உணர்வுகளைக் காட்டுவது. மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவை (SENATE), கல்விப் பேரவை (ACADEMIC COUNCIL) - ஆகியவற்றில் சிறப்பான பங்காற்றும் உறுப்பினராக இருந்தவர்.

## சமுதாயப் பணிகள்

‘பரிசுச்சீட்டு’, ‘திரைப்படக் கீழ்மை’, ‘வரதட்சணை’ முதலியவற்றால் விளையும் சமுதாயத் தீங்குகளைக் களையும் நோக்கில் சமுதாயச் சீர்திருத்தப் பேரவையின் பொதுச் செயலாளராகவும் இருந்தவர். மதுரை நுகர்வோர் உரிமைப் பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றியவர்.

## இதழ்ப்பணி

துணை ஆசிரியர் ‘தென்மொழி’ 1963 - 1966

ஆசிரியர் ‘அறிவு’ 1970 - 1971, ‘கைகாட்டி’ 1971-1974

## அரசியல் பணி



1989 - தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை மாவட்டம் இள்ளயான்குடித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1989 பிப்ரவரி திங்கள் 8ஆம் நாள் முதல் 1991 ஆம் ஆண்டு வரை தமிழகச் சட்டமன்றப் பேரவையின் தலைவராகச் செயலாற்றி வந்தவர்.

1996 முதல் 2001 வரை இளையான்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மீண்டும் வென்று தமிழ் வளர்ச்சித் துறை, அற நிலையத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

## குடும்பம்

இவரது துணைவியார் வெற்றிச் செல்வி. சமுதாயப் பணிகளில் ஈடுபாடுள்ள குடும்பத் தலைவி.

மூத்த மகன் மெய்ம்மொழி வரலாற்றில் எம்.ஏ., எம்.பில். பட்டங்கள் பெற்றவர். இவர் தமிழில் இ.ஆ.ப. (I.A.S.) தேர்வெழுதி இந்தியப் படைக்கலத்துறை (I.O.F.S.) க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆவடி திண் ஊர்தித் தொழிற்சாலையில் இணைப் பொதுமேலாளராகப் பணிபுரிகிறார். மகள் கோப்பெருந்தேவி தமிழிலக்கியத்தில் எம்.ஏ., எம்.பில். பயின்றவர். திருமணமானவர். இளையமகன் பாரி வரலாற்று முதுகலை பயின்று 'இணையம்' தொடர்பான தொழில் செய்து வருகிறார்.

இவர் தமிழக அரசின் சிறந்த விருதான 'திருவள்ளுவர்' விருதினைப் பெற்றுள்ளார்.

## மறைவு

இவர் 21.9.2004 அன்று இயற்கை எய்தினார்.



3

# தமிழ்வழிக்கல்வி

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்